இலக்கிய சாஸன வழக்காறுகள்

பேராசிரியர் :
மு. இராகவையங்கார்
எழுதியது

©
தமிழ்நாடு அரசு
1973

...டு அரசாங்கத்திற்காகத் தமிழ்நாடு எழுதுபொருள்
...ச்சுத்துறை இயக்குநரால் பதிப்பிக்கப்பெற்று
அச்சிடப்பட்டது.
1973

விலை ரூ. 15·50

V2112.6
N73
110606

இலக்கிய சாஸன வழக்காறுகள்

பேராசிரியர் :

மு. இராகவையங்கார்

எழுதியது

இலக்கிய சாஸன வழக்குதல்

முதல்—உபந்யாசம்

1. **முகவுரை :**

   (1) தமிழ்ச்சிறப்பு—வரந்தருவார் பாடல்.

   (2) சரித்திரமாகிய தமிழ்ப்பாயிரம்.

   (3) சாஸனம் சரித்திரக் கருவியாதல்.

   (4) விஷயப் பாகுபாடு.

2. **ஆதிக்காலம் :**

   (1) சித்திர சங்கேதலிபிகள்.

   (2) எழுத்து—கல்லெழுத்து.

3. **சங்ககாலம் :**

   (1) தலையிடைச் சங்கங்கள்.

   (2) கடைச் சங்கம்.

   மூவேந்தர் :—

   கொங்குச் சேரர்.

   அதிகமான்கள்.

   மலை—அயிரைமலை.

   ஆறு—காரியாறு.

   (3) சோழர்—பூர்வசரித்திரம்.

   மனுவேந்தன் மகனை முறை செய்தது.

   (4) பழைய சோழர்—கிள்ளி.

   கரிகாலன்.

   செங்கணான்.

   கழுமலம்.

5. பாண்டியர்—" ஆழிவடிம்பலம்ப "
பூதம் பணிகொண்டது
விசயனை வசுசாபம் நீக்கியது.
பாரதந்தமிழ்ப்படுத்தியது.
பலயாகசாலை முதுகுடுமி.
தலையாலங்கானத்து நெடுஞ்செழியன்.

6. வேளிற் வரலாறு—ஆய்வமிசம் (விருஷ்ணி வமிசம்).
கொடும்பாளூர் வேளிர்.
ஏயர்—ஹேஹய வமிசமும்
சளுக்க வேளிரும்.
எவ்விகுடி—நீரூர் வேள்—கண்டன்
மாதவன்
பாரி—வேள்மலை நாடுகள்.
பாரிமகள் கபிலரைப்பற்றிய சாஸனம்.
சாஸனச் செய்திகள் 1—சங்ககாலம்.
கபிலரது பிராயோபவேசம்—சாஸனம்
நன்னன் (நாடு வமிசத்தவர்).
அழும்பில்வேள்—(அழும்பில்—அம்பு
கோயில்).

7. மலையமான்கள்.
8. திரையர் கோட்டம்.
9. முத்தரையர்.
10. கட்டியர்.
11. கோசர்.
12. வாணர்.
13. புறநாட்டு வேந்தர்.
14. கண்ணகி வணக்கம்.
15. நாடுகள்—ஊர்கள்—குடிகள்.

II. உபந்யாசம்

முதலிலிருந்து களப்ரர் முடிய.

அரிகேசரி மாறவர்மன்—வாதாபி நரசிம்மவர்மன்.

சம்பந்தர்—அப்பர்—சிறுத்தொண்டர்.

"நெல் வேலி வென்றான்" களவியல்

நெல்வேலிவென்ற நின்றசீர் நெடுமா

"வில்வேலிக் கடறானையை நெல்வேலிச் செருவென்றும்".

"வில்வேலி—வேன்மிடைந்த வேலியுமிடைந்து (சீவக 279.)

"வாங்குவில்லரண் மாரணமாக—வேறுபல் பெரும்படை நாப்பண்" (முல்லை—42.3)

நம்மாழ்வார்

சுந்தரர்—இராஜசிங்கன்.

சுந்தரர்—சைனரைப்பற்றி.

திருமங்கையார்—பல்லவமல்லன்.

பல்லவமன்னனது—சமகாலம்.

"பார்மன்னு பல்லவர் கோன்".

பல்லவ மன்னனது வைஷ்ணவ பக்தி

திருமங்கையும் வயிரமேகனும் கச்சிப்பிரவேசம்.

திருமங்கையும் வடவர் படையெடுப்பும்.

சேரமான் பெருமாள்.

குலசேகராழ்வார்.

சுந்தர மூர்த்திகள்—திருமங்கையார் காலம்.

பெரியாழ்வார்.

மாணிக்கவாசகர்.

ஆனைமலைச் சாஸனப் பொருள்.

சர்வாதித்தம்.

மெட்ராஸ் மியூசியம் பிளேட் 770—
பராந்தகன் காலத்ததே.
புலவர்கள்.
நாடுகள்.
III. சோழர் காலம்.
IV. பிற்காலம்.
V. நம்மாழ்வார்.

இலக்கிய சாஸன வழக்காறு.

புலவர் பெருமக்களுக்கும் தமிழபிமானிகட்கும் விநயபூர்வமாகச் செய்துகொள்ளும் விண்ணப்பம்.

சென்னைச் சருவகலா சங்கத்தார் இவ்வாண்டில் என்னைத் தமிழுபந்யாசங்கள் புரியும்படி நியமனம் செய்திருப்பதுபற்றி அவர்கட்கு முதலில் என் உள்ளார்ந்த வந்தனங்களைச் சமர்ப்பிக்கின்றேன். எனக்கு அவர்கள் இக்கௌரவத்தை யளித்திருப்பது—உபந்யாசத் திறமை என்பால் மிகுந்துள்ளது என்பது பற்றியன்று. நெடுங்காலமாகத் தமிழ்த் தொண்டு புரிந்து வருபவருள் யானும் ஒருவன் என்ற கருத்துடனேயாம்; நம் யூனிவர்ஸிடியாரது திருமுகத்தை நான் முதலிற் கண்டபோது, இத்தகைய சிறப்பளித்ததற்கு மகிழ்ந்தேனாயினும், அதனை எவ்வாறு நிர்வகிப்பது—என்ற மலைப்பு என்கண் உண்டாகியது. அதனால், எனக்கு ஏற்றதோர் வழியில் அஃதாவது—எழுத்துருவத்தில் என் பிரசங்கக் கட்டுரையை இயற்றிவிடலாம் எனத் துணிந்தேன். துணிந்து நான் சபையில் வெளியிடுதற்கேற்ற விஷயமொன்றைக் குறிப்பிட்டுத் தரும்படி பெரியோர்களையும் என் அன்பர்களையும் கேட்டுக் கொண்டபோது, இலக்கியங்களும் சாஸனங்களும் ஒன்றற்கொன்று உதவியாயுள்ளதைக் காட்டி ஒரு கட்டுரை நிகழ்த்தும்படி அவர்கள் நியமிக்கலாயினர். அவர்களது இந்நியமனத்தை மறுத்திலேனாயினும் அதுவும் நான் நிர்வகித்தற்கரியது என்பதில் தடையில்லை. ஏனெனில், இலக்கியம் என்பது ஒரு பெருங்கடல்; சாஸனங்கள் என்பனவோ--மற்றொரு சாகரமாகும். இவ்வளப்பருஞ் சலதிகளிரண்டையும் ஒருங்கு அளப்பதற்கு என்ன உரிமை எனக்கு உண்டு? எனினும், கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடரது அரிய தொடரொன்று அச்சமயம் என் ஞாபகத்துக்கு வந்து இச்சாகஸக் காரியத்தைச் செய்ய எனக்கு ஒருவகைத் தைரிய மூட்டியது. அஃதாவது—"கடல் கண்டோமென்பர் யாவரே முடிவுறக் கண்டார்" என்ற தொடரேயாம். "கடல் கண்டோம்" என்று பெருமையாகக் கூறுவோரெல்லாம், அக்கடலின் அளவற்ற பிரதேசங்களிலே அற்பத்தினும் அற்பமான ஒரு பகுதியைக் கண்கொண்ட சிற்றளவு வரை கண்டு—அவ்வாறு சொல்லிக் கொள்பவர் தாமே? அதுபோல, இலக்கிய சாஸனக் கடல்களில்—என் மனக் கண்ணிற்கு எட்டிய பகுதியும் கண்டதைக் கூறி. 'கடலைக்கண்டு சொல்லுகிறேன்' என்று நானும் பெருமை பேசிக் கொள்ளத் தடையில்லை யன்றோ? கம்பநாடரது இவ்வருமை

வாக்கியத்திலிருந்து உண்டாகிய ஒருவகைத் துணிவே, ஆப்தர்கள் எனக்குக் குறிப்பிட்ட இலக்கியச் சாஸனக் கடலில் என்னை இழுத்தியதாகும். அக்கடற்றுறைகளில் அவ்வாறு துணிவுடனிழிந்து முழுகிய போது, என் கைக்கெட்டிய முத்துச் சிப்பிகள் பலவாகும். அவற்றையெல்லாம்—இப்போது வாரிக் கொண்டு உங்கள் திருமுன்பு வந்திருக்கிறேன். அச்சிப்பிகளுள் முதிர்ந்தவைகளும் முதிராதவைகளுமான முத்துக்கள் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். நீங்களே அவற்றைச் சோதித்துக் கொள்ளவும் மதித்துக் கொள்ளவும் உரியவர்கள். நன் முத்துக்களிருந்தால் என் சொற்பொருட் குற்றங்களாகிய கசடுகளை நீங்கள் சிறிதும் பொருட்படுத்தமாட்டீர்கள் என்பதை நன்கறிவேன். இனி, அதிகமான பீடிகையால் காலத்தைப் போக்காது குறித்த விஷயத்தைத் தொடங்குகின்றேன்.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே கிடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.

வில்லி பாரதத்தின் தலைப்பில் நின்று விளங்கும் தமிழ்த் தெய்வத்தின் வாழ்த்தாகிய இவ்வழகிய செய்யுள்—வில்லிபுத்தூரார் மகனார் வரந்தருவாரால் பாடப் பெற்றதென்பது—யாவரும் அறிந்ததே. செந்தமிழாகிய தெய்வமகள்—பிறந்தது முதல் பேதைப் பருவம் வரை—அடைந்துள்ள நிலைகளை அழகாகக் கூறுவது இப்பாடல், பொதியமலையில் வாழும் அகத்தியனாரால் ஆதியில் உண்டாக்கப் பெற்றமையால்—அவரிடம் தோன்றிய தமிழை—அவரது பொருப்பிற் பிறந்ததாகக்—கவி உபசரிக்கின்றார், தமிழை அகத்தியனார் ஆக்கியவர் என்று—இவரைப் போலவே பலரும் கூறுவதுண்டு. ஆக்கியவரென்பது, நொய்யும் நுறுங்குங் களைந்து அரிசியமைத்தாரை அரிசியாக்கினார் என்பது போன்றதே யன்றி வேறில்லை. அதனால், கடவுளருளால் உண்டான தமிழ் மொழியை—அத்தெய்வ முனிவர் சீர்திருத்தி யளித்தவர் என்பதே அதன் கருத்தாகும். தானே உருவாதற்குரிய கருவையெல்லாம் தன்னுட் கொண்டதாய்—ஈசனாற் படைக்கப்பட்ட தமிழாகிய தெய்வமுட்டையை அடைகாத்துப் போற்றி வெளிப்படுத்திய அவ்வளவே—ஆசிரியர் அகத்தியனார்க்குரியதாகும். இதுபற்றியே கம்பநாடரும்—

"தழற்புரை நிழற்கடவுள் தந்தமிழ் தந்தான்".

என்றார், இதன் பொருள் செந்தீவண்ணனும் ஈசன்தந்த தமிழைத் தந்தவர் அகத்தியர் என்பது, 'தந்ததமிழ் தந்தான்' எனவே, துவிஜன்மங்களுள் ஒன்றான அண்டஜம் போல்—அகஸ்திய முனிவரால் இரண்டாம் பிறவி எடுத்த தமிழின் பிறப்பு நிலைமை தோற்றும். இதுபற்றியே 'ஆகஸ்த்யம்' என்ற பெயரால்—தமிழ் மொழியை வழங்கலாயினர் எங்கள் ஆன்றோரும். 'ஆகஸ்த்யமும் அநாதியிறே' என்பது—ஆசார்ய ஹ்ருதயவாக்கியம். இனி, பொருப்பிலே பிறந்த தமிழ்மகள் தென்னன் புகழிலே கிடந்தாள் என்றார் என்றது, 'பாண்டியரது புகழாகிய தொட்டிலிலே கிடத்திப் புலவர்கள் தாலாட்ட—தமிழ்மகள் துயின்று வளர்ந்த தன்மையைக் குறித்தபடி. நற்றாயாகிய அகத்தியனார் ஆக்கிய தமிழ் மொழியை,

அவர் மாணுக்கரான புலவர்கள் பாண்டியருதவி பெற்றுச் செவிலி போல் வளர்த்தனர் என்பது கருத்து—இவற்ருன் தமிழ்ப் பாஷையின் ஆதிவரலாறு கூறியவாருயிற்று.

இவ்வாறு பிறந்துங் கிடந்தும் போந்த தமிழ்மகளைச் சங்கத் திருப்பிலே இருந்தாள் என்ருர், சங்கப் பலகையிலே யிருந்த புலவர் பெருமக்களால் அது வளர்வுற்ற படியைக் குறிப்பதற்கு, சங்கம் என்றது முச்சங்கங்களையும் ஆகும். ஆகவே, தமிழ் வளர்ச்சிக்குரிய மூவகைச் சங்கத்துச் சான்ருேர் காலம் கூறியவாருயிற்று.

அங்ஙனம் இருந்த தமிழ் மகவு, தவழ்தலும் நிற்றலுமாகிய நிலைகளை வைகையேட்டினிடத்தும் நெருப்பினிடத்தும் பெற்ரு ளென்ருர்.

சம்பந்த மூர்த்திகளது திருப்பாடல்கள், நீரில் எதிர்த்துச் சென்றும் நெருப்பில் அழியாது நின்றும் விளங்கிய சரித்திரம் பிரசித்தமானவை. இதனுல், தெய்வத்தன்மை வாய்ந்த அடியார்கள் திருவாய்ப்பட்டுத் தானும் தன் தெய்வத்தன்மை தோற்றுவித்து நிலைபெற்ற தமிழின் உயர் நிலைமை பெறப்படும்.

" யாரறிவார் தமிழருமை யென்கின் றேனென்
னறிவீன மன்ருேவென் மதுரை மூதூர்
நீரறியு நெருப்பறியும் "

என்ருர் ஒரு புலவர். இதனுல், சங்கத்தாரை யடுத்துத் தமிழை வளர்த்த பிறசான்ருேரான அடியார்காலம் கூறப்பட்டவாகும்.

'சற்ருேர் நினைவிலே நடந்து' என்ருர். கற்ருேர் என்பார், கல்வியிற் பெரியராகிய கம்பர், கூத்தர், செயங்கொண்டார் போன்ற கவிச் சக்கரவர்த்திகள் ஆவர். அன்னோரது அரும்பெருங் கருத்துக்கள் அமைந்த நூல்களாகத் தமிழணங்கு பரிணமித்தமை தோன்ற—அவரது ' நினைவிலே நடந்து ' எனப்பட்டது. ' நடந்து ' என்றதனுல், நடையழகால் தமிழ்மகள் சிறப்புற்றதற்கு இம்மகா கவிகளே சிறந்த காரணமானவர் என்பது போதரும்.

" பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர்
பணித்த பத்தி
நாவருங் கிளவிச் செவ்வி நடையன்ன
நடையள் நல்லோய் "

என்ற கம்பர் திருவாக்கின்படி உயர்ந்த உவமைக்குரியதன்ருே,

ஆவ்வுத்தம கவிகளின் நடையழகு. இதனால், அக்கவிச் சக்கர வர்த்திகள் விளங்கித் தமிழ் வளர்த்த சோழர் காலம்—கூறிய வாறாயிற்று.

'ஏனமருப்பிலே பயின்ற பாவை' என்பதனால், ஆதிவராக மூர்த்தியால் தன்ஞானமாகிய கோட்டில் தாங்கப்பட்ட உலகில் தமிழ் வளர்கின்றாள் என்றார். எனவே, நல்லறிஞர்களால் நாட்டிலே போற்றப்படுகின்றாள் அவள் என்பது பெறப்படும். ஆதிவராகப் பெருமானை 'ஞானப்பிரான்' என்பர். பெரியார் "ஏனத்துருவா யிடந்த, ஞானப் பிரானை யல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே" என்பது திருவாய் மொழி.

'மருங்கிலே வளருகின்றாள்' என்றார். மருங்கு என்பது இடை அல்லது உடலின் நடுவிடமாம், தென்றமிழ்ப் பாவைக்கு இடை போன்ற திருமுனைப்பாடியாகிய நடுநாட்டிற் சிறப்பாகத் தமிழ் வளர்தலை இது குறிப்பித்தபடியாம்.

"நான்காஞ் சங்கமென—முச்சங்கத் தண்டமிழ் நூல்
கலங்காமல் தலைக்கண்டானே"

என்று வரந்தருவாரே கூறியபடி ஆட்கொண்டான் போன்ற அரசர்கள்—தங்காலத்துத் தமிழ் வளர்த்து வரும் சிறப்பை உட்கொண்டு இவ்வாறு குறிப்பிக்கப்பட்டதாம்.

'பேதை வளருகின்றாள்' என்று பேதைப்பருவத்தோடு நிறுத்தினர்; பெதும்பை முதலிய நிலைகள் தமிழ் மகட்கில்லை என்பது கருத்து. உண்டாயின் மேற்பருவங்களும் முடிவும் கூற வேண்டும். அதனால், பேதையாயினும் மேதையங் குமாமகளாய், என்றுந்தன்னெழினலங் குன்றாமல் விளங்குகின்றாள் தமிழ்மகள் என்பது போதரும். இதுபற்றியன்றோ—'கன்னித் தமிழ்' என்பர் முன்னோர். "ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன், சீரிளமைத் திறம்" என்றார் பின்னோரும். வளருகின்றாள் என்று முடித்தாராயினும் அவ்வளர்ச்சியை நாம் வாழ்த்துவோம் என்பது முடிபாகக் கொள்ளத் தகும். 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என்பது போல இதுவும் ஒருவகை வாழ்த்தாம். இவற்றால் தமிழின் பிற்கால நிலை கூறியவாறாயிற்று.

'வளருகின்றாள்' என்றே நாமும் இப்பாட்டைப் பாடி வாழ்த்தும்படி வரந்தருவார் நமக்கு வரந்தந்தனர். ஆகவே, நம் தமிழ் மொழி என்றும் வளர்ந்து வாழ்வதாக. இங்ஙனம் தமிழ் தன் இளமைச் செவ்வி குன்றாமல் வளர்ந்து வருவதற்குக் காரணம்

யாது? அதன்கணுள்ள இனிமையேயன்றிப் பிறிதன்று. இது பற்றியே இனிமைப் பொருளில் தமிழ்ச் சொல்லை வழங்கலாயினர் ஆன்றோர். "தமிழ் என்ற பதத்தை இடைவிடாமற் பல தடவை உச்சரித்துப் பாருங்கள்; அது, அமிழ்து மயமாய் இனித்தலைக் காணலாம்" என்று நண்பரொருவர் ஒரு சமயம் கூறிய வார்த்தை இங்கு ஞாபகத்து வருகின்றது. இக் கூற்று விநோதம் போலத் தோன்றினும் உண்மையுடைய தென்பதில் ஐயமில்லை.

இவ்வாறு அமிழ்தினினிய தமிழ்மொழியின் சரித்திரத்தை வரைந்தருவார் அழகாகவும் சுருக்கமாகவும் ஒரு செய்யுளிற் கூறி முடித்திருத்தலை நாம் தெரியலாம். இத்தகைய தமிழ் வரலாற்றை விரிவாக அறியவேண்டு மென்பதே—இப்போது நம்மவரது பெரு விருப்பமாயுள்ளது. தமிழ் மொழியின் வரலாறென்பது, அம் மொழியின் பழைமை பெருமை சிறப்பியல்களும், அது வழங்கும் நாட்டின் அமைதி வழக்க ஒழுக்கங்களும், அதன் மக்களது வாழ்க்கை செய்திகளுமாகும். இவை நூல்களின் பருப்பொருள்களை ஆராய்தலால் பெறப்படக் கூடியன். இத்தகைய வரலாறுகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதை அறியாதவர்களென்றேனும் புறக்கணித்தவர்களென்றேனும் கூற முடியாது. ஒரு நூலுக்கு முகவுரையாகிய பாயிரம் இன்றியமையாத தென்பது தெரிந்ததே; "ஆயிர முகத்தானமைந்த தாயினும்—பாயிர மில்லது பனுவ லன்றே" என்பது இலக்கணம். பாயிரம்—புறவுரை முகவுரை நூன்முகம் என்பன பரியாயச் சொற்கள். நூல்களுடையவும் நூலாசிரிய ருடையவுமாகிய வரலாறுகளும் பிறவும் நூல்களை யொப்பவே என்றும் நிலை நிற்கவேண்டும் என்ற எண்ணங் கொண்டே, "ஆக்கியோன் பெயர் வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, நுதலிய பொருள், கேட் போர், பயன், காலம், களன், காரணம்" என்ற பதினொரு செய்தியையும் கொண்ட சிறப்புப்பாயிரத்தை ஒவ்வொரு நூலும் உடைத்தாயிருத்தல் வேண்டும் என்றும், இப்பருப் பொருள்களை அறிதலால் நூன் பொருளாகிய நால் மாணுக்கர்க்கு எளிதிற் செல்ல இடமுண்டென்றும் விதிக்கலாயினர் பெரியோர். ஒரு நூலுக்குப் போலவே அந்நூற்பரப்பையுடைய பாஷைக்கும் இத்தகைய பாயிரம் வேண்டத்தக்கதேயாம். முன்னோர் விதித்த முறைப்படி ஒவ்வொரு நூலும் தன் பாயிரத்தை உரியவாறு கொண்டிருக்குமாயின்—அவற்றின் தொகுதியே பாஷையின் சரித்திரமாகக் கூடியது. இச்சரித்திரம் இவற்றிற் கண்ட செய்திகளைக் கொண்டு அறிஞர்கள் ஆராய்ச்சி காட்டி எழுதும் நூல்கள், கொழுச்சென்ற வழித்துன்னூசி இனிது

செல்லுமாறு போல, பாஷையின் நுண்பொருள்களில், மக்கள் மனம் பற்றுதற்குப் பேருதவி புரியத் தடையில்லை. ஆகவே, இக்காலத்தோரால் தமிழ்ச் சரித்திரம் என்று சொல்லப்படுவது யாதெனின், அது தமிழ்ப் பாயிரமேயன்றிப் பிறிதன்று என்பது தெரியலாம். இத்தகைய பாயிரம் கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயின் மாடம் போலவும், தகை மாண்பு நெஞ்சுவர்க்கு வகைமிண்ட ஓவியம் போலவும் பாஷைக்கு அலங்காரமாய் அதன் பெருமையைச் சிறப்பாகக் காட்டவல்லது. அதனால், இக்காலத்தவர் அவாவானது, இத்தகைய தமிழ்ப் பாயிரத்தை அறிவதில் விசேடமாக இருப்பது இயற்கையேயாம். நாகரீகம் பெற்றுள்ள நாட்டாரெல்லாம் தங்கள் பாஷா சரித்திரங்களைப் பெரிதும் விரும்பிப் புதியவாகக் கண்டெழுதித் தம் பாஷைப் பெருமையை உயர்த்தி வருகின்றனர். அதனால், பழமை பெருமைகளையுடைய தமிழ் மக்கட்கும். அத்தகைய அவாவிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. இத்தமிழ் வரலாறுகளையும் வழக்குகளையும் அறிந்து மகிழ்வதற்கு அதன் கண்ணமைந்த நூற்பரப்பு இன்றியமையாத கருவி என்பது தெரிந்ததே. இதனைப்போல் அவற்றை அறிதற்கு முக்கியமாக வேண்டத்தக்க கருவி வேறுமுண்டு. அவற்றுட் சிலாதாமிர சாஸனங்கள் சிறந்ததொன்றும். நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள சாஸனங்கள் அறிஞர்களாற் கண்டுபிடிக்கப்பட்டு ஆண்டுதோறும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பக்தித்திறம் வாய்ந்த உத்தம சீலர்களால் ஆலயங்கட்கும் மற்ற தர்மங்கட்கும் ஆசந்திரார்க்கமாகச் செய்யப்பட்ட அறச்செய்கைகளே இச்சாஸனங்களிற் பெரும்பான்மை காணப்படும் செய்திகள். இவற்றினின்றும் பண்டையோர் தெய்வங்களிடத்தும் அடியாரிடத்தும் மற்ற மக்களிடத்தும் காட்டிவந்த மனப்போக்கின் பெருமை முழுதும் நன்கறியப்படும். என்றும் நிலைக்க வேண்டியனவாக செய்யப்பட்ட அறங்களாதலின், அரசருடையவும் அதிகாரிகளுடையவும் அனுமதிப் பெற்றுக் கோயில் முதலிய பொதுவிடங்களில் சாஸனங்கள் கல்லிலும் செம்பிலும் வெட்டிப் பலரும் அறியப் பகிரங்கப்படுத்தப் பெற்றுள்ளன. முன்னோர்களுடைய நிரதிசயமான தர்மச் செயல்களைக் குறிக்கும் இச்சாஸனங்களை ஒருமுகமாகத் தொகுத்துப் போற்றும்படி சாஸன இலாகாக்களைத் தேசமெங்கும் தாபித்து நடத்தும் அரசாங்கத்தார் செயல் நம்மவரது போற்றற்கும் புகழ்ச்சிக்கு முரியதாகும். நம்முன்னோர்கள் நிலைத்திருக்கவேண்டிச் செய்தப் போறங்கள்-அரசியல்களின் மாறுபாட்டால் பெரும்பாலும் சிதைந்தன. ஆயினும்,

அப்புண்ணிய மக்கள் வரலாறுகளை நாம் அறிந்து மகிழும்படி செய்துவரும் பேறும்-இப்போது நம் அரசாங்கத்தாருடையன என்றே சொல்லலாம். இத்தகைய சாஸனங்கள், முன்னோரது அறச்செயல்களை மட்டுமன்றித் தமிழ்மொழியின் உள்ளீடான நுண்பொருள்களையும், வெளியீடுகளான பருப் பொருள்களையும், அறிதற்குப் பேருதவி புரிவனவாயுள்ளன. அதனால், தமிழ் வரலாறுகளை அறிதற்கு, இவை பெருங் கருவிகளாக வேண்டப் படுகின்றன.

இருபது வருஷங்கட்கு முன்பு நான் மதுரைத் தமிழ்ச் சங்கதனுச் செந்தமிழ்ப் பத்திரிகையை நடத்திவந்த போது, காலஞ்சென்ற ஸ்ரீகோபிநாதராயரவர்கள்—சாஸனங்களினின்றும் கண்ட அரிய விஷயங்கள் பலவற்றை அதற்கு எழுதி உதவி வந்தனர். ராயரவர்களது சாஸன ஆராய்ச்சி வன்மை இணையற்றது—என்பதைப்பற்றி நான் இங்கே கூறுவது மிகையே, அவர்கள் எழுதிய விஷயங்கள் சிலவற்றில், சாஸனச் செய்திகளி லேயே அதிக மதிப்புக் காட்டியும், இலக்கியங்களில் அத்துணை யின்றியும், எழுதிய பாகமும் உண்டு. அவ்விடங்களில் எனக்கும் அவர்கட்கும் அபிப்பிரய பேதம் ஏற்பட, அது பற்றி, இலக்கியப் பெருமையையே அதிகமாக நானெடுத்துரைத்து எழுத நேர்ந்தது. ஆனால், நெடுங்காலம் இடைச் சென்றபின் இவ்விஷயமாக நாங் களிருவோரும் சந்தித்த போதெல்லாம் சம்பாஷித்துக் கொண்ட தென்ன எனில், அவ்விரண்டும் ஒன்றுக் கொன்று இன்றியமை யாதனவாதலால், அவை ஒப்பமதித்துப் போற்றக் கூடியன என்பதேயாம். சாஸன வழக்கெல்லாம் இலக்கியத்துடனும், இலக்கிய வழக்கெல்லாம் சாஸனத்துடனும் ஒருங்கியைந்தும், ஒன்றையொன்று விளக்கியும் செல்லுமானால், இந்நம்பிக்கை கொள்ளத் தடையென்னை ? ஆகவே, அவ்விரண்டும் ஒன்றனை யொன்று உணர்ந்து கொள்ளுதற்கு இன்றியமையாதன என்பது பெறப்படுகின்றது. தமிழ் மக்கள் அவ்வக்காலத்து வழங்கிய உலக வழக்கு முறையில்-வாக்கிய ரூபமான சாஸனங்கள் அமைந்தன வாகும். அவை செய்யுள் வழக்கிற்கேயுரிய சொற்களையேனும் மரபுகளையேனும் உடையனவல்ல. அவற்றிற் பயில்வன வெல்லாம் அவை யெழுதப்பட்ட காலத்தோடு சம்மந்த முடையனவே யல்லது வேறில்லை. ஆதலால், அச்சாஸனங் கூறும் சொற்பொருள் மரபுகள் யாவும் காலவியற்கைப்படி அமைந்தன என்றே அறியத் தக்கது. பழைய இலக்கியங்களும் அத்தன்மை கொண்டனவேயாம். செய்யுட்கேயுரிய சொற்களையும், மரபுகளையும், இலக்கியங்கள்

கொள்வனவாயினும்—தத்தம் காலத்துக் குரியனவாகிய உலக் வழக்குச் சொற்பொருள்களையும் அவை பெரிதும் வழங்குகின்றன. ஆக சாஸனங்களும் இலக்கியங்களும் காலவியற்கைக் குற்ற உலக வழக்குக்களைக் கொண்டுள்ளனமையால், அவ்வக்காலங்கட் கமைந்த அவ்விரண்டும் பலவிடங்களில் ஒற்றுமைப்பட நேர்கின்றன. அஃதாவது—1,000 வருஷங்கட்கு முன் உலகவழக்காகக் கண்ட சாஸனச் சொற்பொருள்கள்—ஒரு நூலில் அருமையாகக் காணப் படுமாயின், அந்நூல் ஏறக்குறைய அச்சாஸன காலத்தை ஒட்டியது என்று கருதத் தடையில்லை யன்றோ? இலக்கியங்கள்—மேற்குறித்தபடி பாயிரவகை பதினொன்றனையும் கொண்டன வாயின், அவற்றின் காலமும் இன்னதென்று நாம் தெரியக்கூடும். ஆக, சாஸனங்களும், இலக்கியங்களும் ஒற்றுமைப் படுதலால்—உண்மைப் பொருளுணர்ச்சியை நாம் அவற்றினின்று கொள்ளக் கூடிய தாகின்றது. சாஸனங்கள் பெரும்பாலும் அவை அமைந்த காலநிலை தெரியக் கூடியவைகளாகவே உள்ளன. காலந் தெரியாத வற்றையும், அதன் எழுத்தமைதி கொண்டும், அரசாட்சி வருஷங் கொண்டும், அது இன்ன நூற்றாண்டினதாக வேண்டும் என்று சாஸனவறிஞர்கள் கூறவல்லவர்கள். இவை போலவே இலக்கி யங்களும் அவற்றின் உள்ளீடான வழக்குக்களையும் வரலாறுகளையும் கொண்டு அவை இன்ன நூற்றாண்டுக்குரியன என்று நாம் மதிப்பிடக் கூடும்.

இவ்வாறு சாஸனங்கள் இலக்கிய வுணர்ச்சிக்கும், இலக்கியங்கள் சாஸன உணர்ச்சிக்கும் உபகாரப்பட்டு, ஒன்றுக்கொன்று இன்றியமையாததாயிருக்கும் நிலையே, என்னுடைய உபந்யா சங்களில் விரித்துக்காட்ட எண்ணிய விஷயமாகும். இவ் விஷயத்தை, வரந்தருவர் வாக்கைக் கொண்டு நான் ஆதியில் தோற்றுவாய் செய்து கொண்ட கால முறைப்படி—ஆதிகாலம், சங்கத்துச் சான்றோர்காலம், பிற சான்றோர்காலம், சோழர் காலம், பிற்காலம் என்று ஐந்து பகுதிகளாகக் கொண்டு இனி விளக்க முயல்வேன்.

ஆதிகாலமும்

இலக்கியங்களும் சாஸன வழக்குக்களும்

தமிழின் ஆதிகாலம் என்பது கடைச்சங்கத்துக்கு முற்பட்ட கால விசேடமாகும். தலைச்சங்க இடைச்சங்கங்களும் அவற்றுக்கு முற்பட்டதும் இக்காலப்பகுதியுள் அடங்கும். இக்காலங்களில் வாழ்ந்த அரசர் புலவர்களைப் பற்றி இறையனார் களவியலுரையால், ஒருசில வரலாறுகள் நமக்குத் தெரியவருகின்றன. ஆனால், தலையிடைச்சங்க நூல்களில் ஒன்றுமே நமக்குக் கிடைக்கவில்லை. நம் பரத கண்டத்தில் அமைந்த சாஸனங்களெல்லாம், அசோக சக்கரவர்த்தி கால முதலாகவே தொடங்குகின்றன. தலையிடைச் சங்கங்களோ நூல் வழக்குப்படி பெரிதும் முற்பட்டனவாகும். ஆகவே, இவ் ஆதிகாலத்துச் சாஸனங்களை நாம் எதிர்பார்க்க இடமில்லை என்பது தெரியலாம். ஆனால், புராதனத் தமிழ் வழக்கொன்றை நோக்கும் போது, எழுத்தமைதியையும், கல்வெட்டு முறையையும் ஆதித் தமிழ் மக்கள் உடையராயிருந்தவர் போலவே தோற்றுகின்றனர், பண்டையோர் வழங்கிய வடிவெழுத்துக்கள் சிலவற்றைப்பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. மெய்கள், எகரவொகரங்கள், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்த மென்பவை புள்ளி பெறுவன வென்றும், மகரக்குறுக்கம்—மகரவொற்றின் உள்ளாகப் புள்ளி பெறும் என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார். நூல் வழக்கின்படி, இவ்வாசிரியர் இடைச்சங்கப் புலவரென்பதும், அகத்தியனாருடைய தலைமை மாணாக்கர் என்பதும் பலரும் அறிந்தவை, இவ்வாசிரியர் புள்ளியெழுத்துக்களை இவ்வாறு சிறப்பாகக் கூறிச் செல்வதை நோக்குமிடத்து, தமிழ்க்குப் புராதனமான எழுத்தமைதி தனிமையாக இருந்ததோ என்று சங்கிக்க இடமேற்படுகின்றது. பரத கண்டத்தில் இப்போது வழங்கும் எழுத்துக்கட்கெல்லாம், அசோக சாஸனம் முதலியன அமைந்துள்ள பிராம்மி எழுத்துக்களே மூலமானவை என்பது சாஸன வறிஞர் பெரும்பாலார் கருத்தாகும். இப்பிராம்மி சாஸனங்கள்—சில பாண்டிய நாட்டிலும் பிறவிடங்களிலும் உள்ள மலைப்பிரதேசங்களிலே, இப்போது அருமையாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவற்றிற் கண்ட பாஷை, பிராகிருத மொழிகலந்த தமிழ்ச் சிதைவாகத் தெரிகிறது. இச்சாஸனங்களிற் கண்ட எழுத்தே—பழைய தமிழ் எழுத்தாம் என்று எவரும் துணிந்து சொல்வதற்கில்லை. பழையவெழுத்தாயின், மெய்யெழுத்து முதலியவை சிறப்பாகப் புள்ளிபெற வேண்டுமென்று தொல் காப்பியனார் நியமித்த முறையில் இவற்றிலும் அமைந்திருத்தல்

வேண்டுமன்றோ? அவ்வாறு இப்பிராம்மி சாஸனங்களிற் காணப்படவில்லை. அன்றியும், பாண்டிய நாட்டுக் கண்ட பிராம்மி எழுத்துக்கள் சில வடநாட்டுப் பிராம்மியினும் வேறுபட்ட குறியீடுகளையும் மாறுபாடுகளையும் கொண்டுள்ளன. இவற்றால் தமிழ் தனியே வழங்கி வந்த எழுத்துக்களும் பிராம்மி லிபிகளும் கலந்த எழுத்தமைதியும் பிராகிருதமும் தமிழும் கலந்த பழைய லிபியுமுடைய சாஸனங்களாகவே இவை தோற்றுகின்றன. ஆகவே, ஆதித் தமிழ் மக்கள் தமக்கெனத்தனியே எழுத்தமைதியுடையவரல்லரென்று ஒரு தலையாகச் சொல்ல ஆதாரமில்லை. ஆயின், தமிழ்மக்கள் தமக்கென்று வழங்கிவந்த எழுத்து உண்டோ என்ற கேள்வி இங்கு உண்டாகக் கூடியதே இருபத்து மூன்று வருஷங்கட்கு முன்பே செந்தமிழ்ப் பத்திரிகையில் இதுபற்றிய என் கருத்தொன்றை வெளியிட்டுள்ளேன். சாஸன பரிசோதகர் கூறுமாறு பழையனவும் புதியனவுமாக வழங்கும் தமிழ் லிபிகள் பிராம்மியின் திரிபுகள் என்பது பொருந்துவதே என்றும், ஆனால், கடைச்சங்கத்தார் காலத்துக்குமுன் வழங்கிய எழுத்து முழுதும் எகிப்தியர், சீனர், முதலியோர் வழங்கிவந்த சித்திர சங்கேத லிபிகள் (ஹிராகளபிக்ஸ்) போன்றன வாதல் வேண்டுமென்றும், நான் அவ்வாராய்ச்சியில் காட்டியிருக்கின்றேன். அவற்றைச் சுருக்கமாக இங்குக் கூறுவேன். நான் தெரிந்து கொண்ட லிபிகள்—வடிவெழுத்து, பெயரெழுத்து, தன்மையெழுத்து, முடிவெழுத்து—என நான்கு வகையாம், "வடிவு பெயர் தன்மை முடிவுநான் கெழுத்தே" எனத் திவாகரரும், பிங்கலரும், இவ்வெழுத்து வகைகளைக் குறிப்பிடுதலறியத் தக்கது. பிங்கல நிகண்டிற் கண்ட இச்சூத்திரத்திற்கு—இக் காலத்தவரால் எழுதப் பட்டிருக்கும் உரை, உரைத்தவர்க்கே விளங்காததாக உள்ளது. ஆதலால், அதை இங்கே குறிக்கவேண்டிய அவசியமில்லை. மேற் காட்டியவற்றுள்—வடிவெழுத்து என்றது—பூர்வ எகிப்தியர் வழங்கியது போன்ற சித்திரக் குறிகளே யாக வேண்டும். அவ்வெகிப்தியர்—மனிதன் அல்லது விலங்கு—இவற்றை உணர்த்த அவற்றின் முழு உருவத்தையேனும், ஒரு பாகமாகிய தலையையேனும் சித்தரித்துக் காட்டுதல் வழக்கம். இதனை உருவெழுத்து என்பதுமுண்டு.

காணப் பட்ட வுருவ மெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
எழுதப் படுவ துருவெழுத் தாகும்.

என்பது பழஞ் சூத்திரம். இதனால் வடிவெழுத்தை நான் கூறிய முறையே சித்தரித்துக் காட்டி வந்தனர் முன்னோர் என்பது நன்றாக விளங்கும். இனிய பெயரெழுத் தென்றது, சீனர்களைப் போல ஒவ்வொரு பெயரை உணர்த்துவதற்கு இட்டு வழங்கிய சங்கேதக் குறிகளையாம். இவை, போரைக் குறிக்க மனிதன் புயங்களைக் காட்டுவது போல—ஒரு தொடர்பு பற்றியேனும், பற்றுமலேனும் வழங்கப்படும். அடுத்த—தன்மை எழுத்து என்றது—குணங்கள், சக்திகள் முதலியவற்றைக் குறித்தற்கு வழங்கிய அடையாளங்களை; இத் தன்மையெழுத்தாகப் பூர்வ வெகிப்தியர் வழங்கியவை—விவேகத்துக்குக் கண்ணும் எறும்பும், அறிவின்மைக்கு ஈயும், நன்றியின்மைக்கு விரியன் பாம்பும், வெற்றிக்குக் கருடனும் பிறவுமாம். பெயரெழுத்துப் போலவே—இதுவும்—முடிவெழுத்தும் பொருளுடன் சம்பந்தம் பெறாத சங்கேதங்களாகவும் அமைவதுண்டு. இறுதியான முடிவெழுத் தென்றது—வினை முடியுடைய வாக்கியங்களைக் குறிக்க வழங்கிய அறிகுறிகளை இரண்டு அல்லது பல பிராணிகளின் அவயவங்களை ஒன்றாகக் கலந்து—ஓர் உருவம் அமைத்து, ஒரு விஷயத்துக்கே குறியாக வழங்குவது எகிப்தியர் முறை, ஆக—நால்வகை எழுத்துக்களையும் அறியலாம். இவற்றால், தமிழாது பூர்வ லிபிகள்—சித்திரக் குறிகளே யாதல் வேண்டும் என்பது பெறப்படும்—என்பதே. யான், பல வாண்டுகட்குமுன் எழுதிய இப்பொருள்—நண்பர்கட்கு அதிசயம் விளைக்கத் தடையில்லை. தமிழுக்கு—இப்படியும் ஓரெழுத்தைப் புதியதாகக் கட்டிக் கூறுதல் ஏற்குமோ என்று அனைவரும் சங்கிக்கலாம். தக்க பிரமாண மின்றித் தனியாக நான் கூறவில்லை என்பது. அடியில் வரும் 11-ம் நூற்றாண்டி லியற்றப்பட்ட யாப்பருங்கல விருத்தி வாக்கியங்களா லறியத் தக்கது. அது வருமாறு :—

மகடூஉ, ஆ, பிடி, குமரி, கன்னி, பிணவு, மூடுவல் என்றின்ன சிலவெழுத்தும் [அகசட தபய முதலியவாய வெழுத்தும், அசல வரகய முதலிய இராசி யெழுத்தும், கார்த்திகை முதலிய நாளெழுத்தும்] தேர்பதம் [தோபதம்] முதலிய நால்வகை எழுத்தும் [சாதி முதலிய தன்மையெழுத்தும்] உச்சாடன முதலிய உக்கிர வெழுத்தும், சித்தரக் காருடம் முதலிய முத்திற வெழுக்தும், பாகியல் [பாசிருகிய] முதலிய நால்வகை யெழுத்தும், புத்தேள் முதலிய நாற்கதி யெழுத்தும், தாது முதலிய யோனி எழுத்தும், மாசு மடையம் [மாத மதியம்] முதலிய சங்கேத வெழுத்தும் கலிமுதலிய சங்கேதவெழுத்தும், பார்ப்பான்

வழக்காகிய பதின் மூன்றெழுத்தும் என்றித் தொடக்கத்தனவும், கட்டுரை யெழுத்தும், வச்சிர முதலிய வடிவெழுத்தும், மற்றும் பல வகையாற் காட்டப்பட்ட (எத்துணையோ) பல வெழுத்தும், நல்லார் வாய்க் கேட்க. இவ்வாக்கியங்கள் நாம் அதிசயத்துடன் நோக்கததக்கன வன்றோ ? தமிழாசிரிய னொருவன் அறிந்திருக்க வேண்டியனவற்றுள் இவ்வகையாக நாட்டில் வழங்கும் சங்கேத எழுத்துக்களை யெல்லாம் அவனறிந்தவனுதல் வேண்டும் என்று யாப்பருங்கலமுடையார் கூறுதலறியத்தக்கது. பிழைபட்டுக் கிடக்கும் இத்தொடர்களை உள்ளபடியே இங்கு எழுதலாயிற்று.

இவற்றுள் சங்கேத வெழுத்துக்கள் என்று கூறப்படுவன பெயரெழுத்துக்களாகும். கட்டுரை யெழுத்து என்றது முடிவெழுத்துக்களாகும், வடிவெழுத்துக்களும் தன்மை யெழுத்துக்களும் ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ளன. 'வச்சிர முதலிய வடிவெழுத்தும்' என்பதனுல்—அவை வடிவு விளங்க எழுதப்பட்டமை தோன்றும். சாதி முதலிய தன்மை யெழுத்து என்பதனுல் நான் முதலிற் குறித்த பொருள் பெரிதும் பொருந்துதல் காணலாம். ஆகவே, எகிப்தியர் சீனரது போன்ற வெழுத்துக்கள்—தமிழ் நாட்டில் முற்காலத்தில் அளவற்றிருந்தன வென்பதும், அவற்றுட் சில யாப்பங்கல விருத்தியுடையார் காலத்தும் வழக்கி லிருந்தன வென்பதும் தெரியலாம்.

இவ்வாறு, பல வருஷங்களுக்கு முன் எழுதிய என் கருத்தை இப்போது யான் கண்ட பிரமாணங்கள் சில வற்புறுத்துகின்றன. புகார்த் துறைமுகத்தில் இறக்குமதியாகும் மூடைகட்கும், பண்டங்களேற்றிய வண்டிகட்கும், கண்ணெழுத்துக்கள் இடப்பட்டிருந்தன என்று இளங்கோவடிகள் இரண்டிடங்களில் கூறுகின்றார். இவ்வாறே, அரசர்க்குத் திருமுகமெழுதுவோரைக் கண்ணெழுத்தாளர் என்று வேறிடத்தும் அவர் வழங்குவர். இதனுல் கண்ணெழுத்து என்பது, சங்கநாளில் வழங்கிய ஒருவகை எழுத்துக்குரிய பெயரென்று கருதத் தடையில்லை. கண்ணெழுத்தென்பதன் பொருள் நெடுங்காலம் வரை விளக்கமில்லா திருந்தது. ஆனல் சமீபத்திற் கண்ட பிரயோகமொன்றால், அதன் பொருள் ஒருவாறு தேறப்படுகின்றது. அப்பொருளாவது சித்திரவெழுத்து என்பதேயாம். கோல் என்ற பொது மொழி மாமரத்தின் மேலிருந்து கோல் தா என்றால் சுள்ளிக்கோலும், மதில் மேலிருந்து கோல் தா என்றால் கண்ணழுத்தங் கோலுமாய்ச் சிறப்புப்

பொருளுணர்த்தி நிற்கும் என்ற கருத்தில்—

" மாமே லிருந்தொரு கோல்தா வெனிற்சுள்ளிக் கோல்தாலும்
சோமேலிருந்தொரு கோதா வெனிற்றா வேதுணிந்து
பூமேவு கண்ணழுத் தங்கோல் கொடுத்தலும் பூதலத்தே
நாமே வியல்பென்று கூறுவர் நல்ல சொன் ஞுவலரே "

என்ற பழைய பாட்டொன்று சிவஞான சித்தியாரில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இதனுள் 'சுவர்மேலிருந்து ஒருவன் கோல் தா' என்றால் கண்ணழுத்தங் கோலை அது குறிக்கு மென்று கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. கண்ணழுத்தங் கோல் என்பது எழுதுகோலையே உணர்த்துவதாகும், 'கோல் தா' என்பதற் கேற்ற பொருள். அவ்வெழுது கோலாதலே பொருந்தும் ['எழுதுங் காற் கோல் காணுக் கண்ணே போல்' என்பது குறள்] ஏணி என்பதை கண்ணெழுத்தின் கோலின் பொருளாகக் கருதுவதுண்டு. ஆனால், கோல் என்பது ஏணிக்கேற்ற சொல்லன்று; அன்றியும் சுவர் மேலிருப்பவன் கோல் தா என்று கேட்பதற்கேற்பக் கையிற் பெறுதற்குரிய பண்டமாகாமையாலும் அது பொருந்தவில்லை. ஆகவே, " சுவர்க்கணிருந்து கொண்டு ஒருவன் கோல் தா என்றால் அக்கோல் எழுதுகோலாக நினைந்து ஒருவன் கொடுத்தலும் " என்பது அத்தொடர்ப் பொருள் என்பதில் ஐயமில்லை. அதனால், கண்ணழுத்தங்கோல் என்று இப்போது மதிப்பிடப்பட்டுள்ளதைக் 'கண்ணெழுத்தங்கோல்' என்று திருத்திப் பொருள் கொள்ள வேண்டும். கண்ணெழுத்து + அம் + கோல்—சித்திரம் வரைதற் குரிய கோல், ஊற்றங்கோல் நாற்றங்கால் என்பனபோல இதுவும் அம்முச்சாரியை இடையிற் பெற்றதாம். இவ்வாறு சித்திரத்துக் கண்ணெழுத்து என்ற பிரயோகம் பழைமையாகக் காணப் படுதலால், இளங்கோவடிகள் கூறும் கண்ணெழுத்து என்பது சித்திரவெழுத்து என்று பொருள் பயக்கத் தடையில்லை யன்றே? கண்ணுள் வினைஞர் என்பது சித்திரகாரிகட்கு ஒரு பெயரென்பது சங்கநூல்களால் தெரியலாம். இதற்கு, நோக்கினர் கண்ணிடத்தே தம்தொழிலை நிறுத்துவோர் என்று பொருள் கூறுவர் நச்சினார்க் கினியர். இவ்வாறே, கண்ணெழுத்தும் பார்ப்பவர் கண்ணிடத்தே தம் தொழிற் திறமையைக் காட்டி நிற்கும் எழுத்து என்று பொருள் பெற்று விரிதல் கூடும். தமிழ் மக்கள் அக்ஷரங்கட்கு வழங்கிய எழுத்து என்ற சொல்லே சித்திரத்தினடியாக வந்ததோ என்று கருதுதற்கும் இடமுண்டு. சித்திரித்தலுக்கு எழுதல் என்ற வழக்குத் தமிழில் மிகுதி என்பது தெரிந்ததே. ஆகவே, சித்திர

வெழுத்துக்கள் சங்கநாளினும் ஒரு புறம்—வழங்கி வந்தவை என்றே சொல்லலாம். இவ்வாறு, சித்திர சங்கேதக் குறிகளான எழுத்துக்கள், தமிழில் வழங்கின என்பதற்குச் சாஸன வாதர வுண்டா என்று இனிக் கேட்கக்கூடும். சாஸன விலாகாவினின்று வெளிவந்த புத்தகத் தொகுதிகளை நோக்குமிடத்துத் தமிழில் முன்னாளில் வழங்கிவந்த குறியீடுகள் பலவற்றைக் காணலாம், நெல், (ஐ) (S.I.I. III, 7, 93) சர்மன் (ஷ 10) கொல்லம் (T.A.S.V. 56), குறி (சபை) (S.I.I. III, 176), யாண்டு (Ibid V. 156), பொன் (V. 156) முதலியவற்றின் குறிகளை அச்சாஸனங்கள் வழங்கிவருகின்றன. இவ்வாறே, இன்னும் அறிதற்குரியவை மேற்படி சம்புடங்களின் கீழ்க் குறிப்புகளிற் காட்டப்பட்டிருக்கின்றன. இக்குறியீடுகளிற் சில ஊகத்தால் இன்னது குறிப்பவை என்று அறியப்படினும், பல தெரியக் கூடவில்லை. சாஸனங்களில், இக்குறியீடுகள் அருமை யாகக் காணப்பட்டாலும் உலக வழக்கில் மிகுதியாகவே அக் காலத்தில் வழங்கியிருக்க வேண்டும். சாஸனம் வரைந்தவர்களின் நோக்கம், தம் அறச் செயல்கள் அனைவர்க்கும் பகிரங்கமாகத் தெரியவேண்டும் என்பதேயாம். அவற்றில், சிலரே அறியக் கூடிய குறியீட்டெழுத்துக்களைச் சாஸனம் அமைப்போர் மிகுதியாக ஆள ஒருபோதும் கருதியிரார். ஆதலால் அக்காலத்தில் நாடெங்கும் அறியப்பட்ட சங்கேத வெழுத்துக்களன்றி ஏனையவை சாஸனங்களிற் பயில விடமில்லை யாயின என்றே தோற்றுகின்றது. சங்கேத வெழுத்துக்களாக நமக்குத் தோற்றுபவையும் சித்திர வெழுத்துக்களினின்றே உற்பத்தியாயிருக்க வேண்டும். அதனால் சித்திரவெழுத்துக்களையும் சங்கேதவெழுத்துக்களையும் சாஸனங்களில் வேறு பிரித்தறிய நமக்குக் கூடவில்லை. இச்சங்கதேவெழுத்துக்களே—கரந்தெழுத்து என்றும் கூறப் படுவன. காந்தருவதத்தை சீவகனுக்குக் கரந்தெழுத்தில் கடிதம் எழுதினாள் என்று, தங்காலத்து வழங்கிய சங்கேத வெழுத்துக்களை உளத்துக் கொண்டு, திருத்தக்க தேவர் பாடுதலால் இஃதறியப்படும் (சீவக 1767). இவற்றினின்றும், பிராம்மி எழுத்தின் திரிபுகளான தமிழெழுத்துக்கள் வழங்கி வந்த பிற்காலத்தினும், பழைய சங்கேத வெழுத்துகளிற் பல தமிழ் நாட்டில் வழக்கிலிருந்து வந்தனவென்றும், அவை யாவும் முன்னோரால் முறையாகக் கற்கவும் கற்பிக்கவும் பெற்றன என்றும் நாம் நன்கறியலாம். இவை, ஆரியரின் பழைய எழுத்தாகிய பிராம்மியும் இத்தகைய சங்கேத சித்திரக் குறிகளினின்றே

உற்பத்தியாகியதென்பது நவீன சரித்திராசிரியர் கருத்தாக உள்ளது. சமீபத்தில் பாஞ்சாலம் சிந்து தேசங்களிலே—ஹரப்பா—மோஹிஞ்சதாரோ என்ற இடங்களிற் பூமியின்கீழ் அகப்பட்ட மேரியன் எழுத்துக்கள் இச்சித்திர சங்கேதக் குறிகளாகவும் 5,000, 6,000 ஆண்டுகட்கு முற்பட்டனவாகவும் உள்ளன என்பர். பிராம்மிக்கு மூலாதாரமானவை மேரிய லிபிகளாகக் கருதுவாரும் உளர். ஆகவே, புராதன மக்களெல்லாம் ஒருவகைச் சித்திர சங்கேதக் குறிகளையே கையாண்டு வந்தவரென்றும் அப்பழையருள் தமிழரும் விலக்கப்பட்டவரல்லரென்றும் நாம் தெரியலாம்.

இவ்வாறு, எழுத்தின் முறையைத் தெரிந்திருந்த தமிழ் மக்கள், கல்லெழுத்து அமைக்கும் வழக்கத்தையும் பழமையாகக் கையாண்டு வந்தவர்கள் என்றே சொல்லலாம். தொல்காப்பியனார்க்கு முற்பட்ட காலத்திலேயே—கல்லெழுத்து அமைக்கும் வழக்கிருந்த தென்பது, நடுகல் அல்லது வீரக்கற்களைப் பற்றி—அவர் கூறும் செய்திகளினின்று தெரிய வருகின்றது. போரில் இறந்த வீரர் பொருட்டுச் செய்தற்குரிய சடங்குகளுள், 'சீர்த்த மரபிற் பெரும்படை' என்பதும் ஒன்று என்று தொல்காப்பியர் கூறும். இதற்கு, வீரன் செய்த புகழைத் தரும்படி கல்லில் வரைதல் என்பது பொருள் என்பர் நச்சினார்க்கினியர். ஆடவர் பெயரும் பீடு மெழுதி அதர் தொறும் வீரக்கல் நட்டுவந்த பழைய தமிழ் வழக்கை இவ்வாசிரியர் கூறுதலினின்று—கல்லெழுத்து முறை மிக முற்காலத்தது என்பது தெளிவாகும். பாண்டி நாட்டிலும் பிறவிடங்களிலும் மலையிடங்களிற் காணப்படும் பழைய பிராமி சாஸனங்களும் 2,000 ஆண்டுகட்கு முன்பே கல்வெட்டு முறையைத் தமிழ்மக்கள் அறிந்திருந்தவர் என்பதற்கு ஒரு சான்று என்றே சொல்லலாம். நடுகல் வழக்கின் பழமை சங்கச் செய்யுள்களினின்றும் அறியப்படுகின்றதாயினும், சங்க நூல்கள் கூறுமாறு எழுத்துடைய பழைய கல்லொன்றும் இதுவரை கிடைக்கிலது. அவ்வீரக் கற்கள், பலரும் நடமாடுதற்குரிய வழியில் யாவரும் வணங்குதற் கேற்றபடி வெள்ளிடையே நடப்பட்டு வந்தமையால், வெயில் மழைகளாலும், பசு முதலியவை உரசுதலாலும், உருவழிந்தும் சிதைவுற்றும் போயின போலும். அன்றியும், அவை தெய்வமாகக் கருதிப் பூசிக்கப் பட்டமையால் மஞ்சள் எண்ணெய் முதலியவை தடவப்பெற்று உருச் சிதைவுற்ற இவற்றை—" எழுத்துச் சிதை நடுகல் " " நடுகல் நறுவிரை மஞ்ச வீர்ம் புறம் பொலிய " (அகம்—269) என்ற பழைய

தொடர்களால் தெரியலாம். ஆகப் பழைய நடுகற்கள் நமக்கு இதுவரை அகப்படாமைக்கு மேற்கூறியவைகளே சிறந்த காரணமாக வேண்டும். இப்போது கிடைத்துள்ள தமிழ் நாடு நடுகற்களுள்ளே திருவனந்தபுரத்து மாறஞ்சடையன் காலத்தமைந்ததே முற்பட்டதாகத் தெரிகின்றது. T.A.S. இத்தகைய கற்கள் 8-ம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் நாட்டிலும் கன்னட நாட்டிலும் காணப்படுகின்றன. இவ்வாறு, நடுகற்களிலன்றி வேறு அறச் செயல் முதலிய செய்திகளைப் பற்றிச் சாஸனம் வரையும் வழக்கத்தைத் தமிழ்மக்கள் பழைய காலத்திற் கொண்டிருந்தவாகத் தெரியவில்லை. தமிழின் ஆதிகால நிலையைப்பற்றி நாம் கூறுதற்குரியது இவ்வளவே.

முச்சங்க காலம்

இனிக் கடைச் சங்க காலத்தைப் பற்றிக் கூறுவேன். இச்சங்கத்தின் வரலாறுகள் பற்றி, முதன்முதல் நமக்கு அறிவிக்கும் நூல் இறையனார் களவியலுரையென்றே சொல்லலாம். இவ்வுரையின் உள்ளீடுகளைக் கொண்டு அஃது எழுதப்பட்ட காலம் 8-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகாது என்று கருதப்படுகின்றது. இவ்வுரையால், முதலிடைச் சங்கத்தார்கள் இயற்றியனவாகத் தெரியவரும் நூல்களில் ஒன்றுமே இப்போது நமக்குக் கிடைத்திலவாயினும் கடைச்சங்க நூல்களில் பலவற்றை நாம் பெற்றிருக்கிறோம். இவற்றினின்று பழங்காலத்து அரசர், தலைவர், புலவர், மக்கள் வரலாறுகளும் தமிழ் நாட்டு வழக்கவொழுக்கங்களும் மிகுதியாக அறியப்படுகின்றன. மகாமகோபாத்யாய ஐயரவர்களால் முதன்முதல் பத்துப்பாட்டு, புறநானூறு முதலிய கடைச்சங்க நூல்கள் வெளிவந்தபோது, அவற்றிற் கண்ட அரசர் முதலியோர் பெயர்களும் செய்திகளும் நமக்குப் பெரிதும் அதிசயம் விளைப்பனவாகவே இருந்தன. அவற்றின் உண்மையைப் பற்றியேனும், தேச சரித்திரத்துக்கு எவ்வளவு தூரம் அவை உதவி புரியக் கூடியன என்பது பற்றியேனும் ஒன்றும் அப்போது தெரியக்கூடவில்லை. ஆனால் சாஸன விலாகாவினின்றும் நாட்டிற் பழைமையாகவுள்ள கல் வெட்டுக்களும் தாமிரப் பட்டயங்களும் வெளிவர வெளிவர, பழைய இலக்கியச் செய்திகள் பலவும் சரித்திர அறிஞர்களது மதிப்பிற்கு உரியனவாகி வருகின்றன. இவ்வாறு வெளிவந்த சாஸனங்கள் யாவும் சங்க காலத்துக்குப் பெரிதும் பிற்பட்டனவே. ஆயினும் அவை நமக்குப் பல நூற்றாண்டுகட்கு

முன்புள்ள பிரமாணங்களாதலால் அவற்றினின்று பழைய சரித்திர வுண்மைகள் பல நாம் கொள்ளக் கூடியவை, ஆதலால் இலக்கியங்களிலும் சாஸனங்களிலும் கூறப்படும் சங்ககாலத்து வரலாறு வழக்குகளைப்பற்றி முதலிற் கூறுவேன்.

அசோக சாஸனமுறை

தமிழ் மூவேந்தர்களின் பழமையும் பெருமையும் அசோக சாஸனங்களிற் கூறப்பட்டுள்ளதென்பது யாவருமறிந்ததே. இத்தமிழ் மூவேந்தர்களை சேர சோழ பாண்டியர் என்ற முறையில் பழைய நூல்கள் வழங்குகின்றன. உலக வழக்கும் அம்முறையே தான் இவருள், முதலிற்கண்ட சேரர் செய்திகளை விசேடமாகச் சாஸனங்களால் அறியக் கூடவில்லை. 8-ம் நூற்றுண்டு முதலே சாஸனங்கள் நமக்குக் கிடைப்பன. இக்காலத்தில், பல்லவ பாண்டியர்களும் பின்பும் சோழர்களும் பேரரசர்களாயிருந்தமையால் சேரர் காலத்து விசேடச் சாஸனங்கள் ஒன்றுமேயில்லை.

சேரர்குலமும் நூல்களும்

ஆயினும் கொங்கு நாட்டை ஆண்டு வந்த சேரர் சிலர் சாஸனங்கள்—பழனி, நாமக்கல் முதலிய இடங்களில் உள்ளன. இவருள் வீரகேரளன் என்ற சேரன் (Ind. Asst. Vol. 1×47 : 50) முன்னோர்களுள் மணிகுட்டுவன், கோதை என்பவர் கூறப்படுகின்றனர், மணிகுட்டுவன் என்பான் செங்குட்டுவனோ என்று சங்கை தோன்றக் கூடியதாம். (நன்னூல்-மயிலை ; மலைநாடாண்ட சேரர்கள்) பழைய சேரர் மரபில் ஒரு பகுதியாரே அதிகமான்கள் என்பவர்.

அதிகமான்

சங்க காலத்தில் பெரிய வீரனும் ஔவை முதலியோரால் அருமையாகப் பாராட்டப் பெற்றவனுமாகிய அதிகமான் நெடுமானஞ்சி என்ற வள்ளலின் வரலாறு பலரும் நன்கறிவர். இவ்வதிகமான் வமிசத்தவர்களைப் பற்றிய சாஸனங்கள் சில நமக்குக் கிடைத்துள்ளன. சேலம் ஜில்லா திருச்செங்கோட்டுத் தாலூக்காவிலுள்ள தர்மபுரி என்றுள்ள ஊரே இவரது தலைநகரம். இத்தர்மபுரியை அடுத்துள்ள அதமன் கோட்டை 'அதியமான் கோட்டையேயாம். இவரை அதிராசன், 'அதியரையன்,

அதியேந்திரன், எழினியவனிகா என்று சாஸனங்கள் வழங்கும். இவர்கள் நாட்டில் சேலம் பகுதி கொல்லி மலைப்பிரதேசம், வடஆர்க்காடு ஜில்லாவில் ஒரு பாகங்கள் அடங்கியிருந்தன என்பது இப்பக்கங்களில் அகப்படும் (Cholar, Vol.II P- 66—7) கல்வெட்டுக்களிலிருந்து தெரியவருகின்றது. கொல்லிமலையினுள் இவர்களது அரண்வலி பெற்ற ஊர்கள் உண்டென்பது— "அதிகனவ னணித்தாக வோங்கெயில் சூழ்மலையரணத் துள்ளுறைவான்" எனப் புகழ்ச் சோழ நாயனார் காலத்து அதிகனைச் சேக்கிழார் குறிப்பிடுதலாலும் (பெரியபு—பக்—480) "கொல்லிக் கூற்றத்து நீர் மிமிசைப், பல்வேற்றானை யதிகமானை" என்ற பதிற்றுப் பத்தாலும் அறியலாம். திருமுனைப்பாடி நாட்டிலுள்ளதும் அதிராச மங்கலம், அதியரையன் மங்கலம் என்பதன் மரூஉவாய்ச் சாஸனங்களில் வழங்குவதுமாகிய அதிகை என்ற தலம் இவ்வரசர் பெயர் பெற்ற ஊரேயாகும். இதுவே "அன்று மலையுறையு மண்ணல் போலும் அதியரைய மங்கையமர்ந்தார் போலும்" என்று அப்பர் தேவாரத்தினுங் கூறப்படுவது (தேவா-43-2) சங்க காலத்தவனை அதிகமான் அஞ்சி சேரர் மரபில் ஒருவனுய்ச் சேரநாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்த போது பெருஞ்சேரவிரும் பொறை என்ற சேரமானுக்கும் இவனுக்கும் தகடூராகிய தர்மபுரியில் பெரும் போர்மூள, அதனில் அவ்விரும் பொறை அதிகனைக் கொன்று அவனூட்டைக் கைப்பற்றினன். இப்போரே புறநானூறு முதலியவற்றினும், தகடூர் யாத்திரை என்ற தனிநூலிலும் சிறப்பிக்கப்படுவது. இவ்வஞ்சியின் வழியினராய்ப் பிற்காலத்து விளங்கிய அதியமான்கள் பலர் நாமக்கல் குன்றிலே ரங்கநாத ஸ்வாமியின் குடைவரைக் கோயிலுள் 8-ம் நூற்றூண்டெழுத்துடையதாக அமைந்த சாஸனமொன்று, நயபரன் முதலிய பெயர்தரித்த தகடூர் அதிகமானெருவன் அதியேந்திர விஷ்ணுக் கிரகம் எனத் தன் பெயரால் திருமால் கோயிலை அமைத்தவர் என்று கூறுகின்றது. இவனே சாஸனங்களால் அறியப்பட்டவர்களுள் பழைமையான அதியனுவான். பல்லவமல்லனையும் சேரனையும் துணைக்கொண்டு, பராந்தகன் நெடுஞ்சடையனைக் கருவூர்ப்பக்கத்துப் புகழியூர் அயிரூர்களில் எதிர்த்தவனுக (T.A.S.V. 6; EP. Rep. 1906-76— I.M.P. P–153; 207) வேலங்குடிச் சாஸனம் Madras Museum Plate கூறும் அதிகமான் இவனைக் கருதத்தகும். 13-ம் நூற்றூண்டில் விடுகாதழகிய பெருமானென்ற அதிகமானெருவன் வடஆர்க்காடு ஜில்லாவிலுள்ள வைகைத் திருமலையில் ஜைன தெய்வங்களைப் பிரதிஷ்டித்தது முதலிய செய்திகள் பாடல்களிலமைந்த அவன்

சாஸனங்களால் அறியப்படுகின்றன. அவற்றுள் ஒன்று வருமாறு:—

வஞ்சியர் குலபதி எழினிவகுத்த வியக்கரியக்கிய ரோ
டெஞ்சிய வழிவு திருத்தியில் வெண்குண விறை திரு
மலையைத்தான் அஞ்சிதன் வழிவரு மவன்வழி முதலிக லதிகனவனன்னால் விஞ்சையர் தலைபுனை தகைமையர் காவலன்
விடுகா தழகிய பெருமாளே

(S.I.J.I. —106)

இதனுள், 'அஞ்சிதன் வழிவருமவன்' என்பதனாலும் 'சேர வமிசத்து அதிகைமான் எழினி செய்த தர்மம்' எனக் காணப்படும் தொடராலும் சங்க நூல்கள் கூறும் எழினி யஞ்சியின் நேர் வமிசத்தவன் இவன் என்பதும், 'கல்வி விஞ்சையர் தலைபுனை காவலன்' என்பதனாலும், பாடல்களில் இவன் சாஸனங்கள் அமைந்திருப்பதனாலும் தமிழ்ப் புலமை நிரம்பியவன் என்பதும் விளக்கமாகும். விடுகா தழகியவன் என்பது, அணியின்றித் தொங்க விட்ட காதின் அழகை யுடையவன் என்ற பொருள் தரும். "விடுகாத ஞானும் தோடிட்ட காது என்று தெரியுங்காண்" (ஈடு-10-1-1) 'விடுகா தழகியார்' எனவரும் திவ்யப் பிரபந்த வியாக்யானத் தொடர்களால் இப்பொருள் பெறப்படுகின்றது.

அயிரைமலை

சேரவேந்தர்க் குரிய மலைகளில் கொல்லியை யடுத்துச் சிறந்தது அயிரை மலை என்பதும் இம்மலையில் வாழும் கொற்றவை, அச்சேரரால் விசேஷமாக வழிபடுந் தெய்வ மென்பதும் பதிற்றுப் பத்தால் அறியப் படுகின்றன. இத்தகைய அயிரைமலை யாதென்பது தெரிய வாராமையால், முதலில் நான் அதனை வேறுகக் கருதி எழுதியதுண்டு. ஆனால் அது இன்ன தென்பதை சாஸனம் இப்போது வெள்ளிடைமலை யாக்குகின்றது. அஃதாவது பழைய நாளில் கொங்கு நாட்டுக் கூட்பட்ட பழனிப் பிரதேசத்துள்ள யானைமலைத் தொடர்புகளுள் ஐவர்மலை என்று இப்போது வழங்குவதே அவ்வயிரைமலை என்பதாம். இதனை நேருயர் நெடுவரை என்று பதிற்றுப்பத்துக் கூறியவாறே இம்மலை மிக உயரமுடையதாகவும் அந்நூல் வருணிக்குமாறு அம்மன் கோயி லுடையதாகவும் ஆற்றின் வீழ்ச்சியால் ஆரவாரமும் அச்சமும் பயக்கக் கூடியதாகவும் விளங்குகின்றது. இதன்கணுள்ள தேவதையை இக்காலத்தார் திரௌபதியாகக் கருதி வணங்குவர், அயிரைமலை என்பதை ஐவர் மலை என்று வழங்கியது போலவே,

அங்குள்ள தேவதையைத் திரௌபதையாகப் பின்னோர் கருதலாயினர். இம்மலை ஜைனர்கட்குரிய விசேடஸ்தலமாகவும் விளங்கியது (I.M.P. EP. 691–705 of 1905) இது ஆனைமலைப் பகுதியாதலால், "ஆனைமாமலை யாதியாய விடங்களிற்பல வல்லல் சேர்—ஈனர்" என்று சம்பந்த மூர்த்திகள் கருதிய ஜைனஸ்தலம் இதுவாகவே சொல்லலாம். இது மதுரைப் பக்கத்துள்ள 'ஆனை மலை' என்ற சிறுகுன்றன்று. அக்குன்றாயின், 'ஆனைமாமலை' என்று அந்நாயனர் விசேடிக்க இடமில்லை. இவ்வயிரையினின்று உற்பத்தி யாவதையே அயிரியாறு என்று சங்கநூல்களும் பொன்னானி என்று பிற்காலத்தாரும் வழங்கும் நதமாகும். இதும்வ மலைவளங் காணுதற்குச் சென்று செங்குட்டுவன் தங்கிய விடத்தில் வீழ்ந்ததாக இளங்கோவடிகள் வருணிக்கும் பேரியாறு. பொன்னானுக்குப் பேரியாறு என்ற பெயர் வழக்கு இன்றும் உண்டு. பூர்ண வாகினி என்ற வடமொழிப் பெயர் பொன்னானி என்று திரிந்த தென்பர், பேரியாறு என்பதும் பூர்ண வாகினி என்பதும் ஒத்த கருத்துடைய வாதல் காணலாம். சுள்ளியாறு என்று தமிழும் சூர்ணநதி என்று வடமொழியும் கூறும் பேரியாறு இதனில் வேறு என்பது அறியத்தக்கது.

காரியாறு

இனி, காரியாறு என்பதொன்றும் இங்கு ஆராய்ச்சிக்கு உரியதாயுள்ளது. மணிமேகலைக் காலத்தவனான சோழனைக் கூறுமிடத்து "அவன், வஞ்சியிலிருந்து தன்னாட்டைப் பிடித்ததற்காகப் படையெடுத்துவந்த சேர பாண்டியர் இருவரையும் தன் தம்பியாகிய இளங்கோனைக் கொண்டு வென்றவன்" என்று சாத்தனார் கூறுகின்றார். இப்போர் நடந்த காரியாறு யாது என்பதைப் பற்றி அறிஞர்கள் ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். திருநாவுக்கரசு நாயனார் ஸ்ரீ காளஹஸ்தியைச் சேருவதற்கு முன் திருக்காரிக் கரை பணிந்து சென்றார் என்று கூறப்படும் பெரிய புராண மேற்கோளைக் காட்டி—காரிக்கரை என்பதனால் காரியாறு இதன் பக்கத்தோடுவதாக வேண்டும் என்று கருதி, மகாமகோபாத்யாய ஐயரவர்கள் மணிமேகலையில் அரும்பதவுரையிற் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனைக்கொண்டு, செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரித் தாலூகா (I.M.P.P. 405)விலுள்ள ராமகிரியில் கோயில்கொண்ட சிவபிரானுக்குத் திருக் காரிக் கரையுடைய நாயனார் என்பது போாக அக்கோயிற் சாஸனங்கள் கூறுதலால்,

அதன் சமீபத்தில் ஓடும் காலேறு என்ற நதியே காரியாறு ஆக வேண்டும் என்றும், மணிமேகலையிற் கண்ட சோழனது வெற்றிக் களம் இந் நதியையாக வேண்டும் என்றும் ( ) டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் தம் உபந்யாசத்திலும், நூதனமாக எழுதிய ஆங்கில மணிமேகலையிலும் கூறியுள்ளதைப் பலரும் அறிவர். இவர்கள் குறித்தபடி காலேறு என்ற நதிக்கு முன்னளில் காரியாறு என்ற பெயர் வழங்கியிருத்தல் கூடியதே யாம். ஆனல், காரியாறு என்று மணிமேகலை கூறும் நதி இந்தக் காலேறே ஆகவேண்டும் என்று நிச்சயிப்பதற்கில்லை. திருநெல்வேலி ஜில்லா, சிங்கம்பட்டி ஜமீன் பக்கத்தும் காரியாறு என்ற பெயர் பெற்ற நதியொன்று ஓடுகின்றது. காரித்துறை என்ற ஊரொன்று திருவனந்தபுரம் சம்ஸ்தானத்தில் ஆற்றின் பக்கமாக உள்ளது. அதனல் அவ்வாறும் காரியாறே யாகவேண்டும். இக்காரியாறுகளில் ஒன்ருக மணிமேகலை கூறும் நதியே இசைவிக்கவும் இடமுண்டு. மணிமேகலைச் சோழன் தம்பியாகிய இளங்கிள்ளி காஞ்சியில் சோழன் பிரதிநிதியாக ஆண்டு வந்தவனைப் படையெடுத்து வெல்லும் நோக்கத்துடன் செய்த இப்போர் தமிழ்நாட்டின் வடகோடியில் நடத்தப்பட்டதாகவேண்டும் என்பது டாக்டர் அவர்கள் கருத்து. இவர்கள் கொள்கைப்படி, சேரர் தலைநகரான கருவூர் கொடுங்கோளூர் ஆகும். இவ்வாருனல் பாண்டியனைத் துணைக்கொண்டு கொடுங்கோளூரிலிருந்து புறப்பட்டு சோழ நாட்டை கொள்ள விரும்பி மலைப்பிரதேசங்கள் நெருங்கி யுள்ளதும் 350 மைலுக்கு மேற்பட்டதும் தமிழ்நாட்டின் வடவெல்லையிலுள்ளதுமான காரியாற்றுப் பக்கத்தை யடைந்தனன் சேரன் என்பது பொருத்தமாகுமோ? சேர பாண்டியர்கள் வஞ்சியினின்றும் படையெடுத்ததன் நோக்கம் சோழன் மண்ணை விரும்பியே யன்றி வேறன்று என்பது "வஞ்சி யிலிருந்து வஞ்சி சூடி" என்ற சாத்தனர் கூற்றல் விளக்கமாகும், வஞ்சியாவது—"எஞ்சா மண்ணசைஇ வேந்தனை வேந்தன்—அஞ்சு தகச் சென்றடல் குறித்தன்றே" என்று தொல்காப்பியம் விதிக்கின்றது. இதனல், சோழன் தங்களிடமிருந்து கவர்ந்ததாக வேணும் அல்லது அவனுரிமையாகவேனும் இருந்த சோணட்டு மண்ணை விரும்பியே இப்போர் நடந்ததன்றி வேறில்லை என்பது தெளிவாகும். சேரனுடன் பாண்டியன் சேர்ந்திருந்ததனல் அவ்விருவர்களுமே அப்படையெடுப்பால் பூமிலாபத்தைக் கருதினர் என்பது பெறப்படும். ஆகவே, அங்ஙனம் சேர பாண்டியர்களாற் படையெடுக்கப்பட்ட இடம் அவ்விருவர் நாடு

களையும் ஓட்டியதாயிருந்ததென்றும் அவர்களை எதிர்த்துச் சென்ற சோழனது காரியாற்றுப் போர்க்களம் சேர, சோழ நாடுகட்கு நெடுந்தூரத்ததாகாதென்றும் கொள்ளுதலே பொருத்தமாகின்றது. சேரநாட்டுள் இவ்வாறு செல்லக்கூடிய நதியொன்று காரியாறு என்ற பெயருடன் நமக்குக் கிடைக்குமாயின் அதுவே மணிமேகலை குறிக்கும் போர்க்களம் என்று கொள்ளத் தடையுண்டோ ? அந்நதி யாவது, சேர்வராய மலையினின்று உதித்து கருவூர்க்குச் சிறிது தூரத்தில் காவிரியுடன் கலக்கும் திருமணிமுத்தாறு என்ற நதியேயாம். இந்நதியுற்பத்திக்குரிய இரண்டு மூல நதிகளில் ஒன்றற்குக் காரியாறு என்ற பெயர் வழங்குதலை இன்றும் அறியலாம். சேலம் ஜில்லா கெஜட்டியர்ப் படத்தை நோக்கினும் இது விளங்கும். திருமணிமுத்தாறு என்ற பெயர் பல நதிகட்குப் பெயராக வழங்குகின்றது. கருமையான நீரோட்டம் உள்ள வைகளே இப்பெயர் பெற்ற நதிகள். அதனால். மேற்குறித்த நதியின் பழம் பெயர் அதன் தலைப்பிடத்துக்கு மட்டும் இக் காலத்தார் வழங்கும் காரியாறு என்பதாகவேயிருத்தல் கூடியதே யாம். கொடுங்கோளூரையே ஆதிவஞ்சியாகக்கூறும் கொள்கை முன்னூல் வழக்குகளுக்கு முற்றும் விரோதமானவை என்பதில் ஐயமில்லை. இதுபற்றி என்னாலும் என் அரும்பெறல் மைத்துனர் மகாவித்துவான் இராகவையங்கார் அவர்களாலும் எத்தனையோ நியாயப் பிரமாணங்கள் காட்டி எழுதப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிப் பேசுவது இந்த சந்தர்ப்பத்துக்குரியதன்று. எங்கள் கருத்தின்படி நோக்குமிடத்து, கருவூரிலிருந்து புறப்பட்ட சேர, பாண்டிய சேனைகளைச் சோழன் எதிர்த்த களமாதற்கு இச்சேர நாட்டுக் காரியாறு எவ்வளவு நன்றாகப் பொருந்துகின்றதென்பது யாவர்க்கும் கரதலாமலகமாகும். சோழன் தம்பியான இளங்கிள்ளி கச்சியில் இருந்தாண்டவன் என்பது மணிமேகலையால் விளங்குவ தாயினும், அக்கச்சியிலிருந்த தம்பியே காரியாற்றில் வென்றவன் என்பதற்கு ஆதாரமில்லை. அவனது வேறு தம்பியும் இச்செயல் நடத்தியிருத்தல் கூடுமன்றோ ? ஒருகால் கச்சியிலிருந்தவனே ஆயினும், அக்கச்சியில் அவன் சென்றாள்வதற்கு முன்னும் இக்காரியாற்றுப் போரை நடத்தியிருத்தல் கூடுமாதலின், கச்சி யிலிருந்த காலத்திற்றான் அப்போர் நடந்ததாக வேண்டும் என்பதும் இல்லை. இவற்றால், திருக்காரிக்கரை என்று சாஸனமும் பெரிய புராணமும் குறிப்பதும் தமிழகத்தின் வடவெல்லை யிலுள்ளதுமான நதியைப் பற்றியதன்று மணிமேகலைச் செய்தி என்றே சொல்லலாம்.

சோழர் பூர்வகதைகள்.

இனிச் சோழர்களிலே, கடைச்சங்க காலத்துக்கு முற்பட்ட சோழர் வரலாறுகளைக் கலிங்கத்துப் பரணியாலும் மூவருலாவாலும் அறியலாம். இவற்றுட்கண்ட புராதனச் சோழர் வரலாறுகள் பெரும்பாலவும், திருவாலங்காடு, நாகபட்டினம், அன்பில், கன்யாகுமரிகளில் அகப்பட்ட தாமிர சாஸனங்கள் கூறும் சோழர் செய்திகளுடன் பெரிதும் ஒற்றுமை பெறுகின்றன. இவற்றையெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகுமாயினும் ஒன்று மட்டும் கூறுதற்குரியதாம். செயங்கொண்டார் தம் நூலில் சோழ மண்டலத்தை முதலில் ஸ்தாபித்தவன் சுராதி ராஜன் என்று கூறுவர். இவனையே சோழன் என்ற பெயரால் சாஸனங் குறிக்கின்றது. இவன் பெயரே இவன் வழியினரால் தம்குலப் பெயராகத் தரிக்கப்பட்டதாகும். திருவாலங்காட்டுப் பட்டயமுதலியவை சுரகுரு என்று கூறப்பட்டவனுக்கு மிருத்யுஜ் என்ற பெயருண்டென்று கூறும். இவனையே "மேலனைத் துயிரும் வீவதிலையாக நமன்மேல் வென்றி கொண்டவன்" என்று சயங் கொண்டார் கூறுவர். வீரசோழிய வுரையினும் இச்சுர குருவைப் பற்றிய பாடலொன்றுண்டு. கலிங்கத்துப் பரணியில் "புலியெனக் கொடியில் இந்திரனை வைத்த அவனும்" என்றது. இந்திரனைப் போரில் வென்று அவனைத் தன் கொடியிற் புலியாகக் கொண்ட சித்ரன் என்ற வேந்தன் என்று சாஸனங்கள் கூறும். கீழைக் கடலோடு மேலைக்கடலைப் பொருந்தவிட்டவன்—சமுத்ரஜித் என்பான். இவனையே "மேல்கடலில், வீங்குநீர் கீழ்கடலில் விட்டோனும்" என்று கூத்தரும், "புணரி யொன்றினிடை யொன்று புக விட்ட வவனும்" என்று செயங்கொண்டாரும் கூறுவர். "வலியினிற் குருதி யுன்கென வளித்த வவனும்" என்ற கலிங்கத்துப் பரணிக்கதை பஞ்சவன் என்ற வேந்தனிடம் அவனையே இரையாகக் கொள்ளவெண்ணி அதிதியர் வேடம் பூண்டு அவன்பாற் சென்ற இயக்கர் ஐவர்க்கு அவர் விருப்பத்தின்படி தன் இரத்த நரம்புகளை யறுத்துத் திறந்து குருதியால் அவர்கள் வயிறு நிரம்ப அளித்து ஆதித்யம் செய்தான் என்று சாஸனச் செய்தியால் விளக்கமாதல் காணலாம். "சுடர் விமானமது விமானமிசை உயர்த்தவன்" என்று பரணி கூறுமவன் மகாபாரதத்தில் பூருவின் வழியினருக்குக் கண்ட உபரிசரன் என்பவனே என்பது திருவாலங்காட்டுச் சாஸனத்தால் அறியப்

படும். சோழரின் முன்னோனாகிய மனுவின் சரித்திரம் பலரும் அறிந்தது. இந்நீதி வேந்தன் வரலாறே—

" வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன் "

என்று இளங்கோ வடிகளும் கூறுவர். இம்மனுவை இக்ஷ்வாகு புத்ரனாகச் சயங்கொண்டாரும் கூத்தரும் கூறினாராயினும் சோழ வம்சாவளியை விவரிக்கும் பழைய சோழ சாஸனம் ஒன்றும் அச்செய்தியைக் குறிப்பிடவில்லை. இதனால், புராதன காலத்து வைவ சுவத மனுவையன்றி, பிற்காலத்தில் நீதி தவறாது ஆண்ட வேறொரு வேந்தனை இம்மனு என்பது பழைய சாஸனங்களின் கருத்தென்று தோற்றுகிறது. சேக்கிழாரும் இம்மனுவின் சரித்திரத்தை விரித்துப் பாடுகின்றவர் திருவாரூரில் ஆண்ட சோழனிவனென்றே கூறிவிட்டு—

" அன்ன தொன்னக ருக்கர சாயினான்
துன்னு வெங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீரன பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே "

என்று வைவ சுவத மனுவினும் வேறானவன் இவன் என்ற குறிப்புப் படவே பாடுதலுங் காணலாம். சூரியனுக்கு நேர் புத்ரனாயின், அம்மனுவை சூரிய வமிசத்தில் தோன்றியவன் என்ற பொருளில் " வெங்கதி ரோன்வழித் தோன்றினான் " என்று கூறினானன்றோ? திருவாரூர் தியாகராஜ ஸ்வாமி கோயில் இரண்டாம் பிராகாரத்து வடக்குத் திருமதிலில், விக்ரம சோழன் காலத்தமைந்த சாஸன மொன்றில் இம்மனுவின் சரித்திரம் விரித்துக் கூறப்பட்டுள்ளது. இதனுள், சூரிய புத்ரன் இம்மனு என்று உபசரித்துக் கூறப்பட்டிருப்பினும், சரித்திர முடியும் மாதிரியால், அம்மனு சோழன் முன்னோருள் ஒருவனென்றே கருதும்படி அமைந்துள்ளது. அது வருமாறு :—

கோப் பரகேசரி வர்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீவிக்ரம சோழ தேவர்க்கு யாண்டு ஐஞ்சாவது திருவாரூருடையார் வீதிவிடங்கர் சித்திரைத் திங்கள் திருநாளில் சிம்மாஸனத்து எழுந்தருளியிருந்து பதியிலாரது தியாக வினோதத் திருநடனங்

கண்டருளாநிற்ப . . . மாளுலய மூவேந்த வேளார் விண்ணப்பத்திருல் பதிபாத மூலப்பட்டைய பஞ்சாசாரியத் தேவகன்மிகளுக்குத் திருவாய் மொழிந்தருளினபடி.

நம் ஏவலால் பூலோக ராஜ்யஞ் செய்கிற சூர்ய புத்ரன் மனு, தன்புத்ரன் ஏறிவருகிற தேரில் பசுவின் கன்றகப் பட்டுப் பிரமாதப்பட, அதின் மாதாவான சுரபி கண்டுதுக்கித்து மனுவின் வாசலில் மணியை யெறிய அதுகேட்டு மனு தன் மந்திரி இங்கணுட்டுப் பாலையூருடையான் உபய குலாமலனைப் பார்த்து நீ சென்று இதனை அறிந்து (வருக என அவன் அறிந்து வந்து) "வாயிற்புறத்து ஒருபசு எறியாநின்றது என்று சொல்ல, அது கேட்டு மனு புறப்பட்டுப் பசுவையும் பட்டுக்கிடந்த (கன்றையுங் கண்டு) நடந்ததை வினவி, தன்புத்ரன் ஏறின தேரிலே பட்டமை யறிந்து அக்கன்றுக்கு நேராகத் தன்புத்ரன் ப்ரய விருத்தனைத் தேரிலே ஊர்ந்து கொடுக்க வென்று உபய குலாமலனுக்குச் சொல்ல அவன் ஸ்ந்தாபத்தோடும் புறப்பட்டுத் தன் செவிகளைத் தரையிலே குடைந்து கொடுபட்டது கண்டு துவாரபாலகன் புகுந்து உபயகுலாமலன் தன்செவிகளைக் குடைந்து கொண்டு (பட்டான் என) துக்கிதனுய் மனுதானே புறப்பட்டுத் தன் புத்ரனைத் தானே தேரில் ஊர்ந்து கொடுக்க அப்போதே நாம் அவனை அனுகிரகித்து கன்றுக்கும் மந்திரிக்கும் மனுபுத்ரனுக்கும் ஜீவன் கொடுக்க அதுகண்டு மனுசந்தோஷித்துக் கன்றினை எடுத்துக் கொண்டுப் பசுவுக்குக் காட்டிக் கொடுத்து மகனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணி இவனுக்கு உபய குலாமலன் மகன் சூரியனை மந்திரியாக்கி (மாளிகை மனை முதலியனவும்) கொடுத்து, மனுவும் உபயகுலாமலனும் தபஸ்விகளைத் தலை நின்றமையின், பாலையூருடையான் உபயகுலாமலன் வமிசத்தானுகிய, பாலையூருடையார் சந்திரசேகரனு திவிடங்கனுன் குலோத்துங்க சோழ மகாபலிவாணராஜன் வம்சாதியாக வருகிற மாளிகை மனை பழையபடி மாளிகையாக எடுத்துக் குடிவைப்பதாக நாம் சொல்ல, இதிலே நித்தமும் நம் அடியார்க்கு சோறு இடப்பெறவேணும் என்று இவன் நமக்குச் சொன்னமையில், காட்டிப் பெறுவதாகவும், இம்மாளிகையிலே எழுத்து வெட்டுவித்துக் கொடுக்க வென்றுந் திருவாய் மலர்ந்தருள . . . பாலையூருடையான் சந்தரசேகரன் அதிவிடங்கனை குலோத்துங்கசோள மகாபலிவாண ராஜனுக்கும், மனுவுக்கு மந்திரியானவன் தன் வமிசத்தில் பாலையூருடைய உபய குலாமலன் மனுவின் பக்கல் பெற்றுடைய மாளிகை மனைதனக்கும் நாம் காணியாகத் தந்தோம் . . —மனுச்சோழன்.

இச்சாஸன வரலாற்றால் மனு என்ற வேந்தன் மகனை முறை செய்த சரித்திரம் நிகழ்ந்த ஊர் திருவாரூர் என்பதும் அத்தலத்துச் சிவபிரானே கன்றும் புத்திரனும் உயிர்பெற வருளினரென்பதும் விளங்குவதோடு தன்மகனைத் தேர்க்காலில் இடறிப் பழிவாங்கும்படி அவ்வரசனால் ஏவப்பட்ட மந்திரி பாலையூருடையான் உபய குலாமலன் என்பவ னென்றும், விக்ரம சோழன் காலத்தில் இவன் வமிசத்தவனாகக் கருதப்பட்டவன் பாலையூருடையான் சந்திர சேகரன் ஆதி விடங்கனான குலோத்துங்க சோழ மகாபலி வாணாதி ராசன் என்றும் மனுவின் கால முதல் பழைமையாக வருகிற இவனுடை மாளிகைமனை பாழாகவோ கிலமாகவோ கிடந்ததை அதன் பழமை பெருமை விளங்கப் புதியதாகக் கட்டி அதிலே அடியார்க்கு நித்தமும் அமுதிடப் பெற வேண்டுமென்று, இவன் ஸ்வாமி சந்நிதிமுன் விண்ணப்பித்துக் கொள்ள, அவ்வாணாதிராஜன் விருப்பின்படி அவனுக்குரிய மடப்புறமாக அம்மாளிகையைக் கட்டிக் கொடுக்கும்படி சிவபிரான் திருவாணை யிட்டதாக ராஜசாஸனம் பிறந்ததென்றும் தெரியலாம். இச் சாஸனம் பிறந்த காலத்தவனான விக்ரமசோழன் மகனும் அளபாயன் என்றழைக்கப்படுவனுமான இரண்டாங்குலோத்துங்க சோழன் காலத்து விளங்கிய சேக்கிழார், தம்பெரிய புராணத் தொடக்கத்தே, நாட்டுச் சிறப்புக்குப்பின் தாம் எடுத்துக் கொண்ட நூற்கு ஏற்புடைய நகரமான திருவாரூர்ச் சிறப்பைக் கூறப்புக்கு— இம்மனுவின் சரித்திரத்தையே விரிவாகப் பாடுதலாலும், அவர்க்கு முற்பட அமைந்த சாஸனமும் மேற்கூறியவாறு மனு சரித்தி ரத்தைத் திருவாரூர்க்குச் சிறந்த விசேடமாகக் கூறுதலாலும் இம்மனுவை வச்சுதமனுவல்லன் என்பதே விளங்குதல் தெரியலாம். இத்தகைய சரித்திரத்தையே இலங்கைத்தீப வமிசமும் கூறு கின்றது. சோழ நாட்டிலிருந்து இலங்கை மேற் படையெடுத்துச் சென்ற தமிழரசனான ஏலாலன் கி.மு. 205-161 வரை அத்தீவினை ஆட்சிப் புரிந்தவன் என்பது அவ்விலங்கைச் சரித்திரத்தால் விளங்குகின்றது. இவனது அரிய செயல்களாக அந்நூலிற் காணப்படுவது மேற்கூறிய மனுசரித்திரம் போன்றதேயாம், இதனால், திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மனுவே இலங்கையைக் கைப்பற்றிய ஏலாலன் என்றேனும், அம்மனுவின் செய்தி, அவன் வழியில் வந்த ஏலாலனுக்கு ஏற்றி உபசரிக்கப் பட்ட தென்றேனும் கருதக் கூடியது. எவ்வாறாயினும், 2,000 ஆண்டுகட்கு முன்பே இம்மனுச் சோழன் வரலாறு பிரபல மாயிருந்த தென்பது தெளிவாதல் காணலாம்.

கரிகாலன்.

இனி, கடைச்சங்க காலத்தவர்களான சோழர்களைப் பற்றிச் சாஸனங்களால் தெரியவரும் செய்திகள் சிலவற்றைப் பற்றிக் கூறுவேன். மேற்குறித்த அன்பில், திருவாலங்காடு, ஆனைமங்கலம், கன்னியாகுமரித் தாமிரப் பட்டயங்களில், கிள்ளி அல்லது பெருநறகிள்ளி, கரிகாலன், செங்கணன் என்போர் சோழ முன்னோராகக் கூறப்பட்டுள்ளனர். இம்மூறை மாறியும் சாஸனம் கூறும். இவற்றுள்—பெருநற்கிள்ளி என்ற பெயர் முடித்தலைக்கோ இராசசூயம் வேட்ட வேற்பஃறடக்கை என்ற விசேடணங்களுடன் பலர்க்கு வழங்குதலால் இன்னானுக்கு உரியது என்பது துணியக் கூடவில்லை. அடுத்த கரிகாலனைப் பற்றி சங்கநூல்கள் விசேடமாகப் புகழ்தலை அறியாதாரில்லை. இவன் செய்திகளாக அந்நூல்கள் சிறப்பித்துக் கூறுவன, இமயம்வரை சென்று இவ் வேந்தன் வடவாசரைச் சிறைகொண்டதும் புகாராகிய காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்ததுமாகும். இவற்றைச் சிலப்பதிகாரம் பட்டினப்பாலைகளால் அறியலாம். ஆயின் சாஸனங்களிற் காணும் இவன் செயல்களோ கச்சிமா நகரைப் புதிப்பித்ததும் காவிரிக்கரை கட்டியதுமாகும். சென்னை ஓரியண்டல் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதி யொன்றிற் கண்ட பாடலொன்றும் இச்சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுகின்றது. அது வருமாறு :—

"அஞ்சின் முடிகவித் தைம்பத்து மூன்றளவிற்
கஞ்சிகா வேரிக் கரைகண்டு—தஞ்சையிலே
எண்பத்து மூன்றளவு மீண்ட விருந்தே தான்
விண்புக்கான் தண்புகார் வேந்து."

இவன் கச்சியை உண்டாக்கியும் காவிரி கரைகட்டியும் 83 வயது வாழ்ந்தனன் என்பது இதனால் அறியலாம். காவிரிக்கரை கட்டிய இச்செய்தியே கலிங்கத்துப்பரணியிற் செயங்கொண்டாரால்,

"தொழுது மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திலா முகரியைப் படத்
தெழுது சென்று கண் டிதுமிகைக்க ணென்
றிங்கழிக்கவே அங்கழிந்ததும்"

என்று விசேடித்துக் கூறப்படுவதாகும். கரிகாலன் காவிரிக் கரை கட்டுவதற்கு வேற்றரசர்களெல்லாம் பணிந்து உதவி புரிந்து தத்தம் கரைப்பகுதியைக் கட்டி வந்தனரென்றும் ஓரரசன் மட்டும்

அவ்வாறு உதவவில்லை என்று அமைச்சர் கரிகாலனுக்குக் கூற, அப்பகைவனைப் படத்தில் 'இன்னான் என்பது தெரிய எழுதி வருக' என்ற அரசன் கட்டளைப்படி எழுதப்பட்டுவந்த அவ்வுருவத்தை அரசன் நோக்கியபோது அவ்வேந்தனுக்கு நெற்றியில் ஒரு கண் மிகையாயிருத்தல் கண்டு 'இது மிகை' என்று அதனை அழிக்க, அப்பகைவேந்தன் தனக்கு சிறப்புடைய தாயிருந்த அக்கண்ணை இழந்ததனால் வலியற்றுப் பணிந்து காவிரி கரைகட்ட உதவினன் என்றும் இத்தாழிசை கூறுகின்றது. இது தெலுங்கு சோழர்களுடைய பிரசஸ்திகளிலும்,

"சரண ஸரோருக்ஷ விஹத விலோசன த்ரிலோசன
காரித காவேரி தீர கரிகாலஹ"

என்று கூறப்படுவதாம். இதன் பொருள் "தன் பாத கமலத்தால் அழிக்கப்பட்ட விசேஷ நேத்திரத்தைக் கொண்டிருந்த திரிலோசனன் முதலிய அரசர்களால் கட்டப்பட்ட காவிரிக்கரை யுடைய கரிகாலன்" என்பதாம். இவற்றால், செயங்கொண்டார் பாடல், தெலுங்குச் சோழசாஸனத்தின் பொருளை விளக்கியும் தெலுங்குச் சாஸனம் செயங்கொண்டார் பாடற்பொருளையும் அரசனையும் குறிப்பிட்டும் ஒன்றற்கொன்று உதவுவதாதல் காணலாம். சிலர் மேற்கூறிய பிரசஸ்தியில் 'விஹத' என்றுள்ளதை 'விஹித' என்று கொண்டு திருத்திய பரணிப்பாடமும் எழுதிய பொருளும் சிறிதும் ஏற்காதவை என்பது பற்றிக் கலிங்கத்துப் பரணியாராய்ச்சி என்ற தனி நூலில் விவரித்திருக்கிறேன். இப் பரணிப் பாட்டில் பொன்னிக் கரைகட்ட உதவாத திரிலோசனனை கொடாரவந்திலா முகரி என்று கூறியுள்ளது. இதற்குத் தன்னுடன் இணங்கி வராத முகரி என்பது பொருளாம். முகரம் என்பதற்கு ஆரவாரம், அரட்டு என்பது வடமொழிப் பொருளாதலால், அவ்வாரவாரம் அல்லது அரட்டுடைய திரிலோசனனை முகரி என்றார். திருநாவுக்கரசு நாயனார்,

"மூள்வாய தொழிற்பஞ்சேந் திரியவஞ்ச
முகரிகாள் முழுதுமிவ் வுலகையோடி
நாள்வாயு மும்முடைய மம்ம ராணை
நடாத்துகின்றீர்க்கு"

என்று பஞ்சேந்திரியங்களை அரட்டர்களாகிய தலைவராக உருவகப் படுத்திக் கூறுதலாலும் இம்முகரியின் பொருள் தெளியப்படும். 'அரட்டரைவரை யாசறுத் திட்டு' என்று அந்நாயனாரே பஞ்சேந்திரிய முகரிகளையே வேறிடத்தும் அரட்டரென்று பாடுதலாலும் நான் கூறிய பொருள் வலி பெறுவதாம். இம் முகரி என்ற பதம் வேறோர் அரசனைக் குறிப்பதாகக் கூறுமிடத்து, பரணிப்பாடல் பொருட்பொருத்தம் பெருமையால், அம்முகரி— திரிலோசன பல்லவனைக் குறித்ததே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கரிகாலன் திரிலோசனன்.

இனி—திரிலோசனன் என்ற பல்லவனொருவன் மேலைச் சளுக்கியனான முதலாம் புலிகேசியை யடுத்துப் பட்டம் பெற்ற விஜயாதித்தனால் வெல்லப்பட்டவன் என்பது சாஸனங்களால் விளங்குகின்றது. அதனால், அவ்விஜயாதித்தன் ஆட்சிபுரிந்த 6-ம் நூற்றாண்டே அவனை ஏவல் கொண்ட கரிகாலனுக்கும் உரியதாக வேண்டும் என்பது சாஸன பரிசோதகர் கருத்தாக உள்ளது. இதற்குச் சில ஆக்ஷேபங்கள் பலமாகவே உள்ளன. விஜயாதித்தன் திரிலோசனனை வென்றதாகக் கூறும் செய்தி 11-ம் நூற்றாண்டில் ஆண்ட கீழைச் சளுக்கியர் சாஸனங்களில் தான் முதன்முதலில் காணப்படுகின்றது. அதிற் கூறப்படுவது பிற்காலத்துத் தெலுங்குச் சோழ சாஸனங்களில் திரிலோசனனை வென்றதாகக் கரிகாலனைப் பற்றிக் கூறும் செய்தி போன்ற கதையே யாதலின், சரித்திர வுண்மைக்கு அது எவ்வளவு தூரம் உதவியதாகக் கூடும் என்பது தெரியவில்லை. விஜயாதித்தன் திரிலோசனனை வென்றவன் என்பது உண்மையே யாயினும் அவனே கரிகாலன் காலத்தவனாய்க் காவிரியைக் கட்ட உதவியவன் என்பதற்கு யாதோர் சாஸன ஆதாரவுமில்லை. அவன் முன்னோனொருவனுக்கும் திரிலோசனன் என்பது சிறப்புப் பெயராக விருக்தல் கூடியதே யன்றோ? திரிலோசனன், திரிநயனன் திரிநேத்ரன் என்ற சிவபிரான் பெயரைத் தரித்த அரசர் பலர் சாஸனங்களால் தெரிய வருகின்றனர். அதனால் பெயரொற்றுமை யொன்றைக் கொண்டு முடிவுபடுத்தல் பொருந்தாது. பொருந்துவதே யாயினும், திரிலோசனன் காலத்தவனான கரிகாலன், சங்கச் செய்யுள் கூறும் கரிகாற் பெருவளத்தான் தானா என்ற பெருங் கேள்விக்கு இடமுள்ளது. காவிரிக்கரை கட்டியவனாகவும், கச்சியைப் புதுக்கியவனாகவும் சாஸனங்கள் கூறுமவனே கரிகால் வளவனாயின் அவனது அரிய பெரிய செய்திகளை யெல்லாம்

விடாது கூறும் பட்டினப்பாலை முதலிய பழைய நூல்கள் இவ்விரண்டு பெருஞ் செயல்களையும் எடுத்துச் சிறப்பிக்க ஒருகாலுந் தவரு வனரோ? காவிரிக்கரைகட்டிய வரலாறுவது கச்சியைப் புதுப்பித்த செய்தியாவது அந்நூல்கள் ஒன்றிலேனும் கூறப்படாமை வியப்புக்குரியதே. இதனால், சங்க காலத்துக் கரிகால்வளவன் பொன்னிக் கரைகண்ட கரிகாலனின் வேறானவன் என்றே சொல்லும்படியுள்ளது. திருவாலங்காட்டுச் சாஸனம் பொன்னிக் கரை கண்டவனுக்குக் கரிகாலன் என்பது பெயரென்றும், கலிகாலத்துக்கும் பகையரசராகிய யானைகட்கும் காலன் போன்றவனென்பது இப்பெயர்ப் பொருள் என்றும் கூறுகின்றது. சங்க காலத்தவனோ நெருப்பில் வெந்த காலை யுடையவன் என்ற பொருளில் கரிகாலன் என்று வழங்கப்படு கின்றான். இவனது இளமைப் பருவத்தில் இவன் இருந்த மனையில் பகைவர் தீமூட்ட அதினின்றும் இவன் தப்பும்போது இவனதொரு கால் தீயிற்பட்டுக் கரிந்து போனமையால் கரிகாலன் என்ற பெயர் பெற்றான் என்பது பட்டினப்பாலை முதலியவற்றால் பிரசித்தம்,

முச்சக் காமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக்கரமே யளந்ததால்—செச்சை
அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புன்னீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

என்பர் முன்னோர். இப்பொருள் வேறுபாடுள்ள பெயர்களை நோக்கும்போது பொன்னிக் கரை கட்டிய கரிகாலனைப் புகார் வேந்தனான கரிகாலனாகப் பின்னோர் பெயரொற்றுமை பற்றிக் கொண்டனரோ என்று தோன்றுகின்றது. அன்றேல், பழைய கரிகாலன் வளவன் பெயரை அவன் வழியினரொருவர் 6-ம் நூற்றாண்டில் சோழன் தரித்தனன் எனலும் பொருந்தும். செங்கணான் கரிகாலன் கிள்ளி என்று அரசர் பெயர் வரிசையை ஒரு சாஸனம் கூறுகின்றது. இவ்வாறே செங்கணான் வரலாற்றை முற்பட வைத்துச் செயங்கொண்டாரும் பாடுவர். இதனால் கடைச் சங்ககாலத் தரசரில் பிந்தியவனாகத் தெரியும் செங்கணானுக்குப் பின்பும் கரிகாலனொருவன் இருந்தவனென்ற கருத்து முன்னோருள் குழம்பி யிருந்தது போலவே தோற்றுகின்றது. எவ்வகையினும் கரிகால திரிலோசன சம்பந்தத்தைப் பற்றிக்கொண்டு 6-ம் நூற்றாண்டைப் பழைய கரிகாலனுக்கே கூறுவது வலியுடைய தன்று என்றே சொல்லலாம்.

கோச்செங்கணுன்.

சோழன் கரிகாற் பெருவளத்தான் வழியில் கோச்செங்கணுன் உதித்தவனென்பது சங்க நூல்களால் அறியப்படுகின்றது. சோழரது தாம்ரப்பட்டயங்களும் கரிகாலனுக்குப்பின் இச் செங்கணுனையே பெரும்பாலும் கூறுவனவாகும். இச்சோழன் கழுமலம் திருப்போர் என்ற களங்களிலே சேரன் கணைக்காலிரும் பொறையோடு பெரும் போர் புரிந்து அச்சேரனைச் சிறை வைத்தவனென்பதும், பொய்கையார் என்ற தெய்வப் புலவர் களவழி நாற்பதால் இவனது வெற்றியைப் புகழ்ந்து பாடி அச்சேரனைச் சிறை மீட்டனரென்பதும், புறநானூறு முதலியவற்றுல் அறியப் பட்டவை. முன் சென்மத்தில் சிலந்தியாய் பிறந்து, திருவானைக்காச் சிவபிரானை வழிபட்ட சிறப்பால் சோழனுகப் பிறந்தவனென்றும் அதனுல், சிவபிரானுக்கு பல மாடக் கோயில்கள் கட்டினனென்றும் 7-ம் நூற்றுண்டுக்கு முந்தியே சரித்திரம் வழங்கி வந்ததென்பது, தேவாரத்தில் அப்பர் திருவாக்குக்களாலும் (திருக்குறுக்கைப் பதிகம் சிலந்தியும்)

> "அந்தண ராவொடு பொன்பெற்றுர் மன்னவர்
> மந்தரம் போல் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
> இலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்ஞே
> சிலம்பிதன் கூடிழந்த வாறு".

என்ற முத்தொள்ளாயிரப் பாட்டாலும் அறியலாம். 'சிலந்தியைச் சோழனுக்கினுன்'. (S.I.I. V. 120) 'திருத் தோப்பு' என்பதொன்று திருவானைக்காவில் இருந்த செய்தி சாஸனங் கூறுதலும் இங்கு அறியத்தக்கது. (T.A.S. IV—14) திருமங்கையாழ்வார் இவன் வரலாறுகளாகக் கூறியவை வேறு நூல்களால் அறியப்படாதவை. இச்செங்கணுன் "எண்டோளீசற் கெழில் மாடம் எழுபது செய்தான்" என்பர் அவ்வாழ்வார். மாடம் என்பது கற்கோயிற்குப் பழைய வழக்கு; இவன் கட்டியவற்றை மாடக்கோயில்கள் என்று வழங்குவர், பூர்வஜன்மத்தில் தன் திருப்பணிக்குத் தீங்கிழைத்த யானை நுழையாதபடியாகவும், விமானங்கள் யானையுருவுடையனவாகவும் இக்கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கும் என்பர். "செங்கணுன், அந்தமில் சீர்ச் சோணுட்டி னகனுடுதொறு மணியார்—சந்திரசே கரனமருந் தானங்கள் பலசமைத்தான்" (பெரியபு—கோச் 14) என்ற சேக்கிழார் வாக்கில் இக்கோயில்கள் யாவும் சோணுட்டிற் கட்டப்

பட்டவை என்பது தெரியலாம். இவன் பல சிவன் கோயில்கள் கட்டியவன் என்பது அன்பில் திருவாலங்காட்டுச் சாஸனங் களாலும் அறியப்படுகின்றது. இவன திருமால்பாலும் பக்தி யுடையவன் என்பது திருநறையூர்ப் பதிகத்தில் திருமங்கை மன்னன் விசேடமாகப் பாடுதலால் அறியப்படுகின்றது. இவனது போர்ச் செய்திகளாக அவ்வாழ்வார் பாடுவனவற்றுள் வெண்ணி (கோயிலுணி) அழுந்தை (சீரழுந்தூர்) என்ற போர்க்களங்களிலே பெருவெற்றி பெற்றவனென்பதும், விளந்தை வேள் என்ற பெரும் பகைவனைப் போரில் தன்வேலைச் செலுத்திக் கொன்றவனென்பதும் சிறந்தவை,

> "மின்னாடு வேலேந்து விளைந்த வேளை
> விண்ணேறத் தனிவே லுய்த் துலகமாண்ட
> தென்னாடன் குடகொங்கன் சோழன்"

என்ற தொடரில், 'விளைந்த வேளை' என்று இப்போது பதிப்பித்தும் வழங்கியும் வரும்பாடம் 'விளந்தை வேளை' என்று திருத்திக் கொள்ளற்குரியது. விளந்தை என்பது முன்பு சேர நாட்டைச் சார்ந்ததாய் உடையார்பாளையத்தையடுத்துக் கோட்டை முதலிய பழைய சின்னங்களுடன் இன்றுமுள்ள ஊராம். இதனை "விளந்தைப்பற்று விளந்தையுடையார்" என்று உடையார்பாளயச் சாஸனமுங்கூறும். இக்கோச்செங்கணானுக்கு நல்லடிக்கோன் என்ற புத்திரன் பிறந்து பிரபல அரசனா யிருந்தனன் என்று சுந்தரசோழனது அன்பில் சாஸனங் கூறுகின்றது. நல்லடிக்காலம் என்பதற்கு நன்மைக்கு மூலமான காலம் என்பது பொருளாக ஈட்டு வியாக்கியானங் கூறுகின்றது. இந்நல்லடிக்கோன் பெயரால், உலகின் நல்வாழ்க்கைக்குரியதா யிருந்தது இவனாட்சி என்பது தெரியலாம்.

சேரனுடன் செங்கணான் போர்புரிந்த களமாகிய கழுமலம், முன்பு சேரனுக்குரியதாயிருந்த ஊராம் என்பது 'நற்றேர்க் குட்டுவன் கழுமலம்' என்ற அகப்பாட்டால் (270) அறியலாம். 'குட்டுவன் குடையொடு கழுமலந்தந்த நற்றேர்ச் செம்பியன்' (இறை—180 பக்) "களையகைப்படக் கழுமலந்தந்த . . . . சென்னி" (அகம்—44) என்ற முன்னோர் கூற்றுக்களாலும் களவழி நாற்பதாலும் இச்சேரன் கழுமலமே செங்கணானாற் கவரப்பட்ட தென்பது விளங்கும். கழுமலம் என்ற பெயர் சீகாழிக்குப் பெருவழக்குடையதாயினும் இச்சேரன் கழுமலம் அதனின்

வேரும், கழுமலநாடு என்பதில் திருப்பனங்காடு என்ற தலம் அடங்கியதாக ஒரு சாஸனங் கூறுகின்றது. இது வட ஆர்க்காடு ஜில்லா செய்யாறு தாலூகாவில் இப்போது உள்ளதாம். திருக்கோவிலூர்த் தாலூகாவில் கழிமலம் என்று இப்போது வழங்கும் ஊரைத் தலைமையாகக் கொண்டதாக கழுமலநாடு இருத்தல் கூடும். உடையார்பாளயந் தாலூகாவில் உள்ள நெல்மெலிக்குக் கழுமலம் என்ற பெயருண்டென்பது அவ்வூர்ப் புராணத்தாலறியப்படுகிறதென்றும் "கழுமலத் தியாத்த களிறும் கருவூர்—விழுமியோன் மேற்சென்றதனால்" என்ற பழமொழிக் கேற்றபடி கருவூர்ப் பக்கத்துள்ள கழுமலமாதற்கு இந் நென்மெலி யாகிய கழுமலமே மிகவும் ஏற்றதென்றும் மகாவித்வான் ராகவய்யங்கார் அவர்கள் கருதுவார்கள். இதுவும் பொருத்தமாம். சேர நாடு மலையாளப் பக்கமொன்றே என்று தீர்மானித் தெழுதி வரும் சாஸன வறிஞர், இக்கழுமலம் கொச்சிப் பக்கத்து இருந்தாக வேண்டுமென்று ஊகிப்பர். அவ்வாறு ஊகிக்க வேண்டுவ தன்று என்று சாஸனத்தால் விளக்கமாகின்றது. செங்கணான் கொல்லை என்ற பெயர் கொண்ட ஊரென்று இத்திருக்கோவலூர்ப் பிரதேசத்தில் இன்றும் உள்ள செய்தி இங்கறியத்தகும்.

பாண்டியர் பழங்கதை.

இனிப் பாண்டியரைப் பற்றி நோக்குவோம். இவ்வேந்தரது பழைய வரலாறுகளாகக் காணப்படுவன சாஸனக் கருத்துக்களை நன்கு விளக்கக்கூடியனவாம். பாண்டியரின் ஆதிமுன்னோர் அகத்திய முனிவரை ஆசிரியராகவுடையரென்று "திட வாசகக் குறு முனியாற் செந்தமிழ் நூல் தெரிந்தருளி" (T.A.S. II 19) என்ற பாண்டியன் சாஸனத்தால் விளக்கமாம். இதுவே— "பண்டகத்தியன்வா யுரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசிதன்" என்று இறையனார் களவியலுரைப் பாடலுள் பாண்டிய அரிகேசரி பராங்குச நெடுமாறனுக்குக் கூறப்படுகின்றது. இவ்வாறே பாண்டியரது பழைய செய்திகள் நான்கை—

" ஆழி வடிம்பலம்ப நின்றானு மன்றொருகால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தானும்—நீள்விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானுங் கண்டாயிச் சேய் "

என்று புகழேந்தியார் தம் நளவெண்பாவிற் கூறுகின்றார். இப்பாடற் குரையெழுதியவர்கள் இச்சரித்திரங்களை வேறோ ரரசனுக் கிணைக்கப் புகுந்து நலிந்து பொருள் கொண்டிருத்தலை அவருரையுட் காணலாம். ஆனால், சாஸன வழக்குக்கள் இப்பாடற் கருத்தை வெள்ளிடை மலைபோல் விளக்குகின்றன. இக்கதை நான்கனுள் முன்னதான வடிவம்பலம்ப நின்ற பாண்டியன் கதையை—"முந்நீர்விழவின் நெடியோன்" என நெட்டிமை யாரும், "அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி—வடிவே லெறிந்த வான்பகை" என்று இளங்கோவடிகளும் கூறுவர். கன்யாகுமரியிற் கண்ட பராந்தக பாண்டியன் சாஸனம் இதனையே—"வடிவம்பலம்ப நின்றருளிமால் கடலை யெறிந்தருளி" என்று கூறுகின்றது. (T. A. S. III — 4) அடுத்த "எழிசை நூற் சங்கத் திருந்தானும்" என்பதனால், இசைச்சங்கத்தில் தலைமை வகித்த வேந்தனைப் பற்றிப் புகழேந்தி கூறுதல் தெரியலாம். இதுவே—"உயர்மதிற் கூடலினாய்ந்த வொண் டீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ, அன்றி யேழிசைச் சூழல் புக்கோ" எனத் திருவாதவூரடிகளாலும் கூறப்படுவதாம். தமிழின் துறைவாய் நுழைந்தோ ஏழிசைச்சூழல் புக்கோ—என்ற வினைகளால் அத்துறையுஞ் சூழலும் சங்கம் என்பது பெறப் படுதலோடு, கூடலினாய்ந்த என்ற விசேட்டணம் தமிழின் துறைக்கும் ஏழிசைச் சூழலுக்கும் தனித்தனி சென்று இயைவதற்குரிய பொது விசேஷணமென்பதும் விளங்குதல் தெரியலாகும். இதனால் இயற்சங்கம் போலவே இசைச்சங்கமொன்று பாண்டியர்களால் தலைமை வகித்து நடத்தப்பட்ட தென்பது பெறப்படுகின்றது. இனி, மதுரையில் பாண்டியன் கோயிலுள் விளங்கிய மாபரணன் என்ற அக்காணி மண்டபத்தில் "இசையளவு கண்டான் என்ற சிம்மாஸனம் பாண்டியர் வீற்றிருத்தற் குரியதாக விருந்தது", என்ற செய்தி மாறவர்மன் பராக்கரம பாண்டியன் சாஸனத்தால் தெரிய வருகின்றது. (I.M.P. p. 1015) 'இசையளவு கண்டான்' என்பது ஏழிசை வல்லோர் பாடிய சங்கீதத்தை இசைச் சங்கத்துத் தலைமை வகித்துச் சீர்தூக்கியவன் என்று பொருள் தருவதால் அத்தலைமை வகித்த பாண்டியன் சம்பந்தமான பெயரே பாண்டிய சிம்மாஸனத்துக்கும் வழங்கிவந்ததென்று தெரியலாம்.

இவ்வாறே பாண்டிய பீடங்கள் சில, மழவராயன் சபாபூபாலன் என்ற பிரசித்தரானவர் பெயரைப் பெறுதலும் அச்சாஸனங்களால் தெரியவருகின்றது. ஆகவே, இசைச் சங்கத்துத் தலைமை வகித்தவர் பாண்டியர் என்ற செய்தியைச் சாஸனங் குறிப்பிடுதல்

விளங்கும். மூன்றாவதான—'நீள்விசும்பில் நற்றேவர் தூது நடந்தானும்' என்பதனால், தேவர் பொருட்டுப் பாண்டியன் தூதுவனாகச் சென்றவன் என்பது அறியப்படும். இதுவே, 'நிகரில் வென்றியமரர்க்குப் பல முறையும் தூதுய்த்தும் என்று சின்னமனூர்ச் சாஸனங் கூறுவதாம். இவ்வாறு பாண்டியன் தூது சென்ற கதையை—

"தேவரும் அசுரரும் பொருத காலத்துத் தேவரையும் அசுரரையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யான் எனப் பாண்டியன் மாகீர்த்திசந்து செய்வித்தது போல இருவரின் மிகை செய்தீரை ஒறுப்பலென்று சந்து செய்வித்ததூஉம் ஒன்று".

என்று இறையனாரகப்பொருளுரைகாரர் விரித்துக் காட்டுதல் இங்கு அறியத்தக்கது. இதனுட் கண்ட மாகீர்த்தியைச் சங்கத்துக் கவியரங்கேறிய பாண்டியருள் ஒருவனென்றும் தொல்காப்பியம் புலப்படுத்திய நிலந்தரு திருவிற் பாண்டியன் இவனே என்றும் கூறுவர் அடியார்க்குநல்லார் முதலியோர். இவன் தேவாசுரத்தைத் தீர்க்கும் பொருட்டுச் சந்து செய்யச்சென்றான் எனவே அது அமரர்க்கு அனுகூலமாகவே சென்றதாக வேண்டும்.

இனி நான்காவதாகப் புகழேந்தியார் கூறும் "பாரதப் போர் செற்றானுங் கண்டாயிச் சேய்" என்ற தொடர்—"மகாபாரதம் பொருது மன்னருக்குத் தூது சென்று" "மாரதர்கள் களத்தவியப் பாரதத்திற் பகடோட்டியும்" என்ற சின்னமனூர்ச் சாஸன வாக்கியங்களோடு ஒப்புமையுடைத்தாதல் காணலாம். இவ்வாறு புகழேந்தியார் கூறும் பாண்டியர் ஆதிச் செயல்கள், சாஸனங்களால் தெளிவுபடுதல் அறியத்தக்கது. செந்தமிழில் "ஒரு நள வெண்பாப் பாட்டு" என்ற தலைப்பின்கீழ் நான் பல வருஷங்கட்கு முன்பு எழுதிய விஷயத்தால், இதன் விரிவை நன்றாக உணரலாகும். (செந்தமிழ். 6, பக். 7)

பூதம் பணிகொண்டது.

இனி, 'தடம் பூதம் பணிகொண்டு தடாகங்கள் பல திருத்தியும்' என்று பாண்டியன் செயலொன்றைச் சின்னமனூர்த் தாமிர சாஸனங் கூறும், இதுவே,

"பூதம் பணிகொண்ட பூழியன் மாறன்" (இறைய-கள)
"முனிகொண்ட காரையும் முந்நீரையும் பெரும் பூதத்தையும் பணி கொண்ட செண்பகத்தென்னா" (தென்காசிச் சாஸனம்)
"பூதம் பணிகொண்டார் கடல் பாதந் தொழ நின்றாய்".

என்று முன்னோர்களால் புகழப்பட்டுள்ளது. சேக்கிழாரும் நின்ற சீர் நெடுமாற நாயனார் போர்ச் சிறப்பை

"போயபரு வம்பணிகொள் பூதங்க ளேயன்றிப்
பேயுமரும் பணிசெய்ய வுணவளித்த தெனப்பிறங்க"

என, இக்கதையையே அவர் புராணத்திற் குறிப்பிட்டுப் பாடுதலும் காண்க. இங்ஙனம் பூதத்தை ஏவல்கொண்டு தடாகங்கள் பல திருத்தியதாகச் சாசனங் கூறுங்கதை, குண்டோதரனுக்குரியதாக வேம்பத்தூரார் திருவாலவாயுடையார் புராணம் கூறுகின்றது.

"கைத்தொழில் பூதங்கண்ட குளமெனக் கண்டெய் தென்று
வித்தகன் பணிப்பவெங்குங் கண்டது வியப்பப் பூதம்
புத்திசேர் மணற்பரப்பும் பந்தர்நீ ராவி வாவி"

எனக் காண்க. (திருவாலவா 46) சோமசுந்தரக் கடவுள் பாண்டியரசராக அரசாண்டவராதலின் இக்கதையைப் பாண்டியர் மேலேற்றி நூல்கள் பாடுதற்குப் பொருத்தமுண்டெனலாம்.

வசுசாபம் நீக்கியது.

இனி, புராதனபாண்டியர் செயல்களுள் 'விசயனை வசுசாப நீக்கியும்' என்பதொன்று, சின்னமனூர்ச் சாஸனத்திற் கூறப் பட்டுள்ளது. அருச்சுனன் தன் தீர்த்த யாத்திரையில் பாண்டிய தேசம் வந்து அப்பாண்டியராசன் மகள் சித்ராங்கதையை விரும்பி மணந்து பப்ரு என்ற புத்ரனைப் பெற்று அவனைப் பாண்டிய னுக்குப் புத்ரிகாபுத்ரனாக அளித்துச் சென்றானென்பது பாரத வரலாறு. மேற்படி பாரதம் ஆசுவமேதிக பர்வத்தில் தர்மபுத்ரர் விடுத்த யாக அசுவத்தின் பொருட்டு அருச்சுனற்கும் அவன் மகன் பப்ருவுக்கும் நடந்த பெரும் போரிலே அருச்சுனன் வீழ்ந்து மூர்ச்சை யடையவும், நாக கன்னிகையாகிய அவன் மனைவி உலூபியென்பாள் ஆங்கு விரைந்து வந்து தன் கணவனை மூர்ச்சை தெளிவித்து—இவ்வாறு அருச்சுனற்கு நேர்ந்த துன்பம், அவன் பீஷ்மரைப் பாரதப்போரில் வஞ்சமாகக் கொன்றதைப் பொறாத வசு வொருவனால் இடப்பட்ட சாபமென்றும், அச்சாபம் பப்ரு வாகனன் என்ற தன் புத்ரனால் போர்க்களத்தில் விஜயன் வீழ்க்கப்பட்டபின் தீரும் என்ற அவ்வசுவின் நியமனப்படி இப்போது விலகலாயிற்றென்றும், அந் நாக கன்னிகை தெளி வித்தாளென்று விரிவாகவே சொல்லப்பட்டுள்ளது. இக்கதையை

வுட்கொண்டே 'விசயனே வசு சாப நீக்கியும்' என்றும் "ஜிதவிஜயர்ச்ச யஷ:'த்பவோ நரேந்த்ர" என்றும் சின்னமனூர்ச் சாஸனம் கூறுவதென்பது தெளியலாம். ஆகவே அர்ச்சுனன் மகன் பப்ருவை பாண்டிய வமிசத்தின் ஆதிமுன்னேரைகப் பல்னூற்ருண்டுகட்கு முன்பே பெருவழக்கிருந்ததென்பது விளங்கும். அருச்சுனனுல் மணக்கப் பெற்றவள் பாண்டியன் மகளே என்பது—

"பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசயன்"

என்று தொல்காப்பியத்து நச்சினர்க்கினியர் காட்டும் பழஞ் செய்யுளாலும், வில்லிபுத்தூரார் நூலாலும் விளங்கும். இச் சித்திராங்கதையயே அல்லியரசாணி என்பாள். இவள் தந்தை யாட்சி புரிந்த பாண்டிய ராஜதானி மணலூர்புரம் என்பது ; இது மணற்புரம், மணப்புரம் என்றும் வழங்கும். "மணலூர்புரம் என்னுந் தமிழ் வியாசபாரதத்திற் சென்றது தேசிகம்" என்று 200 ஆண்டுகட்கு முற்பட்ட பிரயோக விவேக நூலார் எழுதுவதாலும், மணலூர்புரத்தரசனே சித்ராங்கதை தந்தை என்பது தமிழ் நாட்டுப் பெருவழக்காயிருந்த தென்பது தேறப்படும். இவ் வாருகவும், மணிபுரத்தரசன் மகளே சித்ராங்கதை என்று காணப் படும் வடநாட்டு பாரதப் பிரதிகளைக் கொண்டு, அம்மணிபுரம் வட நாட்டிலுள்ள தென்றும் அவள் பாண்டிய மகளில்லை யென்றும் சுதேச நிபுணர்களும் விதேச வறிஞரும் எழுதி வருவது வியப்புக் கிடமா யுள்ளது. தீர்த்த யாத்திரையில் அர்ச்சுனன் மணி புரத்துக்குச் சென்ற மார்க்கம் பாரதத்தில் கூறப்படுவனவற்ருல், அது காவிரிக்குந் தென்பாலுள்ள மணலூர்புரமாகவே கொள்ளற் குரியதென்றும் மணற்புரம் மணப்புரம் என்ற அதுவே மணிபுர மாக வடநாடுகளில் பாடமாறலாயிற்றென்றும், அருச்சுன சித்ராங்கதைகளது மணம்பற்றிய வழக்குத் தென்னுட்டிற்போல வடநாடுகளில் பிரசித்தம் இல்லாமைபற்றியும் செந்தமிழில் "அருச்சுனனும் பாண்டியமரபும்" என்ற வியாசத்தில் விரிவாக விளக்கியிருக்கிறேன். அவற்றை இங்கு விரிப்பிற் பெருகும். இவ்வாறே பாண்டியர்களே அச்சாஸனம்,

"தென்றமிழின் கரைகண்டும்"

"உளமிக்க மதியதனுல் ஒண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தா ஞாய்ந்து பண்டிதரின் மேந்தோன்றியும்"

"மதுராபுரிச் சங்கம் வைத்தும்
மாபாரதந் தமிழ்ப் படுத்தும்"

என்றும் தமிழ் வளர்த்த சிறப்பாற் புகழ்தல் காணலாம். கடைச் சங்க காலத்தில் அசசங்கத்தை யொப்ப வடமொழிச் சங்க மொன்று, பட்டி மண்டபம் என்ற பெயரால் வழங்கிவந்த தென்பது—"தெறகில் வாயில் திறவாப் பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் சாவப் பாடிய வெண்பா" என்று தொல்காப்பிய உரையில் நச்சினார்கினியர் எழுதுங் குறிப்பாற் பெறப்படுகின்றது. இவ் வரலாறு—வடமொழியும் பழுதறத் தானாய்ந்தவர் பாண்டியர் என்ற சாஸனக் கூற்றை ஞாபகப் படுத்துகின்றது. "பட்டிமண்டபம் பாங்கறிந் தேறுமின்" "பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை" என்ற பழையோர் கூறுகக் களால், வடமொழியாளர் குழுமிய அவை அப்பெயர் பெற்றிருந்த தென்பது தெளியலாம்.

பாரதம் தமிழ் செய்வித்தது.

இனி, மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் என்பதைப் பாண்டியர்க் குரியதாக அச்சாஸனங் கூறுதல் குறிப்பிடத்தக்கது. இப்போது சில பகுதிகள் வரை கிடைத்திருக்கும் பாரத வெண்பா, தெள்ளா றெறிந்த நந்திபல்லவன் காலத்துச் செய்யப்பட்ட நூலென்பதும் நச்சினார்க்கினியர் முதலியோர் காட்டும் பெருந் தேவனார் பாரதம் அதனில் வேறாக வேண்டு மென்பதும், அவ்விரண்டுக்கு முள்ள வாக்கின் வேறுபாட்டிலிருந்து தெளியத் தடையில்லை. புறத்திரட்டு, வீரசோழிய வுரை முதலியவற்றில் இவ்விருவகை வெண்பாக்களும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலையிற்கண்ட வெண்பாக்கள் சில, புறத்திரட்டில் பாரதம் என்ற தலைக்குறிப்புடன் ஆளப்பட்டுள்ளன. இதனை நோக்கும்போது "வெண்பாமாலைப் பாடல்கள் யாவும் முன்னூல் களினின்றே ஐயனாரிதனார் திரட்டியது போலும்" என்று புதிதாய்ச் சங்கிக்க இடமேற்படுகின்றது. அவ்வெண்பா மாலைப் பாடல்களில் வேறுபட்ட வாக்குகளை நோக்கும்போதும் யான் கூறிய கருத்தே வலியுறத் தடையில்லை. ஆகவே, சாஸனங் கூறுமாறு பாண்டியர் செய்வித்த பாரதம் பல்லவர் செய்வித்த பாரதத்தின் வேறென்பதும், அவை பிற்காலத்து ஒருவர் செய்த தாகக் கருதப்பட்டுக் குழம்ப இடமேற்பட்ட தென்பதும தெரிய வருகின்றன. "மகாபாரதந் தமிழ்ப்படுத்தும்" என்று பாண்டியனைப் பழைய சாஸனம் சிறப்பித்தலால் அதனைப் பிற்காலத்துப் பல்லவன் செய்வித்ததாகத் தெளியப்பட்ட பாரத

மாகக் கூறுதல் ஏற்காததன்றோ? இப்பல்லவ பாரதத்தைப் போலவே பிற்பட்ட சோழர்காலத்தும் வேறொரு பாரதம் தோன்றியதுண்டு. அதைப்பற்றிச் சோழர் காலத்தில் சொல்லுகிறேன்.

சங்கப் பாண்டியர் முதுகுடுமி நெடுஞ்செழியன்.

இனி, கடைச் சங்க காலத்தவராகிய பாண்டியர்களைப்பற்றிச் சாஸனங்கள் விசேஷமாகக் கூறவில்லை. வேள்விகுடிச் செப்பேடுகள், இப்போதுள்ள தமிழ்ச் சாஸனங்களிலே பழைமையும் பெருமையுமுடையவைகள். இது கொற்கை கிழான் நற்கொற்றன் என்ற பிராமணனுக்கு அவன் நடத்திய யாகத்தை முற்றுவிக்க வேண்டி, பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியனால் வேள்விகுடி என்ற கிராமம் அளிக்கப்பட்டதென்றும், அக் கிராமம் களப்ரன் என்ற வேந்தன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி ஆண்டு வந்த போது ராஜாங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட அதுமுதல் தங்களனுபவம் இல்லாமலிருப்பதை, அம்முதுகுடுமியின் வழியில் வந்த பராந்தகன் நெடுஞ்சடையனிடம் ஆதிதானம் பெற்றவனது வமிசத்தவனான காமக்காணி நற்சிங்கன் முறையிட்டுக் கொண்டு ஆதாரங்களைக் காட்டி அவனால் திரும்பப் பெற்றான் என்றும் கூறுகிறது. இச் சாஸனத்தில், பாண்டிய முன்னோனைக்கண்ட பல்யாக முதுகுடுமி புறநானூற்றில் காணப்பட்ட பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியே என்பது எளிதில் அறியப்படும். "பல்சாலை முதுகுடுமியின் நல்வேள்வித்துறைபோகிய" என்று மாங்குடி மருதனாரால் கூறப்பட்டவனும் இவனேயாவன். இனி, அம்மருதனாரால் புகழ்ப்பெற்ற தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை—

"தலையாலங் கானத்திற் றன்னொக்கு மிருவேந்தரைக்
கொலைவாளிற் றலைதுமித்து குறைத்தலையின் கூத்தொழித்
[தும்"

என்று பாண்டியன் முன்னோனைச் சின்னமனூர்ச் சாஸனம் கூறுதல் காணலாம். இத்தலையாலங்கானப் போரிற் பாண்டியன், சேர சோழர்களை அவர்க்குத் துணையான ஐவர் சிற்றரசர்களுடன் வென்றவன் என்பது மதுரைக்காஞ்சி அகநானூறுகளால் அறியப்படும். ஆகவே சங்க நூல்களிற்கண்ட தமிழ்வேந்தர் வரலாறுகளின் உண்மையை சாஸனங்கள் பலவகையாகவும் நிலைபெறுத்தி நிற்றல் தெரியலாம். இவ்வளவே தமிழ்ப் பெருவேந்தர்களைப் பற்றிச் சாஸனங்களிற் கண்ட செய்திகள்.

வேளிர்.

இனித் தமிழ்நாட்டில் சங்க காலத்தவராக விளங்கிய சிற்றரசர் வரலாறுகளை நோக்குவோம். பழைய நூல்களில் வேந்தரும் வேளிரும் என்ற தொடர் மிகுதியுங் காணப்படுவதால், தமிழ் மூவேந்தரை யடுத்துப் பெருமை பெற்றிருந்தவர் வேளிர் என்பது விளங்கும். இருபத்துநானகு வருஷங்கட்கு முன்பு இவ்வேளிர் யாவர் என்பது பற்றி யான்கண்ட முடிவுகளைக் காலஞ் சென்ற ஸ்ரீமாந் கனகசபைப் பிள்ளையவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க் கூடிய மதுரைத் தமிழ்ச் சங்கக் கூட்டமொன்றில் விரிவாகக் கூறினேன். அது, "வேளிர் வரலாறு" எனத் தனி நூலாகப் பின்பு வெளியிடப்பட்ட விஷயம் பலரும் அறிந்ததே. அதன் முடிவு வேளிர் யாவரும் பழங் காலத்துப் பிரபலராஜ வம்சமாய் விளங்கிய யதுகுலத்தவர் என்பதும், அவ்வேளிர் மரபினரே உயர்குல வேளாளர் என்பதுமேயாம். முதன்முதலாகக் கண்டு யான் வெளியிட்ட இக் கொள்கைக்கு, அப்போது சாஸன ஆதரவுகள் அதிகமாகக் கிடைத்தில. இப்போது அதனைத் தக்கபடி விளக்கும் சாஸனங்கள் அதிகரித்து வருகின்றன. திருவனந்தபுர சமஸ்தானத்தார் பதிப்பித்து வந்த சாஸனத் தொடரின் Travancore Archæological Surveys) இரண்டாம் தொகுதியிலே, தந்தையு மகனுமாய் அப்பிரதேசத்தை யாண்ட கோ-கருநந்தடக்கன். விக்ரமாதித்ய வரகுணன் என்ற அரசர் சாஸனப்பட்டயம் காலஞ் சென்ற கோபிநாதராயரவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப் பட்டயம் தமிழ்ப் பழஞ்சரிதத்துக்கு உதவக் கூடிய சிறந்த கருவிகளுள் ஒன்று. இதனாலும் பிற சாதனங்களாலும் தென் திருவாங்கூராகிய பொதியமலைப் பிரதேசத்தை 9-ம் நூற்றாண்டில் ஆண்டவர்கள் மேற்கூறிய அரசர்கள் என்பதும், வேள் ஆயின் மரபின ரென்பதும் தெளிவாகின்றன. ஆய் என்பான் வேளிருள் ஒருவன் என்றும் பொதியமலைப் பிரதேசத்தை ஆண்ட பெருவள்ள லென்றும் சங்கச் செய்யுள்களால் நன்கு அறியலாம். இவ்வேள்-ஆயின் மரபினராகத் தெரியப்பட்ட மேற்படி அரசர்களை யது வமிசக்கிளைகளுள் ஒன்றான விருஷ்ணி குலத்தவரென்று மேற் கூறிய திருவாங்கூர்ச் சாஸனம் தெளிவாகக் கூறுதல் குறிப்பிடற்குரியது. இதனால், துவராபதியாண்ட நிலங் கடந்த நெடுமுடியண்ணல் வழியினரே வேளிர் என்றெழுதிய நச்சினார்க்கினியர் கூற்றிற்குப் பொருந்தப் பிற்காலத்து வேள் மரபினர் கண்ணபிரான் வமிசமாகிய விருஷ்ணி குலத்தராகத் தம்மைக் கூறிக் கொள்ளுதல் எவ்வளவு பொருத்தம் பெற்றுள்ளது ?

கொடும்பாளூர் வேளிர்.

இவ்வாறே கோனாட்டுக் கொடும்பாளூரைத் தலைமையாகக் கொண்டு ஆண்ட வேளிர் வரலாறுகள் சாஸனங்களால் தெரிய வந்துள்ளது. இக்கொடும்பாளூரிலிருந்தே விஜயாலயன் என்ற சோழ குலத்தோன்றல் வெளிக்கிளம்பி இவ்வூர வேளிருதவியால் பல்லவர்டமிருந்த தன்முன்னோரது சோணாட்டை வென்று பெற்றான். இவ்வேளிர்கள் சோழரது புகழ்ச்சிக்குரிய தலைமைக் குடியினராக மதிக்கப் பெற்று விளங்கியவர் என்பது—

"கோனாட்டுக் கொடிநகரங் கொடும்பாளூர்"

"அந்நகரத் தினிலிருக்கும் வேளிர்குலத் தரசளித்து......
பொன்னெடுந்தோ ளாதித்தன் புகழ்மரபிற்
குடி முதலோர்"

என இடங்கழி நாயனார் புராணத்தில் சேக்கிழார் பாடுதலாலும் அறியலாம். இருக்குவேள், இருங்கோவேள் என்பன இக் கொடும்பாளூரரசர்க்கு வழங்கிய சிறப்புப் பெயரென்பது சாஸனங்களால் விளங்குகின்றது. (M.P. p. 1785). செங்குட்டுவன் மனைவியாகிய இளங்கோ வேண்மாளும் புறநானூறு கூறும் இருங்கோவேள் என்ற சிற்றரசனும் இம்மரபினரே, கொடும்பாளூர் மூவர் கோயிலில் உள்ள சாஸனமொன்று இவ்வூர் வேளிருளொருவனை "யதுவமிசகேது சமராபிராமன்" என்று கூறுகின்றது. இது வேளிர் யது வமிசத்தவரே என்று ஆதியிற் கண்ட என் முடிவையே வற்புறுத்துவதன்றோ? சளுக்கியரை 'வேள்குலச் சளுக்கர் வேள்குலத்தரசர்' என்று சாஸனங்கள் கூறுவதையும், இவ்வாறே, வேள்புல வரசர் வேள் என்ற பெயர்கள் அச்சளுக்கர்க்கே திவாகர முதலிய பழைய நிகண்டுகள் படிப்பதையும், வேளிர்க்குப் புறநானூறு முதலியவற்றிற் கண்ட ஆதி வரலாறே சளுக்கரசர்க்குரியதாகச் சாஸனங் கூறுவதையும் நான் வேளிர் வரலாற்றுள் நன்கு விளக்கியிருக்கிறேன்.

ஹை-ஹையர்.

சாஸனங்களில் "சசிகுலச் சளுக்கி யாதவராயனேன்" என்று இவர்க்கு வழங்கும் பெயராலும், கீழைச் சளுக்கியருள் நரேந்திரம்ருகராஜன் ஸகோதரனை "ஹைஹையவம்சஜ:" என்று ஹேஹயவம்சத்தவனாகக் கூறுதலாலும், (S.I.O. i, 34) இச்சளுக்கர் யாதவ வமிசத்து ஹேஹயக்கிளையார் என்பது தெரியலாம்.

அன்றியும் இச்சளுக்கரது ஆதிமுன்னோன், உதயணன் என்று அவர் சாஸனங் கூறுகின்றது. அவ்வுதயணனை ஹேஹய வம்சத்துதித்தவனாகப் பிருகத் கதை கூறும். இப்பிருகத் கதையின் செய்திகளையே கொண்டு கொங்குவேளிராற் பாடப்பட்ட பெருங் கதை, மகாமகோபாத்யாய ஐயரவர்களால் நமக்குக் கிடைத்துள்ளது. இந்நூலிலும் உதயணனை ஏயர்கோன் எனறும், இவன் மரபை ஏயர்கோக்குடி என்றும் கூறுதல் காணலாம். இதனால், ஹேஹயர் என்பதே ஏயர் எனத் தமிழில் திரிந்ததென்பது தெளியலாம். ஆகவே, சருக்கரசர் ஏயர் குடியினர் என்பதே தெளிவாகின்றது; ஏயர்குடி அல்லது ஹேஹயவமிசம், யது வமிசத்தின் பதினென்வகைக் குடிகளுள் ஒன்றாகும். (யதுவமிசம்—18—குடியுடையதாயிருந்ததெனறு மகாபாரதம் கூறுமாறே "பதினென் வகை வேளிர்" என்று நச்சினார்க்கினியரும் கூறுதல் அறியத்தகும்.) இனிச் சிவனடியார் 63-வருள் ஒருவரான கலிக்காம நாயனாரை ஏயர்கோன் என்றும் அவர் மரபினை ஏயர் கோக்குடி என்றும் பெரியபுராண முதலியவை கூறுவதைப் பலரும் அறிவர். இக்கலிக்காமர் மரபினராகிய ஏயர், சோழ சேனாபத்யம் வகித்த வேளாண் குடியினராகவே சேக்கிழார் பாடுதல் காணலாம். இந்நாயனார் தம் மகனார்க்கு வேளாண் மரபினரான மானக்கஞ்சாற நாயனாரிடம் மகட்பேசி மணமுடித்ததாகக் கூறப்படும் வரலாற்றாலும் மேற்கூறியபடி வேளாண்குடியே அவர் வமிசம் என்பது வலி பெறுகின்றது. இவ்வாறு, யதுவமிசத்தின் கிளையாகவே உயர்குடி வேளாளர்கள் முற்காலத்துக் கருதப்பட்டவர் என்பது கரதலாமலகமாதலால் வேளிர் வரலாற்றுள் யான் ஆதியில் எழுதிய கருத்து சாஸனங்களாலும் உறுதி பெறுதல் காணலாம். பாத கண்டத்தில் பிரசித்தமாக விளங்கிய ராஜவமிசங்கள் எல்லாம் யதுவை மூலபுருஷனாக உடையதே. அதனால், அவ் யாதவ வமிசத்தில், வேளாளரும் ஒருவகையார் என்பது அவர்கள் பழைய பெருமைக்கு மிகவும் ஏற்றதேயாம். யாதவ வமிசம் என்று நான் கூறுவது—கண்ணன் அவதரித்த யது வமிசத்தைக் குறிக்குமேயன்றி அப்பெருமான் மறைந்து வளர்ந்த நந்தகோபன் வமிசமன்று. சிலர் என் கருத்தை முற்றும் வேறுபடக்கொண்டு, என் கொள்கையை மறுப்பதால் நான் இதனை இங்கு வற்புறுத்த வேண்டியவனாக உள்ளேன்.

மிழலை நாட்டுவேள்.

இனி, வேள் எவ்வி என்பவன், மிழலை நாடாண்டவன் என்பதும், நீடூர்த் தலைவனென்பதும் அகநானூறு புறநானூறுகளால் அறியப் படும். இவன் வழியில் உதித்தவனே இருங்கோ வேண்மான் என்பதும், தம்முயிர் நண்பனான வேள்பாரி இறந்ததும் கபிலர், அப்பாரி மகளிரை மணந்து கொள்ளும்படி இவ்வேண்மானிடம் சென்று வேண்ட இவன் மறுத்தனனென்பதும் புறப்பாட்டால் அறிந்தவை. இவ்விருங்கோவேள் மரபினரே மேற்குறித்த கொடும்பாளூர் வேளிர் என்பது, இருங்கோவேள் என்ற பட்டம் அவர்க்கு உரியதாயிருத்தலாற் பெறப்படுகின்றது. பிற்பட்ட சோழர் காலத்தும் இருங்கோவேளின் மரபினர் விளங்கினர். முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் தொண்டைநாட்டுக் காரிகைக் குளத்தூருக்குரியவனான கண்டன் மாதவன் என்ற சோழ அதிகாரியை "மிழலை நாட்டுவேள்" என்று நீடூர்ச் சாஸனங் கூறுதலால் இஃது அறியப்படுகின்றது.

பாரி.

இனி, வேள்பாரியின் பறநாடு பாண்டி நாட்டிலுள்ளது என்று பாண்டி மண்டல சதகங் கூறுகின்றது. அதனால் இவனது மலை இப்போது கொடுங்குன்றம் எனப்படும் பிரான்மலையாக வேண்டு மென்று நான் ஆதியில் கருதி எழுதியபோது, காலஞ்சென்ற நண்பர் கோபிநாதராயரவர்கள் யானெழுதியது பொருத்தம் என்று அதற்கேற்ற சாஸனக் குறிப்பை எழுதியனுப்பினார்கள். அஃதாவது—பிரான்மலையில் மங்கைநாதர் கோயில் அருகான் மண்டபத்து வரையப்பட்டதும், திரிபுவன சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் காலத்துமான சாஸனமொன்றில்—"இந் நாட்டு அறுநூற்றுவ னேரிப்பற்றில் பாரீசுவரமும்" என்ற தொடர் காணப்படுகின்றது என்பதே. பாரீசுவரம் என்பது பாரியால் வழிபடம் பெற்ற அல்லது பிரதிஷ்டிக்கப் பெற்ற சிவபிரான் கோயில் கொண்ட தலம் எனப் பொருள்படக் கூடியதென்பது எளிதில் அறியலாம். இதனால் பாரிமலையானது வெள்ளிடைமலை யாகின்றது காண்க. இக்குன்று, பறமலை எனவும் இதனைச் சூழ்ந்த நாடு பறநாடு, பறம்பு நாடு, பறமலை நாடு எனவும் சங்க நூல்கள் வழங்கும். இவையே—பிருமலைநாடு, புறமலைநாடு, பறப்புநாடு—என்று பிற்காலத்தெழுந்த சாஸனங்களில் சிறிது திரிந்து வழங்கி வருகின்றன. (22 P. பிருமலைநாடு 1187 p. 1190 பறப்புநாடு—1008.)

பாரிமலை.

இதனால், பாரிமலையே பிரமலை எனச் சாஸனத்தும், பிரான்மலை என்று உலக வழக்கினும் அவனது பிறம்பு நாடே (தென்) பிறப்பு நாடு என்றும் இக்காலத்து மாறி வழங்கலாயின என்பது தெளிவாதல் காணலாம் பராந்தகன்—பிராந்தகன், வளாகம்—விளாகம் என அகரம் இகரமாக வழங்குதலுண்டென்பது சாஸனங்களால் அறியப்பட்டதே.

கபிலரும் பாரிமகளிரும்.

இனி, கபிலர் பாரிமகளிரை அரசர் மணஞ்செய்து கொள்ள மறுத்தமையால் அம்மகளிர் மணத்திற்கு வேண்டிய நிதியைத் தேடிவருதற்காக அவர்களைத் தமக்கு வேண்டிய பார்ப்பாரிடத்து அடைக்கலமாக ஒப்புவித்துச் சென்றன ரென்பதும், அங்ஙனம் சென்ற கபிலர் செல்வக்கடுங்கோ என்ற சேரனிடம் வேண்டிய பொருள் பெற்றுத் திரும்பி வந்து அவர் மணவினையை முடித்துப் பின் வடக்கிலிருந்து உயிர் துறந்தனராக வேண்டுமென்பதும் புறநானூறு முதலியவை கூறும் வரலாறுகளிலிருந்து கருதப்படுகின்றன. இவற்றை வேளிர் வரலாற்றுள் பாரியைப் பற்றிக் கூறியவிடத்து விளக்கியிருக்கிறேன். திருக்கோவலூர் வீரட்டானேசுவரர் கோயிற் கர்ப்பக்கிருகத்துக் கண்டதும் முதலிராசராச சோழன் காலத்தே அகவற் பாவில் அமைக்கப்பட்டதுமான சாஸனமொன்றில்—அடியில் வரும் பகுதி அறியத்தக்கதாம்.

"வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக் கலப்
பெண்ணை மலையற் தேவிப் பெண்ணை
யலைபுன லழுவத் ததரிட் டஞ்செல
மினல் புகும் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர்
பேரெட் டான வீரட் டானம்
அனைத்தினு மநாதி யாயது" என்பதே.

இவ்வடிகளால், கபிலர் பாரியால் அடைக்கலமாக ஒப்பிக்கப்பட்ட அவன் மகளிரை, மலையமானுக்கு மணம் புரிவித்தது—"பசைந்

தாரிற் றீர்தலிற் றீப்புகுத னன்று" என்ற மூதுரைப்படி, பெண்ணை யாற்றின் இடைக்குறையாகவுள்ள பாறையில் வடக்கிருந்து அக்கினியிற் பிரவேசித்தார் என்றும், அத்தகைய பாறை கபிலக்கல் என்று ராஜராஜன் காலத்தும் பிரசித்தமாய் இருந்ததென்றும் தெரியலாம். இவ்வகவலுள் 'அலைபுனலழுவத்து' என்பது ஆற்றிடைக்குறை என்று பொருள்படும். அழுவம்—இடைப்பட்ட இடம். சங்ககாலத்து உலகத்தை வெறுத்து உடலைவிட விரும்புவோர், ஆற்றிடைக் குறையில் தங்கிப் பிராயோபவேசம் புரிதல் வழக்கு; "உள்ளாற்றுக் கவலைப் புள்ளிநீழல்—முழு வள்ளூர முணக்கு மள்ள" எனக்கோப் பெருஞ் சோழனைப் புலவர் பாடுத லால் இஃதறியலாம்.

வடக்கிருந்தல் வழக்கு.

இராம பிரான் பிரிவுக் காற்றாத அயோத்தி நகரத்து ஜனங்கள்—"இராமனுடன் செல்லற் கியலாத நாம் இவ்விடத்தே உபவாசத்தால் உயிரை விடுவோம்; இன்றேல், கீழே விழ்ந்து இறக்கும் வரை வடதிசை நோக்கிச் சென்று கொண்டிருத்தலாகிய மகாப்ரஸ்தான விரதத்தை மேற்கொள்வோம்" என்றும், "அங்கதன் பிராட்டியை எங்குந் தேடியும் காணாமையால் மற்ற வானரர்களோடும் உயிர் துறக்கத் துணிந்து—பின் தண்ணீர் குடித்து பூமியில் தெற்கு முகமாகப் பரப்பிய தருப்பையின் மேல் கிழக்கு நோக்கியிருந்து கொண்டு பிரயோபவேசம் பூண்டான்" என்றும் வான்மீகி முனிவர் கூறுகின்றார். இதனால் வடக்கிருத்தல் என்ற தமிழ் வழக்குக்கு ஏற்ற வடதொடர் காணப்படவில்லையேனும் உயிர் துறக்கத்துணிவோர் வடதிசையை நோக்கிச் சென்றேனும், இருந்தேனும் மேற்படி விரதம் கொள்ளுதல் மரபு என்பது தெரியலாம். இவ்வாறு கபிலர் வடக்கிருந்த இடமே "பெண்ணை யலைபுன லழுவத்து வீடுபெ றெண்ணிக் கனல்புகுங் கபிலக்கல்" என்று சாஸனம் கூறுவதாகும். ஆகவே, பாரிமகள் வரலாறும், கபிலர் வடக்கிருந்ததுமாகிய சங்கநூல் வரலாறுகள் சாஸனங்களால் ஒருவகையாக விளக்கம் பெறுதல் அறியலாம். இவ்வாறே நன்னன் வேண்மான் என்பானைப்பற்றி நான் ஏற்கவே எழுதியிருக்கிறேன். இவனது நாடாகிய பல்குன்றக்கோட்டம் தொண்டைநாட்டின் பிரிவுகளுள் ஒன்று. இக்கோட்டத்தில் திருப்பதி முதலியவை அடங்கும். இவன் வமிசத்தோர், நன்னமன், நன்னமாராயர் என்று பிற்காலத்து விளங்கினர் என்பது திருவல்ல

முதலிய இடங்களிலுள்ள சாஸனங்களால் தெரிகின்றது. இந் நன்ன வாசரை வைதும்பர் என்று சாஸனங் கூறுதல் ஆராயத்தக்கது. (S. I. I. iii 107—T. M. P. p. 76).

அழும்பில் வேள் அழும்பில்.

இனி, வேள் குலத்தலைவனான அழும்பில் வேள் என்பான் செங்குட்டுவனது அரசிறை மந்திரியாயிருந்தவனென்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படும் "அழும்பிலன்ன அருயாணர்" 'மற்ற விறல்வே ளழும்பிலன்ன நாடிழந்தனரும்" என, இவ்வேளுக்குரியதாயிருந்த அழும்பில் நாட்டின் வளம் சங்கச் செய்யுள்களில் புகழப்படுகின்றது. அழும்பில் பாண்டியின் கண்ணதோர் ஊர் என்பர் அகநானூற்றுரைகாரர் இவ்வூரும் நாடும் இப்போது அம்புகோயில், அம்புநாடு என்ற பெர்களுடன் புதுக்கோட்டைச் சீமையில் உள்ள ஊரும் அதைச் சேர்ந்த பிரதேசமுமே யாகும். இவ்வூரில், வீர ராஜேந்திர சோளீசுவரமுடைய நாயனார் என்ற பழம் பெயர் பெற்ற சிவபிரான் கோயிலிற் கண்டனவும் 10-க்கு மேற்பட்டனவு மான சாஸனங்களில், இவ்வூர் 'அழும்பில்' என்றே கூறப்படுதல் குறிப்பிடத் தக்கதாகும். இவ்வூர் பழைய வேளிர் தலைவனுக்கு உரியதாயிருந்தது என்பதற்கேற்பப் பிற்காலத்திலும் பிரபலம் பெற்றிருந்ததேயாம். இப்பகுதியை இப்போது ஆண்டுவரும் புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் பிற்காலப் பல்லவராயர்களிடமிருந்து முதன்முதற் பெற்றது அம்புநாடாகிய இவ் வழும்பில் நாடே என்று அத்தொண்டைமான்கள் வரலாற்றால் தெரியலாம். இவ்வம்பு கோயிலில் உள்ள சாஸனங்கள் யாவும் பாண்டியருடையன வாகவே இருத்தல், இது பாண்டி நாட்டதாக எழுதிய அகநானூற்றுரைகார் கருத்தை ஆதரிக்கின்றது. சோழ பாண்டிய நாடுகளை இடைநின்று வேறு பிரிப்பதாய்த் தனி வேளிரால் ஆளப்பட்டு வந்தது இவ்வழும்பில் நாடு. அதனால் சோழ பாண்டியர்க்குள் போர் மூண்ட காலங்களில் அவ்விருவர்க்கு முரித்தாகாது இடைப்பட்டிருந்த இந்நாடு அவ்விருவரில் ஒருவர்க்கு உரித்தாகியதுமுண்டு, "மானவிறல் வேள் அழும்பிலன்ன—நாடிழந்தனரும்" என்பதனால், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இதனைக் கைப்பற்றியவன் என்று மதுரைக் காஞ்சி குறிப்பித்தலுங் காணலாம். இவரை விடுத்து மலையமான்கள் என்ற பழைய அரசர் மரபை நோக்குவோம். இவர்கள் திருக்கோவலூரைத் தலைமையாகக் கொண்டு நடு நாட்டை யாண்டவர்களென்பதும், இம்மரபினரில் திருமுடிக்காரி

என்பவன் வீர நியாயத் தியாகங்களில் மிக்கோனாய்ச் சங்க நாளில் விளங்கியவனென்பதும் முன்னூல்களாலறியப்பட்டவை. இம்வமிசம் பிற்காலத்தும் பழம் பெருமையுடன் விளங்கியதே. சிவனடியார் அறுபத்து மூவருள் மெய்ப்பொருள் நாயனார் இம் மலைய மரபினரே. "சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரின் மன்னி—மாதொருபாக ரன்பின் வழிவரு மலாடர்கோமான்" எனச் சேக்கிழார் பாடுதலால் இஃதறியலாம்.

மலையமான்.

........விந்தமேய
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில் சூழ் நெடுமறுகிற் கமலவேலிப்
பொற்புடைய மலையரயன் பணிய நின்ற
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே

என்று திருமங்கை மன்னனும் தங்காலத்து விளங்கிய மலையமான் பெருமையைத் திருநெடுந்தாண்டகத்துச் சிறப்பிப்பர். இங்கு மலையரையன் என்பதற்கு மலையமான்கள் என்றே பெரியவாச் சான்பிள்ளை பொருளெழுதியிருத்தல் அறியத்தக்கது. (இப்போது அச்சிட்டவர்கள், 'மலையமானவர்க்கு' என்று தவறாகப் பதிப்பித்துள்ளனர்) இம்மலையமான்கள் பிற்காலச் சோழர் நாளினும் பிரபலம் பெற்றிருந்தனர் என்பதற்குச் சாஸனங்கள் மிகுதியும் உள்ளன. (**EP. Prip. Vol. XVII. p 315**) சேதி வமிசத்தவராக இவர்கள் தம்மை வழங்கி வந்தனரென்பது அவற்றினின்று அறியப்படுகின்றது. இதுபற்றியே இவர்களாண்ட நடுநாட்டுக்குச் சேதிநாடு என்ற வழங்கும் உண்டாயது. "சேதிநன்னாட்டுநீடு திருக்கோவலூர்" என்பது பெரிய புராணம். யாதவ மரபினுள் ஒன்றான விதர்ப்ப வம்சக்கிளைகளில் சேதி வமிசம் ஒன்றென்று இதிகாசம் கூறும். அதனால் அவ்வமிசத்தவரான மலையமான்களும் யதுவமிசத்தவ ரென்றே தெரியலாம்.

திரையர்.

இவ் வேளிரை யன்றிச் சங்கநூல்கள் கூறும் வேறு அரசர் மரபுகளைப் பற்றியும் சாஸனங்களினின்று நாம் அறிய இடமுண்டு. திரையர் எனப் பெயர் பெற்ற அரசர் தொண்டை நாட்டுக்கு

உரியவரென்பதும், கடலினின்றும் வந்தாண்டமையால் அப்பெயர் பெற்றன ரென்பதும் பெரும்பாணாற்றுப் படை முதலியவற்ருல் தெரியலாம். சோழனுக்கு நாக கன்னிகையொருத்தி பெற்ற மகனை, அவள் ஆதொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலில் விட, அவன் அவ்வடையாளத்துடன் கரையேறிப் பின் அரசனுண்மையால் தொண்டமான் என்ற பெயர் பெற்றனனென்று நச்சினார்க்கினியர் எழுதிய செய்தி பலரும் அறிந்ததே. இத் திரையருள்ளே, சங்க நாளில் விளங்கியவன் தொண்டைமானிளந்திரையன் என்பான், இவனைப் பற்றிய பெரும்பாணாற்றுப்படை வரலாற்றுக் கொண்டு, வேற்று நாட்டினின்று கடல் வழியாக வந்தவரே. இத்திரையர் என்றும், இவர்—கடாரத் திரையர், சீனத்திரையர், பங்காளத் திரையர், பல்லவத்திரையர் எனப் பலவகையாராக இருந்தன ரென்பது தொண்டை மண்டலப் பட்டயத்தால் தெரிய வருகின்ற தென்றும் ஸ்ரீமாந்-கனகசபைப் பிள்ளையவர்கள் எழுதியுள்ளார். இத்திரைய வகுப்புகளை நோக்குமிடத்து, அவர் ஆதியில் பல தேசங்களிலும் பரவியிருந்தவர் என்பது தெரியலாம், இவற்றுள் பல்லவத்திரையர் என்பதே இங்குக் குறிப்பிடத்தக்கது. பல்லவத் திரையர் என்பதில் உள்ள பல்லவம் என்பது கடாரத்திரையர், சீனத்திரையர் முதலியவற்றிற் போல, ஒருதேசத்தைக் குறிப்ப தாகவே கொள்ளத் தகும். பாரசிக தேசத்தில் வாழ்ந்த பார்த்திவர் அல்லது பஹ்லவர் வலிபெற்ற கூட்டத்தாரே பாதகண்டத்தின் மேல் கரையை அடைந்து அரசரைச் சார்ந்து பிரபலராய்ப் பரவின ரென்பதும் சாதவாகனர் வீழ்ச்சிக்குப்பின் அவர்கள் தென் கோடியில் தங்கள் அரசியலை நாட்டிக் கொண்டன ரென்பதும் சரித்திரம் வல்லோர் பலர் கொள்கை. பல்லவ வமிசோத்பத்தி பற்றி எழுதிய டாக்டர் தூப்ரேயில் துரை—சென்னை முதல் கடலூர் வரை அகப்படும் பழைய நாணயங்கள் ஒருபக்கம் இருபாய்மரமுள்ள கப்பலுருவமும் மறுபக்கம் உச்சயினிக் குறியும் உடையன என்றும், உச்சயினிக்குறி சாத வாகன அரசர்க்குரிய தாயினும், மறுபக்கமுள்ள கப்பற்குறி அவர்க்குரியதன் றென்றும் எழுதியுள்ளார். இவர் கருத்துப்படி, கப்பற்குறி வேறு அரசர்க்குரிய தாயினும் மறுபக்கம் சாத வாகனரது உச்சயினிக் குறியைத் தென்னாட்டு நாணயங் கொண்டிருத்தலால், அக்கப்பற் குறியிட்டவரசர் அச்சாதவாகன சம்பந்தமுடையவராயிருத்தல் வேண்டுமென்றே நாம் கருதலாம். தென்னாட்டில் அச்சம்பந்தம் பெற்ற வேந்தர்கள் ஆதிப்பல்லவர் களாகவே சொல்லலாம். கடைசிச் சாதவாகனனான புலோமாயியின்

கீழ் சிவஸ்கந்தவர்மன் என்பவன் சேனாபதியாய் அவர் நாட்டெல்லைப் புறத்தைக் காத்து வந்தவனென்பது சாஸனங்களால் விளங்குவதென்பர். சிவஸ்கந்தவர்மன் என்ற பல்லவத் தலைவன் இக்காலத்தே காஞ்சீபுரப் பிரதேசத்தை யாண்டிருக்கிறான். அதனால் இப்பல்லவ முன்னோனே புலுமாயி காலத்தவனென்பது பெறப்படும். கப்பலுருவமுள்ள தென்னாட்டு நாணயங்களிலே உச்சயினிக் குறியுடன் புலுமாயியின் பெயர் மறுபுறம் காணப்படுகின்றது. ஆகவே ஒருபக்கம் தம்சக்கரவர்த்தியான சாதவாகனர் குறியையும், மறுபக்கம் தங்கள் குலக் குறியையும் கொண்டதாகப் பல்லவ முன்னோர் தம்நாணயங்களை வழங்க அவையே தென்னாட்டில் அகப்பட்டிருப்பவை என்று நாம் கருதலாம். இத்தகைய நாணயங்கள் தென்னாட்டுக்கே பிறந்தவையா யிருத்தலால் இவ்வாறு கொள்ளத் தடையில்லை யன்றோ? அதனால் கப்பற்குறி பல்லவர்க்குரியதென்றே பெறப்படுகின்றது. இனி, மேற் கூறிய சிவஸ்கந்தவர்மன் தந்தையாகிய வீரகூர்ச்சன் என்பவன் நாக கன்னிகையை மணந்து பல்லவ வமிசத்தவரை உண்டாக்கியவன் என்பது அவர் சாஸனங்களால் நன்கறியப் பட்டதாம். இவ்வாறு, கப்பற் குறியும் நாககன்னிகையிடம் பிறந்த வரலாறும் பல்லவர்க்கு உரியன என்பது தெரிதலால், இவ்விரண்டும், அப்பல்லவர் திரையர் வழியினரே என்பதைத் தெளிவாக்குகின்றன. கப்பற்குறி அப்பல்லவர் கடலினின்று வந்த திரையர் வழியினர் என்பதைக் காட்டக் கொண்டதாக வேண்டும். ஆனால், நாககன்னிக்குச் சோழனிடம் உதித்த மகன் வமிசத்தரே திரையர் என்று நச்சினார்க்கினியரால் கதை எழுதப்பட்டுள்ளது. கடைச்சங்க நாளில் கிள்ளிவளவனுக்கும் நாககன்னி யொருத்திக்கும் பிறந்த மகன் வரலாறு மணிமேகலையிற் கூறப்படுதலால், இவ்வரலாற்றைத் திரையருக் கேற்றிப் பிற்காலத்தில் வழங்கிய கதையாகவே அது கருதற்குரியது. பிற்பட்ட சோழர்களின் முன்னோ னொருவனுக்குக் காமக்கிழத்தியிடம் ஆதொண்டை என்ற மகனுண்டாய் அரசனானன் என்ற வரலாறொன்று காணப்படுகின்ற தென்றும் (N. Arcot Manual) அக்காமக் கிழத்தி நாக வமிசத்தவளா யிருத்தல் கூடுமாதலால் இவ்வரலாறே தொண்டைமான்களின் ஆதிசரித்திரமாக வழங்கியதாக வேண்டும். என்றும் வேறுசில அறிஞர் கருதுவர். இதுவும் இயைபுடையதே. எவ்வகையினும், திரையராகிய தொண்டைமான்களுக்குச் சோழ சம்பந்த முண்டென்பதற்குப் பழைய சங்கநூலில் சிறந்த ஆதாரமில்லை. இனித் தொண்டைமான் இளந்திரையனே நச்சினார்க்கினியர் கூறிய கதைப்படி, சோழனுக்கும் நாககன்னிக்கும் பிறந்த மகன் என்றும்

மணிமேகலையில் கிள்ளிவளவனுக்கு நாககன்னியிடம் பிறந்த மகனாகக் கூறப்பட்டவனே இத்திரையன் என்றும் சிலர் சரித்திரம் எழுதிச் செல்கின்றனர். "முந்நீர்த் திரைதரு மரபி னுரவோ னும்பல்" என்று இவ்விளந்திரையனை உருத்திரங் கண்ணனார் பெரும்பாணாற்றுப் படையிற் பாடுதலால், அவன், திரையர் வமிசத்தில் உதித்த பின்னோர்களில் ஒருவன் என்பதன்றி. மூல புருஷன் என்பது எவ்வகையிலும் பெறப்படாமை காணலாம். இளந்திரையன் என்பதனால் பெருந்திரைய னொருவன் அவனுக்கு முன்னோனாக இருந்தவன் என்பது தானே விளங்கும். அன்றியும் கிள்ளிவளவனுக்கு நாககன்னியிடம் பிறந்தவனாகக் கூறப்படும் மகன் மணிபல்லவத்திலிருந்து கம்பளச் செட்டியாற் கப்பலில் கொண்டுவரப்பட்டு, இடையில் கலங்கவிழக் காணாமற் போனவன் என்பதும், அச்செய்தி யறிந்து துயருற்ற கிள்ளிவளவன், இந்திர னுக்குச் செய்யுந் திருவிழாவை மறக்க, அதனால் உண்டான தேவதைகளின் சீற்றத்தால் காவிரிப் பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்ட தென்றும் மணிமேகலை கூறும் கதை. கடலில் வீழ்ந்த சோழன் மகனைப்பற்றி யாதொரு செய்தியும் பின்பு கிடையாது. ஆகவே, தொண்டைமா னிளந்திரையனுக்கும் கப்பல் கவிழ்ந்திறந்த சோழன் மகனுக்கும் ஒரு தொடர்பும் இல்லாமையால், அத்திரையனை அவன் வழியில் ஆதிமுன்னோனாகக் கூறுவது பொருத்தமற்ற தென்பதில் ஐயமில்லை.

இவற்றால், திரையர் வரலாறும் பல்லவர் வரலாறும் வேறான வையல்ல என்பது தெரியலாம். பல்லவர்க்கும் திரையரைப் போலவே தொண்டை மாலையும் தொண்டைமான் என்ற சிறப்புப் பெயரும் உரியனவாக நந்திக் கலம்பக முதலியவை கூறுகின்றன. பல்லவர் என்ற பெயர் அவரது பூர்வ தேசமடியாகவோ குலமடி யாகவோ உண்டான தென்பதில் ஐயமில்லை. ஆனால், பிற்காலத்தில் அப்பல்லவ சப்தம்—அங்குரன், போத்தன் என்பவற்றைப் போலவே—தளிர் என்பத னடியாக வந்ததாகவே கருதப்பட லாயிற்று, சித்தளிர் ஆதொண்டைத் தளிராகும்.

அவன் வளர் தொண்டை யல்லால்

நாறுதிவள் திருமேனியும்"

"பொற்கழல் நந்திநின்—பாசிலைப் பந் தொண்டை

யல்லது பாடாளே"

என்ற நந்திக் கலம்பகத் தொடர்களால், அத்தொண்டையிலைத் தளிரையே தம்குலமாலையாகக் கொண்டிருந்தவர்கள் பல்லவர்கள் என்பது விளங்கும். "அவந் வளர் தொண்டை" என்று, திரையரைப்போலவே, பல்லவர் ஆதொண்டையால் பெருமை பெற்றவரெனக் கூறப்படுதல் அறியத்தக்கது. இவ்வாறு திரையர்க்கு நச்சினார்க்கினியர் உரியவாகக் கூறிய ஆதொண்டையும் தொண்டைமானென்ற பட்டமும் பல்லவர்க்கும் உரியனவாகவே பழைய நூல்கள் கூறுதல் அவ்விருவரும் ஒரு குலத்தவரே என்பதற்கு உற்ற சான்றாகின்றது. திரையனேரி என்ற பெயருடன் காஞ்சிப் பக்கத் திருந்ததாகப் பழைய பல்லவ சாஸனம் கூறுவது. அப்பல்லவரால் வெட்டப்பட்ட ஏரியேயாகும். மகேந்திர தடாகம், வயிரமேக தடாகம் எனப் பல்லவர் தம் பெயரால் பல ஏரிகள் வெட்டியிருத்தல் தெரிய வருதலால், இத்திரைய னேரியும் அவர் பெயர் பெற்றதே என்னத் தடையில்லை. (S.I.I. i, 352—தின்னேரி) பல்லவர் என்ற பெயர் பழஞ் செய்யுளிற் கூறப்படுதலை—

"முலைபொழி தீம்பால் மண்சேறு படுப்ப
மலர்தலை யுலகம் ஓம்பு மென்ப
பாசிலைத் தொண்டைப் பல்லவ னாணையின்
வெட்சித் தாயத்து வில்லே ருழவர்
பொருந்தா வடுகர் முனைச்சுரங்
கடந்து கொண்டார் பல்லா நிரையே

என்று தொல்காப்பியப் புறத்திணையியலில் நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோளால் தெரியலாம். அவ்வுரைகாரர் தொல்காப்பியத்துக் காட்டும் பிரமாணங்களெல்லாம் பிற்காலத்தவைகளன்றிச் சங்ககாலத்துக் குரியனவாகவே இருத்தலால், இச்செய்யுளும் பழைய பல்லவனைப் பற்றிய தென்றே தெரிகின்றது. வேளிர் என்று, தமிழ்நாட்டில் ஆதியில் குடியேறிய சாளுக்கரசரைத் தமிழ் மக்கள் வழங்கியது போலப் பல்லவர்க்கு அவர் வழங்கி வந்த பழம் பெயர் திரையனென்றே மேற் கூறியவற்றி லிருந்து தோன்றுகிறது. வேணாட்டு ஆய்குலவேந்தரின் அதிகாரியாயும் அவன் ஆணத்தியுமாய் விளங்கிய குன்றப்போழன் என்பான் இத்திரையர் மரபினன் என்பது அவனைப் பற்றிய விசேர்டணங்களால் அறியப்படுகின்றது. (T.AS..I.2-5-13)

பவித்திரி

இத்திரையர்க்குரிய கடற்றுறையுள் பவித்திரி என்ற பட்டினம் சிறந்ததென்பது அகநானூற்றில் "பொலம்பூட்டிரையன் பல்பூங் கானற் பவித்திரி" என்ற நக்கீரர் பாட்டால் அறியலாம். இது நெல்லூர் ஜில்லா, குண்டூர்த் தாலுகாவிற் கடற்பட்டினமான ரெட்டிபாளம் என்ற ஊராகும். இவ்வூர்ப் பாண்டரங்கமுடைய மகாதேவர் கோயிலில் முதற்குலோத்துங்க சோழன் காலத்து அமைந்த சாஸனமொன்றில்—"பவித்திரிக் கோட்டத்துப் பேரூர் நாட்டுப்பவித்திரி" எனவும், "கடல் கொண்ட பவித்திரிக் கோட்டத்துக்காகந்தியில் பாண்டரங் கேசுவார்" எனவும் வரும் சாஸனத் தொடர்களால் இந்த ரெட்டி பாளத்திற்குப் பவித்திரி காகந்தி என்பவை பழம் பெயர்கள் என்பது தெரியலாம். கடல் கொண்ட பவித்திரி என்பதனால் ஒருகாலத்து இப்பட்டினம் கடலால் அழிவுண்டதென்று அறியப்படும். "பவித்திரியன்ன விவள், நல்லெழிலிள நலந் தொலைய வொல்லெனக் கடலே ஓதமல்கின்று" என்று நக்கீரனர் கூறுகின்றார். இதனால் இவ்வூரை அதனழகு கெடும்படி ஒருகால் கடல் திடீரென அழித்துப் போந்த குறிப்புப் புலப்படுதல் காணலாம். காவிரிப்பூம்பட்டினத்துக்குக் காகந்தி என்ற பெயர் பழைமையாக உண்டென்பது மணிமேகலை யால் அறியப்படுகின்றது. அது போலவே இப்பவித்திரிக்கும் காகந்தி என்ற பெயரைச் சாஸனங் கூறுகின்றது. புகார் கடல் கொள்ளப்பட்ட தென்பது மணிமேகலையால் தெரிந்ததே. அத்தகைய கடற்கோளைத் திரையர்க்குச் சிறந்த துறைமுகமும் பெற நேர்ந்தது பற்றி, இப்பவித்திரிக்குப்புகாரின் பழம் பெயரான காகந்தி என்ற பெயரே வழங்கியதோ என்று சங்கிக்க இடமேற் படுகின்றது. முதற் பராந்தகன் அதிகாரிகளுள் பவித்திரி கிழவன் என்பவனும் ஒருவனென்று சாஸனம் கூறும். அதனால் அப்பவித்திரி சோழர் காலங்களில் பிரபலமாயிருந்த பட்டினமாகவே தெரியலாம்.

புல்லி

சங்க நூல்களால் புல்லி என்பான், வேங்கடத்துத் தலைவன் என்பதும், தமிழ்வள்ளல் என்பதும் கள்வர் மரபின னென்பதும் தெரியலாம். பல்லவர் காலத்தில் அவர் பெருமைக்குக் காரணமான சேனபதிகளாக விளங்கிய முத்தரையர்கள் என்பவரைக் கள்வர கள்வர் என்று சாஸனம் சிறப்பிக்கின்றது. இக்கள்வர் பெருமுத்தரையரது முன்னேனே கள்வர் கோமான புல்லி என்று கருத இடமுண்டு.

கட்டி

இனித் திரையரைப் போலவே கட்டி என்பவரும் தமிழ் நாட்டின் பகுதியை ஆண்ட அரச வகுப்பினர் ஆவர். இது "போரடு தானைக் கட்டி" (அகம்-226) "பல்வேற்கட்டியர்" (சிலப். 15-157 ; குறுந். 11) "கங்கன் கட்டி" எனச் சங்க நூல்களில் வருவனவற்றால் அறியப்படும், தமிழ் நாட்டினெல்லையில் இவர் நாடு உள்ளதென்றும், இவர் நாட்டுக்கப்பால் வேறு மொழி வழங்கும் வடுகர் பூமி உண்டு என்றும்--"குல்லைக் கண்ணி வடுகர் முனையது, பல்வேற் கட்டி நன்னாட்டும்பர், மொழி பெயர் தேஎத்த ராயினும்" எனவரும் குறுந்தொகைப் பகுதியால் தெரியலாம். இங்கே வடுகர் என்றவர் கன்னட நாட்டாரை. மைசூர் ராஜ்யத்தின் வடபாகமும், பல்லாரி அனந்தபுரம் ஜில்லாக்களின் பகுதிகளும் அடங்கிய பிரதேசத்தை படக நாடு என்றும் அங்குள்ளாரைப் படகவாரு, படக நாட்டிவாரு என்றும் இப்போதும் வழங்குவர். அகநானூற்றில் "வடுகர் பெருமகன் பேரிசை யெருமை, நன்னாட்டுள்ளதை அயிரியாறு" (253) எருமை குடநாடு (115) என்ற அடிகளில் வடுகர் பெருமகனான எருமை என்பவனுக்கு உரியதாகக் கூறப்பட்ட குடநாடு, இப்படக நாடேயாம். இந்நாட்டி லோடுவதாகக் கூறிய அயிரி இப்போது அகிரி என்ற பெயருடன் துங்கபத்திரையிற் கலக்கின்றது. ஆகவே கட்டி நாடு வடுகர் குடநாட்டை யடுத்த தமிழ்நாடே என்பது தெளிவாம்.

கட்டியர்

இங்ஙனம் சங்க நூல்கள் கூறும் கட்டியரையே கட்டிமான், கட்டியரசர் என்று சாஸனங்கள் கூறுகின்றன. சோழர் காலத்தே, செம்பியன் கட்டிமானடிகள் (I.M.P. 246) கட்டிமான் அரையன் திருச்சிற்றம்பலமுடையான் பதுமன் என்பார் இவ்வழியினரே (Ibid 432). விஜயநகர வேந்தர் காலத்தும் அதன்பின்பும் கட்டி முதலியார் என்று இன்னோர் பிரபலராக சேலம் பகுதியை ஆண்டு வந்தனரென்று சேலம் ஜில்லா கெஜட்டியரால் தெரியலாம். சங்க நூல்களில் பலமுறை பயிலும் 'பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்' என்ற தொடரை 'வல்வேற் காட்டி னன்னாட்டும்பர்' என்று பாடங் கொண்டு வல்வேற்காடு என்பது பழவேற்காடு ஆகுமென்றும், அதுவே, தமிழ்நாட்டுக்கும் வடுகாகிய தெலுங்கு நாட்டுக்கும் எல்லை யாவதென்றும் நீளத் தமிழ்ச் சரித்திரம் எழுதிச் செல்வாருமுண்டு. "பல்வேல்" என்பது

'பல்வேற் கோசர்' 'பல்வேற்றிரையன்' 'பல்வேற்றுனை யதிக மான்' என்றவாறு சங்கநூல்களில் அடிக்கடி பயிலும் தொடர் தலாலும் 'வல்' என்ற அடைவேற்காட்டுக்கு ஏற்றதாகாமை யாலும் 'பல்வேற்கட்டி' என்று வேறிடத்தும் சங்கநூல் கூறு வதாலும், பாடமும் அதுவாகவே ஏடுகளில் உள்ளமையாலும், அகநானூறு கூறுமாறு பழவேற் காட்டுக்கு அப்பால் எருமையின் குடநாட்டில்லாமையாலும் அவர்கள் பாடமும் கருத்தும் சரித்திர வுண்மைக்குச் சிறிதும் ஏற்புடையன அல்ல, கொள்ளக்கூடியவை யல்ல என்பது தெளிவு.

கோசர்

இனிக் கோசர் என்பவர், சங்க காலத்தில் துளுநாடு மேல் கொங்கு நாடுகளை யாண்ட அரசராகவும் பெருவீரர்களாகவும் விளங்கியவர்கள் என்பது பழைய நூல்களால் தெரியலாம். அசோகன் சாஸனங்களில் தென்னாட்டரசருள் ஒருவராகக் கூறப்பட்ட சத்திய புத்திரர் இக்கோச வேந்தராகவே தெரிகின்றனர்.

" நாலூர்க் கோசர் நன்மொழி போலே
வாயாகின்றே"

" வாய்மொழி விளங்கிய சேன்விளங்கு நல்லிசை
வளங் கெழு கோசர் " அகம்-205

" ஒன்று மொழிக் கோசர் " அகம். 19-73

" கோசர் நன்மொழி போல வாயா கின்று "

" நன்றல் காலையும் நட்பிற் கோடா
. . . . பல்வேற் கோசர் " குறுந். 15

என்ற முன்னோர் கூற்றுக்களால் இவர்களது சத்திய விரதம் நன்கு விளங்குதலால் இவர்களையே அசோக சாஸனம் சத்யபுத்ரர் என்று கூறினதாக வேண்டும் என்று தோற்றுகின்றது.

இளங்கோவடிகள் சேரரைப் போலவே தங்கள் நாட்டில் பத்தினி தேவியைப் பிரதிஷ்டித்து வணங்கியவர்கள், பாண்டியன், சோழன், கோசன், இலங்கையரசன் என்று தம் நூன் முகப்பிற் கூறுவர். இது போலவே—அசோக சக்கரவர்த்தியின் முதற் சாஸனம் சோழர் பாண்டியர் கேரளபுத்ரர் சத்யபுத்ரர் இலங்கை யரசர் தாம்பபன்னி யாசர்களைக் கூறுதல் குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு கூற்றினும் ஏனையவரெல்லாம் ஒத்து வருதலால்

கோசர் என்று சிலப்பதிகாரம் கூறும் அரசர் அசோக சாஸனத்துக் கண்ட சத்திய புத்திரர் என்பதில் ஐயப்பட இடமில்லை. சரித்திர வறிஞர்கள் இச்சத்திய புத்ரர் ஆண்ட தேசம் துளு நாடாக தமிழாதாரந் தெரியாதே கருதியெழுதி வருவர். இக்கருத்து "செம்மற்கோசர் தோகைக் காவிற்றுளுநாடு" என்று மாமூலனார், துளுநாட்டைக் கோசர்க்குரியதாக்கிக் கூறுதலால் வலிபெறு கின்றது.

"பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான் மொழிக் கோசர் தோன்றி யன்ன,"

என்ற மாங்குடி மருதனார் வாக்கால், பழையன் அவையில் நான் மொழிக் கோசர் ஒருங்கு தோன்றிக் கலை சிறப்பித்தவர் என்பது தெரியலாம். "நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன" என்பதை 'நாற்கோசர் மொழி தோன்றியன்ன' என்று நச்சினார்க்கினியர் கூட்டிப் பொருள் கூறுவர். அது சிறவாமையால் நான்மொழி என்பது கோசர் நாடு அல்லது ஊராயிருக்குமோ என்று ஒரு சமயம் நான் கருதியதுண்டு. அக்கருத்து முற்றுப்பெறும்படி 'நான்மொழி நாடு' என்ற நாடு ஒன்று சாஸனத்தால் தெரிய வருதல் அறியத்தக்கது. நாமக்கல் குன்றில் உள்ள நரசிம்மப் பெருமாள் குகைக் கோயிலிற் கண்ட மறைந்த சாஸனமொன்றில் நான்மொழி நாட்டு விடுகாதன் வத்ஸராசன் என்றும் திருவாரைக்கல் என்றும் தொடர்கள் காணப்படுகின்றன. 'கொங்கிளங் கோசர்' என்று இளங்கோவடிகள் கூறுதற்கேற்ப, இந்நான் மொழிநாடு கொங்கு நாட்டு நாமக்கல் கல்வெட்டில் காணப்படுவது காணலாம். நான்மொழிநாடு என்பது உலக வழக்கில் நாமொழி நாடெனத் திரிதல் இயல்பேயாம்.

நான்மொழிநாடு

நாமக்கல்லுக்குத் திருவாரைக்கல் என்பது பழம்பெயரென்று அவ்வூர்ச் சாஸனங்களால் தெரிகின்றது. நான்மொழி நாட்டுடன் திருவாரைக்கல் என்று மேற்படி சாஸனத்துக் காணப்படுவதி னின்றும் நான் மொழி நாட்டில் அந்நாமக்கல் அடங்கியதாக வேண்டும் என்பது தெரியலாம். நான் மொழிநாட்டுக் குன்று என்ற பொருளில் நான் மொழிக்கல் என்று முன்பு வழங்கி வந்ததே இக்காலத்து நாமக்கல் என்று திரிந்ததோ என்று மேற்கூறியவற்றைக் கொண்டு கருதவும் இடமுண்டு. நான்கு மொழிகள் பேசப்பட்டுவந்த மக்களுள்ள நாடாகவேனும் நான்கு பாஷைகள் பேசிய கோசர் ஆண்டதாக வேனும் இருந்து இந்நாடு

அவ்வாறு பெயர் பெற்றது போலும். ஈசன் **கோசன்** (I.M.P 1070) கோசக்குடி (T.M. 61,250) எனச் சாஸனங்களில் வரும்பெயர்களால் இக்குடியும் குடியினரும் பிற்காலத்தும் அருகியிருந்தவாகத் தெரிகின்றனர்.

வாணர்

இனி, மகாபலியின் வமிசத்தவர்கள் கடைச்சங்க நாளில் விளங்கியிருந்தவர் என்பதும், சோழருடன் சம்பந்தம் புரிந்து வந்தவரென்பதும் சங்கநூலால் அறியலாகும். கிள்ளிவளவன் தேவியை "மாவலி மருமான் சீர்கெழு திருமகள்" என்று சாத்தனார் பாடுதல் அறியத்தக்கது. மகனைத் தேர்க்காலில் ஊர்ந்த மனுச் சோழன் மந்திரி, இவ்வமிசத்தவன் என்பதே முன்னமே குறிப்பிட்டேன். இதனால் இவர் தமிழ் நாட்டில் பழைமையாக விளங்கியவர் என்பது தெளிவாகும். இம்மாவலி மரபினரே வாண வமிசத்தரச ரெனப்படுவோர். இவர் சாஸனங்கள் திருவல்ல முதலிய பிரதேசங்களில் மிகுதியாக அகப்படுகின்றன. வாணகப்பாடி அல்லது வடுக வழி மேற்கு என்ற நாடு இவர்கட் குரியது. இவரது மரபிற் பிறப்பட்டவர்களே மதுரையை விட்டுப் பாண்டியர் ஒழிதற்குக் காரணம் ஆனவர்கள். இவர்களைப் பற்றிப் பின்பும் கூறுவேன்.

குமணன்

குமண வள்ளலைப்பற்றித் தமிழ்நாட்டில் அறியதாரில்லை. இவர் வழியினர் சிலரைக் குமணராஜன் என்ற பட்டத்தாற் சாஸனங்கள் கூறுகின்றன. இக்குமணவூர் கொங்குநாட்டுக் கொழுமம் என்று கருதப்படுகின்றது. இவ்வரசர் வமிசத்தவரைப்பற்றி விசேடமாக சாஸனங்களால் அறியப்படவில்லை.

மோரியர்

இனித் தமிழரசரல்லாதவர் பிறரும் சங்கநூல்களிற் கூறப் படுதல் காணலாம். அவருள் சிறந்தோர் மோரியர். நூற்றுவர் கன்னர் முதலியோ ராவர். மோரியர் தென்னாட்டிற் படையெடுத்த செய்தியைச் சங்கநூல்கள் கூறுவதுபற்றி நான் முதலில் செங்குட்டுவன் சரிதத்தில் எழுதியதும் அவ்வரசர் யாவர் என்பதுபற்றி விவகாரம் நடந்து வருவதும் அறிஞர் பலரும் நன்கறிவர்.

தமிழ்நாட்டை யடுத்த மைசூர்ப் பிராந்தியம் வரை தங்கள் ஆட்சியைத்தாபித்து நின்ற ஆதிமோரியர் தமிழ்நாட்டையும் அடிப்படுத்தச் செய்த முயற்சியே சங்க நூல்கள் கூறும் மோரியர் படையெடுப்பு என்று கருதப்படுகின்றது. இது தனியாகப் பேசுதற்குரியது.

இனி நூற்றுவர். கன்னர் என்போர் சாதகர்ணி என்பவரென்று ஆதியிற்கண்டு கூறியவர், கனகசபைப்பிள்ளையவர்களே. செங்குட்டுவன் பத்தினி தேவியைப் பிரதிஷ்டித்த காலத்தில் அவன் நட்பினரான அரசருள் இலங்கைக் கயவாகுவும் மாளுவ வேந்தரும் அங்கு வந்திருந்தவரென இளங்கோவடிகள் கூறுவர். இம்மாளுவ வேந்தரென்போர். செங்குட்டுவற்கு நட்பினராய் வடநாட்டியாத்திரையில் அவ்வரசனுக்கு உதவிபுரிந்த நூற்றுவர் கன்னரேயாகவேண்டுமென்று நான் செங்குட்டுவன் சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன். இக்கருத்தை அறிஞர் பலரும் ஏற்றுக் கொண்டனர். ஆகவே நூற்றுவர், கன்னர்கள் மாளவ தேசத்தை யாண்ட அரச வகுப்பினர் என்பதில் ஐயமில்லை.

கண்ணகி வழிபாடு

நண்பர் T. G. ஆராவமுதய்யங்காரவர்கள் மாளவ தேசத்தின் கீழ்ப்பகுதியில் பத்தினி தேவியின் கோயிலொன்று உள்ள செய்தியைப்பற்றித் தாம் ஆங்கிலத்தில் எழுதி வெளியிடுவித்த காவேரி, முகரி சங்ககாலங்கள் என்ற நூலின் 41-42-ஆம் பக்கங்களிலே விரிவாக எழுதியிருத்தல் அறியத்தக்கது. இக் கோயில் நாகோட் சமஸ்தானத்தில் மலைக்காட்டுப் பிரதேசத்தில் தனியாக உள்ளதென்றும் இதனிற் காணப்படும் எழுத்தால் அது பத்தினி தேவி கோயில் என்று அறியப்படுகிறதென்றும் இக்கோயிலில் இருந்த பழைய தெய்வம் போய்ப் பத்து பதினோராம் நூற்றாண்டிற்குரிய ஜைன சம்பந்தமான உருவங்கள் இப்போது அங்கு உள்ளன என்றும், அப்பக்கத்தார் தென்னாட்டுப் பத்தினி வணக்கம் பற்றிய வழக்குகளைத் தெரிய இடமில்லாமையால் பலவாறாக இக்கோயிலைப் பற்றிக் கூறுவர் என்றும் பிறவாறும் இக்கோயில் பற்றிய பழைய ஆதாரங்களையெல்லாம் கொண்டு ஐயங்காரவர்கள் அக்குறிப்பில் நன்கு விளக்கியிருக்கிறார்கள். இது அருமையான செய்தியன்றோ? இவ்வாறே இலங்கையினின்றும் பிரிடிஷ் மியூசியத்துக்குக் கொண்டு போகப் பட்டுள்ள பத்தினி தேவியின் உருவத்தின் மாதிரியை

நான் சேரன் செங்குட்டுவன் சரித்திரத்தில் வெளியிட்டிருக்கிறேன். செங்குட்டுவனது பத்தினி தேவி பிரதிஷ்டையில் வந்திருந்த—

"குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்"

செங்குட்டுவனுக்கு அருள்புரிந்தாற் போல எங்கள் நாடுகளிலும் எழுந்தருளி அருள்புரிய வேண்டுமென்று பத்தினி தேவியைப் பிரார்த்திக்க "தந்தேன் வரமென்று எழுந்ததோர் குரல்" என்று பத்தினி அருள் புரிந்ததாக இளங்கோவடிகள் கூறுகின்றார். இதனால் பத்தினி தேவியின் வழிபாடு இலங்கை மாளவ தேசங்களிலும் அமைந்திருந்தன என்பது பெறப்படத் தடையில்லை. ஆகவே, மேற்கூறியபடி மாளுவ நாட்டிற் கண்ட இப்பத்தினி தேவி கோயில் அந்நாட்டரசரான நூற்றுவர் கன்னரால் வழிபடுவதற்குப் பிரதிஷ்டிக்கப்பட்டதென்றே நாம் கொள்ளக் கூடியதாகும். இனி, இலங்கையிற் பிரதிஷ்டை பெற்ற பத்தினியுரு சீமையில் பிரிடிஷ் மியுஸியத்துள்ளதாம். மேற்கூறிய பத்தினியுருவங்களிரண்டும் 5ம் நூற்றாண்டு குப்தர் காலத்துச் சிற்பத்திறமுடையனவாகவே, அத்துறைவல்லவர்கள் கருதுகின்றனர். இப்பத்தினி வணக்கம் இலங்கையில் ஒருகாலம் பரவியிருந்ததென்பதும், அது வெவ்வேறு கதைகளுடைய தெய்வங்களாகப் பிற்காலத்து மாறியிருப்பதும்—ஸிலோன்—ஆண்டிகுயிடீஸ் பத்திரிகையின் முதற்றொகுதியுள் "பத்தினிதேவி" என்ற விஷயத்தால் அறியலாம். யாழ்ப்பாணத்து நாவாலிக்கலை யோடையில் கண்ணகியம்மன் கோயில் என்பதொன்று உள்ளது. இவ்வம்மனைப்பற்றி—

"மலியா ணவமலி மாயையை நீக்கி மலர்ப்பதத்தைத்
துலியா தரவோடு தோத்திரஞ் செய்யச் சுகந்தருவாய்
எலியா டரவொடு கீரியொன்றாகி யினிதிசைத்து
கலியாண மாயுறை, யுங்கலை, யோடையிற் கண்ணகியே"

என்ற பாட்டொன்றும் வழங்குகின்றது. இலங்கையிலன்றித் தமிழ்நாட்டினும் பத்தினிதேவி வணக்கம் பரவியிருந்தவற்றின் குறிகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. நாகப்பட்டினத்துக்குப் புறம்பே யுள்ள மரத்தடி யொன்றைப் பத்தினிதேவி என்று கொண்டு வணங்கும் வணக்கம் பெரிதாய் உள்ளது. கொடுங்கோளூர்ப் பகவதி—இப்பத்தினிதேவியே என்பது—அத்தெய்வத்துக்கு வழங்கும் "ஒற்றைமுலைச்சி" என்ற பெயரால் தெளிவாகும்.

பாலக்காட்டுக் கணித்தாகக் கல்லாயம் குளத்துக் கரையில் கண்ணகி கோயிலொன்று உண்டு. சிவகெங்கைச் சீமையைச் சார்ந்த நாட்டரசன் கோட்டையம்மன் இப்பத்தினியாகவே கருதப்படுகின்றாள். இவ்வாறே எல்லா விடங்களிலும் இப்பத்தினி வணக்கம் இருந்ததே. இப்பத்தினி இப்போது பலவிடங்களில் பகவதியாகவும் சிலவிடங்களில் திரௌபதையம்மனாகவும் மாறியது "ஐவர்க்குந் தேவி யழியாத பத்தினி" என்றபடி பத்தினிகளுள் திரௌபதி ஒருத்தி யாதலால் கண்ணகியாகிய பத்தினியை அவளாகப் பின்னோர் கருதி அது அடியாக திரௌபதை சம்பந்தமான சரித்திரங்களை யெல்லாம் வழங்க லாயினர் என்பதில் ஐயமில்லை.

இனி, சங்க காலத்து விளங்கிய பழையநாடுகள், ஊர்கள் பல சாஸனங்களால் அறியப்படுகின்றன. அவற்றுட் சில வருமாறு.—

நாடுகள்.

நலங்கிள்ளி நல்லூர்க் கூற்றம்.—இது திருவிடைமருதூர்ப் பிரதேசத்துக்கு, மதிரை கொண்ட பரகேசரிவர்மன் காலத்து வழங்கிய பெயரென்று தெரிகிறது. (I.M.P. p. 1269)

பெருநற்கிள்ளி சோழநாடு.—இது புதுக்கோட்டைச் சீமைத் திருவரன்குளச் சாஸனத்தில் அப்பகுதியுடைய தலைவனைப் பெருநற்கிள்ளி நாடாள்வான் என்று கூறுதலால் அப்பிர தேசத்துக்கு இப்பெயர் வழங்கியது போலத் தோன்றுகிறது.

ஓய்மாநாடு.—"ஓய்மா நாட்டுக் கிடங்கல்" (ib'd) என்பது சாஸனம். இவ்விரண்டும் நல்லியக் கோடனுக்குரிய நாடும் ஊருமாம் என்பது சிறுபாணாற்றுப்படையால் தெரிந்தவை. இக்கிடங்கில் இன்றும் அப்பெயருடன் திண்டிவனத்தைச் சார்ந்துள்ளதாதலால், ஓய்மாநாடு திண்டிவனப் பிரதேசமே என்பது தெரியலாம்.

[S.I.I., iii,146, 200 VI 381, I.M P. p. 156]

வெளிமானாடு.—வெளிமா னென்பான் பழைய வேளிர் தலைவருள் ஒருவன். (அகம்-208 ; புறம்-162) ; இவனாடு தொண்டை மண்டலத்தில் ஊற்றுக் காட்டுக் கோட்டத்தைச் சார்ந்தது. வெளி மானல்லூர் என்பதொன்றும் இக்கோட்டத்துள்ளதே.

(S.I.I. ii, 345, 352)

பல்குன்றக்கோட்டம்.—நன்னன் வேண்மானுடையதென்பது மலைபடு கடாத்தால் தெரிந்தது. இக்கோட்டத்தில் திருப்பதி முதலியவை அடங்கும். (S.I.I. i, p. 105)

மிழலைக் கூற்றம்.—வேள் எவ்வியுடையது. இது சாஸனங் களில் மிகப்பயில்வது.

முத்தூற்றுக் கூற்றம்.—இது பழைய வேளிருடையது. பாண்டி நாட்டிலுள்ளதாகச் சாஸனங்கள் கூறும்.

வைகாவி நாடு.—இது வேள் எவ்விக்கும், வேள்பேகனுக்கும் உரியது. வையாவிக் கோப்பெரும் பேகன் என்பர். இது பழனி மலைப்பிரதேசமாகும்.

பன்னாடு.—பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி, என்ற பழைய அரசன் பெயரால், இந்நாடு பாண்டியனால் ஒருகாலத்து வெல்லப்பட்டமை தெரியலாம். இதனுள் அடங்கிய ஊரைச் சேரமான் அனுமதி பெற்று இரவிதத்தன் என்பவன் பிராமணன் ஒருவனுக்குத்தானம் பண்ணினான் என்று குமாரலிங்க சாஸனடி கூறும். (Ind. An. Vol. XVIII, p. 367)

செங்குட்டுவனால் எறியப்பட்ட கொடுகூர் இப்பன்னாட்டின் அடங்கியதே. இது மைசூர் ராஜ்யத்திலுள்ள தென்பகுதியாகும். இப்போது புன்னாடு என்று வழங்குகிறது. பன்னாடு என்று குண்டூர் ஜில்லாவில் ஒரு தாலூகா உண்டு. இதன்கண் வீரர்கள் பலர் விளங்கி யிருந்தனர். ஆனால், இது பாண்டியனுக்கு எட்டாக்கையில் உள்ளது. ஒருகால் இதுவும் அப்பாண்டியனால் வெல்லப்பட்டதாகலாம்.

ஊர்கள்.

அந்துவனல்லூர்.—இது திருவாலந்துறை ஆண்ட நல்லூர்க்குப் பெயராகச் சாஸனங் கூறும். (S.I.I. iii., 285) அந்துவனார், அந்துவங்கீரன் முதலிய புலவர்களையும், அந்துவஞ் சாத்தன் என்ற தலைவனையும் இவ்வூர் ஞாபகப்படுத்துகின்றது.

ஒல்லையூர்.—தென்கோனாட்டில் உள்ளது. ஒல்லையூர்க் கூற்றம் என்று சாஸனங்களிற் காணலாம். இவ்வூரே பூதப்பாண்டியனால் கைப்பற்றப்பட்டதாம். (I.M.P. p. 1648)

கச்சிப்பேடு.—கச்சிப்பேடு நன்னாகையார் என்பதனால், பேடு என்ற சொல்லுடன் காஞ்சி இணைந்து வழங்குதல் தெரியலாம். இவ்வாறே சாஸனங்களில் மிகுதியும் வழங்குகின்றது. பேடு அல்லது பேட்டு என்பதே பிற்காலத்துப் பட்டு பேட்டை என வழங்குவதென்றும் தெரியலாம். செங்கற்பட்டு முதலியன காணக.

அழிசி காடு.—"அழிசியம் பெருங்காடு" என்பது அக நானூறு (87) அழிசியார்க்காடு என்றும் அந்நூலில் வருவதால் ஆர்க்காடு அழிசிக்குரியதென்று தெரியலாம். "அழிசி காட்டன் றெதிர்ந்தார்' என்ற பழம் பாடற் றொடரில் உள்ளவாறே சாஸனங்களிற் பெயர் பெற்றிருத்தல் அறியத்தகும்.

(S.I.I. iii, 271-2)

நல்கூர்.—நல்கூர் வேள்வியார் என்ற சங்கப் புலவர் பெயரால் இவ்வூருண்மை தெரியலாம். இது கோனாட்டில் பட்டத்தான் மங்கலம் என்ற பேரிட்டு மூன்றும் நந்திவர்மனால் வேள்வித்துறை முற்றிய பார்ப்பனர்க்குப் பிரமதேயமாக அளிக்கப்பட்டதென்று புதியவாகக் கண்ட தாமிர சாஸனங்கள் கூறுகின்றன. (செந். 23, 196) (See Mythie Society) இவ்வூர்ப் பிராமணர்கள் யாகத் துறை முற்றியவர் என்பதற்கு ஏற்ப, இவ்வூர்ச் சங்கப் புலவர் நல்கூர் வேள்வியார் என்ற பெயர் பெற்றிருத்தல் குறிப்பிடத் தக்கது.

மயிலாப்பில்.—மயிலாப்பூரை 'மயிலாப்பிற் கொற்றன்' என்று நூல்கள் வழங்குமாறே சாஸனங்கள் கூறுதலை மிகுதியுங் காணலாம். "பூலியூர்க் கோட்டத்து மயிலாப்பில் வியாபாரி" என்பது சாஸனத் தொடர். ("மயிலாப்பு") (S.I.I. V. 249)

உரோடகம்.—உரோடகத்துக்கந்தரத்தனார் என்ற புலவர் பெயரால் உரோடகம் என்ற ஊருண்மை தெரியலாம். "செயங் கொண்ட சோழமண்டலத்து மணவிற் கோட்டத்து உரோடகத்து" என்று இதனையே சாஸனமுங் கூறுகின்றது. இப்போது திருக்கழுக் குன்றத்துப் பக்கத்தில் உரடகம் என்று வழங்குகின்றது. இது ஓரோடகம் என்றும் திரிந்து வழங்கும். (அகம் 23)

பெருங்கோழியூர்.—பெருங்கோழியூர் நாய்கன் மகள் நக்கண்ணை யார் என்ற பெண்பாற் புலவர் பெயரால் புறம்: இவ்வூரின் பழைமை தெரியலாம். இது புதுக்கோட்டைச் சீமையிலுள்ள

பெருங்களூர் என்ற ஊரேயாம். இவ்வூர்ச் சிவன் கோயிலிற் காணும் சாஸனங்களில் "தென்பனங் காட்டு நாட்டுப் பெருங் கோழியூர்க்குலோத்துங்க சோளீசுவரமுடைய நாயனர்" என்று கூறப்படுவதனால் இதனை அறியலாம். ஆகவே, பெருங் கோழியூரே பெருங்களூர் என்று திரிந்ததென்பது வெளிப்படை.

குராப்பள்ளி.—குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திரு மாவளவன் என்பதனால் அவ்வளவன் குராப்பள்ளி என்ற ஊரில் இறந்தவன் என்பது விளங்கும் (புறம்) "கங்கை கொண்ட சோழவள நாட்டுக் குத்தவாதி நாட்டுக் குராப்பள்ளி என்ற சாஸனத் தொடரால் இவ்வூர் சோழநாட்டிலுள்ளதென்பது பெறப்படுகின்றது.

(S.I.I. iv, 448)

வெஃகா.—காஞ்சிபுரத்தில் வெஃகா என்ற பெருமான் பள்ளி கொண்ட தலம் பெரும்பாணாற்றுப் படையுட் குறிப்பிக்கப்படுதல் காணலாம்: இது அந்நகரில் உள்ள யதோத்தேகாரி சந்நிதியாம். இத்தலம் பொய்கையார் முதலிய சங்ககாலத்துத் திருமாலடியார் களால் மிகுதியும் தம் திருவந்தாதிகளிற் புகழப்பட்டுள்ளது. இதற்கு அப்பெயர் வழக்கு வேகவதி என்ற நதியடியாக வந்த தென்பது—"சேயாற்றினாலும் வெஃகாவினாலும் நிரையனேரி யாலும் . . . ஆற்றுக்காலும் வெள்ளக்காலும் தோண்டியுண்ணப் பெறுவார்களாகவும்" என்ற பழைய கசகுடிப் பல்லவ சாஸனத் தால் அறியப்படுகின்றது. (S.I.I. II, 352)

இவ்வாறே சங்ககாலத்து நாடு, ஊர், ஆறு முதலியவற்றின் உண்மையுருவங்களும் இடங்களும் வரலாறுகளும் எண்ணி றந்தவை சாஸனங்களினின்று அறியத் தடையில்லை. ஆயினும், உதாரணமாக என் பார்வைக் கெட்டியவற்றிற் சிலவே இங்கே காட்டப்பட்டன. இனிச் சங்ககாலத்துக் குடி தொழில்களடியாக வழங்கிய பெயர்கள் சாஸனங்களால் விளங்கு முறையையும் கூறுவேன்.

காப்பியர்.—தொல்காப்பியர் என்ற ஆசிரியரின் பெயர்ப் பொருளாக—"பழைய காப்பியக் குடியில் உள்ளோன்" என்று உரையாசிரியர்கள் பொருள் கூறுதலாலும், "காப்பியத்தொல் குடி" என்று இளங்கோவடிகள் பாடுதலாலும் வெள்ளூர்க் காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார், காப்பியஞ் சேந்தனார் முதலாகப் புலவர்கள் விசேடிக்கப் படுதலாலும் காப்பியம் என்பது பார்ப்பனரது பழைய குடியுள் ஒன்றென்பது விளங்கும்.

கவி என்று பெயர் பெற்ற பிருகு முனிவரின் மரபினர் காவ்யர், பார்க்கவர் என்று கூறப்படுவதை வடமொழித் தொன்னூல்களால் தெரியலாம். பிருகு முனிவரின் பத்தினியைக் காவிய மாதா என்பர். வான்மீகிமுனிவரும் கவியாகிய பிருகுவின் புத்ரராதலால் சுக்கிரனுக்கு காவ்யன் என்பது பெயர்; இதனையே காப்பியன் என்று சுக்கிரன் பெயராகப் பிங்கல நிகண்டு கூறும். காவ்யராகிய பார்க்கவகுலத்தில் உதித்த சமதக்கினியின் புதல்வராகத் தொல்காப்பியர் கூறப்படுவதும், அவர்க்கு வழங்கிய பெயர் குடிபற்றியதே என்பதற்குச் சிறந்த சான்றாகின்றது. காப்பியன் ஆதித்தன் (S. IV,277) காப்பியன் கன்ஹ சர்மன் எனச் சாஸனங்களில் இக்குடி பயிலுதல் காணலாம்.

பாரதாயன்.—இது நெடும்பாரதாயனார் என்ற சேரன் புரோகிதர் பெயர் பதிற்றுப் பத்துட் கூறப்படுதால் இப்பெயர் வழக்கு விளங்கும். பாரத்து வாசன் என்பதன் திரிபு இது. இக்குடியினரை பாரதாயக்குடி, பாரதாயன் என்று சாஸனங்கள் மிகுதியும் வழங்குகின்றன, (S.I.I, IV, II ஷை 157 — பாரதாயின்).

மாடலன்.—சிலப்பதிகாரத்தில், கோவலன் நண்பனான அந்தணனும், புறநானூற்றில், கோனாட்டு எறிச்சலூர் மதுரைக் குமரனார் என்ற புலவரும் மாடலன் என வழங்கப்படுகின்றனர். இது பார்ப்பனரது பழைய குடியுள் ஒன்றென்பது, போதாயனம், யாஜ் ஞவல்கியங்களில் கூறப்படும் 18 கணங்களின் வகையால் தெரியலாம், "மாடல் கோத்திரத்து ஹிரண்யகேசி சூத்திரத்து" எனச் சாஸனங்களிற் பயிலுந் தொடராலும், மாடலன் பாண்டந் தாமோதரன் (S.I.I [illegible] 3[illegible]7) மாடலன் கருடன் கண்ணன்; மாடலன் குன்றன் நக்கன் (ஷை III 316) என்பன முதலிய சாஸனப் பெயர்களாலும் இச்செய்தி தெளிவாம்.

காமக்காணி.—காமக்கணி நப்பாலத்தனார், காமக்கணி நப்பசலையார் என்ற சங்ககாலத்துப் புலவர் பெயர்களில் இச்சொல் விசேடிக்கப்படுதல் தெரியலாம். காமக்கண்ணி என்று பாடங்கொண்டு இது பெண் பாலார்க்கு உரியதாய்க் காமாட்சி என்ற பொருளில் வந்ததாகக் கூறுவதுண்டு. ஆனால், காமக்காணி நப்பாலத்தனார் என ஆண்பாலார்க்கும் இது வழங்குதலால் இப் பொருளில் ஐயுற வுண்டாகக் கூடியது, காமக்கணி என்றும் இது பிரதிகளில் வழங்கும். இதற்கு விரும்பிய விஷயத்தை சோதிடத்தாலறிந்து கூறுவோன் என்றேனும், ஆட்வர் அல்லது

மகளிர்க்கு அவர் விரும்பிய காதலரை அடைதற்கும் மணமுதலிய வற்றுக்கும் நல்ல காலத்தை யறிந்து கூறும் நிமித்தகன் என்றேனும் பொருள் கொள்ளலாம்.

"குறிதிரி பறியா அறிவனை முந்துறீஇ...
மாயப் புணர்ச்சியு மெல்லா ருடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்" (கலித்— -277)
"முத்தேர் முறுவலாய் நாமணம் புக்கக்கால்
இப் பொழுது பொழுதென்றது வாய்ப்பக் கூறிய
அக்கடவுள்" (கலித் 280)

என்ற கலியடிகளில், காமக்கணியாகிய சோதிடரைச் சார்ந்து தலைவன் தலைவியர் நிமித்தங் கேட்கு முறை விளங்கும். யாழ் வாசினையால் சீவகனைத் தத்தை அடைவதற்குரிய நன் முகூர்த்தத்தை விருச்சிகன் கூறின செய்தி சிந்தாமணியிற் கூறப் படுவதுங் காண்க, வெறிபாடிய காமக் கணியார் என்ற புலவ ரொருவர் அகநானூற்றிற் காணப்படுகின்றார். இவர் பெயராலும் பாடல்களாலும் மேற்கூறிய தொழிலே அவர் கொண்டிருந்தவ ரென்பது தெரியலாம். ஆகவே, காமக்கணி என்ற பாடமே— ஏற்பதாம். காமக்கண்ணி என்று திரிந்தவாறே இச் சொல் எட்டாம் நூற்றாண்டு முதல் சாஸனங்களில் காமக்காணி என்ற திரிபுடன் வழங்குகின்றது.

1. கொற்கை கிழான், காமக்காணி நற்சிங்கன்
2. கவுதமன் ஜாதவேதன் கப்பி காமக்காணி மாதேவன்.
3. காமக்காணி இளைய சீராமன் (ஷை) (S I,I, VI 17,)
4. காமக்காணி சேந்தன் பிராமணி (S.V. 227)

என்பவற்றால் இது விளங்கும். இதனால், காமக்காணி என்பது சோதிட கணனம்வல்ல பார்ப்பனர்க்குப் பழையகாலத்து வழங்கிய சிறப்புப் பெயரென்பது பெறப்படும்.

மசாத்துவாணிகன் மசாத்துவான்.—இப் பெயர்கள் கோவலன் தந்தைக்குரிய தென்பது பலரும் அறிவர். "பூதமங்கல முடையான் மாசாத்துவாணிகன் சொக்கன் (S.I. .V 15 மாசாத் துவான் (Tam. and Sanc. Insc. p. 11-17) எனச் சாஸனங் களிலும், இவை பயிறல் காணலாகும். இதனால், கோவலன் முன்னோர்க்கு வழங்கிய குடிப்பெயர் பிற்காலத்தும் பயின்று வந்த தென்பது பெறப்படும்.

வண்ணக்கன்.—வடமவண்ணக்கன் தாமோதரனுர், ஷை பெருஞ்சாத்தனுர், கம்பூர்கிழார் (நற்-294) முதலிய புலவர் பெயர்களால், இப் பெயர் வழக்கு அறியப்படும். இவ்வாறே சாஸனங்களும் " வண்ணக்கன் வயன சுந்தரன் " (S. III. 287) வண்ணக்கன் முள்ளிக் குறும்பிலுடையான் (S. V. 240) என வழங்குகின்றன. வண்ணக்கன் என்பது பொன் மாற்றறிய வல்லான், நாணய சோதகன் என்ற பொருளுடையது. இவ்வாறு பொன் மாற்றுக்காணும் முறைப்பற்றிப் பராந்தகன் காலத்து உத்தரமேலூர்ச் சாஸனமும் கூறும். (S. VI. 149)

சாக்கையர்.—சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று திரும்பிய காலத்தில், தன்கோயிலுட் புகுந்து ஓலக்கமண்டபஞ் செல்லுமிடையே, பறையூர்க் கூத்தச் சாக்கையன் ஆடிய கொட்டிச் சேதம் என்ற சிவபிரான் கூத்தைக் கண்டு களித்தான் என்று இளங்கோவடிகள் வருணிக்கின்றுர். இதனுட் கண்ட சாக்கையர் என்பவர் அரசரை நடனத்தால் மகிழ்விக்கும் பழைய மரபினர் என்றும், மலையாள நாட்டில் சாக்கியர் என்று இன்றும் அத்தொழில் உடையராய் உள்ளன ரென்றும் அன்னோர் ஆடும் கூத்தின்வகை இன்ன வென்றும் நான் முதன் முதற் கண்ட செய்திகளை இரண்டு வருஷங்கட்கு முன் செந்தமிழில் விரிவாக எழுதியிருக்கிறேன். இச் சாக்கையர் மலை நாட்டு மட்டுமன்றி முற்காலத்தில் தமிழ் நாட்டிலும் விளங்கியவர்கள் என்பது சாஸனங்களால் அறியப்படுகின்றது. சோழன் ஆதித்ய கரிகாலன் காலத்தான திருவிடைமருதூர்ச் சாஸன மொன்றும் அவ்வூர்ப் பெருமானடிகள் திருமுன்பு தைப்பூச முதலிய திருநாள்களில் ஏழு ஆரியக் கூத்துக்கள் ஆடுவதற்குத் திருவெள்ளறைச் சாக்கை என்பானுக்கு அதிகாரிகள் நாடக சாலையிலிருந்து நிபந்தஞ் செய்தார்கள் என்று கூறுகின்றது. (S. III. 379; V. 302) இதனுல், மேலைநாட்டுச் சாக்கியர் போலவே, பழைய சாக்கையர் தெய்வ சந்நிதிகளிலும் ஆரியக் கூத்தாடியவர்கள் என்பது விளங்கும். முதலிராஜேந்திரன் காலத்துச் சாஸனங்களிலும் இச் சாக்கைக் கூத்தைப்பற்றிக் கூறப்படுதல் காணலாம் (Ep Ind. 1915 p. 98) முதலிராஜ ராஜனது தஞ்சைச் சாஸனங்களில் (S.I. I. ii. 278) பாணன் உத்தமன் ஆற்றியான அரிகுல கேசரிச் சாக்கை பாணன் பல்லவன் சாக்கை என்று வருவனவற்றுல் இன்னோர் பாணர் என்ற ஆடல் பாடல் வல்ல பழைய தமிழ்மாபினராகக் கருதப்

பட்டவர் என்று தோற்றுகின்றனர். ஆரியம், தமிழ் என்ற இருவகைக் கூத்துச் சிலப்பதிகாரத்துக் கூறப்பட்டவாறே ஆரியம் பாடுவார் தமிழ்பாடுவார் எனச்சாசனமுங் கூறும், S.V.275 இவற்றுளொன்றை இங்குக் கூறப்பட்ட கூத்தாம்.

சாந்திக் கூத்து.—கோயிலில் கடவுளர் திருமுன்பு கூத்து நிகழ்த்தற்குக் கணிகையர்க்கு நிபந்தஞ் செய்துள்ள செய்தி சாஸனங்களிற் கூறப்படுதல் காணலாம், (I.M.P. p. 1663). சாந்தி வினோதம் எனக் கூத்து இருவகைப்படும் என்பதும், அவற்றுள் சாந்திக் கூத்தென்பது, தலைவன் சாந்தனாக ஆடும் ஆட்டம் என்பதும் அதன்வகையும் சிலப்பதிகாரத்தால் தெரியலாம். திருவொற்றியூர்க் கோயிற் பதியிலாள் ஒருத்தியால், ஆவணித் திருநாளிரவு மூன்றும் ராஜராஜ சோழன் காணச் சுவாமி திருமுன்பு அகமார்க்க முறையில் பாடியாடப் பெற்றதென்று அவ்வூர்ச் சாஸனம் கூறுகின்றது (I.M.P .p. 452). அகமார்க்க மென்பது, அகப்பொருட் சுவைபயப்ப நிகழ்த்தப் படுவதென் பதும், சாந்திக்கூத்தில் ஒருவகை என்பதும் சிலப்பதிகாரத்தால் அறியலாம் (பக். 80). இக்கூத்துக் கற்பிக்கும் ஆசிரியனை, சாந்திக் கூத்தன் விஜய ராஜேந்திர ஆசாரியன் (S. II 206) என்று சாஸனம் கூறும். இவ்வாறு கூத்து நிகழ்த்தும் மகளிரை— பதியிலார், தளியிலார், தலைக்கோலி—என்று சாஸனங்கள் மிகுதியும் வழங்குகின்றன. "இவ்வூர்ப்பதியிலாரில் கூத்தன் நம்பிராட்டியான . . . தலைக்கோலியேன்", "மணஞ் செய்த பெருமாள் தலைக்கோலி" "உரிமையழகிய பெருமாள் தலைக்கோலி" எனக் காண்க (S. II, V. 145, 154 I.M.P, 454). பதியிலார் தளியிலார் என்பன, பதிக்குரிய மகளிர், கோயிற்குரிய மகளிர் என்னும் பொருள்படும். நியாயங்களிலார், ஊரிலார், படைகளி லார் (S ii 99, 104, 105) என்பவற்றிற் போல் இல் ஏழாவது இடப் பொருள் குறிப்பதேயாம். "அரசிலா ரில்வழியில்லை" என்ற முன்னோர் வாக்கினும் இவ்வாறே வருதல் காண்க. இவருள் தலை கோலி ஆடிமுதிர்ந்த கணிகை என்ற பொருளுடையது. அங்ஙனம் பேர் பெற்றவர்க்குத் தலைக் கோல் என்பது ஒரு பட்டம் என்பது சிலப்பதிகாரத்தால் அறியலாம்.

இனி, பழைய தமிழ்மக்கள் பெயர் தந்தை பெயருடன் இணைந்து சாத்தங் கொற்றன் கண்ணங் கூத்தன் என்று வழங்கின என்பது முன்னூல்களால் தெரிதல் போலவே, சேந்தம்பூதன் (S. IV. 121) சங்கரஞ் சாத்தன் (T.A.S. 140) என்று

சாசனங்களிலும் வழங்குதல் காணலாம். மலையாளப் பக்கத்துத் தமிழ்ச் சாஸனங்களாயின இவை மிகுதியாகக் காணப்படும். (T.A.S. ii, 177, S.V. 82, S. IV. 150, 160). இனிப் பழைய புலவர் பெயர்களுள் "மதுரை பாலாசிரியர். நப்பாலத்தனார் அகம்-172) பாலாசிரியன் நற்றுமனார் (92), மதுரையிளம் பாலாசிரியன்சேந்தங் கூத்தனார் (102)" எனப்புலவர்க்குப் பாலாசிரியன், இளம்பாலாசிரியன் என்பன சிறப்புப் பெயர்களாக வழங்கியிருத்தல் தெரியலாம். பாலர்க்கு ஆசிரியன், சிறு பாலர்க்கு ஆசிரியன் என்பன இவற்றின் பொருளாகும். இப் பெயர்களைப் பிற்காலத்தும் அந்தணர் பலர் கொண்டிருந்தனர் என்பது—

சாத்தமங்கலத்துப் பாலாசிரியன் இலக்குவணன் (S. III. 154)
சாந்திப் பாலாசிரியன் வீரநாராயணன் (S. III. 154)
பாலாசிரியன் ஸ்ரீராகவன் (S.V. 507)
பாலாசிரியன் சண்டன் (S.V. 283)

முதலியவற்றால் அறியப்படும். இவற்றுள் ஒன்று பாலாபீரயன் என்று வடமொழியுருவமாகக் கூறுகின்றது (S.V. 507). இது பாலர்க்குச் சார்பானவன் என்ற பொருள்பயக்கு மேனும், கற்பிப்பவன் என்ற பொருள்படும் ஆசிரியன் என்பதின் சிதைவே என்னத் தடையில்லை.

இனி, பழைய காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்றவாறு பழைய அரசர்கள் விசேடிக்கப்படுதலைப் பலரும் அறிவர். புகழ்ச் சோழநாயனாரை கருவூர்த்துஞ்சிய புகழ்ச் சோழர் என்று திருத்தொண்டத் தொகை கூறுதலுங் காண்க. இதனுள் துஞ்சிய என்பதற்கு ஆதியில் தூங்கிய என்று பொருள் தந்தனர் கனகசபைப் பிள்ளையவர்கள் (S. III 24) பின் சாஸனங்களில் தொண்டைமானாற்றூர்த் துஞ்சிய தேவர் என முதலாதித்த சோழனும் (S. III 290), ஆனை மேற்றுஞ்சின உடையார் என ராஜாதித்த சோழனும் (S.III 378-386) சாஸனங்களில் வழங்கப்பட்டதினின்று துஞ்சிய என்பது இறந்த என்பதன்றே பொருள் தெளியலாயிற்று. இச் சோழரிருவரும் அவ்விடங்களில் சிறந்தவர்களே. இதனால், பாண்டியன் அரசுகட்டிலிற்றுஞ்சிய நெடுஞ்செழியன் என்பது, கோவலனுக் கிழைத்த கொடுமை நினைந்து சிங்காதனத்திலே உயிரைவிட்ட நெடுஞ்செழியன் என்ற பொருள் பயக்கும்.

இனிச் சங்ககாலத்து வழக்குகள் பலவும் சாஸனங்களால் அறிய இடமுண்டு. நிரை கோடல், நிரைமீட்சிகளிலும், பிற போர்களிலும் இறந்த வீரர்க்கு நடுகல் நடும் வழக்குப் பற்றி முன்னமே கூறினேன் (செந் 3-13-174 பக்கங்கள்). இவ்வாறே வஞ்சினம், தொறுக் கொள்ளல், உயிர்ப்பலி முதலிய புறத்துறை கட்குரிய செய்திகளைச் சாஸனங்களில் விசேட மாகவே தெரியலாம். நெல்லூர் ஜில்லா, போலூர்த் தாலூகா, மல்லம் என்ற ஊரின் கடைவீதியில்நிற்கும் கல்லொன்றில் வீரனொருவன், தன் கை வாளால் தன்தலையையே அரிந்து தன்னிரண்டு கைகளாலும் அதனை ஏந்திநிற்கும் உருவமும் அத்தகை வீரச் செயற்காக அவனை வழிபடுதற்கோ அல்லது அவன் குடும்பத்தார் பொருட்டோ பூமியளிக்கப்பட்ட செய்தியும் வரையப் பட்டனவாக உள்ளது (I.M.P. p. 1035).

இவ்வீரக்கல்,—

"ஆர்த்துக் களங்கொண்டோ ராரம ரழுவத்துச்
சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென
நறபலிப் பீடிகை நலங்கொள வைத்தாங்கு
உயிர்ப்பலி யுண்ணும் பீடிகை" என
இளங்கோ வடிகளும் (சிலப்-p-142-3)
"அடிக்கழுத்தி னுடன்சிரத்தை யரிவராலோ
அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைத் துதிக்குமாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்குமாலோ" எனச்

செயங்கொண்டாரும் (கலிங்-கோயில்-15) பாடியவற்றின் உண்மையை வெள்ளிடை மலைபோல் விளக்கவில்லதாம்.

இனிச் சொல் வழக்குகளாகச் சங்க நூல்களில் அறியப் படுவனவற்றை விளக்கும் சாசன வழக்குகள் எண்ணிறந்தன. சங்கவழக்குத் தெரியாமல் சாஸனம் பதிப்பிப்போர் பல விடங்களிற்றவறி யிருக்கின்றனர். புகவு என்ற சொல் உணவு என்ற பொருளில் தொல் காப்பியமுதலிய முன்னூல்கள் கூறும்

"மாணுக்கர்" "ஒன்பது புகவிளில் ஓதக்கடவர்' என்ற ஆயின் சாஸனத்தில் புகவு என்பது இப்பொருள் பெறுதலை அறியாமையால் பிரவேசம் என்ற பொருள் தரப்பட்டுள்ளது.

பழைய சொல் வழக்குகள்

கசு கலிசு சாத்தியருளச்சந்தனம் முக்கசும் (S. III. 187) அக்சும் காசு ஒன்றுக்கு அக்கம் 12 (S. II 22) (அக்க முங்காசும்.)

செவிடு ஆழாக்கு ஐந்தில் ஒன்று (S. V. 154)

நாடுரி பழவரிசி நாடுரியாழாக்குஅரி (S. V. 150)

கும்மாயம் கும்மாயத்துக்குத்தூப்பருப்பு (S. iii of அக-86)

தேவகுலம்-கந்த செஷண் செய்வித்த தேவகுலம். (S. ii 341) தேவகுலமும் தெற்றியும் பள்ளியும் (மணி)

முதுகண்—இன்னோரை முதுகண்ணுகக் கொண்டு நிலவச்செய்து (S.iv.17, S. iv. 30, S.V. 35 of பெருங்-32)

குட்டம்—அவைக்குட்டம் கற்றான் கடந்துவிடும் (T.A.S. 13)

குறுவாள்—சிற்றாள். (S. III. 317.)

கல்லூரி—திருமாளிகையில் வடவக்கத்துக் கல்லூரியில் தானஞ் செய்தருளி இருந்து (S. II-107)

தள்ளே-தத்தை (T.A.S. II 34)

ஐம்படைப்பருவத்து (S. II 374, iv. 294)

சாஸனத் தமிழ்ச் செய்திகள்.

பிரசான்றோர் காலம்.

இனி, கடைச் சங்கத்துக்குப் பிற்பட்ட கால நிலையை நோக்குவோம். இக்காலத்தைப் பிரசான்றோர் காலம் என்று நாம் வழங்கலாம். நச்சினார்க்கினியார் முதலிய உரைகாரர்கள் சங்கத்துச் சான்றோரும் பிரசான்றோரும் என்று பலவிடங்களிலும் வழங்குவதால் சங்கத்துக்குப் பின்விளங்கிய புலவர் பெருமக்களை அப்பெயரால் அழைத்துவந்த பழைய வழக்குத் தெரியலாம். கடைச்சங்கக் காலம் குழப்பமான நிலையில் உள்ளது. ஐந்தாம் நூற்றாண்டே அச்சங்கத்துக்கு உரியதாக வேண்டும் என்ற கொள்கையை நான் 16 வருஷங்கட்கு முன்பே வெளியிட்டவன் என்பதைப் பலரும் அறிவர். அக் கொள்கை பற்றி யான் புதியவாகக் கண்ட கருத்துக்கள் பலவற்றை என் அன்பரானவர் சிலரிடம் அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளேன், அவற்றிற் சில அன்னோரால் அச்சில் வெளிவந்து முள்ளன. அவற்றை இப்போது விவரிக்க அவகாசமில்லை. மற்றவை யெல்லாம் எத்தகைய தாயினும் ஒரு விஷயத்தை கொண்டு, ஐந்தாம் நூற்றாண்டே கடைச் சங்கத்துக்கு ஏற்புடையதாகு மென்று நான் பலரிடமும் வற்புறுத்தி வருவதுண்டு, சங்கவாக்குகள் தவிர இப்போது கிடைத்துள்ள தமிழ் நூல்களில் பழைமையானவை யாவும் 7ம் நூற்றாண்டுகளுக்கும் முற்பட்டவைகளாக நமக்குத் தெரியவில்லை. கடைச்சங்க காலம் 1, 2ம் நூற்றாண்டுகளாயின். இவ்வாறு இடையைந்து நூற்றாண்டுகள் இருண்டு போகும்படி தமிழணங்கு செய்த தவக்குறைவு என்னை? இக்கேள்விகட்கு ஏற்ற விடையை நான் உசாவிய அன்பர்களிடமிருந்து இதுவரை பெறக்கூடவில்லை. கடைச் சங்கத்துக்குப் பின் பழைமையும் பெருமையுமுள்ள நூல்களாகத் தெரிய வருவன :—

சைவ வைணவ அடியார் திருவாக்குகள் போன்றனவும், முத்தொள்ளாயிரம், இறையனார் களவியலுரை, பாரத வெண்பாப் போன்றனவும் சைன பௌத்த நூல்கள் சிலவுமேயாம். இவற்றுக்கு முன்பமைந்த தமிழ் நூற்றொகுதி இன்னதென்பது விளங்கவில்லை. யாவும், 6-7ம் நூற்றாண்டுகட்கு முற்பட்டவையல்ல என்பது அவற்றின் உள்ளீடுகளினின்றும் சொல்லத் தடையில்லை. ஆகவே, கடைச்சங்கமுதற்றொடர்ந்து வரும் காலமாகிய தந்துவிலே அமைந்த தமிழ்மணிக் கோவையில் இடைவெளியின்றிக் கோக்கப் பட்ட இரத்தினங்களே அவ்வடியார் முதலியோர் நூல்கள்

என்பதே தெளிவாகின்றது. சங்ககாலம் இந்நூல்களின் எழுச்சிக்கு அடுத்து முற்பட்டதேயன்றி, நெடுங்காலத்தை இடையிட்டது என்று சொல்வதற்கு இடமில்லை. சங்ககாலத்துக் கடைசிச் சோழனாக விளங்கியவன் கோச்செங்கணானென்பது சாஸனங்களாலும், நூல்களாலும், தெரிய வருகின்றது. இச்செங்கணானைக் களவழியிற் பாடியவர் பொய்கையார் என்ற தெய்வப்புலவர். இவரே, திருமால் அடியராகிய பொய்கையார் என்பதற்கு வேண்டிய ஆதாரங்களை 25 வருஷங்கட்கு முன்பே முதன்முதற் கண்டு நான் வெளியிட்டிருக்கிறேன். சமீபத்தில் நான் எழுதிப் பிரசுரத்துள்ள "ஆழ்வார்கள் காலநிலை" என்ற நூலிலும் இவ் விஷயம் விவரித்துக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே, அப்பொய்கையார் முதலிய முதலாழ்வார்களையும், அவர்கள் காலத்தவராக யாப்பருங்கல விருத்தியால் அறியப்படும் காரைக்காற் பேயார் முதலிய அடியார்களையும் சங்க காலத்தை ஒட்டி அஃதாவது 5-ம் நூற்றாண்டினிறுதியிலும் ஆறாம் நூற்றின் தொடக்கத்தும் வாழ்ந்தவர்கள் என்று சொல்லப் பொருத்தம் பெரிதுமுள்ளது. இவர்கள் தவிர, மற்ற அடியாரெல்லாம் 7 முதல் 9 நூற்றாண்டுகள் வரை விளங்கியவர்களே என்பது இனி நான் கூறப்புகுஞ் செய்திகளால் தெளிவாகும். சைவ வைணவ அடியார்கள் மட்டுமல்லர்; வைதிக மதப் பெரியோர்களிலும் சைன பௌத்த முனிவர்களிலும் இக்காலத்தாசிரியர் சிலர் உளர். இவர்களியற்றிய முத்தொள்ளாயிரம், களவியலுரை, சிந்தாமணி, சூளாமணி, பெருங்காதை குண்டலகேசி முதலியனவும் அக்காலக் கோவையுட் கோக்கப்பட்ட மணிகளேயாகும். ஆகவே, பிற சான்றோர் காலம் என்று நான் குறிப்பிடுவது இப்பெரியோர்கள் விளங்கிய காலவிசேடத்தையே என்பது தெரியலாம்.

இனி, இப்பிறசான்றோர் வரலாறுகளோடு ஒப்பிட்டறிதற்கு, 8-ம் நூற்றாண்டினு முற்பட்ட தமிழ்ச் சாஸனங்கள் நமக்குக் கிடைத்தில. அந்நூற்றாண்டு முதலாக நமக்குக் கிடைத்துள்ள சாஸனங்களும் மிகச் சிலவே. அவற்றுட் சில, வடக்கே பல்லவருடையனவும் தெற்கே பாண்டியருடையனவுமாகும். 7-ம் நூற்றாண்டு முதலே பாண்டியரும் பல்லவருமே பிரபலர்களாய்த் தமிழ் நாட்டை அடிப்படுத்தி ஆண்ட பேரரசர்களாதலால் அன்னோர் சாஸனங்கள் அகப்படுவது பொருத்தமே எனலாம். இக்காலங்களில் சேரரும் சோழரும் தங்கள் பழைய வலி குன்றி இவ்விரண்டரசர்களி லொருவரைச் சார்ந்திருந்தவர்களே. இக்காலத்தனவாகிய சைவ வைணவ அடியார்கள் வாக்கை

நோக்கினும் பாண்டிய பல்லவர்களின் பெயர்களும் பெருமை களுமே வெளியாதல் தெரியலாம். ஆகவே, இக்காலத்தனவாகிய நூல்களும் சாஸனங்களும், வழக்காறும் வரலாற்றும் ஒற்றுமைப் பட நேர்தல் இயல்பேயாம். அவற்றைப்பற்றித் தெரியும் செய்திகளை இனி விளக்க முயல்வேன்.

சங்க காலத்துக்குப் பின்பு ஆண்ட தமிழரசர்களைப்பற்றித் தெரிதற்குரிய கருவிகளிலே வேள்விகுடித்தாமிர சாஸனம் என்று சொல்லப்படுவதே பழமையும் சிறப்புமுடையதாயுள்ளது. இச் சாஸனம், பராங்குசன் மாறவர்மன் மகன் பராந்தகன் நெடுஞ் சடையன் என்பவனது மூன்றுமாட்சி வருஷத்தில் அமைந்தது. இந்நெடுஞ்சடையனது உத்தர மந்திரியால் கட்டப்பட்ட ஆனை மலைக் கோயில் சாஸனத்துக் கண்ட காலக்குறிப்பைக் கொண்டு 77க்குச் சில வருஷங்கட்கு முன்பு இச்சடையன் பட்டமெய் தியவன் என்பது பெறப்படுகின்றது. இவ்வரசன் பட்டமெய்திய மூன்றுமாண்டில் அமைந்த இவ்வேள்வி குடிச்சாஸனத்தில்— பலிசாலை முதுகுடுமிப் பெருவழுதியால் நற்கொற்றன் என்ற பிராமணனுக்கு அளிக்கப்பட்ட வேள்விகுடி என்ற கிராமம் பின் வந்த அரசனால் ராஜாங்கத்திற் பின்பு சேர்த்துக் கொள்ளப் பட்டதை, அவ்வந்தணன் வழியில் அந்த நற்சிங்கன் என்பவ னுக்கு நெடுஞ்சடையன் திருப்பிக்கொடுத்த செய்தி கூறப் பட்டுள்ளது. அவ்வாறு கூறுமிடையில்—முதுகுடுமி முதல் அந்த நெடுஞ்சடையன் வரை விளங்கிய பாண்டியர் பெயர் வரலாறுக ளெல்லாம் சுருக்கமாக மெய்க்கீர்த்திக்குரிய பாவிற் சொல்லப்பட் டுள்ளன. இச்சாஸனத்தின் தொடக்கமான பகுதி அடியில் வருமாறு:—

> "கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தவிர்த்த
> பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி யென்னும் பாண்டியாதி
> ராசனால் நாகமா மலர்ச்சோலை நளிர்சினை மிசை
> வண்டலம்பும் பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கிடக்கை
> நீர் நாட்டுச் சொற்களுனர் சொலப்பட்ட சிழுதி பார்க்கம்
> பிழையாத.

> கொற்கைகிழா னற்கொற்றன் கொண்டவேள்வி முற்றுவிக்கக்
> கேள்வியந்தணாளர் முன்பு கேட்க வென் றெடுத்துரைத்து
> வேள்விச்சாலை முன்புநின்று வேள்விகுடியென் றப்பதியைச்
> சீரோடு திருவளரச் செய்தார்வேந்த னப்பொழுதே

நீரோடட்டிக் கொடுத்தமையி னீடுபுக்கி துய்த்தபின்
அளவரிய ஆதிராசரை யகல நீக்கி யகலிடத்தைக்
களப்ர னெனுங் கலியரைசன் கைக்கொண்டதனை யிறக்கிய

பின் "—என்பதே, இவ்வடிகளில்—கொற்கைகிழான் நற்கொற்றன் என்ற அந்தணனுக்கு அவனடத்திவந்த யாகத்தை முற்றுவிக்க வேண்டி முதுகுடுமியென்ற பாண்டியாதி ராஜனால் வேள்விகுடி என்ற கிராமம் தானமளிக்கப்பட்டதென்றும், அம்முதுகுடுமிக்குப் பிற்காலத்தில் களப்ரான் என்ற கலியரசன் பழைமையான பேரரசர்கள் பலரையும் வென்று பூமியைக் கைப்பற்றினனென்றும், அவனாட்சிக் காலத்தில் மேற்படி வேள்விகுடியைப் பழைமையாக அனுபவித்து வந்தவரிடத்தினின்றும் அவ்வரசன் பிடுங்கி அரசாங்கத்திற் சேர்த்துக் கொண்டனனென்றும் கூறப்படுதல் காணலாம். அதன்பின்பு, அக்களப்பிரனது கொடுங்கோன்மை நீங்கும்படி, கடுங்கோன் என்ற பாண்டியன் தோன்றித் தன்முன்னோராண்ட பாண்டிய தேசத்தைக் கைபற்றியதும், அவன்முதல் மேற்கூறிய நெடுஞ்சடையன்வரை தொடர்ந்து வரும் 6 தலைமுறைப் பாண்டியர் வமிச வரலாறுகளும் விவரிக்கப்படுகின்றன.

இவ்வாறு, 770-ல். பட்டமெய்திய நெடுஞ்சடையனுக்கு—6 தலைமுறைக்கு முற்பட்டதே களப்ரான் ஆக்கிரமம். எனவே, ஏறக்குறைய 6-ம் நூற்றாண்டிறுதியில் அக்களப்பிரனது ஆட்சி நிகழ்ந்த தென்பதும், பாண்டியநாடுட்பட்ட தமிழகமுழுதும் 7 ம் நூற்றாண்டுக்கு முன்பு அரசியல் நிலையால் முழுதும் மாறுபட்டிருந்த தென்பதும் பெறப்படும்.

" அளவரிய ஆதிராசரை யகலநீக்கி யகலிடத்தைக்
களப்பிரனெனுங் கலியரசன் கைக்கொண்டு "

என்ற அடிகளுள்—அகலிடமென்பது பூமிக்கும் பெயராதலின் அது தமிழக முழுமையும் குறிக்குமென்றும் ஆதிராசர் என்பதனால் சேர சோழ பாண்டியாகிய தமிழ்ப் பெருவேந்தர்களுமடங்கியவரென்றும் நாம் கொள்ளத்தடையில்லை. இவ்வாறு, சங்க காலத்துக்குப்பின் தமிழகத்தைப் கைப்பற்றியாண்ட களப்ரன் யாவன் ? என்பது இங்கு ஆராய்ச்சி செய்தற்குரியது.

சாஸன ஆராய்ச்சியாளருள் ஒருவரான என் நண்பர் ஸ்ரீமாந் ஏ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதி, பி.ஏ., அவர்கள், பலவருஷங்கட்கு முன் " பங்களூர் மிதிக் சொஸைடி " பத்திரிகையின் 15-ம் தொகுதியில்,

குப்தர்கள் விஷயமாக எழுதிய கட்டுரையொன்றில், 5-ம் நூற்றாண்டில் இருந்தவராகத் தெரியும் புத்ததத்தர் என்ற பிக்ஷு, தாம் எழுதிய பௌத்த நூல்களிலே, சோழமண்டலத்துப் பூத மங்கலம் என்ற ஊர் தமக்குரியதென்றும், காவிரிப்பூம்பட்டிணத்து விஷ்ணுதாஸனால் கட்டப்பட்ட பௌத்த விகாரத்தில் தாம் வசிப்ப வரென்றும் களம்ப வமிசத்தவனான அச்சுத விக்ரமன் என்ற அரசனது ஆட்சி நடந்து கொண்டிருக்குங் காலத்தில் 'அபிதர்மா வதாரம், விநயவிநிஸ்சயம்' என்ற நூல்கள் தம்மால் இயற்றப் பட்டன என்றும் கூறுகின்றார் என்ற அரிய செய்தியைக் குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் இவ்வச்சுதனது களம்பகுலம் என்பது கடம்ப வமிசத்தின் திரிபாகத் தோன்றக்கூடியதேனும் அக்கடம்பர் புத்ததத்தர் காலத்தில் வாகாடகர் என்ற வட வரசர் கீழ் அடங்கியிருந்தவராதலாலும், சாஸனங்களால் நன்கறியப்பட்ட கடம்பவரசர் வரிசையுள் அச்சுத விக்ரமன் என்ற பெயர் காணப் படாமையாலும், அன்னோர் வெகுதூரமான தமிழ்நாட்டின் இடையில் தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் என்பது பொருந் தாதென்றும், களப்பிரர் என்பவர் 6-ம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்தவர் என்பது வேள்விகுடி, பல்லவ, சளுக்கிய சாஸனங்களால் அறியப்படுதலால், அச்சுத விக்ரமனது களம்ப குலமென்பது களப்ர வமிசமேயாக வேண்டு மென்றும் குறிப்பிட்டுள்ளனர். இக்குறிப்பைப் பத்திரிகையில் நான் படிக்க நேர்ந்தபோது களம்பகுலத்து அச்சுதன் என்று கூறப்படுபவன் இன்னான் ஆகவேண்டுமென்று தமிழ்நூல் வழியால் ஒருவகை அபிப்பிராயம் எனக்குத் தோற்றியது. அதனை இவ்விடம் விரித்துக்கூற எண்ணுகின்றேன்.

களப்பாளர் என்ற ஓர் அரசவகுப்பினரைப்பற்றி நூல்களிலும் சாஸனங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் ராஜ ராஜ சோழன் காலத்தே நெற்குன்றங்கிழார் என்பவரைக் (களப் பாள ராஜர்) என்று திருப்புகலூர்ச் சாஸனம் கூறும். ஒட்டக் கூத்தர் காலத்தவரும், திருப்புகலூரந்தாதிபாடி, அதனிறுதியில் " களப்பாள னெற்குன்ற வாணனந்தாதிக் கலித்துறையே " என்று முத்திரையிட்டவருமான நெற்குன்ற வாணர் என்பவர் இவரே. சைவ சமய சந்தானாசாரியத் தலைவரான மெய்கண்ட தேவருடைய தந்தைக்கு அச்சுதக் களப்பாளரென்ற பெயர் வழங்குதலால் அவரும் இம்மரபினரென்பது விளங்கும். கிருஷ்ண தேவராயரது தமிழ் மந்திரிகளுள் ஒருவரான வடமலையரும், அவர் சகோதரரும் இக்களப்பாள குலத்தவர்களேயாவர். இன்னுஞ்சிலர்

இம்மரபினர் உளர். இவ்வமிசத்தவரின் ஆதிமுன்ளேருள் ஒருவரே அறுபத்து மூவருள் ஒருவரான கூற்றுவ நாயஞர் என்பது—

'ஓதந் தழுவிய ஞாலமெல் லாமொரு கோலின் வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள ஞகிய கூற்றுவனே"

என்ற நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத் திருவந்தாதி யால் விளங்கும், "ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக் கோன்" என்று சுந்தரமூர்த்திகள் பாடுதலால், இவரது ஆதியூர் களந்தை என்பது தெரியலாம். சேக்கிழார் இந்நாயஞரது வீரப் பெருமையைச் சிறப்பிக்கு மிடத்து—

"அருளின் வலியா லரசொதுங்க வவனியெல்லா மடிப்படுப்பார்
பொருளின் முடிவு காண்ப்ரிய வகையாற் பொலிவித் திகல்சிறக்க
மருளுங் களிறு பாய் புரவி மணித்தேர் படைஞர் முதன் மாற்றார்
வெருளுங் கருவி நான்கு நிறை வீரச் செருக்கின் மேலாஞர்"
"வென்றி வினையின் மீக்கூர வேந்தர் முனைகள் பலமுருக்கிச்
சென்று தும்பைத் துறை முடித்துச் செருவில் வாஞகைத் திறங்கெழுமி
மன்றன் மாலை மிலைந்தவர்தம் வளநா டெல்லாங் கவர்ந்து முடி
ஒன்று மொழிய வாசர்திரு வெல்லா முடைய ராயிஞர்"

என்று, இவர், தமிழ்நாட்டரசரையெல்லாம் வென்று தம்மாட்சிக் குட்படுத்திய பெருவீரர் என்றும், ஆயினும் முடிபுனைதற் குரித்தாகாத வேளாண்குடியினராதலால், அதனையுந் தில்லைவா ழந்தணராற் பெறுதற்கு முயன்றும் அவர்கள் சோழர் குடிக்குத் தவிர பிற மரபினர்க்கு முடி சூட்டோமென்று மறுத்தனரென்றும், அதஞல் தில்லைச் சிவபிரானைவேண்டி அப்பிராஞல் திருவடிநிலை அளிக்கப்பெற்று அதனையே முடியாகச் சூடித் தமிழுல முழுமையும் ஆண்டன ரென்றும் கூறுதல் இங்கு அறியத்தக்கவை. ஆகவே, மேற்கூறிய களப்பாளர் மரபிலே முன்ஞேராகவும் வீரச்செருக்கால் மேம்பட்ட வேந்தராகவும் விளங்கியவர் கூற்றுவ நாயஞர் என்பது தெரியலாம். இவ்வாறே இம்மரபினரின் ஆதிமுன்ஞே ஞெருவன் அச்சிதன் என்ற பெயர் பெற்றிருந்தவன் என்பதும், சேர, சோழ,

பாண்டியர் மூவரையுமே போரில்வென்று தமிழ்நாடு முழுமையுந் தன்னடிப்படுத்தியவன் என்பதும் அடியிற்கண்ட பழம்பாடல்கள் தலைக்குறிப்புகளுடன் தமிழ்நாவலர் சரிதையில் காணப்படுவன வற்றால் விளங்குகின்றன.

அச்சுத களப்பாளன் தலையிட்டபோது மூவேந்தர்கள் பாடியவை —

" தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானும்—கனைசிர
முரசுணங்கச் சங்குணரு மூரித்தேர்த் தானை
அரசுணங்கு மச்சுதன்முற் றத்து"

இது சேரன் பாடியது.

" அரசர் குலதிலக னச்சுதன்முற் றத்தில்
அரச ரவதரித்த வந்நாள்—முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடு மோசை மிகும்"

இது சோழன் பாடியது.

" குறையுளா ரெங்கிரார் கூர்வே லிராமன்
நிறையறு திங்க ளிருந்தான்—முறைமையால்
ஆலிக்குந் தானை யலங்குதா ரச்சுதமுன்
வாலிக் கிளையான் வரை."

இது பாண்டியன் பாடியது.

இது பாடியபின் ஒருவிலங்கு கூடப்போட்டபின்
பாண்டியன் பாடியது.

"குடகர் குணகடலென் றார்த்தார் குடகரிக்
கிடகர் வடகடலென் றார்த்தார்—வடகடலர்
தெனகட லென்றார்த்தார் தில்லையச்சு தானந்தன்
முன்கடைநின் றார்க்கு முரசு"

இவற்றால் அச்சுத களப்பாளன் என்பான் தமிழக முழுவதும் தன்னடிப்படுத் தாண்டவன் என்பதும், தில்லையைத் தனக்குச்

சிறந்த நகரமாகக் கொண்டிருந்தவன் என்பதும் பெறப்படு கின்றன.

"படுபருந்துஞ் சூரிப்பேயும் பல்விலங்கும் நாயும்
கொடியுங் கழுகுமிவை கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்"

எனவழங்குந் தனிப்பாடலும் இவ்வச்சுத களப்பாளனைப் பற்றிய தாகவே தெரிகின்றது. அச்சுதன் என்ற அரசனைப் பற்றியமைந்த நீண்ட கலிப்பா வொன்று "கெடலரு மாமுனிவர்" என்று தொடங்கி யாப்பருங்கலக் காரிகையிற் (பக்கம் 103) காணப்படு வதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அப்பெரிய பாட்டில் அவ் வரசனைப்பற்றி வரும் இறுதி வாழ்த்துப் பகுதியாவது :—

"அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலுலக முழுதுடன்
ஒன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே"

இப்பாடலே, யாப்பருங்கல விருத்தியினும் மேற்கோள் காட்டப் பட்டுள்ளது. இவ்விருத்தியிலே, இப்பாடல் "விளக்கத்தனார் என்ற பழம் புலவர் பாடியது" என்ற குறிப்புக் காணப்படுதல் அறியத் தக்கது. இப்பாட்டைத் தம்நூலிற் சேர்த்து "எனுங் கெடலரு மாமுனி யம்போ தரங்கமென்னே" (காரிகை பக்கம் 107) என்று அமிதசாகரர் உதாரண முதனினைப்பாகப் பாடுவதால், இது பாடிய புலவர், அக்காரிகை யாசிரியர்க்கு முற்பட்டவர் என்பது தெளிவாகின்றது. காரிகையாசிரியர் 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவ ரென்பது பின் அவரைப்பற்றிக் கூறும் செய்தியால் நன்கு விளங்கும்.

இனி, "கயலொடு, கலந்த சிலையுடைக் கொடுவரிப்
. . . . போர்வே லச்சுதன்" என்று

அச்சுதனை விளக்கத்தனார் அதனிற் பாடுதலால் மீனம், வில், புலிக் கொடிகளைத் தன்னுரிமையாகக் கைப்பற்றியவன்—அஃதாவது அவற்றை யுடைய தமிழ் மூவேந்தர்களையும் தன்கீழ்ப் படுத்தியவன்

துவன் என்பது தெரியலாம். இவன் நந்தி என்ற பெயருடையனு யிருந்தனன் என்பது

"பொருகுடை வளாக மொருகுடை நிழற்றி
இருபிறப் பாளர்க் கிந்துமன மகிழ்ந்து
அருள்புரி பெரும்புக ழச்சுத கோவே
நந்தி மாமலைச் சிலம்ப
நந்திநிற் பரவுத னுவலர்க் கரிதே"

என அவ்யாப்பருங்கல விருத்தியில் வரும் வேறு கலிப்பாப் பகுதியாலும் தெரிகின்றது.

இவ்வாறு கூற்றுவ நாயனாரும் அச்சுதனுமாகிய களப்பாளர்கள் ஒருகாலத்தில் நாடு முழுமையும் தம்மாட்சிக்கு உட்படுத்தி யாண்ட அரசு வகுப்பினராயின், அவர்காலம், தமிழ்ச் சரித்திரத்தில் ஒரு விசேஷமுடைய தென்றே சொல்லத் தக்கதன்றோ? 7-ம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் நாட்டைப் பாகம் பிரித்துக் கொண்டு ஆண்ட பேரரசர்கள் பாண்டியரும் பல்லவருமே யன்றி வேறல்லர் என்பது திண்ணம். அக்காலத்தில் அவர்கள் ஆற்றற்கு முன்பு எவரும் முன்னேறக் கூடியவரல்லர் என்பது சாஸனங் களால் நன்கறியப்பட்ட விஷயமாகும். ஆகவே, இப்பல்லவ பாண்டியர்க்கு முன்பே, களப்பாளரது ஆதிக்கம் தமிழ்நாட்டில் ஓங்கியிருந்ததாக வேண்டுமென்பது பெறப்படுகின்றது. இவற்றை மனத்துட்கொண்டு நோக்குமிடத்து, இக்களப்பாளர் வேள்வி குடிச் சாஸனங் கூறிய களப்ரரின் வேறல்லர் என்றே கருதத் தடையில்லையாம். இதனை இன்னும் சிறிது விளக்குவேன்.

களப்பிரரைப்பற்றித் தெரியக்கூடிய தமிழ்ச் செய்தி உண்டா? என்று, ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் என்னை உசாவியபோது, நான் மேற்கூறிய செய்திகளைக் கூறி, புத்ததத்தர் தம் நூலில் களம்ப குலத்தவனாகக் கூறிய அச்சுத விக்ரமன் என்பவன் மேற்குறித்த அச்சுத களப்பாளனாக வேண்டுமென்று தெரிவித்தேன். ஐயங்கார் அவர்கள் என் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு ஷெ புத்ததத்தர் இயற்றிய பாலிபாஷை மூலங்களை வைத்து நோக்கியபோது—அச்சுத விக்ரமன் என்று ரெங்கஸாமி சரஸ்வதியவர்கள் குறிப்பிட்டது அச்சுத விக்ராந்தன் என்றும், களம்பகுலம் என்பதற்கு களப்ப குலம் என்ற பாடாந்தரமும் காணப்படுவதைத் தெரிவித்தார்கள். இதனால், அரசன் பெயர் அச்சுதன் என்பதே என்றும் பராக்ரமமுள்ளவன் என்ற பொரு

ருடைய விக்ராந்தன் என்பது அவனை விசேடித்த பதமே என்றும் நன்கு பெறப்படுகின்றன. களம்ப என்பதை மூலத்திற் காட்டிப் பதிப்பித்தவர் கீழ்க்குறிப்பில் (Foot-note) களப்ப என்பதைக் காட்டியுள்ளாராயினும் அக்கீழ்க்குறிப்புப் பாடமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். களப்பர் என்பது பிராகிருதமாகிய பாலியில் களப்ரர் என்பதன் திரிபாகக் கூடியது இயல்பேயாம். இங்ஙனம் திரிந்த களப்பர் என்பது தமிழில் களப்பாளர் என்றாகத் தடையில்லை. ஆளர் என்ற சொல்லைக் கூட்டிக் குலம் தொழில் களைக் கொண்ட மக்களை வழங்கல் தொன்று தொட்ட தமிழ் வழக்கேயாம். அந்தணர்—அந்தணாளர் (தொல்) அருவர்—அருவாளர், வேள்—வேளாளர், கம்மர்—கம்மாளர் முதலியன காண்க. ஆகவே, களப்ர குலத்தவனே புத்ததத்தர் காலத்து அச்சுதனென்பதும், அவ்வச்சுதனே மேற்பாடல்கள் கூடிய களப் பாளன் என்பதும் யாவருக்கும் வெளியாகக் கூடியவை.

> "அளவரிய ஆதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக்
> களப்பிர னெனுங் கலியரசன் கைக்கொண்டதனை
> இறக்கியபின்"

என்று ஐந்தாம் நூற்றாண்டினிறுதியில் இருந்தவனான கடுங்கோன் என்ற பாண்டியனுக்கு முன் தமிழ்நாட்டை வலிமையால் கைப் பற்றி ஆண்டவனாக வேள்வி குடிச்சாஸனங் கூறும் அரசன் இவ்வச்சுதனோ அன்றி மேற்கூறிய கூற்றுவநாயனாரோ ஆதல் வேண்டும். பெரியபுராணத்தில் கூற்றுவ நாயனார் தில்லைச் சிவபிரான்பால் பெரும்பத்தி பூண்டிருந்தவரென்பதும், தில்லை வாழந்தணரைத் தமக்கு முடிசூட்ட இவர் வேண்டியும் அவர்கள் மறுக்கவே தில்லைச் சிவபிரானது திருவடிகளைத் திருமுடியாகத் தரித்தாண்டதும் மேலே கூறினேன். இதனால், தில்லைத் தலம் கூற்றுவநாயனார்க்குச் சிறப்புடையதாயிருந்தது என்பது தெரிய லாம். மேற்கூறிய அச்சுத களப்பாளன் பாட்டிலும், "தென்றில்லை யச்சுதானந்தன்" என்று கூறப்பட்டிருத்தல் ஒப்பிடத்தக்கது. களப்பாளர்களாய்த் தமிழ்நாடு முழுமையும் ஆண்ட அச்சுதன், கூற்றுவநாயனார் இருவரில் எவர் முற்பட்டவர் என்பது தெரிய வில்லை. பகைவர்க்கு எமன் போன்றவராயிருந்தமைபற்றிக் கூற்றுவன் என்பது இந்நாயனார்க்குச் சிறப்புப் பெயராகவே தோன்றுகின்றது. 'களப்ரனெனுங் கலியரசன்' என்பதில்—கலி யரசன் என்பதும் கூற்றுவனேயொத்த பொருள் தரக்கூடியதே.

இனி, 'களப்பிரனெனுங் கலியரைசன்' என்பான் இரண்டாம் புலிகேசியின் கொப்பரம் சாஸனத்தில் காணப்படும் கலிகுலம் என்ற வமிசத்தவனாக வேண்டும் என்று கருதிச் சிலர் எழுதியுள்ளார்கள் (Ep. Ind. Vol. XVII. p. 306, n.) இக்கலி குலத்தவரே களப்பிரர் என்பது அச்சாஸனத்தால் தெரியவரவில்லை. அன்றியும், கலியரசன் என்பது கொடிய மன்னன் என்ற பொருளுடையதேயாம், "கட்டியங்காரனென்னுங் கலியர சொழிந்த பின்னர்" (சீவக) "இருங்கலி யுலக மெல்லா மிருள்கொள வெருவி நோக்கிப் —பொருங்கலியரசர்தானை போக்கிட மற்றதன்றே" (சூளா-p. 206) எனப் பழைய காவியங்களில் வழங்குதல் காணலாம். "கலியரைசன் வலிதளரப் பொலிவினொடு வீற்றிருந்து" என இவ் வேள்விகுடி சாஸனமே நெடுஞ்சடையனைப் பற்றிக் கூறுமிடத்தும் இத்தொடரை வழங்குவதால், கூற்றுவன் போன்ற கொடியோனை வேந்தனென்பதே பொருத்தமாம்.

இக்களப்பிரரை கள்வர் குலத்தவரான முத்தரையராக ரெங்கசாமி ஸரஸ்வதியவர்கள் கருதி யெழுதியிருத்தலை மேலே கூறினேன். இம்முத்தரையர் பல்லவராஜ்யத்தைத் தென்னாட்டில் ஸ்தாபித்தவர்களும் தஞ்சையில் அவர்கள் பிரதிநிதிகளாக ஆட்சி புரிந்தவர்களுமான தலைவர்கள் என்பது பல்லவ சாஸனங்களாலும், முத்தரையரது செந்தலைச் சாஸனம் முதலியவற்றாலும், தெரிந்ததே. அதனால் பல்லவர் காலத்தே இன்னோர் அவர்கட்குப் பகைமை பூண்டவர்களாயிருக்க இடமில்லை. நந்திபோத பல்லவ மல்லனைப் பல்லவராஜ்யத்துக் குரியவனாகத் தெரிந்து எடுத்தவர்களுள் முத்தரையன் ஒருவன் என்பது காஞ்சிபுரம் வைகுண்டநாத பெருமாள் கோயில் எழுத்துக்களால் விளங்குகின்றது. இப்பல்லவனுடையதாக வெளிவந்த கொற்ற மங்கலச் செப்பேடுகளில் —"எவனுடைய வாயிற்படிகளில் களப்ரர், வல்லபர், கேரளர், பாண்டியர், சோழர், துளுவர், கொங்கணர் முதலியவர் உள்ளே நுழைதற்குச் சமயத்தை எதிர்ப்பார்த்தவர்களாக இருந்து, அவ்வரசனைக் காணச் சமயம் வாய்க்காதவர்களாக யிருக்கிறார்களோ" (செந். 23 p 196) என்று பொருள்பட்ட வடமொழிச் சுலோகங்களால் அந்நந்தியைப் புகழ்கின்றது. இதனால் களப்ரர்கள் பல்லவரது பகையரசர் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் என்பது பெறப்படுமன்றோ? இது பல்லவாபிமானிகளான முத்தரையர் வரலாற்றோடு முற்றும் மாறுபடுவதென்பதில் தடையில்லை. பிற்காலத்தில் விளங்கிய களப்பாள மரபினரெல்லாம், வேளாள மரபினராகவே

தெரியவருதலால் அவர்களைக் கள்வர் குலத்து முத்தரையராகச் சொல்லவும் இடமில்லை. இவற்றால், களப்ரர் கள்வரான முத்தரையராகாரென்பதே முடிவாகும். இக்கள்வர் குலத்து முன்னோன் வேங்கடமலைத் தலைவனான புல்லி என்பான் என்பதைச் சங்கக் காலம் பற்றிய விஷயத்துக் கூறினேன். இனி, மூர்த்தி நாயனுருடைய காலத்தவராய் மதுரையைப் பிடித்தாண்டவராகக் கூறப் படும் கருநட வேந்தரே களப்பிரர் ஆதல் வேண்டும் என்று கருதுவார் பலர். அக் கொள்கைக்குச் சிறந்த பிரமாண மொன்றும் இதுவரை கூறப்படவில்லையாதலால் இங்கு அதை விசாரிக்க வேண்டியதில்லை.

கடுங்கோனும், சேந்தனும்.

சங்க காலத்தின்பின் இவ்வாறு தென்னாட்டின் பழைய அரசியனிலை மாறுதற்குக் காரணமாயிருந்த களப்பிரரது ஆதிக்கத்தைத் தொலைத்தவன் கடுங்கோன் என்பதும், இவன் மகன் அவனி சூளாமணிமாறவர்மன் என்பதும், அவன் மகன் சேந்தன் என்பதும் வேள்வி குடிச் சாஸனத்தால் அறியப்படுகின்றன. தோலா மொழி தேவர் தம் நூலாகிய சூளாமணி "நெடுஞ் சேந்த னென்னுந் தூமாண்டமிழின் கிழவன் சுடரார மார்பிற் கோமான் அவையில் தெருண்டார் கொளப்பட்டதென்று" பாடுகின்றார். இச் சேந்தன் அவனி சூளாமணி மகனாக மேற்கூறியவனாக வேண்டும் என்று சிலர் கூறுவர். ஜின சேனரால் 783-ல் இயற்றப்பட்ட பூர்வமகாபுராணமாகிய அரிவம்சத்துள் 11-வது தீர்த்தங்கரரான ப்ரேயஸ்வாமி புராணத்திற்கண்ட த்ரிபிரிஷ்டன் சரித்திரமே தோலாமொழித் தேவர் நூலுக்கு மூலமாதலால், 8-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவரே அச் சூளாமணியாசிரியரென்பது பெறப்படுகின்றது. "மன்னனுக் கன்னவ னாதிமா புராண மோதினான்" என்ற அவர் கூற்றும் ஜின சேனர் நூலைக் குறிப்பதேயாதல் காண்க. அச்சேந்தனோ 7-ம் நூற்றாண்டின் முதலில் இருந்தான். ஆதலால், இவனது அவையில் அந்நூல் அரங்கேற்ற இடமில்லை" என்பது விளங்கும்.

நெடுமாறன்.

இச்சேந்தன் மகன் மாறவர்மனென்பவன். இவனுக்கு அரிகேசரி என்ற சிறப்புப் பெயர் உண்டென்றும் "வில்வேலிக் கடற்றானையை நெல்வேலி முதலிய விடங்களில் வென்று சேரன் பெருமையைச் சிதைத்தவன் என்றும் சிறப்பிக்கப்படுகின்றான். சின்னமனூர்ப் பட்டயத்தில்—நெல்வேலியிற் சேரனையும், சங்க

மங்கையிற் பல்லவனையும் வென்றவனுகக் கூறப்படும் பாண்டியன் பராங்குசன் இவனே என்று ஸ்ரீமாந்-நீலகண்ட சாஸ்திரிகள் கருதுவர். இக்கருத்துக் கொள்வதற்கும் இயைபுண்டு. இவ்வா ருயின், அரிகேசரி பராங்குசனுகிய மாறவர்மன், பாழி. நெல்வேலி, செந்நிலம், சங்கர மங்கை என்ற விடங்களிற் போர் வென்றவன் என்பதும் அவை பெரும்பாலும் சேரனுடன் நடத்தியவை என்பதும் பெறப்படும். இவையும் பிறவும், அரிகேசரி, பராங்குசன் என்ற பெயர் தரித்த நெடுமாறனுடையன என்பது—

"பாழி வென்ற ஆடனெடுங் கொடித்தே ரரிகேசரி"

"நெடுமாற னெல்வேலி வென்ருன்"

"அமரே செய்தார்படச் செந்நிலத்தைக் கணைமழை......
பெய்தான்"

"சங்கமங்கை வென்ற....செங்கோ னெடுமாறன்"

என்றிவ்வாறு சேரனுடன் புரிந்தனவாகவே இறையனூர் களவிய லுரை சிறப்பித்தல் காணலாம். இவற்ருல், அக்களவியலுரைக் கூலித் துறைகள் இப்பாண்டியனைப் பற்றிய நூற் பாடல்களே என்பது தெளியப்படும். இம்மாற வர்மனே நெடுமாறன் என்பது செழியன், சடையன் முதலியவரை நெடுஞ்செழியன், நெடுஞ் சடையன் என்பவை போலப் பெருமை குறிக்க வழங்கிய விசேடண மேயாகும். "கோல் வளை வுருமறக்காக்குங் கொற்றவு னெடியனேனும்" என்ருர் சூளாமணியினும் (p.36) இறையனுரகப் பொருள் மேற்கொள் விளக்கம் என்ற பெயருடன் சென்னை மியூசியம் கையெழுத்துப் புத்தக சாலையிலுள்ள பிரதியில், இக்களவியற் கலித்துறைகளைக் காட்டு மிடங்களிலெல்லாம் "பாண்டிக் கோவை" என்ற தலைப்பிடப்பட்டுள்ளது. இப் பெயருள்ள கோவை வழக்கிலிருந்து வந்ததென்பது, "செய் வித்தோன் பெயரான் வந்தன பாண்டிக் கோவை முதலியன" என்று இலக்கண விளக்கம் 116-ம் சூத்திர வுரையிற் கண்ட வாக்கியத்தால் அறியலாம்.

இனி, இவ்வரிகேசரி நெடுமாறன் காலத்திலிருந்து பல்லவர் களைப்பற்றிய செய்திகளையும் சேர்த்துக் கொண்டு ஆராயும் போது, அக்காலத்து விளங்கிய பெரியோர்களைப் பற்றிய இலக்கிய வரலாறுகள் பல தெளிவாகின்றன. 767-ல் பட்டம் பெற்றவனை

நெடுஞ்சடையனது கொட்பாட்டனே இவ்வரிகேசரி நெடுமாறனென்பது முதலிலேயே கூறப்பட்டது. இதனால், அச்சடையனுக்கு 90, 100 வருஷங்கட்கு முற்பட்டதே.

அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர் காலங்கள்.

அக் கொட்பாட்டனான நெடுமாறன் காலமெனலாம் அதாவது 7-ம் நூற்றாண்டின் பிற்காலமாகும். இக்காலத்தில், வடக்கே காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட பல்லவன், முதல் நரசிம்மவர்மனவன். (650-670-உத்) இவனை வாதாபி கொண்ட பல்லவனென்று சாஸனங்கள் கூறும். பல்லவ சேனாபதியாக விளங்கிய சிறுத்தொண்டர், வாதாபி தொன்னகரந்துகளாக்கி வந்த பின்பு, தன்னரசனால் சன்மானிக்கப் பெற்றுத் தம் ஊரான திருச்செங்காட்டங் குடியில் தங்கிச் சிவ தொண்டில் முனைந்து நின்றார் என்பதும், அப்பொழுது ஆண்டில் முதியவரான அப்பரையும் இளைஞரான சம்பந்தரையும் புகலியூரிலும் சொந்த ஊரிலும் சந்தித்து அளவளாவினர் என்பதும் பெரிய புராணத்தால் அறியப்பட்டவை. ஆகவே, சிறுத்தொண்டர் காலத்துப் பல்லவன் வாதாபி கொண்ட முதல் நரசிம்மவர்மன் என்பது வெளியாகின்றது. இனி, சம்மந்த மூர்த்திகள் தம் நிறுவயதிலே மதுரை சென்று சைனனாயிருந்த பாண்டியனைச் சைவனாக்கினர் என்பது பிரசித்தம். அப்பாண்டியனை நெல்வேலிவென்ற நின்றசீர் நெடுமாறன் என்று திருத்தொண்டத்தொகை முதலியன கூறுகின்றன. இந்நெடுமாறனும் வாதாபி கொண்ட பல்லவனும் ஒருகாலத்தை ஒட்டியிருந்தவராதல் வேண்டுமென்று மேற்குறித்த சிறுத்தொண்டர் சம்பந்தர் வரலாறுகளால் விளங்கும். ஆகவே அக்காலத்துப் பாண்டியன் வேள்வி குடிச் சாஸனத்தில் "வில்வேலின் கடற்றானையை நெல்வேலிச்செருவென்றும்" என்றும் களவியற் பட்டியல், "நெடுமாறனெல்வேலி வென்றான்" என்றும் கூறப்பட்டவனே என்பது கரதலாமலகமாகின்றது. மேற்படி சாஸனத்தில் "வில்வேலிக் கடற்றானையை" வென்றவன் என்பதற்கு வில்வேலி என்ற பகைவன் சேனையை நெல்வேலிப்போரில் வென்றவன என்றே சாஸன பரிசோதகரும் பிறரும் பொருளெழுதிச் செல்வர். நெல்வேலிப் போருக்கேற்ற எதுகைப் பெயர் கொண்ட பகைவன் அமைந்தது வியப்பேயாம். இது விநோதமானதேயாம். அப்பொருளே பிரசஸ்தி பாடியவர் கருத்தாயின் வில்வேலி கடற்றானையை என்று ஒற்று மிகாதிருத்தலே வழக்கு; அதனால், விற்படையை வேலியாகக் கொண்ட கடல் போன்ற

சேனையை என்பதே அதன் பொருளாகும்; விற்படை வேற்படைகளைச் சேனைக்கு அரணாகச் சூழ நிறுத்துவது பண்டை வழக்கென்பது :—

"வேன்மிடந்த வேலியும் பிளந்து" (சீவக-279)

"வாங்குவில் லரணமரணமாக
வேறுபல் பெரும்படை நாப்பண்" (முல்லை—42-3)

என்பவற்றால் தெளிவாக விளங்கும். ஆகவே சாதனங்களாலும் இலக்கியத்தாலும் நெல்வேலியில் நெடுமாறனை எதிர்த்தவன் சேரனென்பதே தெளிவு.

இனித் திருநாவுக்கரசராகிய அப்பர் சுவாமிகள், சம்பந்த மூர்த்திகளைச் சந்தித்தபோது, மூப்புடையராயிருந்தவரென்ற செய்தி தெரிந்ததே, அதனால் சம்பந்தர் காலத்தவனான வாதாபி கொண்ட பல்லவன் தந்தை மகேந்திர வர்மன் காலத்தில் அப்பர் இளமைப்பருவத்தராக இருந்தவரென்பது பெறப்படும். மகேந்திரவர்மனுக்கு குணபரன் என்ற மறுபெயருமுண்டு. இவன் உத்தேசம் 618-ல் பட்டம் பெற்றவன். சைனசமயத்தவனாயிருந்த பல்லவன் கட்டளைப்படி அப்பமூர்த்திகள் பலதுன்பங்கட்கும் உள்ளாக்கப் பெற்று சிவபிரானருளால் தம்தெய்வத் தன்மை தோற்றுவித்து முடிவில் அப்பல்லவனையும் சைவனாக்கினர் எனவும் சைனரிடம் கோபங்கொண்ட அப்பல்லவன் திருப்பாதிரிப் புலியூரிலிருந்த சைனப் பள்ளிகளை இடித்துக் கொணர்ந்து திருவதிகையில் குணதர வீச்சரம் என்ற சிவாலயம் கட்டினன் என்றும் சேக்கிழார் பாடுகின்றார். இப்பல்லவன் இம்மகேந்திரவர்மனே என்பது தெளிவாகின்றது. திருச்சிராப்பள்ளிக் குன்றிலுள்ள குகையொன்றில் இப்பல்லவனால் பொறிக்கப்பட்ட வடமொழிச் சாஸன மொன்றில்,—

"நீணஷு நாஹுநி ஹாஜந்யநே லிங்கேன லிங்கினிஜ் ஞானம்
ப்ரத்தாஞ்சராய லோகே விபக்ஷவ்ருத்தே : ப்ராவ்ருதம்"

இதன் பொருள்—"லிங்கத்தை வழிபடும் குணபரன் என்ற நாமங்கொண்ட இவ்வரசன், இந்த லிங்கத்தால் விபக்ஷவிருத்தியிலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலைப்பதாக" என்பதே. இந்த லிங்கத்தினால் என்றும் விபக்ஷவிருத்தி என்றும் தர்க்கபரிபாஷையில் சிலேஷிக்கப்பட்டுள்ளனவேனும், லிங்கமென்பது சிவலிங்கமென்றும் விபக்ஷ விருத்தி என்பது புறச்

சமயமாகிய சைனம் என்றும் பொருள்படுவனவாம். ஆகவே, பிரசமத்தினின்றும் மாறிச் சைவனானவன் மகேந்திரன் என்பது வெளியாதல் அறியத்தக்கது. இது பெரிய புராண வரலாற்றின் படி, அப்பர் சுவாமிகளால் மாறிய அவன் நிலையைக் குறிப்ப தன்றோ? அவ்வரசன் சைவனாக மாறியதும் பாடலீபுரத்துச் சைனப்பள்ளிகளை இடித்துத் திருவதிகையிற் கட்டிய சிவல்ாயத் தின் பெயர் குணதர வீச்சரம் என்று பெரியபுராணம் கூறு கின்றது. இராஜசிம்மேச்சுரம், ராஜராஜேச்சுரம் என்பன போல இவ்வாலயமும், கட்டிய அரசன் பெயரால் பெற்ற தென்பது அறியலாம். குணபரன் என்ற பெயரால் மகேந்திரன் பிரபலமாக வழங்கியவன் என்பது மேலே கூறினேன். ஆகவே, சிவன் பெயர் பெற்ற குணதரீச்சரமே சேக்கிழார் காலத்துச் சிறிது மாறு பாட்டுடன் குணதரீச்சரம் என்று வழங்கியதாகக் கொள்ளத் தடையில்லை. திருமாலடியாருள் திருமழிசையாழ்வார் காலத்தவ ராகக் குருபரம்பரைகள் கூறும் பல்லவனும் இக்குணபானே யாவன், திருமாலை இவர் "பல்லுயிர்க்கும் ஆக்கை கொடுத்தளித்த கோனே குணபரனே" என்று பாடுகின்றார். திருமாலுக்கு எண்ணிருந்த நாமங்களிருப்பவும் இப்பெயரால் அழைத்தது "வேந்தராய் விண்ணவராய் [redacted] மற்றெல்லாமாய்" என்று கூறியபடியும், "திருவுடை மன்னரைக் காணிற் திருமாலைக் கண்டேனே" என்று சடகோபரும் "பெருந்துறைமேய தென்னவன் சேரலன் சோழன்" என்று திருவாதவூரடிகளும் கூறியபடியும், தங்காலத்தரசனைக் கடவுளம்சமாகக் கருதியதாகலாம். அன்றேல், அனந்த கல்யாண குணபரிபூரணனாய்—அதனால் 'குணப்பருத்' என்று திருநாமம் பெற்ற இறைவனுக்குக் குணபரன் என்பது ஏற்கக்கூடியதேயன்றி சில்வாழ் நாட்பல் பிணிச் சிற்றறிவினை அரசன் தரித்தற்குரிய தன்று என்று கருதிக்கூறியமிருத்தலாம். "நாக்கொண்டு மானிடம் பாடேன்" என்பர் இவ்வாழ்வார், எவ்வகையினும், இப்பெயரால் ஆழ்வார் திருமாலைக் கூறுதலில் ஒரு கருத்துண்டென்றே தோற்றுகிறது. மகேந்திரவர்மன் திருமா லிடமும் பக்தியுள்ளவனென்பது. சோள சிம்மபுரத்தை அடுத்துள்ள மகேந்திர வாடியில் தன்பெயரால் கட்டிய விஷ்ணுக் ரகத்தால் விளக்கமாகின்றது.

இவ்வாறு ஆழ்வார்களிலொருவரும் தேவாரம்பாடிய நாயன் மாரில் முதலிருவரும் மகேந்திரன், நரசிம்மவர்மன் இருவர் காலங் களிலும் விளங்கியவர் என்பது சாசனங்களையும் இலக்கியங்களை யும் ஒற்றுமைப்படுத்தி நோக்குவதால் வெளியாதல் காணலாம்.

தந்தையும் மகனுமான இப்பல்லவர்கள் மலைச்சார்புகளில் குகைக் கோயில்களும் மற்றக் கட்டிடங்களும் கட்டியவர்களில் தலைமை பெற்றவர்கள். இவருள் நரசிம்மவர்மனுக்கு மஹாமல்லனென்ற வேறு பெயருமுண்டு. இவன் திருமால் பக்தி சிறக்கப் பெற்றவனென்பது மாவலிபுரத்தில் இவன் பாறைகளில் வெட்டுவித்து அமைத்தனவும் உலகம் வியக்கும் சிற்பத்திறமுடையனவுமான கோயில்ரதம் முதலியவற்றால் விளக்கமாகும். இம்மாமல்லன் பெயரால் அவ்வூர் மாமல்லபுரம் என்று பேர் பெற்றதாகும். ஆனால் ஆழ்வார்களால் இப்பட்டினத்துக்கு வழங்கப்பட்ட கடன் மல்லை, மல்லை என்ற பெயர்கள், சங்ககாலத்தேயே உண்டென்பது பற்றி நான் ஆழ்வார்கள் காலநிலையில் விளக்கியுள்ளேன். இந்த நரசிம்மவர்மன் பேரன் முதற்பரமேசுவரவர்மன் என்பான். இவன் ஆட்சிக்காலம் 674 முதல் 700 வரையாகும். இவன் காலத்தில், சாளுக்கிய முதல் விக்ரமாதித்தன் என்பவன் சோணாட்டிற் பெரும்படையுடன் புகுந்து உரகபுரம் என்ற பேர் பெற்ற உறையூரில் பாளயமிறங்கியிருந்தபோது பரமேசுவரவர்மன் இவனை எதிர்த்து ஓட்டினவன் என்று சாசனங்கள் கூறுகின்றன. இது பற்றிப் பின்பு விரிவாகப் பேச வேண்டியிருக்கிறது.

சுந்தரர்-ராஜசிங்கன்.

இப்பரமேசுவரவர்மன் மகன் இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராஜசிம்மன் 700–715 வரை ஆண்டவன். இப் பல்லவனொருவனே சமாதானத்துடன் ஆண்டவன் என்றும் சிவத் தொண்டு புரிவதிலும் சிவனடியார்க்கு வேண்டியன வுதவி அவர்களை ஆராதிப்பதிலும் தன் காலத்தைச் செலவிட்டவன் இவன் என்றும் கூறுவர், டாக்டர் தூப்ராயில், இவனைச் "சிவசூடாமணி" "ஸ்ரீ சங்கரபக்த" "சைவசித்தாந்த மார்க்கே க்ஷதஸகலமல" (சைவசித்தாந்த மார்க்கத்தால் சகல மலங்களையும் நீக்கியவன்) என்றும் இவன் (S.I.I. i. 12.13.)சாஸனங்கள் கூறுகின்றன. காஞ்சீபுரத்தில் அரிய சிற்பத் தொழில் அமைந்த கைலாசநாதர் கோயிலெனப்படும் ராஜசிம்மேச்சுரமும், பனமலைச் சிவாலயமும், மாமல்லபுரத்துக் கடற்கரைச் சிவன்கோயில்களும் இவ்வேந்தனால் கட்டிப் பிரதிஷ்டிக்கப்பட்டவை. இவற்றுள், கச்சி ராஜசிம்மேசுவரத்திற்கு திருக்கற்றளி என்று சாஸன வழக்குண்டு என்பது (S. I. I. i. 143) "கச்சிப்பேட்டுத் திருக்கற்றளியான ராஜசிம்மேசுவரமுடைய நாயனார்க்கு" என்ற முதல் ராஜராஜன் காலத்துச் சாஸன முதலியவற்றான் நன்கு தெரியலாம். பூசலார்

நாயனார் சிவபிரானுக்குத் திருப்பணி செய்யக் கருதிக் கைப்பொருளின்மையால் கோபுர மண்டபங்களுடன் கோயிலை மனத்தால் வகுத்துக்கொண்டு அதனுள் சிவபிரானைப் பிரதிஷ்டித்தற்கு ஒரு நல்ல நாள் பார்த்து முடிவு செய்து கொண்டனராக, அதே நாளில் காடவர் கோமான் தான் கட்டி முடித்த கச்சிக் கற்றளிக்கும் கும்பாபிஷேகம் செய்ய யாவும் அமைக்கலாயினான் என்றும் அப்போது சிவபிரான் அதன் முதனாளிரவில் அவன் கனவிடை, "நாம் நாளை திருநின்றவூர்ப் பூசலார் செய்த கோயிற் பிரதிஷ்டை கொள்ளச் செல்லுதலால், உன் பிரதிஷ்டையை நாளைக் கழித்து வைத்துக் கொள்க" என்று கூறிச் சென்றனரென்றும் பெரிய புராணத்து வரலாறு கூறப்பட்டுள்ளது. இக்கச்சிக் கற்றளி எடுத்த காடவர் கோமான் என்பான் ராஜசிம்மனே என்பது நன்கு தெளியலாம். பரம சிவபக்தனும் தமிழ்நாட்டின் பெரும்பகுதியை யாண்டவனுமாகிய இவ் விராஜசிங்கனே சுந்தரமூர்த்தி நாயனாரால் —"கடல் சூழ்ந்த உலகமெலாங் காக்கின்ற பெருமான்—காடவர் கோன் கழற்சிங்கன்" என்று தம் திருத்தொண்டத் தொகையிற் கூறப்பட்டவனாவன். உலகமெலாங் காக்கின்ற பெருமான், என்பதனால் இவ்வரசன் அந்நாயனார் காலத்து விளங்கியவன் என்பது ஐயமின்றிப் பெறப்படும். கழற்சிங்கன் என்பதிலுள்ள கழல் அடைசொல்லே ஆகும். "உலகு நிகழ்ந்த பல்லவர் கோச் சிங்கர்" "மாதேவிதனது செய்ய கையினைத் தடித்த சிங்கர்" (பெரி—497, 499) எனச் சேக்கிழார் இவரைச் சிங்கரென்றே கூறுதலும் நிலமிசை கச்சியார் கோவாயினான்—சிலைமிகுதோட் சிங்கனவ னென்பவே, என்ற பழைய பாடலும் காணலாம். 7-ம் நூற்றாண்டுப் பல்லவனை சிம்ம விஷ்ணுவைத்தவிர இவ்வாறு சிங்கன் என்று கூறாதற்கேற்ற பெயருடையவன் இவனொருவனே என்பது தொடர்ச்சியாகத் தெரியவரும் பல்லவர் வம்சவழியால் தெளியப்படும். இவ் விராசசிங்கனுக்கு முற்பட்டவன் பல்லவர் காலங்களில். சுந்தரமூர்த்திகளால் துதிக்கப்படும் அப்பர் சம்பந்தர்கள் விளங்கியவராதலாலும் பிற்பட்ட பல்லவர்களில் தெள்ளாற்றெறிந்த மூன்றாம் நந்திவர்மன் தவிர வேறு பல்லவர்கள் பெருமாள்பக்தி தலையெடுக்கப் பெற்றவராதலோடு சிங்கன் என்ற பெயராற் கூறுதற்கேற்றவர் ஆகாமையாலும் பரமசிவபக்தனாய் விளங்கிய இவ்விரண்டாம் நரசிம்மனே சுந்தரமூர்த்திகள் காலத்தரசனாதல் வேண்டும் என்பது நிச்சயமாகும். சுந்தரமூர்த்திகளை அபிமானித்து வளர்த்தவர் திருமுனைப்பாடி நாட்டின் தலைவரான நரசிங்கமுனையர் என்பது பெரியபுராண வரலாறு. மேற்கூறிய ராஜசிங்கனால் விசேடமாகத் திருப்பணி செய்யப்பட்ட 'பனைமலை'

அம்முனைப்பாடி நாட்டில் உள்ளமையாலும் அந்நாட்டுத் தலைவர் பல்லவர் கீழ்ப்பட்டிருந்தவர்களென்பது தெரியலாம். பேரரசர் கொள்ளும். பெயர்களையே அவர் கீழ்ச் சிற்றரசர் (S.I.I. i 24) தமக்குரிய கௌரவமாகத் தரித்து வந்தவர் என்பதற்கு எண்ணிறந்த சாசனப் பிரமாணங்கள் உள்ளன. அம்முறையில் சுந்தரமூர்த்திகளை அபிமானித்த முனையரையரும் தம் தலைமையரசன் பெயரே தரித்தவராதல் வேண்டும் என்று நரசிங்கர் என்ற அவர் நாமத்தினின்றே கருதல் தகும்.

இனி, சேரமான் நாயனாரும் சுந்தரமூர்த்திகளும் ஒருசேரக் கயிலை சென்ற காலத்தைக் குறிப்பதற்கு வழங்கிய அப்தமே கொல்லமாண்டென்றும், "பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும் புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானை" என்று சுந்தரமூர்த்திகள் பாடுதலினின்று அவர்காலத்தே பல்லவர் வலிமை குன்றியிருந்த நிலைமை வெளியாவதென்றும், அந்நிலைமை, இரட்ட வேந்தனான மூன்றாங் கோவிந்தனது தென்னாட்டுப் படையெடுப்பு 804-ல் நந்திவர்ம பல்லவனது ஆட்சியில் உண்டானமையின், அப்பல்லவன் காலத்தவரே அந்நாயனார் என்றும், ஆகவே 8-ம் நூற்றாண்டுத் தொடக்கமே சுந்தரர் சேரமான் பெருமாள்கட்கு உரியதாமென்றும் காலஞ்சென்ற தஞ்சை ராவ்பகதூர் ஸ்ரீநிவாஸப் பிள்ளையவர்கள் தம் நூலில் எழுதியுள்ளார்கள். இக்காரணங்கள் யாவும் ஏற்புடையனவாகா. "கொல்லந்தோன்றி இன்ன ஆண்டு" என்றே மலைநாட்டுச் சாஸனங்கள் பலவற்றிற் காணப்படுவதால் கொல்ல நகரம் உண்டானதைக் குறிப்பதற்கு அவ்வப்தம் வழங்கியதேயன்றி, அந்நாயனார்கள் கயிலை சென்றதைக் குறிப்பதென்பதற்கு ஆதாரமே இல்லை. இப்போது ஸிரியன் கிறிஸ்தவர் எனப்படுவோரின் ஆதிமுன்னோரான வியாபாரி ஒருவரால் 825-ல் உண்டாக்கப்பட்டு, அவர்க்குரிமையாகக் கேரள வேந்தனால் நீரோட்டிக் கொடுக்கப்பட்டதே அந் நகரம் என்பது—

"இந்நகரங் கண்டு நீரேற்ற மருவான் சபீரீசோ"

எனவரும் பழைய சாஸனத் தொடரால் அறியப்படும். இவற்றைக் காலஞ் சென்ற—கோபிநாதராயர் அவர்கள் திருவாங்கூர்ச் சாஸனத் தொகுதியுள் தெளிவாக விளக்கியிருந்ததைக் காணலாம்.

இனிப் 'பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கஞ் செய்கின்றார்' சிவபிரான் என்று சுந்தரமூர்த்திகள் பாடுவதனால் பல்லவரை வலிகுன்றியவராகக் கருதவேண்டுவது எதற்கு? அடங்காத பிறவேந்தரும் அடங்கித் திறை செலுத்தும்படி

"ஈசன் தன் அடியனுன அரசனுக்கு அருள் புரிகின்ருன்" என்று —தங்காலத்துப் பல்லவன் அடிமைதிறத்தால் பெருமையைச் சிறப்பிக்கின்ருர் என்று பொருள் கொள்வதால் நேரும் குற்ற மென்ன? பெரியாழ்வாரும் தங்காலத்துப் பாண்டியன் பெருமையை "குறுகாத மன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச் சிறுகானெறியே போக்குஞ்செல்வன்" என்று பாடுதல் இங்கு ஒப்பிட்டறியத் தகும். இக்கருத்தே சுந்தரமூர்த்திகட்கும் உரிய தன்ருயின், "கடல் சூழ்ந்த உலகமெலாங் காக்கின்ற பெருமான்" என்று தங்காலத்துப் பல்லவன் உலகமெலாம் ஆள்கின்ற பேரரசன் என்று அவன் பெருமை விளங்கும்படி பாடார் என்பது திண்ணம். அன்றியும், பிள்ளையவர்கள் கருத்தின்படி நந்திவர்மன் சுந்தர மூர்த்திகளாற் சிறப்பித்தற்கேற்ற சைவனல்லன். பரம வைஷ்ணவனுன தன் தந்தை பல்லவமல்லன் போலவே இவனும் திருமால்பத்தியிற் சிறந்தவனென்பது—"திருட் பக்த்யாரூாத்விஷ்நந்திவர்ம மஹாபாஹு!" என்று அவனது பாகூர்ச் சாஸன முதலியவை கூறுகின்றன. மகேந்திரவாடியில் தன் பெயரால் திருமால் கோயில் கட்டியது பற்றி சைவனுன மகேந்திரவர்மனை திருமால்பத்தனென்று எவ்வாறு சொல்வதற்கில்லையோ அவ்வாறே, ஆலம்பாக்கம் சிவன் கோயில் இவனுற் கட்டப்பட்டது பற்றிச் சைவனென்றே சொல்வதற்கில்லை. அரசர்கள் அக்காலத்தில் வைதிக மதங்களொன்றிச் சார்புடையராயினும், பிற வைதிகக் கடவுளரையும் வணங்கிக் கோயில் முதலியவற்ருல் சிறப்பித்த வர்களே யாவர். ஆனுல், நான் குறித்த ராஜசிங்கனே வேறு வைதிகக் கடவுளையும் வணங்காத பரமசிவபத்தனென்றே சாசனங் களினின்று சொல்லலாம். இவன் தன் பெயரால் விஷ்ணு க்ரக மொன்றும் அவ்வாறு கட்டப்படவில்லை, அன்றியும் மாமல்ல புரத்துக் கடலலைகள் திருமால் மூர்த்தத்தில் மோதும்படி கடலை எதிர்நோக்கியிருந்த விஷ்ணு கோயில் பழைமையாகவும் கடலி லிருந்து வரும் கப்பற் கூட்டத்திலுள்ளோர் கண்டு தரிசிக்கும்படி யாகவும் இருந்ததென்பது தண்டி மகாகவி தம் அவந்திசுந்தரி கதையில் கூறுதலால் தெரிகின்றது. பல்லவர்க்குச் சிறந்த பட்டினமாகிய இந்நகரில் இவ்வாறு பிரபலமாயிருந்த திருமால் கோயிலின் முன்பு தன் பெயரால் ராஜசிம்ம பல்லவேச்சுரம் க்ஷத்ரிய சிகாமணிப்பல்லவீச்சுரம் என்று இரண்டு சிவாலயங்களைக் கட்டி அவற்றைப் பார்வைக்குரியவாகச் செய்து சிறப்பித்தவன் இவ் விராஜசிம்மனேயாவன். இவனது சிவபக்தியின் சிறப்பு விளங்கவே நான் இதனை இங்குக் குறிப்பிட்டது. இவ்வாறு பரமசிவபக்தனே சுந்தரமூர்த்திகள் காலத்தவன் என்பது

ஐயமின்றி வெளியாகத் தடையில்லை. இக்கருத்துக்களை ஒன்றை வருஷங்கட்குமுன் முதன்முதல் தமிழர்நேசன் பத்திரிகையிலும் வெளியிட்டுள்ளேன்.

அப்பர், சம்பந்தர் காலங்களில், சைன சமயத்திற்கு இருந்த ஆதிக்கம் தமிழ்நாட்டிற் குறைந்ததேனும் முற்றும் ஒழிந்தது என்று சொல்வதற்கில்லை. தம் நிலைமையை உயர்த்துவதில் ஊக்கமும் உழைப்பும் அம்மதத்தவர்களிடம் குறையாதிருந்த தோடு, வைதிக சமயத்திடம் அதன் தெய்வங்களிடத்தும் அவர் கட்குள்ள வெறுப்புப் பின்னும் பெருகிய தென்றே சொல்லலாம். மேற்கூறியபடி அப்பர் சம்பந்தர்கட்கு அரை நூற்றுண்டுக்குப்பின் விளங்கிய சுந்தரமூர்த்திகள்---

" நமண நந்தியும் கருமவீரனுந் தருமசேனனு மென்றிவர்
குமண மாமலைக் குன்றுபோனின்று தங்கள் கூறையொன் [றின்றியே
ஞமண ஞாஞன ஞாண ஞோணமென் றோதியாரையு [நாணிலா
அமண ராற்பழிப் புடையரோநமக் கடிகளாகிய வடிகளே "

என்று தங்காலத்துத் தலைமை பெற்றிருந்த சமணமுனிவர் சிலரையும் அவர் வைதிகக் கடவுளரை இகழ்ந்து வந்ததையும் கூறுதல் காணலாம். இவ்வாறே, இச்சுந்தரர் காலத்தவரான திருமங்கையார் முதலிய ஆழ்வார்களும் கூறுவர். மேற்கூறிய பாட்டுள் சுந்தரமூர்த்திகள் "குமண மாமலைகுன்று" என்று கூறுதல் குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி ஜில்லா கழுகு மலையிற் கண்ட ஒன்பதாம் நூற்றுண்டுச் சாஸனம் ஒன்றில் அக்கழுகுமலை பெருநற்சுரநாட்டு குமணமலைக்கல் என்ற பெயர் பெற்றிருந்த தென்று தெரிகிறது. இக் கழுகுமலை அக்காலத்துக்கு முன்பே சமணர்க்கு மிகச்சிறந்த தலமாயிருந்தது. இங்கு சைனப் பள்ளியி லுள்ள மூர்த்திக்கு திருஅறை மலையாழ்வார் என்பது பெயர். இம்மலையின் பக்கத்துள்ள சாத்தனூர் கோயில் முதலிய இடங் களில், 9-ம் நூற்றுண்டுக்கு முன்பே இருந்த சமண முனிவர் பலர் பெயர்களும் அவர்கள் மாணாக்கர் செய்த தருமங்களும் வெட்டப் பட்ட கற்கள் உள்ளன. அவற்றுள் கனகநந்தி, புட்பநந்தி, பவண நந்தி, குமணநந்தி, சாந்திசேனன் முதலிய சைனமுனிவர் பெயர்களும் கிடைக்கின்றன.

இந்தஸ்தலம் ஜைனர்க்குச் சிறந்தமை பற்றியே 'குமண மாமலைக் குன்று போனின்று' என்று அவர் மலையையே அச் சைனர்க்கு உவமையாக்கிக் கூறுகின்றார் சுந்தரமூர்த்திகள் என்பது தெரிகின்றது. சம்பந்தமூர்த்திகளும் தம் திருவாலவாய்ப் பதிகத்தில்—

"கனக நந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியும் குமணமா
சுனகநந்தியும் குணகநந்தியும்"

என்று கூறுவதில், குமணமா சுனகநந்தியும் என இக் குமண மலையையே குறிப்பிடுகின்றார் என்பது விளங்கும். மேல் தொடரில் கண்ட பெயர்கள் பலவும் கழுகுமலைக் கற்களில் அகப்படுதலும் அறியத்தக்கது. அதனால் சம்பந்த மூர்த்திகளுடன் வாதாடிய சைனமுனிவர் பலர் கழுகுமலையிலிருந்து வந்தவர்களென்று கருதற்குப் பொருத்தமுண்டு என்பதும் சுந்தரமூர்த்திகள் காலத்து அக்கழுகுமலை சைன ஸ்தலமாக இருந்த தென்பதும் அறியப்படும்.

சேரமான் பெருமாள்.

சுந்தரமூர்த்திகள் இப்பல்லவன் காலத்தவராம் போது சேரமான் பெருமாளும் அதே காலத்தவரென்பது சொல்ல வேண்டாதது. சேரர் குடியில் உதித்துப் பெருமாக் கோதையார் என்று பெயர் பெற்றிருந்த இவர் திருவஞ்சைக் களத்துச் சிவபிரான்பால் வைத்த பத்தி மிகுதியால் அங்குச் சிவ தொண்டு புரிந்து வந்தனர் என்றும் அக்காலத்துச் சேர நாட்டை யாட்சி புரிந்து வந்த பொறையன் உலகப் பற்றற்றுத் தன் அரசாட்சியைத் துறந்து சென்றனனென்றும். அதனால் ஆட்சி செய்தற்குரியாரை அமைச்சர் ஆராய்ந்து முடிவில் அஞ்சைக்களத்து வாழ்ந்து வந்த பெருமாக் கோதையாரை அழைத்து வந்து முடிசூட்ட அவர் நீதி வழுவாது அரசியலை நிகழ்த்தி வந்தனரென்றும் சேக்கிழார் தம் நூலுட் பாடுகின்றார். சேரமான் பெருமாளுக்கு முன் அரசு துறந்த கோவேந்தன் யாவன்? என்பதை இங்கு ஆராய்வேன் :— ஸ்ரீவைஷ்ணவாசாரியத் தலைவரான இராமனுஜ முனிவரது காலத்தில் அவர் சிஷ்யர்களுள் ஒருவரான கருடவாகன பண்டிதரால் செய்யப்பட்டதும், ஆழ்வார்கள் முதல் இராமானுஜர் வரை வாழ்க்கையின் ஒரு பகுதி வரை கூறுவதுமான திவ்யஸூரி சரிதம் என்ற வடமொழி நூலிலே— சடகோபர் விஷ்ணுசித்தர், கோதை, குலசேகரர், திருமங்கையார் முதலியவர்களை ஒருகாலத்

தவராகவும், ஒருவரையொருவர் அளவளாவியராகவும் கூறப்படு தலைப் பலவிடங்களிற் காணலாம். இச்செய்தி, பிற்பட்ட குருபரம்பரைகளிற் காணப்படவில்லையேனும், இராமனுஜர் காலத்துக்கு முற்பட்ட வழக்கே அந்நூல் கூறும் செய்தி என்பது தெரியலாம். திருமங்கைமன்னன் பெரியாழ்வார் முதலியோர் 8-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் விளங்கியவர்கள் என்பது பற்றி நான் அடுத்து விரிவாகக் கூறப் போகிறேன். அதனுல், குலசேகராழ் வார், அவ்வெட்டாம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்தவ ரென்பது மிகத் தெளிவாகும். இவ்வாழ்வார் தம் திருமொழியின் 2, 3-ம் திருப்பதிகங்களிலே—

> "கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்தே
> இன்பமருஞ் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்"
>
> "வானளு மாமதிபோல் வெண்குடைக்கீழ மன்னர்கள்
> கோனுகி வீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன்"
>
> "மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்
> வையந் தன்னெடுங் கூடுவ தில்லையான்"

என்று இவ்வாறே தம்துறவு நிலையைப் பாடுவர். தம்மரச வின்பத்தை வெறுத்து, அணியரங்கன் திருமுற்றத் தடியார் குழு வில் பரபத்தி நிஷ்டராய் விளங்கினவர் இவ்வாழ்வார் என்பது இவரது சரித்திரமாம். ஆகவே, சேரமான் பெருமாளுக்கு முன் "செங்கோற் பொறைய னெனுந் தாரின் மலிந்த புயத்தரசன் தரணிநீத்துத்தவஞ்சார்ந்தான்" என்று சேக்கிழார் கூறுதற் கேற்றபடி தம்மரசு துறந்தவர் குலசேகரப் பெருமாளே என்று கருதும்படி எட்டாம் நூற்றுண்டுக்காலம் அவ்விருவர்க்கும் ஒத்துவருதல் தெரியலாம். 'அரசன் தரணிநீத்துத் தவஞ் சார்ந்தான்' என, அரசு துறந்தவரைச் சிவனடியாராகச் சிறப் பியாது பொதுப்படவே சேக்கிழார் கூறுதலும் இங்குக் குறிப் பிடத்தக்கது. குலசேகரர் தம் குமரர்க்குப் பட்டங்கட்டிவிட்டுத் துறவு பூண்டனர் என்று திவ்யசூரி சரித முதலியவை கூறும். பின் பட்டமெய்துதற்கு உரிமையுடைமையால், சேரமான் பெரு மாளே புத்திரராக உபசரித்துக் கூறப்பட்டனர் என்றே நாம் கொள்ளற்குரியது. இவ்வாறன்றேல் திவ்யசூரி சரித்திரத்துக்கு இயையப் பெரியபுராணச் செய்தியை நாம் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

குலசேகரப்பெருமாள் தம்மைக் 'கொங்கர்கோன்' என்றும் 'கொல்லிநகர்க்கிறை' என்றும் கூறிக்கொள்ளுதலால், கொங்குநாடு இவரது ஆட்சிக் குள்ளடங்கிய தேசமென்பது கொல்லிநக ரென்பது அந்நாட்டுள் விளங்கிய இவ்வரசரது தலைமை நகரென் பதூஉம் நன்கு பெறப்படும். சேரநாடு என்பது சேலம், கோயம் புத்தூர் ஜில்லாக்களும் குடகு மலையான தேசங்களும் ஏறக்குறைய அடங்கியதாய்ச் சங்ககால முதலே சேரர்க்கு உரிமையாக நின்ற பிரதேசமாம். இக்கால முழுதும் சேரரது இராசதாணியாக விளங்கிய நகரம் கருவூரேயாம். கொல்லிமலைப் பக்கத்ததும் ஆன் பொருநை என்ற ஆமிராவதி நதியின் கரைக்கண்ணது மாகிய இப்பேரூரையே பண்டை நூல்கள் யாவும் வஞ்சிமாநகர் என்று கூறுவன. சேரர் தலைநகர் இதுவே என்பது, யான் எழுதி வெளியிட்ட 'சேரன்செங்குட்டுவன்' சரித்திரத்தாலும் மகா வித்வான் உப.வே.ரா. இராகவையங்கார் ஸ்வாமியால் பேராராய்ச்சி காட்டி எழுதப் பெற்ற "வஞ்சிமாநகர்" என்ற தனி நூலாலும் வெள்ளிடை மலைப்போல் விளக்கமாம். சிலர் மலையாளக் கடற்கரையிலுள்ள "கொடுங் கோளூரையே பழைய வஞ்சி' என்று கருதி எழுதி வருவனவும், முன்னூல் வழக்கோடும் முற்றும் மாறுப்பட்டன என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இங்ஙனம் கருவூரைத் தலைநகராகக் கொண்ட சேரமண்டலத்துள், அவ்வூரைத் தன்னுட் பெற்றுள்ள கொங்கு நாடு ஒருசிறந்த பகுதி என்பது சொல்லாதே அமையும். இதுபற்றியே கொங்கர் கோமான், என்பதைச் சேரர் பெயர்களுள் ஒன்றாக நிகண்டு முதலியவை வழங்கலாயின. "கொங்கரை யட்ட களத்து" "வஞ்சிக்கோ வட்ட களத்து" எனக் கொங்குநாடும் வஞ்சிநகரும் சேரர்க்குச் சிறப்புடையனவாகப் பொய்கையார் கூறுதலும் இக்கருத்துப்பற்றியே என்க. "தென்னுடன்குடகொங்கன் சோழன்" என்றார், திருமங்கை மன்னனும். இங்ஙனம் தலைநகராக விளங்கிய கொங்குநாட்டுக் கருவூரின் நிலைமை பிற்காலத்தே மாறலாயிற்று. சங்ககாலத்துக்குப் பின்னர் அஃதாவது 7-ம் நூற்றாண்டு முதலாக, ஆற்றல் மிக்கிருந்த பாண்டியரால் கொங்கு பலமுறை படையெடுக்கப் படவும், அதன்கணுள்ள தலைநகர் சில சமயங்களில் அவ்வரசர் கைவசப்படவும் நேர்ந்தன. அக்கால முதற்றான் சேரவேந்தர் தம்பழைய தலைநகரையே முற்றும் நம்பி யிராமல் மேற்கடற்பக்கத்துள்ள மகோதை என்ற கொடுங்கோ ளூரினும் தங்கி ஆட்சி புரிந்தவராதல் வேண்டும். இக்கடற்கரை யூர் மேற்றேய்துயவன மரக்கலங்கள் மிளகு முதலிய பண்டங்களை ஏற்றி வியாபாரஞ் செய்துவந்த துறை முகமும், சுள்ளி என்ற

நதிப்பக்கத்துமான முசிறியின் ஸ்தானத்தில் தோன்றியப் பட்டினமாகும். சோழர்க்குக் காவிரிப்பூம் பட்டினமும் பாண்டியர்க்குக் கொற்கையும் போலச் சேரர்க்குச் சிறந்த துறைமுகப் பட்டினம் இதுவே எனலாம். கொடுங்கோளூரைக் கருவூரென்றேனும் கருவூரைக் கடற்கரைப் பட்டினமென்றேனும் முன்னோரும் பின்னோரும் யாண்டும் வழங்கக் காணாமையின், கருவூராகிய வஞ்சி சேரரது உண்ணாட்டுத் தலைநகரென்பதும், மகோதையாகிய கொடுங்கோளூர் அவரது துறைமுக நகரமென்பதுமே தெளிவாம் என்க. பாண்டிய சோழரது ஆதிக்கம் பெருகின்ற பிற்காலத்தே முற்கூறியவாறு கொங்குநாடும் கருவூரும் சேரரால் முற்றும் கைவிடப் படவே கடன்மலை நாடான மலையாளமே கேரளபூமியாகவும் அதன் துறைமுகமான இக்கொடுங்கோளூரே சேரரது தனித்தலை நகராகவும் ஆயின. அன்றியும், ஆதித்தலை நகர்க்கு வழங்கிய வஞ்சியென்ற சிறப்புப்பெயர் இப் பட்டினத்துக்கும் பிறபட வழங்கியது (சேரமான் பெருமாணுயனார் புராணத்திற் கொடுங்கோளூரை வஞ்சி யென்று சேக்கிழார் குறித்துள்ளமையும், அதுபற்றி அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரப் பதிவுரையுள் இக் கொடுங்கோளூரையே வஞ்சியாக அறுதியிட்டதுங்கண்டு கொள்க) இங்ஙனம் முற்றும்மாறி நின்ற காலத்திலன்றிக் கருவூருங் கொடுங் கோளூருமாகிய இரண்டு தலை நகரங்களையும் கொண்டு சேர வேந்தர் ஆண்டுவந்த காலவிசேடமே நம் குலசேகராருக்கும் உரிய தெனலாம். மேற்கூறியவாறு 8-ம் நூற்றாண்டினரென்று தெளியப்பட்ட இவ்வாழ்வார் கடன்மலைநாடான மலையாள நாடொன்றினையே ஆண்டுவந்த கேரள வேந்தராயின் நமக்கும் அந்நாட்டுத் தொடர்புள்ளமையை தவறாது குறிப்பித்தற்கு உரியரன்றோ? அங்கனம் ஒருகுறிப்பும் அவர் வாக்கில் இல்லாமையோடு "கொங்கர் கோன்" "கொல்லி நகர்இறை" என்றே அவர்தம்மைக் கொள்ளுதலின் கொங்கு நாட்டை உட்கொண்ட பழைய சேரமண்டலம் முழுமைக்கும் அவர் தனியரசராயிருந்தவர் என்பதும், அக்கொங்கு நாட்டுக் கொல்லிமலைப் பக்கத்தே தம் தலைநகரை உடையராயிருந்தவரென்பதும் நன்கு பெறப்படக் கூடியன.

ஆழ்வார் கூறும் கொல்லி நகர் என்பது பழைய தலைநகரான கருவூர் என்றே கொள்ளல் கூடும். கொல்லிமலையைத் தன் பக்கத்துக் கொண்ட நகரைக் கொல்லிநகர் எனல் ஏற்புடைத்தா

தல் காணலாம். கொல்லிமலைக்கும் கருவூர்க்கும் நெருங்கிய தொடர்புண்மையை—

"குடையலர் காந்தபடன் கொல்லிச் சுனைவாய்த்
தொடையவிழ் தண்குவளை சூடான்" (புறப், வெண். 10, 1)
"கொல்லிப், பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து ...
ஒடுங்கீ ரோதி யொண்ணுத லணிகொள . . .
பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்" (பதிற்றுப். 81).

என்ற முன்னோர் கூற்றுக்களால் உய்த்தறியப்படும். இஃதன்றேல் கொல்லி மலையைச் சார்ந்து அரண்வலி பெற்றிருந்த ஊரொன்றே குலசேகரரது தலைநகரெனல் வேண்டும். கொல்லி மலையைச் சூழ்ந்த மலைகளையுடைய நாடு கொல்லிக் கூற்றம் என முன்னோரால் வழங்கப்பெற்றுள்ளது. இக் கூற்றத்தில் தம் தாயாதியரான அதிகமான் கட்கு உரியவாயிருந்த மலையரண்களைச் சேரர் ஒருகாற் கைப்பற்றியவர் என்பது சங்கச் செய்யுட்களால் நன்கறியப் படுதலின் ஆழ்வார்க்குரிய கொல்லிநகரும் அவற்றுள் ஒன்றாகக் கொள்ளத்தகும். "கொல்லி காவலன் கூடல்நாயகன் கோழிக்கோன்" என்று இவ்வாழ்வாரே பாடுதலின், தம் தலைநகர் 'கொல்லி' என்னும் பெயர் பெற்றிருந்தமை வெளியாம். குறுந் தொகையின் 34 ஆம் செய்யுள் பாடியவர் கொல்லிக் கண்ணன் என்ற பெயர்பெற்ற புலவராவார். இப் பெயரினின்று கொல்லி யென்ற ஊரொன்று பழைமையாகவே உண்டென்பது தெரிய வருதலின் குலசேகராழ்வார் காலத்தில் சேரராஜதாணியாக இக் கொல்லி அல்லது கொல்லிநகர் அப்பெயர் பெற்ற மலையிடை அமைந்திருத்தல் கூடிய தேயாம். கொல்லி மலையின் உள்ளிடமான ஊர்கள் பிறர் எளிதிற்செல்லக்கூடாத அரணுடையன என்பது இக்காலத்தவரும் நன்கறிவர். இத்தகைய மலையாணுள்ள ஊரொன்று பிற்பட்ட சேரவேந்தரால் தம் தலைநகராகக் கொள்ளப் பட்டதற்கு, குலசேகரர் காலத்தோ அவர் முன்னோர் காலத்தோ பாண்டியர் போன்றவரது படையெடுப்புக்களாற் கருவூர் பலமுறை தாக்கப்பற்றுக் கைவசப் படுத்தப்பட்டதே காரணமாக வேண்டும்.

ஒரு சிலர் ஆழ்வார் தலைநகரான இக்கொல்லி நகர் மேலைக் கடற்கரையிலுள்ள கொல்லம் என்று கருதுவர். அக்கொல்லம் பழைய சேர ராஜதாணியாக இருந்ததென்பதற்கும் அதற்குக் கொல்லி என்ற பெயர் வழக்குண்டு என்பதற்கும் யாதோராதாரமும்

இன்மையால் அவர் கொள்கை பொருத்தமன்று. 'குரக்கேணிக் கொல்லாம்' எனமுன்பு வழங்கப்பட்ட அந்நகரம் இப்போது ஸிரியன் கிறிஸ்தவர் எனப்படுவோர்ன் ஆதிமுன்னோரான வியாபாரி யொருவரால் 825-ம் ஆண்டில் உண்டாக்கப்பட்டு அவர்க் குரிமையாகக் கேரளாதிபதியால் நிரோட்டடிக் கொடுக்கப்பட்ட தென்பது முன்பே விளக்கப்பட்டது. அதனால் பிற்பட்டுத் தோன்றிய கொல்லத்தை முற்பட்டவரான இவ்வாழ்வாற்க்கு உரியதாக்குதல் அசங்கதமேயாம், எனவே, மேற்கூறியவாறு கருவூர் அல்லது கொல்லி என்ற நகர்க்கு அரசா என்பதே 'கொல்லி நகர்க்கிறை' என்பதற்குப் பொருளாகல் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு இவ்வாழ்வார் உண்ணுட்டுத் தலைநகரிலிருந்து ஆட்சி நடத்தியவரே யாயினும், இவர் மரபினரான யுவராசர் களும் பிரதிநிதிகளும் கொடுங்கோளூரில் வாழ்ந்து சோநாட்டின் பகுதியை ஆண்டுவந்திருத்தல் கூடியதேயாம். உறையூர் சோழர் குலத்தோர் புகாரையும் மதுரைப் பாண்டிய மரபினர் கொற்கை யையும் இராஜஸ்தளங்களாகக் கொண்டு இவ்வாறே ஆட்சிபுரிந்து வந்தமையும் ஒப்பிடத்தக்கது. இவற்றால், கொடுங்கோளூர்க்கு மிகவணித்தாயுள்ள திருவஞ்சைக்களத்தில் வாழ்ந்துவந்த சேரமான்பெருமாமாள், குலசேகரர் அரசு துறந்தபின் பட்டம் பெற்றுத் தமக்கு விருப்பமுள்ள கொடுங்கோளூரையே தலைநக ராகக் கொண்டு கொங்குநாடு உட்பட்ட சேரமண்டல முழுமையும் ஆண்டுவந்தனர் என்று கொள்வதே மிகவும் பொருத்தமாகின்றது. 10-ம் நூற்றுண்டினனுகத் தெரியும் வீரநாராயன வீர கேரளன் என்ற சேரன் காலத்தும் கொங்கு நாட்டின்பகுதி சேரவேந்தர்க்கு உரியதாயிருந்த செய்தி சாஸனங்களால் அறியப்படுதலின் குலசேகராழ்வார் சேரமான் பெருமாளுயனுர் காலங்களில் அவ்வுரிமை யாட்சி அவர்க்கிருந்ததென்பதில் ஐயமில்லை என்க.

" ஆதியந்த உலாவாசு பாடிய

சேரர் கொங்கு வைகாவூர் நன்னுடதில்

ஆவிநன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே" (திருப்புகழ்) எனச் சேரமான் பெருமாளுக்கு உரிமையுடையன் வாகவே கொங்கின் பிரிவான வைகாவூர் நாட்டையும் ஆவிநன்குடியையும் அருணகிரிநாதர் பாடுதலும், இங்கறியத்தக்கது. இதனால் 15 ஆம்

நூற்றாண்டுவரை சேர தேசமாகவே கொங்குநாடு கருதப்பட்டு வந்தமை தெளிவாதல் காணலாம் இனி இவ்வாழ்வார் தம்மை—

"கொல்லிகாவலன் கூடல் நாயகன்
கோழிக்கோன் குலசேகரன்" (3-10)

"கொல்லி நகர்க்கிறை கூடற்கோன்
குல சேகரன்" (6-10)

"கோழியார்கோன் கொடைக் குலசேகரன்" (9, 11. 10, 11) எனக் கூறிக் கொள்ளுவர், இதனால், கூடல் (மதுரை), கோழி (உறையூர்) வேந்தர்களுடன் தொடர்புடையவர் இச்சேரர்பெருந் தகை என்பது பெறப்படும். சேரமன்னர், சோழபாண்டிய நாடுகளையும் தம்முடையனவாகக் கூறிக் கொள்வதுண்டு என்பது சங்க நூல்காளால் அறியப்படுதலின்

"புகார் செல்வபூழியர் மெய்ம்மறை
கொல்லிப் பொருந" (பதிற்றுப் -73) இவ்வாழ்வாரும்

அம்முறையில் தம்மைப் புனைந்து கூறிக்கொண்டவர் போலும் என்று கருதுவாருமுண்டு. இவ்வாறு ஆழ்வார் கூற்றுப் புனைத் துரைகளே என்பதற்குத் தக்க காரணம் ஒன்றும் அவர் கூறாமை யால் அக்கருத்து ஏற்கத் தக்கதன்றாம், அதனால் ஏதோ சோழ பாண்டியர் தொடர்பு தமக்குண்மைப்பற்றியே ஆழ்வார் . கூடல் நாயகன் கோழியார் கோன் என்று தம்மைக் கூறலாயினர் என்றே தோற்றுகின்றது. ஆயின் அத்தொடர்புயாது ? என்பது இனி ஆராய்தற்குரியதாம்.

கொங்கு நாடாண்ட சேரவரசர் வரலாறுகளில் ஒருசில இப்போது நமக்குத் தெரியவருகின்றன. கோயம்புத்தூர் சேலம் பிரதேசங்களிலும் பிறவிடங்களினும் 10-ம் நூற்றாண்டு முதற் காணப்படும் இச் சேரர் சாஸனங்களால் இவருட்சிலர் 'சோழன்' என்றும் சிலர் 'பாண்டியன்' என்றும் சிறப்புப் பெயருடையரா யிருந்தனர் என்பது தெரியலாம். வீரசோழன் என்பான் முதற் பராந்தக சோழன் காலத்தே அவன் கீழ்ப்பட்டிருந்த சேர வேந்தனுவன். இவ்வாறே வீர பாண்டிய தேவன் என்ற கேரள வரசன் 'பாண்டியன்' என்ற பட்டப் பெயரோடு இராசகேசரி வர்மன் என்ற சோழர்க்குரிய சிறப்புப் பெயரையுந்தரித்திருந்தான். இவற்றினின்று, கொங்கரசர் சோழ பாண்டிய மரபுகளோடு தொடர்புடையரா யிருந்தவர் என்பது பெறப்படுகின்றது. இதற்கேற்ப, முதலாம் ஆதித்தன் காலத்தவனான கோக்கண்டன்

இரவி, வீரநாராயணன் என்று சேரர் தம்மைச் சந்திராதித்த குலத்தவர் என்று கூறிக்கொள்ளுதல் குறிப்பிடற் பாலது. இதற்குப் பாண்டியரது சந்திர வம்சமும் சோழரது சூரிய வமிசமும் ஆகிய இருபெரு மரபினையும் சார்ந்தவர் என்பது பொருளாகும். ஆகவே, சேரர் பாண்டிய சோழ மரபினம் என்பதே தெளிவாதல் காணலாம். இச் சந்திராதித்த குலம் மருமக்கட்டாய முறையில் கேரளப் பெண்களை மணந்து வந்த தந்தையர் வழியாக இச் சேரர்க்கு வந்ததாக வேண்டும். அன்றேல், பாண்டிய சோழ வமிசங்களினின்று சேரர் ஓரோர் காலத்தே தெரிந்தெடுக்கப்பட்ட செய்தி கேரள வரலாறுகளால் அறியப்படுதலின் அம்முறையில் இம்மரபு அமைந்ததாயினும் ஆம். எவ்வகையினும், 'கூடல் நாயகன், கோழிக் கோன்' என்று ஆழ்வார் கூறுகின்றவை, பாண்டிய சோழ நாடாட்சியில் தமக்கிருந்த தலைமை பற்றியன என்பதினும் அவ்விருவர் மரபுடனும் தம் குலத்தவர்க்கிருந்த தொடர்பு பற்றியன என்று கொள்ளுதலே பெரிதும் பொருத்தமெனலாம். சளுக்கிய வமிசத் தவனாய்ச் சோழகுலத்துப்புக்க முதற் குலோத்துங்கன் அவ்விரு மரபினர்க்கும் ஒரே புதல்வனாயிருந்தமையால் அவன் தந்தை வகையார் சந்திரகுலத்தவனாகவும் தாய் வகையர் சூரிய குலத்தவனாகவும் அவனைப் பாராட்டலாயினர் என்பது—

" திங்களி னிளங்குவி செம்மலிவ னென்றும்
செய்யபரி திக்குழவி யையனிவ னென்றுந்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமுந்
தனித்தனி யுவப்பதோர் தவப்பயனு மொத்தே "

[கோயம்புத்தூர் ஜில்லா வெள்ளூர்ச் சாஸனம் (Epe—Rep. 147 of 1910. Epe. Ind. iii p. 79–82) எனச் செயங் கொண்டார் பரணியில் அழகு பெறப் பாடுதலால் அறியலாம். அத்தகைய நிலைமையே குலசேகரரும் கொண்டனராதல் வேண்டும்.

இனி, 9-ம் நூற்றாண்டில் ஆதித்த சோழனுக்கு நட்பினனா யிருந்தவனும், கொங்குநா டுட்படச் சேரமண்டலத்தை ஆட்சி புரிந்தவனுமான கோக்கண்டன் இரவி என்ற சேரவேந்தனை சந்திராதித்த குலத்தவனென்று சாஸனங் கூறுதலின், அவனுக்கு ஒன்றரை நூற்றாண்டுகட்குமுன் சோழ பாண்டியத் தொடர்புடைய ராயும், கொங்கர் கோனுமாயிருந்த நம் குலசேகரப் பெருமாளை, அவன் முன்னோருள் ஒருவராகவே கொள்வது பெரிதும் ஏற்புடைத்தாதல் கண்டு கொள்ளத்தக்கது.

இனி, குலசேகராழ்வார், வடமொழியில் சுலோகரூபமாயமைந்த முகுந்தமாலை என்ற துதிநூலையும் இயற்றியவர் என்று கூறப்படுகிறது. அந்நூலில் இறுதிச் சுலோகத்தின் முற்பகுதி தமிழ்நாட்டார் பாடப்படி அடியில் வருமாறு:—

“யஸ்யப்ரியெள ச்ருதித ரெள கவிலோக வீரெள
மித்ரே த்விஜன்மவர பத்ம சராவ பூதாம்”

“யாவ ரொருவர் (குலசேகார்க்கு வேதவித்துக்களாயும், கவிகளுக்குள் தலைவராயும், பிராமண சிரேஷ்டர்களாயும் உள்ள பத்மன்சரன் என்னும் இருவர் அன்பார்ந்த நண்பினராயிருந்தனரோ” என்பது இதன் பொருள். இதனால், பத்மன், சரன் என்ற அந்தண கவிசிரேஷ்டர் இருவர் குலசேகர்க்கு அன்பு மிக்க நண்பினராக இருந்தவர் என்பது புலப்படும். இனி மலையாள நாட்டிலுள்ள அச்சுப் பிரதிகளில் “மித்ரே த்விஜன்மவர சிவாவ பூதாம்” என்று பாடங் காணப்படுகிற தென்றும், ஆனால் அந்நாட்டிலே உரையுடனுள்ள முகுந்தமாலைப் பிரதிகளில்—

“யஸ்ய ப்ரியெள ச்ருதிதரெள ரவிலோக வீரெள
மித்ரே த்விஜன்மவர பாரசவாவ பூதாம்”

என்ற பாடமும், (நம்பூரிப்) பிராமணரான ரவி என்பாரும் (வாரியப்) பாரசவரான லோக வீரன் என்பாருமாகிய வித்வான்கள் இருவர் குலசேகரார்க்குப் பெரு நண்பின ரானவர் என்ற கருத்தமைந்த பொருளுங் காணப்படுகின்றன என்றும், குலசேகரர் என்ற கேரள வேந்தரை ‘யுதிஷ்டிர விஜயம்’ என்ற தம் நூன் முகப்பிற் புகழும் வாசுதேவர் என்ற கவி தம்மை ‘ரவிபூ’ என்று தாமியற்றிய ‘திரிபுர தகனம்’ என்ற வேறு நூலில் கூறுவதனாலும், ‘ரவிபூ’ என்பதற்கு ரவிபுத்திரரான வாசுதேவர் என்று—அத்திரிபுர தகன உரையாசிரியரும் 13-ம் நூற்றாண்டினருமான நீலகண்டர் பொருள் குறித்திருப்பதனாலும் ரவி என்பவர்க்குப் புத்திரரே வாசுதேவர் என்பது தெளிவாமென்றும், அதனால் அந்த ரவியே குலசேகரர் காலத்தவராய் அவரால் முகுந்த மாலையிற் கூறப்பட்டவராதல் வேண்டும் என்றும் ஆகவே, குலசேகராழ்வார் காலம் அப்பெயர் பெற்ற கேரள வேந்தர் விளங்கிய 9-ம் நூற்றாண்டின் முற்பாதியேயாம் என்றும் திருவனந்தபுர ஸமஸ்தானம் சிலாசாசன அத்யக்ஷரான ஸ்ரீமாந் இராமநாத ஐயரவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் ஆராய்ச்சி பெரிதும் அருமையுடையதேயாகும். ஆயினும் இதன் முடிவை ஒருதலையாகத் துணியக் கூடவில்லை. முகுந்த மாலைக்குத் தமிழ்

நாட்டினும் வழக்கு மிருதியுண்டு. "கவிலோக் வீரௌ' என்பதும் 'பத்ம சராவ பூதாம்' என்பதுமே இங்கெல்லாம் வழங்கும் பாடங்கள். இதனல் மலேயாள நாட்டிலும் தமிழ் நாட்டிலும் வழங்கும் இருவகைப் பாடங்களுள் எது ஆழ்வார் காலத்தது என்பது தெளியப்படாத நிலையில் ஐயரவர்கள் கருத்து ஏற்கக்கூடியதன்று. ஒருகால் மலேயாளப் பாடமே உண்மை புடையதாகக் கொள்ளினும் அதனுல் முகுந்தமலே இயற்றியவர் குலசேகரர் என்பது பெறப்படுமேயன்றிக் குலசேகராழ்வாரே அக்குலசேகரர் என்பது தெளிவாக வழியில்லே. ஆழ்வார் அருளியதே முகுந்தமாலே என்ற கொள்கையில் சம்பிரதாயஸ் தரான பெரியோர் பலருக்கு ஐயப்பாடு பெரிதுமுண்டு. அன்றேர் ஐயுறுதற்குரிய காரணம் அடியில் வருமாறு :—

முகுந்தமாலே பற்றிய முன்னேர் கருத்து

முகுந்தமாலே ஆழ்வார் அருளிச் செயலாயின், பெருமாள் திருமொழியைப் பாடியதாகக் கூறும் பழைய நூலான திவ்யசூரி சரிதம் அம்மாலேயையும் குறிப்பிடாமற்போகா தென்பது திண்ணம். குலசேகரர் நட்பினரைப்பற்றி முகுந்தமாலே கூறும் முக்கியமான செய்தியையும் அந்நூல் கூறியதில்லே. இவை போயினும், திவ்யபிரபந்த முதலியவற்றின் வியாக்கியானங்களிலே கூரத்தாழ்வான் பட்டர் முதலிய பெரியோர் திருவாக்குக்கள் உதகரிக்கப் படுமாறு. ஆளப்படுஞ் சிறப்பும், கோயில் முதலிய சந்நிதிகளிலே விசேட சமயங்களில் ஓதப் பெறும் பெருமையும் இம்முகுந்தமாலேயும் பெற்றிருத்தல் வேண்டுமன்றே ? அவை ஒன்றுமே இந்நூலுக்கு இல்லாமையால், சம்பிரதாய நூல்களுள்ளே அம்மாலே சேர்ந்ததன்று என்பதே முன்னேர் கருத்தாகத் தோன்றுகின்றது என்பதேயாம். ஆகவே பண்டிதரும் திருமாலடி யாரும் குலசேகரர் என்ற பெயருடையவருமாய்ப் பிற்காலத்து விளங்கிய கேரளவேந்தர் ஒருவரால் அருளிச்செய்யப்பட்டதே அம்முகுந்தமாலே என்பது பொருத்தமென்க. அவ்வேந்தர்க்கு ஐயரவர்கள் குறித்த 9-ம் நூற்றுண்டு ஸ்ரீமந் நாதமுனிகள் காலத்தோடு நெருங்கியதாதலால், குலசேகராழ்வார்க்கும் அதனேயே கொள்ளுதல் ஆழ்வார் ஆசாரியர் என்று வேறு படுத்தப்பட்டு வழங்கும் பிரபல வரலாறுகளோடு பெரிதும் மாறுபடுதலும் அறியத்தக்கது. இவற்றல் முகுந்தமாலே பாடிய குலசேகரன், குலசேகராழ்வார்க்குப்பின் அவர் வழித்தோன்றலான திருமாலடியார் எனக் கொள்வதே மேலே கூறிப்போந்த ஆழ்வார்

செய்திகளோடு பெரிதும் ஏற்புடையது என உணர்ந்து கொள்க. காஞ்சிபுரத்தில் ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாய கிரந்தங்களில் வல்லவராக விளங்கும் வித்வான் ஸ்ரீ. உப. வே. அண்ணங்கரா சார்யஸ்வாமி எழுதி வெளியிட்டுள்ள முகுந்தமாலை தமிழ் வியாக்யான பீடிகை பார்க்க.

இரண்டாம் நந்திவர்மன் ஆட்சி.

இனி, சுந்தரர் சேரமான் பெருமானாயனார் காலத்தவனாகத் தெரியவரும் இராஜ சிம்மனுடைய மகனுக்குப்பின் பட்டம் பெற்றவன் இரண்டாம் நந்திவர்மன் என்பான். இவனாட்சி 717 முதல் 779 வரை 62 வருஷம் மிகப் பிரபலம் பெற்று விளங்கியது. இவன் பட்டத்துக்கு வந்த சில வருஷங்களில் பல்லவகுல ஜாதியார்கள் இவனுக்குப் பகைவராய்க் கிளம்பினர். பாண்டியனும் இவர்கள் சார்பில் நின்று தன் எல்லைப்புறங்களில் பல்லவ சேனையைத் தாக்கலாயினன். நந்திவர்மன் சேனாபதி உதய சந்திரன் என்பான் இப்பகைவர்களை—மண்ணைக்குடி, நிம்பவனம் சூதவனம், சங்கரகிராமம், நெய்வேலி, சாளிதுர்க்கம் என்ற இடங்களில் வென்றவன் என்று, அவனது உதயேந்திர சாஸனங் கூறுகின்றது. இதுவே, இப்பல்லவனது இளமைக்காலத்து நிகழ்ச்சிகள்.

திருமங்கையார்

திருமங்கையாழ்வார் தாம் பெரிய திருமொழிப் பரமேச்சுர விண்ணகரப் பதிக்கத்தில், அக்கோயில், பல்லவ னொருவனால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றதென்று பாடுகின்றார். பரமேச்சுர விண்ணகரம் என்பது, காஞ்சிபுரத்துள்ள வைகுண்டப் பெருமாள் கோயிலாகும். இப்பெயரால் பரமேச்சுரன் என்பவனால் கட்டித் தன் பெயரிட்டு வழங்கிய விஷ்ணுக்ருகம் அது என்பது தெரியலாம். மேற்படி கோயிற் பிராகாரங்களிலே சிற்பவுருவங்கள் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், சிலவற்றின் கீழே வரையப்பட்டுள்ள எழுத்துக்களை சாஸன பரிசோதகர்கள் வெளிப் படுத்தியுள்ளார்கள். அவ்வெழுத்துக்களிலிருந்து மேற்கூறிய இராஜசிம்மன் மகன் இரண்டாம் பரமேச்சுவர வர்மன் சந்ததியற்று இறந்தமையால், பல்லவ தாயாதியான இரண்யவர்மன் மக்களுள் 12-வயதுள்ள பாலனை மந்திரி முதலியோர் தெரிந் தெடுத்து முடிசூட்டினர் என்பதும், அரசு பெறுதற்கு முன் பல்லவமல்லன் பரமேசுவரன் என்றும், அது பெற்றபின்

அபிஷேகப் பெயராக நந்திவர்மன் என்றும் இச்சிறுவனுக்குப் பெயர்கள் வழங்கிவந்தன என்பதும் நன்கு அறியப்படுகின்றன. இவ்வாறு, மேற்படி கோயிலிற் கண்ட உருவங்களும் எழுத்துக்களும் நந்திவர்மனது வரலாறாகவே இருப்பதாலும், வேறு பல்லவர்களைப் பற்றிய செய்தி அவற்றில் அறியப்படாமையாலும் அவ்விளைஞன அரசனே தன் பழம்பெயர் விளங்க அப்பரமேச்சுர விண்ணகரத்தைக் கட்டிப் பிரதிஷ்டித்துச் சிறப்பித்தவன் என்று தெளிவாகின்றது. இவனுக்கு முன்பாண்ட இரண்டாம் பரமேச்சுரவர்மன் கட்டியதாக, இக்கோயிலின் பெயர் கொண்டு இதுவரை கருதப்பட்டு வருகின்றதாயின் யாதொரு சாதனமும் பிரமாணமும் இல்லை முந்திய பரமேச்சுரன் கட்டிய கோயிலாயின், அக்கோயிலைப்பாடும் திருமங்கையாழ்வார் அவன் செய்திகளைக் கூறிச் சிறப்பியாது செல்லார். ஆனால், அவர் தம்பதிகத்திற் கூறுஞ்செய்திகள்யாவும். நந்திவர்மனாகிய பரமேசுவரனுக்கே உரியனவாயுள்ளன. இவ்வாழ்வார் கூறும் போர்களையும் அப்பல்லவன் சேனாபதியால் நடத்தப்பட்டனவாக மேற்குறித்த போர்களையும் ஒப்பு நோக்குமிடத்து, அவைபெரும்பாலும் ஒற்றுமைப்படுதலைக் காணலாம். இவற்றை விரிவாக நான் செந்தமிழிலும் ஆழ்வார்கள் காலநிலையிலும் வெளிப்படுத்தியிருக்கிறேன்.

" நிரந்தவர் மண்ணையிற் புண்ணுகர் வேல்,
நெடுவாயி லுகச்செரு வில்முனநாட்[illegible]ந்த

" விடைத்திறல் வில்லவன் நெல்மெலி[illegible]ல்
வெருவச்சிலை வேல்வலங் கைப்[illegible]த்த—
படைத்திறற் பல்லவர் கோன் "

" தேம்பொழிற் குன்றெயில் தென்[illegible]னைத்
திகைப்பச் செருமேல்வியந் தன்[illegible]சென்ற .
பல்லவர்கோன் "

என்ற ஆழ்வார் பாடல்களால், மண்ணை, நெல்மேலி, ~~குன்றெயில்~~ என்ற விடங்களில் பல்லவன் வென்றவன் என்று ஆழ்வார் பாடுகின்றார். மண்ணை, நெல்மேலி என்பன, தஞ்சாவூர் ஜில்லா அறந்தாங்கி தாலுகாவில் உள்ள மண்ணகுடியும் நெல்மெலியுமாகும். மற்றப் போர்க் களங்களாக உதயேந்திர சாஸனங் கூறும் சூதவனம், நிம்பவனம், சங்காக்கிராமம் என்பவை மேற்படி ஜில்லா அறந்தாங்கிப் பிரதேசத்தை யடுத்துப் பட்டுக்கோட்டைத்

தலூகாவில் உள்ளன. இவற்றுள், சூதவனமென்பது, திருவுசாத்தானம் எனத் தேவாரம் பெற்ற சிவதலத்துக்கு ஒருபெயர், இப்போது கோயிலூர் என்பர் நிம்பவனம் என்பது வேப்பங்காடு என்ற ஊராம். புதுக்கோட்டைச் சிமையைச் சார்ந்த திருவரங்குளச் சாஸனத்தில் இந்நிம்பவனம் பிரஸ்தாபிக்கப் பட்டிருந்தலாலும் இது அச்சீமையை அடுத்துள்ளதென்பது தெரியலாம். சங்கரக் கிராமம் என்பது சங்கரனூர் குடிக்காடு என்ற சிற்றூராதல் வேண்டும். குடிக்காடு—கிராமம்; "ஐவர்க்குமைந்து, குடிக்காடு நல்குதியோ கூறு" என்பது பாரதவெண்பா. நெல்வேலி அறந்தாங்கித்தாலூகாவிலும் சங்கரனூர் குடிக்காடு பட்டுக்கோட்டை தாலூகாவிலும் உள்ளன. ஆகவே, உதயசந்திரன் நடத்திய போர்கள் எல்லாம் பாண்டியநாட்டின் எல்லைப்புறங்களில் நடந்தவைகளே என்பது ஐயமின்றிப் பெறப்படும். "விடைத்திறல் வில்லவனை நெல்வேலியில் வெருவ வென்றான்" என்றார் ஆழ்வார் "சபரர் தலைவனாகிய உதயனை வென்றான்" என்று கூறுகின்றது சாஸனம். இதனால், ஆழ்வார் கூறிய வில்லவன் என்பதற்கு வில்லாளனாகிய சபரர் தலைவன் என்பதே அவர் கருதிய பொருளாக வேண்டும். பரமேச்சர விண்ணகரப்பதிகத்தின் முதற்பாட்டில் "பல்லவன் வில்லவ னென்றுலகிற பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழற் பல்லவன்" என்று பல்லவனைப் பணிந்த அரசருள் சேரனை வில்லவனென்று திருமங்கையார் கூறிவிட்டமையால், இங்கு "விடைத்திறல் வில்லவன்" என அடங்காதெதிர்த்த பகைவனாகக் கூறப்பட்டவன் சபரர் தலைவன் என்பதே பொருத்தமாகின்றது. பட்டுக்கோட்டை அறந்தாங்கித் தாலூகாவில் உள்ள ஜமீன்கள் கள்வர் தலைவர்களது ஆட்சிக்குட்பட்டனவாக இன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கள்வர் தலைவராகிய திருமங்கையாழ்வாரைச் திவ்யசூரி சரித முதலியவை சபரர் தலைவராகக் கூறுதலும் இங்கு ஒப்பிடத்தகும். இனி, "குன்றெயில் தென்னவன் வெருவச் சென்றவ னென்று பல்லவனைத் திருமங்கையார் கூறுவர்". "பகவதியாற் காக்கப்படும் காளிதுர்க்கத்தை யழித்துப் பாண்டியனை மண்ணைக்குடியில் தோற்கச் செய்தவன் எவனோ" என்று உதயேந்திர சாஸனங் கூறுகின்றது. இதனால், காளிதுர்க்கப் போரும் மண்ணைகுடிப் போரும் பாண்டியனுடன் நடத்தப்பட்டவை என்பது தெரியலாம். காளிதுர்க்கத்தை அழித்து என்பது வேறொருவனைத்தாக்கிய செயலாயின், அத்துர்க்கம் யாரது என்று எழக்கூடிய கேள்விக்கு இடையில்லையாம். ஆகவே, மண்ணைக்குடியிற் றோற்ற பாண்டிய

னுடையதே காளிதுர்க்கம் என்பதில் ஐயமில்லை. பாண்டியனுக்கு ஏழு பேரான்கள் இருந்தன என்று புறநானூற்றின் 38-ம் பாடல் கூறுவதால், அவற்றுள் இத்துர்க்கம் ஒன்றுதல் வேண்டும். குன்றெயில் என்று ஆழ்வார் கூறியது, பழைய வியாக்கியானத் தின்படி குன்றுபோலும் எயில் என்றேனும் குன்றின் மேலுள்ள எயில் என்றேனும் பொருள்படும்.

பல்லவமல்லன் சிறுவனாய்ப் பட்டமெய்தியதும் உண்டான தாயாதிக் கலகத்தில், சிம்மவிஷ்ணு காலமுதலே சோணாடு முழுவதிலும் இருந்த பல்லவாதிக்கத்தைத் தொலைக்கவே பாண்டியன் இவ்வெல்லைப்புறத்துப் போர்களை எழுப்பினவனாக வேண்டுமென்றே சொல்லலாம். டாக்டர் ஹுலஷ் துரையும் இப் போரைத் தென்னாட்டு நிகழ்ச்சியாகவே கருதுவர். திருமங்கை யாரும் தம்பதிகத்தில் பாண்டியனே பல்லவன் பகைவனாய் எதிர்த்தவன் என்று மூன்றிடங்களில் அவனைக் குறிப்பிடுதலுங் காணலாம். இப்பிரதேசங்களை அடுத்த திருவாலி நாட்டுக் கதிப ரானமையால் திருமங்கை மன்னன் தாமுள்ள சோணாட்டெல்லைப் போர்களை நன்கறிந்தவராய்ப் பல்லவன் வெற்றியைச் சிறப்பிக் கின்றார் என்றுந் தோன்றுகின்றது. இவ்வாறு பல்லவ சேனைகளை எதிர்த்துநின்ற பாண்டியன் சம்பந்தர் காலத்தவனான நெல்வேலி வென்ற நெடுமாறன் பேரன் மாறவர் மன்பராங்குசன் என்பவனே. இவன் பல்லவமல்லனை வென்றவன் என்று, வேள்விகுடிச் சாஸனம் அவன் பெயர்குறித்துக் கூறுதல் காணலாம். இப்பாண்டியனை "உலகுடை மன்னவன் தென்னவன்" என்கிறார் ஆழ்வார். பல்லவனைச் சிறப்பித்து வரும் பாடல்களில், பாண்டியனை இவ்வாறு விசேடித்தற்குப் பொருத்தமுண்டு. இவ்வேந்தன் செய்கைகளாக வேள்விகுடிச் சாஸனங் கூறுவனவற்றுள்

"கூடல் வஞ்சி கோழி யென்னும்
மாட மாமதில் புதுக்கியும்"

என்பதும் ஒன்றாகும். இதனால், மூன்று தமிழ் வேந்தர் தலைநகரங்களும், இப்பாண்டியன் ஆட்சிக் குட்பட்டிருந்தவை என்பது தெரிதலால், அக்காலத்துப் பெருவேந்தனாக இவன் கருதப்பட்டவன் என்பது வெளியாகும். அதனால், சேரன் செங்குட்டுவனை அவன் பெருநிலை நோக்கி "உலகவேந்தன்" என்று இளங்கோவடிகள் சிறப்பித்தது போல இப்பாண்டியனை ஆழ்வார் கூறினார் என்றே கொள்ளத்தக்கது.

இவற்றால், பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் திருமங்கை யாரால் சிறப்பிக்கப்பட்ட பல்லவன் இரண்டா நந்திவன்மனே என்பதும் இவனது இளமைப் பெயராலேயே அத்திருமால் கோயில் பேர் பெற்றது என்றும் தெளிவாகும். 'பார்மன்னு பல்லவர்கோன் என்று இவ்வாழ்வாரால் இருமுறை கூறப்படு வதால் இந்நந்தி அவர் காலத்தில் விளங்கியவன் என்பது தெளி வாக பெறப்பட கூடியது. ஆயினும் தம்பதிகத்தை அவனிளே மையிற் பாடியவரல்லரென்பது பண்டு, ஒருகால், முன்னாள் அன்று என்று அவன் போர்களை விசேடித்தலால் தெரிகின்றது. இவை யாவும் சிலபல ஆண்டுகள் மாதங்கள் நாள்களைக் குறிப்பதற்கும் இலக்கியங்களில் நெடுக வழங்கி வருவனவேயாம்.

"பண்டு காம ரான வாறும் . . ஒக்க வுரைத் திடுமின்"
(பெ. தி. 1, 3, 5)

"வந்தணங்கா மன்னர் தேயமுன்னாள் வென்றான்" (களவி)

"முன்னொருகால் என்மகளைக் கண்டேன்" (சீவக. 1,807)

"பகடுந்தி வந்தா ரன்றழிய வேல் கொண்ட கோன்" (களவி)

எனக் காண்க. இவற்றால், சிலர் கருத்தின்படி அச் சொற்கள் ஆழ்வார்க்கு நெடுங்காலத்துக்கு முன் நிகழ்ச்சியே குறிக்க வேண்டும் என்னும் நியதி இல்லை. இந்நந்தியின் சாஸனங்கள்— "அச்சுதனைத் தன் ஹ்ருதய சந்நிஹிதமாகவுடையவன்" "முகுந்தனைத் தவிர வேறொருவரையும் வணங்கியறியாத முடி யுடையவன்" என்று இவனது பரமவைஷ்ணவத் தன்மையைச் சிறப்பித்தலால் ஆழ்வார் பாடுதற்கேற்ற தகுதியுடையவன் இப் பல்லவனே என்பது தெளிவாகும். சிலர் திருமங்கையாழ்வார் கூறும் பல்லவன் இரண்டாம் நந்தியின் மகனான தந்திவர்மன் என்றும். பேரனான தெள்ளாறெறிந்த நந்தியென்றுங் கருதி யெழுதி யுள்ளனர். மகனான தந்தியாயின், அவனது ஆட்சித் தொடக்கத்தில் தான் ஆழ்வார் இருந்திருத்தல் கூடியது. ஆனால், பேரனான நந்தி காலத்தவராகார்.

"ஹரசரண ஸரோஜாத் தம்ஸ சிஹ்நேந மூர்த்நா ।
முகுளித கரபத்மோ வந்துதே நந்திவர்மா"

என்று இவனது வேளூர்ப் பாளய சாஸனமும் "சிவனை முழுது மறவாத சிந்தையான்" என்று இவனைப் பற்றிய நந்திக் கலம்பகமும் கூறுதலால். இப்பல்லவன் பரமசைவன் என்பது

நன்கு விளங்கும். மேலும் இவன் காலம் வைஷ்ண ஆசார்யத் தலைவரான நாதமுனிகள் காலத்தை ஒட்டியதாதலால் ஆழ்வார் கட்கு நெடுங்காலத்துக்குப் பின் ஆசார்யர்கள் அவதாரம் என்று கூறும் பழைய வழக்கோடு மாறுபடுவதுமாகும். இவனை ஆழ்வார் காலத்தவனாகச் சிலர் கருத நேர்ந்ததற்குக் காரணம் தண்டந் தோட்டம் சாஸனமே. அதனில் நந்திவர்மன் பரமவைஷ்ணவன் என்று கூறப்பட்டுள்ளது. இந்நந்தி தெள்ளாறெறிந்த மூன்றும் நந்தியாக முதலிற் பலரும் கருதிவிட்டனர். ஆனால் அவன் பாட்டன் இரண்டாம் நந்திவர்மனுடைய சாஸனமே என்பது பின்பு நன்கு விளங்கிவிட்டது.

ஆகவே, திருமங்கையாழ்வார் காலத்துப் பல்லவன் பரமேச்சுர விண்ணகரத்தில் அவராற் புகழப்பட்ட இரண்டாம் நந்திவர்மனே என்பதில் சிறிதும் ஐயப்பட இடமில்லை. இனி இவ்வாழ்வார், தம் பெரியதிருமொழி அட்டபுயகரப் பதிகத்திறுதியில்—

" மன்னவன் தொண்டையர்கோன் வணங்குநீண்முடி மாலை
[வயிர மேகன்

தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி"

என்று பாடுகின்றார். இதனுள் தொண்டையர் வணங்கும் வயிரமேகனது கீர்த்திப் பிரதாபங்கள் காஞ்சிபுரத்தைச் சூழ்ந்துள்ள செய்தி குறிக்கப்பட்டிருத்தல் தெரியலாம். 26 வருஷங்கட்கு முன் திருமங்கையாழ்வாரைப் பற்றி நான் எழுத நேர்ந்தபோது இவ்விஷயத்தைக் குறிப்பிட்டு—தொண்டையர் கோனால் வணங்கப்படும் வயிரமேகன் என்று கூறப்பட்டவன். 753-4-ல் படையெடுத்து வந்து பல்லவமன்னன் ஆட்சிசெய்து வந்த காஞ்சியைப் பிடித்த இரட்டவரசனும் வயிரமேகன் என்ற பெயருடையவனுமான தந்திதுர்க்கனே யாதல் வேண்டுமென் பதற்கு வேண்டிய சாஸனப் பிரமாணங் காட்டி எழுதியிருந்தேன். முதன்முதற் கண்டெழுதிய இக்கொள்கையைப் பற்றிச் சிலர் ஒத்தும் சிலர் ஒவ்வாமலும் வாதம் புரிந்து வந்த செய்தி பலரும் அறிவர். அதனை இப்போது ஒரு முடிவு படுத்திக் கொள்ளலாம் என்றே எண்ணுகிறேன். தொண்டையர் கோனான பல்லவனால் வணங்கப்படும் வயிரமேகன் என்று நான் ஆதியில் கருதிய பொருள் ஆற்றொழுக்குடையதா யினிதமைகின்றது. இதன்படி பல்லமல்லன் வயிரமேகனை வென்று கச்சியைப் பிடித்தவன் என்பது பெறப்படும். இவ்வாறன்றி தொண்டையர் கோனாம் வயிரமேகனுமாகிய பல்லவனுடைய வலிபுகழ்கள் சூழ்ந்த கச்சி யென்றுப் பொருள் கொள்ளலாம். இதன்படி பல்லவனுக்கே

வயிரமேகனென்று பெயரிருந்த தென்பது பெறப்படும். தம் பதிகத்தில் பல்லவமல்லனை விசேடமாகப் புகழ்ந்த ஆழ்வார். அவன் பிறவேந்தனை வணங்கியவனாகக் கூறுர் என்பதே என் கருத்தில் கூறப்படும் பெருந்தடையாம். தங்காலத்தில் பெருவலி பெற்றிருந்த பல்லவனையும் வெற்றிகொண்ட வேந்தனது அரிய செயலை, அபிமானம் பற்றாது, வீரரான திருமங்கை மன்னன் புகழ்கின்றார் என்பதும் "வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி" என்பதற்குப் பல்லவனுடைய வலியும் புகழும் அவன் ஊரில் சூழ்ந்திருந்தன என்று கருத்துக் கொள்வது சிறவாமையால், அவ்வலி புகழ்களுக் குரியவன் அந்நியனாக வேண்டுமென்பதும், கச்சியைப் பிடித்த வயிரமேகனை தந்திதுர்க்கன் பின் சமாதானம் பெற்றுத் தன்மகள் ரேவா என்பவளை பல்லவமல்லனுக்கே மணம் புரிவித்தானென்றும், அவளிடம் பிறந்த மகனே பின்பட்டமெய்திய தந்திவன்மப் பல்லவனென்றுந் தெரியவருதலால், சம்பந்தஞ் செய்து கொண்ட முறையாலும் அவ்வயிரமேகன் ஆழ்வாரால் சிறப்பிக்கத்தக்கவன் என்பதும், நான் அத்தடைகட்குக் கூறிய சமாதானங்கள், இவை ஏற்றுக் கொள்ளப்படின், அவ்வயிரமேகன் கீர்த்திப் பிரதாபங்கள் சூழ்ந்துள்ள செய்தியால் கச்சியைச் சிறப்பிக்கும் அட்டபுயகரப் பதிகத்தை ஆழ்வார் அவன் படையெடுத்த 753-4-ல் பாடியவரென்றே சொல்லலாம். இனி, மேற்கூறிய தந்திதுர்க்கன் மகள் வயிற்றுப் பேரனும் பல்லவமன்னன் மகனுமான தந்திவர்மனுக்கு வயிரமேகன் என்ற பெயர் வழங்கியிருக்க வேண்டும் என்பது அத்தந்தியின் 2, 9-ஆம் ஆட்சி வருஷங்களிலமைந்த உத்தரமேரூர்ச் சாஸனங்களில் வயிரமேக தடாகம் என்ற பெயரால் கருதப்படும் என்றும், இது அவன் தாய்ப்பாட்டனிடமிருந்து பெற்ற பெயரென்றும், அதனால், ஆழ்வார்வாக்கில் கண்ட தொண்டையர்கோனான பல்லவனும் வயிரமேகனும் ஒருவனே என்றும் சிலர் கூறுவர். யான் காட்டிய சாஸனப் பிரமாணம் போல தந்திபல்லவனுக்கே வயிரமேகன் என்ற பெயருண்டென்று சொல்லக்கூடவில்லையேனும் இக் கொள்கைக்கு ஆழ்வார் வாக்கை அவ்வூகத்துக்கேற்ப இணக்கிப் பொருள் கொள்ளுதற்கு இடமுண்டு. இவனுக்கு அவ்வாக்கை இணக்குவதாயின், தொண்டையர்கோனும், வணங்கப்படும் பரராஜாக்களது நீண்ட முடிமாலைகளை யுடையவனுமான வயிரமேகன் என்று பொருள் கொள்ளத்தக்கது.

இத்தந்தியின் தந்தையை—

" ப்ரணதாவநீபதீம் மகுடமாலிகாலீட சாணாரவிந்த "

"வணங்கும் மன்னரது முடிமாலைகளால் தழுவப்பெற்ற பாத தாமரைகளை உடையவன்" என்று அவன் சாஸனம் கூறுவது இதனுடன் ஒப்பிடத்தக்கது. இக்கருத்தே பாடற்கியைய ஆழ்வாரால் மேற்கூறிய தொடர் சுருக்கிக் கூறப்பட்டதென்று கொள்ளக்கூடும். மேற்கூறிய கருத்துக்களுள் எது கொள்ளற் குரியதாயினும் தந்தையும் மகனுமாகவும், பரமவைஷ்ணவர்களாகவும் விளங்கிய நந்தி தந்தி இருவரும் ஆட்சி புரிந்த 8-ம் நூற்றாண்டே திருமங்கை மன்னனுக்கு உரிய தென்பதில் சிறிதும் ஐயமில்லை. தந்திவர்மன் 780 முதல் 830 வரை ஆண்டவன். இவனதாட்சியிலும் தமிழ் நாட்டின் தென்பகுதியில் பல்லவாதிக்கம் செழிப்புற்றிருந்த காலமே இவ்வாழ்வார்க்கு உரியதாகும். திருமங்கையார் திருவல்லிக்கேணிப் பதிகத் திருதியில்—

"மன்னு தண்பொழிலும் வாவியு மதிலும்
மாட மாளிகை மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத்
திருவல்லிக் கேணிநின்றானை"

என்று பாடுகின்றார். இதனுள், திருவல்லிக்கேணிக்குப் பல திருப்பணிகளுஞ் செய்த பல்லவனைத் தென்னன் என்று அவர் கூறுதல் காணலாம். இத்திருப்பணி செய்தவன் நந்தியேனும் தந்தியேனும் ஆதல் வேண்டும். அவ்வூர்க் கோயிலின் கர்ப்பக் கிருகத்திற் கண்டெடுக்கப்பட்ட சாஸனமொன்று, தந்தியின் 12-ஆம் ஆட்சி வருஷத்தில் அமைந்ததாக இருத்தலும் அறியத் தக்கது. இங்ஙனம் திருப்பணி செய்த பல்லவனைத் "தென்னன" என்று திருமங்கை மன்னன் கூறுதலால், தென்னாடு பல்லவ ராட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் அவர் அப்பதிகம் பாடியவராதல் வேண்டும். இத்தகைய தென்னாட்டாதிக்கம் தந்திவர்மன் காலத்தில் அவனது 16-ஆம் ஆட்சி வருஷத்துக்குப் பின்பு, பல்லவர் கையைவிட்டு நழுவிப் பாண்டியர் வசமாயிற்று. இவ்வாறு கைப்பற்றிய பாண்டியன் மாறஞ்சடையன் என்ற முதல் வாருணன் ஆவன். இது பற்றிச் சிறந்த ஆராய்ச்சியுடன் கனம்— தூப்ராயில்துரை தம் பல்லவ சரித்திரத்தில் நிரூபித்துள்ளார். ஆழ்வார் புகழ்ந்துள்ளபடி, திருவல்லிக்கேணி திருப்பணி செய்தவன் பல்லவமல்லனாயின் அவன் தென்னாட்டைத் தன் காலத்தில் அடிப்படுத்தியவனாகலின், அவனைத் தென்னன் என்று அப்பெரியார் கூறத் தடையில்லை. அவன் மகன் தந்தியாயின்,

16-ஆம் ஆட்சி வருஷத்துக்குப்பின் அவன் தென்றமிழ்நாட்டை முழுதும் இழந்தவனுதலின், அவ்வாட்சியாண்டுக்கு முற்பட்ட காலத்தே அவனைத் தென்னன் என்று அப்பெரியார் சிறப்பித்திருத்தல் வேண்டும். இக்கருத்து அறிஞரால் ஏற்றுக்கொள்ளப் படின், தந்தியின் 16-ஆம் ஆட்சி வருஷமான 795-க்கு முன் திருமங்கை மன்னன் தம் திருவல்லிக்கேணிப் பதிகத்தைப் பாடியவர் என்று நாம் ஒருதலையாகக் கூறலாம்.

மேற்கூறியபடி பல்லவரது தென்னாட்டு ஆதிக்கத்துக்கு முக்கிய காரண பூதராய் நின்றுதவியவர்கள் முத்தரையர் என்ற வகுப்பினராவர். இன்னோர் கள்வர் குலத் தலைவராகவும், பெருவீரர்களாகவும், புலவர் புகழ்ச்சிக்கு உரியவராகவும் பழங் காலத்தே விளங்கினர். பல்லவர்க்குப் பெருந்துணையாக நின்ற இன்னோர், பாண்டிய சோழர்களுடன் பல போர்கள் புரிந்து சோணாட்டை அவர் குடைக்கீழ் நிறுவியதோடு, அவர்க்குப் பிரதிநிதிகளாய்த் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு அந்நாட்டைத் தாமே ஆட்சி புரிந்தும் வந்தனர்.

நாலடியாரில் பெருமுத்தரையர் (200, 286) என்று சிறப்பிக்கப் பெற்றிருத்தலாலும், செந்தலைச் சாஸனத்தில்—பாச்சில் வேள்—நம்பன், குலாலன்—காஞ்சன், கோட்டாற்று இளம் பெருமானுர் ஆசாரியர் அநிருத்தர் என்ற புலவர்களாற் பாடப் பெற்றிருந்தலாலும் (செந். தொ. 6—பக். 10-15) தமிழ் முத்தரையர் கோவை (யாப்பருங்கலவிருத்தி—பக். 486) என இவர் சம்பந்தமாக வழங்கும் நூலாலும் இன்னோரது புலவர்பாடும் புகழுடைமை நன்கு விளங்கும். (Ep. Ind. XV. ii p. 49. ff)+ கள்வர் குலத்தவர்க்குச் செம்பிய முத்தரையர் என்ற பட்டப் பெயர் சோணாட்டில் இன்னும் வழங்குதல் அறியத்தக்கது. (திருவாளர் மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் எழுதிய கள்ளர் சரித்திரம், பக். 23—24)

பல்லவ மன்னனது இளமைக் காலத்தில் அவனாட்சியை நிலைநிறுத்திய கள்வர் தலைவருள்ளே பெரும்பிடுகு முத்தரையன் என்பான் சிறந்தவன். இவனைக் கள்வரகள்வன் என்று சாஸனம்† விசேடித்துக் கூறுகிறது. திருமங்கை மன்னன் ஆலிநாட்டதிபரான கள்வர் குலத்தவர் என்று வரலாறு வழங்குதலும், பல்லவாதிக்கம் சோணாட்டிற் பல்கி நின்ற காலத்தே தாழும் விளங்கி அப்பல்லவர் பெருமைகளையே பலபடப் பாராட்டுதலும் மேலெல்லாம் நன்கறியப்பட்டன. இங்ஙனம் கள்வர் குலத்துதித்த சோணாட்டுத் தலைவராய்ப் பல்லவாபிமானம் மிக்குடைய நம் பெரியாரை மேற்

கூறிய முத்தரைய மரபினருள் ஒருவராகவே நாமுங் கருதல் கூடியதன்றோ ? இத்தகைய வீரகுலத்தவராய்த் தம் அரசனுக்குப் பேருதவி புரிந்த சிறப்புப் பற்றியே—

"ஆலிநாட னருள்மாரி யரட்ட முக்கி யடையார் சீயம்"

"வாட்டிறற் றானை மங்கையர் தலைவன்"

"அமரிற் கடமா களியானை வலான்"

"ஒன்னலர் தங்களை வெல்லும் ஆடன்மா வலவன்"

"மருவலர்த முடல்துணிய வாள்வீசும் பரகாலன்"

என்றிவைபோலும் வீரப் பெருமையால் தம்மை ஆழ்வார் சிறப்பிப்பாராயினர் என்றுணர்க. பல்லவர்களுள் பரமேசுரவர்மன் காலத்தும், அவன்பின் பட்டம் பெற்ற நந்தி தந்திவர்மர் காலங்களிலும் விளங்கிய முத்தரையர்கள் தம்மரசரைப் போலவே திருமால் சமயத்தவர்களாக இருந்திருத்தல் கூடிய தென்பதும் இங்கு அறியத்தக்கது. கள்வர் மரபினருள் திருமால் சமயத்தவராகப் பலர் சோணாட்டில் இன்றும் உள்ளனர். களவுத் தொழிலில் இழிவான முறைகளை யெல்லாம் திருமங்கை மன்னன் கையாண்டொழுகியவர் என்ற சரித்திரம் நெடுங்காலமாகப் பிரபலம் பெற்றுள்ளது. அவை பெரும்பாலனவும் இவரது குலப் பெயர் பற்றியும் [இவ்வாழ்வார் அவதரித்து சபரகுலம் என்று திவ்ய சூரிசரிதம் முதலியவை கூறும். வேட்டை முதலியவற்றில் விருப்பமிக்கு இருந்தமைபற்றிக் கள்வர் குலத்தை வடமொழியாளர் அவ்வாறு பெயர்த்துக் கொண்டனர் போலும். வேங்கடமலைக்குத் தலைவனும் வள்ளலுமான புல்லி என்பானைக் கள்வர் கோமான் என்று சங்க நூல்கள் (அகநா. 61) கூறுவதினின்று இக்கள்வர் குடியின் பழமை பெருமைகள் தெரியலாம்.]

"கள்வனே னானேன் படிறுசெய் திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலுந்
தெள்ளியே னாயேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்"

(பெ. தி. 1-1-5)

"கோடிய மனத்தாற் சினத்தொழில் புரிந்து
திரிந்துநா யினத்தொடுந் திரிந்திட்
டோடியு முழன்று முயிர்களே கொன்றே
னுணர்விலே னதலால்"

(பெ. தி. 1-6-6)

என்பனபோன்ற இவரது திருவாக்குக்களிலிருந்தும் பிற்காலத்து உண்டான கதைகளாகவே தோற்றுகின்றன. அக் கதைகள் யாவும் உண்மையானவையாயின், சததுயவானாகவும் அருள்மாரியாகவும், தாதாவாகவும், பண்டிதராகவும், பரமவைஷ்ணவராகவும் தம்மைப் பற்றி இவர் நெடுகக் கூறி வருவனவற்றோடும் பெரிதும் முரணத் தடையில்லை. (“கள்வனேனானேன்”) என்பது முதலிய இவ்வாழ்வார் பாசுரங்கள் தாம் பிறந்த வீரக்குடிக்கேற்றபடி, போர்களிற் பிறர் பொருளைக் கொள்ளையிட்டும் வேட்டை முதலிய வற்றிற் கொடுமையிழைத்தும் போந்த தம் முன் செயல்களை வெறுத்துரைத்தனவே யன்றித் தாமேற் கொண்டிருந்த களவு முறைகளைக் குறித்தன வென்று ஒருதலையாகச் சொல்லத் தக்கனவாகா. அந்தணர் குலத்தவரான தொண்டரடிப் பொடிகளும் “சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோ டிசைந்த காலம்” என்று, ‘ஆத்மாபஹாரம்’ செய்து போந்த தம்மைக் ‘கள்வன்’ என்று கூறிக் கொள்ளுதல் காணலாம். இளமையில் தம் அரசன் கட்டளை கடந்ததனால் ஆழ்வார் கடுந்துன்பத்துக்குள்ளாகியவர் என்ற சரித்திரமுள்ளது. ஒருகால் அக்காலத்தே ஆறலை கள்வர், அராசகர்களுடன் சேர்ந்து இவர் சில அதிக்கிரமங்களைச் செய்திருத்தல் கூடியதே. ஆனால், பருவம் நிரம்பிய நிலையிலும் அவற்றையே செய்து தாம் கவர்ந்த கொள்ளைப் பொருளால் திருமால் கைங்கரியம் புரிந்தவர் இப்பெரியார் என்று வழங்குங் கதைகள் பெரும்பாலவும் கற்பிதங்களே என்பதில் ஐயமில்லை.

“தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்து மிட்டேன்
பெரியே னாயினபின் பிறர்க் கேயுழைத் தேழையானேன்”

என்று, தம் வாழ்நாளின் முன்பின் பகுதிகளில் நிகழ்ந்த செய்கைகளை இவ்வாழ்வாரே கூறுதல் அறியத் தக்கது. இதனால், தம் முன்னோர் போலவே பேரரசரின்கீழ் அரசியல் நிர்வாகத்தில் தம் ஆயுளின் பெரும்பாகத்தைக் கழித்தவர் இப் பெரியார் என்பதே மிகவும் பொருத்தமென்க.

வடவர் படையெடுப்பு.

இனி, 7-ம் நூற்றாண்டில் தென்னாட்டில் நிகழ்ந்த வடவர் படையெடுப்புக்களை நோக்குவோம். 710-ம் வருஷத்துக்குச் சமீபமாக, மகேந்திர பல்லவன் ஆட்சித் தொடக்கத்தில், மேலைச் சளுக்கிய வேந்தனான இரண்டாம் புலிகேசி பல்லவ ராஜ்யத்தின் மேற் படை

யெடுத்துளான். இவன், அக்காலத்துப் பிரபல சக்கரவர்த்தியான ஹர்ஷனையும் வென்ற பெருவீரன், இவன் காஞ்சியைத் தாக்கிய போது, மகேந்திரன் வலி குன்றி ஓடி ஒளிக்கும்படி ஆயிற்று— என்பது ஐகோல் சாஸனத்தால் தெரிய வருகிறது. ஆகவே, நாங்கூர் வீரர் வெற்றியாக ஆழ்வார் கூறியது அப்படை யெடுப்பாகாது.

அப்புலிகேசியே, மகேந்திரன் மகன் முதல் நரசிம்மவர்மன் காலத்தில் இரண்டாமுறை படையெடுத்து வந்துள்ளான். இவனைத் தொண்டை நாட்டில் மணிமங்கல முதலிய போர்க்களங்களிலே நரசிம்மவர்மன் போராடி அவனைத் தோற்றோடச் செய்ததோடு அவன் தலைநகரான வாதாபி வரை படையெடுத்துச் சென்று அந் நகரையும் அழித்துவிட்டான். இப்போரில் புலிகேசியே இறந்து போயினன் எனப்படுகின்றது.

இப்போரை ஆழ்வார் குறிப்பிட்டவராகச் சொல்லக் கூடியதே. ஆனால், சோணாட்டுப் படையாளர்களான நாங்கை வீரர்களை— 'தென்னனோடு வடவரசோட்டங் கண்டவர்' 'துன்னெவ மாற்றூர் தம்மைத் தொலைத்தவர்' என்று ஆழ்வார் புகழ்வதற்கு அச்சோழ நாட்டிலே நடந்திருந்த போரானால் நன்றாகப் பொருந்தும். பாண்டியனும் அப்போரில் சம்பந்தப் பட்டிருந் தால் அவனை வடவரசனோடு திடீரென்று தாக்கி யோட்டுதற்கு அந்நாடே அவர்க்கேற்றதன்றித் தொண்டைநாடு அவ்வளவு பொருந்துவதன்று. அன்றியும் நரசிம்மவர்மன் போரையே, ஆழ்வார் குறித்தவராயின் புலகேசியைத் தொடர்ந்து சென்று அவன் தலைநகரையழித்து அவனைக் கொன்றதையும் ஆழ்வார் விடாது கூறுவரேயன்றி 'வடவரசோட்டங்கண்ட' என்றதோடு நில்லார், அதனால், ஆழ்வார் வாக்கு இவ்விரண்டாம் புலிகேசி படையெடுப்பைப் பற்றியதன்று என்று தோன்றுகிறது.

முதல் விக்ரமாதித்தன்.

இதற்கடுத்து உத்தேசம் 676-ல் மேற்படி புலிகேசி மகன் முதல் விக்ரமாதித்தன், நரசிம்மவர்மனுடைய பேரன் பரமேச்சுரவர்மன் காலத்தே—தன் நகர்க்கும் தந்தைக்கும் பல்லவர் இழைத்த கொடுமைக்கு பிரதிப்பழி வாங்க வேண்டித் தென்னாட்டை நோக்கி வந்து சோழ நாட்டுட் பிரவேசித்து, காவிரித் தென்கரையிலுள்ள உரகபுரத்தில் பாடியிறங்கினன் என்றும், இவனைப் பல்லவன் எதிர்த்துச் சென்று பெருவளநல்லூரில் சந்தித்துப் பல லக்ஷம்

படையுடைய விக்ரமாதித்தனை முறியடித்து ஒரு கந்தைத் துணியை மட்டும் கட்டி மூடிக்கொண்டு ஓடும்படி செய்தான் என்றும், கத்வால், கூரம் உதயேந்திர சாஸனங்களால் தெரிய வருகின்றன. இவ்வாறு வடவேந்தன் படையெடுத்து வந்து தங்கிய சோணாட்டு உரகபுரம் என்பது உறையூரே என்றும், அவ் வுரையூர்க்கே வடமேற்கே 10 மைலில் உள்ள பெருவளநல்லூரே பல்லவன் சளுக்கியனை முறியடித்த போர்க்களமென்றும் டாக்டர் தூப்ரேயில் துரை எழுதியவை மிகப் பொருந்தும். கூத்தர் தாம் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்ப் பாடலொன்றில் "உரக புரியாள் தலைவா தாலேலோ" என்றது இவ்வுறையூரையே யாகும். சோணாட்டின் தலைமை நகர்ப் பக்கத்து நடந்த இப்போரே, நாங்கை வீரரால் வெல்லப்பட்டது ஆகவேண்டும் என்பதற்குத் தக்க காரணங்கள் உள்ளன. அவற்றை விளக்கு கிறேன். இப்பெருவளநல்லூர்ப் போரில் அரசர் மூவர் (திரை ராஜ்யாதிபர்) சளுக்கிய வேந்தனுக்கு எதிர்க் கட்சியில் ஒன்று கூடியிருந்தனர் என்றும், அவருள் பல்லவனொருவன் தவிர, மற்றவர் சிங்களவேந்தனும் பாண்டியனுமாதல் வேண்டுமென்றும் தூப்ரேயில்துரை கருதுகிறார். மூவரசர் ஒன்று சேர்ந்து தன் தந்தை ஆண்ட தேசத்தைக் கவர்ந்தனராக, அதை முதல் விக்ரமாதித்தன் மீட்டுப் பெற்றுக் குறைவற ஆண்டான் என்று அவனது கத்வால் சாஸனங் கூறுகின்றதேயன்றி, தென்னாட்டிற் படையெடுத்த அவ்வடவேந்தனை எதிர்க்க வேண்டி அம்மூவருந் திரண்டு கூடினர் என்று அது குறிக்கவில்லை. கிறிஸ்டியன் காலேஜ் மாகஸைனில், ஸ்ரீமாந் N. வெங்கடரமணய்யா அவர்கள் சமீபத்தில் எழுதிய "திரை ராஜ்ய பல்லவர்" என்ற விஷயத்திலே விக்ரமாதித்தன் ராஜ்யத்தை அவன் தந்தை இறந்ததும் கவர்ந்த மூவரசர் பல்லவ வம்சத்தைச் சேர்ந்த காஞ்சிப் பல்லவர் நுமைப் பல்லவர், பலக்கட பல்லவர் என்பவரே என்றும் பரமேசுவர பல்லவனுடன் சோழ பாண்டிய சிங்களர் சேர்ந்திருந்தனரென் பதற்கு ஆதாரவே இல்லையென்றும் தக்க காரணங்காட்டி நிரூபித்துள்ளார். இக்கருத்தையே நானும் தமிழர் நேசனில் 1½ வருஷங்கட்கு முன் விளக்கியுள்ளேன்.

விக்ரமாதித்தன் படையெடுத்தபோது ஆட்சிபுரிந்த பாண்டியன் தூப்ராயில் கருத்துப்படி கோச்சடையன் என்பதினும் அவன் தந்தையும் சம்பந்த மூர்த்திகள் காலத்தவனுமான நெடுமாற னென்பதே காலவளவுக்குப் பொருந்துகின்றது. இப்பாண்டியன்

சேரனுடன் பலபெரும் போர்கள் புரிந்தவன் என்பதும் சேரனது கொங்கு நாட்டின் பெரும்பகுதி இவன் கால முதலாக பாண்டியரது ஆட்சிக்கு உட்படலாயிற்றென்பதும் களவியலுரை வேள்விக்குடிச் சாஸனங்களால் தெளிவாகின்றன. பெருவீரனான இந் நெடுமாறனது ஆட்சிக்காலத்தில் சளுக்கிய விக்கிரமாதித்தன் தன் குலப்பகைவரைத் தாக்க வேண்டி சோணாட்டுட் பிரவேசித்துத் தங்கியவிடம் உறையூராயின் பாண்டியனாதிக்கம் பெருகிய கொங்கு நாட்டின் வழியாகவே அவன் நுழைந்திருக்க வேண்டுமென்பதும் அதுவும் அப்பாண்டியன் அனுமதிபெற்றோ அன்றி அவனைப் போரில் வென்றோ நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதும் திண்ணம். பாண்டியனுடன் பகைமை கொண்டு வந்தவன் அவ் வேந்தன் என்பதற்கு யாதொரு பிரமாணமுமில்லை. அதனால், அவன் உதவி பெற்றே விக்ரமாதித்தன் கொங்கு வழி பிரவேசித்திருத்தல் வேண்டும். இது சோணாட்டுள் நுழைதற்குச் சளுக்கியர்க்கு சௌகர்யமான வழியுமாகும். பல்லவனது காஞ்சியை பிடித்தபின் தொண்டைநாடு கடந்து சோணாட்டுள் நுழைந்தவனாக அச்சாளுக்கியனைக் கொள்ளக் கூடாதோ எனின். அவன் அவ்வாறு உறையூர் வரும் வரை பல்லவன் தன்னாட்சிக்குட்பட்ட சோணாட்டுள் தாராளமாய்ப் பிரவேசிக்க விட்டுவிட்டுப் பின் அவனைப் பெருவளநல்லூரில் தாக்கினான் என்பது சிறிதும் பொருத்தம் பெறவில்லை. அதனால், கொங்குவழியாக விக்ரமாதித்தன் சோணாட்டுட் பிரவேசித்ததும் பல்லவனது போரை எதிர்பார்த்தவனாய் முதன்முதற்றங்கியபாடி உறையூர் என்றே கொள்ளத் தக்கது. காஞ்சியைப் பிடித்ததாக விக்ரமாதித்தன் சாஸனமொன்று கூறுவது உண்மையே. இது பல்லவனால் பெருந் தோல்வியுற்ற அவனது வெறும் புகழ்ச்சியென்றே சொல்லலாம். டாக்டர் ஹுல்ஷும் இவ்வாறே கருதுவர்.

ஆகவே, பாண்டியர் விரோதம் விக்ரமாதித்தனுக்கு இருந்த தில்லை என்பது தெரியலாம். அன்றியும், பாண்டியர் பல்லவர்க்கு எதிர்க்கட்சியிற் சேரவே அதிக நியாயமுண்டு. சோழரது ஆட்சியைத் தொலைத்துச் சோணாட்டில் தங்கள் ஆதிக்கத்தைப் பல்லவர்கள் சிம்மவிஷ்ணு கால முதலே (590) தாபித்துவந்ததோடு பாண்டிநாட்டின் எல்லைப் புறங்களிலும் பிரவேசித்து அந்நாட்டு அரசர்க்குத் துன்பம் விளைத்தும் போந்தவர்கள். இவ்விஷயம் மேலே விளக்கினேன். அதனால், பல்லவ பாண்டியர்க்குள் தீராப் பெரும்பகை பலதலை முறையளவாக உண்டாகியது. ஆகவே

படையெடுத்து வந்த வடவரசனை யெதிர்க்கப் பல்லவனுடன் பாண்டியன் சேர்ந்து கொண்டான் என்பதினும், பேராற்றல் பெற்றிருந்த பல்லவனை யொடுக்கி, அவன் கவர்ந்துள்ள சோணாட்டை உரியவரிடந் திருப்பியளிக்க அப்பாண்டியன் பிற வேந்தனைத் துணைக் கொண்டான் என்பதே ஏற்றதாகும். இக் கருத்தை யாதரிக்க மற்றொரு பிரமாணமும் உண்டு. இவ்விக்ரமாதித்தன் தந்தை புலகேசி மகேந்திரன் காலத்துப் படையெடுத்த செய்தி கூறும் சாஸனத்துள்—"பல்லவ சேனையாகிய பணிக்கு ஏரிகதிரோனாய், சோழ பாண்டிய கேரளர் மூவர்க்கும் நன்மை மிகும்படி செய்தான்" என்று அப்புலகேசி புகழப் படுகின்றான். இதனால் பழமையான தமிழரசர்க்கு இடுக்கண் விளைத்து வந்த பல்லவாதிக்கத்தைத் தொலைத்துப் பூர்வநிலையில் அவர்களை நாட்டுவதும் அவனது தென்னாட்டுப் படையெடுப்பின் நோக்கமாயிருந்ததென்பது நன்கு பெறப்படும். அதனால் தமிழரசர் சமயநேர்ந்தபோதெல்லாம் பல்லவர்க்கு எதிர்க்கட்சியிற் சேர்ந்து வந்தாரென்பது தெளிவாகின்றது. அம்முறையே முன்பு தங்கட்குதவிய புலகேசி மகன் விக்ரமாதித்தன் படையெடுப்பிலும் அவனுக்கே தமிழ் அரசர் உதவியாயிருந்திருக்க வேண்டுமேயன்றி, விரோதிகளாக இருந்திராரென்றே சொல்லலாம். யான் கூறிய இம் முடிவு உறுதிப்படும்படி—

"ஒண்டிறல் தென்னனோடவ் வடவரசோட்டங்கண்ட
திண்டிற லாளர்"

என்று திருமங்கையாழ்வார் பாடுதல் குறிப்பிடத்தக்கது. தென்னனோடு வடவரசனை ஓட்டங்கண்டவர் நாங்கூர் வீரர் என்பது இதன் பொருள். ஒண்டிறல் தென்னன் என்றார், அப்பாண்டியன் படையெடுத்தவந்த வடவரசன் சார்பாயிருந்தவன் என்பது விளங்க அவ்வடவரசு என்ற உலகறிசுட்டால், அவ்வாறு வந்த வடவேந்தன் மிகப் பிரபலனானவன் என்பது தெளிவாம். தென்னனோடு என்று பதம் பிரியாமல், 'தென்னன் ஓட வடவர சோட்டம் கண்ட' என்று பிரித்தும் பொருள் கொள்ளலாம். இவ்விடத்தும் துணைவந்த பாண்டியனை முதலிற் பிறகிடச் செய்து பின் வடவரசனையும் ஓட்டியவர் என்பதே கருத்தென்னத் தடையில்லை. 'விக்ரமாதித்தனை ஒரு கந்தைத் துணியை மட்டும் கட்டி முடிக்கொண்டு போரிடையே ஓடச்செய்தான் என்று பரமேசுவர வர்மனைப் பற்றிக் கூரம் சாஸனம் மிக விரிவாகப் புகழ்வதும் இங்கு ஒப்பிட்டறியத்தக்கது. "மாவருந்திண்படைமன்னை

வென்றி கொள்வார் மன்னு நாங்கை" "துன்னெனன் மாற்றார் தம்மைத் தொலைத்தவர் நாங்கை" என்று ஆழ்வார் பாடுவதனாலும், துணை வலியோடுவந்த வேந்தன் பெருமையும் அவன் அதிவிரைவில் தோற்றோடிய சிறுமையும் நன்கு புலப்படக் கூடியன.

இவ்வாறு, 7-ம் நூற்றாண்டிறுதியில் சோழநாட்டுப் பெருவள நல்லூர்ப் போரிலே, படையெடுத்து வந்த வடவேந்தனை பல்லவ பரமேச்சுரன் வெற்றி கொண்டதற்கு, அந்நாட்டவர்களான நாங்கூர் வீரர்களே சிறந்த காரணமானவராகத் திருமங்கை மன்னன் கூறும் அரிய பெரிய செய்தியும் சரித்திரத்தில் நம்மாற் சேர்த்துக் கொள்ளத்தக்கதன்றோ? அப்பெரும்போர் நடந்த காலத்தையடுத்து—அதாவது 8-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், இளமைப் பருவத்தினராய் விளங்கிய இவ்வாழ்வார், தம்மூர்ப் பக்கத்தவரான அவ்வீரர்களிற் பலரை நேரில் நன்கறிந்தே, பல்லவாதிக்கத்தைத் தம் நாட்டிற் பரப்பிய அன்னோர் வாழும் ஊரை அவர் வீரப் பெருமையாற் பலபடப் பாராட்டுவாராயினர். நாங்கூரும் அவரது திருவாலிதிருநகரியும் மிகவடுத்த ஊர்களாதலால், அந்நாங்கை வீரர்களே, ஆழ்வார் அவதரித்த கள்வர் குலத்து முத்தரையர்களாகச் சங்கிக்கவும் இடமுண்டு. இதுவரை கூறிவந்த காரணங்களாலும், திருமங்கை மன்னன் காலத்தை யொட்டி, பல்லவர் வடவேந்தருடன் சோழநாட்டிற் புரிந்த பெரும்போர் வேறில்லாமையாலும்—அவ்வாழ்வார் குறித்த வடவேந்தன், சாளுக்கியனான முதலாம் விக்ரமாதித்தனன்றி வேறெவனு மாகான் என்றே நாம் முடிவு கூறலாம்.

இனித் திருமங்கை மன்னன், மாமல்லபுரம் மாவலிபுரம் என்று வழங்கப் பெறும் திருக்கடன்மல்லை விஷயமாகப் பாடிய பதிகங்களிரண்டனுள் ஒன்றிலே—

> " பிணங்களிடு காடதனு ணடமாடு பிஞ்ஞகனோ
> டிணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்விசும்பிற்
> கணங்களியங் கும்மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
> வணங்குமனத் தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே "

என்று அருளிச் செய்கின்றார். இப்பாட்டில், மாமல்லபுரத்தில் திருமால் சிவபிரானுடன் சேரக் கோயில் கொண்டுள்ளதைச் சிறப்பித்தல் காணலாம். மேற்படி ஊர்க் கடற்கரையிலுள்ள பள்ளி கொண்ட திருமால் கோயிலின் உள்ளிடமாக இரண்டு சிவன் கோயில்கள் முதல் இராஜராஜ சோழன் காலத்து விளங்கினர் என்பது—

"இந்நகரத்து ஜலசயனத்து க்ஷத்திரிய சிகாமணிப் பல்லவீச்சுரத்துத் தேவரும், ராஜசிம்மப் பல்லவீச்சுரத்துத் தேவரும் பள்ளி கொண்ட தேவருமுடைய பட்டாரத்து"

என்று ஆங்குக் கண்டெடுக்கப்பட்ட சாஸன வாக்கியத்தால் தெரிய வருகின்றன என்றும், க்ஷத்திரியசிகாமணி, ராஜசிம்மன் என்பவை மேலே நான் கூறிப் போந்தபடி சுந்தரமூர்த்திகள் காலத்தவனான இரண்டாம் நரசிம்மவர்மன் பெயர்களாதலால், அவ்விரு சிவாலயங்களும் அவனால் நிருமிக்கப் பெற்று அவன் பெயர்கள் கொண்டனவாதல் வேண்டுமென்றும் சாஸனவறிஞர்கள் கருதுகின்றார்கள். இக்கருத்து ஏற்கத்தக்கதென்றே சொல்லலாம். இவ்வாறு 8-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பல்லவன் பிரதிட்டித்த சிவமூர்த்தத்தோடு திருமால் அங்குக் கோயில் கொண்டுள்ளதனையே—"பிஞ்ஞகனோ டிணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க்கிடம்" என்று திருமங்கை மன்னன் பாடுகின்றார் என்பதில் ஐயமில்லை.

மேற்படி கடற்கரைத் திருமால் கோயில் நீர்க்கரைப் பக்கமாகத் திருமால் சயனங் கொண்டுள்ளமைபற்றி சலசயனம் என்ற பெயரை ஆதியிற் பெறலாயிற்று. அக்கோயிலை ஒட்டிப் பின்பமைந்த சிவாலயங்களும் ஜலசயனத்தைச் சார்ந்தனவாகவே சோழர்காலத்தில் வழங்கப் பெற்றன என்பது மேற்குறித்த சாஸன வாக்கியங்களால் தெரியலாம். கடற்கரையல்லாத ஊர் மத்தியில், கிடந்த திருக்கோல முடையரான திருமாலின் கோயில் வேறொன்றும் மாமல்லபுரத்து உள்ளது. இதுவும் கடற்கரைக் கோயில் போலவே பழைமையானதென்பது, முதலிராஜேந்திர சோழன் காலத்துச் சாஸனம் அக்கோயிலிற் காணப்படுதலினின்று தெளிவாகின்றது. 'தலசயனப் புறமான தையூர்' என்ற சாஸன வாக்கியத்தால், அக் கோயிலடியாக மாமல்லபுரத்துக்குத் தலசயனம் என்ற பெயர் வழக்கும் முன்பு இருந்த செய்தி தெரியலாம். தரையிடமாகத் திருமால் சயனம் உள்ளமை பற்றியும் சலசயனத்தினின்று வேறு பிரித்துக் காட்ட வேண்டியும் அக் கோயில் தலசயனம் எனப்பட்டதாதல் வேண்டும். திருமங்கை மன்னன் மாமல்லபுரத்துக்குப் பாடிய இரண்டு பதிகங்களுள், பின் பதிகத்தில் தான், திருமால் சிவபிரானுடன் கோயில் கொண்டுள்ள விஷயம் பிரஸ்தாபிக்கப்படுகிறது. அதனால், அது சலசயனத்தைப் பற்றிய தென்றே தெளியலாம். ஆனால், இப்போது, அவ்விரண்டு பதிகங்களுமே தலசய விஷயமாக வழங்குகின்றன. ஆயினும்,

முன்பதிகமே தலசயனத்துக்குரியதாகவும் பின்பதிகம் சலசயனத்துக்கு உரியதாகவும் ஆழ்வார் பாடியிருக்க வேண்டுமென்றும் தல சயனம் சல சயனம் இரண்டும் ஒரே தன்மையான மோனையெழுத்துடைமையால், பாடமாறி இரண்டும் தல சயனப் பதிகங்களாகவே பிற்காலத்தில் வழங்கலாயின என்றும் நாம் கருதக் கூடியன. இவ்வாறு, தம் சலசயனப் பதிகத்தில், 8-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் 710 வரை ஆண்ட பல்லவன் கட்டிய கோயிலைப் பற்றிக் குறிப்பித்தலால், அவ்வாழ்வார் அப்பதிகத்தை 710-க்குப் பின் பாடியவராகவே சொல்லலாம்.

திருமங்கை மன்னன் வாக்கிற்காணும் சொல்வழக்கொன்று அவர் அக்காலத்தடைந்த பெருநிலையைக் குறிக்கக் கூடியதாயுள்ளதை இனிக் கூறுகிறேன். மூன்றாந் திருப்பதிக முழுவதினும் தமக்கு மூப்பு வருவதுணர்ந்து, அது முதிர்ந்து மகளிர் இகழும்படி நேர்வதற்கு முன்பே வடநாட்டுள்ள வதரி என்ற திருப்பதியை வணங்க விரும்புவதாகத் திருவுளங் கொண்டு, தம் நெஞ்சை நோக்கி ஒருவரை யுணர்த்துந் தன்மைப் பன்மையில் "வதரி வணங்குதுமே" என்ற தொடர் பாடலிறுதி தோறும் வரப் பாடுகின்றார். அவற்றுள் ஏழாம் பாசுரம் ஈண்டு ஆராய்ச்சிக்கு உரியதாம். அது வருமாறு:—

"பப்ப வப்பர் மூத்த வாறு பாழ்ப்பது சீத்திரளை
ஒப்ப ஐக்கள் போதவுந்த வுந்தமர் காண்மினென்று
செப்பு நேர்மென் கொங்கை நல்லார் தாஞ்சிரி யாமுன்னம்
வைப்பும் நங்கள் வாழ்வு மானான் வதரி வணங்குதுமே."

என்பதாம். "பப்பவப்பர் கொண்ட கிழத்தனம் இகழத் தக்கது; சீத்திரள் போலக் கோழைகள் சிந்த நிற்கும் உங்கள் பந்துவின் நிலையைப் பாருங்கள் என்று மகளிர் நகையாடுதற்கு முன்பே நாம் வதரியை வணங்குவோம்" என்பது இப்பாடற் கருத்து. இதன் முதலிரண்டடிகள் "தாம் இனி அடையப்புகும் மூப்பைக் கண்டு மகளிர் இகழுங் கூற்று இது" என்று அப்பெண்டுகள் வாய்மொழியாகக் கொண்டு மொழிந்ததே என்பது எளிதிற் புலப்படும். பப்பவப்பர் என்பது ஆழ்வாரையன்றிப் பிறரை நோக்கியதாயின், "அப்பிறர் மூத்தபடியைக்கண்டு மகளிர் சிரிக்கு முன்பே நெஞ்சே! நாம் வதரி வணங்குவோம்" என்று பெறப்படுங் கருத்து அவர்க்கு அத்துணை ஏற்புடைத்தாகாமை காண்க. இதனால்,

பப்பவப்பர் என்று நாட்டார் தம்மை அழைத்து வந்தனர் என்பதும், அதுபற்றியே அப்பெயரை மகளிர் கூற்றில் வைத்து ஆழ்வார் தம்மைக் குறிக்கலாயின ரென்பதும் பெறப்படுகின்றன.

இப் பப்பவப்பர் என்ற தொடர், பப்பராகிய அப்பர் என்று விரியும், அப்பர் என்பது தந்தையை மட்டுமன்றித் தெய்வங்களையும் பெரியோர்களையுங் குறிக்க முற்காலத்தே பெருக வழங்கிவந்தது என்பது நூல்களாலும் சாஸனங்களாலும் நன்கறியப்படுகின்றது. அப்பர் என்பதற்கேற்றபடி வடமொழிச் சாஸனங்களில் வழங்குஞ் சொல்—பட்டாரகர், ஸ்வாமி என்பன. இதனால் அப்பர், பட்டாரகர், ஸ்வாமி என்ற மூன்றும் பப்ப என்பதனுடன் இணைந்து ஒருபொருளே பயப்பவை என்பது உணரலாம். எனவே, திருமங்கை மன்னன் தமக்கு வழங்குவதாகக் குறிப்பிடும் "பப்பவப்பர்" என்பது பப்பபட்டாரகர் அல்லது பப்பஸ்வாமி என்ற வடதொடரின் தமிழ்ப் பெயர்ப்பே என்பது விளங்கத் தடையில்லை. காட்கரையப்பன் (திருவாய்மொழி), திருக்காட்கரை பட்டாரகர் (T. A. S. III—161) எனத் திருமாலுக்கும், அஞ்சையப்பன் (தேவாரம்) திருநந்திக்கரைப்பட்டாரகர் (T. A. S. III—206) எனச் சிவபிரானுக்கும், அப்பர், அப்ப மூர்த்தி, ஸ்ரீமுகுந்தோத்தம பட்டாரகர் (T. A. S. III—44) என வைதிக சமயப் பெரியோர்க்கும், தர்ம பூஷணபட்டாரகர் (S. I. I. T. Vol. I, No. 159) என ஜைன முனிவர்க்கும், அப்பர், பட்டாரகர் என்ற இரண்டும் ஒரே பொருளுடையனவாக நூல்களினும் சாஸனங்களினும் வழங்குதல் அறியத்தக்கது. இவற்றுள் பட்டாரகர் என்பது படாரர், பழாரர் என்று திரிந்தும் வழங்கும் (T. A. S. II. 139) சிவப்பட்டார் (நான்மு 6) என்ற திருமழிசையார் வாக்கிற் கண்ட பட்டார் என்பது இப்பட்டாரரின் திரிபோ என்றுக் கருதுவாருமுண்டு. (History of Sri Vaishnavas 16) 'மகாராஜா பப்பஸ்வாமி' என்று ஒரு சாஸனம் கூறும் (Ind. Ant. XV No. 274) பப்ப என்பது அசதியாடிக் கூறிய குறிப்பு மொழி என்றும் (க்ஷேபோக்தி), அப்பர் என்பதற்கு கிழவன் என்றும் முன்னோர் பொருள் கூறினரேனும், ஆழ்வார் காலத்து வழக்காக நமக்குத் தெரியவரும் சாஸனப் பொருள் தள்ளத் தக்கதன்றென்க.

பல்லவர்களுள்ளே பரம பாகவதர்களான அரசர் சிலர் பப்ப பட்டாரக பாத பக்த—என்றிவ்வாறு விசேடிக்கப்படுகின்றனர் பப்ப பட்டாரகருடைய பாதங்களில் பக்தியுடைய (இன்னர்)

என்பது இத்தொடரின் பொருள். இதனினின்றும் அரசர்க்கு ஞானசாரியராய் விளங்கிய பெரியோர் சிலர்க்கு இப்பெயர் முன்பு வழங்கிவந்தது (Ind. Ant. Vol. XV Nop. 274).

இதுவரை திருமங்கை யாழ்வாரைப் பற்றிக் கூறிவந்தவற்றி லிருந்து அவர் வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் அடியிற் கண்ட காலக் குறிப்பின்படி அமையப் பொருத்தமுண்டு என்பது தெரியலாம்

ஆழ்வார் பாடிய முதல் விக்ரமாதித்தன் படையெடுப்பு கி.பி. 675.

ஆழ்வார் அவதாரம்—உத்தேசம் கி.பி. 680.

ஆழ்வார் நாங்கூர் வீரர்களைப் பற்றிப் பதிகத்திற் பாடிய காலம் (உத்தேசம்) கி.பி. 710.

ஆழ்வார் சல சயனப் பதிகம் (உத்தேசம்) கி.பி. 720.

ஆழ்வார் பல்லவமல்லன் போர்கள் (உத்தேசம்) கி.பி. 735.

ஆழ்வார் வயிரமேகன் கச்சிப்படையெடுப்பு கி.பி. 753-4.

இவற்றினின்றும், 680-ல் அவதரித்தவர் வயிரமேகன் கச்சியைப் பிடித்த 754-க்குப் பின்னும் சிலவருஷம் இருந்திருத்தல் கூடும். ஆதலால், உத்தேசம் 75 ஆண்டுகள் தமிழ்நாட்டை அலங்கரித்தவர் ஆழ்வார் என்பது நன்றாக (விளங்கு) வெளியாகின்றது. அவதார காலத்தை 680-க்கு முன் தள்ளத்தள்ள வயிரமேகனைப் பாடியபோது அவர் தொண்டு கிழவராயிருந்தரென்றும் நூறு நூற்றிருபது வயதிருந்தவரென்றும் கொள்ள நேரும். 680-க்குப் பின் தள்ளினால், விக்ரமாதித்தனை வென்ற நாங்கை வீரர்கள் தம் காலத்து விளங்கியவர் என்று அவர் கூறியபடி சொல்லுதற்கியலாமல் போகும். அதனால், நான் குறித்த 680-ஏ அவர்க்கு ஏற்றதாதல் தெரியலாம். ஆயின், வயிரமேகன் தந்திதுர்க்கனே யன்றி, 779-ல் பட்டம் பெற்ற தந்திவர்மன் என்று சொல்லவே நேர்கின்றது.

இனி, ஆழ்வார்களையெல்லாம் ஒரு காலத்தவராகவே, பழைய நூலாகிய திவ்யசூரிசரிதம் கூறுவதைப்பற்றி மேலே கூறினேன். இந்நூற் கருத்திற் பெரும்பாகம், சரித்திரவாராய்ச்சியில் உண்மை யுடையதாகவே முடிகின்றது. அத்திருமாலடியார்களுள் பெரியாழ்வார், ஆண்டாள். நம்மாழ்வார்களை இங்கு முக்கியமாக எடுத்துக் கொள்ளுகிறேன். திருமங்கை மன்னன் பல்லவராட்சிக் குட்பட்ட நாட்டவராதலால், அப்பல்லவர் வரலாறுகளாக அவர் கூறியவற்றைக் கொண்டு அவர் செய்திகளைத் தெரிய நேர்ந்தது.

பெரியாழ்வார் நம்மாழ்வாரிருவரும் ஆண்டாளும் தென்பாண்டி நாட்டவர்களாதலால், இவர்களைப்பற்றியறிதற்குப் பாண்டியர் வரலாறுகளே சிறந்த கருவியாகும். அதனால் முற்கூறிவிட்ட பாண்டியரை நோக்கித் திரும்புவோம்.

பெரியாழ்வார்.

பல்லவ மல்லனை இரண்டாம் நந்திவர்மனை எதிர்த்த பாண்டியன், வேள்வி குடிச் சாஸனத்துக்குரிய நெடுஞ்சடையன் தந்தை மாறவர்மன் என்பது. இவன் சம்பந்தர் காலத்து நெடுமாறன் பேரன் என்பதும் 'உலகுடைய மன்னவன் தென்னவன்' என்று திருமங்கையார் இவனையே கூறினர் என்பதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத் தக்கன. வைஷ்ண குருபரம்பரை நூல்களிலே—பெரியாழ்வார் தம் காலத்துப் பாண்டியன் சமயவிசாரஞ் செய்துவந்தபோது, 'பரத்வநிரூபணம் பண்ணுவோர் அடைக' என்று கட்டிய பொற்கிழியை அவன்முன் வாதத்தில் வென்று பெற்று அப்பாண்டியனையும் தன்னடி யணுக்கினர் பெரியாழ்வார் என்று கூறப்படும் சரித்திரம் பலரும் அறிவர். அவன் பெயர் ஸ்ரீவல்லபன் என்று அந்நூல்கள் கூறும். ஆனால், இவ்வாழ்வார் தம் காலத்துப் பாண்டியன் பெயரைத் தம் திருமாலிருஞ் சோலை மலைப்பதிகத்தில் அடியில் வருமாறு குறிப் பிடுகிறார் :—

"கொன்னவில் கூர்வேற் கோநெடுமாறன்
 தென்கூடற் கோன்
தென்னன்கொண் டாடுந் தென்திருமாலிருஞ்
 சோலையே"

என்பதே. இதனால். கோநெடுமாறன் என்பது அவர் காலத்தில் பாண்டியற்கு வழங்கிய பெயரென்பது தெரியலாம். வேள்விகுடிச் சாஸனத்திற்கண்ட பாண்டியர்களுள் சம்பந்தமூர்த்திகள் காலத்துப் பாண்டியனும் அவன் பேரனுமே மாறவர்மன் அல்லது நெடுமாறன் என்ற பெயர்களுடையவர். முற்கூறியவன் அம்மூர்த்தி களால் திருத்திப் பணி கொள்ளப் பெற்ற பரமசைவனாதலால், அவனை ஆழ்வார் அடிமை கொண்டவர் எனல் ஏற்காதாம். பாண்டிய பரம்பரையினர் கொண்டிருந்த முறையில் அவன் பேரனை இம்மாறவர்மனையும் பொதுவாகச் சைவனென்று சொல்லக் கூடியதாயினும் பின்வாழ்க்கையில் பெரியாழ்வாரால் அவன் அடிமை கொள்ளப்பட்டவனாக வேண்டும் என்று சொல்லு தற்குச் சிறப்பான காரணங்களுள்ளன. இம்மாறவர்மனிடம்

உத்தரமந்திரியா யிருந்தவன் களக்குடி வைத்ய குலத்தவனான மாறங்காரி என்பவன். இம்மந்திரி தன்னரசனான மாறவர்மனுக்கு மழகொங்கத்தரசனான கங்கராசன் மகளைச் சளுக்கியரோடு பெரும் போர் புரிந்து கொண்டு வந்து மணம்புரிவித்தவன். 'கங்க ராசனோடு சம்பந்தஞ் செய்தும்' என்று மாறவர்மனைக் கூறும் அச்சாஸனமே, அது மாறங்காரியால் நடைபெற்றதென்பதை இறுதியில் குறிப்பிடுதல் காணலாம். கொங்கரும் கங்கரும் ஒருவரே. கங்கதேச ராசாக்கள் சரிதையைக் கொங்கு தேச ராசாக்கள் சரிதை என்று வழங்குதலும் காண்க. இதனையறியாமல் வேறு பொருள் கூறுவாரும் உண்டு. 'மழகொங்கம் அடிப்படுத்தும்' என்று இம் மாறவர்மன் கூறப்படுதலால் இவனால் வெல்லப்பட்ட அம்மழவரசன், பின்பு, தன் மகளையே இவனுக்குக் கொடுத்தனன் என்பது பெறப்படும். இப்பாண்டியன் தந்தையாகிய கோச் சடையன் மகாரதரை வென்ற விடமாகக் கூறப்படும் மங்கலபுரம் இம் மழநாட்டின் தலைநகரேயாம். "மழநன்னாடா, மங்கது மன்னணி னருங்கலமாக வதற்கே யோர், மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர்" என்று ஆனாயர் புராணத்துச் சேக்கிழார் பாடுதலும், "மங்கல மென்பதோர் ஊருண்டுபோலும், மழநாட்டுள்" என்று இளம்பூரணர் கூறுதலும் அறியத் தக்கன. ஆனாயநாயனார் அவதாரஸ்தலமாகிய இது திருமங்கலமென்ற பெயருடன் திருச்சிராப்பள்ளிக்கு வடகிழக்கே 12 மைலில் உள்ளது. இம்மாறவர்மன் போர் நடத்திய இடங்களில் ஒன்றாக வேள்விகுடிச் சாஸனங்கூறும் திருமங்கை என்பதும் இத்திரு மங்கலமே. இது போலவே பூவாலூர் (பூவாளூர்) என்று அதிற் கூறப்பட்ட போர்க்களம் அம்மழநாட்டில் பூவாளூர் என்று உள்ளமை காணலாம். இம்மங்கலத்தைத் தலைநகராகக் கொண்ட மழவரசன் மகளிடம், அம்மாறவர்மனுக்குப் பிறந்தமகனே வேள்வி குடிச் சாஸனஞ் செய்வித்த நெடுஞ்சடையன். இவன் பட்டமெய்தி மூன்று வருஷம் வரை உத்தர மந்திரியாயிருந்தவன் தன் தந்தை யிடமிருந்த அம் மாறங்காரியே. இம்மந்திரி பரம வைஷ்ணவன். மதுரைப் பக்கத்துள்ள ஆனைமலையில் உள்ள நரசிம்மப் பெருமான் கோயில் இவனால் கட்டப்பட்டது. பிரதிஷ்டைக்கு முன் இவன் இறந்து விட்டான் என்றும் இதன் குறைவேலையும் பிரதிஷ்டையும் இவன் தம்பியாய் உத்தரமந்திரி பதமெய்தின மாறன் எயினனால் பூர்த்தி செய்யப்பட்டன என்றும் ஆனைமலைச் சாஸனங்கள் கூறுகின்றன. இவ்வாறு, வைஷ்ணவ மந்திரியைக் கொண்டிருந்த பாண்டியன் சமய விசாரஞ் செய்து வைஷ்ணவனானதற்கு அம்

மந்திரியே காரணமாக வேண்டும். இப் பாண்டியன் மகன் நெடுஞ் சடையனை—" பரம வைஷ்ணவன் தானே யாகி நின்றிலங்குபவன் " என்று வேலங்குடிச் சாஸனம் புகழ்ந்து கூறும். இதனால் பரம்பரையில் சைவனாயிருந்து வைஷ்ணவனான தந்தை மாற வர்மன் போலன்றிப் பரம வைஷ்ணவனாக விளங்கியவன் அப் பாண்டியனொருவனே என்பது பெறப்படுதல் காணலாம். இப்பாண்டியன் கொங்கபூமி யடிப்படுத்துக் காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத் திருமாலுக்குக் குன்ற மன்னதோர் கோயிலாக்கினான் என்று கூறுகின்றது. பரம்பரைச் சைவர்களான பாண்டியர் குலத்தில் இவ்வாறு வைஷ்ணவாபிமானம் தலையெடுத்து நின்றதற்கு ஒரு விசேட சம்பவமே காரணமாக வேண்டும் அன்றோ? அது பெரியாழ்வாரால் உண்டாக்கப்பட்டதேயாக வேண்டும் என்று, அவரது சரித்திரங்கட்கும் சாஸனங்கட்கும் இயைய நாம் கருதல் கூடியதேயாகும். நெடுஞ்சடையனைக் " குரு சரிதங் கொண்டாடி " வருபவன் என்றும் அச் சாஸனம் கூறுகின்றது. இது, தங்களை உய்யக் கொண்ட விஷ்ணுசித்தராகிய அவ்வாழ்வாரையே குறிப்பிட்டதாகக் கூறப் பொருத்தமுண்டு. " பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று " என்று வழங்கும் அவ்வாழ்வார் தனியன் அச் சாஸன வாக்கியத் துடன் இங்கு ஒப்பிடத் தக்கதாம். பாண்டிய மந்திரிகளா யிருந்த மாறங்காரி, மாறனெயினன் என்பவர்க்குப் பெரியாழ்வார் திருவடி சம்பந்தமிருக்கவும் இடமுண்டு. வைஷ்ணவர்களான இம்மந்திரிகளின் ஊர் களக்குடியாகிய காவந்தபுரம் என்பது வேள்விகுடி முதலிய சாஸனங்களால் தெரியலாம். இக்களக் குடியை தென்கோடியில் மலையாள வெல்லைப் பக்கத்துள்ள களக்காடு என்றே சாஸனவறிஞரும் சரித்திரக்காரர்களும் எழுதி வருகின்றனர். அதுவன்று என்பது இப்போது என் ஆராய்ச்சியில் விளங்குகிறது. களக்குடி நாடு என்ற பிரிவில், மானூர், கரிவலம் வந்த நல்லூர், காவந்தபுரம் என்ற ஊர்கள் அடங்கியிருக்கின்றன என்று சாஸனங்கள் கூறுகின்றன. இவற்றுள், காவந்தபுரம் என்பது களக்குடியின் வடமொழிப் பெயர் என்பதும் மாறங்காரியின் ஊர்க்கு அவ்விரண்டையும் சாஸனங்கள் கூறுதலால் தெளிவாம். [காவந்தம்-களா]. ஆகவே, ஊரும் நாடும் களக்குடி என்று பெயர் பெற்றிருந்தமை பெறப்படும். மானூர் (மன்னிலைய் நல்லூர்) காவந்தபுரம் (களக்குடி) கரிவலம்வந்தநல்லூர்களைக் கொண்ட இக்களக்குடி நாடு திருநெல்வேலிக்கு வடக்கே 10 மைலில் ஸ்ரீவில்லிபுத்தூர்க்குச் செல்லும் பாதையிலுள்ள களக்குடியைச் சூழ்ந்த பிரதேசமாகும். பிறரெல்லாம் எழுதிவரும் களக்காடு

வானவனுட்டிலுள்ளதென்று சாஸனங் கூறுதலும், அது களக்குடி அன்று என்பதைத் தெளிவாக்கும். இவ்வாறு வில்லிபுத்தூரை அடுத்திருந்த ஊர்த்தலைவரான பாண்டிய மந்திரிகள் அவ்வில்லி புத்தூர் விஷ்ணுசித்தர் திருவடிசம்பந்தம் பெற்றவராயிருத்தல் கூடியதன்றோ? இவையெல்லாம் ஊகங்களேயாயினும் சம்பாவிதங்கள் என்பதற்கே இங்குக் காட்டினேன். எவ்வகையிலும், பெரியாழ்வார் திருமாலிருஞ் சோலைப் பெருமானிடம் பக்தியுள்ளவனாகத் தம் பாசுரத்திற் கூறும் கோ-நெடுமாறன், பரம வைஷ்ணவனான நெடுஞ்சடையன் தந்தை, மாறவர்மனே என்று கொள்வதற்குப், பொருத்தமுண்மை தெரியலாம். இம்மாறன் அப்பெருமானருளால் அடைந்துவரும் வெற்றிகளையே

"குறுகாதவரைக் கூடுகலக்கி வெங்கானிடைச்
சிறுகானெறி போக்குவிக்குஞ் செல்வன்"

என்று பாராட்டுகின்றார் இவ்வாழ்வார். அன்றியும் குருபாரம்பரைகள் பெரியாழ்வார் காலத்துப் பாண்டியனுக்கு ஸ்ரீவல்லபன் என்ற பெயர் கூறுவதும் பொருத்தமே. பரம வைஷ்ணவனாகச் சொல்லப்படும் நெடுஞ்சடையனுக்கு இப்பெயர் வழங்கியதாக வேண்டுமென்று ஸ்ரீமாந் கோபிநாதராயரவர்கள் ஆதாரங் காட்டியுள்ளார்கள். இது பொருத்தமென்பதை வேறொரு பிரமாணமும் வலியுறுத்துகின்றது. மைசூர் டாக்டர் S. சாமா சாஸ்திரிகள் மூன்றாம் ஓரியண்டல் கான்பரன்சில் படித்த கூன்பாண்டியன் சம்பந்தமான விஷயத்தில் ஜினசேனர் தம் "பிருகத் தரிவம்ச புராணத்தை சக வருஷம் 705 (கி.பி. 783)-ல் எழுதிமுடித்த காலத்தில் வடதேசத்தை இந்திராயுதனும் தென்தேசத்தை ஸ்ரீவல்லபனும் ஆண்டுவந்தனரென்று கூறுகின்றனரென்றும் தென்னாடவனாகக் கூறப்படும் ஸ்ரீவல்லபன் பாண்டியனேயாதல் வேண்டுமென்றும் எழுதியிருத்தல் அறியத்தக்கது. இவ்வாறாயின், அவர்கள் கூற்றின்படி கி.பி. 783-ல் தென்னாடாண்டவன் நெடுஞ்சடையனே யாதலால், அவனுக்கு ஸ்ரீவல்லபப் பெயர் ஜின சேனர் காலத்தில் வழங்கி வந்ததென்பது தெளிவாகும். ஆகவே, ராயரவர்கள் கருத்து உறுதி பெறுதல் காணலாம். இந்த நெடுஞ்சடையனை அக்கால முறைப்படி தந்தை பெயரை இணைத்து மாறன் ஸ்ரீவல்லபன் என்றும் அழைத்திருத்தல் கூடியதே. இதனால், மகனுக்குரிய இப் பெயரின் ஒரு பாகமாகிய ஸ்ரீவல்லபன் என்பதைத் தந்தையாகிய மாறவர்மனுக்குரியதாகப் பிற்காலத்தார் மாறிக் கருதி அவனுக்கு வழங்கினர் போலவே தோற்றுகின்றது.

எப்படியும், பெரியாழ்வார் காலத்தவராகத் தெரியவரும் பாண்டியரிவருள் ஒருவனுக்கு ஸ்ரீவல்லபன் என்ற பெயருண்டு என்பது தெரியவருதலால் குருபரம்பரைகள் கூற்றில் உண்மை யுள்ள தென்பது தெரியலாம்.

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்.

இனி, 862-ல பட்டம்பெற்ற வரகுணன் தந்தையாய், அவ்வருஷத்துக்கு முன் ஆண்டவனைச் சின்னமனூர்ச் சாஸனத்தால் அறியப்படும் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியனே பெரியாழ்வார் காலத்தவன் என்று ஸ்ரீமாந் கோபிநாதராயர் கருத அதனையே பலரும் பின்பற்றி எழுதி வருகின்றனர். இது சிறிதும் பொருந்தாது. வைஷ்ணவாசாரியத் தலைவரான நாதமுனிகள் 823-ல் அவதரித்தவர் என்பது குரு பரம்பரைகளால் அறியப்படுகின்றது. இம் முனிவரே ஆழ்வார் திருநகரி சென்று திருவாய்மொழி பெற்று நாட்டில் பிரசாரம் செய்தவர் என்பது பிரசித்தம். மதுரை கொண்ட பரகேசரி வன்மனான முதற்பராந்தகன் (907) காலத்தில், அவனதிகாரிகளுள் ஒருவனுக்கு பூதூருடையான் நம்மாழ்வாரடிகள் என்ற பெயர் திருச்சானூர்ச் சாஸனத்தும் அப்பரகேசரி தந்தை இராசகேசரி ஆதித்த சோழனது 3-ம் ஆட்சி வருஷத்தில் சடகோபன் என்ற பெயர் திருக்கண்ணபுரச் சாஸனத்தும் காணப்படுகின்றன. இதனால், ஆதித்தன் பட்டம் 883-ம் வருஷத்துக்கு முன்பே, நாத முனிகளால், ஆழ்வார்கள் பிரபந்தம் நாட்டிற் பரவிய தென்பது நன்றாகப் பெறப்படும். அதனால், குருபரம்பரைகள் அம்முனிவர்க்கு அவதாரமாகக் குறிப்பிட்ட 823-ம் ஆண்டு மிகவும் பொருத்தம் என்பது தெரியலாம். இவ்வாறு, 823-ல் அவதரித்த நாத முனிகள் நாட்டில் பிரபலராய் விளங்கிய காலமே, ராயரவர்களும் பிறரும் கூறும் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனுக்கும் உரியதாகும். ஆகவே, பெரியாழ்வாரும் அவர் திருமகளார் ஆண்டாளும் இக்காலத் தவர்களே யாவர். அவ்வடியார்களின் திவ்யப்பிரபந்தங்களாகக் கிடைத்தவற்றை எவ்வளவோ கொண்டாடி. "குருமுகமநதீத்ய" என்று தனியன் பாடிப் போந்த நாத முனிகள் காலத்தவரே அவ்வடியார்களானால், அவர்களிடம் நேரிற்சென்று உபதேசம் பெற்றும், பெற்ற விஷயங்களை உலகத்தார்க்கு வெளிப்படுத்தியும் போகாரன்றோ? ஆழ்வார் திருநகரி வரை திருவாய்மொழியை வேண்டிச் சென்ற அம்முனிவர், இடையில் உள்ள ஸ்ரீவில்லி புத்தூரில் அவர்களைச் சந்தியாமலும் செல்வரோ? அவ்வாழ்வார்

லோகத்தில் பிரசித்தராயுள்ளபோது, நாதமுனிகட்கும் ஆசாரியத் தலைமை வருமோ? ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியனைப் பெரிய வீரனைகச் சின்னமனூர்ச் சாஸனங் கூறினும் அவன் பரம வைஷ்ணவன் என்பதற்குத் தான் ஆதாரமுண்டோ? சுருங்கக் கூறுமிடத்து அப்பாண்டியன் காலத்தவராகப் பெரியாழ்வாரைக் கூறுங் கொள்கை முற்றும் அசங்கதமென்றே ஒதுக்கத்தக்கதாகும். ஆதலால், ஸ்ரீவல்லபனென்று குருபரம்பரையாலும் கோநெடுமாறன் என்று பெரியாழ்வாராலும் கூறப்பட்ட பாண்டியர்கள் 767-ல் பட்டம் பெற்ற பரம வைஷ்ணவனும் அவன் தந்தையுமே என்று கொள்வது எல்லாவகையாலும் ஏற்றதாதல் காணலாம்.

ஸ்ரீஆண்டாள்.

இனி, அவ்வாழ்வார் திருமகளாரான ஆண்டாள், திருப்பாவையில் "வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று" என்று கூறியது கொண்டு, முன்னும் பின்னும் நிகழ்ந்த காலங்களைக் கணிப்பித்து, 731-ம் ஆண்டே அத்திருப்பாவை பாடிய காலமாகு மென்றும் அவ்வாண்டையடுத்தே அவர் திருவரங்கமுடையான் திருவடியில் ஐக்கியமானவராக வேண்டுமென்றும், அந்நிகழ்ச்சிக்குப்பின், நெடுஞ்சடையன் ஆட்சி வரை அவ்வாழ்வார் பிரபத்தி நிஷ்டையில் விளங்கியவரே என்றும் ஆழ்வார்கள் காலநிலையுள் விளக்கியுளேனாதலால் அவற்றை இங்கு விரிக்க வேண்டுவதன்று.

நம்மாழ்வார்.

இனி, நம்மாழ்வாரைப் பற்றிக் கூறுவேன். திவ்யசூரி சரிதம், ஆழ்வார்களெல்லாம் ஒரு காலத்தவர்கள் என்று கூறுவதோடு, இவ்வாழ்வாரே மற்றவடியார்கட்கெல்லாம் ஆண்டாலும் ஞானத்தாலும் தலைமை வகித்தவர் என்று கொண்டு, பலவிடங்களிலும் புகழ்கின்றது. பெரியாழ்வாராகிய விஷ்ணுசித்தர், ஆண்டாள் திருமணத்தைப் பற்றி ஆலோசனை செய்ய விரும்பி, அத்திருமகளுடன் ஆழ்வார்திருநகரி சென்று, அங்கே ஸ்ரீசடகோபருடன் அது விஷயமாகக் கலந்து கொண்டனரென்றும், அப்போது குலசேகரப் பெருமாள், தொண்டரடிப்பொடிகள் முதலிய திருமாலடியார்களும் அங்கு எழுந்தருளியிருந்து அளவளாவினர் என்றும், திருமங்கை மன்னன் தம் குலத்தொழிலில் முனைந்து நின்றது அக்காலமே என்றும் அந்நூல் கூறுகின்றது. அத்திவ்ய சூரிசரிதமோ, ஸ்ரீராமாநுஜர் காலத்திற்

செய்யப்பட்டதும் பின்பழகிய ஜீயர் முதலியோரால் பிரமாணமாக ஆளப்பட்டதுமான பெருமையுடைய நூலாகும். இந்நூல் கூறும் ஆழ்வார் சரித்திரங்கள் பலவிடங்களில் வேறாகவுள்ளனவாயினும், அவையாவும், ஆளவந்தார் முதலிய பூர்வாசாரியர்கள் நாளில் வழங்கி வந்த சரித்திரங்களே என்பதில் தடையில்லை. இத்தகைய நூலைப் பற்றாமல் ஆழ்வார்கள் சரித்திர வாராய்ச்சி செய்வது குறை வுடையதேயாகும். ஆதலால் இந்நூல் கூறுமுறையைக் கொண்டு நோக்கும்போது, திருமங்கையார் பெரியாழ்வார்கள் காலத்தில் சடகோபர் வயதிலும் ஞானத்திலும் முதிர்ந்தவராக விளங்கினர் என்பது தெளிவாகும். ஆகவே, நான் திருமங்கையார் அவதாரத் துக்குரியதாக மேலே குறித்த 680—ஏழாம் நூற்றாண்டுக்குச் சிறிது முற்பட்டதே சடகோபர் அவதாரமாக வேண்டும் என்பது தெளியலாம்.

நம்மாழ்வார்.

அக்காலம் இன்ன தென்றறியச் சாஸனங்கள் பேருதவி செய்வதைப் பற்றி இனிக் கூறுகிறேன். ஆழ்வார் பாடிய மலை நாட்டுத் திருப்பதிகளுள், திருக்காட்கரை என்பதொன்று. இது, வடதிருவாங்கூரில் எர்ணாகுளத்துக்கும் எடைப்பள்ளி ஸ்டேஷனுக்கும் அடுத்துள்ளது. இங்குள்ள திருமால் சந்நிதிச் சுற்று மண்டபத்திற் கண்ட சாஸன மொன்று, சாஸன பரிசோதனையில் வல்ல ஸ்ரீமாந் கோபிநாதராயர் அவர்களாலும், ஸ்ரீமாந் சுப்பிரமணிய ஐயர் அவர்களாலும் திருவாங்கூர் சாஸனத் தொகுதிகளிற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது வருமாறு :—

"ஸ்வஸ்திஸ்ரீ திருக்காற்கரைப் பெருமாள் தர்வவாதிச்சஞ் செய்தருளிச் செல்லாநின்ற 3705 ஐயாண்டைக் கெதிராண்டு மேடத்தில் வியாழந்நின்ற கன்னி ஞாயிற்றுக் காற்கரை நாடுடைய சாத்தஞ்சி . . .ன் தான் பிறந்த நாளால்" என்பதே.

இச் சாஸனத்துக் கண்ட 3705 என்பது கலியப்தமாகும் என்றும் அதற்குச் சரியான இங்கிலீஷ் வருஷமான 603-4-ம் ஆண்டே அவ்வூர்க் கோயிலின் தர்ப்பாதித்தம் (முதற் பிரதிட்டை) நடந்தேறிய காலம் என்றும் கோபிநாதராயர் அவர்கள் கருதி யெழுதினர்.

ஸ்ரீமாந் சுப்ரமண்ய ஐயரவர்கள் எழுத்தமைதியால், 13-ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதாகாது இச்சாஸனம் என்றும் அதனால் அதிற்கண்டகாலம் 605-குச் சரியான கல்யப்தமாகா

தென்றும். அச்சாஸனம் வரைந்தவர் மேற்படி கோயிலின் முதற் பிரதிஷ்டை 3705 வருஷங்கட்கு முன்னடந்தது என்ற கருத்துடனே தான் அக்காலங் குறிக்கப்பட்டதாக வேண்டும் என்றும் எழுதியிருக்கின்றனர். இக்கருத்துக்கள் நம்முடைய சோதனைக்குரியன.

கோயில்கள் முதன்முதற்கட்டி பிரதிஷ்டிக்கப்பட்ட வருஷங்களை முதலாகக் கொண்டு, அப்தங்கள் சில மலையாள நாட்டில் வழங்கி வந்திருக்கின்றன. இச்செய்தி—"திருக்கண்டியூர் மகாதேவர்க்கு ஸர்வாதித்யம் செய்தருளி செல்லாநின்றயாண்டு 394-ஏாம் ஆண்டை . . . கொல்லம் 392." (T.A.S. i. 290.)

"திருக்கண்டியூர் மகாதேவர்க்குச் செல்லாநின்ற யாண்டு 123. இவ்வாண்டு துலா ஞாயிற்று" (மேற்படி i. 293)

"திருக் குலசேகரத் தளிக்குச் செல்லாநின்ற யாண்டு 195; இவ்வாண்டு மகா நாயிற்று" (Ibid ii, 78.) எனக்காண்க.

இவற்றைப் போலவே மேற்கூறிய காட்கரைச் சாஸனமும் அதன் கோயிலுண்டான அப்தங் குறிப்பிடுவதேயாம். இதில் 3705 என்று குறிப்பிட்டுச் சாஸனம் வரைந்தவர் கருத்து ஐயரவர்கள் கருத்துப்படி அக்கோயில் சிலவாயிர வருஷங்கட்கு முன் கட்டப்பட்டதென்பதைப் பலர்க்கும் அறிவுறுத்துவதேயாயின் அச்சிலவாயிர வருஷங்கட்குமுன் தானும் வாழ்ந்தவன் என்பதை அவ்வாறு வரைந்தவன் வெளிப்படுத்திக் கொண்டவன் ஆதல் வேண்டும். ஏனெனில், 3705 மாண்டைக் கெதிராமாண்டு மேடத்தில் வியாழம் நின்ற கன்னிஞாயிற்றுக் காற்கரை நாடுடைய சாத்தஞ்சி . . . ன் தான் பிறந்த நாளில் "இன்னது செய்தான்" என்பது. அச்சாஸனத்தின் பின்வரும் விஷயம் ஆதலால், அச் சாத்தனே கல்லில் வெட்டமைந்தவன் என்பது தெரியலாம். கோயிலுண்டானதைப் பழைமையாகக் காட்ட வெண்ணி, தன்னையும் 3705-க்கு முன் இருந்தவனாக உலகமறியும்படி செய்யும் அறிவீனம் ஒருவனுக்கும் இருந்திராதென்றே சொல்லலாம். ஆகவே, ராயரவர்கள் கருத்துப்படி, கோயிலுண்டான கல்யப்தத்தைக் குறிப்பிடுவதே அவ்வாண்டு என்று கொள்வதே நேராகும். "காற்கரை நாடுடைய கண்ணம் பொறையன்" (T.A.S. III, 166, 172) என்று சாஸனங்களில் பிற்பட்ட ஒருவன் கூறப்படுவதால், காற்கரைநாட்டுத் தலைமை 7-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சாத்தன்சி . . .னுக்கு உரியதாயிருந்தது என்பது பெறப்படும்.

மேற்படி காட்கரைச் சாஸனத்தின் எழுத்தமைதியால் ஐயரவர்கள் கருத்துப்படி அது பிற்பட்டிருக்கலாம். அதனால், அச்சாஸனங் கூறிய விஷயமும் பிற்பட்டதாக வேண்டும் என்னும் நியதி இல்லை. உதயேந்திர சாஸனம் (S. I. I. ii 362) பல்லவ மன்னனது இளமைக் காலத்து நிகழ்ச்சி கூறுவதென்பது பலரும் அறிந்ததே. அதன் எழுத்தமைதி முதற் பராந்தக சோழன் காலத்தாய் உள்ளது. அதனால் அதன் விஷயத்துக்குக் குறைவென்னை? பழைமையான கோயிலைப் பிரித்துக்கட்ட நேரும் போது அதிலுள்ள சாஸனங்கட்கும் பிரதி யெடுத்துக் கொண்டு கோயில் கட்டி முடித்தபின் முன்போலவே அவற்றை உரிய விடத்தில் வெட்டுவது முன்னோர் கையாண்ட முறையென்பது பலரும் அறிவர். இவ்வாறு செய்தவனை கற்படி மாற்று (S.I.I. v, 275-6) என்பது சாஸன வழக்கு. மேற்படி காட்கரைக் கோயிற் சாஸனமுள்ள சுற்றுமண்டபத்தில் 10-ம் நூற்றாண்டினனை பாஸ்கரரவிவர்மன் காலத்துச் சாஸனமொன்று (T.A.S. III, 182) இவ்வாறே, பிற்காலத்து எழுத்துடையதாயிருப்பதை ஐயரவர்களே காட்டியிருக்கிறார்கள். அது போன்றதே இச் சாஸனமும் என்று அதன் பழைமை நோக்கிக் கருதத் தடையில்லை. இனி, "3705--ஐயாமாண்டைக்கு எதிராண்டு" என்ற மேற்படி சாஸன வாக்கியத்துக்கு 3705-க்கு அடுத்த 3706-ம் வருஷம் என்பது பொருளாகும். "மூன்றாவத னெதிர் நாலாமாண்டு" என்ற சாஸனத் தொடர் இப்பொருளைத் தெளிவாக்குதல் காண்க. (S.II. i, 93; S.I.I. iv, 117 ; S.I.I. v, 108, 110) சேக்கிழார் தம் புராணத்தைச் சித்திரையாதிரையில் தொடங்கி அடுத்த வருஷத்துச் சித்திரையாதிரையில் முடித்த செய்தியைக் கூறுமிடத்து—'சித்திரையாதிரை தொடங்கி எதிராமாண்டு சித்திரை யாதிரையில்' என்று உமாபதி சிவாசாரியரும் 'பிறந்த அடுத்த வருஷத்தில்' என்னும் பொருளிலே "ஆண்டெதிரணைந்து செல்ல" (பெரிய 4 P 274) எனச் சேக்கிழாரும் கூறுவது காணலாம். 'அன்றுமுத லெதிரின்று வரையுமே' (பதினோரந்-பட்-126) கோபிநாதராயரவர்கள் '3705-க்கு அடுத்த வருஷம்--(அஃதாவது கி.பி. 603-4) என்று இக்கருத்திற் கூறியிருத்தல் பொருத்தமே. ஆனால் சுப்ரமண்ய ஐயரவர்கள் 3705 என்றே எழுதியிருப்பது எதிராண்டு என்பதன் பொருள் சரிவரத் தெரியாமையாற் போலும்.

இனிக் கண்டியூர்ச் சாஸனம் அவ்வூர்க் கோயிற் பிரதிஷ்டை நடந்து இத்தனை வருஷம் ஆயிற்று என்றும், அதற்குச் சரியான

கொல்லமாண்டு இத்தனையாவது என்றும் கூறுகிறது.—திரு கண்டியூர் மகாதேவர்க்கு ஸர்வாதித்தம் செய்தருளிச் செல்லா நின்ற யாண்டு 394-க்குக் கொல்லம் 392 " என்பது அதன் வாக்கியம். இதனால் கொல்லமாண்டு 392-க்கு 394 வருஷங்கட்கு முன்பு கண்டியூர்க் கோயிற் பிரதிஷ்டை என்பது தெரியலாம். அஃதாவது கொல்லமாண்டு தொடங்கிய 825-க்கு இரண்டு வருஷங் கட்குப்பின் அப்பிரதிஷ்டை காலம் 823 என்பதாம். இவ்வாறு இரண்டு அப்தங்களால் அச்சாஸனம் விளக்கப்படுதல் காணலாம்.

ஆனால் காட்கரைச் சாஸனமோ அவ்வூர்க் கோயிற் பிரதிஷ்டை நடந்து 3705-க்கு எதிராமாண்டில் எழுதப்பட்டதென்று ஓரப்தமே கூறுகிறது. ஆயினும், அக்காட்கரைச் சாஸனம் அமைந்த காலத்தே நோக்குமிடத்து இப்படிக் கூறுவது தான் ஏற்குமென்று சொல்லலாம். மேற்படி கோயிற் பிரதிஷ்டைக்கு எதிராமாண்டு அல்லது அடுத்த வருஷம் அமைந்ததன்றோ இச்சாஸனம். இவ்வடுத்த வருஷத்தைக் கண்டியூர்ச் சாஸனம் போலக் கூற வேண்டுமானால் பிரதிஷ்டை நடந்து செல்லாநின்ற முதலாமாண்டு இச்சாஸனம் அமைந்தது என்று கூறவேண்டும். ஆயின், அம் முதலாமாண்டு, எந்தப் பிரசித்தமான அப்தத்திலிருந்து தொடங்கியது என்பதைக் காட்டுதலும் முக்கியம். மேற்படி பிரதிஷ்டை வருஷம் யாவராலும் அறியப்பட்டதானால் காட்ட வேண்டியதில்லை. பிரதிஷ்டை நடந்த அடுத்த வருஷத்தில் அமைந்ததாக இக்காட்கரைச் சாஸனம் இருப்பதால் இச்சாஸனத் துக்குப் பிற்காலத்தில்தான் அப்புதிய கோயிலப்தம் பிரசித்தி பெறுதற்குரியதேயன்றி இச்சாஸனம் அமைந்த காலத்தில் அடைந்ததென்று சொல்ல இடமில்லை. ஆதலால், பிரபலமாக நாட்டில் வழங்கும் அப்தத்தில் இத்தனையாவது ஆண்டில் நடந்தது அக்கோயிற் பிரதிஷ்டை என்பதைக் காட்டியே, அதிலிருந்து முதலாம் வருஷம் சாஸனம் அமைந்ததென்று கோயிலப்தத்தைக் குறிக்க வேண்டியது மேற்படி காட்கரைச் சாஸனத்துக்கு அவசியமாயிற்று.

இனி, பிரதிஷ்டை நடந்த 3705-க்கு அடுத்த வருஷம் இச்சாஸன ஆண்டு என்று சொல்லாமல் 3706-ம் வருஷம் இச் சாஸனவாண்டு என்றே எழுதினால், அந்தப் பிரதிஷ்டை 3706-ம் வருஷத்தில் நடந்தது என்றுதான் பொருள் படுமேயன்றி, சாஸனம் பிறந்ததற்கு முன்வருஷம் நடந்தது என்ற பொருள் கொடாது, அதனால் 3705 மாண்டுக்கு எதிராமாண்டு என்பதும் அவசிய

மாயிற்று. மலைநாட்டில் சகாப்தம் எப்பொழுதுமே வழக்குடைய தன்று. அதனால், 7-ம் நூற்றாண்டில் பிரபலமாயிருந்த கல்யப் தத்தைக் காட்கரைச் சாஸனம் வழங்கியது என்பது தெரியலாம். இச்சாஸனத்தில் 'கலிஇன்ன ஆண்டு' என்று இல்லையேனும், 3705 என்ற பேரெண்ணைக் கொண்டு அதுகல்யப்தமென்றே கருதத் தடையில்லை. "ஸ்வஸ்தி ஸ்ரீ 4700-ம் யாண்டு செல்லாநின்ற துலாச்சநியில்" என்று—மலையாள வரசனான வீரரவிவர்மனது 1601-ம் ஆண்டு சாஸனமொன்று இவ்வாறே கலி என்ற பெயரின்றி; அவ்வப்தத்தை வழங்குதல் காணலாம். 98-ம் ஆண்டின் எதிராம் ஆண்டு என்று, அந் நாட்டுப் பார்த்திவபுர சாஸனமொன்று கொல்லமாண்டைப் பெயர் குறியாமல் கூறுவதும் அறியத்தகும் T.A.S.i. 297 ; T.A.S. II, 29).

இவற்றால், கி.பி. 603-4ல் காட்கரைக் கோயில் முதன்முதல் கட்டப்பெற்றுப் பிரதிஷ்டிக்கப்பட்ட தென்பது தெளிவாகும். இத்திருக்காட்கரைக்கு நம்மாழ்வார் தம் திருவாய் மொழியுள் 9-ம் பத்தில் ஒரு பதிகம் அருளிச் செய்திருக்கிறார். அதனால் அவர் அவதாரம் அக்காட்கரையின் தாப்பாதித்த நடந்த 603-க்குப் பின்பே என்பது மலையிலக்காகின்றது. ஆழ்வார்களிற் பலரும் ஒரு காலத்தவரென்றும் அவருள்ளும் நம்மாழ்வார் எல்லோருக்கும் பெரியவரென்றும் திவ்யசூரிசரிதம் கூறுதலை மேற் கூறினேன். அதனால், திருமங்கையார்க்குரியதாக நான் மேலே கருதிய 680-க்குச் சிறிது முற்பட்டதாக நம்மாழ்வார் காலத்தைச் சொல்லத்தடையில்லை. நம்மாழ்வார்க்கு இப்போதும் நடக்கும் திருவத்யயனோற்சவம் திருமங்கை மன்னனால் ஏற்படுத்தப்பட்ட தென்றும், அவர் அருளிய திருவாய்மொழி முதலிய நான்கு பிரபந்தங்களாக நால்வேதங்கட்கும் ஆறங்கங்கள் போன்றனவே திருமங்கையார் அருளிய ஆறுதிவ்யப் பிரபந்தங்களென்பதும் பெருவழக்கானவை, ஆகவே, திருமங்கையாழ்வார் காலத்தவரே யாயினும் அவர்க்கு ஆண்டாற் பெரியவர் நம்மாழ்வார் என்பது தெரியலாம். ஆகவே, காட்கரைப் பிரதிஷ்டா காலமான 603-க்கும் திருமங்கையாரது உத்தேச காலமான 680-க்கும் இடைப்பட்டே ஸ்ரீசடகோபர் அவதரித்தவராக வேண்டும் என்பது பெறப்படும்.

இவ்வாறு கூறுவதற்கு சிறந்த வேறு பொருத்தங்களும் ஏற்படுகின்றன. திருவழுதி நாட்டுக்கும் குருகூர் நகர்க்கும் சிற்றரசான காரி என்பவர் திருமகனார் சடகோபர் என்பதும்,

மாறன், பராங்குசன் என்ற வேறு திரு நாமங்களும் உடையவ ரென்பதும், அவர் திருவாக்காலும் மற்றநூல்களாலுந் தெரிந்தவை. மாறன் என்பது பாண்டியன் என்றும் பராங்குசன் என்பது பகையரசராகிய யானைகட்கு அங்குசம் போன்றவரென்றும் பொருள்படும். இவ்வாறு பாண்டியன் பெயரும் வீரக்குரிய பெயரும் பிறவிமுதல் ஞானியாயிருந்த ஆழ்வார் கொண்டிருந்த தற்குக் காரணம் என்ன? இதற்குச் சமாதானம் சாஸனம் வல்லவர்கள் எளிதாய்ச் சொல்லி விடுவார்கள். அஃதாவது, அக்காலத்தில் தலைமையரசர் பெயர்களை, அவர் கீழ்ச் சிற்றரசரும் அதிகாரிகளும் தங்கட்கும் தம் மக்களுக்கும் கௌரவ நாமமாக வழங்கி வந்தவர்களென்பதற்கு எண்ணிறந்த பிரமாணங்கள் உண்டென்பதே. தாங்கள் தரிப்பது மட்டுமன்றி, அரசனே தன்னால் அபிமானிக்கப்பட்டவர்க்குத் தன் பேரும் பட்டமும் கொடுத்துக் கௌரவிப்பதும் உண்டு. சேக்கிழார்க்கு "வளவனுந் தன் செங்கோலோச்சுந் தலைமையளித் தவர்தமக்குத் தனது பேரும் . . . பட்டமும்" கொடுத்தான் என்று கூறப்படுதல் காணலாம். மாறன், பராங்குசனென்ற நாமங்கள் சடகோ பருடைய முன்னோர் பெயர் வரிசைகளாகத் தெரிய வருவன வற்றுள் பரம்பரைப் பெயர்களாகக் காணப்படவில்லை. இவர் இயற்பெயர் சடகோபர் என்பதே, இவ்வாறு சிற்றரசர் கொண்ட கௌரவ நாமங்களைக் கொண்டு அவர் இன்ன அரசர் காலத்தவர் என்று சொல்லக் கூடிய நிலையில் பலர் செய்திகள் அறியப் படுவதுண்டு. அக்காலமுறையில் அது பெருமைக்குரியதாகவே கருதப்பட்டது, அம்முறையில் ஆழ்வார்க்கும் அவர் பெற்றோர் வழங்கிய கௌரவ நாமங்களாகவே மாறன், பராங்குசன் என்ற நாமங்களைக் கொள்ளத் தக்கது. ஆழ்வார் காலமாக நான் மேற் கூறிய கி.பி. 603-680-க்குள் மாறன், பராங்குசன் என்ற பெயர்கள் தரித்திருந்த அரசன் பாவலனெனின் இறையனாரகப் பொருளிற் கண்ட பாண்டிக் கோவைக்குரிய அரசனே அவனாவான், அக்கோவையில்—

"பாவலனை யின்றமிழ் வேந்தன் பாரங்குசன் பாழிவென்றான்"
"திங்கட் டிருக்குலத்துக் கொற்றவன் மாறன்"

என்றவாறு அப்பெயர்களிரண்டும் அந்நூலில் நெடுக வழங்கப் படுதல் காணலாம். மாறன் என்பது பாண்டியர் பொதுப்பெய ராயினும், 7 முதல் 9-ம் நூற்றாண்டுகளிலிருந்த பாண்டியர் பலர் மாறவர்மன் அல்லது நெடுமாறன்சடையன் என்பவற்றை தங்கள்

இயற்பெயர்களாகத் தரித்திருந்தவர்கள் என்பது வேள்விகுடி சின்னமனூர் முதலிய சாஸனங்களாலும் நூல்களாலும் தெளிவர யறியப்படும். இவ்விறையனார் அகப்பொருளிற்கண்ட நெடுமாறனே சம்பந்த மூர்த்திகளால் திருத்திப் பணிகொள்ளப் பெற்றவன். மாறன், பராங்குசன் என்பவை ஆழ்வார்க்கு அவர் தந்தையாரிட்டு வழங்கிய பெயர்களாதலால், அவ்வரசன் மேற்கொண்டிருந்த மதாந்தரங்களைப்பற்றி நாம் கருத வேண்டுவதில்லை. திருமங்கை யார், பெரியாழ்வார் போல, சடகோபர் தம் நூலுள் அரசன் பெயரைக் குறிப்பிடாது சொல்வதும், அவனது மதாந்தரச் சார்பு பற்றியதாகலாம். இந் நெடுமாறன் சம்பந்த மூர்த்திகள் காலத்தவ னெனவே, அவனுட்சியில் சைவர்க்கும் சைன, பௌத்தர் கட்கும் வாதப்போர்கள் நிகழ்ந்து வந்ததென்பது பெறப்படும். இச் செய்தியையே, நம்மாழ்வார்—"இலிங்கத்திட்ட புராணத் தீரும் சமணருஞ் சாக்கியரு, மலிந்துவாது செய்வீர்களும் மற்றுநுள் தெய்வமு மாகிநின்றான்" என்று குறிப்பிடுதல் அறியத்தக்கது. ஆழ்வார் கூறுமாறு சைனரும் சைவரும் மலிந்து வாதஞ் செய்த காலவிசேடம் இதனினும் பிறிதில்லையன்றோ? இவற்றால், காட்கரைக் கோயில் பிரதிஷ்டை நடந்த 603-க்குப்பின் திருமங்கையார் அவதரித்த 680- வரை ஆட்சிபுரிந்தவனாகக் கருதப்படும் நெல்வேலி வென்ற நெடுமாறன் காலத்தவரே நம்மாழ்வார் என்று சொல்லும்படி உள்ளமை காணலாம்.

ஆனால், இக்கொள்கைக்கு நேரெதிரான பிரமாணமொன்று எல்லாராலுஞ் சொல்லப்பட்டு வருகின்றது. அஃதாவது—வேள்வி குடிச் சாஸனம் அமைந்த நெடுஞ்சடையனது 17-ம் ஆட்சி வருஷத்தில் (உத்தேசம் 784-ல்) சீவரன் என்ற அவன் மறு பெயரிட்டுப் பிராமணனுக்குத் தானமளிக்கப்பட்டதே சீவரமங்கல மென்ற பெயர் கொண்ட ஊர் என்று மெட்ராஸ் மியூசியம் பிளேட்டில் சொல்லப்பட்டுள்ளது. இப்போது திருநெல்வேலி ஜில்லாவில் நாங்குனேரி என்று வழங்கப் படுவதே இவ்வூராகும். இதற்கு நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஒருபதிகம் பாடியுள்ளார். ஆகவே அவ்வாழ்வார் அச்சிவரமங்கல முண்டான 784-க்குப் பின் வாழ்ந்தவராதல் வேண்டும் என்று பலராலும் எழுதப்பட்டு வருகிறது. இது மேற்கூறிய என் கொள்கைக்கு முழுவிரோதம் என்று கருதக் கூடியதன்றோ? ஆனால், உண்மை அவர்கள் கருத்துப்படி இல்லையென்பதை இனி விளக்குவேன்.

1893 வருஷத்தில் ஸ்ரீமான் வெங்கய்யா அவர்களால் இம் மியூசியம் பட்டயங்கள் விசேடக் குறிப்புகளுடன் "இந்தியன் ஆண்டிகொரி"யில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்டயம், எந்த ஊரிலிருந்து கிடைத்தது. இதனுட்கண்ட வேலங்குடியாகிய சீவரமங்கலம் எது? என்பவற்றைப்பற்றி ஐயரவர்கள் ஒன்றும் குறிக்கவில்லை. பின் அது விஷயமாக ஆராய்ச்சி செய்தவர்களே முக்கியமாக கோபிநாதராயர் போன்றவர்களே—சீவரமங்கல மென்பது நாங்குனேரிக்கு வழங்கும் பெயராதலால் அதுவே இப்பட்டயம் கூறும் ஊர் என்றும், அதனைப்பாடிய ஆழ்வார் அவ்வூர்ப் பெயருண்டானதற்குப் பிற்பட்டவராதல் வேண்டும் என்றும் கருதி எழுத அக்கருத்தே யாவராலுந் தழுவப்பட லாயிற்று. ஆனால் சமீபத்தில் நிகழ்ந்த என் ஆராய்ச்சியில் அக் கருத்து முழுதுந் தவறென்பது தெளிவாக ஏற்பட்டது. அதனை விவரிக்கிறேன்.

நெடுஞ்சடையன், தன் 17-ம் ஆட்சி வருஷத்தில் எஞ்ஞவித்தை களோடு எஞ்சாத சாஸ்திரங்களைக் கரைகண்ட ஸஜ்ஜட பட்டர் என்ற மகதப் பிராமணனுக்குப் பூதானஞ் செய்ததைக் கூறும் அச்சாஸனப் பகுதி அடியில் வருமாறு:—

"தென்களவழிநாட்டு வேலங்குடியைப் பண்டைத்தன் பழம்பெயர்நீக்கி ஸ்ரீவரமங்கலம் எனப்பெயரிட்டுப் பிரமதேசமாக நீரோட்டிக் கொடுக்கப்பட்டது மற்றதன் பெருநான்கெல்லை—(கிழெல்லை) நிலைகாணி மங்கலத்தெல்லைக்கும் மிளந்தியன்குடி எல்லைக்கும் (மேற்கும்)

(தென்னெல்லை) பெருமகற்றூர் எல்லைக்கும் கள்ளிக் குடி எல்லைக்கும் வடக்கும்.

(மேலெல்லை) கடம்பங்குடி எல்லைக்கும் குராங்குடி யெல்லைக்கும் கிழக்கும்.

(வடவெல்லை) காராள வயலெல்லைக்குத் தெற்கும். இவ்விசைத்த பெருநான் கெல்லை யகத்துக் கல்லுக்கள்ளியும் நாட்டி—மன்னவனது பணியினல் வடவயைப் பிடி சூழ்ந்தான்—என்பதே.

இதனுள், சீவரமங்கலமெனப் புதுப்பெயரிட்டுத் தானஞ் செய்யப்பட்ட வேலங்குடி என்ற கிராமம் தென்களவழி நாட்டில் உள்ளதென்று கூறப்படுதல் காணலாம். தென்களவழிநாடு

என்பதால் வடகளவழிநாடு வேறொன்று உண்டென்பது பெறப் படும். தென்களவழிநாடு எது என்பதுபற்றி நான் சாஸனங் களால் தெரிந்து கொண்டேனாயினும் வடகளவழிநாடு உண்டா என்பதையும் அவையிரண்டும் அப்பெயர் பெற்றதற்குக் காரண மென்ன என்பதையும் அறியும் அவாவுடன் என் நண்பர் ஸ்ரீமாந் T.S. ஆராவமுதய்யங்கார் அவர்களை விசாரித்தெழுதக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் எழுதிய சாஸன வாக்கியங்களை யெல்லாம் இங்கு விரிக்க அவகாசமில்லை. ஆயினும் அவற்றினின்று அடியிற் கண்ட செய்தி தெரியவந்தது. அதுபற்றிய சாஸனங் கூறும் வடகளவழி நாட்டுள்ள ஊர்கள் :—

1 அளகை மாநகர்—இப்பொழுதும் அப்பெயரே சிவகங்கை ஜமீன் மல்லாகோட்டைத் தாலூகா:

2. வடவன் பட்டி—இப்பொழுதும் அப்பெயரே சிவகங்கை ஜமீன் நாட்டரசன் கோட்டைத் தாலூகா.

3 உற்றிகுளம்—ஊற்றியூர் குளமென்று வழக்கு சிவகங்கை ஜமீன் நாட்டரசன் கோட்டைத் தாலூகா.

4 புக்குழி—சிவகங்கை ஜமீன் இளையான்குடிப்பக்கம்.

5 திருமலை இப்பொழுதும் அப்பெயரே சிவகங்கை ஜமீன் திருப்புத்தூர்த் தாலூகா.

இவ்வூர்கள் வடகளவழி நாட்டிலுள்ளன என்பதோடு (13-14-ம் நூற்) வீரபாண்டியன் குலசேகர பாண்டியன் காலங்களில் இருந்த இக்களவழி நாட்டுத்தலைவன், "வடகளவழி நாடாள்வான், களவழி நாடாள்வான்" என வழங்கப்பட்டான் என்பதும் தெரிய வருகின்றன. இவையாவும் வைகையாற்றின் வடக்கேயுள்ள ஊர்களாகவே இருத்தல் அறியத்தக்கது.

இனித் தென் களவழிநாட்டில் உள்ள எருமைக்குளம் என்ற ஊர், மாறவர்மன் திரிபுவனசக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவனால், திருவெறும்பூர்க்கோயில் உற்சவமொன்று நடைபெறுதற் பொருட்டு அவன் மந்திரி மழவராயனால் அளிக்கப்பட்டதாக அவ்வூர்க் கோயிலிற் கண்ட சாஸனமொன்று கூறுகின்றது. இவ்வூர் வைகைக்கும் திருப்பூவணத்துக்கும் தெற்கே பத்தாவது மைலில் உள்ளது. இத்தென்களவழி நாட்டைப்பற்றி ஆனைமலை வட்டெழுத்துச் சாஸனமொன்றும் பிரஸ்தாபிக்கிறது. சின்னமனூர்ப் பட்டயம் திசைச் சுடர் மங்கலம் வடகளவழி நாட்டுள்ளதென்று கூறும். திசைச் சுடர் மங்கலம் என்பது

மங்கலம் என்ற பெயருடன் சிவகங்கை ஜமீனில் உள்ள ஒரு தாலூகாத்தலைமை யூராகும். இதனால், களவழி நாடு என்ற ஒரு தொகுதிப் பிரதேசத்தில் வடபகுதி தென் பகுதியாகப் பிரிக்கப் பெற்றவைகளே வடகளவழி தென்களவழி நாடுகள் என்பது தெரியலாம். சிலசமயங்களில் இவ்விரு பகுதிகளும் களவழி நாடென்ற பொதுப் பெயரால் வழங்கப்பட்டு வந்ததும் உண்டென்பது,

> "கடந்தருங் களிற்றண்ணல் சீவலவ னற் களவழி
> நன்னாட்டில்" என்ற பழம்பாடற் பகுதியாலும்

"களவழி நாட்டு வேம்பற்றூர்க் கூற்றங் கோன்" என்ற சின்ன மனூர்ச் சாஸனத் தொடராலும் தெரியலாம். இவ்வேம்பற்றூர் மானமதுரைக்குப் பக்கத்துள்ளது. வைகையாற்றுக்குப் பக்கத் தோடும், பறளியாற்றைக் களவழி நாடன்றூறு என்று திருப்பூவணப் பட்டயங் கூறுகின்றது. இதனால், வடதென் களவழிநாடுகட்கு இந்த நதி எல்லையாக இருந்தது போலத் தோன்றுகிறது. இஃதில்லையேல் வைகைநதியின் வடக்குந் தெற்குமான பிரதேசங் களே அப்பகுப்புக்கள் என்று சொல்லத் தடையில்லை. இவை எனக்குத் தெரியவந்ததும் நெடுஞ்சடையன் தானமளித்த வேலங் குடியாகிய சீவரமங்கலம் வைகைக்குத் தெற்கே உள்ளதா என்று துருவியபோது, அது, மானமதுரைக்கு 3 மைலில் தென்கிழக்கே யுள்ள வேலங்குடி என்ற கிராமம் என்றே தெளிவாயிற்று. இவ் வேலங்குடி எல்லைக்கு வடமேற்கில் கடம்பங்குடியும் தென்கிழக்கில் கள்ளிக்குடி எல்லையும் சாஸனப்படியே உள்ளன. குரங்குடி என்ற எல்லையைப்பற்றி விசாரித்தெழுதும்படி என் அருமை அத்தை குமாரரான மகாவித்துவான் ரா ராகவையங்கார் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் அது குறுங்குடி வயக்கல் என்ற பேருடன் ஒரு பேச்சிலாக் (பேலரா) கிராமமாக வேலங்குடிக்குத் தென்மேற்கில் உள்ளதாகத் தெரிகிறது என்று எழுதினார். மற்றக் கிழக்கு மேற்கெல்லையூர்களாகச் சாஸனத்திற் கண்டவை காலா திதத்தால் மாறியனவாகும். அன்றியும், இவ்வேலங்குடி, பிராமணர் அனுபவித்து வரும் பழைய தர்மாசனக் கிராமமாகவும் பழைய விஷ்ணு வாலய முடையதாகவும் உள்ளதே, இவ்விஷ்ணு வாலயமுள்ள விடத்தே பழைய வேலங்குடி ஊர் அமைந்திருக்க வேண்டும். அதுபற்றியே எல்லையூர்களாக சாஸனத்திற் கண்டவை இப்போது கோணத் திசைகளைச் சார்ந்துள்ளன. பிற்காலத்தில் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவன் என்ற பாண்டியனால்

1,008 பிராமணர்களுக்குப் பூதானம் அளித்ததைப்பற்றிக் கூறும் பெரிய திருப்பூவணச் சாஸனங்களிற் கண்ட கிராமங்களிலே இவ்வேலங்குடியும் ஒன்ருகும். இச்சாஸனங்களிலும் கடம்பங்குடி, சள்ளிக்குடி, குரங்குடி என்ற அதன் எல்லையூர்கள் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளன. தானக்கிராமங்கள் பழம்பெயர் நீக்கிப் புதுப் பெயரிட்டளித்தாலும் அவற்றில் சில தம் பழம்பெயர்களோடும் சில புதுப்பெயர்களோடும் பிற்காலத்தில் வழங்கப்பட்டு வந்தன என்பதற்கு வேண்டிய பிரமாணங்கள் உண்டு. அதனல் ஸ்ரீவர மங்கலமென்ற ஆதிப்பெயர் பிற்காலத்தில் வழக்கு வீழ்ந்தது புதுமையன்று.

இவ்வாறு தென்களவழிநாட்டு வேலங்குடி என்பது வைகை யாற்றை யடுத்த தெற்கே உள்ள ஊராகத் தெளியப்பட்டமையால், அதனைத் தாமிர பரணிக்கும் அப்பால் பாண்டி நாட்டின் எல்லைப் புறத்துள்ள நாங்குனேரியாகக் கருதற்குப் பொருத்தமேனும் பிரமாணமேனும் இல்லை என்பது வெள்ளிடைமலைபோல் விளக்க மாகும். ஆகவே வானமாமலை என்று ஆழ்வார்பாடும் பெயர் வழக்குக்களுக் குரிய சீவரமங்கலம் திருமாலின் பெயரடியாக நாங்குனேரிக்கு வழங்கிய நாமம் என்பதும், அதற்கும் சாஸனங் கூறும் வேலங்குடியாகிய சீவரமங்கலத்துக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லையென்பதும், இவற்ருல், மாறன் பராங்குசரான சடகோபரை, அவருடைய தலைமையாலும், திருநாமங்களாலும், வாக்காலும் 7-ம் நூற்ருண்டின் பிற்பகுதியினராகக் கொள்ளத் தடையொன்று மில்லை என்பதும் தெரியலாம்.

இனி, நம்மாழ்வார் அவதாரகாலம் கலிபிறந்த 43-ம் நாள் என்று குரும் பரம்பரைகளிற் கூறப்படுதலை யாவரும் அறிவர். 2,400 ஆண்டுகட்குமுன் விளங்கிய சாக்கிய புத்தர் சமயத்தவரை "சமணரும் சாக்கியரும்" என்பதனல் குறிப்பிட்டுப் பாடிய ஆழ்வார் 5,000 ஆண்டுகட்குமுன் அவதரித்தவர் என்ற கருத்தைச் சரித்திரக்காரர்கள் ஒப்பாதது வியப்பன்று. அதனல், ஆழ்வார்க்கு கூறப்படும் கல்பப்பதம் ஏதோ ஒரு தவறுதலால் மாறி வழங்கி விட்டதாகவே தோன்றுகிறது. அம்மாறுபாடு இன்னது பற்றியாக வேண்டும் என்று நான் ஒருவகையாக யோசனை செய்து வைத்திருப்பதையும் இந்த அறிஞர்கள் குழுவில் வெளியிட விரும்புகிறேன்.

மேலே நான் காட்டிய திருக்காட்கரைச் சாஸனத்தில்—அக்கோயிற் பெருமாள் தீர்ப்பாதித்தம் கண்டருளிச் செல்லாநின்ற "3705—ஐயாண்டைக் கெதிராண்டு" என்றுள்ள வாக்கியத்துக்கு பொருள் கொண்டு, ஸ்ரீமாந் சுப்ரமண்ய ஐயரவர்கள் எழுதி யவைதைக் காட்டினேன் அன்றோ? அம்மாதிரியான பொருளே ஆழ்வாரது அவதாரகாலக் குறிப்புள்ள வாக்கியத்துக்கு ஆதியில் செய்யப்பட்டிருக்க வேண்டும். காட்கரைச் சாஸனம் போலவே—"ஸ்ரீசடகோபர் அவதாரமாகிச் செல்லாநின்ற 3760-ம் ஆண்டைக்கு எதிராண்டு" என்றும், நம்மாழ்வார் அவதார காலத்தைக் குறிப்பிட்டு அக்காலச் செய்திகள் எழுதப்பட்டிருத்தல் கூடியதே யன்றோ? இக்காலத்தும் "வைஷ்ணவ கிரந்தப் பதிப்புகளில், ஸ்ரீ பராங்குச அவதார வருஷம் இத்தனையாவதில் அச்சிடப் பட்டது" என்றுள்ளதைக் காணலாம். ஆகவே, அவ்வாக்கியத்துக்குக் காட்கரைச் சாஸனத்திற்போலவே இருபொருள் கொள்ள இடமுண்டு. இதற்கு—ஆழ்வார் அவதரித்த கலி 3760-ம் வருஷத்துக்கு அடுத்த வருஷம் என்பதே நேர்பொருளாயினும் "ஆழ்வார் அவதரித்தது 3760 வருஷங்கட்கு முன்னென்றும் அதற்கு அடுத்த வருஷம் இன்னது நடந்தது என்றும் மாருகக் கருதவும் இடமுண்டென்பது தெரியலாம். ஆழ்வார் அவதார காலத்துக்குக் கொடுக்கப்பட்டு வந்த கல்யபதத்தின் பொருள் இம்முறையாக மாறிய தென்றே தோன்றுகிறது. சடகோபர் கலிபிறந்தது 4362—நாள் சென்ற காலத்து அவதரித்தவர் என்றும் சில குருபரம்பரைப் பிரதிகளிற் பாடங் காணப்படுகின்றன. இதனால், அவ்வவதார காலம் பலவகையாயிருந்த தென்பது தெரியலாம். ஆழ்வார் அவதாரமாகிச் செல்லா நின்ற "4302-ம் ஆண்டைக் கெதிராமாண்டு" என்பது போன்றிருந்த பழைய வாக்கியமே, இப்பாட வாக்கியத்துக்கு மூலமாயிருக்க வேண்டும். யான்கூறிய இக்கருத்து அறிஞர்களால் ஆராய்ச்சி செய்யத்தக்கதே யாகும்.

பாரத வெண்பா

இதுவரை 7—8-ம் நூற்றுண்டுகளில் விளங்கிய அரசர்களையும் அடியார்களாகிய தெய்வப் புலவர்களையும் பற்றி இலக்கிய சாஸன வழிகளால் தெரியவருஞ் செய்திகளைக் கூறினேன். இனி, 9-ம் நூற்றுண்டுப் பெருமக்களைப் பற்றி ஆராய்வேன். இந் நூற்றுண்டின் பெரும்பாகமும் முன்போலவே, பாண்டிய பல்லவர் களே பேரரசர்களாக இருந்தனர் என்பது சரித்திரப் பிரசித்தம்

9-ம் நூற்றாண்டு பல்லவருள், பல்லவமன்னன் பேரன் மூன்றாம் நந்திவன்மன் (830-50) பிரபலமாயிருந்தவன் நந்திக்கலம்பகம் என்ற நூல் இவனைப் பற்றியது. இவனடத்திய போர்கள் பலவற்றை இந்நூல் குறிக்கின்றது. அவற்றுள் தெள்ளாறு என்ற இடத்தில் நடத்தப்பட்ட வெற்றியே சிறப்புடையதாகும். இதுபற்றியே 'தெள்ள றெறிந்த நந்தி போத்தரையன்' என்று சாஸனம் இந்நந்தியை விசேடிக்கும் (D.M.P. Cg. 234; T.Z. 297) இந்நந்தி பாரதவெண்பா என்ற நூலை இயற்றுவித்தவன். அந் நூலாசிரியர்—

" வண்மையாற் கல்வியால் மாபலத்தா லாள்வினையா
லுண்மையாற் பாரா ளுரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானே
டியார் வேந்த ரேற்பா ரெதிர் "

என்று பாடிய தலைப்பு வெண்பாவாலும் " அல்லிபீடத்தரிவைக்குத் தன் அழகமர் தோளே ஆலயமாக்கிய பல்லவர் கோமான் பண்டித ராலயனைப் பாவினேம் " என்ற உரை நடையாலும் இம்மூன்றாம் நந்தியையே குறிப்பிடுதல் காணலாம். தெள்ளாறென காஞ்சி புரத்துக்குத் தெற்கே முப்பது மைலில், வந்தவாசித் தாலூகாவில் இன்றும் அப்பெயருடன் உள்ள ஊராகும்.

இத்தெள்ளா றெறிந்த நந்தியின் பேரன் அபராஜிதன் என்பான். இவன் காலத்தில் நம்பி அப்பியார் என்ற பெரியார் திருத்தணிகை வீரட்டானேசுரர் கோயிற்குப் பல திருப்பணி செய்து புதுப்பித்தும், வேண்டிய பூமி யளித்தும் கைங்கரியம் புரிந்தவரென்பது மேற்படி வீரட்டானர் கோயிற் கர்ப்பக் கிருகத்துக் குமுதப் படையிற் கண்ட சாஸனங்களால் தெளிவா கின்றது. அவற்றுள், ஒரு சாஸனம் இங்கறியத் தக்கதாம் :

" ஸ்வஸ் தி ஸ்ரீ ;
திருந்து திருத்தணியிற் செஞ்சடை யீசற்குக்
கருங்கல்லாற் கற்றளியா நிற்க—விரும்பியே
நற்கலைக ளெல்லா நவின்றசீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து " இவ்வெண்பா
பெருமானடிகள் தாமே அருளித்து எனக் காண்க.

இதனுள் பெருமானடிகள் என்பது

" பெரிய விடைமேல் வருவாரெம் பெருமானடிகளே "

தேவா. 528, 1-10

"ஆலவாய்ப் பெருமானடிகள்" 'அரங்கத்துப் பெரு
மானடிகள் (S.I.I. V 150)

எனத் தெய்வங்கட்குமட்டுமன்றி அரசனைக் குறிக்கவும் அக்காலத்து வழங்கிய சொல்லாகும்.

"(பல்லவ மல்லன்) இங்கே பெருமானடிகளாகி
இராஜ தேஜஸோ வாரா நிற்க" (S. I. I. IV 5)
"பெருமா னடிகள் உள்ளன்பு மிக்குள இரணகீர்த்தி"
V 219
"சோழ பெருமா னடிகள்" எனக் காண்க.

இச்சாஸனம் அக்காலத்து அரசனான பல்லவ—அபராஜிதன் தானே அமைத்தது என்பது—"இவ்வெண்பா பெருமானடிகள் தாமே அருளித்து" என்ற அதனிறுதி வாக்கியத்தால் விளக்கமாகின்றது. ஆகவே, அபராஜிதன் தமிழ்ப்புலமையுடையவனென்பதும், நம்பியப்பியர் என்பவர், அவனால் மிகவும் கௌரவிக்கப் பெற்ற பெரியார் என்பதும் நன்கு பெறப்படும்.

வாதவூரடிகள்

இவ்வபராஜிதன் காலத்துப் பாண்டியன் வரகுணன் என்பவன். 862-ல் பட்டமெய்தியவன் இவன் என்பது ஐவர்மலைச் சாஸனத்தால் அறியப்பட்டதே. இப்பாண்டியன் வேள்விகுடிச் சாஸனம் அமைந்த நெடுஞ்சடையனுக்குப் பேரன் என்பார் பலராவர். இவர்கள் இங்ஙனம் கருதுவதற்குக் காரணமெல்லாம், நெடுஞ்சடையன் பட்டத்துக்கும் வரகுணன் பட்டத்துக்கும் இடையில் 95 வருஷங்கள் இடையிடுதலால் அது நீண்டகாலமாகின்றதென்பதேயாம். இப்படிக் கூறுபவர்கள் 717-ல் பட்டம் பெற்ற பல்லவ மல்லனுக்கும் அவன் பேரனும் 830-ல் பட்டம் பெற்ற தெள்ளாற்று நந்திக்குமிடையில் 113 வருஷம் இடையிட்டிருத்தலை ஒத்துள்ளவர்களே. அதனால், அவர்கள் கூறும் காரணம் பொருந்துவதன்று. மாணிக்கவாசக ஸ்வாமிகளால் திருக்கோவையாரிலும், திருவாசகத்திலும் கூறப்படும் வரகுணன், மீனவன் என்பவன் இவ்வரகுணன் என்பதே சாஸனம் வல்லோர் பலர் கொள்கையாகும். திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தர மூர்த்திகள் தம் திருத்தொண்டத் தொகையுள் வாதவூரடிகளைச் சேர்த்துப் பாடாமையும் தேவார வாசிரியர் மூவர்க்கும், சிறுத்தொண்டர் அவன் புத்திரர் சீராள தேவர்க்கும் கோயிலில் திருமேனி வகுத்துப் பிரதிஷ்டித்த 11-ம் நூற்றாண்டினனான ராஜ ராஜ சோழன் வாதவூரடிகட்கு ஒன்றும் செய்யாமையும் 'அவ்வடிகள் 11-ம்

நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாக வேண்டுமென்பது அன்னோர் கருத்து. இவ்வாதவூரர்காலம் மூவர்க்குப்பின் 9-ம் நூற்றாக வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் காட்டிக் காலஞ்சென்ற ராவ்பகதூர் தஞ்சை சீனிவாசப் பிள்ளையவர்கள் நம் தமிழ் மொழி வரலாற்றில் விளக்கியுள்ளார்கள். இவர்களுடைய கொள்கை எனக்கும் ஒத்ததே. நான் இவ்வாறு கருதற்குரிய காரணங்கள் வேறாகும். அவற்றுள் சிறந்தவை சில அடியில் வருமாறு :—

(1) சுந்தர மூர்த்திகள் திருத்தொண்டத் தொகையிற் கூறமற் போயினும் நம்பியாண்டார் நம்பிகள் சேக்கிழார் என்ற பெரியார்களேனும் தம் அந்தாதி புராணங்களில் வாதவூரடிகளை அடியார் வரிசைகளில் எங்காவது கூறலாமன்றோ? அவ்வாத வூரடிகளது கவித்திறமையை—

“ திருவாத வூர்ச்சிவ பார்த்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகள் டேயுமற்றப் பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே ”

என்று வியந்து பாடும் நம்பியாண்டார் நம்பிகள் அவரைத் திருத்தொண்டர் வரிசையுள் சேர்க்காதது என்னை? ‘பகையறு பாத்தியன் பாதம் பணிந்தாங்கு’ (மணி 10-35) இதனால், கல்வியிற் பெரியராகிய சிவஞானி வாதவூரடிகள் என்ற வழக்கு அந்நம்பிகள் காலத்திருந்ததாக மட்டும் கொள்ளத்தகுமேயன்றி, மூவர்க்கும் முற்பட்டவராக வாதவூரடிகள் 11-ம் நூற்றாண்டிற் கருதப்பட்ட வரல்லர் என்பதே பெறப்படுகின்றது. பொய்யடிமை யில்லாத புலவர்கள் என்பார் சங்கப் புலவர் 49-ன்மா என்றே அந்நம்பிகள் தம் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாடுதலால், அக் கூடத்துள் ஒருவராக வாதவூரரை அவர் கருதத்தினதில்லை என்பதுந் தெரியலாம். இவ்வாறு மூவர்க்கு பிற்பட்ட சிவனடியாராக விளங்கியமை பற்றியே—

“ வித்தகப் பாடன் முத்திறத் தடியரும்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
பெரிய வன்பின் வரகுண தேவரும் ”

என்று பட்டினத்தடிகளும், திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் முறைப்படக் கூறுவாராயினர் என்று தோன்றுகிறது. முதல் ராஜராஜ சோழன் தஞ்சையில் மூவர்க்கும் சிறுத்தொண்டர்

சீராளர்க்குமே திருமேனிப் பிரதிஷ்டை செய்து வாதவூரடிகளை மறந்ததற்குக் காரணமும் இதுவேயாகும்.

இனி, மூவர்க்கும் பிற்பட்டவர் வாதவூரடிகளாயின் அவ்வடியார் வரலாறுகளை அவர் திருவாசகத்துக் கூறியதுண்டோ எனின்; உண்டு. அவற்றிற் சிலவற்றைக் கூறுகிறேன்.

(1) அப்பர் சுவாமிகள் திருவதிகையில் தமக்கு வந்த சூலை நோய் நீங்கப் பெற்று சிவனடியா ரானதும், திருச்சத்திமுற்றத்தில் "பூவா ரடிச் சுவடென்மேற் பொறித்துவை" என்று வேண்டிக் கொண்ட அந்நாயனுர், திருநல்லூரில் சிவபிரானை வணங்கி எழவும் தம் திருவடிகளை அவர் முடியில் அப்பெருமான் வைக்க—"திருவடியென் றலைமேல் வைத்த நல்லூரெம் பெருமான் நல்லவாறே" என்ற தொடரைப் பாட்டிறுதிகளில் பதிகம்பாடியிருத்தலும் பலரும் அறிந்தவை. இவ்வரலாறுகளையே—

"பணிவார் பிணிதீர்த்தருளிப் பழைய வடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி"

என வாதவூரடிகள் கூறுதல் காணலாம். இங்கு பழைய வடியார் என்போர்—"பழைய வடியா ரொடுங் கூடா தென்னு யகமே பிற்பட்டிங் கிருந்தேன்" என்று வாதவூரரே கூறியபடி, அவர்க்கு முன் விளங்கிவரும், பிணிதீர்ந்து பாதங் கொடுக்கல் பெற்றவருமாகிய அப்பர் முதலிய மூவரே யாவர் என்று கொள்வது மிகவும் பொருந்துவ தன்றோ? இம்மூவரு மன்றேல் வாதவூரடிகட்கு முற்பட்டிருந்தவ ராதற்குரிய சிறந்த பழவடியார் வேறில்லாமையும் அறியத்தக்கது. இவ்வாறு "பிணி தீர்த்துப் பழைய வடியார்க்குன் னணியார் பாதங் கொடுத்தி" என்று அப்பரைப் புகழ்தற் கேற்ப—வாதவூரடிகள் அவ்வடியார் வாக்கை யாளுதலும் குறிப்பிடத்தக்கதாம் பல்லவ வேந்தன் தன் திருமுன்பு வரும்படி கட்டளை விடுத்தபோது அப்பர் சுவாமிகள் "நாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்" என்று தொடங்கும் பதிகம் பாடிய வரலாறு பலரு மறிவர். இவ்வாறு தொடங்கிய பதிகத் தொடரையே வாதவூரடிகள் "யாவார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம், மேவினோ மவனடியா ரடியரோடு" மென்று ஆளுதல் காணலாம். அடியாரது தொண்டரின் திருவடிகளை நாம் மேவினமையால், யாமும் யார்க்குங் குடியில்லை நமனை அஞ்ச வேண்டியது மில்லை என்பது கருத்து. யாமார்க்குங் குடியல்லோம் என முன்னின்ற தொடர் முன்னோர் கூற்று என்பதை உணர்த்தவே

"மேவினே மவனடியா ரடியாரோடும்" எனப்பின்தொடர் வாதவூராரற் கூறப்படுகின்ற தென்பது நோக்குவார்க்கு வெளியாகத் தடையில்லை. அப்பர் அவ்வாறு கூற நேர்ந்தது போன்ற சரித்திரம் வாதவூரார்க்கில்லாமையால், "மேவினே மவனடியா ரடியா ரோடும்" என்பதற்கு அடியாரடியை மேவினமை காரணமாக நாமும் அவ்வடியார் போல யார்க்குங் குடியாகாமையும் நமனை யஞ்சாமையுமாகிய தன்மையுடையே மாயினேம் என்பதே பொருளென்பது அறியலாம்.

(2) திருவீழி மிழலையில் பஞ்சகால நேர்ந்த போது அடியார்க் கமுதூட்டுதற்கு நல்ல பொற்காசு பெறவேண்டி "வாசி தீரவே காசு நல்குவீர்" என்று சம்பந்த மூர்த்திகள் பதிகம் பாடிக் காசு பெற்ற வரலாறு பலரும் அறிவர். இதுவே—

"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன்"

என்று வாதவூரடிகளாற் கூறப்பட்டதாகும். "பண்ணையுடைய பாடற்குப் பரிசாக நற்காசையுண்டாக்கி அளித்தருளிய சிவபிரான்" என்பது மேற்படி அடிகளின் பொருள். "பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு வாட வாட்டந் தவிர்ப்பார்" என்ற அப்பர் திருவாக்கினும் பாடியதற்குப் பரிசு பெற்ற செய்தி கூறப்படுதல் ஒப்பிடத்தக்கது. (தேவா. 820.7) பண்ணோடு கூடிய பழம்பாடல் மூவர் திருப்பாட்டன்றி வேறில்லாமையும் திருவாசகத்துக்குப் பண்ணில்லை என்பதும் அறியத்தக்கன. இன்னும் சம்பந்த மூர்த்திகளது பிரசித்த சரித்திர மொன்றையே—"கழுமலந் தன்னிற் காட்சி கொடுத்தும்", என்று கீர்த்தித் திருவகவலில் வாதவூரடிகள் பாடுவதும் காணலாம். இது, "தோடுடைய செவியன்" என்று நாயனர் பதிகம் பாடும்படி சிவபிரான் சீகாழியில் அவரது குழவிப் பருவத்தளித்த காட்சியையன்றிப் பிறிதன்று.

(3) சுந்தர மூர்த்திகளது திருமணக் காலத்தில் சிவபிரான் விருத்தவேதியனாய் வந்து அவர் தமக்கு அடிமை என்பதற்குரிய ஆவணவோலைகாட்டி ஆட்கொண்டதும், அங்ஙனம் கொண்டதவம் திருவெண்ணெய்நல்லூரிலுள்ள அருட்டுறை என்பதும் பலரும் அறிவர். இதுவே சரிதம்

"பரங்கருணையோடு மெதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ்
சோதியை"

என்று வாதவூரடிகளாற் பாடப்படுதல் அறியத்தக்கது. சிவபிரான் கருணையோடும் எதிர்ப்பட்டு அருட்டுறையில் அருள்புரியப் பெற்ற மெய்யடியார் சுந்தரமூர்த்திகளன்றி வேறியாவர் ?

(4) இனி, "புண்ணியமெய்த் தொண்டர் திருக்குறிப்பறிந்து போற்றி நிலைத்—திண்மையினூற்றிருக் குறிப்புத் தொண்டர்" என்று சேக்கிழாராற் புகழ்ப்பட்ட திருக்குறிப்புத் தொண்டர் வரலாறும் தெரிந்ததே. இவ்வரலாறே—

"தில்லைக் கோனே யுன்றன் திருக்குறிப்புக்
கூடுவார் நின் கழல் கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதானேன்"

என்று வாதவூரடிகளாற் கூறப்பட்டுக் கருதக் கூடிய தன்றோ ?. தமக்குமுன் சிவகதி யடைந்த பழைய வடியாரைத் திருக்குறிப்புக் கூடுவார் என்று திருவாதவூரடிகள் கூறுவது, தொண்டர் திருக் குறிப்பறிந்து போற்றி வந்த திருக்குறிப்புத் தொண்டரை யென்றே கருதுவது பொருத்தமாதல் காணலாம்.

இவ்வாறாயின், 'நரியைக் குதிரை செய்வானும்' என்று—வாதவூரடிகள் சரித்திரம் திருநாவுக்கரசு நாயனாராற் பாடப் பெற்றுள்ளதே எனின்—மகாவித்வான் இராகவையங்கார் அவர்கள் இதற்கு ஒரு சமயம் சிறந்த சமாதான மொன்றைக் கூறுவர். அதனை இங்குக் காட்டுதல் தகும். அதாவது :—

நரியைக் குதிரை யாக்குதல் என்பது, கல்லில் நாருரித்தல், வித்தின்றி விளைவு செய்தல் என்பவை போல அமானுஷ்யமான செயற்கருஞ் செயலைக் குறிக்க வழங்கும் ஒரு பழமொழியாம். "கன்னா ருரித்தென்னை யாண்டு கொண்டான்" "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்பர் வாதவூரடிகளும். இத்தகைய அகடித கடனா சாமர்த்தியம் ஈசனுக்குரிய தென்பதைக் காட்டவே "நரியைக் குதிரை செய்வானும்" என்று அப்பர் சுவாமிகள் கூறியதே யன்றி வாதவூரர் சரித்திரங் கூறவந்தவரல்லர். வாதவூரர் சரித்திரமே குறித்தவராயின் "நரகரைத் தேவு செய்வானும், விச்சின்றி நாறு செய்வானும்" என்பவற்றுக்கும் சரித்திரம் வேண்டும். அவ்வாறு சரித்திரங்களில்லாமையால், அவர் கூறியவை யாவும் செயற்கருஞ் செயல்கள் என்பதைக் குறிக்க வந்தன என்பதில் ஐயமில்லை. ஆகவே, வாதவூரடிகட்கு முன்பே அப்பழமொழியின் வழக்குண்டென்பதும் அப்பழமொழியையன்றி வாதவூரர் சரித்திரங் கூறியவரல்லர் அப்பமூர்த்திகள் என்பதும் பெறப்படும்.

ஆயின், வாதவூரடிகள் காலத்து அச்செயல் நடத்தப்பட்டதில்லையோ எனின் ; முன்பு ஈசனது செயற்கருஞ் செயற்கு உவமை கூறப்பட்டு வந்த " நரியைக் குதிரை செய்தல் என்ற பழமொழி உண்மையில் வாதவூரடிகள் காலத்து நிகழ்ந்திருத்தலும் அஃது அவ்வடிகளாலும் பிறராலும் பாராட்டப்பட்டிருத்தலும் கூடியனவேயாம். ஆகவே, அகடித கடனு சாமர்த்தியங் குறிக்கும் இப்பழமொழிபடியே பிற்காலத்தில் மாணிக்க வாசகர் பொருட்டுச் சிவபிரானுல் அவ்வருஞ்செயல் நடத்தப் பெற்றதனுல் " நரியைக் குதிரைப் பரியாக்கி " என்று திருவாசக முதலியவற்றிற் சரிதம் கூறப்பட்டதென உணர்க. இந்த சமாதானம் மிகவும் ஏற்புடையதென்றே எண்ணுகிறேன்.

இனித் திருச்சிற்றம்பலக் கோவை வாதவூரடிகள் செய்ததென்பதை—" திருவாதவூர்ச் சிவபாத்தியன்செப் திருச்சிற்றம்பலப் பொருளார் திருக்கோவை " என்று நம்பியாண்டார் நம்பிகள் கூறுதல் மேலே குறிக்கப்பட்டது. சிவபாத்தியன் என்பதற்குச் சிவனது பாதத்துக்கு அன்பன் ; சிவனடியான் என்பது பொருள். சாதுசக்கரன் என்ற பௌத்த முனிவனை புத்தரது பாதத்துக்கு அன்பன் என்ற பொருளில் " பகையறு பாத்தியன் " என்று சாத்தனுர் மணிமேகலையிற் கூறுதலுங் காணலாம் (மணி 10-35) வாதவூரில் அவதரித்த சிவனடியார் மாணிக்கவாசகரன்றி வேறெவருமில்லை. அதனுல், திருக்கோவையாரைத் திருமுறைகளுள் ஒன்ருக உமாபதி சிவாசாரியர் கூறவில்லையேனும், அவ்வடிகள் செய்ததே அக்கோவை என்பதில் தடையில்லை. அதனுல், திருக்கோவையிற் கூறப்படும் வரகுணனுந் தென்னவனே—எப் பொருளும் விளங்கத் தூண்டிய சோதியை மீனவனுஞ் சொல்ல வல்லனல்லன் " என்று திருவாசகத்துப் புகழப்படும் பாண்டியன் என்பதும், அப்பாண்டியன் 862-ல் பட்டம் பெற்ற வரகுணனையச் சொல்லுதல் பொருந்தும் என்பதும் என் கருத்து. வாதவூரடிகள்—போற்றித் திருவகவலில்—

" மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி "

என்கின்ருர்.

இங்கு ஈசனை மலைநாட்டு மன்னனுருவாகவும் அரிகேசரி என்பவனுகவும் கூறுதல் காணலாம். மலைமன்னனுடன் சேர்த்துக் கூறப்படுதலால், அரிகேசரி என்பான் அரசனே என்பதும் இப் பெயர் பாண்டிய வமிசத்தவருள் வழங்குதலின், அவன் பாண்டியனே என்பதும் பெறப்படுகின்றன " பெருந்துறை மேய

தென்னவன் சேரலன் சோழன்" என்று சிவாம்சங்களாகவே தமிழ் மூவேந்தரை வேறிடத்தில் வாதவூரர் வழங்குதல் ஒப்பிடத் தக்கது. அரிகேசரி என்பது வரகுணன் தந்தைக்கும் வழங்கிய பெயராகச் சின்னமனூர்க் கோயிலில் கண்ட சாஸனங்களினின்று வ.கிக்க இடமுள்ளது. (Im. PP 1034 No. 350–52) இதற்கேற்ப வாதவூரர் வாக்கில் பாண்டியன் செய்தி யொன்று காணப்படுதல் அறியத் தக்கதாம் :—

" கூற்றைவென் றுங்கைவர் கோக்களை யும்வென் றுவந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானுமோர் மீனவர் பால்
ஏற்றுவந் தாருயி ருண்ட திறலொற்றைச் சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே "

என்று அவ்வடிகள் பாடுகின்றார். இப்பாட்டின் பொருள் :—
"(முன்பு) மீனவன் ஒருவன்மேல் எதிர்த்து வந்த பகைவரது உயிர் கவர்ந்த ஒற்றைச் சேவகனே (இப்போது) யமனை வென்றது போல ஐந்து அரசர்களையும் வென்று வந்து தன் பெருந்தேவியோடும் வீற்றிருந்தான்" என்பதே. முற்காலத்தில்—பாண்டியனொருவன் வேற்றரசன் படையெடுப்பால் வருந்தியபோது சிவபிரான் தன்படையுடன் சேனைத் தலைவராய்ச் சென்று மெய்க் காட்டிட்டுப் பாண்டியனறியாதே பகைவரைப் புறங்காட்டி ஓடச்செய்து அரசன் முன் தன் செய்தியுரைத்து நின்ற வரலாறு திருவிளையாடலிற் கூறப்படுகின்றது. இவ்வாறு ஒருகாலத்துப் பாண்டியன் பகைகளைந்த ஒற்றைச் சேவனுன ஈசனே இப்போது ஐந்தரசர்களையும் வென்ற அரசனுடைய பெருவெற்றிக்குக் காரணமானவன் என்பது கருத்து. இங்கு ஐவர் கோக்களையும் வென்றவனுகத் திருவாதவூரர் கூறும் அரசன் வரகுணன் தந்தையும் ஏகவீரன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லவன் பரசக்ர கோலாகலன் என்ற பெயர்களுடையவனுமான பாண்டியன் என்பது—

' மாயா பாண்டயம் கேரளம் ஸிம்மளேந்த்ரம்
ஜித்வா ஸங்க்யே பல்லவம் வல்லறஞ்ச
ஏகச் சத்ரா மேஜிநீ மேகாவீர :
ப்ரார க்ஷத்யப் ப்ரேம பாத்ரம் ப்ரஜாநாம்"

என்ற சின்னமனூர்ச் சாஸன சுலோகத்தால் தெரியலாம். இதனுள், மாயாபாண்டியன், கேரளன். சிங்களவரசன், பல்லவன், வல்லபன் என்ற ஐவர் கோக்களை ஏகவீரனுன பாண்டியன் வென்ற செய்தி கூறப்படுதல் கண்டுகொள்க. மேற்படி சாஸனத் தமிழ்ப் பகுதியில்—இவன்

கொங்கலர் பொழிற் குடமூக்கில் வந்தெதிர்த்த
கங்க பல்லவசோள காலிங்க மாகதாதிகளை

வென்றவனென்று வேறு ஐவரைக் கூறுகின்றது. எப்படியும், இரண்டு இடங்களில் அரசர் ஐவர் குழுவை எதிர்த்து வெற்றி பெற்றவன் இப்பாண்டியன் என்று கொள்ளத் தடையில்லை. இத்தகைய செயம் பெற்றதனால்தான் ஏகவீரன் என்ற நாமம் இவனுக்கு வழங்கலாயிற்று என்று சொல்லலாம். இப் பெருவெற்றியை, முன்பாண்டியனொருவனுக் களித்தது போல் அளித்தவன் ஆலவாயில் அம்பிகையோடும் வீற்றிருக்கும் ஈசனை ஏகவீரன் அல்லது ஒற்றைச் சேவகனே அன்றி அரசனை ஏக வீரனல்லன் என்றும் இவ்வுண்மை முன்பு தெளியாதவர்களுந் தெளிந்து அப்பெருமானடியை விரைந்து பற்றி விரும்பியது பெறுங்கள் என்றும் தம் திருவுள்ளத்துக் கொண்டு வாதவூரடிகள் இப்பாடலை அருளிச் செய்தவரென்றே சொல்லலாம். இப்பாடலுள் ஒற்றைச் சேவகன் என்பது அக்காலத்துக்குரிய ஒரு வழக் காகும்:—

"பெருமானடிகள் உள்ளன்பு மிக்குள இரணகீர்த்தியும்
அமர்க் கழியும் உள்விட்டிறெற்றைச் சேவகர் கோட்டை
யழியாமை காத்தெறிந்து" (T.A.S. ii 158)

"திருவொற்றைச் சேவகன் மாயவிட்டி" (I.M.P. 30)

"மலையாண ஒற்றைச் சேவகர்" (I.M.P. 208)

தென்னாட்டு மூத்த ஒற்றைச் சேவகரில் (T. A. S. iii 73) எனக் காண்க. தனிநின்று பகை வெல்லவல்ல வீரன் என்பது இதன் பொருள். "தனிநின்று வென்ற சசிகுலச் சளுக்கி" (S.I.I. v. 195) என்ற தொடர் சாஸனத்துப் பயில்வதும் காணலாம். தனிசேவகன் (S.I.V. 303) ஏகவீரன் (S.I.I. v. 14) ஏகதீரன் (மேற்படி -I 64) முழுச்சேவகன் (I. M. P. 1659) என்பனவும் ஒற்றைச் சேவகன் என்ற பொருளுடையனவேயாம். இதற்கு ஒற்றாய்வந்த போர்வீரன் என்று சிலர் பொருள் கூறியிருப்பது பொருந்தாது.

நாதமுனிகள்.

இவ்வாறு, மாணிக்க வாசகரும் வரகுணனும் வாழ்ந்த 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் வைஷ்ணவாசாரியத்தலைவ ரான நாதமுனிகள் விளங்கிய காலமாகும். தம்மூர்த்திருமால் கோயிற்கு வந்து அந்தணர் சிலர் திருவாய்மொழிப் பதிக

மொன்றை ஓதிக் கொண்டு சேவிக்க, அதன்முடிவில், "ஓராயிரத் துளிப்பத்தும்" என்று வந்ததைக் கேட்ட நாதமுனிகள் அவர்களை இப்பிரபந்தம் முழுதும் வருமோ என்று கேட்க—'இவ்வளவே எங்கட்குத் தெரிந்தது' மற்றையவை ஆழ்வார் அவதாரஸ்தலமான திருக்குருகூரிலே கிடைக்கலாம் என்று தெரிவிக்கவும், அம்முனிகள் மேற்படி அவதாரஸ்தலம் சென்று, ஆழ்வாரை உபாசித்துத் திருவாய் மொழி கிடைக்கப்பெற்றுத் திரும்பித் தம்மூர் வந்து அவற்றுக்குப் பண்முதலியன வகுத்து நாடெங்கும் பாவச் செய்தனர் என்ற சரித்திரம் பிரசித்தமானதே விஜயாலயன் மகன் ஆதித்த சோழன் ஆட்சித் தொடக்கத்தில் அதாவது 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆழ்வார் பிரபாவம் சோணாட்டில் பரவலாயிற்று என்பது "சடகோபன்" என்ற பெயர் திருக்கன்னபுரத்துச் சாஸனத்துக் காணப்படுதலால் தெளிவாகும். ஆதித்தன் மகன் பாரந்தகனுடைய அதிகாரிகளுள் ஒருவனுக்கு நம்மாழ்வார் என்ற பெயர் இருத்தலை நோக்கு மிடத்தும் இது வலிபெறுகின்றது. இவற்றால் ஆழ்வார் விஷயம் இடையே நெடுங்காலம் மறக்கப்பட்டிருந்ததை நாதமுனிகளே முதன் முதலில் வெளிப்படுத்தியவர் என்பது தெரியலாம். இது பற்றியே, ஆழ்வார்கள் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளி நெடுங்காலங் கழிந்தவாறே, நாதமுனிகள் அவதாரம் என்று குருபரம்பரைகள் யாவும் கூறுவனவாயின. நாதமுனிகள் திருவாய் மொழியை, ஆழ்வாரிடமிருந்து நேரேபெற்றாரென்று திவ்யசூரிசரிதங் கூறுவதாகக் கோபிநாத ராயரவர்கள் கருத்துக் கொண்டு அவ்விருவரும் ஒரு காலத்தவரே என்று எழுதினர். அவ்வாறு இல்லை, உபாசனையில் தெய்வங்கள் தோன்றி அருள் புரிவது போலவே, ஆழ்வாரும் தெய்வ உருவில் தோன்றி நாதமுனிகள் உபாசனைக்காக உகந்து அருளியவர் என்று தான் அத்திவ்ய சூரிசரிதக் கூற்றிலிருந்து நாம் பொருள் கொள்ளும்படி உள்ளது. திருவாய் மொழியை மட்டும் நாதமுனிகள் பெற்றார் என்று அச்சரிதம் கூறுவதனால், ஏனைய திவ்ய பிரபந்தங்கள் நாட்டில் கிடைக்கக்கூடிய வழக்கி லிருந்தன என்றே தோன்றுகின்றது. பொய்கையார் முதலிய ஆழ்வார்கள் அந்தாதிகள் முன்னூல்களில் மேற்கோள் காட்டப்பட்டிருத்தலும் அவற்றின் வழக்குண்மையைக் காட்டுவதேயாம்.

இதுவரை கூறிவந்த சைவவைணவ அடியார்கள் காலத்தை ஒட்டி எழுந்த நூல்களே. முத்தொள்ளாயிரம், இறையனார் களவியலுரை, சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி முதலியன என்று சொல்லலாம். இந்நூல்களிற்கண்ட சொற்பொருள்

வழக்குகள்பல இக்காலத்தெழுந்த தேவாரம் திவ்யப்பிரபந்தம் முதலிய அடியார் வாக்குகளிலும் சாஸனங்களிலும் காணப் படுவனவற்றோடு பெரிதும் ஒற்றுமைப் படுதலால் இது அறியப்படும் இவ்வழக்குகளைப்பற்றி இனி அறிவிக்க விரும்பு கிறேன்.

யானை மலைச் சாஸனம்.

மதுரையை அடுத்த ஆனைமலை நரசிம்மப் பெருமாள் கோயிலிற் கண்ட வடமொழி தென்மொழிச் சாஸனங்கள் பாண்டிய மந்திரி களான மாறங்காரி, மாறனெயினன் என்ற சகோதரர்கள், அக் கோயிலைக் கட்டியவர்கள் என்ற செய்தி கூறுவன என்பது பலரும் அறிவர். அவற்றுள் வடமொழிச் சாஸனம்—வைத்ய குலத்தவ னாகவும், அழகிய பாடல்களைச் செய்வதனால் மதுரகவி என்ற பெயர் பூண்டவனுமாகிய மாறன்மகன் பிராமணர்க்குத் திரவியங் களளித்து அக்கிரகாரங்கட்டித் தானஞ் செய்ததோடு— கலி 3871 (770)-ல் பகவானை அங்கே சாஸ்திரோக்தமாகப் பிரதிஷ்டையும் செய்தான் என்று கூறுகிறது. இரண்டாவது தமிழ்ச் சாஸனம் அடியில் வருமாறு :—

"கோமறஞ் சடையற்கு உத்தரமந்த்ர களக்குடி வைத்யன் மூவேந்தமங்கலம் பேரரையன் ஆகிய மாறங்காரி இக்கற்றளி செய்து நிரத்தளியாதே ஸ்வர்க்கா ரோகணஞ் செய்த பின்னை அவனுக்கு அனுஜன் உத்தரமந்த்ரபதமெய்தின பாண்டிமங்கல விசையரையன் ஆகிய மாறனெயினன் முகமண்டபஞ் செய்து நிரத்தளித்தான்—என்பதாம்.

இவற்றுள் வடமொழிச் சாஸனம் பாண்டி மந்திரிகளுள் மூத்தவனான மாறங்காரியுடையதென்றும், தமிழ்ச் சாஸனம் அவன் தம்பி மாறனெயினனுடைய தென்றும் கொண்டு, தமையன் கோயில் கட்டிப் பகவானைப் பிரதிஷ்டித்த காலமே அதிற்குறிக்கப் பட்ட கல்யப்தம் எனவும் அவன் தம்பியின் முகமண்டபஞ் செய்து நிரத்தளித்தவனெனவும் சாஸன பரிசோதகரும் பிறரும் கருதி எழுதி யுள்ளார்கள். "இக்கற்றளி செய்து நிரத்தளியாதே தமையன் விண்ணுலகடையத் தம்பி முகமண்டபஞ் செய்து நிரத்தளித்தான் என்ற வாக்கியத்திற் கண்ட நிரத்தளித்தல்" என்பதற்குக் கும்பாபிஷேகம் அல்லது பிரதிஷ்டை என்றே எல்லோரும் பொருள் செய்து வருகின்றனர். இதற்குப் பூர்த்தி செய்து நிறைவேற்றுதல் என்றும் பொருள் கொள்ளலாமாயினும்

சந்தர்ப்பத்தை நோக்குமிடத்து அது பொருந்தவில்லை. தமையன் அக்ரகாரத்தோடு கோயில் கட்டிப் பிரதிஷ்டித்த பெருஞ்செயலை அவன் முகமண்டபமொன்று கட்டாத செயலைக் குறையுடையதாகக் காட்டி, அவன் தம்பி முகமண்டபஞ் செய்து நிரத்தளித்தான் என்று தன் பெருமை பாராட்டிச் சாஸனம் வரைந்திரான் என்றே சொல்லலாம். ஆகவே, கும்பாபிஷேகமாகிய பிரதிஷ்டையைத் தமையன் செய்யாது போனதைத் தம்பி செய்தான் என்று பொருள் கொள்வதே பொருத்தம். ஆயின், வடமொழிச் சாஸனமோ எல்லாரும் கருதிவருகிறபடி தமையனை மாற சூனுவால் பகவான் சாஸ்திரோக்தமாகப் பிரதிஷ்டை செய்யப் பட்டார் என்று கூறுகிறது. இது தமையன் நிரத்தளியாதே (பிரதிஷ்டை செய்யாதே) சென்றதைத் தம்பி பிரதிஷ்டித்தான் (நிரத்தளித்தான்) என்ற தமிழ்ச் சாஸன விஷயத்தோடு முற்றும் மாறுபடுதல் காணலாம். "கிருத ப்ரதிஷ்டோ ஹறவான் யதாக்ரமாத்" என்ற வடமொழிச் சாஸன வாக்கின்படி தமையனை மாறங்காரியால் ஏற்கவே பிரதிஷ்டிக்கப்பட்டு விட்டதே. அதற்கு மாறாக அவன் பிரதிஷ்டிக்கவில்லை என்றும் அதனைத் தம்பி பிரதிஷ்டித்தான் என்றும் தமிழ்ச் சாஸனம் கூறுமா? ஆகவே, இச் சாஸனங்களிரண்டையும் இணக்கிப் பொருள் கொள்வதெப்படி என்பது இறுக்க வேண்டிய பெருங் கேள்வியாகும். நான் இதற்குக் கூறும் விடையாவது:—இச் சாஸனங்களிரண்டும் தம்பியாகிய மாறன் எயினனுடையவை என்று கொள்ள வேண்டும் என்பதே, "மாறங்காரி கற்றளி செய்து நிரத்தளியாதே" சென்றான். எனவே, அவன் அவ்வானை மலைக் குடைவரைக் கோயிலைச் செய்து முடித்துப் பிரதிஷ்டிக்காமற் போனவன் என்பது பெறப்படும். அதனால், அக்கோயிலைப் பின்பு (நிரத்தளித்தவனாக) பிரதிஷ்டித்தவனாகத் தமிழ்ச் சாஸனங் கூறும் தம்பி மாறன் எயினனே, வட மொழிப் பகுதியிற் கண்ட மதுரகவி யாகிய மாறசூனு என்றும், அவ்வடமொழியிற் கண்டபடி கலி 3871—(770)-ல் அக்ரகார முதலியவை தானம் செய்து பகவானை ஆனை மலையில் பிரதிஷ்டித்தவன் அத்தம்பியே என்றும் அச் சாஸனங்கட்குப் பொருள் கொள்ள வேண்டும். வட மொழியில் மாறங்காரி என்ற தமையன் பெயரில்லாமல் மாறஹூனு : (மாறன் மகன்) என்றே கூறப்பட்டிருத்தல் மிகவும் கவனிக்கத்தக்கது. மாறங்காரி, மாறன் எயினன் என்ற பெயர்களுக்கு மாறனுக்கு மகன் காரி, மாறனுக்கு மகன் எயினன் என்பன பொருள்கள். தந்தை பெயரை உடனிணைத்துக்கூறும் பழைய முறைப்படி

இவ்வாறு காரியும் எயினனுமாகிய சகோதரர் விசேடிக்கப்பட்டனர் என்பது தெரிந்ததே. அதனால், மாறஹனு: என்பது தம்பிக்கும் உரியதாதலால் மாறங்காரியையே அது உணர்த்த வேண்டுவ தாகாமை காணலாம். ஆக, தம்பி மாறனெயினன் சாஸனங்களே அவை என்றும், மதுரகவி என்ற விசேடணம் அவனுக்குரியதே என்பதும், அவனே தன் தமையன் செய்துமுடித்த கற் கோயிலுக்கு முகமண்டபங்கட்டி கலியப்தம் 3871-ல் (770) பகவானைப் பிரதிஷ்டித்தலாகிய நிரத்தளித்தலைச் செய்தவ னென்பதும் மிகத் தெளிவாதல் காணலாம்.

இனி, நிரத்தளித்தல் என்ற வழக்கை நோக்குவோம்: இதற்கு நீரைத் தெளித்தல் அல்லது சம்புரோக்ஷணம் என்பது பொருளாக வேண்டும் என்று கோபிநாதராயரவர்கள் பொருள் கூறி, நீர்த் தெளித்தல் என்பது நீரத்தளித்தல் என்று மாறியிருக்க வேண்டு மென்று எழுதியிருக்கிறார்கள். இது, பொருந்துவதே யாயினும், தெளித்தல் என்பது தளித்தல் என்றும் நீர என்பது நீர் என்றும் திரிந்தனவாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. நண்பர் K. G. சங்கரய்யர் அவர்கள் தளித்தல் என்பதே தெளித்தல் என்ற பொருளில் ஐங்குறுநூற்றில் வழங்குவதாகக் காட்டி, நீர்த் தளித்தலே சம்புரோக்ஷணத்தைக் குறிக்கும் என்று எழுதியுள்ளார். இது முன்னதினும் பொருத்த மென்பதில் தடையில்லை. ஆனால் என்னுடைய கருத்தில் இது, கோயிலின் முதற் பிரதிஷ்டைக்குச் சாஸனங்களில் வழங்கும் வடசொல்லாகிய சர்வாதித்யம் என்பதற்கு நேரான தமிழ் வழக்காகத் தோன்றுகிறது. எல்லார்க்கும் ஆதித்யஞ் செய்தல் அல்லது உண்டி முதலியவற்றால் உபசரித்து விருந்து செய்தல் என்பது சர்வாதித்யம் என்பதற்குப் பொருளாம். புதிதாகக் கோயில் கட்டிச் செய்யும் முதற் பிரதிஷ்டையில் எல்லார்க்கும் ஆதித்யம் செய்து ஆராதிக்குஞ் சிறப்புப்பற்றி அதற்கு இப்பெயர் வந்தது. நிரந்தளித்தல் என்பதும் இப்பொருளே உடையது. நிரந்து அளித்தல் என்பதற்கும் எல்லார்க்குஞ் சேர உணவு முதலியவை வழங்கி உபசரித்தல் என்று பொருள். "அறவோர்க்களித்தலும் அந்தண ரோம்பலும்" என்ற இளங்கோவடிகள் வாக்கிலும் அளித்தல் ஓம்பல் என்பன ஆதித்யஞ் செய்தல் என்ற பொருளில் வழங்கப் பட்டிருத்தல் காணலாம். நிரத்தல்—ஒப்பவாதல், நிரத்திவழங்குக என்பது எல்லார்க்கும் சமமாக உணவு வழங்குதல் என்ற பொருளில் மலையாள பாஷையில் உள்ளதும் இங்கு அறியத்தக்கது.

இவற்ருல் சர்வாதித்யமும் நிரத்தளித்தலும் கோயிலின் முதற் பிரதிஷ்டைக்கு அக்காலத்தில் வழங்கிய வடமொழி தென்மொழிச் சொற்களாகவே கொள்ளத் தடையில்லை.

இனி, மெட்ராஸ் மியூசியப் பட்டயம் 862-க்குப் பின் பாண்ட வரகுணன் தம்பி சடையன் பராந்தகன் என்ற அரசன் காலத்து உண்டான தென்றும் அதனுல், பரமவைஷ்ணவனுகக் கூறப் படுபவன், மாறவர்மன் மகன் நெடுஞ்சடையன் அல்லன் என்றும், ஆகவே, அந்நெடுஞ்சடையனைப் பரமவைஷ்ணவனுகவும் பெரியாழ்வார் காலத்தவனுகவும் எழுதிய என் கொள்கை தவறு என்றும், சென்னை ஹிஸ்டாரிகல் ஜேர்ணலில் ஸ்ரீமாந் நாராயணையரவர்கள் சமீபத்தில் எழுதியுள்ள விஷயத்தைப் பார்த்தேன். மேற்படி மியூஸியப் பட்டயத்தில் "வேலங்குடியின் பழம் பெயர் நீக்கிச் சீவாமங்கலமெனப் புதுப் பெயரிட்டது என்பதனுல், சீவரன் என்பது அச்சாஸனமளித்த பாண்டியனுக்கு உரிய தென்பது தெரிதலோடு இப்பெயர் பெற்ற பாண்டியனைப் பண்டிவத்ஸலன், வீரபுரோகன், விக்ரமபாரகன் என்று அப் பட்டயம் பல பெயர்களாற் புகழ்தலையும் காணலாம். இப்பெயர்கள் எல்லாவற்றையும் மாறவர்மன் மகனை நெடுஞ்சடையனுக்கு வேள்விகுடிச் சாஸனமும் விடாது கூறுகின்றது. ஆனுல், இரண்டாம் வரகுணன் தம்பிக்கு அவை யொன்றுங் காணப் படவில்லை. மேற்படி மியூசியம் பட்டயத்திற் கண்ட நெடுஞ் சடையன் போர்களும் வரகுணன் தம்பி சடையன் நடத்தியன வாகச் சின்னமனூர்ச் சாஸனம் கூறும் போர்களும் வேறு பட்டவைகளாகவே உள்ளன. (பெண்ணைகடத்தில் அவ்விருவரும் நடத்தியவைகளாக வேள்விகுடி சின்னமனூர்ச் சாஸனங்கள் கூறுவது போன்றதே, கொங்கு நாட்டில் அவ்விருவர் நடத்திய போர்களும்) இனி, நெடுஞ்சடையனது மூன்று வருட ஆட்சியில் நடந்தவற்றைக் கூறும் வேள்விகுடிச் சாஸனம், அவன் பல்லவ னுடனும் ஆய்வேளுடனும் நடத்தியவாகக் கூறும் போர்களையே அவனது, 17 வருஷச் செயல்களிற் சேர்த்து மியூசியம்பிளேட் கூறுகிறது. அன்றியும், வேள்விகுடி மியூசியப் பட்டயங்கள் எழுத்தமைதியால் ஒரு காலத்தனவயாகச் சாஸன பரிசோதகர் கூறுதலும் அறியத்தகும். இன்னும் சில காரணங்கள் அவ்விரண்டும் ஓரரசன் காலத்தனவைகளே என்று சொல்லுதற்கு உள்ளன. ஆதலால், ஐயரவர்கள், என் கருத்தில் கண்ட தவறுகள் ஏற்புடையனவில்லை என்பதில் ஐயமில்லை. அதனுல், ஆண்டாள் வாக்கைக் கொண்டு நான் கணிபித்துக் கூறிய முடிவுக்கு யாதோர்

இழுக்குமில்லை. சேரமான் பெருமாள் சாஸனமாகத் திருவனந்த புரம் வீரக்கல்லைக் கொண்டு, அவர்கள் கருதிய விஷயம் இயை புடையதென்று நான் சொல்ல முடியாது. என்னைப் போலவே பலருங் கொள்ளுங் கருத்து. அதனால், சேரமான் பெருமான் காலம் 8-ம் நூற்றாண்டுத் தொடக்கம் என்ற என் கொள்கை அசை வுற்றதன்றென்பதும் அறியத்தகும்.

இனி, உத்தேசம் ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்த தமிழ்ப் புலவர் பெருமக்களைப் பற்றிச் சாஸனங்களால் சில விஷயங்கள் தெரியவருகின்றன. அவர்களைப் பற்றிக் கூறுவேன்.

மதுரையாசிரியன் இளங் கௌதமன்.—புதுக்கோட்டைச் சீமைச் சித்தன்னவாசலில் மலைக்குகையாக அமைந்த சைனாலயத் தின் தெற்குப் பாறையிற் கண்ட சாஸனமொன்றில்--

திருந்திய பெரும்புகழ்த் தெய்வ தரிசனத்
தருந்தவ முனிவனைப் பேரருட் செல்வனை
[உளங்கொள்] நிலைமை யிளங்கௌ தமனெனும்
வளங்கெழு திருநகர் மதுரையா சிரியன்
பார்முழு தாண்ட பஞ்சவர் குலமுதல்
ஆர்கெழு வைவே லவனிப சேகரன்
சீர்கெழு செங்கோற் சிரீவல் லுவனுக்'

இதனால், சிரீவல்லுவன் என்ற பாண்டியன் காலத்தே மதுரை யாசிரியர் இளங்கௌதமனார் என்ற புலவர் விளங்கியிருந்தனர் என்பது தெரியவருகின்றது. இவ்வாசிரியர் அச்சினாலயத்தின் உள்ளும் புறம்பும் மண்டப முதலிய திருப்பணி செய்தவர் என்று அச்சாஸனத்திற் காணப்படுதலால், இவர் ஜைன சமயத்தவர் என்பது பெறப்படும். இச்சாஸனத்துக் கண்ட பாண்டியன் 9-ம் நூற்றாண்டினனாகி மேலே நான் கூறிய ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் ஆக வேண்டுமென்பது ஸ்ரீவல்லுவன் என்ற திரிந்துள்ள முறை குறிப்பிடத்தக்கது. முதலிராஜேந்திரனது 3-ம் ஆட்சி வருஷத்தில் கும்பகோணத்தை அடுத்த திருவிசலூர்ச் சிவன் கோயிலிற் கண்ட சாஸன மொன்றிலும், அக் கோயிற் சிவபிரானுக்கு, பாண்டியன் சிரீவல்லுவர் தேவியார் குந்தப்பாவையார் என்பவள் சில திருவாபரணமளித்தனள் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஸ்ரீவல்லபன் என்பது சிரீவல்லுவர் என்று திரிந்த முறையினின்று,

வள்ளுவர் என்ற சொல்லும் இவ்வகையாக வந்ததோ என்று தோன்றுகிறது. வல்லபர் என்பது கரும அத்யக்ஷன் என்ற பொருளில் வடமொழியில் உள்ளது. இராஜ வல்லபன் என்பர், "வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னர்க்--குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்" என்ற நிகண்டால் வள்ளுவர் என்பது இராஜவல்லவர்க்குப் பண்டு வழங்கிவந்த செய்தி தெரியலாம். "இராய சேகரான வள்ளுவர்" என்று சாஸனங்களும் வழங்கு கின்றன. சேரனது படைத்தலைவனொருவனுக்கு நாஞ்சில் வள்ளுவன் என்பது பெயரென்று புறநானூற்றால் அறிகிறோம். இதனால், அரசர்க்குள்படு கருமந் தலைவராம் அக்காலத்து விளங்கியமை பற்றியே வல்லபர் என்று வடமொழியில் வழங்கிய பெயரே வள்ளுவர் என்று தமிழில் திரிந்து வந்ததாகக் கூறப் பொருத்த முண்டென்னலாம். மாளவன், குட்டவன், ஈழவன் என்பன மாளுவன், குட்டுவன், ஈழுவன் என இடையுகரம் பெறுதலும், வல்லி, வள்ளி, வல்லுகரம் வள்ளுகரம் என லகரம் ளகரம் ஆதலும், தமிழ்முறையே. இவற்றால், வள்ளுவர் என்ற தெய்வப் புலவர் பெயரும் இராஜவல்லபராய் விளங்கினமையால் அப்பெயர் பெற்றனரோ என்று சங்கிக்க இடமுண்டு. அரசியலில் ஒப்புயர்வற்ற அறிவும் அனுபவமும் இருந்தாலன்றித் திருக் குறளின் பொருட்பால் போன்ற தொன்று பிறரால் இயற்ற முடியுமென்று யாவர் கூறவல்லவர். "மன்னர் தடமுடிமேற்று ரன்றோ பாமுறைதேர் வள்ளுவர்வெண் பா" என்ற பழையோர் வாக்கினின்றும், வள்ளுவரது அரசியலறிவின் நிரதிசயப் பெருமை மன்னர்களும் கொண்டாடத் தக்கதா யிருந்த தென்பது விளங்கும். ஆயின் இத்துணை இணையற்ற அரசியலறிவு, மன்னரைச் சார்ந் தொழுகி அரசாங்க விஷயங்களில் ஆழ்ந்திடுபட்டி-ருந்தாலன்றி வள்ளுவர்க்கு வாய்த்திரா தென்பது திண்ணம். அதனால், ராஜ்ய நிர்வாக வல்லபராயிருந்த ருலத்தில் அப்பதவி சிறக்கப் பெற்றிருந்தமை பற்றியே இப்பெயர் பெற்றனர் தெய்வப்புலவர் என்னலாம். இது மற்றொன்று விரித்தலாயினும்; வல்லுவச் சொல்லி னின்றும் தோன்றிய தொன்றை ஈண்டே தெரிவித்துக் கொள்ளலா யினேன்.

வேம்பையர்கோன் நாராயணன்.

திருச்சிராப்பள்ளிக் குன்றிலுள்ள குகைமதிலின் பின்புறத்தில் —102 கட்டளைக் கலித்துறைகளும், பாயிரக்கவி யிரண்டும் ஆக 104—பாடல்களமைந்த அந்தாதிநூலொன்று வரையப்பட்டுள்ளது.

இதன் எழுத்தமைதி கொண்டு, 9-10-ம் நூற்றாண்டுகளில் இது அமைக்கப்பட்டதாக வேண்டுமென்று கருதப்படுகின்றது. இவ் வந்தாதி பாடியவர் மணியன்மகன் வேம்பையர்கோன் நாராயணன் என்பதும் வைசிய குலத்தவன் என்பதும், மதுரை, மணலூர், வேம்பை, சேய்ஞலூர், குண்டூர் என்ற ஊர்களில் தலைமை பெற்றவன் என்பதும்—

"மற்பந்த மார்பன் மணியன் மகன்மதில் வேம்பையர் கோன்
நற்பந்த மார்தமிழ் நாராயணனஞ் சிராமலைமேற்
கற்பந்த னீழலில் வைத்த கலித்துறை நூறும்கற்பார்
பொற்பந்த நீழ லான்றிருப் பாதம் பொருந்துவரே"
"தேறுசொல் லாத்தமிழ்த் தென்வேம் பையாண்ணற் [செங்குவளை
நாறுமல் லாகத்து நாராயணன்"
"மாட மதுரை மணலூர் மதில்வேம்பை
கோடமர் சேய்ஞலூர் குண்டூரிந்—நீடிய
நற்பதிக்கோ னாரா யணனஞ் சிராமலைமேற்
கற்பதித்தான் சொன்ன கவி"

என்ற பாடல்களால் தெரிய வருகின்றன. இதன் கலித்துறைகள் பொன்வண்ணத் தந்தாதிபோலத் துதிகளாகவும், அகத்துறைப் பொருளில் அமைந்தனவாகவும், சொற்செறிவு பொருட்பொலி வுடையனவாகவும் உள்ளன. இப்பாடல்கள் முழுதும், கல் வெட்டிலுள்ளபடி சாஸன விலாகாக்காரராற் பதிப்பிடப் பெற்றிருக்கின்றன.

ஆதிநாத கவி.—புதுக்கோட்டைச் சிமைக் குடுமியான் மலை மேலைக்குகைச் சிவன் கோயிலிற் பொறிக்கப்பட்ட பாறை யொன்றில் ஆதிநாதரென்ற புலவரைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளது. இப்புலவர் பாடியதாக அதில் எழுதப்பட்டுள்ள வெண்பா அடியில் வருமாறு (E.P. Rep. 377 of 906) :—

"எங்கள்நலக் குன்றரைப்பார்த் தேழுலகு மீன்றவுமை
நங்கைபல காலு நகைசெயுமே—கங்கையுறை
கொங்கே சமம்சடிலம் போய்க்குடுமி யாய்விட்ட
தெங்கே யினிமறைப்பா ரென்று"

முத்தமிழாசிரியர் பெருநம்பி.—செங்கற்பட்டு ஜில்லா திருக்கச்சூர்ச் சிவன் கோயிலில் சாஸனமொன்று—"பொய்யாமொழி மங்கலம் என்ற ஊர் பெரு நம்பி என்ற முத்தமிழாசிரியர்க்கு உரியதென்றும், இவர் சாத்தனூர் வமிசத்தில் உதித்தவர் என்றும், கடிகையார் என்ற குழுவினருள் ஒருவரேன்றுங் கூறுகின்றது. இப்புலவர் காலம் தெரிய விடமில்லையேனும் பழைமையுடையர் போலவே தோற்றுகின்றனர். கடிகை என்பது, ஊரிற் பேரறிவாளர் கூடிய சபைக்கும்; அரசர்க்கு மங்கலக் கவிபாடுவோர்க்கும் சாஸனங்களிலும் இலக்கியங்களிலும் வழங்குகின்றது. "ஆசுகவிராசன், கடிகையார் கோலாகலன்" என்று வேறு தமிழ்ப் புலவரொருவரும் இவ்வாறே கூறப்படுதல் அறியத் தகும். இப்புலவரது குலத்தலைவராகக் கூறப்படும் சாத்தனூர் மணிமேகலையாசிரியர் என்றே கொள்ளத்தகும். விசேடணமில்லாமல் வழங்கற்குரிய சிறப்பு தமிழ் மொழியில் வேறு எவர்க்குமில்லாமை காணலாம். இம்முத்தமிழாசிரியர் ஊரின் பெயரால், தஞ்சைவாணன் கோவை பாடிய பொய்யாமொழிப் புலவர் ஞாபகம் வருகின்றது. இவரைத் தொண்டைநாட்டுச் செங்காட்டுக் கோட்டத்துத் துறையூர் அமண்பாக்கமென்ற ஊர்களுக்குரிமை கூறித் தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது. இவ்வூர்கள் வண்டலூர்ப் பக்கத்துள்ளதாகச் சாஸனங் கூறும். (S.I.I. iii-50)

இப்பிற சான்றோர் காலத்துத் தமிழ் நாட்டில் பிரபலமாயிருந்த நாடு, ஊர், நதி, மலை முதலியவற்றை, இலக்கியங்களையும் சாஸனங்களையுங் கொண்டு நோக்குமிடத்து அவற்றின் இடங்களும், பழைய சொல்லுருவங்களும் செய்திகளும் நன்கறியத் தடையில்லை. உதாரணமாகச் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருநாட்டுத் தொகைப் பதிகத்தில் அடியில் வரும் நாடுகள் அவற்றின் ஊர்கள் சிலவற்றுடன் கூறப்பட்டுள்ளன. அவையாவன :—

1. மருகல் நாடு.—சோணாட்டில். வடகரை மிழலை நாட்டில் உள்ளது. தஞ்சை, வைப்பூர், மருகல், பூதனூர் என்பன இவற்றில் அடங்கிய ஊர்களாகச் சாஸனங்களால் தெரியலாம்.

2. குறுக்கை நாடு.—மேற்படி நாட்டில்-கடலங்குடி. குறுக்கை, வரகூர் (அடங்கிய ஊர்கள்).

3. வெண்ணிக் கூற்றம்.—மேற்படி பூவனூர், கோயில் வெண்ணி, பூண்டி.

4. நாங்கூர் நாடு.—குன்றம், மருதூர், நாங்கூர்,

5. நறையூர் நாடு.—அரக்கன்குடி (அருககுடி), கற்குடி, கூஜூர், பழையாறு, பிடாரசேரி. (S.I.I. ii-21-27)

6. மிழலைநாடு.—சேய்ஞ்ஞலூர், இலச்சிகுடி.

7. அளநாடு.—கீழையில்.

8. வேளாநாடு.—மணற்காற்பள்ளி, பெண்பள்ளி, திருநல்லூர்.

9. விளத்தூர் நாடு.—காட்டூர்.

10. பொன்னூர்நாடு.—(தொண்டைநாடு) வாயலூர். (I.M.P.)

புரிசைநாடு.—(தொண்டைநாடு) புதுப்பாக்கம் மணவிற் கோட்டத்தைச் சார்ந்தது.

இவ்வாறு அப்பதிகத்திற் கூறப்படும் நாடுகள் ஊர்கள் பலவும் சாஸனங்களில் விளக்கமாக அறியப்படுதல் காணலாம். இவ்வாறே ஊர்கள் நதிகள் முதலியவும் அறியப்படும். "அளநாட்டுக் கீழையில்" என்ற சுந்தரமூர்த்திகள் திருவாக்குப்படியே கீழையில் என்ற ஊர் அந்நாட்டுள்ளதாகச் சாஸனங் குறிக்கின்றது. களவியலுரையிற் கண்ட பாடல்களில் கோட்டாறு விழிஞம் என்ற ஊர்கள் பயிலுதல் காணலாம். கோட்டாறு என்பது திருவனந்தபுரச் சீமையைச் சார்ந்த நாகர்கோயிலின் பழைய பெயர். விழிஞம் என்பது ராஜேந்திர சோழ பட்டணம் என்ற பெயருடன் சாஸனங்களில் வழங்கும். இது திருவனந்தபுரத்திற்குத் தெற்கே 10 மைலில் உள்ளதாம். "விழிஞக் கடற் கோடியுள்" என்பது அக்களவியலுரை மேற்கோள், இவ்வாறே எண்ணிறந்தவை சாஸனவுதவி கொண்டு அறியக் கூடியவை உள்ளன வாயினும் அவையெல்லாம் விரிப்பிற் பெருகுமாதலால் உதாரணங்களாகவே சில குறிக்கலாயினேன்.

இனிச் சொற்பொருள் வழக்குகளிற் சிலவற்றைக் கூறுவேன். காலந்தோறும் பாஷைகளின் வழக்குகள் மாறுபட்டு வருவது இயற்கை என்பது தெரிந்ததே. பழையோரான தொல்காப்பியர் காலத்து வழக்குகள் பல கடைச் சங்க நாளில் வழக்கொழிந்தன என்பதற்கு வேண்டிய உதாரணங்கள் உண்டு. இவற்றைத் தொல்காப்பியத்துக் கண்ட பழைய தமிழ் வழக்குகள் என்ற தலைப்பின் கீழ்ப் பல வருஷங்கட்குமுன் செந்தமிழில் வெளியிட்டிருக்கிறேன். இவ்வாறே, கடைச்சங்க நாளிலிருந்த சொற்பொருள் வழக்குகளை இப்போது பேசிவரும் பிற சான்றோர்கள் காலத்துக்

காண்டல் அருமை. பெயர் வினை இடை உரி என்ற நால்வகைச் சொற்களிலும் சங்க வழக்காகக் காணப்படுவன தேவாரம், திவ்யப்ரபந்தம், சிந்தாமணி முதலியவற்றில் வந்து பயிலாமை தமிழறிஞர்கள் நன்கறிவர். அணியலுமலிந்தன்று, காண்கு, அகப்படேனுயின், காண்டிகம், நீர்ப்பெயர்க்குந்து—முதலிய வினை விகற்பங்கள் அச்சங்க நாளுக்கு இயற்கையாக உரியவை யன்றோ? இவ்வாறே பெயர் முதலியவற்றினும் அக்காலத்துக்கே உரிமை பூண்டவை பல—உதாரணமாகச் சில இங்குக் கூறுகிறேன். நம்மாழ்வார் எனப்படும் சடகோபர்—தம் திவ்யப் பிரபந்தங் களில்—

"எம்மா பாவியர்க்கும் விதி வாய்க்கின்று வாய்க்குங்
[கண்டீர்"
(5—1—7)

"அமரார்கோ னர்ச்சிக்கின்றங் ககப்பணி செய்வர்
[விண்ணோர்"
(10—2—6)

"ஆமகிழ்ந் துகந்தவை மேய்க்கின் றுன்னோடு
அசுரர் கடலைப் பெயி லெவன்கொல்" (10—3—7)

"கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று
எண்டானு மின்றியே இயலுமாறு" (2—10—5)

"விதிவாய்க்கின்று காப்பாரார்" (5—1—1)

உலாகின்று வேல் விழிக்கின்றன (கண்) (திருவிருத்) என்ற தொடர்களில் 'கின்று' என்ற ஒரு விகுதி வரப் பாடுதல் காணலாம். இவற்றில் வாய்க்கின்று, அர்ச்சிக்கின்று, மேய்க்கின்று என்பவை வாய்க்கும்போது அர்ச்சிக்கும்போது மேய்க்கும்போது என்ற பொருள் வருதலை எளிதில் அறியலாகும். திருவாய் மொழியீடு முதலிய பேருரைகளிலும் இவ்வாறே கூறப் பட்டுள்ளது. இவ்வாறு அடிக்கடி ஆழ்வார் வழங்குதலால் செய் என்பதிலுள்ள கின்று என்ற விகுதி செய்யும்போது, செய்யின் என்ற வினையெச்சம் பொருளில் அவர் காலத்துப் பெருவழக்கா யிருந்ததென்பது பெறப்படும். இவ்வரிய சொல்வழக்கை வழங்கு வோரையெல்லாம் நாம் அவ்வாழ்வார் காலத்தை யொட்டி இருந்தவர்கள் என்று கருதக் கூடியதே யன்றோ?

"முன்னின்று மூக்கின்று மூவாமைக் காப்பதோர்
மன்னு மருந்தறிவா ரில்லையே"

என மூப்பபடையுமிடத்து என்ற பொருளில் திருமங்கை மன்னனும்,

"மெய்யிற் கையொடு கால்குலைக்கின்று நும்மை
மறக்கினு மென்னைக் குறிக் கொண்மினே" (588—3)

எனக் குலைக்கும்பொழுது என்ற பொருளில் சுந்தரமூர்த்திகளும்,

"நாளையாகு நண்ணுகின்று நின்
கேள்வ னன்பு கெடாஞருதல்."

என நண்ணுங் காலத்து என்ற பொருளில் கொங்கு வேளிரும்

"தவளைப் பாய்த்தென்பது. தவளை பாய்கின்று இடை நிலங் கிடப்பப் பாய்வது போல" (பக். 5) 57

"இது யாராலும் அறியப்பட்டதென்னுங் கருத்தால் நிகழ் கின்று தலைமகட்குந் தோழிக்கும் உடனே நிகழும்"
(பக். 114)

"ஓதல் காவலன் பொருட்பணிப் பிரிவு" என்றிவற்றிற்குப் பிரிகின்றது தலைமகளுந் தோழியும் அறியச்சொல்லிப் பிரியவும் உரியன்" (பக். 185)

"குழவியழுகின்று எனக்குப் பால் தம்மின் நீராட்டுமின் என்றழாது; துக்கம் வந்ததாக அழும்" 140

"(தலைமகன்) இவளுழைச் செல்கின்று ஆயங்கள் ஐயுருவோ வெனின்"

"ஓதல் காவல் முதலியவற்றுக்குப் பிரிகின்று, தலைமகளுந் தோழியும் அறியச் சொல்லிப் பிரியவுமுரியன்" (185)

எனப் பலவிடங்களிற் களவியலுரைகாரரும் கின்று என்ற விகுதியை மேற்கூறிய பொருளிலேயே வழங்குதல் காணலாம். இத்தகைய சொல் வழக்குப் பிற்கால நூல்களில் காணக் கிடையா. இது பழைய தமிழ் வழக்குகளை அறிதற்கிடமாகிய மலையாள நாட்டில் இக்கின்று என்பது வழக்கு மிகுதியா புடையதா யிருந்ததென்பது—'இது மலையாளர் வழக்கு' என்ற திருவாய் மொழியீட்டு வியாக்கியாதா எழுதுதலால் தெரிய வருகின்றது. கொல்லத்துச் சிவன் கோயிலில், 19-ம் நூற்றாண் டிறுதியில் ஆட்சி புரிந்த இராமர் திருவடிகள் குலசேகர சக்கரவர்த்திகள் காலத்துச் சாஸன மொன்றில்—

"தொன்னாயிர நாழி செலவிடுவது—செலவு முட்டுகின்ற ஐஞ்ஞாழி அரி தண்டப்படுவிது" எனவரும் வாக்கியத்தில், கின்று என்ற விகுதி மேற்கூறிய பொருள்பட வழங்கியிருத்தல் இங்கு

அறியத்தகும். இவ்வாறே, "ஒன்றிய சிந்தையினோர்க்குத் திரு நாவாய் குறுக்கும் வகையுண்டு கொலோ கொடியேறகே" என்ற திருவாய்மொழி ஈட்டில், இராமாநுஜ முனிவரர் மலையாளத் திருப்பதிகளை ஸேவித்து வரும்போது "திருவாயில் எம் பெருமானைத் திருவடிதொழ எழுந்தருளா நிற்க, திருநாவாய் எத்தனை தூரமுள்ளது என்று எதிரே வருவார் சிலரைக் கேட்ட போது "குறுக்கும்" என்றார்கள் என்றும் அதனைக் கேட்டு (மலையாளமாகிய) இப்பாஷையால் அருளிச் செய்வதே ஆழ்வார்" என்று அம் முனிவர் பெரிதும் அதிசயமுற்றார் என்றும் எழுதப் பட்டுள்ளன. இதனால், குறுக்கும் என்ற சொல் 'நெருங்கியுள்ளது சமீபமானது' என்ற பொருளில் மலைநாட்டார் 12-ம் நூற்றாண்டில் வழங்கி வந்ததையே ஆழ்வார் 'திருவாய் குறுக்கும் வகையுண்டு கொலோ' என்று பாடலாயினர் என்பது விளங்கும். இச்சொல் அப்பொருளில் மலையாளத்தில் இப்போது வழங்குதல் அருமை என்பர். இதுபோலவே, வாய்க்கின்று, அர்ச்சிக்கின்று என்பது முதலிய கின்றீற்று வழக்கும் அப்பக்கத்துக்கு அதில் உரிமை யுடையதாகவே இருந்ததாக வேண்டும். இறையனார் களவியலில் வரும் இக் கின்றீற்றுச் சொல் வழக்குண்மையை அறியாமல், அதனைச் சில அச்சுப் பிரதிகளில் பாய்கின்றுழி, அழுகின்றுழி என்று மாற்றிப் பதிப்பிக்கலாயினர். ஆனால், தாமோதரம் பிள்ளை யவர்களது பதிப்பில் அவை உள்ளவாறே பதிப்பிடப் பெற்றிருத்தல் மகிழ்ச்சி தருவதாம். இதுபோலவே பிற சான்றோர் காலத்துக் குரிய எண்ணிறந்த சொற்பொருள் வழக்குக்களையும் சாஸனங் களினின்று அறியவிடமுண்டு. அவற்றிற் சில கூறுவேன் :—

1. சாஸனம்—பேர்த்தந்தோம் :—"பரகேசரி மூவேந்த வேளானையும் செம்பியன் உத்தாமந்திரியையும் பேர்த் தந்தோம்" உத்தம சோழன் சாஸனம்— (S.I.I. iii-303)

"மழிசை கிழான் மானன் அரியேற்றையும் சேந்த பிரான் பட்டனையும் பேர்த்தந்தோம்" முதலிராஜேந்திரனது திருவாலங்காட்டுச் சாஸனம்— (S.I.I. iii-404)

இலக்கியம்—போத்தருதல்—நாறு மரைத் தொடரும் அமரர்கள் போத்தந்தார்" "கண்ணியும் வாசிகையும் திருமங்கை போத்தந்தாள் (திவ்ய—பெரியாழ். 4)

குறிப்பு.—பேர்த்தருதல்—அனுப்புதல். திருமொழியில் போத்தருதல் என்பது இப்போதைப் பாடம். பழைய சாஸனங் களில் ஒற்றிட்டு இப்பதமே காணப்படுகிறது. அதனால், அவ்வாறு

முன்பு வழங்கியதே ஒற்றுநீக்கிப் போத்தருதல் என்று பாட்கி கொள்ளப்பட்டதோ என்று சங்கை உண்டாகிறது.

2. சாஸனம். பாட்டுவித்தல்—" திருவிடைமருதுருடை யார்க்குப் பாட்டுவிக்கவும், இக்கோயிலில் தளியிலார் தேவரடி யாரைப் பாட்டுவிக்கவும் பாண்பேறுக முன்பு பெற்று வரும்" (குலோத் I சாஸனம் (S. I. I. v-296)

இலக்கியம்—" பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே" (தேவாரம் 1129-3)

பதிற்றுப்பத்துப் பாட்டிவைத்தார் (பட்டின்-திருவேகம்—திருவந் 99.)

3. சாஸனம் ஆதன்மையில்—" இவை சபையோர்க்கு வேண்டுவன வாதன்மையில்" கோ-விஜயகம்பவன்மன் சாஸனம் (S.V. 146)

"கனக வீரக் குரத்தியார் தங்கள் மகளாராதன் மையில்" முதலாதித்தன் காலம் (S.I.I. iii-224)

இலக்கியம்—ஆதன்மையில்—" பிறவாமை பெற்றது நின் திறத்தே ஞதன்மையில்" (பே—தி— P. 222)

அச்சமிலர் நாணில் ராதன்மையா லவர் செய்கை வெறுத்து" (பே—தி—167)

"பணிவார் வினைகள் நாசமது செய்திடு மாதன்மையா லதுவே நமதுய் விடம்" (பே—தி—167)

தன்பொற் கழறுிணை யாதன்மையும்" (நம்பியாண்-நம்-கோயிற்றிருப்பண் 43.)

4. சாஸனம் "கவரிப் பிணைக்கள் இருபத்து நால்வர்க்குக் கவரிகையும் பொன்னுலே செய்து கொடுக்க வென்று அருளிச் செய்ய" (உத்தமசோழன் சாஸனம்— (S.I.I. iii, 293)

இலக்கியம்—" கவரிப் பிணைக்களும் கருப்பு வில்லுங் காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா" (ஆண்டாள் திருமொழி (p. 81)

5. சாஸனம்—திருவடி (ஸ்வாமி அடிகள்) " திருவடிகள் தேவ தானங்களும்" (S.I.I. ii-46)

" திருநந்திக்கரை பட்டாரத்திருவடி" (T.A.S.V-41)

"மஹா சபைத் திருவடி பணித்த" (S.I.I. iv-148)

" கிழக்கின் திருவடி" (T.A.S. ii-113)

இலக்கியம்—" திருவடியை நாரணனைக் கேசவனை " (454)
" தேவத் திருவடி திருவடிமேல் " (536)
" வாகீசத் திருவடி " (பெரியபு p. 207)

6. சாஸனம்—திருவுண்ணாழிகை (கர்ப்பக்கிருகம்) (S. V. 89 S. iii-315).

இலக்கியம்—" அந்தணர்கள் மாடக் கோயிலுண்ணாழிகை யார் " (தேவ. 592-3)

7. சாஸனம்—சங்கரப்பாடிக்குடிகள் (எண்ணெயாட்டும் வாணிகர்) (S.I.I. iii, 135, v-30)

இலக்கியம்—சக்கரப்பாடித் தெருவு—(பெரியபு)

குறிப்பு—சாஸனங்களில் சங்கரபாடி என்றே காணப்படுவது சக்கரபாடி என்பதன் திரிவாகத் தோன்றுகிறது (சக்கரம்-செக்கு)

8. சாஸனம்—முதுகண் (குடும்பத் தலைமை; பற்றுக்கோடு) இன்னாரை முதுகண்ணாக வுடையரானார். (S.II. v-35, vi-30, iv-17)

இலக்கியம்—" முற்றிழை மகளிர்க்கு முதுகணாமென " (பெருங் (p. 52)

9. சாஸனம்—கல்லூரி (வீட்டின் ஓருறுப்பு) " திருமாளிகையின் வடபக்கத்துக் கல்லூரியில் தானஞ் செய்தருளா இருந்து " இன்று காலேஜ் என்ற பொருளில் வழங்குவர். (S.I.I. ii-107)

இலக்கியம்—" கல்லூரி நற்கொட்டிலா—கல்லூரியை உடைய விற்பயிற்றுந் தானத்தே (சீவக 995.)

கல்லூரி வீட்டின் ஓர் உறுப்பு (பிங்கலந்தை).

10. சாஸனம்—மூலவிலை (பரிசம்) "பிழையும் அழிவும் மூலவிலையும் தலைவிலையும் பள்ளியாரே கொள்ளப் பெறுவாராகவும்" (T.A.S. ii-81)

இலக்கியம்—" பிறரும் வரைந்தெய்துவதற்கு மூலவிலையோடு புகுந்து பொன்னணிவா னின்றாரும் உளர் " (இறை-களவி p-115)

11. சாஸனம்—அந்தளகம் (கவசம்) " உத்தம சோழத் தெரிந்த அந்தளகத் தாளார் " (S.I.I. ii-98)

இலக்கியம்—" எறுமால் யானையோ சிவிகையந்தளகமீச் சோப்பி வட்டில் " (தேவா, 627, 7)

12. சாஸனம்—ஈச்சோப்பி ஈச்சோப்பிக் கைமிரண்டும் (S.I.I. ii, ii, 17)

இலக்கியம்—" ஈச்சோப்பிவட்டில் " (தேவாரம்)

13. சாஸனம்—" வேயன் கோவலன் நாராயணனும் " S.V-297)

இலக்கியம்—"வேயர்கோன் விட்டுசித்தன் "

வேயக்—மூங்கிற் குடியினர்; " மூங்கிற் குடியமுதன் " என்பர்.
" பிடித்துத் திரியும் வேய்த் தொழிலாளர் மிழலையுள்ளீர் " சுந்தரர்-தேவா).

14. சாஸனம்.—மணிக்கிராமம்—கொடும்பாளூர் மணிக் கிராமத்து வியாபாரி : (T.A.S. II-84: S.I.I. IV-15)

“அஞ்சு வண்ணமும் மணிக் கிராமமும்” (T.A.S. ii-84.)

இலக்கணம் :—வணிக கிராமத்தார் குழுவின் பெயர் சொல்-*நச்-167.*

*15. சாஸனம்.—*இறங்கலிடுதல்—“எடுத்தாயிர முடையார் தானத்தை இறங்கலிட்ட இதுவும் தர்மம் அல்லாததினலே (S.I.I. ii-119-20)

இலக்கியம்.—“ஏதங்க ளாயினவெல்லா மிறங்கலிடுவித்து” *(திவ்- 67)*

16. அய்யமும் பிச்சையும்.—“அவனில்லத்து அய்யமும் பிச்சையுங் கொள்வாரும்”

சாஸனம்.— (S.I.I. v. 339).

இலக்கியம்.—“அய்யமும் பிச்சையு மாந்தனேயுங் கைகாட்டி”
(திருப்பாவை)

17. சாஸனம்.—“குடங்கொண்டு கோயிலிலிடுவார்” (S.I.I. iv) அகநாழிகைப்பணி செய்வார் ஆட்டப் பொழுதிற் பன்னிரு குட நீராக 36 குட நீர் கொடுப்பது (T.A.S i6.)

*இலக்கியம்.—*குடமெடுத்து நீர்கொண்டு தொண்டரேவல் செய்ய”

III சோழர் காலம்.

முன் உபந்நியாசத்தில் தமிழ்நாட்டை 7 முதல் 9-ம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த பேரரசர்கள் பல்லவரும் பாண்டியருமே என்றும், அவர்கள் காலத்துச் செய்திகளும் வழக்குக்களும் இவையென்றும் எடுத்துரைத்தேன். இன்று 10 முதல் 13-ம் நூற்றாண்டு முடிய இலக்கிய சாஸனங்களினின்றும் வெளியாகும் வழக்குகளேயும் வரலாறுகளேயும் கூறுவேன்.

ஓன்பதாம் நூற்றாண்டின் முடிவானது, முன்பு நெடுங்காலமிருந்து வந்த தமிழ்நாட்டின் அரசியனிலேயைத் திடீரென்று மாற்றிய ஒரு கால விசேஷமாகும். தமிழகத்தின் பழைய வேந்தர்களிலே, 400 வருஷங்களாக மூலைகளில் ஒடுங்கிக் கிடந்த சோழர்கள் கோனாட்டுக் கொடும்பாளூரிலிருந்தும் தலைக் கிளம்பி பல்லவர் ஆண்டுவந்த தங்கள் பழைய ராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாயினர். இவருள் தலைவனானவன் விஜயாலயன் என்பான்.

இவன் மகன் இராஜகேசரிவன்மஞன முதலாதித்தனும் இவன் மகன் பரகேசரிவன்மஞன முதற்பராந்தகனும் 9-ம் நூற்ருண்டு முடிவினும், 10-ம் நூற்ருண்டுத் தொடக்கத்தும் தம் சொந்த நாட்டை மட்டுமின்றித் தொண்டைநாடு பாண்டியநாடு ஈழநாடு களையும் தம்மடிப்படுத்தினர். இவர்கள் முதலாக 13-ம் நூற்ருண்டு முடிய அறிவு திருவாற்றல்களுடன் சோழவரசர்களே தமிழகத்தின் தலைமை வேந்தர்களாய் விளங்கினர். இன்னேர் வரலாறுகளெல் லாம் இவர்கள் காலத்து வரையப்பட்ட சாஸனங்களால் விசேட மாக அறியப்படுகின்றன. இக்காலத்திருந்த அரசியனிலைகளும் வேந்தர் வரலாறுகளும் சாஸன விலாகா வறிஞர்களாலும் பிறராலும் ஆராய்ந்தெழுதப் பட்டிருத்தலால் அவற்றை நான் விவரிக்க வேண்டியதில்லை. அதனுல், இக்கால விசேஷத்தில் இலக்கியங்களும் சாஸனங்களும் எவ்வளவு தூரம் ஒற்றுமை பெற்று ஒன்றற்கொன்று உதவி செய்வன என்பதை மட்டும் இனிக் கூறுவேன்.

9-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் அவதரித்தவரும் வைஷ்ணவா சாரியத் தலைவருமான ஸ்ரீமந்-நாதமுனிகள் 10-ம் நூற்ருண்டின் முன்பகுதிவரை வாழ்ந்தவரென்பதும், அம்முனிகளின் திருப் பேரனுரான ஆளவந்தார் அவர்க்குப் பின் அவ்வாசாரியத் தலைமை வகித்து விளங்கியது 10-ம் நூற்ருண்டும் 11-ம் நூற்ருண்டின் முற்பகுதியுமாம் என்பதும் இவ்விருவருடைய முயற்சியால் ஆழ்வார்களுடைய ப்ரபாவங்களும் திவ்யப்ரபந்தங்களும் நாட்டில் பரவலாயின என்பதும் குருபரம்பரைகளால் தெரிய வருகின்றன. மேற்கூறிய ஆதித்தன் பராந்தக சோழர் காலங்களில், சடகோபன், நம்மாழ்வாரடிகள் தொண்டரடிப்பொடி என்ற திருமாலடியார் பெயர்கள் மக்கட்கு வழங்கியுள்ள செய்தி சாஸனங் களாலறியப்படுதலினின்றும் அன்னேர் பிரபாவம் 10-ம் நூற்ருண்டில் நாட்டில் பிரபலம் பெற்றிருந்ததென்பது விளக்கமாம். இதுவிஷயம் முன்னரும் கூறப்பட்டதே. சோழர் களெல்லாம் சைவமதப்பற்று மிக்குடையவர்கள். அதனுல், வைஷ்ணவ சமயம் தலையெடுப்பதற்கு அவர்கள் விசேடமாக உதவி செய்தவர்கள் என்பதற்கில்லை. அதனுல் மேற்கூறிய ஆசாரியத் தலைவர்களது நன் முயற்சியே அச்சமயத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்னலாம். இவ்வைணவ ஆசிரியர்களால் திருவாய் மொழி முதலிய ஆழ்வார் அருளிச் செயல்கள் கண்டுபிடிக்கப் பெற்றுப் பரவியது போலவே சோழரது நன்முயற்சியால், மூவர் திருமுறைகள் கண்டு பிடிக்கப்பெற்று நாட்டில் பிரபலம் பெற்றதும்

இக்காலமே. அப்பர், சம்மந்தர், சுந்தரர் என்ற சைவ நாயன்மார்கள் அருளிய திருப்பதிகங்கள், 10-ம் நூற்றுண்டுக்கு முன்பே கோயில்களில் ஓதப்பட்டன என்பதற்குச் சாஸனப் பிரமானங்கள் உள்ளன. அவற்றை இங்கு தெரிவிப்பேன். அச்சிவனடியார்கள் பாடிய திருப்பதிகங்கள் அங்கங்கே கோயில்களில் சிறுகி வழங்கி வந்தன என்பதும், அவையெல்லாம் ஒருமுகமாகத் திரட்டப் பெற்று அவ்வடியார் வைபவங்களோடு நாட்டார் அறியும்படி செய்தவர்கள் இப்பிற்காலச் சோழர்களே என்பதும் அறியத் தக்கவை.

இவ்வாறு திருமுறை பாடிய மூவர் பெருமையைச் சிறப்பித்தவருள் தலைமை பெற்ற சோழன், முதல் இராஜராஜன் என்பவனே. இவன் மதுரையும் ஈழமுங் கொண்டவனுக மேலே நான் கூறிய முதற் பராந்தகனுடைய கொட்பேரனுவன். 985-1013 வரை ஆட்சி புரிந்த இச் சோழன் காலத்தில், தமிழ் நாட்டினும் பிறவிடங்களினும் அகப்படும் பல்லாயிர சாஸனங்களால் இப் பெருவேந்தனது அறிவு திருவாற்றல்களின் பெருமை நன்கு விளங்குகின்றன. இவன் தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைத் தன் பெயராற் கட்டி முடித்து, அதற்குக் கொடுத்த நன்கொடைகளை நோக்குவோர்க்கு, இவ்வரசனது ஒப்புயர்வற்ற பக்தித் திறமை இத்தகைய தென்பது விளங்கத் தடையில்லை. இவனது சிவனடிமையின் சிறப்புப் பற்றியே "சிவபாத சேகரன்" என்ற பெயர் இவனுக்கு வழங்குவதாயிற்று.

திருமுறை கண்ட சோழன்.

இனித் திருமுறைகண்ட புராணத்தில், ராஜராஜ அபய குலசேகரன் என்ற சோழன், மூவர்திருப்பதிகங்களிற் சிலவற்றைச் சிலர் சொல்லக் கேட்டு, அவற்றை முழுதும் பெற வேண்டி, நம்பியாண்டார் நம்பிகள் என்ற பெரியாருதவியால் பெற்ற செய்தியும் பிறவும் கூறப்படுதல் யாவரும் அறிவர். இவ்வபய குலசேகரன் யாவன் என்பது பற்றியே ஐயம் நெடுக நிகழ்ந்து வருகின்றது. இவன் மேற்கூறிய ராஜராஜ சோழனே ஆதல் வேண்டும் என்றும், இவன் தமையன் இரண்டாம் ஆதித்தன் ஆக வேண்டும் என்றும், முதற்குலோத்துங்கனுதல் வேண்டுமென்றும் பல்வகையாகக் கூறப்படுகின்றது இவற்றுள் பிற்பட்ட சோழர்களுள் ஒருவனுகத் திருமுறை கண்ட சோழனைக் கூறுவதற்குக் காரணம் சிவனடியார்கள் பாடிய பதினொரு திருமுறைகளையும்

வகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகள் எனப்படுதலாலும் அத் திருமுறையுளொன்முன திருவிசைப்பாவில், ராஜராஜனும் அவன் மகன் ராஜேந்திரனுங்கட்டிய தஞ்சை ராஜராஜேச்சுரம், கங்கை கொண்ட சோளேச்சுரங்களைப் பற்றிய பதிகங்கள் அடங்கியிருத்த லாலும், அச் சோழரிருவர்க்கும் பின்பே நம்பியாண்டார் நம்பிகளும் அவரால் திருமுறைகளைத் தொகுப்பதில் உதவிபெற்ற அபயகுலசேகரனும் விளங்கியவராதல் வேண்டும் என்பதே. உமாபதி சிவாசாரியார் பாடியதாக வழங்கும் திருமுறைகண்ட புராணத்தை நோக்கும்போது மூவர் திருப்பாடல்கள் அடங்கிய ஏழு திருமுறைகளே சோழனால் நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு ஆதியில் தொகுக்கப்பட்டவை என்பதும் ஏனையவை பின்னோர் தொகுத்த திருமுறைகளே என்பதும் விளங்க இடம் உள்ளது. இதனைப் பற்றி நண்பர் திருவாரூர் சோமசுந்தர தேசிகரவர்கள் செந்தமிழில் சமீபத்தில் நன்கெழுதியுள்ளார். அதனால், திருவிசைப்பாவைத் திருமுறையுள் ஒன்றாகத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகளே என்பார் கொள்கை உறுதி பெற்றதன்று என்றே சொல்லலாம். ஆனால், திருமுறை தொகுத்த சோழன் இரண்டாம் ஆதித்தன் என்று தேசிகர் அவர்கள் கருதுகின்றார்கள். இவன் முதலாம் ராஜராஜனுடைய (985–1013) தமையனாய் அவன் முன் பட்டம் பெற்றுச் சில வருஷங்களாட்சி புரிந்தவன். இவனையே தேசிகரவர்கள் கூறுதற்குக் காரணம் நம்பியாண்டார் நம்பிகள் ஆதித்தன் என்ற பெயரைக் குறிப்பிட்டுத் தம் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பலமுறை கூறி அவன் தங்காலத்தவன் என்று குறிப்பித்தலேயாம். ஆனால், இவனுக்கு அந்நம்பிகள் கொடுத்திருக்கும் விசேஷணங்களாகிய—தில்லை பொன் வேய்ந்தது—சிங்களநாடு பொடிபடுத்தது என்ற செயல்கள் இரண்டாம் ஆதித்தனுக்குரியன என்பதற்குப் பிரமாணங் காட்டவில்லை. தில்லை பொன் வேய்ந்ததும் சிங்களத்தை வென்றதும் முதற்பராந்தகன் (907–953) செயல்கள் என்பது பிரசித்தம். பிற்பட்ட சோழர்களில் இவ்விரண்டு செயல்களையும் ஒருங்கு கொண்டவனும், ஆதித்தன் என்ற பெயர் வாய்ந்தவனுமான அரசன் ஒருவனும் இல்லை. ஆகவே. நம்பியாண்டார் கூறும் ஆதித்தன் இவ்விரண்டு புகழுக்கும் உரிமையுடையவன் என்று கருதுவதற்கு ஏற்றவனாதல் வேண்டும் என்பது திண்ணமாம். அத்தகைய உரிமை கூற வேண்டுமாயின் அது, முதற்பராந்தகன் மகனாய் ஆதித்தன் என்ற பெயர் பெற்றிருந்த ஒருவனுக்கே கொள்ளத்தக்கது. ஏனெனில், பராந்தகன் 46 வருஷம் நீடித்த

ஆட்சியுடையவனுயிருந்தவன். அவனது 37-ம் ஆட்சியாண்டில் சிங்களநாடு வெல்லப்பட்டது. அவ்வெற்றியைத தக்க பருவம் அடைந்திருந்த அவன் மூத்த மகன் தன் தந்தையுடனின்று பெற்றிருத்தல் சம்பாவிதமன்றோ ? . முதற்குலோத்துங்கனது கலிங்க வெற்றிக்கு, அவன் மூத்த மகனுன விக்ரசோழன் சிறந்த காரணமாயிருந்தவன் என்பது சாஸனங்களால் தெரிந்ததே. அபயன் பெற்றதாகக் கூறப்படும் இக் கலிங்க வெற்றியில், மகனுன அவ்விக்ரமனுக்கும் பாகமிருந்தது பற்றியே "கலிங்கப் பெரும் பரணி கொண்ட பெருமாள்", "ஏனைக் கலிங்கங்களே" என்று கூத்தர் இரண்டாங் குலோத்துங்கன் தந்தையாகிய அவனைச் சிறப்பிப்பாராயினர். இவ்வாறே, பராந்தகனது ஈழநாட்டு வெற்றிக்குக் காரணமாயிருந்தவன் அவன் மூத்தமகனுய்ப் பட்டத்துக்குரிமை பெற்றிருந்த இராஜாதித்தனைச் சொல்வது மிகவும் பொருந்தக் கூடியது. இவன் சிவபக்தியுடையவனுகவும் சிற்றம்பலமுகடு பொன் வேய்தற்குச் சிறந்த காரணமாகவும் இருந்து தன் தந்தையேற்றபடி அச் சிவ கைங்கரியத்தைச் சிறக்கச் செய்திருத்தல் கூடியதே. சிற்றம்பலத்தில் விக்கிரம சோழன் புரிந்த திருப்பணிகளை அவன் மெய்க்கீர்த்தி கூறுவது போலவே, அவன் மகனுன இரண்டாம் குலோத்துங்கனுக்கும்—சாஸனங்களும், உலாக்களும் கூறுகின்றன. இதனுல், தந்தை புரிந்த கைங்கரியங்களை நடத்தி முடித்த சிறப்புப்பற்றி மகனும் அதே செயலாற் புகழப்படுவது இயல்பென்பது தெரியலாம். இவற்றுல், நம்பியாண்டார் நம்பிகள், சிங்களநாட்டை வென்றவனுகவும், சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தவனுகவும் பலவிடங்களிற் கூறும் ஆதித்தன் என்பவன் முதற் பராந்தகன் மகனுன இராஜாதித்தன் என்று கருதற்கு நியாயம் உள்ளது. ராஜராஜன் என்பதற்கேற்ப, 'இராஜ' என்ற விசேஷணமும் இவனுக்குப் பொருந்துகின்றது. நம்பியாண்டார் நம்பிகள் காலத்தில் விளங்கிய இவன், பட்டம் பெற்ற சிலகாலங்களில் இறந்தவன் என்பது சரித்திரவறிஞர் கருத்து. இதனையே அந்நம்பிகளும்—"செம்பொ ணணிந்து சிற்றம்பலத்தைச் சிவலோக மெய்தி, நம்பனடிக் கீழிருந்தோன்" என்று கூறுவர். திருமுறைகள் வெளிப்பட்ட இவ்வாதித்தன் காலத்திற்குச் சிறிது முற்பட்டதே, திருவாய் மொழியைக் கண்டு வெளியிட்டவரும், வைஷ்ணவர் சமயத் தலைவருமான நாதமுனிகள் விளங்கிய காலமும். ஆகவே, திருமாலடியார், சிவனடியார்களது தெய்வப் பாடல்கள் ஏறக்குறை ஒருகாலத்தேதான் தமிழ்நாட்டில் பிரபலம் பெறலாயின

வென்பதுந் தெரியலாம். இனி. நம்பிகள் தங்காலத்தரசன் பெயர் ஆதித்தன் என்று கூறினராயினும்—திருமுறை கண்டவன் ராஜ ராஜ அபயகுலசேகரன் என்று பின்னோர் கூறுவர். இது, அவ்வாதித்தனது சிறப்புப் பெயராகவே கருதற்குரியது. மன்னர் மன்னனான சோழ வமிசத் தலைவன் என்பது இத்தொடர்ப் பொருளாம். அபயன் என்பது சோழர் குடிக்குப் பெயர் என்று நிகண்டுகள் கூறும். 'அபயகுலசேகரன் என்று கூறியது போலவே, "சோழகுலசேகரன்" என்று முதற் குலோத்துங்கனைச் சயங் கொண்டார் பாடுதலும் இதனோடு ஒப்பிடத்தக்கது. இவ் விராஜாதித்தனுக்குப்பின் சோழரிற் பிரபலமாய் விளங்கியவன் முதலாமிராஜராஜன் என்பது தெரிந்ததே. இவனது ஆட்சிக் காலமே, திருமுறையருளிய மூவர் வணக்கம் நாட்டில் திகழ்வுற்ற கால விசேடமாகும். இவனுக்கு முன்பு இம் மூவர் வணக்கம் பற்றிய செய்திக்குச் சாஸனவாதரவு கிடையாமை அறியத்தக்கது. தஞ்சையில் தான் புதியதாக நிருமித்த பெரிய கோயிலில், மூவர் நாயன்மார்க்கும், சிறுத் தொண்டர், சேரமான்தேவர், திருவெண் காட்டுநங்கை, பரவை நாச்சியார், மெய்ப்பொருளையனார்கட்கும் திருமேனிகள் வகுத்துப் பிரதிஷ்டித்துச் சிறப்பித்தவன் இவ் விராஜராஜனேயாவன். அக்கோயிலில் வரையப்பட்ட இவன் சாஸனங்களில் (S.I.I. II 155, 168, 173, 252) அச்சிவனடியார் பெயர்கள் 'நம்பியாரூரனார், நங்கை பரவையார், திருநாவுக் கரையர், திருஞானசம்பந்தடிகள், சிறுத்தொண்டநம்பி. திரு வெண் காட்டுநங்கை தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார்" என்று கூறப்பட்டுள்ளன. இவற்றோடு, மூவர் திருமுறைகளும் அக் கோயிலில் நித்தமும் உடுக்கை தாளங்களுடன் ஓதும்படி 50 பேர்களை ஏற்படுத்தி அவர்கட்குப் படித்தரங்களும் இச்சோழன் செய்திருந்தான் என்பது, இவனது 29-ம் ஆட்சி வருஷத்துச் சாஸனத்தால் அறியப்படுகின்றது. இத்திருமுறை யோதுவார்கள் பிடாரர்கள் என்று அழைக்கப்பட்டனர் என்றும் சிவன் என்ற பட்டப் பெயரைத் தம் பெயரிறுதியிற் கொண்டிருந்தவரென்றும் அச்சாஸனங்கள் தெரிவிக்கின்றன. பிடாரர் என்பது பட்டாரகர் என்பதன் திரிபாகும். இவ்வாறு பழைய சிவனடியார் வணக்கத்தையும், அவர் திருப்பதிகங்களை கோயிலில் ஓதும் ஏற்பாட்டையும் சிறக்கச் செய்திருத்தலாலும் திருமுறைகளைத் தொகுத்தவனாக இவனது அளவற்ற சாஸன மொன்றிலும் காணப் படாமையாலும், இவனுக்கு முன்பே மூவர்பாடல்கள் கண்டு தொகுக்கப்பட்டு விட்டன என்பதே தெளிவாகின்றது.

இவ்விராஜராஜனது சாஸனங்களால் வீரப்பெருமையில் மேம்பாட்டு விளங்கிவன் இவ்வேந்தன் என்பது தெரியலாகும். இவனது மெய்க்கீர்த்திகளிற் கண்ட முதற்செய்தி 'காந்தளூர்சாலை கலமறுத்தருளியது' என்பதாம். இத்தொடருள் வரும் 'கலம்' என்பதற்கு 'பகைவரது மரக்கலம்' என்று பொருள் கூறுவர் பலரும். ஸ்ரீமாந் கோபிநாதராயரவர்கள் சாலைக்கலம் என்பதற்கு அறச்சாலையாகிய ஊட்டுப்புரையில் உள்ள உண்கலம் என்று பொருள் கொண்டு அவ்வூட்டுப்புரை சேரர்போரால் இருந்ததைத் தன்போராலாக்கினன் என்ற கருத்துக் கொண்டெழுதினர். இவ்விரண்டு பொருள்களுள் முன்னது கொள்ளக் கூடியதாயினும் ராயரவர்கள் கருத்துச் சிறிதும் ஏற்கக் கூடியதன்று. பெருந் தர்மமாகக் கருதப்பட்டுவந்த அறச்சாலையைக் குலைத்தது ராஜ ராஜனது முதற் செய்கை என்பதும் அதற்காக அவன் படையெடுத்துச் சென்றானென்பதும் பொருந்தமற்றவைகளாம். அன்றியும், காந்தளூர்ச்சாலை என்பது ஊரின் பெயராதலால் அதனைச் சாலை என்று பிரித்து அறச்சாலை எனப் பொருள் கொள்வதும் இயையாது. இச்சாலைக் கலமறுத்த செயல்போல, "கரைக்கண்டீசுரத்துக் கலமற்ற யாண்டு", "தலைக்குளத்துக் கலமற்ற யாண்டு" என்று வேறு இரண்டு கலமற்ற செய்திகளின் அப்தங்கள் மலையாள சாஸனங்களில் காணப்படுகின்றன. இவை பகைவர் மரக்கலங்கள் அழிக்கப்பட்டதைக் குறிப்பனவாயின் அவற்றுக்குத் தனித்தனி அப்தங்கள் வழங்கும்படி அவ்வளவு விசேடமுடையனவாகச் சொல்லப்படுவது என்னோ? அதனால், காந்தளூர்ச்சாலை, தலைக்குளம், கரைக்கண்டீசுரம் என்ற ஊர்களில் கலமற்றது கலமறுத்தது என்பவை, அவ்விடங்களில் நெடுங்காலமாக நிகழ்ந்துவந்த உள்நாட்டுப் பெருங் கலகங்களின் கொடுமை நீங்கிச் சனங்கட்கு அமைதியுண்டாகியதைக் குறிப்பனபோலவே தோற்றுகின்றன. கலம் என்பது வடமொழியில் சண்டை என்ற பொருளுடையது. இதுவே களம் எனத் தமிழில் வழங்கும். முதற்குலோத்துங்கனும், இக்காந்தளூர்ச் சாலையில் இருமுறை கலமறுத்தவன் என்பது "இருகாற்சாலைக் களமறுத்த தண்டினான்" என விக்ரம சோழனுலா அவனைச் சிறப்பித்தலால் தெரிகின்றது. இதனால், கலமும் களமும் ஒருபொருளில் வழங்கியிருத்தல் காணலாம். கலகம் கலாம் என்பன கலம் எனத்திரிந்து வழங்கியது என்று கொள்ளுதலும் பொருத்தமே. எவ்வகையினும் மலைநாட்டு சாஸனங்களிற் கரைக்கண்டீச்சுரம் தலைக்குளங்களில் கலமற்ற என்று கூறப்படும் செய்தியை யொத்ததே காந்தளூர்ச் சாலையில்

ராஜராஜனும் முதற்குலோத்துங்கனும் நடத்திய கலமறுத்த செயலென்பதும், கலமற்றயாண்டென்பது பெருங்கலகங்கள் நீங்கிய காலத்தைக் குறிப்பது என்பதுமே பொருந்துகின்றன. காந்தளூர்ச்சாலை யென்பது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதிக்குப் பண்டு வழங்கிய பெயரென்று ஸ்ரீமாந் கோபிநாதராயரவர்கள் ஆதாரங்களுடன் எழுதியிருப்பது குறிப்பிடத் தக்கதே.

சதய விழா.

இனி, அபயன் முன்னோனொருவனது அருஞ்செயலொன்றை சயங்கொண்டார் தம் பரணியில்—

> " சதய நாள்விழா வுதியர் மண்டலந்
> தன்னில் வைத்தவன் " (கலிங்க-இராசபாரம் 24)

என்று புகழ்கின்றார். இதனால், கேரள மண்டலத்தில் சதயத் திருவிழா வொன்றைச் சோழனொருவன் அமைத்தவன் என்பது தெரியலாம். இச்செயல், இவ்விராஜராஜனுடையதே யாகும். இச் சோழன் பிறந்த நாள் சதயமாகும். இவன் தன் தலைநகரில் நிருமித்த கோயிலில் தான் பிறந்த நாள் விளங்கச் சதையத் திருவிழா நடத்துவதற்கு வேண்டிய நிபந்தங்களைச் செய்துள்ளான். இவ்வாறே தான் வென்றடிப் படுத்திய கேரள நாட்டிலும் தன் பெயர் விளங்கும்படி திருவிழா நடப்பித்தவன் இவன் என்பது—திருநந்திக்கரை என்ற மலைநாட்டு சிவதலத்தில் கண்ட சாஸனமொன்றால் தெளிவாகின்றது. அது அடியில் வருமாறு :—

கோ ராஜகேசரி வர்மர்க்கு யாண்டு 18-வது இராஜராஜத் தென்னாட்டு வள்ளுவநாட்டு முட்டம். முட்டம் என்னும் பேர் தவிர்த்து மும்முடி சோழ நல்லூர் என்று பேராக்கி இந்நாட்டுத் திருநந்திக்கரை மகாதேவர்க்குப் பெருமாள் ஐப்பசித் சதியத்தினாள் திருவிழாவெடுத்துத் திருச் சதயத்தினாள் ஆறாடி ஞமணஞ் செய்விப்பதாகவும்" என்பதே. இதனால், தஞ்சாவூரிற் போலவே, தான் பிறந்த தினமான சதயத் திருவிழாவை மலை மண்டலத்தில் அமைத்த இடம் திருநந்திக்கரை என்ற சிவதலம் என்பதும் மும்முடி சோழன் என்ற தன் பட்டப் பெயரை முட்டம் என்ற கிராமத்துக்குக் கொடுத்து அத்திருவிழாவை ஆண்டுதோறும் நடத்த நிபந்தஞ் செய்திருந்தனன் என்பதும் விளங்குதல் காணலாம். இச் சாஸனத்தில் இராஜ

கேசரிவர்மன் என்பதும் பெருமாள் என்பதும் மேற்படி ராஜராஜனைக் குறிப்பன என்பது பலரும் அறிவர்.

இவ்விராஜராஜனது தஞ்சாவூர்க் கோயிற் சாஸனமொன்றில் மேற்படி கோயிலில் திருவிளக்குகள் வைப்பதற்குப் பலர் பொன் கொடுத்துள்ள செய்தி கூறுமிடத்து—

"தன்னை யுடையார் ராஜராஜதேவர் கோழிப் போரில் ஊத்தையட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசு (இவ்வளவு)"

என்ற தொடர் பலமுறை வருதலைக் காணலாம். இதற்குச் சாஸன பரிசோதகர் கொள்ளும் கருத்தாவது—அரசனது படைத்தலைவர் பலர் உறையூரில் நடந்துவரும் போரில் தங்கட்கு இழுக்கு நேருமோ என்ற அச்சத்தால் அரசனைவற்படி பிரார்த்தனையாகக் கோயிற்கு வைத்த திருவிளக்குகளை இவை குறிப்பனவாம் என்பதே.

தமிழ் நாட்டையெல்லாந் தன்னடிப் படுத்தாண்ட பேரரசனான ராஜராஜன் தன்னாட்டுத் தலைமை நகரங்களுள் ஒன்றான உறையூரில் போர்நடத்தியவனாயின், அச்செய்தியை, ஆயிரக் கணக்கான அவன் சாஸனங்களில் ஒன்றேனும் குறிப்பிடாமற் போகுமா? அவ்வாறு ஒருகுறிப்புமே காணப்படாமையால் அக் கருத்து ஏற்கக் கூடியதாகவில்லை. வேறு இதற்குப் பொருள் என்னவெனின்—அது சேவற் போரேயாகும். சேவற் போரானது அரசரும் வீரரும் காணுதற்குரிய தொன்றாகும். போர்க் கோழிகள் தம்முட்புரியும் சண்டை அற்புதமானது, முள் அல்லது கத்தி கட்டிவிடும் அக்கோழிப் போரில், தம்முறுப்புகள் ஒன்றொன்றாக அற்று வருமிடத்தும் பின்வாங்காமல் முன்னேறி அவைபுரியும் வீரச்செயல்கள் புலவர்கள் தும்பைத்துறையில் வைத்துப் புகழ்தற் குரியனவாகும். இத்தகைய கோழிகளை வளர்த்துப் பொரவிடும் முறைகளைக் கூறுவது கோழிநூல் எனப்படும். இக்கோழிப் போரைப்பற்றி புறப் பொருள் வெண்பா மாலை கூறும் பாடல் அடியில் வருமாறு :—

"பாய்ந்து மெறிந்தும் படிந்தும் பலகாலும்
காய்ந்தும்வாய்க் கொண்டுஞ் கடுஞ்சேவல்—ஆய்ந்து
நிறங்கண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டுந் தான்வருமே போர்க்கு"

இதன் பொருள் "எழப்பாய்ந்தும் காலின்முள்ளையிட்டடித்தும், தாழ்ந்தும் பலகாலும் கோவித்தும் கூவியும், கடிய சேவற்

கோழி கோழிநூல் வல்லவர் கோழிகளின் நிறமறிந்து சொல்லுக்குச்சொல் ஒப்பாகவிட்ட கோழியைப் புறங்கண்டும் தான் பின்பும் போர்க்கு வாராநின்றது"—சொல்லுக்குச் சொல்வெல்லும் ஆமைக்கு ஆமைவெல்லும் தெங்குக்குத்தெங்குவெல்லும் எனக் கோழிகளின் நிறமறிந்து விடுதல் கோழிநூல்வல்லவர் வழக்கு என்பது இப்பாடலின் பழையவுரை.

இவற்றால் கோழிப் போர்களின் வழக்கு முன்னூல்களில் சிறப்பிக்கப் படுதல் காணலாம். இத்தகைய போரைக் காண்பதில் ராஜராஜனும் அவன் படை வீரர்களும் பெருவிருப்புடையராயிருந்தனர் என்றும் அரசன் சார்பான போர்க் கோழிகளின் வெற்றியில் அவன் வீரர்கள் பெருநோக்குடையராய் இப்பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் என்றும் கொள்ளுதல் பொருத்தமாகின்றது. ராஜராஜன் பரமசிவ பக்தனாயினும், போர் விருப்புடைய பெருவீரரை உடையனாதலாலும், அவ்வீரருடன் அரசன்காண்டற்குரிய தாதலாலும் இக்கோழிப் போரில் அவன் சம்பந்தப்பட்டதில் இழுக்கொன்றுமில்லை என்க. சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூரில் சுந்தரமூர்த்திகளால் உபசரிக்கப்பெற்று அவர் திருமாளிகையில் தங்கியிருந்த காலத்தில், ஈசுவர தரிசனஞ் செய்துவந்தபின் பகற்போதில் அவன் நடத்தி வந்த செய்திகளைக் கூறுமிடத்தே—

"நிலைச் செண்டும் பரிச்செண்டும் வீசிமிக மகிழ்வெய்தி
விலைக் கரும் போர்த் தகர்ப் பாய்ச்சல் கண்டருளி வென்றி [பெற
மலைக்குநெடு முட்கணைக்கால் வாரணப்போர் கண்டருளி
அலைக்கு மறப் பலபுள்ளி னமர்விரும்பி யமர் கின்றார்"

எனச் சேக்கிழார் பாடுதல் இங்கு அறியத் தக்கதாகும். இதனுள், சேரமான் பெருமான் ஆட்டுக்கிடாய்ப் போர். கோழிப் போர்களை "நங்கள் பிரானருள் மறவா நல்விளையாட்டுக்களாகக் கொண்டு நடத்தி மகிழ்ந்து வந்தனர் என்று கூறப்படுதல் காணலாம்" "கோழிப் போரில் ஊத்தையட்டாமல்" என்பதனுள் ஊத்தையட்டாமல் என்பதற்கு ஊனமடையாதிருத்தற்கு என்பது பொருளாகும். தோல்வியுறாமல் என்றது, ஊத்தை என்ற சொல்லால் வழங்குதல் அது பெரும் போரைக் குறிப்பதன்று என்பதை உணர்த்துகின்றது. தெலுங்கு நாட்டிலும், தமிழ் நாட்டிலும் உள்ள அரசர்கள் இச் சேவற் கோழிப் போரைக் காண்பதிற் பெருவிருப்புள்ளவர்களாய்ப் பண்டும் இன்றும்

உள்ளதும், இக்கோழிப்போர் அடியாக அவர்கட்குப் பெரும்போர் மூண்டதும். நாம் கேட்டுவருகின்றோம். இத்தகைய காட்சி பழமையாகவே உண்டென்பதும் தம்காலத்தரசரும் வீரரும் போது போக்காகவும், வீரத்தைத் தூண்டுவதற்கும் நடத்தி மகிழ்ந்த இத்தகைய விளையாட்டையே சேக்கிழார் சேரமான் பெருமாளுக்குங் கூறிச் சிறப்பித்தன ரென்பதும், அதனால் நங்கள் பிரானருள் மறவா நல்விளையாட்டுக்களுள் ஒன்றாகவே இக்கோழிப் போரை இராஜராஜனுங் கண்டு மகிழ்ந்தவனென்பதில் குற்றமில்லை என்பதும் நன்றாக விளங்கக் கூடியன.

இனித் திருவிசைப்பா ஆசிரியர்களான அடியார்களிற் பலர் இவ்விராஜன் காலத்தை ஒட்டியிருந்தவராகவே தெரிகின்றனர். திருமாளிகைத் தேவர் என்ற பெரியாரது சாஸன மொன்று திருவீழிமிழலைக் கோயிலில் ராஜராஜன் காலத்ததாக உள்ளது. (செந். III, 359-60) இவர் அக் கோயிற்குத் திருநுந்தாவிளக் கொன்று வைத்தசெய்தி அதனால் தெரிய வருதலோடு, சிவஞானி யாய் விளங்கியவர் இவரென்பதும், ஜயந்தன் அல்லது சேந்த னென்ற இயற்பெயருடையவர் என்பதும் அறியப்படுகின்றன. இவ்வாறு சிவஞானியாகச் சிறப்பிக்கப்பட்ட இப்பெரியாரே திருவிசைப்பா வாசிரியருள் முதல்வராகக் கோபிநாத ராயரவர்கள் செந்தமிழில் எழுதியுள்ளார். இவ்வாறாயின் இவர்க்கே சேந்தன் என்ற இயற்பெயரிருந்ததென்று அச்சாஸனங் கூறுதலால் மேற்படி திருவிசைப்பா வாசிரியருள் முதலிருவராகப் பிரித்துக் கூறப்படும் திருமாளிகைத் தேவரும் சேந்தனாரும் ஒருவர்க்குரிய பெயர்களே என்றும் கௌண்டின்ய கோத்ரத்தவரென்றும் அம் முறையில் இப்பெரியார் பாடிய பதிகங்கள் ஏழு ஆகும் என்றும், ஏழாம் பதிக முடிவில் தம் இயற்பெயரை அமைத்துத் தம் பதிகங்களை முடித்தவரென்றும் திருப்பல்லாண்டு அருளிய வரும் இவரே என்றும் சொல்லத்தடையில்லை. திருவீழிமிழலைக் கோவிலில் இச்சேந்தனார் சாஸனம் அமைந்தற்கேற்ப அக் கோயிற்கு இவர் பதிகம் அமைந்துள்ளதும் அறியத்தக்கது. இவர் அருளிய முதற்பதிகத்தின் 6-ம் பாட்டின் முதற் சீர்களாகிய "நீறணி பவளக் குன்றம்" என்பதையே இராஜராஜனால், தஞ்சைப் பெரிய கோயிலுக்கு நியமிக்கப்பெற்ற தளிச் சேரிப் பெண்டுகள் (கணிகையர்) தம் பெயராகக் கொண்டுள்ள செய்தி அக் கோயிற் சாஸனத்தினின்று தெரியவருகின்றது. அதனால், இவர்பாடல், மேற்படி கோயிலில் இவர் காலத்தேயே பிரபலமாக ஓதப்பட்டு வழங்கி வந்ததென்று சொல்லத் தடையில்லை. இவ்வாறே திருவாலிய

முதனுர் பாடிய 3-ம தில்லைப் பதிகத்துள் 5-ம் பாடலில் வரும்—"வாமத் தொழிலாரெடுத்த பாத மழலைச் சிலம் பார்க்கத்—தீமெய்ச் சடைமேற் றிங்கள் சூடித் தேவனேடுமே" என்ற அடிகளில் "எடுத்தபாதம்" "மழலைச்சிலம்பு" என்ற தொடர்களையும் அத் தளிச்சேரிப் பெண்டுகள்தம் பெயராகத் தரித்திருத்தலை அவ்விராஜ ராஜனது தஞ்சைச் சாஸனத்திற் காணலாம்; (எடுத் : 261, 267, 272, மிழலை 263, 265, 272, 273 (S.I.I.-ii) ஆகவே இவ்வமுதனுர் அவ்வேந்தன் காலத்தை யொட்டியோ சிறிது முற்பட்டோ இருந்தவரென்று கருதக் கூடியதே. இனிக் கருவூர்த்தேவர், ராஜராஜனுற் கட்டப்பெற்ற தஞ்சை ராஜேஸ்வரத்தையும் அவன் மகன் இராஜேந்திர சோழன் நிருமித்த கங்கை கொண்ட சோளீச்சரத்தையும் இரண்டு தனிப்பதிகங்களால் பாடியிருத்தல் பலரும் அறிந்ததே. இதனுல், இப்பெரியார், இராஜராஜன் பின்பும் விளங்கியவர் என்று சொல்லலாம். (Ep. Rep· of 1894. No. 221). நம்பிகாடவநம்பி என்ற பெரியார் ஒருவர் ஆத்ரேய கோத்ரத்தவராய் இக்காலத்து வாழ்ந்தவரென்பது, ராஜாதிராஜ சோழனது 32-ம் ஆட்சி வருஷத்தமைந்த சாஸனம் ஒன்ருல் தெரிய வருகின்றது. இவரையே திருவிசைப்பா வாசிரியராகக் கருதற்குக் காலப்பொருத்தம் உள்ளது. இனி, கண்டராதித்தர் என்று பெயர் தரித்த சோழகுலத் தோன்றல்கள் சிலருளர். இவருள் மதுரைகொண்ட முதற் பராந்தகன் மகனுக்கு இப்பெயருண்டு என்பது—சாஸனங்களால் விளங்குகின்றது. உய்யக்கொண்டான் திருமலைக் கோயிலில் மேற்படி முதற் பராந்தகனது 34-ம் வருஷத்து அமைந்த (S.I.I. ii, 375) சாஸனமொன்றில், "பிராந்தகன் கண்டராதித்த தேவர் தேவியார் மழபெருமாள் மகளார் பிராந்தகன் மாதேவடிகளார்" என்பவர் மேற்படி கோயிற்குத் திருநொந்தா விளக்கொன்று வைத்த செய்தி கூறப்படுகின்றது. இக்கண்டராதித்தர் உத்தேசம் 950-ல் சிவகதி யடைந்தனர் என்பர் சாஸன பரிசோதகர் (Ep. Rep.1926). இவரே திருவிசையப்பா வாசிரியருள் ஒருவரான கண்டராதித்த ராயின்,

> "காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர் கோன்கலந்த
> ஆரா வின்சொற் கண்டராதித்தன்" என்று தம்மையும்
> "வெங்கோல் வேந்தன் தென்னனுடு மீழமுங்கொண்ட திறல்
> செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன்
> பொன்னணிந்ததில்லை" என்று தம்தந்தை மதுரையும்

ஈழமுங் கொண்ட பரகேசரிவர்மனையும் கூறிக்கொண்டனர் என்னலாம். இனி, வேணாட்டிகள் என்பது, தென் திருவாங்கூர் பிரதேசத்தை முன்பு ஆண்ட அரசர்க்கும் வழங்கிய பெயராம். 12-ம் நூற்றாண்டிலும் இப்பெயர் பூண்ட அரசர் சிலர் உளர் என்பது—திருவாங்கூர்ச் சாஸனங்களால் தெரியவருகின்றது (T.A.S. III, 28 IV. 67). அதனால், திருவிசைப்பா வாசிரியருள் ஒருவர் மலையாள மன்னர் என்பதும் நன்கு விளங்கும்.

முதலாம் ராஜராஜன் அறிவு திருவாற்றல்களுடையனாய்ப் பிறநாடுகளைக் கைப்பற்றுவதினும், தான்பற்றிய பெரும் பொருள்களை ஈசுரார்ப்பணஞ் செய்து, திருப்பணிகள் புரிவதினும் முனைந்து நின்றவனாயினும், தமிழ்ப் பெருமக்கள் பலரைத் தன் வாயிற் புலவராகக்கொண்டு தமிழ் வளர்ச்சி செய்வதில் ஊக்கங் காட்டியவன் என்பதற்கு இலக்கிய சாஸன ஆதாரவுகள் இல்லை மூவர்திருமுறைகளும் திருவிசைப்பாக்களிற் சிலவும் இவன் காலத்து வெளிவந்ததொன்றே, இவனைத் தமிழுடன் இணைப்பதற்கு உரியதென்னலாம். ஆயினும், இது தமிழ்ப்பாஷைக்கு அவன் புரிந்த பேருபகாரமாகவே முடிந்திருத்தலால், இவனை நாம் போற்றத்தகும். இவன் சாஸனங்கள் நல்ல தமிழ்நடையில், எழுத்துப் பிழையற அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்விராஜராஜன் பின் பட்டமெய்தியவன் இராஜேந்திர சோழனென்பான். இவன் எல்லா வகையாலும் தன் தந்தையைப் போன்றவனே. இவனால் தமிழ் வளர்ச்சிக்குரிய செயல்கள் செய்யப்பட்டதாக ஒன்றுந் தெரியவில்லை. ஆயினும், ஏறக்குறைய இக்காலத்தில் ஜைனரும் பௌத்தரும் தமிழ்க்கல்வியில் தங்கட்கியற்கையாக விருந்த அவாவால் எழுதிவைத்த நூல்கள் சில உண்டு. அவற்றுள் யாப்பருங்கலம், காரிகை என்ற செய்யுளிலக்கண நூல்களிரண்டும் சிறந்தவை யாகும்.

அமிதசாகரர்.

இவ்விருநூல்களும் இயற்றியவர் அமித சாகரர் என்ற ஆசிரியராவர். இவற்றுள் யாப்பருங்கலத்தின் பழைய விருத்தியுரைகாரர் காரிகைச் செய்யுளைக்காட்டி—" இந்நூலுடையாரும் இங்ஙனம் கூறினர் " என்று எழுதியதனாலும், காரிகையுரைகாரரும் வீரசோழியவுரைகாரரும், அக்காரிகை அமிதசாகரர் செய்ததென்றே தெளிவாகப் பெயர் கூறுவதனாலும் இவ்விஷயம் தெரியவருகின்றது. யாப்பருங்கலப் பாயிரத்தில் " குணக்கடற்

பெயரோன் கொள்கையின் வழாஅ—அளப்பருங் கடற்பெய ரருந்தவத்தோன் என வரும் அடிகளால் குணக்கடற் பெயரின ராகிய குணசாகரர் என்பவரது மாணாக்கர் அளப்பருங் கடற் பெயரினராகிய அமிதசாகரர் என்பது புலப்படும். அளப்பருங் கடற் பெயரினர் என்று இவ்வாசிரியர் பெயரைத் தமிழிற் பெயர்த்து அப்பாயிரங் கூறுதலால், இவர், அமிதசாகரர் என்றே அக்காலத்து அழைக்கப்பட்டவர் என்பதும் தெரியலாம். இவ்வமித சாகரரைப்பற்றிய அரிய செய்திகள் சிலவற்றைக் குறிக்கும் இரண்டு செய்யுட் சாஸனங்கள் அரசாங்க சாஸன பரிசோதகருள் ஒருவரான ஸ்ரீ **K.V.** சுப்பிரமணிய ஐயர் **(B.A.)** அவர்களால் எபிகிராபிகா இண்டிகா **(Epigraphica Indica Vol. xiii p. 64–69.)** பத்திரிகையில் விவரக் குறிப்புகளுடன் வெளியிடப்பட்டுள்ளன. இவை தஞ்சாவூர் ஜில்லா மாயூரத்தை அடுத்துள்ள நீடூர்ச் சிவன் கோயிலின் தெற்குத் திருமதிலிற் பொறிக்கப்பட்டனவாம். ஐயரவர்கள் பதிப்பித்தபடி அச்சாஸனப் பாடல்கள் வருமாறு :—

(முதற் சாஸனம்)

ஆரிய வுலக மனைத்தையுங் குடைக்கீழ்
ஆக்கிய குலோத்துங்க சோழற்
காண்டொரு நாற்பத் தாறிடைத் தில்லை
யம்பலத் தேவட கீழ்பாற்
போரியன் மதத்துச் சொன்னவா றறிவார்
கோயிலும் புராணநூல் விரிக்கும்
புரிசைமா ளிகையும் வரிசையால் விளங்கப்
பொருப்பினுன் விருப்புறச் செய்தோன்
நேரியற் காண்டே ழைஞ்சுடன் மூன்றில்
நிகரிலாக் கற்றளி நீடூர்
நிலாவினுற் கமைத்த நிலாவினு னமுத
சாகர னெடு [ந்தமிழ்த்] தொகுத்த
காரிகைக் குளத்தூர் மன்னவன் தொண்டை
காவலன் சிறுகுன்ற நாட்டுக்
கற்பக மிழலை நாட்டுவே ளாண் [மை
கொண்]டவன் கண்டன்மா தவனே
(இரண்டாஞ் சாஸனம்)

எண்டிசை யுலகை பொருகுடை நிழற்கீ
ழிருத்திய குலோத்துங்க சோழற்

யொண்டொரு முப்பத் தெட்டினிற் சோணாட்
டிசைவளர் இந்தளூர் நாட்[டுள்]

உண்டைநீ டியநீ டூருமை யோடு
[மு]லாவிய [சிவ] பெரு மா[னு]க்

குவந்து [வெண் கயி]லை மலையெனச் சிலையா
லுத்தம விமானமிங் கமைத்தான்

தண்டமி ழமித சாகர முனியைச்
சயங்கொண்ட சோழமண் டலத்துத்

தண்சிறு குன்ற நாட்டகத் திருத்தி [ச்
சந்த] நூற் காரிகை யவனாற்

கண்டவன் மருமான் காரிகைக் குளத்தூர்க்
காவல னிலாவினு னெவர்க்குங்

கருணையு [நிதியுங்] காட்டிய மிழலை
நாட்டுவேள் கண்டன்மா தவனே

இவ்விரண்டு செய்யுட்களினின்றும் குலோத்துங்க சோழனது 46-38-ம் ஆட்சி வருஷங்களில், முறையே அவை பொறிக்கப் பட்டவை என்பதும், காரிகைக் குளத்தூர் மன்னவன், தொண்டை காவலன், மிழலைநாட்டுவேள் என்று சிறப்பிக்கப் பெற்ற கண்டன் மாதவன் என்ற சிற்றரசன், அச்சோழனாட்சியின் 46-ஆம் ஆண்டில், தில்லையம்பலத்தின் வடகீழ்ப்பக்கத்தில், திருத்துருத்திச் சிவ பிரானாகிய சொன்னவா றறிவார்க்குக் கோயிலும், (பெரியபு- p. 313) புராணபடனம் செய்யும் மண்டபமும், அச்சோழனது 38-ஆம் ஆண்டில் நீடூர்ச்சிவ பெருமானுக்கு கற்கோயிலும் நிருமித்தவன் என்பதும் தெரியவருதலோடு, இச்சிற்றரசன் அமுதசாகராாற் காரிகை செய்வித்தவனுடைய மருமான் என்ற அரிய செய்தியும் அறியப்படுகின்றது. இச்சாஸன வெழுத் தமைதியாலும், அரசனது நீண்ட ஆட்சி வருஷங்களாலும், முதற் குலோத்துங்கனே இப்பாடல்களிற் கூறப்பட்ட சோழன் என்பது தெரியலாம். மிழலைக் கூற்றத்துத் தலைவனான வேள் எவ்வியின் வழித் தோன்றலாக இச்சாஸனமவைத்தவனைக் கொள்ள இடமுண்டு. இவன் முன்னோர் தொண்டை நாட்டிற் சோழ அதிகாரிகளாய்க் காரிகைக் குளத்தூரில் வாழ்ந்தவர்களென்றும் தெரிகின்றது. இத்தகைய அரிய செய்திகள் கொண்ட சாஸனங்களை வெளியிட்டுதவிய ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கட்குத் தமிழகம் நன்றி கூறுங்

இரண்டாஞ் செய்யுளின் இறுதியில் "காரிகை யவனுற் கண்டவன் மருமான்" என்ற தொடருள் வரும் மருமானென்பதற்கு 'உடன்பிறந்தாள் மகன்' என்று பொருள் கொண்டு, கண்டன் மாதவன் காரிகை செய்வித்தவனுடைய மருகனென்பது விளங்குதலால், அமிதசாகாரும் அம்மாதவனும் அவன் மாமனும் முதற் குலோத்துங்கன் காலத்தவராவர் என்று மேற்படி ஐயாவர்கள் கருதுகின்றார்கள். சகோதரி மகன் என்ற பொருளில் மருமான் என்ற சொல் மிகவும் அருகியே முன்னூல்களிற் காணப்படும். ஆனால், அதற்கு வழித்தோன்றல் என்ற பொருளே செய்யுள் வழக்கிற் பெரிதுங் கொள்ளற் குரியதாம்.

"குட்புலங் காவலர் மருமான்"
"தென்புலங் காவலர் மருமான்"
"குணபுலங் காவலர் மருமான்" (சிறுபாண் ; 47, 63, 79.)
"மாவலி மருமான் சீர்கெழு திருமகள்" (மணிமே)

என்பன காண்க. இம்மருமான் என்ற சொல், நேர்மகனைக் குறிப்பதாகாது, சில பல தலைமுறைக்குப் பிற்பட்ட வழித்தோன்றல் என்ற பொருளே உணர்த்தும். கண்டன் மாதன் மாமனே சாஸனத்திற் கூறப்படுபவனாயின், காரிகையைச் செய்வித்த பெருமைக்குரிய அவன் பெயரைச் சிறப்பித்துக் கூறாமல் இரண்டு பாடல்களும் விட்டொழிய நியாயமில்லை. அதனால், காரிகை செய்வித்தவனுடைய மரபில், அவனுக்குச் சில தலைமுறைகட்குப் பின் அக்கண்டன் மாதவன் உதித்தவன் என்றும், அம்முன்னோன் பெயர் இச்சிற்றரசன் காலத்தில் வழக்கு வீழ்ந்த தென்றும், ஆயினும், காரிகை செய்வித்த பெருமை அவன் மரபினர்க்கும் அவனுண்ட குளத்தூருக்கும் பரம்பரையாகவே வழங்கிவந்த தென்றும் நாம் கொள்ளும்படி பாடல்கள் அமைந்திருத்தல் காணலாம். ஆயின், காரிகையாசிரியர் காலம் யாது? என்பது இனி ஆராய்தற்குரியது.

வீரசோழியத்துக்கு உரையிட்ட பெருந்தேவனார் அந்நூலாசிரியரான புத்தமித்திரரை அடுத்திருந்தவரென்றே தெரிகின்றனர். அபயன், அநபாயன் முதலிய சோழர்கள், வீரமும் தமிழ் வளர்த்த சிறப்பும் உடையரா யிருந்தும், அவரைப்பற்றிய பாடலொன்றுமே முன்னோரான வீரராசேந்திரன் பழையாறைச் சுந்தர சோழனைப் வீரசோழியவுரையுள் உதாரணங் காட்டப்படாமல், அவர்

போன்ற அரசரைப்பற்றிய பாடல்களே மிகுதியும் மேற்கோள் தரப்பட்டுள்ளன. பின்னெழுந்த தண்டியலங்காரம் போன்ற இலக்கண நூல்கள், அவ்வபயனையும் அநபாயனையும் பற்றியமைந்த பாடல்களைப் பெரிதும் உதகரித்தலும் காண்க. இதனால், வீர சோழிய வுரைகாரர், அபயனாகிய முதற்குலோத்துங்கன் காலத்துக்கு முற்பட்டவ ரென்பது நன்கு பெறப்படும். இதற்கேற்ப—"கடனாக வேமொழிந் தான் தமிழ்காதலிற் கற்ப வர்க்கே" என்று, உரைகாரரைப்பற்றிப் பாயிரங் கூறுவது, வீர சோழிய நூலாசிரியர்க்கும் அதனுரையாசிரியருக்கு மிருந்த நெருங்கிய தொடர் பொன்றைப் புலப்படுத்துவது போலவே தோற்றுகிறது.

இனி, வீரசோழியம் அலங்காரப்படலம் 39-ஆம் செய்யு ளுரையுள் அதனுரைகாரரான பெருந்தேவனார்—"மாலைமாற்றே" என்ற யாப்பருங்கல இறுதிச் சூத்திரத்தை எடுத்துக் காட்டி "என்று அமுதசாகரனார் கூறியன கொள்க" என்று எழுதுகின்றார். இதனால் 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினரான அப்பெருந் தேவனார்க்கும் முந்தியவரே அமிதசாகரர் என்பது ஐயமின்றிப் பெறப்படுகின்றது. அவ்வாறே, யாப்பருங்கல விருத்திகாரரும், காரிகை யுரைகாரரும் பிற்பட்ட சோழர்களைப் பற்றிய பாடல் ஒன்றையுமே உதாரணங் காட்டாமையால், அவர்களும் வீரசோழ வுரைகாரர் போலவே அவ்வரசர்க்கு முன்னிருந்தவர் என்னலாம். எனவே, முதற்குலோத்துங்கன் காலத்தவராக அமிதசாகரரை யேனும், அவர் நூல்கட்குரையிட்டவர்களையேனும் கொள்ள இடமில்லை என்பது தெளிவாம். ஆயின், அபயன் வீரராஜேந்திரன் என்ற அரசர்க்கு முன் அமிதசாகரர் எக்காலத்து விளங்கியவர் என்பது நோக்கத்தக்கது.

அவ்வாசிரியரால் முதல்நினைப்பு உணர்த்தப் பெற்ற உதாரணச் செய்யுட்களிலே சூளாமணிப்பாடல்களும் உள்ளன. இதனால் அச் சூளாமணி யாசிரியரான தோலா மொழித் தேவர்க்குப் பிற்பட்டவரே அமிதசாகரர் என்பது தெளிவாம். தோலா மொழித் தேவர், 9, 10-ம் நூற்றாண்டுகளிலிருந்தவராக வேண்டு மென்பார் ஸ்ரீமாந் து. அ. கோபிநாதராயரவர்கள். (செந்தமிழ், தொகுதி 5, பக். 99-100.)

அமித சாகரரைப்பற்றி முதலிற் குறிக்கப்பட்ட யாப்பருங்கலப் பாயிரத்துள், அம்முனிவர்—

" தனக்குவரம் பாகிய தவத்தொடு புணர்ந்த
குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅ
அளப்பருங் கடற்பெய " ரோன்—

என்று சிறப்பிக்கப்பட்டிருத்தல் அறியலாம். இதனுள் குணக்கடற் பெயரோன் என்பது குணசாகரர் என்ற பெயரையாம். இத் தொடரால் அமிதசாகரர்க்கு ஞானசாரியரா யிருந்தவர், குண சாகரர் என்பது தெளியப்படும். இக்குணசாகரப்பெயர் காரிகை யுரை செய்தவர்க்கும் வழங்குகின்றது. அமித சாகர முனிவர்க்குப் பின்பு அவர் நூலுக்கு உரையிட்ட ஒருவரை, அம்முனிவர்க்கு ஆசிரியராகக் கருதுவது பொருந்தாதாதலின், யாப்பருங்கலப் பாயிரங் கூறுங் குணசாகரர். காரிகை யுரைகாரரின் வேறான ஆசிரியர் என்பது திண்ணம். ஆயின் இக்குணசாகரர் 'யாவர் ? என்பது கேள்வியாகும்.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த கழுகுமலையில் பாண்டியன் மாறஞ் சடையனது 3-ஆம் ஆட்சி வருஷத்தில் அமைந்த சாஸனங் களிரண்டால், அவன் காலத்தே குணசாகரபட்டர் என்ற பிரபல ஜைனமதாசாரியர் சமணசித்தாந்தத்தைப் பரவச் செய்வதற்காக, மதப்பிரவர்த்தகரான படாரர் சிலரை நியமித்து அவர்கட்கு உணவுக்கு வேண்டிய பூமி யுதவிய செய்தி தெரியவருகின்றது. (S. I. I. V, 134). குணசாகரரைப்பற்றிய இச்சாஸனங்களில் வீரநாராயண ஏரி, உத்தமசீலன் என்ற பெயர்கள் காணப்படு கின்றன. இவற்றுள் வீரநாராயணன் என்பது முதற்பராந்த கனுக்கும் (907-953) உத்தமசீலன் அப்பராந்தகன் மக்களுள் ஒருவனுக்கும் உரிய பெயர்களாகும். ஆகவே, குணசாகர பட்டாரர் அவ்வுத்தமசீலன் காலமான 953-க்குப்பின் வாழ்ந்தவர் என்பது தெளிவாகின்றது.

இனி, 10-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பட்ட மெய்தியவனும் சின்னமனூர்ப் பெரிய சாஸனம் செய்வித்தவனுமாகிய இராஜ சிம்ம பாண்டியனுடைய மகனே குணசாகரர் காலத்தவனாகச் சாஸனங் கூறும் மாறஞ்சடையனாக வேண்டும் என்று ஸ்ரீமாந் சுப்பிரமணிய ஐயரவர்கள் தம் வியாசத்திற் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறாயின், அம்மாறஞ்சடையன் அப்பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏறக்குறைய உத்தமசீலன் காலத்தை யொட்டி

வாழ்ந்திருத்தல் கூடியதேயாம். ஆகவே, அவ்வுத்தமசீலனிருந்த 953-ம் ஆண்டை யடுத்தே குணசாகரும் விளங்கியவர் என்பதில் ஐயமில்லை. முதல் ராஜேந்திரனது 28-ம் ஆட்சி வருஷத்திற் கண்ட திருவொற்றியூர்ச் சாஸனமொன்றில் "காரிகைப் பேரூர் நாடு" என்று தொண்டைநாட்டுள்ளதாகப் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளது. இது, காரிகை செய்யப்பட்ட குளத்தூரைத் தலைமை யாகக் கொண்ட நாடாகவே அதன் பெயரால் கருதலாகும். இவ்வாறு, காரிகை சம்பந்தமுள்ள பெயரை இராஜேந்திரன் சாஸனம் கூறுவதால், அவ்வரசனுக்கு முன்பே அமிதசாகரர் விளங்கியவரென்பது பெறப்படுகின்றது.

இனி, வீர ராஜேந்திரன் (1062–70) காலத்துக்கு முற்பட்டவர் என்று யான் மேலே விளக்கிய அமுதசாகரருடைய ஆசிரியர் இக்குணசாகர பட்டாரரே என்று கருதுவதற்கு, அவ்விருவ ருடைய காலங்களும் மிக நெருங்கியிருப்பதும், வேறு பிரசித்தரான குணசாகரர் காணப்பெறாமையும் தக்க ஏதுக்களா கின்றன. இவ்வாறாயின், அக்குணசாகரரது மாணாக்கரான அமித சாகரரை, முன்பு கூறியவாறு, உத்தமசீலனை அடுத்துப் பட்டம் பெற்றவனான மதுராந்தகன் காலத்தும் அவன்பின் பட்ட மெய்திய —முதலிராசராசன் (953) காலத்தும் விளங்கியவராகக் கொள்வது பெரிதும் பொருத்தமென்றே கூறலாம்.

இனி, முற்குறித்த இரண்டாஞ் சாஸனப்பாட்டால் கண்டன் மாதவன் முன்னோன், தொண்டைநாட்டில் தன்னூரான குளத்தூர்க் கண்ணே, அமிதசாகர முனிவரை வரவழைத்து வசிக்கச் செய்து அவரைக் கொண்டு காரிகை நூலைச் செய்வித்தனன்—என்ற செய்தி தெரியலாம். இதனால், அம்முனிவர், வேற்று நாட்டினின்று தொண்டை நாட்டுக்குத் தருவிக்கப்பட்டவ ரென்பது பெறப்படும். இம்முனிவர் தங்கிக் காரிகைநூலை இயற்றி முடித்த இடமாதல்பற்றியே காரிகைக் குளத்தூர் என்ற பெயர் அதற்கு வழங்கிய தென்பது "அமிதசாகரனேடுந் தமிழ்த் தொகுத்த காரிகைக் குளத்தூர்" என்பதனாலறியலாம். தொண்டை நாட்டிற் குளத்தூர் என்ற பெயரமைந்த ஊர்கள் பலவுள்ளன. அவற்றுள், காரிகைக் குளத்தூர் எது என்பது துணியக்கூடவில்லை. (880) காரிகைக்குளத்தூர் கிழார் (I.I. IV. 188). இனி, காரிகை யாசிரியரை அமுத சாகரர் என்று முதற்பாட்டும் அமிதசாகரரென்று இரண்டாம் பாட்டும் வழங்குகின்றன. இதனால்

அப்பெயரின் இருவகை வழக்கும் முற்காலத்திலே வழங்கலாயின என்பது வெளியாகின்றது.

இனிக் காரிகை யுரையாசிரியர்க்குக் குணசாகரர் என்ற பெயர் வழங்குவதையும், முற்கூறியவாறு அவர் அபயனுக்கு முற்பட்டவராதலேயும் நோக்கும்போது, அவ்வுரைகாரர், அமிதசாகருடைய மாணுக்கராய், அவராசிரியரான குணசாகர பட்டாரர், பெயரைத் தரித்தவர் போலும் என்று கருதக் கூடியதாகின்றது. இனி. காஞ்சிபுரத்துக்கும் வந்தவாசிக்கும் இடையிலுள்ள உக்கல் என்ற ஊரில் உள்ள திருமால் கோயிலில், முதலிராஜ சோழனுடைய 13-ம் வருஷத்துச் சாஸனமொன்று உள்ளது. இதனில், அவ்வூரிற் கோயில் கொண்ட திருமாலுக்குத் திருவாய்மொழித் தேவர் என்ற பெயர் காணப்படுகின்றது. இதனால், நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி அதனுல் பிரதிபாதிக்கப்படும் திருமாலுக்கு விசேடணமாய் அமையும் பிராபல்யத்தை 10-ம் நூற்றுண்டில் பெற்றிருந்ததென்பது தெரியலாம். இவ்வரசனது தஞ்சைச் சாஸனத்தில் சீகுருகூர் என்ற பெயரைத் தளிச்சேரிப் பெண்ணெருத்தி கொண்டிருந்தனள் என்று தெரியவருகின்றது. இது ஆழ்வாரது அவதாரஸ்தலம் அக்காலத்து நன்கறியப் பட்டிருந்தமைக்குச் சான்ருகும்.

இவ்விராஜராஜன் தாயாகிய வானவன்மாதேவி திருக் கோவலூர்த் தலைவரான மலையமான்கள் வம்சத்துதித்தவன் என்பது—

> " செந்திரு மடந்தைமன் சீராச ராசன்
> இந்திர சமான னிராசஸார் வென்ற னெனும்
> புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
> கரந்து கரவாக் காரிகை சுரந்த
> முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணுந்
> தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந்
> திருப்புய முயங்குந் தேவி விருப்புடன்
> வந்துதித் தருளிய மலையர் திருக் குலத்தோர் "

என்ற திருக்கோவலூர்ச் சாஸனத்தால் தெரியலாம். இவ்வானவன் மாதேவி ராஜராஜனது குழவிப் பருவத்தில், தன் நாயகனை சுந்தர சோழனுடன் சககமனஞ் செய்தவள் என்பது வரலாறு. ராஜராஜன் தஞ்சைக் கோயிலில் பிரதிஷ்டித்த சிவனடியார்களுள் மெய்ப்பொருளையனுர் திருவுருவமு மொன்றென்பது மேலே

கூறினேன். மற்ற நாயன்மார்களுக் கெல்லாம் மூவருக்குப் போலத் திருமேனி வகுக்காது மெய்ப்பொருளுயனாரை மட்டும் இவன் பிரதிஷ்டித்தது, தன் மாதாவான வானவன்மாதேவி சேதிபரான மலையமான்கள் குலத்தவளானமையின், அத்தாயின் குலத்து முன்னோராக அந்நாயனார் விளங்கியதே காரணமாக வேண்டும். திருக்கோவலூர் வீரட்டானேசர் கோயிலிற் கண்ட இச்சாஸனம் பழைய சரித்திரங்கள் சிலவற்றைக் கூறுவதாகவும், அகவல் நடையில் அழகாக அமைந்ததாகவும் உள்ளது. இதனை அமைத்தவன். ராஜராஜ சோழனது படைத்தலைவனும் அதிகாரியுமான வீதிவிடங்கன் கம்பன் என்பான். இவனைப்பற்றி அச்சாஸனவிறுதியிற் கண்ட வெண்பாக்கள் அடியில் வருமாறு:—

“வேலியர்கோன் வீதி விடங்கன் விறற்கம்பன்
ஆலியன்மான் சோழ னதிகாரி—கோலப்
படியின்மேற் பொற்பூப்பைங் கோவல்வீ ரட்டர்
முடியின்மேல் வைத்தான் முயன்று”

“பொன்முக் கழஞ்சால் மணிப்பட்டம் பூப்புனைந்து
மின்மிக்க கட்டமைந்த மேற்கட்டி—சொன்மிக்க
கோவலான் வீரட்டற் கீந்தான் குலவேலி
காவலான் வாழ்கம்பன் கண்டு”

வீர சோழியம்

இனி, ராஜராஜன் பேரனும் முதலாம் இராஜேந்திரனது மூன்றாமகனுமான வீரராஜேந்திரன் (1063–70) என்பவன் தமிழபிமானமுள்ளவன் என்று தெரிகின்றான். வீரசோழியம் என்ற இலக்கண நூலைப் புத்தமித்திரர் என்ற பௌத்த ஆசிரியரைக் கொண்டு செய்வித்தவன் இவனே.

“நாமே யெழுத்துச்சொ னற்பொருள் யாப்பலங் காரமெனும்
பாமேவு பஞ்ச வதிகார மாம்பரப் பைச்சுருக்கித்
தேமே வியதொங்கற் றேர்வீர சோழன் திருப்பெயரால்
பூமே லுரைப்பன் வடநூன் மரபும் புகன்று கொண்டே”

என ஆசிரியர் தாமே பாடிய பாயிரச் செய்யுளாலும், வீரசோழிய வுரையுள்—

“ஈண்டுநூல் கண்டா னெழின்மிழலைக் கூற்றத்துப்
பூண்டபுகழ்ப் பொன்பற்றி காவலனே—மூண்டவரை
வெல்லும் படைத்தடக்கை வெற்றிபுனை வீரன்றன்
சொல்லின் படியே தொகுத்து”

எனக் காட்டப்பட்டுள்ள வெண்பாவாலும், **வீரசோழன் இவ்** விலக்கணநூல் செய்தற்குக் காரணமாயிருந்தவன் என்பதும், அவன் பெயரால் புத்தமித்திரர் தம் நூலைச் செய்தவரென்பதும் தெளிவாகின்றன. வீரசோழன் என்பது, மேற்கூறிய ராஜேந்திரன் கொண்டிருந்த மறுபெயரென்பது "ஆகவ மல்லனை மும்மடி வெண்கண்ட . . . வீரசோள கரிகால சோள ஸ்ரீவீரராஜேந்தர் தேவ ராஜகேசரிவன்ம பெருமானடிகள்" என்று (**I. M. P. C. G. 1014. P.S. 268**) திருநாமநல்லூர்ச் சாஸனங் கூறுதலால் தெரியலாம். மேற்குறித்த வெண்பாவில் "மிழலைக் கூற்றத்துப் பொன்பற்றி காவலன்" எனப் புத்தமித்திரர் கூறப்படுகின்றார். இவ்வாறே இவருரை—

"மிழலைக் கூற்றத்துப் பொன்பற்றி உடையான்" என்று சாஸனங்களும் மிழலைக் கூற்றத்தைச் சார்ந்ததாகவே கூறுகின்றன. இது தஞ்சாவூர் ஜில்லா, பட்டுக்கோட்டைத் தாலுகாவில் மணமேற்குடிக்குத் தென்மேற்கே 10 மைலில் பொன்பெத்தி என்று வழங்குகின்றது. மேற்குறித்த வெண்பாவில் "எழின் மாலைக் கூற்றத்து" என்றும், "வெற்றிபுனைமாறன்" என்றும் அச்சுப்பிரதியில் உள்ளவை, "எழின் மிழலைக் கூற்றத்து" என்றும்", "வெற்றிபுனை வீரன்றன்" என்றும் சுத்தபாடமாகத் திருத்திக் கொள்ளத் தக்கன. ஹியுவான்த்யாங்கின் "மலகூட", "மாலைக் கூட" மென்று, டாக்டர் பர்னல் கூறியது, தவறாகும். (**S.I.I. III** 197) வீரசோழியத்துக்கு உரையிட்ட பெருந் தேவனார், அந் நூலாசிரியர் காலத்தை ஒட்டியே வாழ்ந்தவராவர். இது தண்டியலங்காரம் போலப் பிற்பட்ட சோழரைப் பற்றிய செய்யுட்களை உதகரிக்காமல், வீரராஜேந்திரனையும் அவனுக்கு முற்பட்டவர்கள் என்று சாஸனங்களால் தெளியப்பட்ட அரசரையும் பற்றிய பாடல்களையே அவர் மேற்கோள் புரிதலால் தெளியப் படுகின்றது. இவ்வுரைகாரர் மேற்கோளாக ஆண்ட புத்த ஸ்தோத்திரமான கலிப்பா வொன்றில்—

> அலகிலா நின்ற னடியினை பரவுதும்
> வெல்படைத் தொண்டைமான் விறற்சே னாபதி
> சிங்களத் தரையன் வெண்குடை யதனொடு
> பொங்குபுகழ் வில்லவன் புறக்கொடை கண்டு
> பொலிதரு சேந்தன் பொன்பற்றி காவலன்
> மலிதரு பார்மிசை மன்னுவோ னெனவே (பக். 104)

என்று, பொன்பற்றித் தலைவனான சேந்தனென்ருவன் வாழ்த்தப் படுகின்றான். பௌத்த சமயத்தனைக் தெரியும் **இச் சேந்தன்,**

வீரசோழிய ஆசிரியரான புத்தமித்திரரது முன்னேறுதல் வேண்டும். பல்லவ சேனுபதியாய்ச் சிங்கள வேந்தனையுஞ் சோனையும் வென்ற இச் சேந்தன் யாவன் என்பது சாஸன வுதவியால் தெளியக் கூடவில்லை. இவ்வாறே, பழைய அரசர் தலைவர்களைப் பற்றிய பாடல்கள் பல இவ்வுரைகாரரால் ஆளப் படுவனவற்றில் பழைய வரலாறுகள் தெரிய வேண்டுவன உண்டு. ஆனால், வீரராஜேந்திரனைப் பற்றியனவாக இவர் காட்டும் பாடல்கள் சில சாஸன வழக்கோடு ஒத்த செய்தி கொண்டுள்ளன. அவை வருமாறு :—

"மின்னார் வடிவேற்கை வீரரா சேந்திரன்றன்
பொன்னார் பதயுகளம் போற்றாது—கன்னுடர்
புன்கூ டலசங்க மத்திறெடும் போருடைந்தார்
மன்கூ டலசங்க மத்து"

"விண்கூ டலசங்க மத்துடைந்த வேல்வடுகர்
எண்கூ டலறு மிருங்கானிற்—கண்கூடப்
பண்ணினன் றன்னுடைய பாதம் பணியாமைக்
கெண்ணினார் சேரு மிடம்"

தத்துற் றன்றுவெம் போர்செய்த, விறகைப் பன்மனமுன்
[போடவொர்
தத்திற் றுன்றுவன் பாய்பரி யுய்த்துத் தன்மெய்கொண்
[டோடிய
வெற்றிச் செம்பியன் பார்புகழ் கொற்கைக் கண்டன்வன்
[மாரத
வெற்புக் கொண்டுதிண் போர்புரி கொப்பத் தன்றெதிர்ந்
[தோர்பெறு
கொற்றத் தொங்கல்சிங் காதன மொற்றைச் சங்குவெண்
[சாமரை
முத்துப் பந்தர்முன் பாவிய முத்துப் பந்திமுன் றுன்மகிழ்
ஒற்றைப் பெண்டிர்பண் டாரமோ டற்றைத் தன்பெருஞ்
[சேனையும்
இட்டிட டன்றுடைந் தான்வகை பட்டுக் கண்டவன்
[காரனே.
(பெருங் P 171)

வீர ராஜேந்திரன் 1064-ம் ஆண்டில் சளுக்கிய வேந்தான ஆகவ மல்லனையும், அவன் மகனையும் கொப்பம் என்றவிடத்தில் வென்று புறங்கண்டான் என்பதும், இரண்டாமுறையும் ஆகவ

மல்லனை அவனுக்குத் துணைவந்த அரசர் பலருடன் கூடல் சங்கமப் போரில் அழித்து வெற்றி பெற்றவனென்பதும் பிரசித்தம். இவையே மேற்கூறிய பாடல்கள் குறிப்பன. கொப்பம் என்பது கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள கொப்பை என்ற தீர்த்த விசேடமுள்ள தலமாகும். "செப்பருந் தீர்த்தக் கொப்பத்து" (S.I.I. III-103), "செப்பமா தீர்த்தக் கொப்பத்து" (Ep. Cal. Ix-108 என்ற சாஸனங்கள் இவ்வூரைச் சிறப்பிக்கும். இப்போரையே சயங்கொண்டார்—" உலகுயக் கொளப் பொருது கொப்பையிற், பொருகளத்திலே முடிகவித்தவன் " என்றும் கூத்தர் " வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமுங் கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனும் " என்றும் பாடுவாராயினர். கூடல் சங்கமம்—துங்கையும் பத்திரையும் ஆகிய நதிகள் கூடும் கூடலி என்ற இடமாகும். (S.I.I., iii-32) விற்கைப் பன்மன் என்பவன் ஆகவமல்லனுக்குத் துணையாக வந்த தசபன்மன் என்ற அரசனாவான் (Ibid, iii-58).

அபயன்.

இவ்விராஜேந்திரன் பின் பட்டம் எய்தியவன் அபயன் என்ற முதற் குலோத்துங்க சோழன் ஆவன். வீராஜேந்திரன் சந்ததியற்றவனாய்ச் சென்றமையால், அரசிற்குரியாரைப் பற்றி நாட்டிற் பெருங்கலகம் உண்டாயிற்று. பின் இறந்த அரசனது சகோதரி மகனும், கீழைச் சளுக்கிய வேந்தனான ராஜராஜனது மகனும் இராஜேந்திரன் என்ற பெயர் பூண்டிருந்தவனுமான இவன், சோழ வமிசத்திற் புகுந்து குலோத்துங்கன் என்ற பெயருடன் சோழ சிம்மாசனமேறி நாட்டின் கலகத்தை யடக்கி அரசாளுவானாயினன். இவன் பட்டம் பெற்றது 1070-ம் ஆண்டாகும். சயங்கொண்டார் என்ற புலவர் பெருமான், இக் குலோத்துங்கன் வாயிற் புலவராக விளங்கியவர். இவர் தம் அரசனது கலிங்க வெற்றியைப் பற்றிப் பாடிய பரணியிலே இச் சோழன் பட்டம் பெறுதற்கு முன்னிருந்த தேசத்தின் குழப்ப நிலையைப் பல தாழிசைகளாற் கூறுகிறார். கூத்தரும் தம் உலாவொன்றில்—" நாடு—கலகமுஞ் சுங்கமுங் காய்கலியு மாற்றி, உலகைமுன் காத்த வுரவோன்" என்று பாடினர். இவ்வாறு, குலோத்துங்கன் சோழகுலத்துப் புக்கதையே—சயங்கொண்டார்

" இருண் முழுதும் புவி யகல விரவிகுல மினிதோங்க
விராச ராசன்

அருள் திருவின் திருவயி ரு மாலியில்
அவதரித்தா னவனே மீள "

" திங்களி னிளங்குழவி செம்மலிவ னென்றும்
செய்யபரி திக்குழவி யையனிவ னென்றும்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமும்
தனித்தனி யுவப்பதோர் கவப்பயனு மொத்தே"

என்று சிறப்பிக்கின்றார். குலோத்துங்கனுக்குத் தியாகவல்லி, ஏழிசைவல்லி என்ற இருவர் மனைவியர் இருந்தனர்.

" இவனிடத் துடையெனத் தியாக வல்லி
உலக முழுதுடையா ளிருப்ப வவளுடன்
கங்கைவீற் றிருந்தென மங்கையர் திலதம்
ஏழிசை வல்லபி யேழுலகு முடையாள்
வாழி யமர்ந்தினி திருப்ப வூழியும்
வீரசிம் மாஸனத்து வீற்றிருந் தருளியே (குலோத்)"

எனச் சாஸனம் இத்தேவியர்களைச் சிறப்பிக்கு முறையே செயங்கொண்டாரும்—மூத்தவளை "புவனி காவலர்க டேவியர்" "ஏழுபாருலகோ டேழிசை வளர்க்க வுரியாள்" என்று கூறுதல் காணலாம். சோழன் மனைவியரை புனைந்து கூறுவது பண்டை மரபென்பது, கூத்தருலாக்களாலும் அறியலாம்.

இச்சோழனது கலிங்க வெற்றியைப் பற்றியதே கலிங்கத்துப் பரணி என்பது பலரும் அறிந்தது. இந்நூலில் சோழ பாரம்பரியமும் குலோத்துங்கனது பிறப்பு வளர்ப்புக்களும், அவன் புரிந்த போர்த்திறங்களும், தன் படைத்தலைவனைக் கொண்டு கலிங்க தேசத்தின் மேற் படையெடுக்கச் செய்து அடைந்த வெற்றிச் செய்திகளும் பிறவும் பல புனைந்துரை வகையால் மிக வலங்காரமாகவும் சொற்பொருட்சுவை பெருகவும் செயங் கொண்டாரால் பாடப்பட்டுள்ளன. இச்சோழனுக்குச் சயதரன் I. M .P. (126, 127), அபயன் (1712) விருதராஜபயங்கரன் (1614, 458) என்ற பெயர்களைச் சாஸனங்கள் கூறுதல் போலவே அப்புலவரும் பலவிடங்களிலும் கூறுவர். இவ்வபயனது மற்றப் போர்களில் விழிஞம், சாலை, சக்கரக்கோட்டம், அளத்தி, நவிலை என்ற இடங்களினடந்தவற்றைச் செயங்கொண்டார் பாடுகின்றார். அவற்றையே இவனது சாஸன மெய்க்கீர்த்தியும் கூறுகின்றது. இவற்றுள் விழிஞம், சாலை என்பன திருவனந்தபுரத்தைச் சார்ந்த ஊர்களாம். சாலை என்பது காந்தளூர்ச் சாலை என்பதன் சுருக்கம்

சக்கரக்கோட்டம் என்பது, மத்திய மாகாணத்தில் இப்போது பாஸ்டர் (Bastor) என்ற ராஜ்யமுள்ள வத்ஸதேசமாகும். அளத்தி என்பது, கஞ்சம் ஜில்லா பொல்கிமிடி தாலுகாவில், ஜமீன் ஒன்றன் தலைமையூராகும். நுளம்பாடி என்பது, மைசூர் நாட்டைச் சார்ந்ததென்பது அப்பக்கத்துச் சாஸனங்களால் அறியப் படுகின்றது.

கருணாகரன்.

இவனது கலிங்கப் போர் 'வட கலிங்கர் குலவேந்தனான அனந்தவன்மனுடன்' நடத்தியதென்பர் செயங்கொண்டார். இவ்வேந்தன், 1078–1146 வரை ஆட்சி புரிந்தவன். இவனை அடக்கி வரும்படி அபயனால் பெருஞ்சேனைகளுடன் விடுக்கப்பட்ட சேனைத் தலைவன் பல்லவ வமிசத்தவனான கருணாகரத் தொண்டைமான் என்பதும் அவனுக்கு உதவிப் படைத் தலைவராகச் சென்றவர்கள் பல்லவரசர், வாணகோவரையன், முடிகொண்ட சோழன் என்பதும் பரணியால் அறியலாம். தலைமைச் சேனாதிபதியை "வண்டையர்கோன்" என்றே அந்நூல் கூறுகின்றது. இவனது வண்டை என்பது செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள வண்டலூர் என்று நெடுங்காலம் கருதப்பட்டு வந்தது. ஆனால், அவனூர் சோணாட்டுக் கும்பகோணத்துக்கு அயலிலுள்ள வண்டாழஞ்சேரி என்பதே என்று காஞ்சீபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் சாஸனமொன்று தெளிவாகக் கூறியிருப்பதை நான் கருணாகரத் தொண்டைமானைப் பற்றிச் செந்தமிழில் எழுதிய கட்டுரையில் விளக்கியிருக்கிறேன்.

சோழன் சக்கரம்.

இவ்வாறு கலிங்கத்தின் மேல் தன்னரசன் கட்டளைப்படி படையெடுத்துச் சென்ற இவ்வண்டைத் தொண்டைமானை "அபயன் தானேவிய சேனைதனக் கடையக்கண்ணாகிய சோழன் சக்கரம்" என்று சிறப்பிப்பர் செயங்கொண்டார். திருமாலுக்குச் சுதரிசனாழ்வான் போல அத்திருமாலம்சமாகிய சோழசக்கரவர்த்திக்குக் கருணாகரன் சக்கரமாக விளங்கியவன் என்பது அவர் கருத்து. "தண்டு கொண்டவன் சக்கரம் வந்ததே" என்று வேறிடத்தும் கருணாகரனை அவர் புகழ்ந்து கூறியதும் காணலாம். அதனால், "சோழனி சக்கரமாம் கருணாகரன்" என்று சமீபத்தில் திருத்திப் பதிப்பிக்கப்பட்ட பாடம் தவறுதலைப் பற்றிக் "கலிங்கத்துப் பரணியாராய்ச்சி" என்ற சிறு நூலில் நான் விளக்கலாயிற்று. என் அருமை மைத்துனர் மகாவித்துவான்

ராகவையங்காரவர்கள் இது விஷயமாகக் குறித்தனுப்பிய சாஸனச் செய்தி அப்போதெழுதிய என்னெழுத்தை வற்புறுத்துகின்றது. அஃதாவது—கன்னடநாட்டில் கொத்தசிவரம், பாத சிவரம் என்ற ஊர்கட்கு இடையிலுள்ள சிவன் கோயிலில் உள்ள சாஸனமொன்று இரண்டு வெண்பாக்களுடன் நான்மடி விமன் என்ற படைத் தலைவனொருவனை, சாமந்த ராபரணன், சோழனைசக்கரம் என்று கூறியிருத்தலேயாம். ஆகவே, சோழனைசக்கரம் என்ற வழக்குச் சோழ சேனாபதிகள் பலர்க்கு வழங்கிய சிறப்புப் பெயரென்பது மலையிலக்காகும். அபயனது உபயசேனாபதிகளுள், பல்லவராசர் என்பார், கருணாகரனது தமையனென்று கூறுவர் செயங் கொண்டார். இராசராச மூவேந்த வேளார் சேனாபதி பல்லவராசர் என்று அபயன் காலத்து அதிகாரியாயிருந்தவரே அத்தமையன் என்று தோன்றுகிறது. வாண கோவரையரை, விருதராஜ பயங்கர வாண கோவரையர் என்றும், முடிகொண்ட சோழனை முடிகொண்ட சோழ மூவேந்த வேளான் என்றும் அபயன் காலத்துச் சாஸனங்கள் கூறும். முடிகொண்டானைப் பற்றிய பாட்டொன்றும் சாஸனங் கூறும். (S. I. I. IV. 470) இவரெல்லாம் அபயன் மகன் விக்ரமசோழன் காலத்தும் இருந்தவ ராதலால்,

"ஒருநாட் கொண்ட பரணிமலையத்தருந் தொண்டைமானும்"

"புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய்வாங்க
ஒல்லாத கூற்ற முயிர்வாங்கப்—புல்லார்தம்
தாங்கு மடமகளிர் தத்த மிழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும்"

என்று கூத்தரும் தம் உலாக்களில் இன்னோரைச் சிறப்பிப்பா ராயினர். இவ்வாறு சேனாபதியான கருணாகரனால் படையெடுத்து வெல்லப்பட்ட கலிங்கப் போரைச் செயங்கொண்டார் புகழு முறையே, அபயனது 45-ம் ஆண்டில் வரையப்பட்ட ஆலங்குடிச் சாஸனமும் அடியிற் வருமாறு கூறுகின்றது :—

"வடதிசை வேங்கை மண்டலங் கடந்து
தாங்கிய கலிங்கமுந் தழலெரிபரப்ப
விலங்கல் போல விலங்கிய வேந்தர்
விட்டவெங் கரியொடு பட்டனர் புரளப்
பொருகோ பத்தொடு போர்முக மெதிர்வரு
கோமட் டையன் மாதவ னெதிர்பட
எங்க ராய னிகல பேச்சண்ன்

தண்டுபதி யாகிய தலைச்சேனாபதி
என்றிவ ரனைவரும்
வெற்றவே முத்தொடு பட்டு மற்றவர்
கருந்தலை யோடு வெண்ணிணங் கழுகொடு
பருந்தலைத் தெங்கணும் பரப்ப வுயர்த்துத
தருங்கட லாடைத் தாதலந் திறந்து
கலிங்க மேழுங் கைக்கொண் டொருபகல்''

எனக் காண்க. இதனுட் கண்ட கலிங்க சேனாபதிகளுள் எங்காராயன் என்பவன், கருணாகரனோடு எதிர்க்காமல் அவனுடன் சந்து செய்து கொள்ளும்படி தன்னரசனை கலிங்க வேந்தனுக்குக் கழறிக் கூறியவனென்பது—

"என்று கூறவே எங்க ராயனன்
ஒன்று கூறுகே னென்று ரைக்குமால்''

என்று சயங்கொண்டார் பாடுதலால் விளங்கும்.

இனி அபயனது சேனாபதிகளுள், காலிங்கர்கோன், மணவிற்கோன் கூத்தன் என்ற வேறொருவனும் உளன். இவனுக்கு அருளாகரன் என்ற வேறு சிறப்புப் பெயரும் உண்டு. இவனையும் கருணாகரனையும் ஒருவனாகக் கருதும் சரித்திர அறிஞர் சிலர் கொள்கை பொருந்தாதென்பது பற்றி நான் ஹிஸ்டாரிகல் ஜெர்னலிலும் செந்தமிழிலும் எழுதியுளேன். இச்சேனாபதி, வடநாடு, கொல்லம் மலைநாடுகளில் பெரும்போர் புரிந்து அபயனுக்கு வெற்றிமாலை சூட்டியவனென்றும், சிதம்பரம், திருவதிகைகளில் அரிய திருப்பணிகளும் நன்கொடைகளும் எண்ணிறந்தன புரிந்தவன் என்றும், இவன் சாஸனங்கள் 50 வரையுள்ள அழகான வெண்பாக்களாற் புகழ்கின்றன. இவனையே, கூத்தர் தம் விக்ரம சோழனுலாவில்—"அடியெடுத்து வெவ்வேறரசிரிய வீரக்கொடியெடுத்த காலிங்கர் கோனும்'' என்று கூறுவர். அபயன் மெய்க்கீர்த்தி "கடன்மலை நாட்டுளசாவே சாவேறுறெல்லாந்—தனிவிசும் பேற'' மாவேறி தன் வருதினித் தலைவரை . . . நெறிதொறு நிலைகளிட் டருளியவன் அவனென்று புகழ்கின்றது. சாவேறு என்பது மலைநாட்டு விளங்கிய வீரமிக்க ஒரு வகைப் படை. இது பகைவர்க்கு அஞ்சாது எதிர்சென்று பகையழித்தோ, அன்றி உயிர் கொடுத்தோ இரண்டனுள் ஒன்றாலன்றி மீளாத நெஞ்சுறுதி கொண்டது. இத்தகையதைச் சாவேற்றுப் படை என்று மலையாளத்தார் இன்றும் வழங்குகின்றனர் என்று தெரிகின்றது. இத்தகைய படையைத் தன் அரசன் அபயற்காகத்

தொலைத்தவன் இக்காலிங்கர் கோனே என்பது—"தென்னாடன் சாவேற்றின் திண்செருக்கை அன்றவித்தான்" என்று இவனது திருவதிகைச் சாஸன வெண்பா வொன்று கூறுதல் அறியத்தக்கது. தமிழ்க் கல்வி நிரம்பியவனாகவும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவனாகவும் இச்சேனாபதி விளங்கினவன் என்பது இவனைப் பற்றிய அச் சாஸனப் பாடல்களாலறியத் தடையில்லை. இப்பாடல்களின் வாக்கினிமையை நோக்கும்போது, செயங்கொண்டார் போன்ற புலவர் பெருமக்களால் அவை பாடப்பட்டிருக்கவேண்டும் என்று கருதக்கூடியன.

சோழ வமிசத்தில் அபயனைப் போன்ற வீரவரசர் பலரிருப்பினும், அவரையெல்லாம் பின்னோர் மறந்துபோக, இவ்வபயனை மட்டும் நாம் மறக்க முடியாதபடி அவனை நிலை நாட்டி வைத்தவர் செயங்கொண்டாரே யன்றோ? தம் பரணி வாயிலாக இப்புலவர் பெருமான் அவ்வரசனுக்களித்த நிலைத்த புகழ்க் கொடை, அவன் அவர்க்கு அளித்திருக்கக்கூடிய நிலையாய் பொருட்கொடையினும் பல்லாயிரமடங்கு பெரிதாகும்.

"காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை
யாகாப் பொருளை யபயனளித் தான்புகழா
மேகாப் பொருளளித் தேன்யான்"

என்று ஒருகால் அபயனிடம் கோபமாக இப்புலவர் பாடிய வெண்பா வொன்று வழங்குதலும் அறியத்தக்கது. இவரைக் கவிச் சக்கரவர்த்தி என்று முன்னோர் வழங்கி வந்தனர். இவர் திருவாரூர்ப் பக்கத்துள்ள தீபங்குடி என்ற ஊரினர்,

"தவிராத சுங்கந் தவிர்த்தோன் கவிராசர்
போற்றும் பெரியோன்"

"கலிங்கப் பெரும்பரணி கொண்ட பெருமாள்"

"கலிங்கரோடத் தென்றமிழ்த் தெய்வப் பரணி
கொண்டு . . . உலகாண்டபிரான்"

என்று கூத்தரே இப்புலவர் பெருமானையும் இவர் நூலையும் புகழ்வரெனின் இவர் பெருமைக்கு வேறு சிறப்பும் வேண்டுமோ?

இராமநுசர்.

இத்தகைய பரணி பெற்ற அபயன் ஆட்சிக்காலமே, வைஷ்ணவாசாரியார்கள் கொண்டாடும் ஆசாரியத் தலைவரான இராமாநுஜ முனிவரின் பிற்பகுதி வாழ்க்கைக் காலமாகும். இச் சோழன் தன்

முன்னோரைப் போலச் சைவமதப் பற்றுடையனாயினும், தன்னிளமையில் பிறமதத்தவரிடம் வெறுப்புக் கொண்டொழுகிய வனல்லன். மன்னார் கோயில் திருமால் திருப்பதி இவ்வாசன் உண்டாக்கிய தலம் என்பது, இவன் காலதத்துச் சாஸனத்தில் இதற்கு "ஸ்ரீகுலோத்துங்கசோழ விண்ணகராழ்வார் கோயில்" என்ற பெயர் வழக்குக் காணப்படுதலால் அறியப்படுகின்றது. இவனது 15-ம் ஆட்சி வருஷத்தில் ஸ்ரீரங்கத்தில் அமைந்த சாஸன மொன்றில்—(S. I. I. Vi 32) "இக்கோயிலிலே ஆழ்வானுக்குத் திருப்பள்ளியெழுச்சி திருவாய்மொழி விண்ணப்பஞ் செய்வோமாக" (S. I.I. IV, 146) என்றும் 18-ம் ஆண்டில்— அப்பிகைத் தேர்த்திருநாளிலும் பங்குனித் திருநாளிலும் தீர்த்தம் பிரஸாதிக் தருளின அன்றிரா திருப்புன்னைக் கீழே (பெருமாள்) எழுந்தருளியிருந்து "தேட்டருந் திறல்" (குலசேகர் பதிகம்) "கேட்டருளும்போது" என்றும் வரும் சாஸனத் தொடர்களால், இவன் காலத்தை வைஷ்ணவர்கள் கொண்டாடிக் குறிப்பிட்டும் வந்ததும் ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் இவன் காலத்தில் பிரபலம் பெற்றிருந்ததும் விளக்கமாகும். ஆனால், இவனது ஆட்சியின் பிற்பகுதியில், தன் சைவாபிமான மிகுதியால், வைஷ்ணவை சமயத்தவரிடம் அளவற்ற வெறுப்புக்காட்டி ஒழுகியவன் என்பது, இராமனுஜ முனிவரது சரித்திரத்தினின்றும் அறியப்படுகின்றது. சிவபரத்துவத்தை ஒப்புக்கொள்ளும்படி, இச்சோழன் அவரை நிர்ப்பந்திக்க, அதற்கு அவரிணங்காமல் ஸ்ரீரங்கத்தை விட்டுத் தப்பியோடி மைசூர் நாட்டையடைந்தன ரென்றும், 12 வருஷங்கள் அங்கே தங்கி அத்தேசத்து அரசனை வைஷ்ணவனாக்கிப் பல உரிய காரியங்களைச் செய்து, சோழனிறந்த வுடன் திருவரங்கத்துக்குத் திரும்பி வந்தனரென்றும் குருபரம் குருபரம்பரைகள் கூறும் வரலாறு பலரும் அறிவர். அபயன் 1120-ல் இறந்தவன். அதனால் அவன் மரணத்துக்குப் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு மைசூர் சென்றவர் அம்முனிவர் எனவே, 1108-ல் அவர் சோணாட்டை அகன்றவராவர். இராமாநுஜர் 1137-ல் பரமபதம் அடைந்தவர் என்பது "தர்மோநஷ்ட" என்ற கடபயாதி வாக்கியத்தால் பிரசித்தம். அதனால் 1135-ல் பட்டம் பெற்ற இரண்டாம் குலோத்துங்கனே இராமாநுஜரை நாட்டை விட்டு ஓட்டி வருத்தியவன் என்று சிலர் கருதுவது பொருத்தமன்று. ஆகவே அபயனிறந்த 1120-ம் ஆண்டே அம்முனிவர் மைசூரிலிருந்தும் திருவரங்கத்துக்குத் திரும்பி வந்து முன்போல வைஷ்ணவ சமய வளர்ச்சி செய்து வந்தவர் இராமாநுஜ முனிவர்.

என்பது நன்கு பெறப்படுகின்றது. அபயனிறுதிக்காலம் 1118 என்பர். ஆனால், அவனது 50 வருஷச் சாஸனம் கிடைத்திருப்பதால் 1070-ல் பட்டம் பெற்ற அவன் 1120-ல் இறந்தவனென்பதே முடிவாகின்றது.

பூங்கோயில் நம்பி.

திருவாரூர்க் கமலாலயத்தின் முதற்பிராகாரத் தெற்குத் திருமதிலிற் கண்ட சாஸனமொன்று, அப்போதை விளங்கிய அரசனது 15-ம் ஆட்சி வருஷத்தில் அமைந்ததாகும். இதனில் அவ்வரசன் தன் மகன் வீரசோழ அநுக்கர்மேல் "வீராநுக்க விஜயம்" என்ற நூல் பாடிய பூங்கோயில் நம்பி என்ற புலவருக்குச் சிலநிலங்கள் இறையிலியாக விட்ட செய்தி காணப்படுகின்றது. வீரசோழன் என்பது, முதற் குலோத்துங்கன் மக்களுள் ஒருவனாய் வேங்கை நாடாண்ட அரசகுமாரனுக்கும், அக் குலோத்துங்கன் மாமன் வீரராஜேந்திரனுக்கும் உரிய பெயர்களாகும். தன் தந்தை காலத்தேயே யுத்த யாத்திரை நடத்தியவனாகச் சொல்லப் படுதலால் அபயன் மகனாக இவனைக் கருத இடமுண்டு. இவனைப் பற்றிய "வீராநுக்க விஜயம்" கிடைக்கக் கூடுமாயின் அக்கால நிலை பல தெரியலாகும்.

இவ்வபயனான குலோத்துங்கன் மகன் விக்ரமசோழனாவான். இவன் 1120 முதல் 1135 வரை ஆட்சி புரிந்தவன். இவன் ஆட்சியில்தான் கூத்தர் பிரசித்தம் பெற்றது. இச் சோழனது அவையில் அப்புலவர் முதன்முதல் தோன்றி அவன்மேல் "அரும்பதைத் தொள்ளாயிரம்" என்ற நூல் பாடியும், அவன் கொடுத்த சமத்திகட்கெல்லாம் தக்கபடி விடைவரப் பாடியும் தம் தமிழ்ப் பெரும் புலமையைத் தோற்றுவித்து அவனால் பெரும் பரிசளிக்கப்பெற்றும் பெருமை எய்தினர் என்பது தமிழ் நாவலர் சரிதையாலறியப்பட்டதாம். இவ் விக்ரமசோழன், இராமாநுஜ முனியிடத்து அன்பு மாதாவுங் காட்டியவன் என்று கோயிலொழுகு என்ற ஸ்ரீரங்க வரலாறு கூறும் சரித்திர நூல் கூறுகின்றது. காஞ்சீபுரம் ஸ்ரீவரத ராஜப்பெருமாள் கோயிலில் இவ் விக்கிரமனது 9-ம் வருஷத்துச் சாஸனமொன்று "எயிற் கோட்டத்து எயில் நாட்டுத் திருவத்தியூராழ்வாரைப் பாடியருளின ஸ்ரீ பூதத் தாழ்வாரும் ஸ்ரீ பொய்கையாழ்வாரும் பிறந்த திருக்கேட்டை அருளாளப் பெருமாள் புறப்

பட்டருளி (S.I.I. iii-p. 187) என்று கூறுகின்றது. ஆனால் அவ்வாழ்வார் இருவரும் அவதரித்த திருநக்ஷத்திரங்கள் முறையே திருவோணமும் அவிட்டமும் ஆகும் என்பது விக்ரமன் காலத்தில் இயற்றப்பட்ட நூலாகிய திவ்யசூரி சரிதத்தாலும் பிற குருபரம் பரைகளாலும் பிரசித்தமாகும். திருவாட்டைநாளென்றிருக்க வேண்டியது திருக்கேட்டைநாள் என்று தவறி எழுதப்பட்டிருகக வேண்டுமென்றே தோன்றுகின்றது. திருவாதவூரடிகள் பாடி யருளிய திருவாசகம் முதலிராஜராஜன் காலத்துல் விசேடமாக வழங்கியதென்பதற்கு யாதொரு சாஸனப் பிரமாணமுங் கிடையா திருப்பது வியப்பாகவுள்ளது. ஆனால். அவன் பேரன் வீர ராஜேந்திரன் (1063-70) சிம்மவிஷ்ணு சதுர்வேதிமங்கலத்தில் சில நிலங்களைத் தன் பெயரிட்டுத் திருவொற்றியூர்ச் சிவாலயத்தில் அறங்கள் சில நடத்துவதற்கும், திருவெம்பாவையும் திருப்பதிகங் களும் சந்நிதி முன்பு விண்ணப்பம் செய்தற்கும் நிபந்தஞ் செய்த செய்தி, மேற்படியூர்க் கோயிற் சாஸனமொன்று கூறுகின்றது. இது போலவே மேற்கூறிய விக்ரம சோழனது 17-ம் ஆட்சி வருஷத்தில் தொண்டைமண்டலத்து இரையனரையூர் (Elvanasur) ச் சிவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமைதோறும் திருச்சாழல் விண் ணப்பம் செய்யும்படி சில நிலங்கள் அச்சோழன் அளித்ததை மேற் படியூர்ச் சாஸனமொன்று கூறும். இவற்றால், முதலிராஜராஜன் காலத்துக்குப்பின் திருவாசகத்தின் பெருமை அரசர்களாலும் தமிழ் மக்களாலும் அறிந்து போற்றப்பட்டு வந்தமை தெரியலாம். "திருச்சிற்றம்பலமுடையான் சங்கரனான தென்னவன் பிரம ராயன்" என்று இக்காலத்தில் மக்கட்கு வாதவூரடிகள் பெயர் வழங்குவது சிதம்பர சாஸனமொன்றால் (S.I.I. iv, 36) அறியப்படுதலும் மேற்கூற்றுக்குச் சான்றாகும்.

பிங்கலந்தை.

இனி, இவ்விக்ரம சோழன் காலத்துச் சாஸனம் ஒன்று (1118-1135). குழித்தலைப் பிரதேசத்து மங்கவரத்துக் காணப்படுவதில்—பிங்கலந்தை தில்லைவிடங்கன் சகரகனாயகன் என்பவர் மேற்படி யூர்ச் சிவாலயத்தில் திருநுந்தாவிளக்கொன்று வைத்த செய்தி கூறுகின்றது. தமிழில் பிங்கலந்தை என்ற நிகண்டைப்பற்றி அறி யாதார் இல்லை. "பிங்கலர் முதலா நல்லோருரிச் சொல்" என்று நன்னூலார் கூறுவதால், அந்நிகண்டு, அவரது காலமான 13-ம் நூற் றாண்டுக்கும் முற்பட்டதென்பது தெளிவு. 1118-ல் பட்டம் பெற்ற விக்ரம சோழன் காலத்தில், பிங்கலந்தை என்பதைத் தம்

பெயராகக் கொண்டிருத்தல் கொண்டு, இத்தில்லை விடங்கர். அந்திகண்டியற்றியவர் போலும் என்று சங்கிக்கக்கூடியதே. ஆனால் பழமையானதொன்று என்பது அதன் உள்ளீடுகளால் கருதப்படுகின்றது. எனினும், அப் பிங்கலந்தையாசிரியர் வழியில் தோன்றியவராதல் பற்றித் தில்லைவிடங்கர்க்கு இக்குடிப் பெயர் வழங்கியிருத்தல் கூடியதே. ஆயின், பிங்கலநிகண்டின் வழக்கு 12-ம் நூற்றாண்டுக்கு முன்பே இருந்தமை தெரியலாம்.

கூத்தர்.

இவ் விக்ரமன் மகன் இரண்டாம் குலோத்துங்கன் ஆவன். (1136–1148) இவனுக்கு அநபாயன் என்ற பேரும் பிரசித்தமாகும். இவன், தன் தந்தை விக்ரமனுடன் 1123 முதல் 1135 வரை இளவரசனாகவும் 1136 முதல் 1148 வரை தனியரசனாகவும் ஆட்சி புரிந்து வந்தவனென்பது சாஸனங்களினின்று அறியப்படுகின்றது. இச் சோழனது இளமைக் காலத்துக் கூத்தர் இவனுக்குத் தமிழாசிரியராகவும், இவன் பட்டம் பெற்றபின் வாயிற் பெரும் புலவராகவும் விளங்கினர் என்பது தமிழ் நாவலர் சரிதையாலும், இச் சோழன் மேல் அவர் பாடிய பிள்ளைத் தமிழ் உலாக்களாலும் தெரிகின்றது. இவற்றுள் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் சில பாடல்களே இப்போது கிடைப்பன. உலாவில் இக் குலோத்துங்கனை அநபாயன் என்ற பெயரால் பலவிடங்களிலும் அப்புலவர் பெருமான் பாடுவர். இவ்வாறு சோழரது ஆஸ்தானத்தில் விளங்கிய இப்புலவர் செங்குந்த மரபினரென்பது பிரசித்தம். அபயன் காலத்தில் செயங்கொண்டார் விளங்கியவாறு அவர்க்குப் பின் தலைமுறைகளில் ஆஸ்தானப் புலவராய் விளங்கிய இக் கூத்தர், அவரது இணையற்ற கவித்திறமை பற்றிக் கவிச்சக்கரவர்த்தி என்றே வழங்கப் பெற்றனர். நண்பர் சோமசுந்தர தேசிகரவர்களால் கண்டு வெளியிடப் பெற்றுள்ளது. தஞ்சாவூர் ஜில்லா நன்னிலத் தாலுகா பூந்தோட்டத்துக்குப் பக்கத்துள்ள கூத்தனூரில் ஆற்றையடுத்துள்ள சரஸ்வதி கோயிற் பக்கத்து விக்ரகபீடமான பழைய ஆதாரசிலையொன்றிற் கண்டு அவர்கள் வெளியிட்ட சாஸனம் அடியில் வருமாறு:—

"ஸ்வஸ்தி ஸ்ரீ சரஸ்வதி தேவியை எழுந்தருளிவித்தார். இவ்வூர் நஞ்சை 20 காணியுடைய மலரியுடையார். இந்தக் கவிச் சக்ரவர்த்தி பேரனுர் கவிப் பெருமாளான வரத கூத்தர்" என்பது. இதனால் கூத்தனூரில் ஸரஸ்வதீ தேவியைப் பிரதிஷ்டித்தவர் கவிச் சக்கரவர்த்தியின் பேரன் ஆனந்தவரதகூத்தர் என்பது

தெரியலாம். "சரசுவதி தம்பலங் கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்த முதலியார்" என்று தமிழ் நாவலர் சரிதையிற் கூறப்படும் குறிப்பும் "ஆற்றங்கரையிற் கிழத்தி வாழியே" என்று தம் தக்கயாகப் பரணி முடிவில் தமிழ்க்கருள் புரிந்த கலைமகளைப் பற்றிக் கூத்தர் பாடும் வாழ்த்தும் "மலரிவரு கூத்தன்றன் வாக்கு" என்று தண்டியலங்கார மேற்கோட் செய்யுளில் கூத்தரது வரைப்பற்றிக் காணும் குறிப்பும் மேற்காட்டிய சாஸன விஷயங்களோடு மிகவும் இயைபுடையன வாயிருத்தல் அறியத்தக்கது. "கவிப்பெருமாளான வரத கூத்தர்' என இறுதியில் வரும் தொடர் கவிப்பெருமாள் ஆனந்த வரத கூத்தர் என்று படிக்கும்படி உள்ளதை தேசிகாவர்களுக்கு நான் தெரிவித்திருக்கிறேன்." "நிறைந்தவானந்தக் கூத்தராடிய தில்லை" (409), "அந்தமிலா வானந்தப் பெருங் கூத்தர்" (166) எனச் சேக்கிழார் கூறுதலால் இப்பெயர் தில்லை நடராஜமூர்த்திக்குரியது என்பது தெரியலாம். "இந்தக் கவிச் சக்ரவர்த்திகள்" என்பது சிந்தக் கவிச்சக்ரவர்த்திகள் என்று திருத்திப் படித்தற்குரியது. 'சந்தக்கவி' யைச் சிந்தக்கவி என்பது அக்கால வழக்கே, 'வாசு தேவனார் சந்தமும்' என்பதை 'வாசு. தேவனார் சிந்தமும்' என்று யாப்பருங்கல விருத்தியுங் கூறும். பாடுதற்கரிய சந்தச் செய்யுள் பாடுவதில், கூத்தர் பெருந்திறமை வாய்ந்தவர் என்பது, அவர் தனிப் பாடல்களால் அறியலாம். "சொன்ன சந்தக் கவியாவருஞ்சொல்லுவர்" என்று வழங்கும் தனிப்பாட்டும் சந்தக் கவித்திறமை கூத்தர்க்கே அக்காலத்துச் சிறந்திருந்த தென்பதைக் குறிப்பிக்க வல்லது. இவ்வாறு கூத்தனார்ச் சாஸனத்தால், சந்தக் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தருடைய பேரனார் ஆனந்தவரத கூத்தரென்பதும், இவர்க்குக் கவிப்பெருமாள் என்ற சிறப்புப் பெயரிருந்தலால் இவரும் பெரும் புலவராயிருந்தவரென்பதும், தம் பாட்டனார் வணங்கி வந்த ஆற்றங்கரைக் கிழத்தியாகிய நாமகளுக்குப் புதிய கோயில் கட்டிப் பிரதிஷ்டித்தவர் என்பதும் தெரியவருகின்றன. திருவள்ளுவர் முப்பாலுக்கு உரையிட்ட ஒன்பதின்மருள் கவிப் பெருமாளும் ஒருவரென்பது "தருமர் மணக்குடவர்" என்ற வெண்பாவால் அறிஞர் அறிந்ததாம். இவ்வுரைகாரரும் கூத்தர் பேரனாரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. நன்னிலந் தாலூகா ஆலங்குடி சிவாலயத்தே சதாப்தம் 1186-ல் (= 1264) கண்ட சாஸனமொன்றில், "கூத்தன் சக்ரவர்த்திப் பெருமானனை நடுவிருக்கை" என்று காணப்படுந் தொடரால், (S.I.I. VI, 179) இக்கவிச் சக்ரவர்த்தியின் பெயரைப் பிற்காலத்து மக்கள் கௌரவித்து வந்தனரென்பது

தெரியலாம். 16-ம் நூற்றுண்டிலும் ஒட்டக் கூத்தன் என்ற பெயருள்ள புலவனொருவன் கவிபாடி வந்ததைக் கேட்டு—தத்துவப் பிரகாசர் என்ற புலமைப் பெரியார்—வெறுத்து—

"பறியரோ நின்வாயிற் பல்லதனைப் பாவோர் முறியாரோ நின்முதுகின் முள்ளைச்—சிறியவொரு மட்டப்பேர் போதாதோ வாக்கிதுவே யானக்கால் ஒட்டக்கூத் தன்று னுனக்கு" என்று பாடியதாகத் தமிழ் நாவலர் சரிதை கூறும். இதனுல் கூத்தரிடத்தும் வாக்கிலும் முன்னோர் வைத்திருந்த அபிமானம் இத்தகையதென்பது விளங்கத் தடையில்லை.

இக்கவிச் சக்ரவர்த்தி, புவிச்சக்ரவர்த்தியும் தம் மாணக்கனும் அனபாயன் என்றழைக்கப்படுபவனுமான இக்குலோத்துங்கன் செய்திகள் சிலவற்றைத் தம் உலாக்களிலும் தக்கயாகப் பரணியிலும் கூறுகின்றுர். அவற்றுள், இச் சோழன் தில்லைச் சிற்றம்பலம் பேரம்பலங்களைப் பொன்மயமாக்கியதும், அந்நகர்த் திருவீதிகளை அணிவிளக்கியதும், கோபுர மண்டபங்களை அங்குக் கட்டியதும் தில்லை முற்றத்திருந்த திருமால் கோயிலைப் பெயர்த்து, மன்றுக் கிடங்கண்டதும் சிறந்தவையாகும். இதனுல், சைவப் பற்று மிக்கவனுய்ப் பழமையான தில்லையம்பலத்தை அடுத்திருந்த திருமால் கோயிலையும் அழித்தவன் இவன் என்பது தெரியலாம். இத்தகைய பரம சைவனுன சோழன் காலமே, புலவர் பெருமானுன சேக்கிழார்க்கும் உரியதாகும்.

சேக்கிழார்.

சிவனடியார்களான நாயன்மார்கள் வரலாறுகளைச் சொற்பொருணயங்கள் நிரம்பவும், பத்திச்சுவை சொட்டச் சொட்டவும் பாடிப் பெரியபுராணம் என்ற அரிய நூலை இயற்றிய பெருமை இவரதே என்று நான் கூறவேண்டியதில்லை. இந்நூலுள் தம் காலத்துச் சோழனது சைவாபிமானத்தைப் பற்றிச் சிறப்பிக்கும் இடங்களிலெல்லாம் அநபாயன் என்ற பெயரால் தவருது கூறுதல் காணலாம். அவற்றுள்—

"தில்லைத் திருவெல்லை, பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு", "பேரம்பலம் செய்யதூய பொன்னணி சோழன்", "தில்லை நகர் மணிவீதி யணிவிளக்குஞ் சென்னி" என்பவற்றுல்

அம்பலங்களையும். வீதிகளையும் பொன்மயமாக்கி அலங்கரித்தவன் இச்சோழன் என்று சேக்கிழார் கூறுஞ் செயல்கள்—

"சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமும் மற்றும்
பொன்னிற் குயிற்றி"

"திருவீதி யீரிரண்டுந் தேவர்கோன் மூதூர்ப்
பெருவீதி நாணப் பெருக்கி"

என்று கூத்தர் கூறுவனவற்றோடு ஒத்தனவைகளாயிருத்தல் அறியதக்கது. சேக்கிழார் சோழனிடம் அமைச்சராய் இருந்தவரென்பதும், அருண்மொழித்தேவர் என்ற இயற்பெயரும், உத்தம சோழப் பல்லவன் என்று அரசன் கொடுத்த பட்டப் பெயரும் உடையராயிருந்தவர் என்பதும், சிவபக்தியும், கவி வன்மையும் இவர்பால் நிரம்பியிருந்தமையால் நாயன்மார் சரித்திரங்களை நூலாகப்பாடியுதவும்படி விரும்பிய தம்மரசன் கருத்துக்கிணங்க, இவர் அப்புராணத்தை ஓர் ஆண்டில் முடித்துத் தில்லையம்பலத்தே அரசரும் அறிஞருங் கூடியிருக்க அரங்கேற்றினர் என்பதும், முடிவில் சிவத்தொண்டு புரிய விரும்பி தம் அமைச்சுத் தொழிலினின்றும் இவர்விலக, அரசன் இவர் வகித்து வந்த மந்திரிப்பதவியை, இவரிளைய சகோதரர் பாலறுவாயர்க்குத் தொண்டைமான் என்ற பட்டத்துடன் அளித்தனன் என்பதும் உமாபதி சிவாசாரியர்பாடிய சேக்கிழார் புராணத்தால் அறியப்பட்டவை.

தஞ்சாவூர் மாயவரந் தாலூகாவில், திருக்கடவூர் வீரட்டர் கோயிலிற்கண்ட சாஸனமொன்று, திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்கனது 4-ம் ஆட்சி வருஷத்து அமைந்ததாக உள்ளது. அதனில், "தொண்டைமண்டலத்துக் குன்றத்தூர்ச் சேக்கிழான் அம்மையப்பன் பராந்தகனை கரிகால சோழப் பல்லவரையன்" என்பான் ஷை கோயிற்குச் சில பூமிகள் அளித்த செய்தி காணப்படுகின்றது. இவ்வாறு சாஸனமிட்ட பல்லவரையன், பெரிய புராண ஆசிரியர்தாமோ என்று குன்றத்தூர் என ஊரும், சேக்கிழான் எனக்குடியும், பல்லவராயன் எனப் பட்டத்தின் ஒரு பகுதியும் அரசனது கால வொற்றுமையும் உள்ளமைபற்றி ஆசங்கை கொள்வர் சாஸனவறிஞர். ஆனால், அருள்மொழித்தேவர் என்ற இயற்பெயரும் உத்தமசோழன் என்ற பட்டப் பெயரும் பெரியபுராண ஆசிரியர்க்குரியனவாக வேறுபட உமாபதி சிவாசாரியர் பாடுதலால் இவருடன் சாஸனச் சேக்கிழாரை ஒற்றுமைப் படுத்துவது உறுதிபெற்றதாகாது. ஒருகால்,

பெரிய புராண ஆசிரியர்க்கு நெருங்கிய ஞாதியாகச் சாஸனங் கூறுமவர். அவர்காலத்தே சோழவதிகாரிகளுள் ஒருவராக இருந்திருத்தல் கூடியதே, இது இவ்வாறாயினும், நம் சேக்கிழார் இளவலான பாலறுவாயரைப் பற்றிய சாஸனமொன்று வேறு காணப்படுதல் இங்கே குறிப்பிடத்தகும்.

தஞ்சை ஜில்லா மன்னார்குடித் தாலூகா கோட்டூர்ச் சிவன் கோயிலிற் கண்ட சாஸன மொன்று, திரிபுவனசக்கர வர்த்திகள் குலோத்துங்கனது 2-ம் ஆட்சி வருஷத்தில் அமைந்ததாக உள்ளது. அதிலில், மேற்படி கோயிற்குத் திருநுந்தா விளக்கொன்று வைப்பதற்காக "தொண்டைமண்டலத்து—குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலறுவாயன் களப்பாள ராயர் சில பொற் காசுகள் அளித்த செய்தி கூறப்படுகின்றது. இப்பாலறுவாயரைப் பெரிய புராண வாசிரியரது இளவலாகக் கூறுவது பொருந்தும் என்னெனில், ஊர்குலங்களின் பெயர்களுங் காலமும் சேக்கிழார் புராணங் கூறுமாறு ஒப்ப அமைந்திருத்தலால் என்க. இச் சாஸன காலத்துச் சோழன் 1178-ல் பட்டம் பெற்ற மூன்றாங் குலோத்துங்கனாவான். ஆகவே, அநபாயன் ஆட்சியாகிய 1136-1146 —தொடங்கி இம்மூன்றாங் குலோத்துங்கனது 2-ம் ஆட்சி வருஷம் வரை அதாவது 1180-வரை இப்பாலறுவாயர் வாழ்ந்தவர் என்பது பெறப்படத் தடையில்லை. அநபாயனை இரண்டாங் குலோத்துங்கனது 12-ம் வருஷத்தடையந்தனவும் தொண்டை நாட்டுத் திருவானைக் கோயில் களத்தூர் என்றவிடங்களிற்(I.M.P. 326, 389) காணப்படுவனவுமான சாஸனங்களில் சில பூமிகளை குலோத்துங்க சோழன் திருநீற்றுச் சோழ நல்லூர் என்ற தன்பெயரிட்டுத் திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் என்ற பட்டம் பெற்ற இரண்டாங் குலோத்துங்கன் மேற்படி ஊர்களிலுள்ள சிவாலயங்கட்கு அளிக்கும்படி தன் அமைச்சனை தொண்டைமானுக்குக் கட்டளை பிறப்பித்தான் என்றும், இக்கட்டளைகள் எழுதிய திருமந்திர ஓலை அநபாய மூவேந்த வேளான் என்றும் கூறுகின்றன. சேக்கிழார் அமைச்சுத் தொழிலினின்றும் விலகியபின், அவரிளவல் பாலறுவாயர் தொண்டைமான் என்ற பட்டத்துடன் அப்பதவி வகித்தவர் என்பதை மேலே கூறினேன். இத்தொண்டைமானாகிய பாலறுவாயரே அநபாயனை தன்னரசன் கட்டளையை ஏற்ற தொண்டைமான் என்று கருதத் தடையில்லையன்றோ? இவ்வனபாயன் 12 வருஷமே ஆட்சி புரிந்தவனாதலில் அவனாட்சியிற் கட்டளையிடப் பெற்ற தொண்டைமான் சேக்கிழார் தம்பியேயாதல் பொருத்தமாதலும் காணலாம்.

ஒருசிலர் சேக்கிழார் கூறும் அநபாயன் முதற்குலோத்துங்கன் ஆகவேண்டுமென்று கருதி எழுதி வருகின்றனர். இது சிறிதும் பொருந்தாது. முதற் குலோத்துங்கனுக்கு அநபாயன் என்ற பெயர்வழக்கு உண்டென்பதற்கு யாதொரு சாஸன வாதாரவும் கிடையாது. சேக்கிழார் அநபாயன் என்ற பெயர் தங்காலத்து அரசனுக்குச் சிறந்தது என்பதைக் காட்டவே தாம் அவனைப் பற்றிக் கூறிய பத்திடங்களினும் அப்பெயரையிட்டுத் தவறாது கூறுகின்றார். அது முதற் குலோத்துங்கனுக்கு உரியதாயின், செயங்கொண்டார் அத்தகைய சிறப்பியற் பெயரை அபயனுக்குத் தம்பரணியில் வழங்காமற் போகார் என்பது உறுதி. கூத்தரும், இரண்டாங் குலோத்துங்கனையே அநபாயன் என்ற பெயரால் பல்லிடங்களிலும் கூறுதல் காணலாம். திருவாரூரில் இவனது 7-ம் ஆண்டில் அமைந்த சாஸனமும், (I.M.P. 1349) 'பூமன்னு பதுமம்' என்ற இவனது மெய்க்கீர்த்தியைத் தலைப்பிற் கொண்டு இக் குலோத்துங்கனே அநபாயன் என்று குறிப்பிடுகின்றது.

"வெண்குடை யனபாயன் செய்யகோ லபயன்" (9)
"சென்னி யபயன் குலோத்துங்க சோழனனபாயன்"

என்றவிடங்களில் சேக்கிழார் அபயன் என்ற பெயர் வரப் யாடுதலும் பல்லாவரமாகிய திரிசூலசாஸனத்தில் திருநீற்றுச் சோழன் என்ற பெயர் முதற்குலோத்துங்கனான அபயனுக்குக் காணப்படுதலுமே அவ்வபயன் காலத்தவரே பெரியபுராண ஆசிரியர் என்று சிலர் கருதற்கு முக்கிய காரணங்களாகும். அபயன் என்ற பெயர் முதற்குலோத்துங்கன் தனக்குச் சிறப்பாகக் கொண்டதாயினும், பொதுவாக அது சோழர்க்கு வழங்குவதேயாம். இவன் முன்னோனை திருமுறை கண்ட சோழன் ராஜராஜ அபயகுலசேகரன் என்று கூறப்படுதல் முன்பே கூறப்பட்டது. இவன் அபயன் மாமனான வீரராஜேந்திரனை "குந்தளரைக் கூடற் சங்கமத்து வென்ற கோனபயன்" என்றார் செயங்கொண்டாரும், அபயன் என்பது சோழர் குலப்பெயராக நிகண்டுகளும் படிக்கின்றன. ஆதலின், கூத்தரும் இரண்டாங் குலோத்துங்கனை "ஆதிப்பெருமானபாயன்" "அபயன் மூரனைகையும்" என்று அச்சோழனுலாவிற் பாடுதல் போலவே சேக்கிழாரும் கூறினர் என்பதன்றிப் பேரனைப் பாட்டனாகக் கருதல் தகாது.

திருநீற்றுச்சோழன் என்ற பெயர் அநபாயனுக்கு உண்டென்பது தொண்டைநாட்டுத் திருவானைக் கோயிலிற் கண்ட சாஸனத்தால் தெரியலாம். பல்லாவரத்துக் கல்வெட்டொன்றும் (I.M.P. 429)

இப்பெயர் முதற்குலோத்துங்கனுக்கும் உண்டென்று சாஸன பரிசோதகர் எழுத்தினின்று தெரிகின்றது. ஆனால் மூலசாஸனம் நமக்குக் கிடைக்கவில்லை. அச்சாஸன விஷயம் அமைந்துள்ள மாதிரியை நோக்குமிடத்து அவ்விஷயத்தை வெளியிட்டவர் தவறாகவேனும் அல்லது அதனை ஆதியில் அமைத்தவர் மயங்கி அரசனை மாற்றியதாகவேனும் இருத்தல் வேண்டுமென்றே சொல்லும்படி உள்ளது. இத்தவறுகள் நிகழ்வதுண்டென்பதற்கு மேற்படி தொண்டை நாட்டுத் தின்னேரி (திரையனேரி)ச் சாஸன மொன்று திருநீற்றுச் சோழன் என்று பெயருடைய குலோத்துங்கனைப் பரகேசரிவர்மன் என்று கூறுவதே சான்றாகும். (I.M.P. 374) பாட்டனும் பேரனுமான குலோத்துங்கரிருவரும் இராஜகேசரிவர்மர்களென்பது பிரசித்தம். என் அபிப்பிராயத்தில், பல்லாவர சாஸன விஷயத்தை அறிக்கையிட்டவர்கள் குலோத்துங்கன் என்ற பெயரைக்கொண்டு சுங்கந்தவிர்த்தவன் ஆவன் என்று கருதி எழுதியும் அரசாட்சி வருஷம் thirteenth என்று இடவேண்டியதை thirtyninth என்று தவறுதலாகவும் வெளியிட்டவர் போலவே தோற்றுகின்றது. இது ஊகமேயாதலால் மேற்படி சாஸனம் வெளிவந்தால்தான் உண்மை தெரியக்கூடும். இவ்விஷயத்தை அவர்கள் வெளியிட வேண்டுகிறேன். எவ்வகையினும், அனபாயன், திருநீற்றுச் சோழன் என்பவை கூத்தரும் சேக்கிழாரும் திருவாரூர்ச் சாஸனமும் ஒத்துக் கூறுமாறு பரமசைவனும், தில்லைச்சிவபிரானிடத்து பெரும்பத்தி பூண்டிருந்தவனுமாகிய இரண்டாம் குலோத்துங்கனுக் குரியவை என்பதில் சிறிதும் ஐயமில்லை. திருவாரூர்ச் சாஸனத்தில், இவ்வநபாயன், நடேசர் திருவடித் தாமரைகட்கு ஒருவண்டு போன்றவனென்று தன்னைக் கூறிக் கொள்வதோடு திருவாரூர்க் கமலாலயத்துள்ள திருமுறை நாயன்மார்மூவர் பூஜைக்கும் பூமிகவர்ண முதலியவை அளித்துமுள்ள செய்தி தெரியலாம். (S.I.I. II 154) இதனுள் சுந்தரமூர்த்திகளுடைய தாயாரகிய இசை ஞானியார் சைவாசாரியரும் கௌதம கோத்திரத்தவருமான ஞானசிவாசாரியர் மரபில், கமலாபுரத்து உதித்தவர் என்று அநபாயன் குறிப்பிடுதல் அறியத்தக்கது.

இராமாநுஜரும் அனபாயனும்.

இவ்வனபாயன் தன் தந்தையுடன் இளவரசனாகவும் அவன் சென்றபின் தனியரசனாகவும் ஆட்சிபுரிந்தவன் என்றும் இவன் பாட்டனை அபயனே வைஷ்ணவாசாரியத் தலைவரான ராமாநுஜ

முனிவர்க்கு இடுக்கண் விளைத்தவனென்றும் மேலே கூறினேன். பாட்டனான அபயன் 1118-ல் இறந்ததும், அவ்வருஷமே அவ்வாசாரியர் மேல்நாட்டிலிருந்தும் திரும்பித் திருவரங்கப்பதி அடைந்து முன்போல மதப்பிரசாரம் செய்து கொண்டு வாழ்ந்தனர். இங்ஙனம், நடந்து 9-வருஷங்கட்கெல்லாம் அதாவது 1127-ல் சைவப்பற்று மிக்குள்ள இவ்வனபாயன் தில்லையம்பலங்கட்கு இடநிரப்பிப் புதுப்பிக்க வேண்டி, பக்கத்திருந்த பழைய திருமால் கோயிலை இடித்தும் அதன்கண் கிடந்த கோலத்தராயிருந்த திருமால் மூர்த்தத்தைக் கடலிற் கொண்டு போய்ப் போட்டும் அம்பலமுன்றிலை அலங்கரிப்பானாயினான். இவ்வாறு தில்லைக் கோயில் இடிபட்டதும் திருமால் விக்ரகம் கடலிற் போடப்பட்டதுமான வரலாறு, தமிழ்நூல்களிலும், வைஷ்ணவ குருபாம்பரைகளிலும், ஒன்றுபோற் கூறப்படுதலோடு சாஸனங்களிலும் குறிப்பிக்கப்படுகின்றது. கூத்தரும்—இவ்வனபாயன் மகன் இராசராசன் மேற்பாடிய உலாவில்—(அம்பலத்தை)

"பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்தும்
முன்னைக் கடலகத்தின் மூழ்குவித்த—சென்னி" என்றும்

தக்கயாகப் பரணியில் அவ்விராசராசனையே—

"முன்றிற் கிடந்த கருங்கடல் போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத் தில்லை
மன்றுக் கிடங்கண்ட கொண்டல் பெற்ற
மரகத மேருவை வாழ்த்தினவே" என்றும் பாடுவர்.

இவற்றுட் பின்பாட்டிலே தில்லையம்பல முற்றத்தில் கோயில் கொண்டிருந்த கருங்கடலை (அதாவது திருமாலை) அவரது பழைய ஸ்தானமான கடலிலே புகும்படி செய்து தில்லைமன்னுக்கு இடங்கண்டவன் அனபாயன் என்று கவிசமத்காரம் பெறப் பாடுதல் காணலாம். சேக்கிழாரும்—எறிபத்த நாயனார் சரித்திரத்தில் இவ்வனபாயனைப் புகழுமிடத்தே—

"பொன்மலைப் புலிவென் றோங்கப் புதுமலை யிடித்துப்
போற்றும்
அந்நெறி வழியே யாக வயல்வழி யடைத்த சோழன்"

என்று பாடுகின்றார். பிதிர் போல அவ்வாசிரியர் கூறும் இத்தொடரின் உள்ளீடான பொருள் ஆராய்ந்து அறிதற்கு உரியதாகும். "பொன்மலைப் புலிவென்றோங்க" என்றது "சோழர்க்குரிய புலிக்கொடியானது மேருவில் வெற்றிக் குறியாக விளங்க"

என்ற பொருள் படுவதாயினும், இஃது, அனபாயனது செயலாகக் கூறப்படுவதற்கும் அடுத்துவரும் தொடருக்கும் ஏற்ப வேறொரு தொனிப் பொருளையும் கொண்டதாகும். அஃதாவது, பொன்மலை போன்ற கனகசபை அல்லது கனக கூடத்து உள்ள சிவபிரானுக்கு வெற்றியுண்டாம்படி என்பதாம். பொன்னம்பலத்திற்குப் பொலங் கோட்டு மாமேருளவக் கூத்தர் உவமை கூறித் தம் உலாவிற் பாடுதலும் ஒப்பிடத்தக்கது. புலியூரார் ஆதலின், அவ்வூர்ச் சிவபிரானைப் "பொன்மலைப்புலி" என்று உபசரித்தார். "எழிலரா சிராச சிங்கத்தை யிராமேச்சுரத்தெம் மெழிலேற்றை" என்று இவ்வாறு கூறுவர் முன்னோர். இனிப் 'புதுமலையிடித்து' என்பதிற் புதுமலை என்றது சித்ரகூடம் என்ற திருமால் கோயிலையாம். சித்திரம்-புதுமை. "சித்திரமிங் கிதுவொப்ப தெங்குண்டு" என்றார் கம்பரும். மலைச் சிகரத்திற்கு வழங்கும் கூடம் என்ற பெயர் ஈண்டு மலையைக் குறிப்பதாயிற்று. ஆகவே கனக கூடமாகிய பொன்னம்பலச் சிவபிரானுக்குச் செய மூண்டாம்படி, சித்திர கூடத்தை இடித்து என்பது பெறப்படும். பொதுமலை என்பது பாடமாயின் பொதுவிலிருந்தமலை சித்ர கூடத்தை என்று பொருள்படும். இவ்வாறு இடித்தது எதற்கு என்பதைப் "போற்றுமந் நெறிவழியே யாக" என்பதனாற் குறிக்கின்றார்—சேக்கிழார். அஃதாவது வணங்குதற்குச் செல்லும் வழி ஒன்றாதற் பொருட்டு என்பதாம். ஒரு கோயிலினுள் இரு தெய்வங்களை வழிபடுதற்கு அமைந்த இரண்டு வழிகளை நீக்கி, ஒருதெய்வமும் ஒரு வழியுமே அமைய என்பது கருத்து. 'அயல்வழியடைத்த' என்பதனால், சித்திரகூடத் திருமாலை வழிபடுவோர் செல்லுதற் கென்று வேறு வாயிலும் வழியும் இருந்தன என்பதும் அவை அடைக்கப்பட்டமையும் பெறப்படும். "போற்றும் அந்நெறி வழியேயாக" என்றும் பிரித்து யாவரும் சிவபிரானை வணங்குதற்கு அமைந்த மார்க்கம் ஒன்றாக எனப் பொருள் கொள்ளினுமாம். இவ்வாறு, அனபாயன் தில்லைத் திருச் சித்திரகூடத்தை இடித்து அதற்குச் செல்லுதற்கமைந்த வாயிலையும் அடைத்து, யாவரும் கனக சபைக்கு நேரிற் சென்று வழிபடுதற் குரிய ஓரேவழியை உண்டாக்கியவன் என்பதைச் சேக்கிழார் குறிப்பிற் புலப்பட வைத்துப் பாடுகின்றார் என்பது அறியத் தக்கது. நான் கூறிய இப்பொருள்கள் அன்றிப் 'புதுமலையிடித்த' என்பதற்கும் "போற்று மந்நெறி வழியே யாக" என்பதற்கும் அனபாயனுக் கேற்ற வேறு சரித்திரப் பொருள் இல்லை என்பது தெரியலாம்.

இவ்வாறு புராதனமான திருச்சித்திரகூடம் இடிபட்ட செய்தியையே இராமாநுஜ திவ்யசூரி சரிதை என்ற சரித்திர நூலும் கூறுகின்றது. இதுபற்றி அந்நூலில், உள்ள வெண்பா வொன்று சில சீர்களிடைவிட்டுப் பதிக்கப்பட்டுளதாயினும் சரித்திரவுண்மைக்கு ஏற்றதேயாகும். மோனையெதுகைகட்கு இயைய அவ்வெண்பாவை அடியில் வருமாறு கொள்ளலாம்.

> "அம்பொற் குடைச்சகா ளுயிரத்
> தொன்பதாம் வருடத்துத்—தென்பால்
> சென்னி குலோத்துங்கன் சித்திரகூடத்(திரு) மால்
> தன்னை யலையெறிநாள் தான்" என்பதாம்.

இதனுட் கண்ட சகாப்த எண்ணில் வேறுசில எழுத்துக்கள் விடப் பட்டிருத்தலால், அவ்வருஷம் இன்னதென்பது துணியக்கூடவில்லை. இராமாநுஜமுனிவர் மேல்நாட்டினின்றுந் திரும்பிவந்த பிற்காலத் தில்தான் அஃதாவது அபயன் இறந்த 1120-க்குப் பின்பே—இச் சித்திரகூட அழிவு நிகழ்ந்த தென்றும், இவ்வாறழித்தவன் சென்னி குலோத்துங்கன் என்றும் பின்பழகிய சீயர் குருபரம்பரையும் (பக்-168) மேற்படி சரிதை நூலும் கூறுகின்றன. இதனாலும் மேற்குறித்த கூத்தர் சேக்கிழார் கூற்றுக்களாலும் அக் குலோத் துங்கன் அபயனல்லன் என்பது வெளிப்படையாம். ஆகவே, இரண்டாங் குலோத்துங்கனை இவ்வனபாயன் தன் தந்தை யுடன் இளவரசனாய் ஆட்சிபுரியத் தொடங்கிய காலமான 1125-க்குப் பின்புதான் தில்லை மன்றுக்கு அவன் இடங்கண்ட வனாதல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. அதுவும் 1137-க்குப் பின் நடந்திருக்க முடியாது. ஏனெனில் இராமாநுஜ முனிவர் பரமபதமடைந்த காலம் அதுவேயாம். அம்முனிவர் சித்திர கூடவழிவு கேட்டுத் திருப்பதியில் தில்லைக் கோவிந்த ராஜனைப் பிரதிஷ்டித்தவர் என்பது நூல்களிலும் வழக்கிலும் கண்ட பிரசித்தச் செய்தியாகும். அதனால் 1125 முதல் 1137-க்குள் அக் கோயிலினழிவு நேர்ந்ததென்பது முடிவாகின்றது. இம் முடிவை உறுதிப்படுத்தும் மற்றொரு சிறந்த சான்றுங் கூறுவேன்.

சிதம்பரம் நடராஜ சந்நிதியின் முதற்பிராகாரத்துக் கிழக்குத் திருமதிலில் உள்ள சாஸனமொன்றால் (I.M.P. P 132) விஜய நகர வேந்தரான அச்சுததேவ மகாராஜா என்பவர், பெரும்பற்றப் புலியூர்த் தில்லைக் கோவிந்த ராஜப் பெருமாளை முன்னிருந்த நிலைமையில் புதியதாகப் பிரதிஷ்டை செய்விக்கக்கருதி சகவருஷம் 1461 ஷு விஷு மாஸம் 14 (கி.பி. 1539, மே மீ 31) கோயில்

முதலியன கட்டிப் பிரதிஷ்டித்தும் 500 பொன்னும் நான்கு கிராமங்களும் அளித்து வேண்டிய நிபந்தங்களமைத்தும் போந்த விஷயம் வரையப்பட்டுள்ளது. இதனால் 12-ம் நூற்றாண்டில் புனருத்தாரணம் செய்யப்படலாயிற்று என்பது விளக்கமாம்.

மேல் ராமானுஜரது வியோக காலத்துக்கு முன்னும் அனபாயன் இளவரசாட்சி தொடங்கிய பின்னும் (1125-1137-க்குள்) மேற்படி கோயிலின் அழிவுகாலம் என்று கூறினேன். இனி, இராமானுஜார்ய திவ்ய சரிதையில் காணப்படுதல் இங்கு அறியத்தக்கதாம்.

" நற்றிருவா ருந்தில்லை நாராய ணப்பெருமான்
சித்ரமணிப் பொற்கூடஞ் சேருநாள்—சத்தியமே
நானூற்றின் மேல்வருடம் நான்மூன்று சென்றதற்பின்
வானோர் தொழவாழ்வர் வந்து "

என்பதே.

" சித்திர கூடத்துத் திருமால் தம் முன் ஸ்தானத்தை அடைவது சத்தியமே. இன்றைக்கு 412-ம் ஆண்டில் தேவர்கள் போற்றும்படி முன்போலத் தில்லையில் கோயில் கொள்வர் " என்பது இப்பாடலின் பொழிப்பு. இப்பாடல் சித்திர கூடம் அழிந்தபோது, ராமானுஜ முனிவர் கூறியதாக, அவர் சரித்திர நூல் கூறும். ஆயினும், அப் பெருமாள் பிரதிஷ்டையான காலத்தில் இருந்த ஒருவர், முன் சித்ர கூடம் அழிபட்ட காலத்திலிருந்து கணக்கிட்டு 412 வருஷங்கட்கு பின்பு அப்பெருமாள் பிரதிஷ்டையாவர் என்று இராமானுஜர் கூற்றாகக் கொண்டு கூறியதென்று சரித்திரவுண்மைக் கேற்ப நாம் கொள்ளத் தடையில்லை. மேலே கூறியது சாஸனப்படி விஜயநகர் வேந்தரால் புனருத்தாரணஞ் செய்து பிரதிஷ்டையான 1539-ம் ஆண்டிலிருந்து இந்த 412 ஆண்டுகளைக் கூட்டினால், 1127-ம் ஆண்டு நமக்குக் கிடைக்கின்றது. இக்காலம் முன்கூறியபடி 1125-1137-க்கு இடைப்பட்டதாக அமைதலோடு அனபாயன் இளவரசனாய் ஆளத் தொடங்கிய 2-ம் ஆண்டில் சித்ரகூட அழிவு அவனால் ஏற்பட்டது என்ற உண்மைச் செய்தியை ஆச்சரியமாக விளக்குவதாகவும் இருத்தல் அறியலாம். பிரபந்நாமிருதம் என்ற வடமொழிச் சரித்திரநூல் தில்லையில் நடந்த இப்புனப்பிரதிஷ்டை, மகாசாரியர் என்ற தொட்டாசாரியாது தூண்டுதலாலும், சந்திரகிரி அரசரான ராமராயரது ஆதரவாலும் நடந்தேறியது என்று கூறுகிறது. அச்சுத ராயரை இவ்வாறு அந்நூல் மாற்றிக் கூறினும் விஜயநகர வேந்தர் தொடர்புடையவரால் இது நடத்தப்பட்டதென்றே அது கூறுதலால், சிதம்பர சாஸனத்தின் உண்மை அந்நூலாலும்

ஒருபடியாக ஆதரிக்கப்படுவதே எனலாம். இதனால், இராமநு ஜார்ய சரிதத்தில் "அம்பொற் குடைச்சகா ஞயிரத் தொன்பான் வருஷத்து" என்று காணப்பட்ட வெண்பாத் தொடர்— "அம்பொற் குடைச்சகா ஞயிரத்தி ஞேடைம்பத் தொன்பான் வருஷத்து" என்றவாறு ஆதியில் இருந்ததே மாறியதாக வேண்டும் என்பதும் பெறப்படுகின்றது. அந்நூலின் பழைய பிரதிகளைக் கொண்டு இப்பாடத்தினுண்மை தெளியத்தக்கது. இங்ஙனம் 16-ம் நூற்றூண்டில் ஸ்தாபிக்கப்பட்ட தில்லைச் சித்ர கூடத்துக்கு (I.M.P. p. 131) கோபுர விமான மண்டபங்கள் கட்டிக் கிராமங்களும் 17-ம் நூற்றூண்டில் அளித்துச் சிறப்பித்தவர் விஜய நகர வேந்தரான மகாமண்டலேஸ்வர ஸ்ரீரங்கதேவ மகா ராயர் என்பவர் என்று, மேற்படி நடராஜ சந்நிதியிலுள்ள மற்றெரு சாஸனம் தெரிவிக்கின்றது.

இத்தில்லைத் திருமால் கோயில் சித்திர கூடம் என முன்பு வழங்கிவந்ததென்பது, ஆழ்வார்கள் பாசுரங்களாலும் சாஸனங் களாலும் தெரியலாகும். சித்திரகூடம் தெற்றியம்பலம் என்பதற்கு மேடையிட மாயமைந்த அம்பலம் என்பது பொருளாம். திருவெறும்பூர்ச் சாஸனமொன்று அவ்வூர்ச்சபை யார் திருச்சித்ர கூடத்திலிருந்து நிபந்தஞ் செய்தனர் என்று கூறுவதனுலும் (I.M.P. p. 1600) சித்ரகூடம் என்பது மேடையுள்ள இடத்தமைந்த பொதுவிடம் என்ற பொருளில் முற்காலத்து வழங்கியதென்பது பெறப்படும். திருத்தெற்றியம்பலம் எனத் திருமாற்கு வேறோர் கோயிலும் சோனட்டுள்ளமை ஒப்பிடத் தக்கது. தில்லைக் கோயினுள் தரையிடமாகச் சிவபிரானுக்கும் மேட்டிடமாகத் திருமாலுக்கும் முறையே சிற்றம்பலந் தெற்றியம் பலங்கள் பழைமையாக உள்ளனவாகும். "பைம்பொன்னு முத்து மணியுங் கொணர்ந்து படைமன்னவன் பல்லவர் கோன் பணிந்த . . தில்லைச் திருச்சித்ரகூடம்" என்று திருமங்கை யாழ்வார் பாடுவர். இவ்வாறே அவ்வாழ்வார் "பல்லவர் கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்" என்று பல்லவ மல்லனைப் பாடுதலால், பரமவைஷ்ணவஞன அவ்வேந்தனுல் கட்டிப் பிரதிஷ்டிக்கப்பட்ட தலமே தில்லைச் சித்திர கூடம் என்பது தெரிகின்றது. இவ்வாறு 717-ல் பட்டம் பெற்ற அப்பல்லவன் அபிமானம் பெற்றுப் பிரசித்தி பெற்ற திருச்சித்திர கூடம் அவனிலிருந்து 4 நூற்றூண்டுகட்குப்பின் அழிபட்டும், அதிலிருந்து 4 நூற்றூண்டுகட்குப் பின் புனருத்தாரணஞ் செய்யப்பட்டும், இவ்வாறு 400 ஆண்டுக் கொரு முறை மாறுதலடையும் படியான

சரித்திரவிசேட முடையதாயிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. திருவாதவூரடிகளான மாணிக்கவாசகர் திருக்கோவையில் (86) "வாங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே" என்று தம்காலத்தே திருமால் தில்லை முற்றத்தில் கிடந்த கோலத்துடன் உள்ள நிலையைக் கூறுதல் தெரியலாம். பேராசிரியர்—'இன்னும் வாங்கிடக்கின்ருனகலின்' என்று இவ்வடிக் குறிப்பில் எழுதியுள்ளார். இதனுல், அவ்வுரையாளர் சித்திரகூட அழிவுக்கு அதாவது 1127-க்கு முன்பே வாழ்ந்தவர் என்பது பெறப்படுகின்றது. இதற்கேற்ப—விக்ரம சோழன் முன்னிலையில் கூத்தர் உலாப் பாடியபோது--பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கக் (கூத்தர்) பாடிய கவி என்ற தலைக் குறிப்புடன் "செங்கான் மடவன்னம் படா" என்ற பாடல் தமிழ் நாவலர் சரிதையில் காணப்படுகின்றது. இதனுல், கூத்தர் காலத்தே பேராசிரியர் என்பவரொருவர் இருந்தவரென்பது தெளிவாகும். இவரே, தொல்காப்பியம் திருக்கோவைகட் குரையிட்ட பேராசிரியர் என்று கருத இடமுண்டு. தொல்காப்பியச் செய்யுளிய லுரையுள்—தம்காலத்தார் பாடிவரும் உலாச் செய்யுட்கு இலக்கணம் அமைத்து எழுதுவது கூத்தர் முதலிய புலவர் பெருமக்களது உலாவை நினைத்தென்று தோற்றுகின்றது. பேராசிரியர் நேமிநாதர் என்பது பேராசிரியரும் நேமிநாதரும் என்றும், பேராசிரியராகிய நேமிநாதர் என்றும் பொருள் கொள்ளப் படும் (செய்-பக்-470) பிற் கூறியதாயின், நேமிநாதர் என்பது பேராசிரியர் இயற் பெயராகக் கொள்ளப்படும் [நேமிநாதன்—திருமால்.]

இவ்வாறு கூத்தர் சேக்கிழார் பேராசிரியர் முதலிய புலவர் பெருமக்களைத் தன்னவையில் கொண்டு விளங்கிய இவ்வநபாயன் பின் பட்டம் பெற்றவன் அவன் இரண்டாம் ராஜ ராஜசோழன் என்பான். (1146-1178) இவன் காலத்தே கூத்தர் விளங்கி இவன் மேலும் உலாவொன்று பாடினர். தக்கயாகப் பரணி, ஈட்டி எழுபது என்ற நூல்களில் இவ்விராஜ ராஜனையே பெரிதும் புகழ்தலால் அவை இவ்வரசன் காலத்துச் செய்யப்பட்ட நூல்கள் என்பது விளங்குகின்றது. இவ்வரசன் காலத்தில் அக்கவிச் சக்கரவர்த்திக் கிருந்த செல்வாக்கு இணையற்ற தென்னலாம். இவர் தங்காலத்தில் போலிப் புலவர் பலர் கவிபாடித் தமிழின் சிறப்பைக் குலைத்து வந்தமைக்குப் பெரிதும் வெகுண்டு அவர்களுடன் வாதிட்டுத் தோற்கச் செய்து கொலைத் தண்டனைக்கு

அவர்களை உள்ளாக்கி வந்தன னென்றும், அச்செயலை யொருத் நெற்குன்ற வாணர் என்பவர்—

நெற்குன்ற வாணர்

'கோக்கண்டு மன்னர் குறைகடற் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூவுலகிற்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்கர வர்த்திநின் கட்டுரை
யாம்
பாக்கண் டொழிவர்க ளோதமிழ் பாடிய பாவலரே"

என்று கூறி அவர் கடுஞ்செயலைத் தடுத்தனரென்றும் தமிழ் நாவலர் சரிதை முதலியவற்றால் அறிகிறோம். இங்ஙனம் தடுத்தவர் புலவரும் வள்ளலுமாய அக்காலத்து விளங்கியவர். இவ்வள்ளல், யாதவர் கோன் நம்பிகாளி என்பவரது பெரும் புலமையில் ஈடு பட்டு அவர்க்குத்தம் முடைமையெல்லாம் அளித்துத் தாமும் அவர்க்கடிமையாயினர் என்பது—

" கற்குங் கவிவல்லயாதவர் கோனம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ் கங்கா நதியும் பொதியமும் போல்
நெற்குன் றமுநம் மரபுமெந் நாளு நிலைநிற்கவே."

என்று இவரே பாடியதாக வழங்கும் செய்யுளால் அறியப்படு கின்றது. இன்னும் இவரைப்பற்றி வழங்கும் கன்னபரம்பரைக் கதைகள்பல. இத்தகைய வள்ளற் புலவர் பாடிய நூலே திருப் புகலூரந்தாதி என்பது அவ்வந்தாதி யிறுதியிலே—

"களப்பாள னெற்குன்ற வாணனந் தாதிக் கவித்துறையே"
என்று பாடுதலால் களப்பாளக் குடியினர் இவரென்பது விளங்கும். (செந்-12, 268) களப்பாளரைப்பற்றி என் முதல் உபந்யாசத்தில் நான் விரிவாகக் கூறினேன்.

இத்தகைய பெரியார் பெரிதும் அபிமானித்துப் பாடிய திருப்புகலூர்ச் சிவன் கோயிலிற்கண்ட சாஸனமொன்று "ஸ்ரீ புகலூர்த்தேவர் மத்யான்னம் அமுது செய்தருளும் போது . . . . நித்தம் பன்னிருவர் பிராமணர் உண்பதாக, ஜயங் கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துப் பேரூர் நாட்டு நெற் குன்றத்து நெற்குன்றங்கிழார் அரயன் கருவுணயகரான களப்பாள ராஜர் செய்வித்த சாலை" என்று கூறுகின்றது. இவர்,

விக்ரமசோழன் காலத்தில் அவனுடைய அதிகாரிகளுள் ஒருவராக இருந்தவர் என்பது, சோணாட்டு ஆலங்குடிச் சாஸனத்தால் அறியப்படும். (S. I. I. V. 178) இவ்வாறு சாஸனங்களில் "நெற்குன்றங்கிழார் களப்பாளராசர்" என்று கூறப்பட்டவர் மேற்குறித்த களப்பாளர் நெற்குன்ற வாணரே என்பது, இவர் அந்தாதிபாடிச் சிறப்பித்த திருப்புகலூரில் இச்சாஸனம் அமைந்திருத்தலாலும், காலம் பெரிதும் பொருத்தம் பெறுதலாலும் தெளிவாகும். ஆகவே, கூத்தர் காலத்தில் இத்தகைய வள்ளற் புலவரொருவர் வாழ்ந்த வரலாறும் சாஸன விலக்கியங்களாற் பெறப்படுதல் காணலாம்.

குமார குலோத்துங்கன்

இவ்விராஜராஜனுக்குப் பின்வந்த சோழருள் மூன்றாங் குலோத்துங்கன் பிரபலமானவன். (1178-1216) ராஜராஜன் சந்ததியற்றுப் போனமையால், அவனாற் குறிக்கப்பட்ட ராஜாதிராஜன் ஆண்ட பின் இவன் பட்டம் பெற்றவன். குமார குலோத்துங்கன் என்று குலோத்துங்கன் கோவையிற் கூறப்பட்டவன். சிலர், இரண்டாங் குலோத்துங்கனை மேற்படி கோவை கொண்ட குமார குலோத்துங்கனைக் கருதி வருவது தவறாகும். "சங்கம ராச குலோத்துங்கன்" "சங்கரன் முன்னோன் குலோத்துங்கன்" என்று குமார குலோத்துங்கன் புகழப்படுதலால், அவன், சங்கமன் என்பவனுக்குப் புத்திரனும் சங்கரசோழன் தமையனு மானவனென்பது தெரியலாம். இவன் தம்பி சங்கர சோழன், சோழன் மேல் அமைந்த உலா வொன்றிற் சரித்திரப் பகுதி செந்தமிழிற் பல வருஷங்கட்கு முன்பு என்னால் வெளியிடப்பட்டுள்ளது. அதனில், நல்லமனுக்கும் குமார மகீதரற்கும் மெய்த்துணையாகத் தோன்றிய தங்கராஜன் என்று கூறப்படுதலால் நல்லமன் குமார குலோத்துங்கன் சங்கரன் மூவரும் சகோதரர் என்பது பெறப்படும். குமார மகீதரனே இக்குமார குலோத்துங்கனென்று தோன்றுகின்றது. மூன்றும் ராஜராஜனது (I.M.P. 1342) திருவீழி மிழலைச் சாஸனங்களிரண்டில் "குமார குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலம்" என்ற ஊர்ப்பெயர் கூறப்படுவதால் அச்சோழன் பட்டம் பெற்றதற்கு முற்பட்டிருந்தவனே குமாரன் குலோத்துங்கன் என்பது தெளிவாகின்றது. அவன் கோவை கொண்டவனும் சங்கமன் புத்திரனுமான குமாரமகீதரனென்றே கொள்ளத் தடையில்லை. இவ்வரசன் 38-வருஷம் அரசாண்டவன், திரிபுவன வீர தேவன் என்ற சிறப்புப்பெயர் பெற்றவன்.

கம்பர் விளங்கியது இவன் காலமாம். மகாவித்துவான் ராகவையங்கார் அவர்கள் கம்பர் காலம் 12-ம் நூற்றுண்டின் பிற்பகுதியாக வேண்டும் என்பதற்கு வேண்டிய நியாயங்கள் காட்டிச் செந்தமிழ்ல் எழுதி யிருத்தலைப் பலரும் அறிவர். இவர்கள், "ஆவிக் கொடைச் சகரர்" என்ற இராமாயணத்தனியனுல் கி.பி. 1178-ல் தம் ராமாயணத்தைப் பாடத்தொடங்கினவர் என்பதைப் பலவழிகளாலும் நிரூபித்துக் காட்டியுள்ளார். அவற்றை விரிக்கிற் பெருகும். ஆதலால் செந்தமிழ் நோக்கி அறிதற்குரியது. இவர்கள் முடிவின்படி மூன்றுங்குலோத்துங்கன் பட்டத்துக்கு வந்த தொடக்கத்தில் கம்பர் விளங்கியவர் என்பது தெரியலாம். "சென்னிநாட் டெரியல் வீரன்" என்று தம்காலத்துச் சோழனை இப்புலவர் பெருமான் பாடுதலால், "திரிபுவன வீரதேவன்" என்ற பெயருடைய இக்குலோத்துங்கனே அப்புலவர் காலத்தவராகத் தடையில்லை. ஓரங்கல்நாட்டு உருத்திரனைக் கம்பர் பாடியவ ரென்பது தமிழ்நாவலர் சரிதையில் "அவனி முழுதுண்டும்" என்ற பாடலால் தெரியலாம், சோழனுடன் கோபித்துக் கொண்டு சென்று வடநாட்டுக் கணபதி வேந்தனைக் கொண்டு அச்சோழனை அடக்க வேண்டி இது செய்தது போலத் தோற்றுகிறது. இவ்வுருத்திரன் பிரதாபருத்ரீயம் என்ற வடமொழியலங்கார நூலாற் புகழப்பட்டவனும் மகாகவிகளை ஆதரித்தவனுமாக வேண்டும். இது பொருந்துகின்றது. அவ்வுருத்திரன் இக்குலோத்துங்கன் காலத்தவனுவே இருத்தலும் காண்க. ஆகவே, அவர்கள் இரண்டாம் ராஜராஜன் என்று கூறியதை மூன்றும் குலோத்துங்கன் என்று மாற்றிக் கொண்டால் யாவும் பொருந்துகின்றன. இக்குலோத்துங்கன் மகன் மூன்றும் ராஜராஜன் காலத்தும் இருந்தவனுதல் வேண்டுமென்றும், இவனே அப்புலவரது முடிவுக்குக் காரணமானவனென்றும் தெரிகின்றன. இக்குலோத்துங்கன் ஆட்சியில் வேறு புலவர் சிலரும் விளங்கி இருந்தனர்.

பாரதம் பாடிய அருணிலை விசாகன்.

மகாபாரதம், பாண்டியர்களால் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டதென்று சின்னமனூர்ச் சாஸனங் கூறுவது, சங்கநாளில் வழங்கிய பெருந்தேவனுர் பாரதமாகவேண்டு மென்றும் 8-ம் நூற்றுண்டில் தெள்ளாறெறிந்த நந்திகாலத்துச் செய்யப்பட்ட பாரத வெண்பா அதனில் வேறென்றும் முதலுபநியாசத்தில் தெரிவித்தேன். இம்மூன்றுங் குலோத்துங்கன் காலத்தும் மகாபாரதம்

தமிழில் செய்யப்பட்டதென்பது தெரிகின்றது. தொண்டை மண்டலத்துத் திருவாலங்காட்டுச் சிவாலயத்துள் நடராச சந்நிதியப் பிராகாரத் திருமதிலிற் கண்ட சாஸனமொன்று இக்குலோத்துங்கனது 32-ம் ஆட்சி வருஷந் தமைந்ததாகும். இதனுள்—குன்றவத்தனக் கோட்டத்து இல்லத்தூர்நாட்டு அரும்பாக்க முடையான் பாரதந் தமிழ்செய்த அருணிலை விசாகன் திரை லோக்கிய மல்லனுகை வருசராசன் மேற்படி கோயிலில் திருவரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளிய நாயனார்க்குத் திருநந்தா விளக்கொன்று வைத்தானென்று கூறுகின்றது. குலோத்துங்கன் 1178-ல் பட்டம் பெற்றவனாதலால் அவனது 32-ம் ஆட்சி வருஷமான 1210-ல் இச்சாஸனம் அமைக்கப்பட்டதாகும். ஆகவே, 13-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேறொரு பாரத நூல் பாடப்பட்டிருந்ததென்பது தெரியலாம். இந்நூல் கிடைத்திலது. இது பாடினவர் பெயர்களால் அவர் அரசகுலத்தவரென்று தோன்றுகிறது.

பவணந்தி முனிவர் அமராபரணன் சியகங்கன் என்ற அரசன் விருப்பின்படி நன்னூலை இயற்றியவர் என்பது யாவரும் அறிந்ததே, இச்சீயகங்கன் சாஸனங்கள் கிடைத்திருப்பதால். பவணந்தியார் காலம் இன்னதென்பது தெளிவாகின்றது. வட ஆர்க்காடு ஜில்லா திருவல்லத்துச் சிவாலயத்துக் கண்ட சாஸன வாக்யம் வருமாறு :—

"ஸ்வஸ் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு முப்பத்து நாலாவது. அமராபரணன் சீயகங்கன் நம் பிராட்டியான அரியபிள்ளை திருவல்லமுடையா நாயனார்க்கு வைத்த சந்தி விளக்கு" என்பதே. இவ்வாறே ஸ்ரீ காளஹஸ்திச் சிவாலயத்து வரையப்பட்ட சாஸனமொன்றும், மேற்படி சோழனது 3-ம் ஆட்சி வருஷத்தில், குவளாலபுர பரமேஸ்வரனை சியகங்கன் மகள் அக்கோயிற்குச் சிலதர்மங்கள் செய்த செய்தி கூறுகின்றது. இவற்றிற் கண்ட சோழன் மூன்றாங் குலோத்துங்கனேயாவன். ஆகவே, அமராபரணன் சீயகங்கன் என்பவன் குவளாலபுரத்தையாண்ட கங்க வரசன் என்பதும், மூன்றாங் குலோத்துங்கனுக்கு அவன் அடங்கியவன் என்பதும் இக்கங்கள் காலமே பவணந்தியார்க்கு உரியதென்பதும் நன்கு விளங்கும். இச் சீயகங்கனுக்கு மாமன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் என்று வடவார்க்காடு ஜில்லா மேற்பாடிச் சாஸனம் ஒன்று

கூறுகிறது. இவனது சாஸனத்துக் கண்ட பாடல் அடியில் வருமாறு:— (S. I. I. IV. 88)

“பொத்தப்பிச் சோழன் புடோலியர சன்புவிமேல்
எத்திசையும் போற்றுமெழின் மேற்பாடி—மெய்த்தவத்தாற்
சோளேந் திரசிங்க நாயகற்குத் தூங்கமணித்
தாளேந்து மண்டபஞ்செய் · தான்” என்பது.

கரிகாலன் வமிசத்தவரான சோழர் பிரிவார் 7, 8-ம் நூற்றாண்டு முதலே கடப்பைப் பிரதேசத்தில் தனி ராஜ்யம் ஸ்தாபித்து வந்தவ ரென்பது, ரேநாண்டுச் சோழர், பொத்தப்பிச் சோழர், வெல நாண்டுச் சோழர் என பலவகையாராக அழைக்கப்பட்டனர் என் பதும், இவர்கள் தமிழ்ச் சோழர்க்கு அடங்கியிருந்தவர் என்பதும் சரித்திரப் பிரதித்தமானவை. அவர் வழியினனான இப் பொத்தப்பிச் சோழன், மூன்றாங் குலோத்துங்கனுக்கு முன்பு ஆண்ட ராஜாதிராஜனது 8-ம் ஆட்சி வருஷத்தில் இச்சாஸனம் அமைத்த வன். இச்சாஸனத்துக் கண்ட வாக்கியத்தில் “சிறை மீட்ட பெருமாளான சீயகங்கதேவர் மாமன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன்” என வருவதால், நன்னூல் செய்வித்த சியகங்கனே இச் சோழன் மருகனென்பது காலவொற்றுமையால் பெறப்படுகின்றது. தமிழபிமானியான இச்சீயகங்கனது மாமனாதல் பற்றியும், தமிழ்ச் சோழரது கூட்டுரவுடைமை பற்றியும் இத் தெலுங்குச் சோழன் தமிழபிமானமுடையனாய், வெண்பாவைக் கொண்ட இச்சாஸனம் அமைத்தவனாதல் வேண்டும்.

இக்குலோத்துங்கனுக்குப் பின் இவன் மகன் மூன்றாம் ராஜ ராஜன் 1216-ல் பட்டம் பெற்றான். இவனாட்சித் தொடக்கத்தில் சோழவதிகாரிகளாயிருந்தவர் சிலர் தம்முள் ஒன்றுகூடித் தனியர சர்களாக முடிவு செய்துகொண்டு கலகம் விளைவித்தனர். அதனால் ராஜராஜன் சேந்தமங்கலத்தில் ஓடி ஒளிக்கும்படி நேர்ந்தது. இவ் வதிகாரிகளுள் காடவராயனான கோப்பெருஞ் சிங்கனும், அவன் மைத்துனனான வாண கோவரையனும் முக்கியமானவர். இவருள் பின்னவன், மூன்றாங் குலோத்துங்கன் கீழ்த் தலைமை வகித்தவன் என்பது அச்சோழனது 35-வது வருஷத்தமைந்த ஆரகளூர்ச் சாஸனத்தால் தெரிகின்றது. இவன் பொன்பரப்பினான் மகதைப் பெருமாள் வாண கோவரையன் ஆறைவாணன் என்று சாஸனங் களில் அழகான பாடல்களால் புகழப்படுகின்றான். இவனைப்பற்றிய இச்சாஸனப் பாடல்களைக் கோபிநாதராயரவர்கள் செந்தமிழில்

வெளியிட்டுள்ளார். (செந்தமிழ்-தொ-3.) இவனும் இவன் மைத்துனனும் உண்டாக்கிய கலகம், இராஜராஜன் மாமனை போசள நரசிம்ம தேவனால் அடக்கப் பெற்றமையால், அச்சோழன் அமைதியுடன் பிற்காலத்தில் அரசாண்டனன்.

மெய்கண்டார்.

இவனாட்சிக் காலத்தில், சைவ வைணவ சமயாசிரியர் பலர் நாட்டில் விளங்கினர். சிவஞானபோதம் என்ற பிரபல சைவ சாஸ்திரத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவரும், சந்தான குரவருள் தலைமை பெற்றவருமாகிய மெய்கண்டதேவர் பெருமைகளைப்பற்றி நான் விவரிக்க வேண்டியதில்லை. திருவண்ணாமலைக் கோயிலின் முதற்பிரகாரத்து வடக்குத் திருமதிலில் அமைந்துள்ள சாஸனமொன்று திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜ ராஜ சோழனது 16-ம் ஆட்சி வருஷத்தில் அமைந்ததாக உள்ளது. இதனுள்—திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவன் என்பாரால் அவ்வூர்க் கோயிலிற் பிரதிஷ்டிக்கப்பட்ட மூர்த்தமொன்றின் பூசை முதலியன நிகழ்த்துவதற்காகச் சில பூமிகள் அளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. மேற்குறித்த ராஜராஜசோழன் 1216-ல் பட்டம் பெற்றவனாதலின், இச்சாஸனம் 1232-ம் வருஷம் அமைந்ததென்பது பெறப்படும். இவ்வாறு கூறப்பட்ட மெய்கண்ட தேவர் சிவஞானபோத ஆசிரியரின் வேறல்லர் என்றே சொல்லலாம்.

> "ஏழுஞ் சிறுநா றெடுத்த வாயிரம்
> வாழுநற் சகன மருவா நிற்ப"ச்

சங்கற்ப நிராகரணம் என்ற சைவ சாத்திரத்தைத் தாம் செய்ததாக உமாபதி சிவாசாரியார் அந்நூலுட் கூறுதல் யாவரும் அறிவர். அதாவது சக வருஷம் 1235 (கி.பி. 1313) ஆண்டில் அந்நூல் இயற்றப்பட்டதென்பதாம். இவ்வாண்டுக்கும் மேற்குறித்த மெய்கண்டதேவர் சம்பந்தமான சாஸனம் பிறந்த 1232-க்கும் இடையில் 81 வருடங்களே உள்ளன. சந்தானகுரவருள் உமாபதி சிவத்துக்கு நான்காந்தலை முறையாசிரியரே மெய்கண்ட தேவராதலின், அவ்விடைப்பட்ட காலம் அத்தலைமுறையளவுக்கு ஏற்றதாகும். இதனால், இச் சாஸனம் மெய்கண்டதேவர் பிரதிஷ்டித்த மூர்த்திகட்கு அவர் காலத்தே அரசனால் பூமியளிக்கப்பட்ட செய்தி கூறுவதென்பது பொருந்துகின்றது.

இவ்விராசராசன் ஆட்சிக்காலம் வைஷ்ணவாசாரியரிற் பலரும் சிறந்தோங்கிய காலமாகும். நாலாயிர திவ்ய பிரபந்தங்கள்

வியாக்யானித்து மகோபந்யாசங்கள் செய்யப்பட்டுவந்த காலம் இதுவேயாம். இதனைத் தலைமையாக நின்று நடத்திய ஆசாரியர் நம்பிள்ளை என்பார். இவர், திருச்சிராப்பள்ளிக்கடுத்த அரிய மங்கலம் என்ற நம்பூர் ஊரில் அவதரித்தவர். இவ்வாசாரியார் செய்த திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்த உபந்யாசங்களே, இவர் சிஷ்யர்களான பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை என்றவர்களால் பட்டோலை காணப்பட்டு நூல்களாயின. திருவாய்மொழிக்கு இவ்விருவருஞ் செய்த பேருரைகளே இருபத்து நாலாயிரப்படி, ஈடு எனப் பெயர் பெற்றவை. இவர்கள் வியாக் யானங்களிலிருந்து திருவாய்மொழிக்குப் பழையவுரையொன்று உண்டென்று தெரிகின்றது. "தமிழாசிரியன் என்று தமிழர்க்கு அகஸ்திய னோபாதியா யிருப்பானொருவன் 'செல்கின்ற நாளகத்து' என்று வியாக்யானம் பண்ணி வைத்தான்" எனவரும் ஈட்டுத் தொடரால் அறியப்படுகின்றது. இவ்வாறு பெருமைப்படுத்திக் கூறப்பட்ட தமிழாசிரியர் இன்னாரென்பது தெரியவிடமில்லை. சைவ வைணவ ஆசார்யர்களைப் போலவே உரையாசிரியர் சிலரும் இக் காலத்தை ஒட்டியிருந்தவரென்றே தெரிகின்றனர். சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் ஆளும் சொற்பொருள் வழக்குகள் அவர் இக் காலத்தவர் என்றே குறிப்பிக்கின்றன.

உரையாசிரியர்கள்.

உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் மட்டும் பழமையுடை யோராகத் தெரிகின்றார். வைஷ்ணவாசாரியர்களில் பெரிய நம்பிகள் திருமலை நம்பிகள் என்ற பெரியோர்கட்கு மகாபூர்ணர் ஸ்ரீசைவ பூர்ணர் என்பவை வடமொழி நாமங்களாகும். இதனால் நம்பிகள் என்பதற்குப் பூரணசப்தத்தை வடமொழியாளர் வழங்கியுள்ளமை தெரியலாம். அவ்வாறே இளம்பூரணர் என்பது இளையநம்பி என் பதன் வடவழக்காகுமோ என்பது சங்கை, சேனாவரையர் இளம் பூரணர்க்கும் பிற்பட்டவர். உரையாசிரியர்கள் பெயர்கள் எல்லாம் அக்காலத்துச் சாஸனங்களில் மக்கட்கு வழங்கி வந்த பெயர்களாகவே காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

"திருவழுதி வளநாட்டுத் திருவெள்ளூர்ச் சேனாவரைய
னயின தத்தன்" (T.A.S. III 75)

"புவனேந்தர நல்லூர் அரையன் ஆண்டானான
சேனாவரையன்" (S.I.I, V 154)

"மிழலைக் கூற்றத்து....ஸ்ரீபராந்தகநல்லூர் இருணமுடை
யான் திருமுடிசூட்டினை குளந்தை ஆழ்வானை
சேனாவரையன்" (S.I.I. V-158)

என்பதனால் சேனாவரையன் என்ற பெயர் வழக்குத் தெரியலாம். இவ்வாறே, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிற் கற்பாறை மேற்குத் திருமதிலில் விஜயகண்ட கோபாலனது 22-ம் ஆட்சி வருஷத்தமைந்த (1250–83) சாஸனத்தில்—

"பரிமே லழகிய தாதர்க்கு விலை நிச்சமித்துக்
கொடுத்த பழம்புள்ளி"

என்று கூறப்பட்டுள்ளது. பரிமேலழகர் காஞ்சீபுரம் உலகளந்த பெருமாள் அருச்சகர் மரபினரென்று வழங்குதற் கேற்ப அவரது பரிபாடலுரைப் பாயிரம் "நீணிலங் கடந்தோன்றுடொழு மரபிற் பரிமேலழகன்" என்று கூறுவதும், இச் சாஸனம் காஞ்சீபுரத்தின் கணுள்ள தாதலும், திருக்குறளுரையாளர் இச்சாஸனங் கூறு மவரோ என்ற சங்கையை உண்டாக்கக் கூடியதேயாம். உமாபதி சிவாசாரியார் வாக்காக

"வள்ளுவர் சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்"

என்ற பாடல் வழங்குதல் பலரும் அறிவர். அவர் வாக்காயின் மேலே நான் கூறியபடி அவர் 1313-ல் தம் சங்கற் நிரகரணம் செய் தவராதலால் அச்சிவாசாரியர்க்கு 50 வருஷங்கட்கு முன்னது இப் பரிமேலழகரைப் பற்றிக் கூறுஞ்சாஸனம் என்பது தெரியலாம். (S.I.I. IV–291) இவற்றால் திருக்குறள் உரைகாரரோ பரிமே லழகிய பெருமாள்தாதன் என்று கருதற்கு இடமுண்டென்பது தெரியலாம். நச்சினார்க்கினியர் என்ற பெயரும் பழைய மக்கட்குப் பெரிதும் வழங்கியதே—கோயம்புத்தூர் அவிநாசிச் சாஸனத்தில், திரிபுவனசக்கரவர்த்தி வீரராஜேந்திரன் (1207–52) (I.M.P. P. 522) அரசகுமாரனுக்கு நச்சினார்க்கினியரான கண்டிய தேவர் என்பது பெயராகக் பழனிப் பிரதேசத்துப் பெரிய கோட்டைக் கோயிலுட் காணப்படும் கல்வெட்டு அக்கோயிற் சிவ பிரானுக்கு நச்சினார்க்கினியர் என்பதா பெயரொன்று கூறுகிறது. சோழநாட்டுத் திருநாகேஷ்வரக் கோயிலிற்கண்ட கோனேரின்மை கொண்டான் சாஸனத்தில் (Ibid. 1027) "நறையூர் கிழவன்

அரயன் நச்சினார்க்கினியான்" என்ற பெயர் வழங்கல் காணலாம். இவற்றால், நச்சினார்க்கினியப் பெயர் வழக்கு முற்காலத்துப் பெருகியிருந்ததைக் குறிக்கத் தடையில்லை. (S.I.I. IV-17.) "நச்சுவார்க்கினியர் போலும் நாளகவீ ரட்டனாரே" என்ற தேவாரத் தொடரும் ஒப்பிடத்தக்கது. இக்காட்டியவற்றுள், உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் மதுரைவாசியாதலால், பழனிப் பக்கத்துப் பெரிய கோட்டை சம்பந்தமுடையரோ என்று கருதற்குரியர். இனி, அடியார்க்கு நல்லான் என்பதும் இத்தகைய பெருவழக்குடையதே. புதுக்கோட்டைச் சீமைத் திருவரங்குளத்திற் கண்ட வீர பாண்டியன் சாஸனத்தில் **(I.M.P.1656)** அடியார்க்கு நல்லான் அங்கராயன் என்பது காணப்படுகின்றது. உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார், கொங்குநாட்டு நிரம்பையூரினர். கொங்கு நாட்டுத் திருக்கருவூரானிலைச் சிவபிரானைச் சம்பந்த மூர்த்திகள் "கருவூருளானிலையண்ணவார் அடியார்க்கு நல்லரே" (தேவா—429-3) என்று பாடுதலால், அத்தகைய பெயரே இவர் கொண்டதென்பது தெரியலாம். "நிரம்பவழகியர்", "இணையாரமார்பன்" என இவ்வாரே தேவாரத்துள்ள தொடர்கள் மக்கட் பெயராக வழங்கலும் உண்டு. இவர் நச்சினார்க்கினியர்க்குப் பிற்பட்டவராக வேண்டும் என்று தோன்றுகிறது. உரைச் சூத்திரம் என்பது, உரையாசிரியர்களால் இயற்றப்பட்டு உரையிடையில் அமைக்கும் சூத்திரங்களாகும். நச்சினார்க்கினியர் அட்டாங்க யோகங்கள் சம்பந்தமாகத் தாம் இயற்றி 'இவை உரைச் சூத்திரம்' என்று காட்டியவை அடியார்க்கு நல்லாரால் சிலப்பதிகாரவுரையுள் அப்படியே ஆளப்பட்டுள்ளன. இது, நச்சினார்க்கினியர்க்குப் பிற்பட்டவர் அடியார்க்கு நல்லாரென்பதைக் காட்டக்கூடியதென்னலாம். இச் செய்தியை எனக்குக் குறிப்பிட்டவர், ஸ்ரீமான், அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் என்பதைத் தெரிவிக்கிறேன்.

மேற்கூறிய மூன்றும் ராஜராஜனும், அவன் மகன் வீரராஜேந்திரனும் ஆட்சி புரிந்த காலமே, சோழ சாம்ராஜ்யத்தின் பெருமை குலைந்து, பலவீனமடைந்து சிறுகிய, கால விசேடமாகும். கம்பநாடர்க்கும் சோழற்கும் உள்ளார்ந்த செற்றமிருந்துவந்ததென்பது அப்புலவர் அரசனோடு கோபித்துக்கொண்டு தொண்டை நாட்டில் வாழ்ந்து வந்த வரலாறும் பிரதாபருத்திரனைத் தமிழ் நாட்டிற் பிரவேசிக்கும்படி அவர் அவனிடம் சென்று வந்த செய்தி தமிழ் நாவலர் சரிதையால் விளங்குவதாலும் தெரியலாம். கம்பரிடம் வெளிக்கு நட்பினன் போல நடித்து வந்த சோழன் அவர் ஒருகால் அரண்மனைக்கு வந்த சமயத்தில், உள்ளிருந்து புலியொன்றை

அவிழ்த்துவிடச் செய்து, அது புலவர் மேற் பாய வந்தபோது, அதனை எய்பவன்போல் அப்புலவர் பெருமானையே எய்து வீழ்த்தினன் என்றும், அப்போது உண்மையை அறிந்துகொண்டு கம்பர்—

"வில்லம்பு சொல்லம்பு மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து—வில்லம்பு
பட்டருவிற் றென்னையென் பாட்டம்பு நின் குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி"

என்று கூறினரென்றும், இவ்வாறு கவிச்சக்கரவர்த்தியைச் சோழன் கொன்றான் என்ற பெரும்பழி பாண்டியர் செவிக் கேட்டு அவரால் பெரிதும் வெறுத்து நொந்து கொள்ளப்பட்டதென்றும் தமிழ் நாவலர் சரிதைப் பாடல்களாலும் குறிப்பாலும் நன்கறியப் படுகின்றன. இக்கதையையே பிற்காலத்தார் கம்பர் மகன் சோழனாற் கொலையுண்டதாகக் கற்பிக்கலாயினர். இவ்வாறு கம்பநாடாரைக் கொன்ற சோழன் மூன்றாங் குலோத்துங்கனேனும் அவன் மகனான இராசராஜனாகவேனும் வேண்டும். புலவர் பெருமான் அந்தியத்திற் சபித்தபடியே, சோழ ராஜ்யமும் வமிசமும் மூன்றாம் ராஜராஜன் காலமுதலாகச் சீர்குலையலாயிற்று என்பதில் தடையில்லை. இங்ஙனம், விஜயாலயனால் 9-ம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்ட சோழராஜ்யம் ஏறக்குறைய 500 ஆண்டுகள் நிலைத்திருந்து பின் மறைந்து போயிற்று என்பது தெரியலாம்.

இச் சோழர் காலத்தனவான பல்லாயிர சாஸனங்களை ஆராயுமிடத்து 10-ம் நூற்றாண்டு முதல் வழங்கி வந்த சொற்பொருள் மரபுகள் எண்ணிறந்தனவற்றை அறியத் தடையில்லை. அவை பலவும் இலக்கிய வாராய்ச்சிக்கு இன்றியமையாதனவாகும். அவற்றையெல்லாம் இங்கெடுத்துக் கூறுவதாயின், ஓர் அகராதியாகவே முடியத் தடையில்லை. ஆயினும், உதாரணங்களை இலக்கிய வுணர்ச்சிக்குரிய சில வழக்குகளையே நான் காட்ட வெண்ணுகின்றேன். இச் சோழர் காலத்து விளங்கிய நூல்களுள், சைவ வைணவ அடியார்களது தெய்வப் பாடல்களே சிறந்தவை என்பதும் அவற்றைப் பாராயணஞ் செய்வதும் கொண்டாடுவதுமே அக்காலத்து மக்கள் விசேடமாகக் கைக்கொண்டவை என்பதும் நாம் சாஸனங்களால் அறியத் தடையில்லை.

திருப்பதிகம்.

அடியார்களது திருப்பதிகங்கள் கோயில்களில் ஓதப்படும் வழக்குச் சோழர் காலத்துக்கும் முற்பட்டதேயாம். இரண்டாம் நந்தியாகிய பல்லவமல்லனது 7-ம் ஆட்சி வருஷத்தில், திக்காலி வல்லம் என்ற திருவல்லத்துக் கண்ட வாணவரசன் விக்ரமாதித்தன் சாஸனத்தில் (I.M.P.p.440;S.I.I.IV-30) " திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும். திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பல பணி செய்வார்க்கும்" நிபந்தஞ் செய்யப்பட்ட விஷயம் கூறப்படுகின்றது. இவ்வாறே, முதலாதித்தன் (I,M.P. p. 1601 ;) உத்தமசோழன் (S.I.I. III-180, 315) முதல் ராஜராஜன் (Ibid-II, 254) முதலியோரால் திருப்பதிகங்கள் கோயில்களிற் பாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை யாவும் மூவர் பாடிய திருப்பதிகங்களையே குறிப்பன என்று கருதலாகும். இவை, திருப்பதிகம் என்று இப்போது வழங்குவதாயினும், சாஸன வழக்குத் திருப்பதியம் என்பதேயாம். இதுவே பொருட் பொருத்தம் உடையது. பதியம்-பத்யம் என்ற வடசொற்றிரிபு ; பாட்டு என்பது பொருள். "பத்தியங் கத்தியமென் றிரண்டாஞ் செய்யுள்" என்பர் வீரசோழியமுடையார் (பக். 97) ஆகவே, திருப்பதியம் 'என்பது திருப்பாட்டென்ற பொருளாதல் காணலாம். இவற்றால், ராஜராஜ அபய குலசேகரன், நம்பியாண்டார் நம்பிகள் காலத்தே மூவர் திருப்பதிகங்கள் கண்டு தொகுத்துத் திருமுறையாக்கப்பட்டன என்பதும், ஆயினும், அவர்கட்கு முன் 8-ம் நூற்றாண்டு முதலே கோயில்களில் அப்பதிகங்கள் ஓதப்பட்டு வந்தன என்பதும் தெரியலாம்.

அரக்கோணந் தாலூகா திருமாற்பேரில் உள்ள கோவிந்தப்பாடி ஆழ்வார் கோயிலில் ராஜராஜகேசரிவர்மன் காலத்து அமைந்த (905-1015) சாஸன மொன்றில் மேற்படி கோயிற்குப் பல நன்கொடை அளித்த குளிர் குடையார் அருணிலை ஸ்ரீ கிருஷ்ணன் மூவேந்தப் பிடவூர் வேளார் என்பவர் தம் தந்தை பாடிய 'கோல நற்குழல்' என்று தொடங்கும் திருப்பதிகத்தை உற்சவ காலங்களிற் பாடிவரும்படி நிபந்தஞ் செய்துள்ள செய்தி காணப்படுகின்றது. (I.M.P. p. 45) இவற்றால் வேறு சிலர் பாடிய பதிகங்களும் கோயில்களிற் பாடப்பட்டு வந்த வழக்குண்டென்பது பெறப்படும்.

தேவாரம்.

மூவர் பாடிய திருமுறைக்குத் தேவாரம் என்று வழங்கும் பெயர் சோழர் காலத்துச் சாஸனங்களிற் காணப்படவில்லை.

ஆனல், தேவாரம் என்ற சொல், பூசைக்குரியது என்ற பொருளில் வழங்குதல் காணலாம். “பெரிய பெருமானுக்குத் தேவார தேவ ராக எழுந்தருள்வித்த சந்திரசேகரத் தேவர் (S.I.I. II-155) என்பது சாஸனத் தொடர் தேவாரம்—கிருகார்ச்சை என்பர் திருவாய் மொழி ஈட்டு வியாக்யானமுடையாரும். பூசைக்குரியது என்ற பொருளில் இச் சொல் மலையாளத்தில் இன்றும் வழங்குதல் அறியத் தக்கது. நாயன்மார் மூவர் திருப்பாட்டுக்களையும் திருமுறை என்றே பழைய விலக்கியங்களும் சாஸனங்களும் கூறுகின்றன. இரண்டாம் ராஜராஜசோழன் காலத்தில் சோழநாட்டு முனியூர்ச் சிவாலயத்துக்கண்ட சாஸன மொன்றில்—“திருமுறை தேவாரச் செல்வன் மடம்” என்ற தொடர் காணப்படுகின்றது. இப்போது அறியப்பட்டவற்றுள் இதுவே தேவாரச் சொல்லைத் திருமுறை யுடன் இணைத்துக் கூறிய சாஸனம் ஆகும். இதனிலும் மூவர் திருவாக்குக்களுக்குத் தேவாரம் என்ற தனிப் பெயரன்றி திருமுறைத் தேவாரச் செல்வன் எனத் திருமுறை விடாது கூறப் படுதல் காணலாம். இதனல், திருமுறைகளைப் பூஜித்தற்குரியவாகக் கொண்டு வழிபடும் செல்வன் மடம் என்ற பொருளில் இத் தொடர் வழங்கியதாகக் கருதற்கு இடந் தருகின்றது. திருமுறைகளை எழுதுவித்துப் பூசித்து வருதல் முன்னேர் செய்துவந்த ஒழுகலாறாகும். “இக்கோயில் திருக்கைக் கோட்டியில் எழுந்தருளி யிருக்கின்ற திருமுறைகளைத் திருக்காப்பு நீக்கி அழிவுள்ளன எழுந்தருள்வித்தும், திருமுறைகள் எழுந்தருள்வித்தும், திருமுறை பூசித்தும் இருக்கைக்கு” நிபந்தஞ் செய்யப்பட்ட செய்தியைச் சீகாழிச் சம்பந்த மூர்த்திகள் ஆலயத்துக் கண்ட சாஸனங் கூறுதலுங் காணலாம். இதனுள், தெய்வங்களை வழங்குதற்குரிய சொற்களால் திருமுறைகளை எழுதப்படுதலைக் கூறப்படுதல் அறியத் தக்கது. (செந். தொகுதி—26, 298)

> “முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவா
> றெத்தமைத்த செப்பேட்டி னுள்ளெழுதி ”-னன்,

அபயன் சேனுபதியான மணவிற் கூத்தன் என்று கூறப்படுதலுங் காண்க. ஆகவே, பூசித்தற்குரிய திருமுறை என்ற பொருளில் வழங்கப்பட்ட ‘தேவாரத் திருமுறை’ என்ற தொடரே தேவாரம் எனப் பிற்காலத்தே திருமுறைக்கே வழங்குவதாயிற்று என்று கருதும்படி உள்ளது. தேவாரம் என்பதற்கு இக்காலத்தார் பல பொருள் கூறுவதாயினும் சாஸனங்களால் அறியப்படும் பொருள் ‘பூஜார்கம்’ என்பதே என உணர்க.

இனி, சைவ வைணவ அடியார்களை நாயன்மார் ஆழ்வார் என்ற சிறப்புப் பெயர்களால் வழங்குகின்றோம். இப் பெயர்கள் அவ்வடியார்கட்குச் சிறப்பாகச் சோழர் காலத்தில் வழங்கின என்று சொல்வதற்கில்லை. நம்பியாரூரனார், திருநாவுக்கரசுதேவர் திருஞான சம்பந்தடிகள், சிறுத்தொண்டநம்பி என்றிவ்வாறே பழைய சாஸனங்கள் சிவனடியார்களை வழங்குவனவாம். நாயனார் என்பது, தலைவர் அல்லது ஸ்வாமி என்ற பொருளில். தெய்வங் கட்கும் பத்தர்கட்கும் ஒப்பவே சாஸனங்களிற் காணப்படுகின்றன.

"திருக்காளத்தி நாயனார்" (பெரியபு—119)

"திருவிடவெந்த நாயனார்" (எ.இ. 2-7-1)

"திருவட்டபுயகரத்து நாயனார்" (எ.இ. 2-7-1)

எனச் சிவபிரான் திருமால்கட்கு வழங்கும். இவ்வாறே—"திரு முற்றம் புகுந்த நாயன்மார்க்கு" (S. III 271) என விஷ்ணு பத்தர்க்கும் இது சாஸனங்களில் வழங்குதல் காணலாம். "மீனவன் கொண்ட வெப்பை நீக்கி விழுமந்தீர்த்து—ஞான சம்பந்த ரிந்த நாய னார் காணுமென்பார்" என்று சேக்கிழாரும் ஸ்வாமி என்ற பொதுப் பெயராலேயே வழங்குதல் காணலாம். ஆகவே, அடிகள் அல்லது ஸ்வாமி என்ற பொருளில் பண்டைக் காலத்தில் பெரியோர்கட்கு வழங்கிய நாயனார் என்ற சொல் பிற்காலத்தே சிவனடியார்கட்குச் சிறப்பாக உரியதாயிற்றென்பது இலக்கிய சாஸனங்களால் தெரியலாம். இவ்வாறே ஆழ்வார் என்ற வழக்குமாகும். இதுவும் நாயனார் என்பது போன்ற பொருளுடையதே. சோழ சாஸனங் களில்—"ஆழ்வார் திருவரங்கதேவர்க்கு" "திருவத்தியூராழ் வாரைப் பாடியருளின ஸ்ரீபூதத்தாழ்வாரும்" என்று திருமால் மூர்த்தங்கட்கும் "தீக்காலிவல்லத்துத் திருத்தீக்காலியாழ்வாரை" "மதுராந்தகன் கண்டராதித்தனார் ஆழ்வாரை ஸஹஸ்ரகலச மாட்டுவிக்க" எனச் சிவமூர்த்தங்கட்கும், ஆழ்வார் பராந்தகன் குந்தவைப் பிராட்டியார் (மேற்படி II பக். 69) நம்பெருமாள் (உடையன்) திருத்தங்கயார் மதுராந்தகியாழ்வார்" (மேற்படி IV பக். 18) "குலோத்துங்க சோழன் மகளார் அம்மங்கையாழ்வார்" (மேற்படி பக். 35) என்று அரசர்குல மகளிர்க்கும், "வாணகோ வரையர் தங்களாச்சி ...... விச்சாதிரியாழ்வார்" (மேற்படி பக். 153) 'கருணைகரனான தொண்டைமானர் தேவியார் அழகிய மணவாளனி மண்டையாழ்வார்" (மேற்படி பக். 862) என அரசரைச் சார்ந்த தலைவர் மகளிர்க்கும் வழங்குதலேயன்றி, நூல்களில்—"இனிப் பிறக்கக் கடவ மைத்திரியாழ்வாரான புத்த

தேவர்க்கு" (தக்கயாகப் பரணியுரை) 'புத்தனுடைய என்பாகிய காது ஆழ்வார்' (நீலகேசி, மொக்கல. 82-உரை) "ஈழமடிப்படுத்து தாடையாழ்வார்" (புத்தசரித்ரம் பக். 25) என்று புத்ததேவர்க்கும், அவர் சம்பந்தமுடையார்க்கும் 'அவிரோதியாழ்வார்' (திருநூற்றந்தாதி) எனச் சைன முனிவர்க்கும் கூறப்படுதல் காண்க. இதனால், கடவுளர்க்கும், அடியார்கட்கும், மக்களிற் சிறந்த இருபாலார்க்கும் இச்சிறப்புப் பெயர் முற்காலத்தே பெருவழக்கிலிருந்த செய்தி தெரியலாம். திருச்சிற்றம்பலத்தாள்வார், கோவிந்தபாடியாள்வார், ஆள்வார் அரிகுலகேசரிதேவர் (S. I. I. III 380, 342, 348) என இஃது, ஆள்வார் என்றும் திருக்காளத்தியாள்வார் என்றும் சாஸனங்களிலும் இலக்கியங்களிலும் பயிலும். இங்ஙனம் பெருகிய வழக்குகளிலிருந்து, இச்சொற்கு ஸ்வாமி, பெரியோர் என்பதே பண்டைப் பொருளாக வேண்டுமென்று தோற்றுகின்றது. 'பிறரை அடிமை கொண்டு ஆள்பவர்' என்ற பொருளில் ஆள்வார் என்று வழங்கி வந்தது, பின்பு ளகர ழகர வேற்றுமையின்றி ஆழ்வார் எனத் திரிந்ததோ என்றும், பெண்பாலாரான திருமாலடியாரொருவர் ஆண்டாள் என்றும் ஆசாரியத் தலைவரிற் சிலர் ஆளவந்தார் ஆண்டான் என்றும் வழங்கப்படுவதை நோக்குமிடத்து, 'ஆள்' என்பதே இதன் பகுதியோ என்றும் சங்கிக்க இடமுண்டு.

திருவிரையாக்கலி :—கோட்புலிநாயனார் தம் அரசனேவியபடி பகைமேற் படையெடுத்துச் செல்பவர், அடியார்க்கு அமுதளித்தற்கென்று கட்டிவைத்த நெற்கூடுகளைத் தாம் வரும்வரை தம் சுற்றத்தா ரொருவரும் தொடாதிருக்கும்படி, "திருவிரையாக்கலி" என்ற ஆணையை இட்டுச் சென்றனரென்பது

"தந்தமர்க ளாயினார் தமக்கெல்லாந் தனித்தனியே
எந்தையார்க் கமுதுபடிக் கேற்றியநெல் லிவையழிக்கச்
சிந்தையாற் றானினைவார் திருவிரையாக் கலியென்று
வந்தனையா லுரைத்தகன்றார் மன்னவன்மாற்
றார்முனைமேல்"

என்று சேக்கிழார் பாடுதல் தெரிந்ததே. இதனையே, நம்பியாண்டார் நம்பிகள்—"பெற்ற முயர்த்தோன் விரையாக்கலி பிழைத்தோர்" என்றும், உமாபதி சிவாசாரியர், "கோட்புலியாருரைத்த திருவிரையாக்கலி பிழைத்த கிளை" என்றும் கூறினர். இவற்றால் இத்தொடர் "சிவபிரான் ஆணை" என்பதை உணர்த்து

வதற்கு திருவிரையாக்கலி என்று பழைமையாக வழங்கிவந்த தென்பது தெரியலாம்.

"தாதவிழ் கொன்றைத் தாரு மேதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரிற்
றழங்குந் தமருகப் பறையு முழங்கொலித்
தெய்வக் கங்கை யாறும் பொய்தீர்
விரையாக் கலியெனு மாணையும்"

என்று, சிவபிரானுக்குச் சிறப்புடைய வைபவங்களுள் ஒன்றாக 'விரையாக்கலி' என்ற திருவாணையைப் பட்டினத்தடிகள் கோயி னான்மணி மாலையுட் கூறுதல் இங்கே குறிப்பிடத்தக்கதாம். கோட்புலியார் இதனை "வந்தனையா னுரைத் தகன்றார்" என்று சேக்கிழார் கூறுவதால், இத்திருவாணைச் சொல் வணக்கத்தோடு சொல்லுதற் குரியதென்பதும் பெறப்படும். அரசர்கள் தம் ஆணையை பழங்காலத்தே உடையராய் இருந்தவரென்பது— "நந்திவன்மன் என்று அபிஷேகஞ் செய்து . . ஸமுத்ரகோஷத்துக் (கடுவாய்ப்பறையம்) கட்வாங்கத்வஜமும் வ்வருஷபலக்ஞ்சதனமும் . . . கூட்டி 'விடேல்விடுகு' என்னுந் திருவாணை நடவி அபிஷேகம் செய்திருந்த விடம்" எனவரும் பல்லவமல்லனைப் பற்றிய சாஸன வாக்கியங்களினின்றும் அறியலாகும். இத்தகைய ராஜவைபவங்களுள் ஒன்றாகச் சிவபிரான் நடவிய திருவாணையின் பெயர் "திருவிரையாக்கலி" "விரையாக்கலி" என்பவை என்பது தெளிவாகின்றது. அனந்தபுரம் ஜில்லா, ஹேமவதி என்ற ஊரிலுள்ள கற்றூண் ஒன்றில் கண்ட உத்தமசோழ வளவதரையன் என்பவர் சாஸனத்தில்—(**S. I. I. VI.** 193) "இத்தேவரைப் பூஜியாதார் திருவிராக்கலி; நாற்பத் தெண்ணாயிரவர் ஆணை" என்று கூறப்பட்டிருத்தல் அறியத்தக்கது. இச்சாஸனம் அமைத்தவர் முதலிராசராசனுக்கு முன் ஆண்ட உத்தம சோழன் காலத்தவராக வேண்டுமென்பது, அவர் பெயரினின்றும் ஊகிக்கப் படுகின்றது. வளவதரையன் என்பதால் பல்லவரையரும் உத்தம சோழருமான பெரியபுராணச் சேக்கிழார் ஆகார். இவர் காலம் பற்றி முன்னமே யான் தெளிவாக்கியுள்ளேன். இச்சாஸனத் தினின்றும், திருவிராக்கலி என்றும் பண்டையோர் இத்திரு வாணையை வழங்கிவந்தமை தெரியலாம். "நாற்பத் தெண்ணாயிரவர் ஆணை" என்பவர், "நாடெங்குஞ் சோழன்முனந் தெரிந்தே யேற்றும் நற்குடியினரான அத்தொகை வேளாளர்" என்பது உமாபதி சிவாசாரியார் வாக்கால் தெரியலாம். (சேக்-பு—2)

இனி, திருப்புறம்பயத்திற் கண்ட முதலிராசேந்திரன் சாஸனத்துள் "விரையாக்கலிப் பெருந்தெருவிற் சங்கரப் பாடியோம்" என்று மும்முறை வருகின்றது. (S. I. I. 1. 9, 10.) இதனால், இத்திருவாணைப் பெயரால் வழங்கிய பெருந்தெரு திருப்புறம்பயத்தில் இருந்தமை விளங்கும். "திருவிரையாக்கலி. திருவிராக்கலி" என்பவை, திருமகள்விரையாத, அடையாத கலி என்று பொருள் தருகின்றது. இவ்வாறு சிவபிரானது திருவாணை வழங்கியதன் சரித்திரமும் உண்மைப் பொருளும் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்தற்குரியன.

சக்கரப்பாடி :—மேற்கூறிய திருப்புறம்பயச் சாஸனத்தில் "சந்திராதித்தவல் அட்டக்கடவோம்" என்ற தொடர் வருகிறது. விரையாக்கலி பெருந்தெருவிற் சக்கரப்பாடியோம் இக்காசு ஐம்பதுங் கொண்டு நிசதம் உழக்கெண்ணெய் இதனால், எண்ணெயாட்டுஞ் செக்கார் குலத்தவரைச் சங்கரப்பாடியார் என்று வழங்குவது பண்டை மரபென்பது தெரியலாம். இதனால், எண்ணெயாட்டுஞ் செக்கார் குலத்தவரைச் சங்கரப் பாடியார் என்று வழங்குவது பண்டை மரபென்பது தெரியலாம். செக்காரைச் சங்கரப்பாடியார் என்று இவ்வாறே சாஸனங்கள் மிகுதியும் வழங்குகின்றன. (S. I. I. 64) கலியனாயனார் புராணத்தில்—அவர் குலத்தவர் வாழுந்தெருவை—"தயிலவினைத் தொழின் மரபிற் சக்கரப்பா டித்தெருவு" என்று சேக்கிழார் பாடுதல் மேற்கூறிய சாஸனத் தொடருடன் ஒப்பிடத்தக்கதாம். சாஸனத்தில் சங்கரப்பாடி என்றே காணப்படுவதாயினும், சேக்கிழார் கூறியபடி சக்கரப்பாடி என்பதன் திரிபாகவே, அக்காலத்து மக்கள் அவ்வாறு வழங்கியிருக்க வேண்டும். சக்கிரி என்பதற்கு எண்ணெயாட்டுஞ் சக்கரமாகிய செக்கையுடையவர் அல்லது செக்கார் என்பது பொருளாதலால், அச்சக்கரம் உடையவர் தெரு சக்கரப்பாடி என்றலே பொருத்தமாகும்.

ஆதிபூமி :—திருஞான சம்பந்த மூர்த்திகள் திருநல்லூரில் மணக்கோலத்துடன் முத்துச் சிவிகையினின்றும் இறங்கிக் கல்யாணமண்டபம் புக்கதைக் கூறுமிடத்து—

"அங்கவர் செம்பொன்மாடத் தாதிபூ மியினுட் புக்கார்"

(பெரியபு—395)

என்று சேக்கிழார் பாடுகின்றார். இதனுள், 'ஆதிபூமி' என்பது சந்தர்ப்பத்தை நோக்கி, "மணவேள்வி நடக்கும் இடம் அல்லது கல்யாண மண்டபம்" என்ற பொருள் தரக்கூடியது. இச் சொல்

வழக்கைச் சாஸனங்களில் நாம் காணலாம். உத்தம சோழனது திருமலாபுர சாஸனத்தில்—

"கச்சிப் பேட்டு நம் வீட்டினுள்ளால் பொன்மாளிகை
ஆதிபூமியில் நாமிருக்க" (S.I.I. iii. 289)

என்றும், முதலிராசராசனது தஞ்சாவூர்ச் சாஸனத்தில்—

"அக்கினிதேவர் ஆலயத்துக்கு வடக்கு ஆதிபூமியிற்
கபோதத்து" (S.I.I. ii. 332)

என்றும் வருதல் காண்க. இவை, அரண்மனையிலும் கோயிலிலும் உள்ள கல்யாண மண்டபமாகிய மணவேள்விச்சாலையையே குறிப்பனவாகும். "ஆதிமுற்றத்து வேதிகை" என்ற பெருங்கதைத் தொடரும் இதுவே போலும். (பக். 89.) ஆகுதிபூமி என்பது ஆதிபூமி என மருவிற்றோ என்று தோன்றுகின்றது.

பள்ளிபடை:—அரசர், பெரியோர்கள், இறந்தவர்களைச் சுடுதலோ, இடுதலோ செய்வதைப் பள்ளி படுத்தல் என்பது பண்டை வழக்காகும்.

"எந்தாய் வெறுநிலத்துச் சேர்தியோ என்றிரங்கிப்
பள்ளி படுத்தார்களே"

எனச் சச்சந்தனது பிரேத ஸம்ஸ்காரத்தைக் கூறுமிடத்தில் திருத்தக்க தேவரும் பாடுதல் காணலாம். வைஷ்ணவ சம்பிரதாய நூல்களிலும், வழக்கிலும், இறந்த சந்நியாசிகளை அடக்கஞ் செய்தலைத் 'திருப்பள்ளிபடுத்தல்' என்பது பிரசித்த வழக்காகும். சோழமுன்னோர் சிலர் இவ்வாறு பள்ளி படுக்கப்பட்ட இடங்களில் அரசர் எடுத்த கோயில்கள் பள்ளிபடை எனப்படும். "ஆற்றூர்த் துஞ்சின தேவர்க்குப் பள்ளிபடையாக உடையார் ராஜராஜ தேவர் எங்கள் நகரில் எழுப்பித்தருளின திருவரிஞ்சிகை யீசுவரத்து மகாதேவர்" (S.I.I. iii- 23) "அக்கன் பள்ளிப்படை" (I. M. P. P. 133) எனக் காண்க. தசரதரது பிரேதத்தை பரதர் ஸம்ஸ்கரித்த செய்தி கூறும் படலத்துக்குக் கம்பர் பள்ளி படைப் படலம் என்று வழங்கியிருத்தல் இங்கறியத்தக்கதாம். இத்தொடர் பொருளின் பழைய வழக்குத் தெரியாமல் இதுவரை பள்ளிப்படைப்படலம் என்றே பலரும் அச்சிட்டலாயினர். ஆனால், நண்பர் ஸ்ரீமாந், கோபால கிருஷ்ணமாசாரியாரவர்கள் தாம் சமீபத்தில் நூதனமாக எழுதி வெளியிட்ட அயோத்யா காண்ட வுரையில் 'பள்ளிப்படைப் படலம்' என்றே கொண்டும் பிரதிகளில்

அவ்வாறுண்மையை விளக்கியும் வெளியிட்டிருப்பது மகிழ்ச்சி விளைக்கத் தக்கது.

கொற்று இலக்கை :—திருநந்தனவனக் குடிகளது கொற்றுக்கும் இலக்கைக்கும் காசு இவ்வளவு என்று கூறப்பட்டிருப்பதை நெடுகக் காணலாம். (S.I.I. iii - 211, 214; v-37 ; iv 293) கொற்று என்பது வேலையாம், இலக்கை என்பது சம்பளம். அதிகச் சம்பளம் என்ற பொருளில், "ஏற்றிலக்கை" என்று ஈடு வியாக்யானம் வழங்குகின்றது. சம்பளத்துக்குப் பண்டையோர் வழங்கிய சொல் இலக்கை என்பது குறிப்பிடத்தகும். இக் கொற்றிலக்கைகள் என்ற பொருள்படவே—"கொற்றிலம் பெறுங் கூழிலமேங்களைக் கொல்வதே பணி" என்று பேய்களின் முறையிடாகச் சயங்கொண்டார் பாடுவர் (124).

அணுக்கிமார் :—அணுக்கியர் என்பவர் அரசர் பக்கத்தில் இருந்து உரியதொழிலை நடத்தி வந்த பெண்பாலார் என்பதும் இவர் ஆடல் பாடல்களில் வல்லவர் என்பதும்—

"நாட, காதி, நிருத்த மனைத்தினும்
நால்வகைப்பெரும் பண்ணினும் மண்ணிய
ஆடல் பாட லரம்பைய ரொத்துள
வணுக்கி மாரு மநேக ரிருக்கவே"

என்று சயங்கொண்டார் அபயனைச் சிறப்பித்தலால் தெரியலாம். இத்தகையோரையே—"உடையார் இராஜேந்திரதேவரணுக்கி நக்கன்பாவை" (S. I. I. iv, 30)—"இத்தேவர் (விக்ரம பாண்டியதேவர்) அணுக்கியார் மதுராந்தகியார்" (மேற்படி 92) (S. I. I. V. 30, iv-16) என்று சாஸனங்கள் கூறுதல் ஒப்பிடத்தக்கது.

பதினெண் விஷயம் அல்லது நாடு :—"பதினெண் விஷயத்தோடும்" (S. iv, 22, 27) "பதினெண் மண்டலத்து அல்லது நாட்டு ஸ்ரீ வைஷ்ணவர்" (v, 140 ; iv, 147) "பதினெட்டு நாட்டாரும்" என்று (S. iii·271) சாஸ்னங்களில் இத்தொடர் பயிலுதல் காணலாம். "நீடு தொல்புகழ் நிலம்பதினெட்டினு நிறைந்த பீடுதங்கிய பவபொருள் மாந்தர்கள் பெருகி" (பெரியபு—489) என்று சேக்கிழார் தங்கால வழக்குக்கு இயையக் கூறுதல் காணலாம். இவ்விஷயம் அல்லது நாடு சோழசாம்ராஜ்யத்தின் உள்ளடங்கிய பெரும்பிரிவுகளே என்பது 10-க்கு மேற்பட்ட விஷயம் அல்லது நாடுகளைக்கூறி—"சகலி நாட்டு

விஷயத்தோமும் பொத்தப்பி நாட்டு விஷயத்தோமும் உள்படப் பெரியநாட்டு விஷயத்தோமும்" எனவரும் நெல்லூர்ச் சாஸன மொன்றால் தோன்றுகின்றது. இந்நாடுகள் உட்பட்ட பெரியநாடு என்றது சோழமண்டலத்தையாம். "இப்படி விடாதார், பெரிய நாட்டார்க்குப் பிழைத்தார்" என அங்குள்ள வேறு சாஸனம் கூறுதலும் அறிக. பெரியநாடு என்ற வழக்குச் சோழ மண்டலத்துக்கு அக்காலத்து பிரபலமாயிருந்த தென்பது—

"வளவனு மகிழ நாமே—நாட்கவிபாடு நாட்போ
விருப்பது பெரிய நாடே"

எனக் கவிச் சக்கரவர்த்தியாகிய கூத்தர் ஈட்டியெழுபதில் பாடுதலால் நன்கு விளங்கத்தக்கது.

வேளம் :—இச் சொல் வழக்கைப்பற்றிக் கலிங்கத்துப் பரணி யாராய்ச்சியில் நன்கு விளக்கியிருக்கிறேன். பகையரசரைச் சார்ந்தவராய்ச் சிறைபிடிக்கப்பட்ட மகளிர் அரசர் பாதுகாவற் குட்பட்டு வாழ்ந்து வந்த மாளிகை 'வேளம்' என வழங்கப் பெற்று வந்ததென்பதும் இதுவே, "வேளம் புகு மடவீர்" எனச் செயங்கொண்டார் பாடியதென்பதும் அவ்வாராய்ச்சியால் விவர மாகத் தெரியக் கூடியன.

ஆயிட்டு :—சிவஞான போதத்தில் "அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை உணர்ந்து மாயிட்டு" என்று சந்தானுசாரியத் தலைவரான மெய்கண்ட தேவரால், எழுதப் பெற்றிருப்பதும் இதற்குச் சிவஞான முனிவர் "ஆகலான் என்பதற்கு ஆயிட்டு என்பது அக்கால வழக்குப் போலும்"—"நீயோ சொல்லாய் நின்மலனுயிட்டு" என்றார் வழி நூலாசிரியரும் (சிவ-சித்தி) என்று உரையிட்டிருப்பதும் அறிஞர் அறிந்தவைகளே. இவ் ஆயிட்டு என்ற சொல் வழக்கு, மெய்கண்டதேவர் காலத் தெழுதப்பட்ட திருவாய் மொழி ஈடு முதலிய வியாக்கியானங்களிலே "ஆயிட்டு, இவனை வேண்டா என்றன்றோ கொடுபுக்கது என்கிறான்" (ஈடு—6, 5, 3) என்று—ஆதலால், ஆனபின்பு என்னும் பொருளில் பிரயோகித் திருத்தலைக் காணலாம். இத்தகைய வழக்குச் சோழ முன்னோர் காலமுதலே வழங்கி வருவதொன்று என்பது—"மஹா சபையோ மெழுத்து ; எம்மூர்ச் தெற்கில் பாமேர்வாவதி நீராயிட்டு ; காவியுங் களனும் உள்ளிட்டு மற்றும் எப்போர்ப்பட்ட சாதியும் இயங்குவது அரிதாயிட்டு. . . . முக்கோலகலத்தால் வழியட்டிக் கீழ்க்கடை நீர் போவதாகவும்" என மதுரைகொண்ட

கோப்பரகேசரி வர்மனது உத்தரமேலூர்ச் சாஸனங் கூறுவதால் தெரியலாம் (S. I. I. VI-147).

உழான் கிழான் :—இவை வேளாளர் தலைவர்க்கு வழங்கி வந்த பட்டப் பெயர்களென்பது—“ குளப்பாக்கிழான், குளத்துழான் ” என உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் புராணத்துக் கூறுதலால் அறியப்படும். “ உத்தரங்கிழான், பூதத்துழான், கருப்புழான் ” என இப் பட்டப் பெயர்களைச் சாஸனங்கள் மிகவும் வழங்குவனவே (S. I. I. VI-38).

ஊர்ப் பார்ப்பான் :—அகநானூற்றில்—“ வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த வளை ” என்ற 24-ம் செய்யுளடிக்கு, அந்நூல் பழைய அரும்பதவுரைகாரர்—வேளாப் பார்ப்பான்—யாகம் பண்ணாத ஊர்ப் பார்ப்பான் ; இவர்களுக்குச் “ சங்கறுக்கையுந் தொழில் ” என்று எழுதியுள்ளார். இதனால், வைதிகச் சடங்கு நடத்தாத பிராமணரை “ ஊர்ப் பார்ப்பான் ” என்பது அக்கால வழக்கென்பது தெரியலாம். ஊர்ப் பார்ப்பான் என்பதனால், இவர்கள் மேற்கொண்ட தொழில், நகராவதிகார முதலிய இலௌகிக விருத்திகள் என்று சொல்லலாம். முதலிராசேந்திரன் காலத்தில் வரையப்பட்ட (தீக்காலிதிரு) வல்லத்துச் சாஸனமொன்று—ஊரார் சொல்ல எழுதினேன் ; இவ்வூர் “ ஊர்க்காரணத்தான் ” ஊர்ப் பார்ப்பான் பரதயன் கிழவன் ஈசுவரசன்மன் ” (S.I.I.IV-90) எனக் கூறுவது மேலே நான் கூறிய கருத்தை நன்கு விளக்குதல் காணலாம். ஊர்ப் பார்ப்பார்க்குச் சங்கறுக்கையுந் தொழில் என்ற அகநானூற்றுரைகாரர் கூற்றால், “ சங்கறுப்ப தெங்கள் குலம் ” என்று கூறிய நக்கீரனார் குலம் இத்தகையது போலும். “ சிறந்த கொள்கையொடு அணிவளை போழுநர் ” என்று சாத்தனார் மணிமேகலையிற் கூறுவது இவ்வூர்ப் பார்ப்பாரது குலவொழுக்கத்தை நினைத்தென்று கருத இடமுண்மையுங் காண்க.

சட்டறங்கள் :—சேரமான் நாயனார் புராணத்தில், சேக்கிழார்—

“ பக்க நெருங்குசாலைதொறும் பயில்சட் டறங்கள் பல்குவன
தக்க வணிகொண்டிடங்க டொறுஞ் சைவ மேன்மை
[சாற்றுவன ”

என்று பாடுவர். இதற்குச் சாஸன வழியாற் பொருள் புலப்படத் தடையில்லை. கோக்கருநந்தடக்கன் என்ற ஆய்வேள் மரபில் வந்த அரசன் சாஸனத்தில்—“ காந்தளூர்ச்சாலை மரியாதையால் 95-வர் சட்டர்க்குச் சாலையுஞ் செய்தான் ” என்று கூறப்படுகின்றது.

இவர்கள் வேதங்களும் சாஸ்திரங்களும் ஓத வேண்டிய முறையும் மற்ற நிபந்தனைகளும் இதனுள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் சட்டர் என்பவர் வேத வேதாங்கங்கள் பயிலும் மாணுக்கர் என்பது நன்கு வெளியாகத் தடையில்லை. (T.A.S. I-6) சாலை என்பது "விராடராசன் செய்வித்த ஆதுல சாலை; களப்பாளராசர் செய்வித்த சாலை; இச்சாலை உண்மைக்கு;" என்பவற்றால், தர்மமாக உணவளிக்குமிடம் என்ற பொருளுடையது. ஆகவே, சாஸ்திரங்கற்கும் மாணுக்கர் பொருட்டுச் செய்யப்படும் அறங்கள் சாலைகளில் நிரம்பியுள்ளன என்ற கருத்தில் சாலைதொறும் சட்டறங்கள் பல்குவன என்று சேக்கிழார் பாடியுள்ளார் என்பது தெரியலாம். சட்டமறங்கள் சட்டறங்கள் என்று திரிந்ததாம்.

அங்காரங்கவைபவம் :—" அம்புவியி லங்கரங்க வைபவங்கட் கான பரிகலந் திருநாள் பூசை கற்பித்து" என்று உமாபதி சிவாசாரியர் சேக்கிழார் புராணத்துப் பாடுவர், "ஸ்வாமிக்கு அங்கரங்க வைபவத்துக்குக் கொடுத்த கிராமம்" (S. I. I. I-7) என்பது சாஸனம். இது, 'அங்கரங்க வைபவம்' எனப் பதிப்பிடப்பட்டுள்ளது.

திருவடிபிடித்தல் :—" ஆடகமாடத் தரவணைத் துயின்றோன் சேடக் குடும்பி" என்ற சிலப்பதிகாரவடியில்—சேடக்குடும்பி திருவடிபிடிப்பான்" என்று பொருளெழுதுவர் அந்நூல் அரும்பதவுரைகாரர். இதனால், திருமால் கைங்கரியம் புரியும் அருச்சகனுக்குத் திருவடிபிடிப்பான் என்ற வழக்குப் பழைமையானதென்பது தெரியலாம். "நடுவிற் கோயில் திருவடிபிடிக்கும் ஸ்ரீதரபட்டனும்" (S.I.I. iii-84) "இவை திருவடி பிடிக்கும் ஸ்ரீபராங்குசபட்டன் எழுத்து" (I bid-5-321) சாஸனத் தொடர்கள் இவ்வழக்கின் உண்மையை விளக்குதல் காண்க. "கேசவ நம்பியைக் கால்பிடிப்பா னென்னும் இப்பேறெனக்கருளுகண்டாய்" என்பது ஆண்டாள் பாசுரமாதலின், திருமாலின் திருவடி நிலையைப் பிடித்துக் கைங்கரியம் புரிபவன் என்பது திருவடிபிடித்தற்குப் பொருளாகும். திருவடிநிலையான ஸ்ரீசடகோபத்தைத் தாங்கி நிற்பவன் எனப் பொருள் கொள்ளினும் அமையும்.

ஓட்டை :—மூன்றும் வேற்றுமைப் பொருளில் இப்பதம் வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் அடிக்கடி பயிலுதல் காணலாம். "பர்வத பரமாணு வோட்டை வாசிபோரும்" (திவ்-திருப்பாவை-

ஆவ) " நம்மோட்டைக் குடற்றுடக்கு" (ஈடு 9-3 ப்ர) எனக் காண்க. இவற்றைப்போலவே—" சபையோரோட்டை.......இருப்பதாகவும்" என்ற தொடர் சாஸனங்களில் பயில்வனவாம் (S.I.I. iii-172)

திருவலகு திருமெழுக்கு :—" திருவலகுமிட்டுத் திருமெழுக்குஞ் சாத்தி" (409), " திருவலகுபணிமாறித் திருமெழுக்கிட்டு" எனச் சேக்கிழார் பாடுவர். கோயிலைப் பெருக்கிச் சாணத்தால் மெழுகி என்பது இதன் பொருள். இவ்வழக்கே—" திருவலகிட்டுத் திருமெழுக்கிடுவார்" (S. iii-287) திருவலகு திருமெழுகு (iv-231) எனச் சாஸனங்களிலும் பயில்வனவாம்.

ஒடுக்குதல் :—பண்டாரத்தில் செலுத்தல், " எம்மையாளு மொருவர்தம் பண்டாரத்தி லடைவுற வொடுக்கி" என்பர் சேக்கிழார். (பக். 134) இத்தேவர் பண்டாரத்தில் ஒடுக்கின பொன் (S.I.I. V-85.) விலை கொண்ட பிரமாணங்கள் கோயிலிலே ஒடுக்குவதாகவும் (V-37) என்பன சாஸனங்கள்.

ஓபாதி :—போல என்னும் பொருளுடையது. சாட்டிற்குக் கடாவோ பாதியாகப் பூட்டி (பதிற்-பக்.-68) என்பது பதிற்றுப் பத்துரை. வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் இச் சொல் வழக்கை மிகுதியாகக் காணலாம். " எங்களோடபாதி செய்ய வேணுமென்று" (S. V.-107) " ஊரோபாதி" (iv 27 29'; என்பன சாஸனங்கள்.

உடலாக :—காரணமாக, கருவியாக என்பது பொருள். "மழைக்கு உடலான நாள்கோள்களுக்கு" என்பது பதிற்றுப் பத்துரை. " ஒளிவிளக்கேற்றற் குடலிலனாய்" என்பது பெரிய புராணம். இது சாஸனங்களில் மிகுதியும் வழங்குஞ் சொல்லாகும்.

கடையீடு :—கீழதிகாரியின் உத்தரவு என்பது பொருள். "சேதிராயர் கடையீட்டுப்படியும்" (S. S. V.29; iv-312) என்பது சாஸனத் தொடர், " திருமுகமறுத்தவன் கடையீட்டுக்குக் கேட்கப்புகுகிறானே" என்பது ஈடுவியாக்கியானத் தொடர் (1, 4, 4).

கூறு செய்வார் :—வரிதண்டும் ஊரதிகாரிகள், " வரிக்குக் கூறு செய்வார்" என்பது சாஸனம் (S.I.I. 37) " ராஜாக்கள் ஊர் தோறும் கூறு செய்வார்களை வைக்குமா போலே" ஈடு (5-2-8) என்பது ஈடு வியாக்கியானத் தொடர்.

நாலுய்ந்தேன் :—சிவபிரான் திருவாணைப்படி; திருநாளைப் போவாரை அக்னிப் பிரவேசஞ் செய்வித்துச் சுந்தராக்கிக்

கொணர்தற்குத் தில்லைவாழந்தணர் திரண்டு அவர்முன் சென்று தாம் வந்த காரியத்தைக் கூற—

“நையு மனத் திருத் தொண்டர்
நானுய்ந்தே னெனத் தொழுதார்” (பெரிய-பு-166)

என்று சேக்கிழார் பாடுகின்றார். இவ்வாறு, திருநாளைப் போவார் கூற்றில் வைத்து அவ்வாசிரியர் பாடிய சொல்வழக்கு, திருமால் கோயில்களுள் இன்றும் கேட்கப்படுதல் அருமைப்படத் தக்க தாகும். ஸ்வாமியின் அருளிப்பாடாக அல்லது கட்டளையாக உரியவர்கள் தத்தம் தொழில்களைச் செய்தற்கு அழைக்கப்படும் போது, அவ்வழைக்கப்படுபவர் “நாயிந்தே” என்று சொல்லிக் கொண்டு ஸ்வாமி திருமுன்பு வருவது இன்றும் வைஷ்ணவ ஸம்பிரதாயமாகும். இதனுண்மையுருவம் இதுவரை நிச்சயிக்கப் படாமலிருந்ததாயினும், சேக்கிழார் வாக்கால், “நானுய்ந்தேன்” என்பதே ‘நாயிந்தே’ எனத் திரிந்து வழங்குவதென்று தோற்று கின்றது.

சாஸனத் தமிழ்ச் செய்திகள்.

IV. பிற்காலம்.

சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் தமிழரச ரான சேர சோழ பாண்டியர் மூவரும், வடவேங்கடந் தென் குமரிகட்கு உட்பட்ட தமிழ்கூறு நல்லுலகத்தையன்றி வேற்று மொழி பயிலும் நாடுகளைத் தம் கீழ்ப்படுத்தி யாளச் சிறிதும் எண்ணங் கொண்டவரல்லர். தமிழகமே தங்கள் தேசம் என்ற பேரபிமானம் அவர்களுக்குள் மிகுதியும் இருந்தமையால், அந்நிய பாஷை வழங்கும் நிலப்பகுதிகளைத் தங்கள் தேசத்துடன் கலப்பதில் அவர்கள் விருப்பங் கொண்டிருந்தவரல்லர்.

“நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு”

“தமிழ்கெழு மூவர் காக்கும், மொழி பெயர் தேஎம்”

“பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழி பெயர் தேஎம்”

என்ற தொடர்கள் இக்கருத்தையே வெளியிடக் கூடியன. இக் காலத்தில் தமிழரசர்க்கும் வடுகர் முதலியவர்க்கும் பெரும்போர் நடந்ததாகச் சங்க விலக்கியங்கள் காணக் கிடையா. ஆனால்,

வேற்றரசர் தமிழகத்துட் புகமுயன்ற காலங்களில், மூவேந்தரும் ஒருங்கு திரண்டு தங்கள் நாட்டிலே அவர்கள் தலை நீட்டவும் முடியாமல் தடுத்து வந்தனர். இவர்களைப் போலவே, வடுகர் கன்னட வேந்தரும் தமிழ்நாட்டை ஆளமுயன்ற செய்திக்குப் பிரமாணங் காணப்படாமையால், அவர்களும் முற்காலத்தே தமிழருடன் அமைதி பெற்றிருந்தவரென்றே சொல்லலாம்.

இங்ஙனமிருந்த தமிழ் வடுகரது நிலைமை சங்க காலத்துக்குப் பின்பே மாறுவதாயிற்று. இம் மாற்றத்திற்குக் காரணம் தமிழர் வடுகரன்றி, வடக்கிருந்து படையெடுத்து வந்த வேற்றரசரே யாவர். பல்லவர், சளுக்கர் என்ற வடவேந்தர்கள், ஆந்திரம், கன்னடம் முதலிய தேசங்களை வென்றடிப்படுத்திய காலங்களில் அவர்கள் பேராசை தமிழ்நாட்டையுங் கவர்ந்தது. அது முதலே, தமிழர்க்கும் வடவர்க்கும் நடந்த போர்ச் செய்திகள் கேட்கப் படுகின்றன. இவ்வாறு, தமிழகத்தை முதலிற் கைப்பற்றிய வடவேந்தர் பல்லவர் என்போர். இவர் வரலாற்றைப் பற்றி முதலுபந்நியாசத்தில் கூறிவிட்டேன். இவர்க்கும் வடுகர்க்கும் பல போர்கள் நடந்தன என்பது சரித்திர மூலமாகத் தெரிகிறோம். "தொண்டைப் பல்லவனுணையின் வெட்சித்தாயத்து வில்லேருழவர், பொருந்தா வடுகர் முனைச்சுரங், கடந்து கொண்ட பல்லா நிரையே" என்ற பழஞ் செய்யுளும் இதனைப் புலப்படுத்தும். இப் பல்லவரிடமிருந்து, 9-ம் நூற்றாண்டில் சோழர் தங்கள் பழைய ராஜ்யத்தைக் கைப்பற்றியது முதல் அவர்களால் ஆந்திரதேசமும் வென்று அடிப்படுத்துக் கொள்ளப்பட்டது. முதலிராசராசன் கால முதல் விக்கிரம சோழன் வரை ஆந்திரதேசத்தின் ஆதிக்கம் சோழர் வசமே இருந்தது. இவ்வாட்சிக் காலத்தில், அந்நாட்டுச் சளுக்கரசர், பொய்சளர் முதலியவருடைய சம்பந்தம் சோழர் குலத்தில் மிகுதியும் ஏற்பட்டது. முதற் குலோத்துங்கன் ஆந்திர வரசனைச் சோழனவன் என்பதை நாம் அறிவோம். இவ்வாறே மூன்றாங் குலோத்துங்கன் கன்னட நாட்டு ராஜகுமாரனைச் சோழ குலம் புக்கவன் என்று தெரிகிறது. இவ்வாறு சோழ ராதிக்கம் தெலுங்கு, கன்னட நாடுகளினும் 12-ம் நூற்றாண்டு முடிய இருந்து வந்ததென்பது சரித்திரபூர்வமாகத் தெரிகிறோம்.

இச் சோழரது சாம்ப்ராஜ்யம் 13-ம் நூற்றாண்டோடு வீழ்ந்த தென்னலாம். இவர்கள் வீழ்ச்சிக்கு, சோழர் படைத்தலைவர்கள் ஒருபக்கமும், தெற்கே பாண்டியர் ஒருபக்கமும் முக்கிய காரண

மானவர். அப்படைத்தலைவர்களிலே, கோப்பெருஞ்சிங்கன் என்ற பல்லவவமிசத்தவனும் பொன்பரப்பி வாணகோவரையனும் தங்கள் அரசனுக்கு விரோதமாகக் கிளம்பிக் கலகம் விளைத்தவர் களென்று மேலே கூறினேன். (கி. பி. 1259=T. A. S. II, p. 55). பாண்டியர்களில், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பான் சிறந்தவன். இவன் பெருவலி படைத்தவனாய்ச் சோணாடு தொண்டை நாடுகளைக் கைப்பற்றினான். இவனுடைய சேனாபதி களுள் கப்பலூர்க்கருமாணிக்கன் என்பவன் ஒருவன் என்று தெரியவருகிறது. இவனைப் பற்றிப் பின்பு தெரிவிக்கிறேன். இவனையும் இவனுக்குப்பின் வந்த பாண்டியர் சிலரையும் பற்றிய தனிப்பாக்கள் பல வழங்குகின்றன. அவற்றை நான் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டுவரும் பெருந்தொகை என்ற நூலுள் சேர்த்துள்ளேன். இவ்வாறு, பாண்டியர் சிலர் இடையில் சில காலம் தலையெடுத்தனராயினும், அதனை யெல்லாம் கீழடக்கி மேலோங்கிய பேராட்சி வடக்கே தோன்றுவதாயிற்று. 12-ம் நூற்றாண்டு வரை சோழாதிக்கம் ஆந்திர தேசத்தையும் வியாபித்திருந்ததுபோய், ஆந்திர வாதிக்கம் தமிழகமுழுமையும் வியாபிக்கும்படி காலசக்கரம் மாறிச் சுழல்வதாயிற்று. சோழ ராஜ்யம் நிலைகுலையவும், அந்நாட்டுத் தலைவர்கள் சிறியவும் பெரியவுமான நாடுகட்குச் சுவாதீனவரசராயினர். அக்காலத்தே வடக்கிருந்து வேகமாகப் படையெடுத்துவந்த துருக்கவரசர், ஆந்திர நாட்டிலும் தென்னாட்டினும் புகுந்து சூறையாடினர். அப்போதுதான் தென்னாட்டின் சனாதனதர்மங்களைக் காப்பதற் கென்றே விஜயநகர ராஜ்யம் உதயமாயிற்று. 14-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அம்மகாராஜ்யம் பிரபலமாகித் தென்னாடு முழுமையும் கைப்பற்றி அவற்றின் பழைமையான தர்மங்களையும் சமய நிலைகளையும் காப்பாற்றியது என்பது யாவரும் அறிந்ததே. அவ்விஜய நகர ஏகாதிபத்தியத்தை அம்பி மாநகரிலிருந்து ஆண்டு வந்த அரசர்களும் அவர் பிரதிநிதிகளும் தமிழ் நாட்டவரிடத்தும் அந்நாட்டுத் தேவாலயம் முதலிய தர்மஸ்தாபனங்களிடத்தும் அபிமானமும் ஆதரவும் மிக்குடையவராயிருந்தவர் என்பதற்கு வேண்டிய சாஸனங்கள் நாடெங்கும் உள்ளன. இவ்விஜயநகர வேந்தராது ஆதிக்கம் மேலோங்கியிருந்த 14 முதல் 17-ம் நூற்றாண்டு வரை பல சிறந்த தமிழ்ப் புலவர்கள் விளங்கலாயினர். அவருட் பலர், அவ்வாந்திரவேந்தரது அபிமானத்துக்கு உள்ளான வர்களாயிருந்தவர். அக்காலத்து விளங்கிய புலவர்களைப் பற்றிச் சாஸனவழியால் அறியப்படுவனவற்றை இனிக் கூறுகிறேன்.

1. கருமாணிக்கன் கோவை நூலாசிரியர்

"கப்பற்கோவை" என்ற நூலின் பாடல்கள் சிலவற்றைத் தமிழ்மக்கள் நன்கறிவர். இது கருமாணிக்கன் மேற்பாடப்பட்ட நூலாகும். கருமாணிக்கன் கோவை எனவும் இது வழங்கும், இக் கோவை முழுதும் அடங்கிய பிரதியொன்று, ஆழ்வார் திருநகரி ஸ்ரீமத் தேவர் பிரான் கவிராயரவர்களால் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குக் கிடைத்தது. அருமையான அப்பிரதி சில வருஷங்கட்குமுன் தீவாய்ப்பட்டு விட்டது. அவ்வேட்டை யாராய்ந்து நான் எழுதிக் கொண்ட குறிப்புக்களே இப்போது கிடைப்பன எனலாம். இந்நூல் பாடிய ஆசிரியர் இன்னார் என்பது இப்பிரதியால் தெரியவில்லை. இவ்வாசிரியர்,

உமையாளு மீசனும் போலுட னுயுயர் பூந்திருவும்
எமையாளு மாயனும் போலிருப்பீர் (334)

என்று கூறுதலால், இவர் திருமால் பத்தியிற் சிறந்தவரென்பது மட்டிற் புலப்படுகிறது. இக்கோவையின் பாட்டுடைத் தலைவனை கருமாணிக்கன், பாண்டி நாட்டுக் கப்பலூர், துவரை என்னும் ஊர்களிலிருந்தாண்டவன். இவன் பாண்டியனுக்கு மந்திரியாகவும், தளகர்த்தனாகவும் விளங்கினவனென்பது,

"கருமாணிக்கன் கைதவற்குப், பாராளும் வீரப்பரி
[வீரநாரணன்" (126)

"கருமாணிக்கன் கைதவர்தந்தளத்துக் கொருவன்" (334)

எனவரும் அடிகளாற் றெரிகின்றது. இவ்வாறு இவன் பாண்டியன் கீழ்த் தலைமை வகித்தமை பற்றித் "தொண்டைமான்" என்னும் பட்டம் பெற்றான். தொண்டைமான பேரரசர்க்குத் தொண்டனான தலைவன். இக்கருமாணிக்கன் பாண்டியன் மந்திரியானமையால் "சுறவார் கொடியுயர்த்தோன்" (105) எனவும் செங்கழுநீர் மாலையும் துளவமாலையும் முறையே போர்ப்பூவும் தார்ப்பூவுமாகக் கொண்டவனானமையால் "கல்லார நாண்மலர்த்தார்" (175) "துளவம்புனைபுயன்" (151) எனவும் கூறப்பட்டுள்ளான். இச் சிற்றரசன் யாதவ குலத்துதித்தவன் என்பது,

"சேயோ னெனுந்திற லான்றிரு மேனி வலம்புரிபோற்
றூயோன் வழிவந்த தொண்டையர் கோன்கப்பல்" (11)

"உலகம் புகழ்பதி னாறுயிரவர் உளங்கவர்ந்த
கலகன் குலதில கன்கருமாணிக்கன்" (379)

எனமுறையே, யாதவகுலத் தவதரித்த பலராமனையும் கண்ண பிரானையும் இவன் குலத்தலைவர்களாகக் குறித்திருத்தலால் தெளிவாகின்றது. இவன் கல்வி கொடைகளில் மிக்கவனென்பதை,

"எண்ணெண் கலைதேர் கருமாணிக்கன்" (360)

"உபயகுலோத்தமன், கொண்டலன்ன கைத்தாமரைத்
தொண்டைமான்" (68)

என்பவற்றால் அறிக.

இனி, இக்கருமாணிக்கன் வீரப்பெருமைகள் சிலவும் இக்கோவையால் விளங்குகின்றன. இவன் வடநாட்டரசர் பலருடன் போர்புரிந்து வெற்றி பெற்றானென்பதும், கன்னடவரசன் நாட்டையும், காடவ வரசன் மண்ணையுங் கவர்ந்தவன் என்பதும்—

"மதியா வட மன்ன ருடல், துள்ளப் படை தொட்ட
தொண்டையர் கோன்" (47)

"போயறி யாவட மன்னர்பின் னணிப் பொருசரங்க
ளேயறி யாத வில்லான்" (178)

"கன்னடர் மண்கவருங் கருமாணிக்கன்" (395)

"அடல்மா னடவிக், காடவர் மண்கவருங் கருமாணிக்கன்"
[(222)

என்று வருவனவற்றால் உணர்க. இவன் வென்ற வடவரசர்கள் கங்கைப் பக்கத்தவ ரென்பது—

"வங்கருங் கொங்கரும் வந்துநின் றேத்தவடவாசர்
கங்கைகொண் டான்தொண்டை மான்" (41)

என்று கூறுதலால் விளங்கும். அன்றியும், இவன் கலிங்க நாட்டரசனுக்குத் துணைவனென்று, காலிங்கர்கோன் இருந் துணைவன் தொண்டைமான்" என்னும் அடி கூறுகின்றது.

இக்கருமாணிக்கன் வரலாறுகளில், வடவரசரை வென்றது, கன்னடர் நாடு கவர்ந்தது, காடவர்மண் கவர்ந்தது என்னும் வீரச் செயல்களை நோக்கும்போது, உத்தேசம் கிபி பதின்மூன்றாம் நூற்றாண்டில் (சக-1172) பாண்டி நாட்டை ஆட்சிபுரிந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியனே இவன் தலைவனா யிருக்கக்

கூடுமென்று தோற்றுகின்றது. அப்பாண்டியன் சாஸனப் பாடல்களிற் கண்டபடி,

"மீளா வழிசெல்ல வேணாடர் தங்களை வென்றதடந்
தோளான் மதுரைமன் சுந்தரபாண்டியன் சூழ்ந்திறைஞ்சி
ஆளான மன்னவர் தன்னேவல் செய்ய அவனிமுட்ட
வாளால் வழிதிறந் தான்வட வேந்தரை மார்திறந்தே"

என அவன் வடவேந்தரைக் கொன்று வென்றதும்,

"பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கை டரக்க [வெள்வேற்
கண்பட்ட முத்த வடங்கண்டுங் காக்கிலன் காடவர்கோன்
எண்பட்ட சேனை யெதிர்பட்டொழிய வெழுந்தடுண்ணர்
விண்பட் டலையப் படைதொட்ட சுந்தர மீனவனே"

என அவன் காடவனை வெற்றி கொண்டதும்,

"பெருவரை யாணிற் பின்னகர்க் காக்கிய
கருநட ராசனைக் களிறுதிறை கொண்டு"

என அவன் கருநாடராசனைத் திறைகொண்டதும் முறையே—பாண்டிய தளகர்த்தனான கருமாணிக்கன் செயல்களாக மேற்குறித்தவைகளோடு ஒத்திருத்தலால் சுந்தரபாண்டியனை இவன் அரசனாகக் கருத நியாயமுண்மை காண்க. சுந்தரபாண்டியன் இவ்வரசர்களை வென்ற வரலாற்று விரிவை அச் சாஸனங்களின் தலைப்பில் ஸ்ரீமாந் கோபிநாதராயரவர்கள் எழுதியுள்ள குறிப்பினாற் றெரிந்து கொள்ளலாம். இங்ஙனம், சிறந்த தளபதியொருவனைச் சுந்தரபாண்டியன் கொண்டிருந்ததனாற்றான்,

"எய்தலிங் கெம்மை யெளிதல்ல காணு மிறைவனென்று
கைதவன் பார்புகழுங் கருமாணிக்கன்" (92)

"கருமாணிக்கன், கைதவர்க்குப் பாராளும்
வீரப்ரி வீர நாராயணன்" (185)

"சோமன் குலம்புரக்குந் தொண்டைமான்" (246)

"கைதவர்தந் தளத்துக் கொருவன்" (340)

என்று இக்கோவையில் அங்கங்கு இத்தளகர்த்தன் புகழ்ப்பட்டனன் போலும். இனி, கருமாணிக்கனைப்பற்றி சில சாஸனங்களால் அறியப்பட்டதுண்டா என்று என் நண்பர் ஸ்ரீ கோபிநாதராயரவர்களை உசாவியபொழுது, அவர்கள், கருமாணிக்கன் என்ற பெயரைப் புதுக்கோட்டை சம்ஸ்தானத்துள்ள சாஸனங்களிற்றாம்

கண்டது ஞாபகத்துள்ளது என்றும், இவன் கானனுடான அச் சம்ஸ்தானத்தின் தென்பக்கத்தையாண்ட ஒரு சிற்றரச னென்றும், இவன் கிபி 13-ம் நூற்றுண்டு முதல் ஆண்டு வந்த பாண்டியரின் கீழிருந்தவனுதல் வேண்டுமென்றும் அன்புடன் தெரிவித்தார்கள். இவர்கள் கூறியபடி, புதுக்கோட்டை சம்ஸ்தானத்தின் தென் பாகத்தே ஆண்ட கருமாணிக்கன் ஒருவனிருந்ததுண்டு என்பது சாஸனங்களால் இப்போது விளங்குகின்றது. கோனேரின்மை கொண்டான் சாஸனத்தில் "முத்தூர்த் துவரை கப்பாலூரான உலகளந்த சோழநல்லூர்க் கரியமாணிக்காழ்வான் திருவுடை நாயகரான வீரபாண்டியக் காலிங்கராயர்" என்ற சாஸனத் கொடரால் இவனிஞனென்பது தெரியலாம். முத்தூர்துவரை என்பதனல் அது புதுக்கோட்டையின் ஒரு பகுதியைச் சார்ந்த ஊரேயாகும். இப்போது அவ்வூர் துவரங்குறிச்சிகப்பலூர் என்று அவை வழங்குகின்றன. 'காலிங்கர்கோ னிருந்துணைவன்' என்று அக்கோவை கூறுதற் கேற்ப இவனுங் காலிங்கராயன் என்ற குலப்பட்டத்தைத் தரித்திருத்தலும் பொருந்துகின்றது.

2. இரட்டைப்புலவர்

முடவருங் குருடருமாய் ஒருவர்க் கொருவர் உதவியாகத் தமிழ் நாடெங்குஞ் சஞ்சரித்துத் தங்கள் அரும்புலமைத்திறத்தால் பெரும்புகழ் படைத்து விளங்கிய இப்பாவலர்களைப் பற்றி நம் நாட்டிற் கேள்வியுருதார் அரியரெண்ணலாம். இவர்கட்கு இளஞ் சூரியர் முதுசூரியர் என்பன பெயர்கள் என்று தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது. இவர்களியற்றிய நூல்கள், திருவாமாத்தூர்க் கலம்பகம், ஏகாம்பரநாதருலா முதலியனவாம். வில்லிபுத்தூரரை அபிமானத்தவனுகப் பாரதப் பாயிரத்தால் அறியப்படும் திருவக்கை வரபதியாட் கொண்டான் என்ற கொங்கர் கோமானை இவ்விரட்டையரும் பாடியிருத்தல் அறியப்படுதலின், அவ்வில்லி புத்தூரரும் இப்புலவர்களும் சமகாலத்தவர்கள் என்பது தெளி வாகின்றது. இனி, இவ்விரட்டையரியற்றிய ஏகாம்பரநாத ருலாவில்—

"வடித்தசுடர் வேற்சம்பன் வாழ்மல்லி நாதன்
கொடுத்த திருத்தேர்மேற் கொண்டு"
"செம்பதுமை கேள்வன் திருமல்லி நாயனுயர்
சம்புபதி நல்குந் தடந்தேர்மேல்"

என்ற கண்ணிகள் வருகின்றன. இவற்றுள் சம்புகுலத்தவனை திருமல்லிநாதன் என்ற அரசனல் கச்சி-ஏகாம்பரநாத சுவாமிக்குத்

திருத்தேரொன்று அமைத்தளிக்கப்பட்ட செய்தி கூறப்படுதல் காணலாம். சம்பன், சம்புபதி என்பன, சம்புவராயர் எனச் சாஸனங்களிற் காணப்படும் சிற்றரசரைக் குறிப்பனவாகும். சோழவாதிக்கம் தென்னாட்டில் நிலைகுலைந்த பிற்காலத்தில் அச் சோழர்கீழ்ச் சேனைத்தலைவராகவும் அதிகாரிகளாகவும் இருந்த இச் சம்புவராயர் தொண்டைமண்டலத்துக்குத் தாமே அரசராகி அந்நாட்டை ஆட்சிபுரிந்து வரலாயினர். இவருள், இராச நாராயண சம்புராயன் என்பான், கிபி 1337-ல் பட்டம் பெற்றவன். இவன் சாஸனங்கள் தொண்டைமண்டலத்தே திருக்கழுக்குன்றம், திருக்கச்சூர், கூலம், நெரும்பூர், குடிமல்லூர் முதலிய தலங்களில் உள்ளன. சம்புவராயர்களில், இவனே மல்லிநாதன் திருமல்லி நாதன் என்ற பெயர்களாற் சாஸனங்களிற் சிறப்பிக்கப் படுபவனுவான். ஆகவே, "சம்பன் மல்லிநாதன்" "திருமல்லி நாதன் உயர் சம்புபதி" என்று இரட்டையராற் பாடப்பெற்ற வேந்தன் மேற்கூறிய சாஸனங்கள் கூறுமவனே என்பதில் தடையில்லை என்க. இச் சம்புவராயன் விஜயநகர வேந்தாதுளகர்த்தரான கம்பணவுடையாரால் வெல்லப்பட்டு அவ்வேந்தர் கீழடங்கிய சிற்றரசன் ஆயினன் என்பர். இவற்றுல், இற்றைக்கு 590 ஆண்டுகட்கு முன் விளங்கியவர்களே இரட்டையர்களென்பது பெறப்படுதல் கண்டுகொள்க.

3. பெரும்பற்றப் புலியூர் நம்பி

இப்பெயர் பெற்ற புலவர் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் இயற்றியவர் என்பதும், வேம்பத்தூர்ச் சோழியர் பிராமணர் என்பதும் பிறவும் மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் பதிப்பித்தருளிய அப்புராணத்து ஆசிரியர் வரலாறு முதலியவற்றுல் நன்கறியப்பட்டவை. இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் அகஸ்தியேசுவரர் கோயிலின் முதற்பிரகாரத்துத் தெற்குத் திருமதிலிற்கண்ட சாஸனமொன்று மாறவர்மன் குலசேகர பாண்டியனது (1268–1308) 36-ஆம் ஆட்சி வருஷத்து அமைந்ததாக உள்ளது. இதனுள், மேற்படி ஊர்க்கோயில் அர்ச்சகர்களால் பெரும்பற்றப்புலியூர்நம்பி என்பார்க்குச் சில பூமிகள் தானமளிக்கப்பட்ட செய்தி காணப்படுகின்றது. இந்நம்பி, முற்கூறிய திருவிளையாடற் புராண ஆசிரியரே என்று கருதற்கும் பொருத்தம் உண்டு. அப்புராணத்தை இவ்வாசிரியர் "கார்வளங் கொண் மண்டிலத்து கப்பிஞ்சி நாட்டுரைத்தவர்" என்று அவர் பாயிரவடியால் அறியலாம். கப்பிஞ்சி நாடு என்பது மேற்படி

திருப்பத்தூர்ச் சேகரத்தை யடுத்துள்ள மருங்காபுரி ஜமீனின் ஒரு பகுதியாகும். (இச்செய்தி சேது சமஸ்தானம் மகாவித்வான் ஸ்ரீ. ரா. ராகவையங்கார் அவர்களால் அறிந்தது.) ஆகவே, திருவிளையாடற் புராணவாசிரியர் அப்பக்கத்தவராகவே விளங்குதலின் திருப்பத்தூர் அருச்சகர்களால் பூமியளிக்கப் பெற்ற பெரும்பற்றப்புலியூர்நம்பி அவ்வாசிரியரென்று கருதக்கூடியதாதல் காண்க. இவ்வாருயின், 1268-ல் பட்டம் பெற்ற மாறவர்மன்—குலசேகர பாண்டியன் காலத்தவரே இந்நம்பி என்பது பெறப்படும். ஆனந்தத்தாண்டவநம்பி என்பார் இப்பெரும்பற்றப்புலியூர் நம்பியின் வமிசத்தவர் என்பதும் அந்நம்பியின் மனைவி சக வருஷம் 1150-ல் (கி.பி. 1227) மதுரை ஸ்ரீமீனுட்சி சந்நிதிக் கோபுரம் கட்டிவைத்தவள் என்பதும் திருவாலவாயுடையார் கோயில் வரலாறுகளால் தெரிகின்றன. இதனுல் முற்கூறிய நம்பி, இவ்வாசிரியரது நெருங்கிய முன்னோராதல் வேண்டும் என்று சொல்லலாம். (திருவாலவாயுடையார் திருப்பணிமாலை, 13; மேற்படி கோயில் திருப்பணி விவரம் பக். 15.)

4. வாமன முனிவர்.

மேருமந்திர புராணம் என்ற சைன நூலின் ஆசிரியர் இவர் (1383). இவ்வாசிரியர் காஞ்சிபுரத்துக்கடுத்த திருப்பருத்திக் குன்றம் என்ற ஊரினர் என்றும், அவ்வூரிலுள்ள ஜினலயத்தின் மாத்தடியில் மல்லிஷேணர் புஷ்பசேனர் என்ற குரு சிஷ்யர்களான இருவர் பாதங்கள் பொறிக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றின் கீழ் எழுதப்பட்ட சுலோகம் ஒன்றில் "வந்தேஹம் வாமனுசார்யம் மல்லிஷேண முநீச்வரம்" என வருந் தொடரால் மல்லிஷேணர்க்கு வாமனுசாரியார் என்பது மறுபெயர் என்பது தெரியலாகுமென்றும், இவ்வாமனுசாரியார் வடநூல் வியாக்யானங்கள் பலவும் செய்தவரென்றும் நீலகேசிக்குச் 'சமயதிவாகரம்' என்ற உரையிட்ட வாமன முனிவர் இவரேயாக வேண்டுமென்றும் 'உபய பாஷா கவிச் சக்கரவர்த்தி' என்ற சிறப்புப் பெயர் இவர்க்கு வழங்கியதுண்டு என்றும் சென்னை இராசதானிக் கலாசாலைத் தத்துவசாஸ்திர போதகாசிரியர் ஸ்ரீமாந் அ. சக்கரவர்த்தி, M.A., அவர்கள் மேருமந்தரபுராணப் பதிப்பு முகவுரையுள் எழுதியிருப்பவை இங்கு அறியத்தக்கன. திருப்பருத்திக் குன்றத்து ஜினலயத்தின் எதிர்மண்டப மேற்பகுதியில் வரையப்பட்ட சாஸனமொன்ருல் இவ்வாமனுசாரியரின் சிஷ்யரான புஷ்பசேனர் விஜயநகர வேந்தரான இரண்டாம் புக்கராஜருடைய சேனுபதி

இருகப்ப—தண்டநாதனுடைய ஆசாரியார் என்பதும், இவ்வாசாரியாது விருப்பத்தின்படி அம் மண்டபத்தை மேற்படி தண்டநாயகன் கட்டிவைத்தவன் என்பதும், இது கி. பி. 1387-8-ல் நிகழ்ந்ததென்பதும் தெரிய வருகின்றன. (Ep. Rep. No. 42 of 1830) இத்தண்டநாதனே சக வருஷம் 1305 (கி.பி. 1383)-ல் தன்னரசன் புக்கராஜன் தர்மமாகச் சில பொருள்கள் மேற்படி ஜிநாலயத்துக்கு அளித்தனன் என்று மேற்படி ஆலயத்து வடக்கு மதிலடியிற் கண்ட சாஸன மொன்று கூறுகின்றது. (I bid, No. 41 of 1890) இவற்றால், புஷ்பசேனர் 14-ம் நூற்றாண்டினனான இருகப்பனுக்கு ஆசாரியார் என்பது தெளியப் பட்டமையின் அவ்வாசாரியரின் குருவான வாமனாசாரியரும் அக் காலத்தை அடுத்திருந்தவர் என்பது பெறப்படுதல் காண்க. "தவராஜராஜன் குறுமுனிவன்" என்று மேருமந்தர புராண ஆசிரியர் கூறப்படுதலின் (மேருமந்தர புராண விறுதியிற் கண்ட வெண்பா) மல்லிஷேணர் என்பது அவரது இயற்பெயரென்பதும் குறுகிய உருவினராயிருந்தமையின் வாமனாசாரியர் என்பது இவர்க்கு வழங்கிய சிறப்புப் பெயருமாகக் கருதக் கூடியன.

5. சாளுவத் திருமலைராயர்.

விஜயநகர வேந்தர்களிலே மல்லிகார்ச்சுன ராயர் (1449–1465) விரூபாக்ஷராயர் (1466–1485) காலங்களில், தமிழ் நாட்டின் ராஜப் பிரதிநிதியாய் அனுப்பப்பட்டு ஆட்சி புரிந்துவந்தவர், சாளுவத் திருமலை ராயர் என்பவர். தென்னாட்டிற் பல வருஷம் அப்பதவியை நிர்வகித்துவந்த இவர் தமிழில் அறிவுடையராயிருந்ததோடு தமிழ்ப் புலவர்களிற் சிறந்தவர்களைப் பெரிதும் ஆதரித்தும் வந்தனர். இவர் காலத்திற்றான் காளமேகப் புலவர் என்ற ஆசுகவிச் சிங்கம் விளங்கியது. திருமலைராயர் சபைக்குக் காளமேகம் முதலில் எழுதிவிடுத்ததாகத் தமிழ் நாவலர் சரிதையிற் கண்ட பாடல் அடியில் வருமாறு :—

" தூதைந்து நாழிகையி லாறுநா ழிகையினிற்
பலசந்த மாலை சொலவும்

சூழுலா வந்தாதி யேழுநா ழிகையினிற்
றொகை பெற வகுத் தோதவும்

பாதஞ்செய் மடல் கோவை பத்துநா ழிகையினிற்
பரணியொரு நாண்முழுது நீள்

பாரகா வியமெலா மீரிரு தினத்தினிற்
பகரக் கொடிக் கட்டினேன்
சீதஞ் செயுந்தொங்கன் மார்பிஞ னியலிசை
தெரிந்த திரு மலைராயன் முன்
சீறியே வாதுகவி பாடுதற் கெதிர்வரு
திருட்டுக் கவிப் புலவரைக்
காதும் பிடித்துக் கவித்துக் கதுப்பிற்
சுரத்திட் டிடித்து முதுகிற்
கலங்கவைத் தேமுகக் கடிவாள மிட்டேறு
கவிகாள மேக நானே.''

தம் ஆசுகவித் திறமையை இங்ஙனம் புகழ்ந்து கூறிய காளமேகத்தின் தற்புகழ்ச்சியில் நம்பிக்கை கொள்ளாது அவ் வுண்மையை யறியத் திருமலைராயர் பல வருத்தும் வழிகளாலுஞ் சோதிக்கலாயினர். அங்ஙனம் சோதித்தறிந்ததைக் குறிக்குஞ் செய்யுட்கள் தனிப்பாக்களாக வழங்குதலைப் பலரும் அறிவர். இச்சோதனைக்கெல்லாம் அப்புலவர் அஞ்சாது நின்று தம் பெருங் கவித் திறமையைக் காட்டவே, அரசன் வியப்பும் உவப்பும் அடைந்து அவர்க்கு வேண்டிய வரிசைகளையும் கௌரவங்களையும் அளித்துச் சிறப்பித்தனன். இங்ஙனம் திருமலைராசரால் வறுமை நீங்கித் தாம் பெருமை பெற்றதை அடியில் வருமாறு அப்புலவர் அழகுபடப் பாடுகின்றார் :—

“ இந்திரன் கலையா யென்மருங் கிருந்தான்
அக்கினி யுதாம்விட் டகலான்
எமனெனைக் கருதா னரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்
அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்
அகத்துறு மக்களும் யானும்
அனிலம தாகு மமுதினைக் கொள்வோம்
ஆரெனை யுலகினி லொப்பார்
சந்தத மிந்த வரிசையே பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய்கல் யானிச்
சாளுவத் திருமலை ராயன்

மந்தா புயனுங் கோப்பய னுதவு
மகிபதி விதரண ராமன்
வாக்கினுற் குபேர னுக்கினு னவனே
மாசிலீ சானனு வானே"

உடுத்த ஆடை பல துளைக்கண்களுடைய தென்பார் 'இந்திரன் கலையாயிருந்தான்' என்றும், பசி வயிற்றை விட்டு நீங்கிற்றில்லை என்பார் 'அக்கினி உதரம்விட் டகலான்' என்றும் சிவனது பிக்ஷாடன ரூபத்தைக் கொண்டு திரியும் என்பால் வர யமன் அஞ்சினன் என்பார் 'எமனெனைக் கருதான் அரனெனக் கருதி' என்றும், இவர்களே இந்நிலையரானபோது, ஒரு பெண்பாலால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்பார்' 'நிருதிவந்து என்னை என் செய்வாள்' என்றும், வறுமைத்துயரால் வரும் நீர் கண்களை விட்டொழியவில்லை என்பார் 'வருண னிருகண் விட்டகலான்' என்றும், வாயுவே தம் குடும்பத்திற்கு ஆதாரமாயுள்ளது என்பார் 'அநிலமதாகும் அமுதினைக் கொள்வோம்' என்றும், இங்ஙனம் திக்குப்பாலகரில் அறுவர்தம் வசமாயிருத்தலால் 'ஆறெனை யுலகினி லொப்பார்' என்றும், முடிவில் இவ்வருத்தங்கள் நீங்கத் தம்மைக் குபேரசம்பத்தில் வைத்தவன் திருமலை ராயனானதால் அவனை ஈசானனாகிய சிவபிரானென்றும் கூறினர்.

'இயலிசை தெரிந்த திருமலைராயன்' என்று புலவர் பாடுதலால், அத்தலைவர் தமிழறிவிற் சிறந்தவராயிருந்தமை பெறப்படும். மேற் குறித்த பாடலினின்று, சாளுவவமிசத்துக் கோப்பயன் என்பவரது புத்திரர் திருமலைராசர் என்பது தெரியலாம். திருவானைக் காக் கோயிலின் தெற்குத் திருமதிலிலுள்ள சாஸன மொன்று கோபராஜன் குமாரரான சாளுவத் திருமலைராசர் சகாப்தம் 137ல் ஸ்ரீமுக ஸ்ரீ ஜம்புகேசுவரர்க்குத் திருவாபரண மொன்று அளித்ததாகக் கூறுகின்றது. அக்காலத்துக்குச் சரியான கிறிஸ்தவாப்தம் 1453 ஆகும். இதனால், காளமேகப் புலவரை ஆதரித்த திருமலைராசரைப் பற்றியதே அச்சாஸனம் என்பதும் அவ்விருவரும் 15-ம் நூற்றுண்டின் மத்தியில் வாழ்ந்தவரென்பதும் தெளிவாதல் காண்க. கல்யாணி என்பது சாளுவவரசரது பூர்வ குடிப் பெயரும் விதரணராமன் என்பது அவரது பட்டப் பெயரு மாகச் சாஸனங்களிற் காணப்படுகின்றன என்பர். இங்ஙனம் பெருமைப் பெரிதும் ஆதரித்த அரசனுடைய ஊரை மண்மாரியால் அழியும்படி புலவர் பாடினரென்று பிற்காலத்தார் எழுதிப் போந்த கதை உண்மையுடையதாகா தென்றே கொள்க.

6. அருணகிரிநாதர்.

தமிழகத்து முருகக் கடவுள் கோயில் கொண்ட தலங்களையெல்லாம் தம் திருப்புகழ்க் கவிமணிகளால் அலங்கரித்த இப் பெரியாரின் அருமை பெருமைகளையறியாத தமிழ் மக்கள் யாவர்? வில்லிபுத்தூரார்க்கும் இப்புலவர்க்கும் வாதம் நடந்தது என்ற செய்தி பெருவழக்குப் பெற்றுள்ளதனாலும் அவ்வில்லி இரட்டையர் காலத்தவர் என்று மேலே கூறிப் போந்தவற்றாலும் அவ்விரு புலவரும் விளங்கிய காலமே அருணகிரியார்க்கும் உரியது எனபது பெறப்படும். அஃதாவது 14-வது நூற்றாண்டின் பிற்பாகமாம். இதற்கேற்ப, அருணகிரியார் திருச்செந்தூர்த் திருப்புகழ் ஒன்றில் (௮௮)

"உதயதாம மார்பான ப்ரவுட தேவ மாராயன்
உளமு மாட வாழ்தேவர் பெருமாளே"

என்று பாடுதலால, பிரவுடதேவ மகாராயர் காலத்தவர் இவர் என்பது பெறப்படும். இப்பிரவுடதேவர் திருமுன்பு அருணகிரியார்க்கும் சம்பந்தாண்டான் என்பவர்க்கும் நடந்த வாதில் அவ்வரசவையோர் கண்காண முருகக் கடவுள் தம் மயில் வாகனத்துடன் ஆங்குப் பிரத்தியட்சமாகச் செய்தனர் என்ற சரித்திரம் உள்ளது. இதனை—"பல்லவையுள் மற்றொருவன் ஏதுவென்று.. பிரவுட தேவக் குரிசில் பேணியெதிர்காண, முருகன் மயில்மேல் முடுகி வரவழைக்க வந்தது காண்" என்ற தனிக்கையுலாக் கண்ணிகளாலும் அறிக. விஜயநகரவேந்தருள் பிரவுடதேவராயர் எனப் பெயர் கொண்ட அரசர் சிலர் உளர். இவர்களுள், முதற் பிரவுடதேவரே (1422-1449) இப்புலவர் பெருந்தகையாற் பாடப் பெற்றவராகக் கருதத் தகும். எனவே, 14-ம் நூற்றாண்டின் பிற பகுதியும் 15-ம் நூற்றாண்டின் முற்பகுதியுமான காலமே இவ்வருணகிரியார்க்கு உரியதென்பது பெறப்படுகின்றது. இனி, அருணகிரியார் காலத்தே மடாதிபதியான சோமநாதர் என்ற பெரியாரொருவர் பிரபலராயிருந்தனரென்பது :—

"அரிவையொரு பாக மான
அருணகிரிநாதர் பூசை
அமைவுதவி, ராது பேணும்—அறிவாளன்
அமணர்குல கால ருகும்
அரியதவ ராச ரான
அவனிபுகழ் சோம நாதன் மடமேவும்....முருக"

என்று தம் திருப்புகழொன்றில் (796) அவர் பாடுதலால் அறியலாம். இம் மடாதிபதி இன்னார் என்பது பற்றியான் கண்ட புதிய செய்தி அடியில் வருமாறு :—

வட ஆர்க்காடு ஜில்லா ஆரணிப்புத்தூரிலுள்ள வித்தியா நாதேஸ்வரர் கோயிற் கருப்பக் கிருகத்தின் வடக்குத் திருமதிலிற் கண்ட சாஸனமொன்று சக வருஷம் 1292 (கி.பி. 1370)-ல் சோம நாதஜீயர் என்ற ஆசாரியத் தலைவரிடம் அவ்வூரிலுள்ள கோயிலும் மடமும் ஒப்பிக்கப்பட்டன என்று கூறுகின்றது. (EP. Rep. No. 56 of 1900) இச் சாஸனம் அமைந்த ஊர்ப்பக்கத்திலுள்ள முள்ளண்டிரம் (அகரம் முல்லண்டம்) தேவிகாபுரம் முதலிய ஊர்களிலே, விஜயநகர வேந்தர் காலங்களில் சிவாசாரியர்களாகவும் மடாதிபதிகளாகவும் பிரபல வித்வான்களாகவும் விளங்கிய கௌடப் பிராமணருள் இந்த சோமநாதஜீயரும் ஒருவராதல் வேண்டும். ஜீயர் என்பது சைவ வைஷ்ணவத் துறவிகட்கும் ஆசாரியத் தலைவரான மடாதிபதிகட்கும் வழங்கிய சிறப்புப் பெயர் என்பதை மேலே விளக்கினேன். இதனால், சோமநாதர் அத்தகைய மடாதிபதிகளுள் ஒருவரென்பது பெறப்படும். இவர் மேற்பார்வையில் புத்தூர்க் கோயிலும் மடமும் ஒப்புவிக்கப்பட்டன என்று சாஸனங் கூறுவதும் இதனை வற்புறுத்தல் காண்க. எனவே, அருணகிரியார் பாடிய பிரவுடதேவராயர் காலத்தை யொட்டி இந்த சோமநாதர் சாஸனம் அமைந்திருத்தலாலும், அருணகிரியார் காலத்தவராகப் பெறப்படும் இரட்டையர் பாடிய திருமல்லிநாத சம்புபதி காலமும் இச் சாஸன காலமும் மிகவும் அடுத்து இருத்தலாலும், இப்புலவர் பெருமான் கூறும் மடாதிபதியான சோமநாதர் மேற்குறித்த சோமநாத ஜீயரே என்று கொள்ளத் தடை இல்லை. இக்காலத்துக்குச் சிறிது பின் 15-ம் நூற்றூண்டுத் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்த பிரவுடதேவராயரை அருணகிரியார் பாடுதலின், அவர் காலத்தும் இவர் பிரபலராக விருந்தமை தெரியலாம். இந் நூற்றூண்டின் முற்பகுதியே காளமேகப் புலவர்க்கும் உரியது என்பது அவரைப்பற்றி எழுதியவற்றால் விளங்கும். அருணகிரியார் தம் திருப்புகழ்களில்—

"பெரும் பிரபந்தம் விளம்பு காளப் புலவனென" (காஞ்சி 15) என்று பாடுதல் காளமேகப் புலவரைக் குறிப்பிட்டுப் போலும்— என்று தோன்றுகின்றது. காளமேகத்தோடு எதிர்த்து நின்ற புலவன் அதிமதுரக் கவிராயன் என்பது பிரசித்தமானது. இப்

புலவர் திருக்கோவல் ஊரினர். தம் காலத்துப் பிரபலாக விளங்கிய இவரையே

"மதுரகவி ராசனுன் என்வெண்குடை
விருது கொடிகாளமேள தண்டிகை
வரிசையொ டுலாவுமா வகந்தைத விந்திடாதோ"
(திருச்செந்தூர்த் திருப்புகழ்-48)

என்ற அடிகளாற் குறிப்பிட்டனர் அருணகிரியார் எனலாம். இத் தகைய வித்தியாகருவத்தைப் பிறர் கொண்டுள்ள நிலைமை தமக்கு வேண்டாம் என்று தங்கால வியல்புக்கு இப்புலவர் இரங்கிப் பாடிய தாக இவ்வடிகட்குப் பொருள் கொள்ளுதல் பொருந்தும். இவ்வா றன்றித் தம்மை நோக்கியதாயின், அருணகிரியார்க்கே இத்தகைய விருதுகளும் சிறப்புப் பெயர்களும் இருந்தன எனல்வேண்டும். மேற்கூறிய அதிமதுரக் கவிராசன் பெருவிருதுகளுடன் எங்கும் சஞ்சரித்தவன் என்பதும், மதுரகவி என்றும் இவன் அழைக்கப் பெறுவன் என்பதும் காளமேகப் புலவர் வரலாருக வழங்கும் சரிதங்களாலும்

"கோக்குதிரை நின்குதிரை கோவல் மதுரா" என்று, இவ னேறி வந்த குதிரையைக் காளமேகம் சிறப்பித்துப் பாடிய செய்யுள் தமிழ்நாவலர் சரிதையில் (217) காணப்படுவதனாலும் தெரியலாம். ஆகவே, எல்லா வழியாலும் அருணகிரியார் வாழ்ந்த காலம் தெளிவாதல் காண்க.

முற்கூறிய பிரவுட தேவராயர் காலத்தே, திருவண்ணமலைப் பிரதேசத்துள்ள அகரம்-முல்லண்டம் (முல்லன்டிரம்), தேவிகா புரம் என்ற ஊர்களில் கௌடப் பிராமணருள் டிண்டிம கவிகள் எனப் பெயர் பெற்றுப் பிறருடன் வாதுகவி பாடி வெல்லவல்ல பெரும் புலவர் பலர் விளங்கினர் என்றும் இவர்கள் மரபினரே அக் காலத்து அரசர்க்கும் பிறர்க்கும் சிவாசாரியர்களாகவும் மடாதி பதிகளாகவும் இருந்தனர் என்றும் தெரிய வருகின்றன.

"பண்ணரும் பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படி திண்டி மம் முழக்க
பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப்
பரிந்து திண்டிடம் முழக்க"
(திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ். .)

என்று இத்திண்டிம கவிகளையே பகழிக் கூத்தர் என்ற அக் காலத்துப் புலவரும் சிறப்பித்துப் பாடினர். புலவர் பெருந்தகை யான அருணகிரியார், அத்திண்டிமருள்ள பிரதேசத்தே அவதரித்து,

அக்கவிஞரை ஆதரித்த பிரவுடதேவராயர் காலத்தே விளங்கியிருத்தலாலும், ஆசுகவிபாடவல்ல பெருங்கவியாகத் தம்மைக் கூறிக் கொள்ளுமாற்ற வில்லிபுத்தூரர் சம்பந்தாண்டான் போன்றவரோடு எதிர்த்து வென்றவாதி கவியாகவுள்ளமையாலும் தம் பிரதேசத்தவரான சோமநாதரைச் சிறப்பித்துப் பாடுதலாலும் இவரும் அத்திண்டிம கவிகளுள் ஒருவர் போலும் என்று கருத இடந் தருகின்றது. இதற்கேற்ப, மேற்கூறிய கௌடப் பிராமண ருட்சிலர், குமாரர் திண்டிம அண்ணமலை நாதர், அஷ்டபாஷாகவி, டிண்டிம சார்வ பௌமரான அருணகிரிநாதர் என்ற பெயர் களுடன் விளங்கினவராயிருத்தலும் இணங்குகின்றது. முற் காட்டிய அடிகளிற் கண்டவாறு "விருது கொடி தாளமேள தண் டிகை" உடையவராகத் தம்மையே அருணகிரியார் கூறிக்கொண் டவராயின் இப்பெரியாரை அத்திண்டிமக் கவிகளுள் ஒருவராகவே கூறத் தடையில்லை. மேற்கூறிய டிண்டிம அருணகிரிநாதர் பிற் காலத்தவராகத் தெரிதலின் அவரை இப்புலவர் வழியினராகச் சொல்லலாம். ஆயினும் இவற்றுக் கெல்லாம் ஆதாரம் இன்னும் வேண்டும்.

7. இராமநாதன் மருதவன கவிராசன.

திருநெல்வேலி ஜில்லா திருப்புடை மருதூர்ச் சிவன் கோயிலிற் கண்ட சாஸனங்களால் (EP. Rep. 412-1916). இராமநாத கவி யரசர் என்பார் அக்காலத்து விளங்கிய பிரபல கவி என்பது தெரி கின்றது. இத்தலம் பழையமையான தொன்றும். திருப்புடை மருதில் மருதவனம்—என்னும் சாஸனம் இதனை வழங்கும். இவ்விராமநாத கவியின் புலமைத் திறத்தையும் பத்தியையும் கருதி அவ்வூரார் இவர்க்கு "மருதவனகவிராசன்" என்ற சிறப்புப் பெயரும் இறையிலிநிலங்களும் கொல்லாமாண்டு 731-ல் (கி பி. 1477-ல்) அளித்தனர் என்று அவர் சாஸனங்கள் கூறுதல் அறியத் தக்கதாம். இனிக் கன்னட நாட்டுக் கொத்தசிவரம், பாதசிவரம் என்ற ஊர்கட்கு இடையிலுள்ள சிவன் கோயிலிற் கண்ட சாஸனத் தில்—ரவிவர்மன் வேணுடு மருதூர்க் கவியாகிய ராமநாதன் பாடிய கவிகளாக அடியில் வரும் வெண்பாக்கள் காணப்படுகின்றன. அவை—

"கலிங்கரையு மொட்டரையுங் கட்டழித்துக் கைவேற் (கொ)
தெலுங்கரையுஞ் சேண்விசும்பிற் சேர்த்தி—குலிங்கரையும்
போரழித்து வாய்த்தனவே போர்ச்சோ ழியவரையன்
கார் முகத்து வாய்த்த கணை"

"வேயோடு கானதரில் வீழ்செருநர் தோற்பிடித்துப்
பேயோடு பேய்பிணங்கும் பெற்றித்தே—பேயோடி
நான்மடிவீ மற்குடைந்த நாமப் படைத் தெலுங்கர்
கான்மடிவீ மட்டுலரும் காடு"

இதனால், மருதூர்க் கவி ராமநாதனுடைய சொந்த ஊர் இரவி வர்மனது வேணுடு என்பது தெரிகிறது. மேற்கூறிய கவிகள்—மகாவித்வான்—ராகவையங்காரவர்களால் எனக்குக் கிடைத்தவை.

மேற்கூறிய விஜயநகர அரசரிலும் தலைவரிலும் பிரவுடதேவ ராயர், திருமலைராயர் என்பார் புலவர்களை அபிமானித்தவாறே அவர்க்குப் பிறபட்ட வேந்தர்களும் தமிழை ஆதரித்தவர்களாகவே இருத்தல் அறியத்தகும். இத்தகைய வேந்தர்களில் கிருஷ்ண தேவராயரை இங்குக் குறிப்பிடத் தகும்.

8. கிருஷ்ணதேவராயர் (1509-1529).

இவர் காலத்தில் விஜயநகர ஏகாதிபத்தியம், ஆந்திர கன்னட தேசங்களையும் தமிழகத்தையும் தன்னுட் கொண்டதாயிருந்தது. இவ்வரசர் அறிவு, திரு, ஆற்றல் என்ற மூவகைச் சம்பத்தும் நிரம்பினவர். தாமும் பெரிய கவியாய்ப் பல கவிசிரேஷ்டர்களையும் ஆதரித்தவர். கோயில்களும் குளங்களும் இவர் காலத்துப் பேணப்பட்டும் பெருகியும் வந்தது போல வேறெக்காலத்தும் நிகழவில்லை. மற்றும் இவரது அருமை பெருமைகளையெல்லாம் இங்கெடுத்துக் கூறின் மிக விரியும். ஆயினும், சந்தர்ப்பத்துக்குப் பொருந்த ஒன்றை இவ்விடத்துக் கூறல் தகும். அஃதாவது இவர் தமிழ்ப் புலவர்களையும் பெரியோர்களையும் அபிமானித்து ஆதரித்து வந்தமையேயாம். இதற்குச் சில சான்றுகள் கூறுவேன்.

ஒட்டா தேசத்தைக் கடகநகரில் **Cuttack** இருந்தாண்ட கஜபதியரசனை பிரதாபருத்ரன் (1497-1540) என்பவன் தமக்கு அடங்காதிருந்ததனால், கிருஷ்ணதேவராயர் உத்தேசம் 1515-ல் அவ ஞெட்டின் மேற் படையெடுத்துச் சென்று அவனை வென்றதோடு, அவ்வரசன் மகளாகிய துக்கா என்ற மாதை மணம் புரிந்து கொண்டனரென்பது அவ்விராயரது பிரசித்த சரித்திரங்களுள் ஒன்று. இது நிகழ்ந்த காலத்தே அவ்வரசர் பிராணுடனிருந்த

குமாரசரசுவதி என்ற தமிழ்ப் புலவர் அத்திருமணத்தைச் சிறப்பித்துப் பாடியிருத்தல் அறியத்தக்கது. அவர் பாடலாவது—

"கலிங்க மிழந்துநுதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானக்ருஷ்ண பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் பெண்"

எனக் காண்க. இப்பாட்டில் உனக்குத் தோல்வியுற்ற ஒட்டா தேசத்தரசனைப் போலவே, அவன் பெண்ணும், கலிங்கம் நுதிக் கைச் சங்கம் கடமென்னும் இவற்றை உன்முன் நெகிழவிட்டாள் என்று சிலேடைநயம்பெறப் பாடப்பட்டுள்ளது. ஒட்டியன் கலிங்க தேசத்தையும், துதிக்கையுடைய யானைக் கூட்டத்தையும் (கஜபதியாதலின் யானைக் கூட்டங்களையிழந்தானென்க) கடகம் என்ற தலைநகரையும் போரில் இழந்தோடினன் ; அங்ஙனம் இழக்கும்படி செய்த உன் பிரதாபத்தை அறிந்த அவன் மகளும் வீரனுன உன்னையடைய விரும்பியதனாலுண்டான தன் தேக மெலிவால் தானும் கலிங்கத்தையும் (வஸ்திரத்தையும்), நுதிக்கைச் சங்கத்தையும் (முன் கையிலணிந்த வளைகளையும்) கடகத்தையும் (தோள் வளையையும்) நழுவ விடலானாள் என்று கவி சமற்காரமாகக் கூறும் அழகு அறிந்து மகிழத் தக்கதாம். இதனால், அவ்வரசரது ஆஸ்தானத்தில் பெருந்தமிழ்ப் புலவர்களும் எப்போதும், இருந்து வந்தனர் என்பது விளங்குகின்றது. இக்குமார சரசுவதி போலவே, கிருஷ்ணதேவராயரால் அபிமானித்துக் கௌரவிக்கப்பட்ட தமிழ்ப் புலவர்கள் பலர். தமிழிற் பிரபலமாக வழங்கும் சூடாமணி நிகண்டின் ஆசிரியராகிய மண்டல புருஷர் என்ற சமண்புலவர் இவ்வரசர் பெருமானால் ஆதரிக்கப் பெற்றவருள் ஒருவர். இவர் தம் நூற்கண்ணே கொடைமடம் என்ற சொற்குப் பொருள் கூறும்போது,

"படைமயக் குற்றபோதும் படைமட மொன்றிலாதான்
மடைசெறி கனகத்தோளான் மதிக்குடை மன்னர்மன்னன்
கெடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டிணராயன் கைபோற்
கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்த லாமே"

என்ற. வரையாது யாவர்க்குங் கிருஷ்ணராயர் வழங்குவதுபோலக் கொடுப்பதே, அச்சொற்றொடர் மொழியின் பொருள் என்கிறார். இவ்வாறு பாடுதல் அவ்வேந்தரது கொடைப் பெருமையைத் தாமும்

நேரிலறிந்து அனுபவித்தவர் என்பதற்குத் தக்க சான்றுமன்றோ? மண்டலவர் புகழ்ந்த இக்கிருஷ்ணராயரை, இரட்டவரசனுண கிருஷ்ணன் என்று சிலர் கருதி வருவது தவறும் என்பது, பங்களூரிற் பிரசுரமாகும் 'மிதிக்-சொஸைடி' பத்திரிகையில் யான் ஆங்கிலத்தில் எழுதுவித்த வியாசத்தால் நன்கு விளங்கக் கூடியது. இனி இவ்வரசர் பெருந்தகைமேல் வேளாண் மரபினராகவும் துறவியாகவும் விளங்கிய ஞானப் பிரகாசர் என்ற பெரியவரொருவர், 'மஞ்சரிப்பா' என்ற பிரபந்தம் பாடியிருந்தார் என்ற செய்தி—

"வானப்ர காசப் புகழ்க்கிருட்ண ராயர்க்கு மஞ்சரிப்பா
கானப்ர காசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகஞ் செய்
ஞானப்ர காச குருராயன் வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்ர காச முடையோர் வளர்தொண்டை மண்டலமே"

என்னுந் தொண்டைமண்டல சதகச் செய்யுளால் வெளியாகின்றது. அப்பிரபந்தம் இப்போது கிடைத்திலது. இதுவன்றித் தேவாலயங்கள்போலுந் தர்மஸ்தாபனங்களில் அதிக்ரமங்கள் நடந்தால், அவற்றைத் தமிழ்ப் பெரியோர்களும் புலவர்களும் தம்மரசராகிய கிருஷ்ணதேவர்க்குச் செய்யுள் மூலமாக அறிவித்து வந்திருக்கின்றனர். திருவாரூர்க் கோயிலில், திருவிழாவை ஒழுங்காக நடத்தாமலே, பட்டர்கள் கொடியிறக்கப்புக, அதனைக் கண்டு மனஞ்சகியாமல் சைவத் துறவியும் புலவருமாகிய தத்துவப் பிரகாசர் என்பவர்—

"மருவு புகழ்க் கிருஷ்ண மகராச ராணை
அரிய வடமலையா ராணை—திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதந் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே"

என்று கொடியிறக்க வொட்டாமல் அரசராணை கூறித் தகைந்துவிட்டு, அப்பட்டர்களுடைய அதிக்கிரமச் செய்கையை,

"ஊழித் தாலுக்கல்ல வொட்டியான் றாலுமல்ல
வீழித் தாலுக்குவந்து மேலிட்டே—யாழி
சிறந்ததிரு வாரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிருட்டிணரா யா"

என்று கிருஷ்ணதேவராயர்க்கு எழுதி விடுத்தனர் என்றும், உடனே இராயர் அக்கோயிற் பட்டர்களை மாற்றிவிடக் கட்டளை

யிட்டனரென்றும், அப்போது அவர்களை நோக்கித் தத்துவப் பிரகாசர்—

> "உண்ட வயிற்றி லுமிக்காந்த லிட்டதே
> தொண்டரே வீழித் துலுக்கரே—பண்டெல்லாம்
> அப்ப மவலென் றதிரசமுந் தோசைகளுங்
> கப்புவது போச்சே கவிழ்ந்து"

என்று இகழ்ந்து கூறின ரென்றும் அறியப்படுகின்றன (தமிழ்-நா). இவ்வாறே மற்றொரு காலத்தில், அக்கோயிலிலிருந்த அறுபத்து மூவர் விக்கிரகங்களில் இரண்டை அருச்சகரோ அதிகாரியோ ஆகிய நாகாசநம்பி என்பவர் வெட்டியுருக்கி விட்டதை அறிந்த அத்தலத்தார், அச் செய்தியைக் கிளிக்குப் பாடப் பழக்கி, அதனைக் கிருஷ்ணதேவராயர் திருமுன்பு சொல்லும்படி செய்தனர் என்று தெரிய வருகின்றது. அப்பாடலாவது :—

> "முன்னு ளறுபத்து மூவரிருந் தாரவரில்
> இந்நா ளிரண்டுபே ரேகினர்—கன்னான்
> நருக்குகின்றான் விற்றுவிட்ட நகாசா நம்பி
> இருக்கின்றான் கிருட்டினரா யா" என்பது.

குறிப்பு.—வடமலையார் கிருஷ்ணதேவராயருடைய தலைமையமைச்சராய்க் கீர்த்தி பெற்ற சாளுவ-திம்மவரசு (திருமலைராசர்) என்று தோற்றுகிறது. தியாகராசருடைய உற்சவங்களிலே 'பாகற்கொடியறுத்தல்' அல்லது 'பாகல் வேட்டை' என்ற திருவிழாவைப்பற்றித் திருவாரூருலா 421-ம் கண்ணி அரும்பதவுரையுள் மகாமகோபாத்யாய ஐயரவர்கள் எழுதிய குறிப்பு அறியத்தக்கது. கிருஷ்ணதேவர் பட்டமடைவதற்குமுன், ஒட்டியிருந்தாருக்கருஞ் சேர்ந்து பிரவேசித்துத் தென்னாட்டையடைந்து வந்தமையால், 'உமிக்காலக்கல்ல ஒட்டியானுமல்ல' எனப்பட்டதென்க. திருவீழிமிழலையிலிருந்து ஸ்வாமி பசனை பரிந்து வந்த பட்டாது இச்செயல் நோக்கி அவரை 'வீழித்துலுக்கர்' என்றாரென்க. திருவாரூர்த் தேர்க்கு 'ஆழித்தேர்' என்ற பெயர் வழக்குண்டென்பர்.

9. அரிதாசர்.

இனி, சைவ, வைணவ மதங்களைப் பற்றிப் பாடப்பட்ட இருசமய விளக்கம் என்ற நூலியற்றிய அரிதாசர் என்ற புலவர் இக்கிருஷ்ண தேவர் காலத்தவரென்பதும், அவரால் அபிமானிக்கப்

பட்டவரென்பதும் அறியப்படுகின்றன. இப்பெரியார், இருசமய விளக்கம் என்ற நூலின் ஆசிரியர் என்பது பலரும் அறிவர். இந் நூல், சைவ வைணவ வாதங்களை ஆகமவல்லி, ஆரணவல்லி என்ற பெண்களிருவர் கூற்றில் வைத்து விளக்கி, முடிவில் திருமாலே பரதத்துவம் என்பதை நிலைநாட்டி நிற்பதாம். இது, 4 காண்டங் களும், 26 படலங்களும், 130 பரிச்சேதங்களும், 2,119 பாடல்களும் உடையது. அரிதாசர் வேதபுரி என்ற ஊரில் திருக்கோயில் கொண்டருளிய திருமாலின் ஆணைப்படி இந்நூலை இயற்றி, அப் பெருமான் சந்நிதியிலே இதனை அரங்கேற்றிப் பல அற்புதச் செயல் களையும் நிகழ்த்தினர் என்பது இந்நூலிறுதியிலுள்ள சம்மத பரிச் சேதத்தால் அறியப்படும். இவ்வேதபுரி அரிவாசபுரம் அரிதை என்று வழங்கப்பட்டதென்றும், இதனையடுத்த மலையும் ஆறும் வனமும் முறையே வேதகிரி, வேதநதி, வேதவனம் எனப் பெயர் பெறும் என்றும்—

"மருவார் துளவத் தொடைமாலொரு மச்ச மாகிப்
பெருவா ரிதியிற் புகுசோமுகன் பேரை மாய்வித்
துருவா கியமா மறையைக்கம லோத யற்குத்
திருவாய் மலர்ந்தான் ஒருசீதளச் செய்ய குன்றில்" (நகர-1)

"விரியுந் தடங்குன் றதுநாண்முதன் மின்னு வேத
கிரியென்று தன்பேர் கிளக்கின்றது கீழ்நி வந்த
புரியுஞ் சுரமும் புனலாறுமப் புண்ணி யப்பேர்
தெரியும் படியே நிகழ்கின்றவித் தேய மெங்கும்"

(ஷடி 2)

என்று அரிதாசரே காரணங்காட்டி விளக்குதல் காண்க. இந் நூலாசிரியர் களப்பாளர் என்ற குடியில் உதித்தவர் என்பதும் தம்மூர்த் திருமால்கோயிற்குப் பல திருப்பணிகளுஞ் செய்து புதுப்பித்து வேண்டிய கைங்கரியங்களைப் புரிந்தவர் என்பதும்—

"வளப்பார் பகழும் படிவாழுமிம் மாந கர்க்கண்
பிளப்பா வொருகா ணினில்வந்து பிறந்து ளானுக்
குளப்பா வணைகூ ாரிநாதனென் றோது நாமக்
களப்பாளன் தானத் தலங்கள்கரை கண்ட நாளில்"

(ஷடி 6)

என்ற செய்யுளால் தெரிகின்றன. களப்பாளர் என்பார் முற்கால முதலே தமிழ்நாட்டில் அரசுரிமை வகித்துவந்த கூட்டத்தார் ஆவர். அச்சுதக்களப்பாளன் என்பான், மூவேந்தரையும் ஒரு

காலத்து அடக்கி ஆண்டவன் என்பது தமிழ்நாவலர் சரிதையால் தெரியவருகின்றது. ஒட்டக்கூத்தர் புலவர்களைக் கொலைபுரிவித்து வந்தபோது "கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர்" என்ற செய்யுள் கூறி அவரைத் தடுத்த நெற்குன்றவாண முதலியார் என்பவர் இக்களப்பாளர் வகுப்பினரென்பது அறியலாம். நெற்குன்றம் என்பது தொண்டை நாட்டதோரூர். சைவ சந்தானாசாரியத்தலைவரான மெய்கண்ட தேவருடைய தந்தையாருக்கும் அச்சுதக்களப்பாளர் என்பதே பெயராதலின் அவரும் அம்மரபினரென்பதில் தடையில்லை. "களப்பாளராஜர்" எனவும் சாஸனம் (T. A. S. Vol. II, P. 721) இன்னோரைக் கூறும். இதற்கேற்ப இக்குலத்தவரான அரிதாசரை--

"விரிதா தணியுந் தொடைமேவிய வேந்தனை அரிதாசன்"

என இருசமய விளக்கப் பாயிரங் கூறுதல் இவர் வேந்தர் குலத்தவ ரென்பதை விளக்குதல் காண்க.

இனி, இவ்வரிதாசர் நூன்முகப்பில் தம்மூர்த் திருமாலின் வணக்கங் கூறுமிடத்து—

"கிரிபோல் விளங்கிக் கிளரும்புயக் கிட்டணராயர்
தரைமீது சிங்காத் திரியிற்சயத் தம்ப நாட்ட
வரமா தரவா லளித்தேவட கூவ மேவுங்
கருமா மணிவண் ணனைநீடு கருத்துள் வைப்பாம்,"

என்று பாடுகின்றார். இதனுள், கிருஷ்ணராயர் சிங்காத்திரி என்றவிடத்து ஜயஸ்தம்பம் நாட்டுவதற்கு வடகூவத்திற் கோயில் கொண்ட திருமால் வரமளித்தருளியவர் என்று கூறப்பட்டுள்ளது. இங்கே கூறப்பட்ட கிருஷ்ணராயர் விஜயநகர வேந்தரே யாவார். இவர் கி.பி. 1497 முதல் 1540 வரை ஆட்சி புரிந்தவர். கலிங்க தேசத்தைக் கடகம் (Cuttack) என்ற தலைநகரிலிருந்து ஆண்டு வந்த கஜபதியரசனை பிரதாபருத்திரன் என்பான் (1497-1540) தமக்கு அடங்காதிருந்ததனால், இக்கிருஷ்ணதேவர் உத்தேசம் 1520-ல் அவனாட்டின் மேற் படையெடுத்துச் சென்று போரில் அவனை வென்றனர் என்பது அவர் சரித்திர விசேடங்களுள் ஒன்று.

சிங்காத்திரி என்பது விசாகபட்டணத்துக்கு வடமேற்கே 4 மைலில் உள்ள சிம்மாசலம் என்ற திருப்பதியாகும். இவ்வூரில் நாட்டப்பட்டதாக அரிதாசர் கூறும் ஜயஸ்தம்பம் மேலே கூறிப்

போந்த கலிங்க வரசனுடன் இவ்வரசர் நடத்திய போரின் வெற்றிக் குறியேயாம். இவ்விராயர் பெருமானே பாடிய ஆமுக்தமால்யதாவிலும் இவரது ஆஸ்தான கவியாகிய அல்லஸானி பெத்தன்னர் பாடிய மனுசரிதம் என்ற தெலுங்கு காவியத்திலும் இந்த சிம்மசல ஜயஸ்தம்பத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளன என்பர். சிம்மாத்திரியில் அத்தம்பம் நாட்டப்பட்டதாக அரிதாசர் முதலியோர் கூறினும், அது பொட்டுநூர் என்றவிடத்துத் தாபிக்கப்பட்டதாகவே தெரிய வருகின்றது. இச்செய்தி—

"இந்த கோபுரம் ராஜாதிராஜன் ராஜபரமேசுவரன் ஸ்ரீ வீரப் பிரதாப கிருஷ்ணதேவ மஹாராயரின் தர்மம் ஆக ஸிம்மாத்திரி பொட்டு நூர்க்கு எழுந்தருளி ஜயஸ்தம்பம் நாட்டித் திரும்பிப் பொன்னம்பல நாதனையும் சேவித்து வடக்குக் கோபுரம் கட்டி வைத்த சேவை" என்னும் சிதம்பரஸாஸனத்தாலும் (S. S. I., Vol. IV, No. 199, P. 622.)

"சிம்மாசலத்துத் திருமாலுடைய பிரமோற்சவத்தைச் சேவிக்க வரும் தேவர்கள் பொட்டுநூர் என்ற ஊரில் கிருஷ்ணதேவராயர் நாட்டிய ஜயஸ்தம்பத்தின்மேல் வரைந்துள்ள சாஸனம் இன்னதென்பதைப் பார்க்க வந்து, அதனெழுத்துக்கள் தெளிவாயில்லாமையால் கலிங்க (ராசனை பிருதாபருத்ர) னுடைய அபகீர்த்தியாகிய மையைத் தடவி வாசிப்பாராயினர்" (மனுசரிதம்).

என்ற பொருளில் அல்லாசனி பெத்தன்னர் என்ற ஆந்திரமகா கவி பாடிய பத்ரிங்களாலும் விளக்கமாம். ஆகவே, பொட்டுநூர் என்பது சிம்மாசலத்தின் அடிவாரத்தில் உள்ளது என்பதும் அது பற்றிச் சிம்மாத்திரிப் பொட்டுநூர் என வழங்கப்படுவதென்பதும் விளங்கும். இப்போதும் அப்பெயருடன் அவ்வூர் உள்ளதேயாம். இதனை் சிம்மாசலத்துக்கு 30 மைல் தூரத்துள்ள வேறு பொட்டுநூரொன்றை ஜயஸ்தம்பம் நாட்டிய இடமாகச் சரித்திர வறிஞர் எழுதியது தவறாகல் காண்க. சிம்மாத்திரித் திருமாலிடம் கிருஷ்ணதேவர் பெரும்பக்தி பூண்டிருந்தவர் என்பது. 1516, 1952 ஆம் ஆண்டுகளில் பல கிராமங்களும் திருவாபரணங்களும் அப்பெருமானுக்கு அவரளிக்கனர் என்று சிம்மாசல சாஸனங்கள் பல கூறுதலால் தெளிவாகின்றது.

இவ்வாறு. சிம்மாத்திரிப் பொட்டுநூரில் நாட்டப்பட்ட ஜயஸ்தம்பமே அரிதாசராலும் கூறப்பட்டதென்க. இத்தகைய செயத்தம்பம் நிறுத்தும்படி அவ்விராயர் பெருந்தகைக்கு வரமளித்தரு

ளியவர் "வட கூவமேவும் கருமாமணி வண்ணன்" என்று அவ்வா சிரியர் கூறுகின்றார். வடகூவம் என்பது, மேற்கூறிய வேதபுரியின் பக்கத்தோடும் ஆரணிநதி அல்லது வேதநதிக்கு அக்காலத்து வழங்கிய பெயராகவே தெரிகின்றது. இதனால், கிருஷ்ணதேவர் கலிங்க வெற்றிக்கு முன் இவ்வடகூவக் கரையிற் கோயில் கொண் டுள்ள திருமாலின் அநுக்ரஹம் பெற்றுக்கொண்டு அப்போர்க்குச் சென்று அதனில் சித்தி பெற்றவர் என்பது பெறப்படுகின்றது. எனவே அரிதாசர் தம் காலத்தவரான அரசர் செய்தியே கூறின ராவர். தம் காலத்துக்கு முன் நிகழ்ந்த கலிங்க வெற்றி தம் மூர்த்திருமாலருளால் அரசரொருவர்க்குக் கிடைத்தது என்று, அப்பெருமான் அடியார்க்கருளுஞ் சிறப்புக்கு இப்புலவர் ஓர் ஐதிகம் காட்டினர் என்று கொள்ளுதல் கூடாதோ எனின், யான் இவ்விஷயமாகப் புதியவாய்க் கண்ட அரிய செய்தி சிலவற்றால் அவ்வாசங்கைக்கு இடமே இல்லையாகின்றது. அதனை இனி விளக்குவேன்.

தொண்டைமண்டலத்தே திரு வெவ்வுளூருக்கு (திருவள்ளூ ருக்கு) வடக்கே 18 மைலிலும் ஆரணி என்ற ஊருக்குக் கிழக்கே 10 மைலிலும் நாகலாபுரம் என்ற ஊரொன்று உள்ளது. இதனை நகரி நாகலாபுரம் என்று இக்காலத்தார் வழங்குவர். இவ்வூரில் மலையும் அம்மலைப்பக்கத்தே நதியும் திருமால் கோயிலும் உள்ளன. இத் திருமாலின் திருநாமமாக இப்போது வழங்குவது வேத நாராயணப் பெருமாள் என்பது. இக்கோயிலுள்ள சாஸனங்கள்; அவ்விலகாத் தலைவரால் பிரதியெடுக்கப்பட்டுள்ளன. விஜயநகர வேந்தரான கிருஷ்ணதேவர் சகவருஷம் 1445 (கி.பி. 1523-ல்) இக் கோயிற்குப் பூதானமளித்துள்ள செய்திகளை அச்சாஸனங்கள் கூறு கின்றன. அச் செய்திகளுள், மிகவும் அருமையானவை அவ் வேந்தர்பெருமான் வடநாட்டில் அடைந்த பெருவெற்றிக்குப்பின், மகாமகத்தின் பொருட்டுக் கும்பகோணஞ் சென்று வந்தன ரென்றும், அவ்வாறு சென்று வரும் இடையில் நாகலாபுரத்துக்கு விஜயம் செய்தனர் என்றும், அப்போது அவ்வூரெம்பெருமான் தம் கனவில் தோன்றி ஆணையிட்டருளியபடி ஹரிதாசர் என்ற பெரியா ரால் அங்குத் திருக்கோயில் கட்டி முடிக்கப்பட்டதென்றும் இவ் வரிதாசர் கிருஷ்ணதேவராயரது தமிழ் மந்திரியான வடமலையார் என்பவரது சகோதரரென்றும் அக் கோயிலின் வட கோபுர வாயிலிற் கண்ட சாஸனமும் நீலமாணிக்கதேவர் கோயிற் கைங் கரியங்கள் நடத்துவதற்கும் ஆங்குத் திராவிட வேதமும் (நாலாயிர

திவ்யபிரபந்தம்) வேதாந்தமும் (ஸ்ரீபாஷ்யாதிகளும்) ஓதுவதற்கும் பல கிராமங்களை அவ்வரசர் அளித்ததோடு, பெரியாரான ஹரி தாசர்க்கும் பல ஊர்களைத் தானமளித்து, அப் பெரியாரிடமே அக் கோயிலதிகாரம் முழுமையும் ஒப்பித்தனர் என்று இரணடாவது கோபுரத்தும் வெளிப் பிரகாரத்தின் கிழக்குத் திருமதிலிலுங் கண்ட சாஸனங்களுங் கூறுகின்றன என்பதேயாம். இவற்றால் மேற்படி சாஸனங்களிற் கூறப்படும் பெரியார் கிருஷ்ணதேவராய ரைத் தம் நூலுட்பாடிய அரிதாஸரின் வேறல்லர் என்பது நமக்குக் கரதலாமலகமாக விளங்குவதன்றோ? அச்சாஸனங்கள் கண்ட வாறே, இரு சமய விளக்கமுடையார் திருமாலேவலால் வேதபுரிக் கோயில் திருப்பணிகள் பலவும் செய்து முடித்தவர் என்பது—

“அரிதாதன் நினைந்தவெலா முடித்தாண்ட கோவை”

(பாயிரம்-6)

அரிதாத னென்றோது நாமக், களப்பாளன் தானத்தளங்கள் கரைகண்ட நாளில்”

(நகரப்-6)

என்ற அவர் பாடல்களாற் புலப்படும். தம் நூற்பாயிரத்தில் அரி தாசர் கிருஷ்ணராயர் மந்திரியாகிய தம் தமையனை “வடமாமலை யண்ணன்” என்று கூறுதல் குறிப்பிடத்தக்கது “வடமலையண்ண னையன்” என்பது சாசனம், மேற்கூறிய தத்துவப் பிரகாசர் பாட்டில்—

“மருவு புகழ்க் கிருஷ்ண மகாராஜ ரானை
அரிய வடமலையா ரானை ”

என்ற தொடரில் கூறப்பட்ட வடமலையார் இம்மந்திரியே யாவர். மச்சாவதார மூர்த்தியாய் வேதங்களை சோமுகாசுரனிடமிருந்து மீட்டருளியது பற்றி, நாகலாபுரத் திருமால் வேதநாராயணன் என்றும், அவ்வூரும் மலையும் ஆறும் முறையே வேதபுரி, வேதகிரி, வேதநதி என்றும் வேதசம்மந்தமுடைய பெயர்களைப் பெறலாயின என்க. (நகரப்படலம் 1) இவற்றுள் நதி வடகூவம் எனப்பட்ட தோடு, ஆரணி என்றும் அரிதாசர் காலத்துப் பேர் பெற்றிருந்த தென்பது—

“வான நதிநே ராரணியின் வடதீரத்து வேதபுரித்
தான நின்ற கருமணியந் தாமப் பெருமான் சந்நிதியில்”

(சம்மதபரிச் 33)

என்று இவ்வாசிரியர் பாடுதலால் தெரியலாம். ஆரணி என்பதும் ஆரணசம்பந்தம்பற்றி வழங்கியதேயாகும். கருமாலன கரு நாமம் நீல மாணிக்க தேவர் என்று சாஸனங் கூறுமாறே, அரிதாசர் தம் மூர்த்திருமாலை " கருமாமணிவண்ணன் " " கருமணி யநதாமப் பெருமான்" என்று பலவிடத்தும் கூறுதல் ஒப்பிடத் தக்கது. கலிங்க வெற்றிக்கு முன்பே கி.பி. 1511-ல் கிருஷ்ணதேவர் மேற்படி கோயிலிற் சாஸனங்கள் அமைத்திருத்தலாலும், அவர் தாயாரான நாகலாதேவியின் பெயரால் நாகலாபுரம் என்ற பெயரை அவ்வூர் பெற்றிருத்தலாலும், அக் கலிங்கப் போர்க்குப் பலவாண்டுகட்கு முன்பே அவ்வரசரது அபிமானம் இவ்வூரின்கண் மிக்கிருந்தது என்பது தெரியலாம். இந்நாகலாபுரத்துக்கு அர கண்டபுரம் என்ற வேறு பெயர் ஒன்றும் வழங்கியதாகச் சாஸனத் தால் அறியப்படுகின்றது.

இவற்றால் அரிதாசர் என்ற ஆசிரியர் வாழ்ந்த வேதபுரி என்பது நகரி நாகலாபுரமே என்பதும் இவர் வடமொழி தென் மொழிகளில் வல்லவராகவும் வேத வேதாங்கங்களைக் கரைகண்டவராகவும் திரு மாற்குப் பல திருப்பணிகளும் புரிந்து அப்பெருமான் திருவருள் பெற்ற பெரியாராகவும் விளங்கினர் என்பதும், இவரது அருமை பெருமைகளை அறிந்து விஜயநகர வேந்தர் பெருமானுன கிருஷ்ண தேவராயர் அவரைப் பெரிதும் கௌரவித்தவர் என்பதும் திருமாலின் பேரருள் பெற்றிருந்த இவர் வாயிலாகத் தாம் அடையப் போகும் வெற்றியை முன்னறிந்து கலிங்கப் போரை அவ்வரசர் நடத்திச் சித்தி பெற்றனர் என்பதும். அதனால் அப் பெரியார் திருப்பணி புரிந்த திருமால் கோயிலுக்கும் அவர்க்கும் இராயர் பெருமான் பல கிராமங்கள் தானமளித்துப் பெரிதும் சிறப் பித்தனர் என்பதும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

10. அம்பி அறம்வளர்த்த முதலியார்.

இவற்றால் கோயில் முதலிய தர்மங்களின் குறைபாடுகளை அவ்வப்போது கேட்டுத் தீர்த்து மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாதுகாத்து வந்ததோடு, தமிழாபிமானமும் உடையாயிருந்தனர் அவ்வரசர் பெருமான் என்பது பெறப்படும். பெருங்கல்விமானுகவும் சிறந்த கவியாகவும் விளங்கித் தமிழ் நாட்டின் பெரும்பாகத்தை ஆட்சிபுரிந்து வந்த பேரரசராகிய அவர்க்குத் தமிழ்ப் பாஷையில் அறிவும் ஆதரவும் இருந்தன என்பது ஓர் ஆச்சரியமன்று. அவ்வரசர் இயற்றிய கிரந்தமாய்ப் பலரும் அருமை பாராட்டி

வருவது ஆமுக்த மால்யதா என்ற ஆந்திர நூலாம். சூடிக் கொடுத்தாள் என்பதே 'ஆமுக்தமால்யதா' என்பதன் பொருள். ஸ்ரீஆண்டாள் வைபவத்தைப் பற்றி அவர் பாடியுள்ள சொற்செறிவு பொருளமைதிகளைப் பற்றி, ஆந்திரவறிஞர் புகழ்ந்து பாராட்டுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். இவ்வரசர் அரசியன்முறையாற் பொது நோக்கமுடையவராயினும் சமயக் கொள்கையில் தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தைத் தழுவியவர். இவர்க்கு ஆசிரியர் இன்னாரென்பதற்குத் தெளிவான ஆதாரமில்லை யென்றும், ஆனால் இவர் பின்னோர் காஞ்சிபுரம் ஸ்ரீதாததேசிகன் திருவடிசம்பந்திகளென்பதற்குப் பிரமாணங் களுண்டென்றுங் கூறுவர். இவருடைய கிரந்தத்தில் ஸ்ரீஆண்டாள் பாசுரங்களின் அருமை பெருமைகளும், தமிழ்நாட்டின் சிறப்புக் களும், நம்மாழ்வார், ஆளவந்தார், உடையவர், வேதாந்த தேசிகர், மணவாள மா முனிகள், அஹோபிலம் ஜீயர் என்ற வைஷ்ணவ பரமாசார்யர்களின் அவதார மகிமைகளும் அழகாகக் கூறப்பட் டுள்ளன என்பது தெரிகின்றது. இதனால் மதரீதியாலும் திராவிட பாஷையை இவ்வரசர் கௌரவித்தவர் என்பது விசதமாகும். அன்றியும் தென்னாட்டரசின் முறைக்கென்று தமிழமைச்சரையும் இவ்வரசர் உடையராயிருந்தனர், அவ்வமைச்சருள் அம்பி அறம் வளர்த்த முதலியார் என்பரொருவர். இம் முதலியார் அபிமானத் தைத் தமிழரசர்களும் அக்காலத்து எதிர்பார்த்தவராயிருந்தனர். பாண்டியனொருவன், இவர்மேற் கலம்பகமொன்று பாடினனாக, 'அவ்வாறு பாடியது தகுமா ?' என்பதுபற்றி உசாவிய புலவர்க்கு விடையாக அவ்வரசன் பாடிய செய்யுளொன்று, அடியில் வருமாறு தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது.

'அறம் வளர்த்த முதலியாரைப் பாண்டியன் கலம்பகம்
பாடலாமோ'

என்று புலவர்க்குக் கூறியது.

'உங்கள் மனந்தெரி யும்பல வீரொரு சீர்மரபோந்
திங்கள் மரபினந் திங்களின் கூடச்செம் பூரறமா
துங்கன் மரபினிற் கங்கையங் சூடினன் சோதியன்றோ
எங்கள் மரபுண் டெனக்கவி பாடினம் யாமவற்கே"

"சிவபிரான், திங்களுடன் கங்கையுஞ் சடையிற் றரித்துள்ளமை யால், திங்கள் மரபினராகிய எமக்கும் கங்கை மரபினராகிய முதலியார்க்கும் உறவுண்மைபற்றி அவரைப் பாடலாயினேம்"

என்பது இப்பாடற் கருத்தாதல் காண்க. [செம்பூர் அறமாதுங்கன் செம்பூர் அறம்வளர்த்த முதலியார் : செம்பூர் அவதூரையையும் அம்பி (Hampi) அவர் உத்தியோகம் வகித்த ஊருமாகக் கொள்ளத் தக்கன] ஒருகால் கிருஷ்ணதேவராயர் திருமுன்பு வேளாள மகளிரைப்போல வேஷம்பூண்டு ஆடிய கூத்தர் சிலரைக் கண்டு இம்முதலியார் பொறுமல் தங்குலத்துக்கு அவமானமாக நடித்த அவர்களை வாளால் வெட்டி மடிவித்தார் என்ற சரித்திரமும் வழங்குகின்றது. இது கி.பி. 1511-ல் நடந்ததெனறும் கூறுவர். (தொண்டைமண்டல சதகவுரை) இச்செய்தி அடியில் வரும் தொண்டைமண்டல சதகச் செய்யுளாலும் அறியத் தக்கதாம்.

‘ தாளாண்மையுள்ள புகழ்க்ருஷ்ண ராயன் சமுகந்திலே
வேளாண் மகளிரைப் போலே விநோதித்து வேடங்கொண்டு
கோளார் வயிரியர் கூத்தாடத் தங்கள் குடிமையெண்ணி
வாளா லவருயிர் மாய்த்ததன் றேதொண்டை மண்டலமே ”

11. விட்டலதேவராயர்.

இனி, கிருஷ்ணதேவராயர் காலத்துக்குப்பின்பு, அச்சுத சதாசிவதேவராயர்கள் நாளில் அவ்விராய வமிசத்துப் பிரதிநிதியாய்த் தென்னாட்டில் வெல்லப்படாப் பகுதிகளையும் வென்று ஆட்சிபுரிந்து வந்தவர் விட்டலதேவராயர் என்பவர். இவருடைய சாஸனங்களில் ‘வீரப்ரதாப மகாமண்டலேசுவர ராமராஜ திம்மராஜ விட்டலதேவ மகாராஜா’ என்று சிறப்பிக்கப்படுவர். (EP. Rep. 129 of 1905) இவர் இராயராசிக் கடங்காதிருந்த கேரள தேசத்தின் தலைநகராகிய அனந்தசயனத்தின் மேல் கி.பி. 1543-ல் படையெடுத்துச் சென்றனரென்றும் இவரது சேனைகள் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே நைசாம் ராஜ்யத்து முதுகல் வரையுமுள்ள பிரதேசங்களை வென்றடிப் படுத்தன வென்றும் சொல்லப்படுகின்றன. இவர் கன்னியாகுமரிக்குப் படையெடுத்துச் சென்று வென்றதற்கு அறிகுறியாக, அக்குமரிப் பக்கத்துச் சுசீந்திரம் விஷ்ணு கோயிலிலுள்ள சாஸனமொன்று கொல்லமாண்டு 722 (கி.பி. 1546-47)-ல் இவர் பிறந்த நாளன்று அர்ச்சனை நடத்தி வருதற்கென்று அந்நாட்டரசனாகிய பூதல வீரராமவர்மாவால் சில பொருள்கள் வைக்கப்பட்டதைக் கூறுகின்றது. இங்ஙனம், விட்டலதேவராயர் கன்னியாகுமரியை

நோக்கிப் படையெடுத்துச் சென்றதையே, அப்போதிருந்த பாண்டியனொருவன்—

"தொட்டி லிருக்கத் தொடங்கிய நாண்முதலா
அட்டதிக்கு நின்குடைக்கீ ழாயிற்றே—விட்டலையா
தன்குமரி யன்றித் தனிக்குமரி கொள்ளாநீ
தென்குமரிக் கேகுவதென் செப்பு"

என்று பாடியிருக்குஞ் செய்தி, தமிழ் நாவலர் சரிதையாற் றெரியலாம். இதனால் இவ்விட்டலதேவரும் தமிழறிவும் அபிமானமு முடையவரா யிருந்தவரென்பது பெறப்படும்.

12. ஞானவரோதய பண்டாரம்.

இக்கிருஷ்ணதேவர் ஆட்சிக்காலத்தில் ஆந்திரகவிகளும் கன்னடகவிகளும் அவ்வத் தேசங்களிற் பெருகியிருந்தமை போலவே, தமிழ்நாட்டிலும் எண்ணிறந்த புலவர்கள் விளங்கினர் என்பது தெரிகின்றது. அவருள் தலைசிறந்தவர்கள் கந்தபுராணம் பாடிய கச்சியப்பர், ஞானவரோதய பண்டாரம், அந்தகக்கவி வீரராகவ முதலியார், சிதம்பரபுராணம் பாடிய திருமலைநாதர், சிதம்பரப்பாட்டியல் ஆசிரியர் பரஞ்சோதியார், வேம்பத்தூர்ப் புலவர்களிற் சிலர், பாகவதம் பதினாயிரம் பாடிய நெல்லிநகர் வரதராசர், மாறனலங்காரம், மாறனகப் பொருள், குருகாமான்மிய முதலியவை பாடிய திருக்குருகைப் பெருமாட் கவிராசர் முதலியவர்கள் ஆவர். இவருள் ஞானவரோதய பண்டாரம் என்பவர் வயலூரில் இருந்த ஒரு தமிழ்ப் பெரியார். இவரியற்றிய நூல் உபதேசகாண்டம் என்பது. இந்நூல் முழுதும் சென்னை மியூசியம் கையெழுத்துப் புத்தகசாலையில் உள்ளது. (கந்தபுராணம் சிவரகசியகண்டம் ஆறுகாண்டமும்) காஞ்சீபுரம் ஆயிரக்கால் மண்டபத்திலே எழுந்தருளியிருக்கும் ஆறுமுகசுவாமி உலகமுட் கொண்டுவப்ப "செந்தமிழ்க்கொரு சீர்வாம்பாகிய" என்று பாடச் சொல்லிக் கச்சியப்பருக்கு அனுக்கிரகம்பண்ண அவர் ஆறு காண்டமும் 10,500 கவிகளிற் பாடினார். பின்பு உறையூரின் மேற்கே வயலூரில் எழுந்தருளியிருக்கும் ஆறுமுகசுவாமி 'உலகமுட் கொண்டுவப்ப முருகவேள்' என்று பாடச் சொல்ல 'ஞான வரோதய பண்டாரம்' 7-ம் காண்டம் உபதேச காண்டமொன்றும் 2,600-ஆகப் பாடினார். சங்கரசங்கிதையில் சிவரகசியகாண்டம் 13,000 கிரந்தமும் 7-ம் காண்டமாகத் தமிழ்பண்ணின பாட்டு

13,221 என்று அவ்வுபதேசகாண்டப் பிரதியில் எழுதப்பட்டிருக்கும் விஷயம், அந்நூலினுடையதும் நூலாசிரியருடையதும் வரலாறுகளைச் செவ்வனே விளக்கும் இக் காலத்துள்ள நூற்செய்யுட்டொகையோடு இக் கணக்கு வேறுபாடுகொண்டுள்ளதும் ஆராயத்தக்கது. இவ்வுபதேச காண்டம் பாடியவர் கந்தபுராணம் கச்சியப்ப சிவாசாரியர் மாணுக்கரென்பது அவர்க்கு இவர் கூறும் வாழ்த்தால் புலப்படுகின்றது. இப்பண்டாரமே "ஞானவரோதயர் மதுரைக்குப் போய் வந்தபோது காளமேகப் புலவர் பாடியது" என்ற தலைப்பின்கீழ்—

> " முதிரத் தமிழ்தெரி நின்பாடறன்னை முறை யறிந்தே
> எதிரொக்கக் கோப்பதற் கேழெழு பேரில்லை யின்றமிழின்
> பதரைத் தெரிதரக் கோவில்லை வேறப் பலகையில்லை
> மதுரைக்கு நீசென்ற தெவ்வாறு ஞான வரோதயனே "

என்று தமிழ் நாவலர் சரிதையிற் கூறப்படுவோர். இதனால், இப் புலவர் காலத்தவர் இப்பண்டாரம் என்பது தெரியலாம். இவரைக் கௌரவித்துப் பாடும் மாதிரியால் காளமேகத்தின் ஆசிரியராக இவர் கருதப்படுதற்குரியர்.

13. உத்தண்ட வேலாயுத கவி.

இப்பெயர்கொண்ட புலவரொருவர், திருவதிகை என்ற சிவதலத்தில் விளங்கியிருந்தனர் என்பதும் அவ்வூர்ச் சிவன் கோயிலிற் கண்ட சாஸனமொன்றால் தெரிய வருகின்றது. சகவருடம் 1458-ல் (கி.பி. 1534)-ல் இப்புலவர் திருவதிகைக் கலம்பகம் என்ற பிரபந்தம்பாடி மனையும் நிலமும் அத்தலத்தே பெற்றனர் என்று மேற்படி சாஸனம் கூறும். இத்தகைய கலம்பகம் இதுவரை கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. (Ibid No. 9, 1921—22, P. 99).

14. குமாரர் திண்டிமர் அண்ணாமலைநாதர்.

வட ஆர்க்காடு ஜில்லா முல்லந்தரம் என்ற ஊரில் அருணாசலேசுவரர் கோயில் தெற்குத் திருமதிலிற் கண்ட சாஸனமொன்றால், சக வருடம் 1472 (கி.பி. 1550)-ல் பார்ப்பனமாதொருத்தி தான் கட்டிய அண்ணாமலை நாதர் சந்நிதிக்குத் தன் தர்மமாகவும், தன் கணவர் குமாரர் திண்டிமர் அண்ணாமலைநாதர் தர்மமாகவும் சில

நிலங்கள் அளித்த செய்தி தெரியவருகின்றது. (Ibid No. 397 of 1911) திண்டிமர் என்பது 11-ம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டிலும் ஆந்திர தேசத்திலும் இருந்த பிரபல கவிகள் பலர் தரித்து வந்த சிறப்புப் பெயராகும். மேற்படி ஊரிலுள்ள சுயம்புநாதேசுவரர் கோயிலிற்கண்ட சாஸனத்திலும் திண்டிமகவி யொருவர் கூறப்படுகின்றார். (3 Ibid No. 396 of 1911). "சாளுவாப்யுதயம்" என்ற நூல் பாடிய ராஜநாதகவியின் மரபினர் இச் சிறப்புப் பெயர் தரித்திருந்தவராகத் தெரிகின்றனர். தெய்வ சந்நிதியிலோ இராஜசமுகத்திலோ சென்று கவிபாடும் போது திண்டிமம் என்ற வாத்திய விசேஷத்தை முழக்கிப்பாடுவது இன்னோர் வழக்கம் என்பர். தமிழ் நாட்டிலும் இத்தகைய கவிஞர் விளங்கினர் என்பது அக்காலத்துப் புலவரான பகழிக் கூத்தர் என்பார் தம் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில்—

"பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படி திண்டிமம்மு ழக்க" (சப்பாணிப்—2)

"பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப்
பரிந்துதிண் டிமமுழக்க" (சிறுபறைப்—4)

என்று பாடுதலால் தெளிவாகின்றது. இதனால், இத்திண்டிம வாத்தியம் தாம்பெற்ற பெரும் கவிப்புலமைக்கு அடையாளமாக அடிக்கப்படுவது என்பதும், அதனைக் கவிபாடாநின்றே ஒலிப்பிப்பர் என்பதும் அறியப்படுகின்றன.

இனிக் கடிகையார் என்ற சிறப்புப் பெயர் புலவர் சிலர் பெற்றிருந்தனர் என்பது இவ்வாராய்ச்சியின் முதலிற் குறித்த முத்தமிழாசிரியர் வரலாற்றாலும், 'கடிகையார்கோலாகலன்' என ஆசுகவிராசசிங்கம் என்ற புலவர் தம்மைக் கூறிக் கொள்வதனாலும் தெரிகின்றது. இச்சிறப்புப் பெயரை ஆராயுமிடத்து, அது திண்டிமகவி என்ற வடதொடர்க்கு ஏற்ற தமிழ்ப் பெயராகக் கருத இடமுண்டாகின்றது. கடிகையார் என்பது பறைமுழக்கு வோர்க்குப் பழைமையாகவே வழங்கி வந்த பெயரென்பது—

"திருக்கொடி யேற்று ஞான்று திருப்பறையறைவு
கேட்பிக்கும் கடிகையார் ஐவர்க்கு"

எனவரும் சாஸனத் தொடரால் அறியப்படும். அன்றியும் "பாவாணர் மங்கலக்கவி வாழிபாடிப் பரிந்து திண்டிமம் முழக்க" என்று முன் காட்டிய தொடரால் இத்திண்டிமர் மங்கலக்கவி

பாடுவோர் என்பது தெரியலாம். இதுபோலவே, கடிகையார் என்பதும் இதேபொருள் வழங்குதலை—

"காவன் மன்னரும் கடிகையும்—கடவது நிறைத்தார்"
(சீவக—2367)

என்ற சீவக சிந்தாமணி அடியாலும், கடிகையர் மங்கலம் பாடினர் என்ற நச்சினார்க்கினியர் உரையாலும் அறியலாம். ஆகவே, திண்டிமரும் கடிகையாரும் "மங்கலகவிபாடி வாத்திய முழக்குவோர்" என ஒரே பொருளில் முற்காலத்து வழங்கிய சிறப்புப் பெயர்கள் என்பது பெறப்படுகின்றது.

இங்ஙனம் தமிழ்நாட்டில் விளங்கிய திண்டிம கவிகளுள் மேற் குறித்த சாஸனங்கூறும் அண்ணாமலைநாதரும் ஒருவராதல் வேண்டும். இவர் மனைவி தமிழில் சாஸனம் அமைத்திருத்தலாலும், 'குமாரர் திண்டிமர் அண்ணாமலைநாதர்' என்ற தமிழ்ப் பெயராலும் இப்புலவர் தமிழ்க்கவி யென்றே கருதற்குரியவராவர் (S.I.I. Vol. II P. 125.)

15. திருவாரூர் ஞானப்ரகாசமுனிவர்.

மாசிலாமணிதேசிகர், சத்தியஞான பண்டாரம் கமலை ஞானப்ரகாசர் என்றழைக்கப்பெறும் இப்பெரியாரைப் பற்றிச் சைவராயினுரெல்லாம் நன்கறிவர்.

ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்மையை யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியில்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே.
கவுணிய மார்க்கங் கலந்தளித் தோன்கம லாலயத்தோன்
இவுளி நரித்திர ளாக்கிவைத் தோனிசை பாணருக்காப்
பவுளி யுரைத்தருள் ஞானப்ர காசன் பயின்மடத்திற்
கெவுளி யுரைக்கும் பதிபசு பாசத்தின் கேள்விகளே

என்பன முதலிய பண்டாரக் கலித்துறைப் பாடல்களால் இவர் பெருமை நன்கு விளங்கும். இனி, தஞ்சாவூர் ஜில்லா நாகப்பட்டினந் தாலூகா சிக்கலிலுள்ள நவநீதேசுவராலயத்தின் கருப்பக்கிருகத் தென்குமுதப்படையிற் கண்ட சாஸனமொன்று,

விஜயநகர வேந்தரான சதாசிவதேவ மகாராயர் நாளில் சக வருடம் 1482 (கி.பி. 1560)-ல் கிருஷ்ணமரசய்யன் என்ற அதிகாரியின் கட்டளைப்படி, சிக்கல், வடகுடி, ஓடச்சேரி என்ற கிராமங்களும் மற்றக் கோயில்களும் திருவாரூர் (கமலை) ஞானப் பிரகாச பண்டாரம் என்ற பெரியார் மேற்பார்வையில் விடப் பட்டன என்று கூறுகின்றது. இது, ஏற்கவே தெளியப்பட்ட அம் முனிவர் கால வரலாறுகளோடு பெரிதும் இயைபுடையதா யிருத்தல் அறியத்தகும்.

16. பொன்னின்பெருமாள் பராக்கிரமபாண்டியன்.

சோழராஜ்யம் நிலைகுலைந்த பிற்காலத்தில் சோழவதிகாரிகளா யிருந்த மாவலி வாணாதியாரர்களால் பாண்டிநாடு கவரப்பட்டுப் போனமையால் அங்கிருந்த பாண்டியர்கள் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு பாண்டிநாட்டை ஆண்டுவரலாயினர். இத்தலைநகரங்கண்டு விசுவநாதர்க்குப் பெருங்கோயில் எடுத்து ஆட்சி புரிந்தவர் பொன்னின் பெருமாள் அரிகேசரி பராக்ரம பாண்டியன் என்பவர். இவர் 1423–1463 வரை ஆண்டவர். 1446-ம் வருஷம் தென்காசி யாலயம் கட்ட ஆரம்பிக்கப் பெற்றது. 1463-ல் இவர் தொடங்கிய கோபுரத்தை முடியாமலே சிவபதம் அடைந்தார். இவருடைய சாஸனங்கள் அக்கோயிலிற் பல உள்ளன. அவற்றுள் இவர் பாடியனவாகக் காணும் பாடல்கள் சில மிக உருக்கமுடையவை. அவை வருமாறு :—

"சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்னம்
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்ரம பாண்டியனே"

"மனத்தால் வருக்கவு மெட்டாத கோயில் வருக்க முன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன்தென் காசியை யென்று [மண்மேல்
நினைத்தா தரஞ்செய்து தங்காவல் பூண்ட நிருபர்பதம்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீ தியானுந் தரித்தனனே"

"பூந்தண் பொழில் புடை சூழுந்தென் காசியைப் பூதலத்தில்
தாந்தங் கிளையுட னேபுரப் பார்கள்செந் தாமரையாள்
காந்தன் பராக்ரமக் கைதவன் மான கவசன் கொற்கை
வேந்தன் பணிபவ ராகியெந் நாளும் விளங்குவரே"

எனக் காண்க. இப்பாண்டியன் சிவபதமடைந்ததை அச்சாஸனம் பின்வருமாறு சிறப்பித்துக் கூறுகின்றது.

"கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
நீதற்ற வெள்ளிச் சிலம்பகத்தோ செம்பொ னம்பலத்தோ
வேதத்திலோ சிவ லோகத்திலோ விச்வ நாதனிரு
பாதத்தி லோசென்று புக்கான் பராக்ரம பாண்டியனே"

இவற்றால், இப்பாண்டியனது சிவபக்தித்திறனோடு அருந்தமிழ்ப் புலமையும் நன்கு விளங்கத் தடையில்லை. இவன் மரபில் உதித்தவனே அதிவீரராம பாண்டியர் என்ற அரசப் புலவர். இவரது புலமைத் திறத்தைப்பற்றி நான் கூற வேண்டுவதில்லை. இப்பாண்டியர் கி.பி. 1514-ல் அழகன் சீவலவேள் என்ற அபிஷேகப் பெயருடன் பட்டம் பெற்றவர்.

"சகன்கால மாயிரத்து நானூற்றெண் பத்தாறிற் சலதிசூழ்ந்த
செகங்காண விரத்தாக்ஷி சித்திரையி லிருபதாந் தேதி [வேந்தர்
புகழ்ந்தேவல் செய்பூர்வ திதியாறில் முதல்வாரம் [புணர்பூசத்திற்
சுகந்தாதி புனையழகன் சீவலவே ளெனமகுடஞ் சூடினனே"

என்பது சாஸனப் பாடல். இவர் வீர வெண்பாமாலை குலசேகர பாண்டியன் புத்ரர் என்றும்; அதிவீரராமர் என்ற பெயருடையவர் என்றும் தமிழ்ப் பாஷையில் உயர்ந்த அறிவும் சிவபக்தியும் உடையவரென்றும் இவரது சாஸனங்கள் கூறும். (T.A.S. i., 144) இவ்வதி வீரராமரைப் போலத் தமிழ்ப் புலமை பெற்று விளங்கிய வரதுங்கராமபாண்டியனது சாஸனம் 1585-ல் அமைந்திருத்தல் வெளியிடப்பட்டுள்ளது. (T. A. S. i., 126) ஆனால், இப் பாண்டியரை அதிவீரரது சகோதரராகக் கூறுதற்குக் காலம் அதிகமாக இடையிடுதலாற் பொருந்தவில்லை.

17. காசிக்கலியன் கவிராயர்.

தென்காசி விசுவநாதஸ்வாமியின் பிளப்புண்ட கோபுரத்து வாயிலின் வடபுற நிலைக்கல்லிற் கண்ட சாஸனமொன்று ஐந்து வெண்பாக்களில் அமைந்துள்ளது. கலிவருடம் 4689 (கி.பி. 1588)-ல் அபிராமன் என்ற அரசன் வீரபாண்டியன் என்ற பட்டப் பெயருடன் முடிசூடிய செய்தியை இப் பாடல்கள் குறிக்கின்றன.

இவற்றுள் முதல் மூன்று வெண்பாக்கள் நாண்மங்கலம் வாண் மங்கலம் குடைமங்கலம் என்ற புறத்துறைகளில் அமைந்துள்ளன. நான்காம் வெண்பா வீரபாண்டியன் முடி-சூடிய நாளையும் ஐந்தாவது இவை பாடிய புலவரையும் குறிப்பன. இப் புலவர் பெயர் காசிக்கலியன்கவிராயன் என்பது. இப்பாடல்கள் வருமாறு (T.A.S. vol. i., p.p. 115—116) :—

1. " சீர்கொண்ட செங்கமலை வாழத் திரையாடைப்
பார்கொண்ட வாள்வீர பாண்டியனென்—றேர்கொண்ட
கானுலா மாலைக் கன்கமகு டம்புனைந்தான்
மானவே லானபிரா மன் "

2. " சேணுலவு வெண்டிங்கட் செல்வனெனத் தண்ணென்று
நீணிலாமோ ரேழு நிழற்றுமே—பேணிவந்து
பூவேந்த ரேத்து புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் குடை "

3. " பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயக்குமறங் கூருமே—விற்றடத்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றஞ்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள் "

4. " நண்புற் றெதிர்ந்தகலி நாலா யிரத்தறுநூற்
றெண்பத் தொன் பாணி லிருங்கடல்சூழ்—மண்பெற்று
மின்னுமகு டம்புனைந்தான் வேல்வீர மாறனென
மன்னவர்கோ மானபிரா மன் "

5. " கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்
மற்றடந்தோள் வேல்வீர மாறனுக்குச் சொற்புனைந்தான்
நாண்மங் கலமு நவிற்றுகுடை மங்கலமும்
வாண்மங் கலமும் வகுத்து "

நான்மங்கலமாவது—"அறந்தரு செங்கோ லருள் வெய்யோன் பிறந்தநாட் சிறப்புரைத் தன்று" (9-24) குடைமங்கலமாவது—" நாற்றிசையும் புகழ் பெருக—வீற்றிருந்தான் குடை புகழ்ந் தன்று" (9-34) வான்மங்கலமாவது—" சயக்கருங் கடற்றானை—வயக்களிற்றான் வாள்புகழ்ந் தன்று" (9-35) என்பன புறப்பொருள் வெண்பாமாலைக் கொளுக்கள்.

18. குருநமச்சிவாய பண்டாரம்.

இவர் திருவண்ணுமலைக் குகைநமச்சிவாயர் என்ற பெரியவரின் சிஷ்யர். பரமரகசியமாலை, சிதம்பரவெண்பா, அண்ணுமலை வெண்பா முதலியவற்றின் ஆசிரியர். சிதம்பரத்தில் பல திருப்பணிகள் புரிந்தவர். வட ஆர்க்காடு ஜில்லா விரிஞ்சிபுரம் சிவன்கோயிலின் தெற்கு சந்நிதிவாயில் நிலைக்கல்லிற் கண்ட சாஸனமொன்று, சகவருடம் 1514 (கி.பி. 1592)-ல் விஜயநகர வேந்தரான வேங்கடபதி தேவராயர் நாளையில், புன்னுற்றூர் பெரிய எர்ரம்மநாயக்கர் என்பார், சிதம்பரம் குருநமசிவாயர் சிஷ்யர் ஆனந்தநமசிவாய (S.I.I. Vol. ii., No. 58 pp. 86—86) பண்டாரம் அவர்களுக்கு மனையொன்று மடப்புறமாகத் தானமளித்த செய்தி கூறுகின்றது. இதனுல், குருநமச்சிவாயர் வேங்கடபதி தேவராயர் காலத்தே சிதம்பரத்தில் வசித்தவர் என்பது விளங்கும். சிதம்பரம் தெற்குக் கோபுர வாயிலிற் கண்ட சாஸனமொன்று (Ep. Rep. No. 394 of 1913) சகவருடம் 1510 (கி.பி. 1588)-ல் மேற்படி வெங்கடபதிராயரே பரதேசிகள் இருபதின்மர்க்குக் கோயிலில் நித்தம் உணவளித்தற்குரிய நிபந்தஞ் செய்து அத் தருமத்தை மேற்பார்த்து நடத்திவரும் உரிமையை நமச்சிவாய உடையாரிடம் ஒப்பித்தனர் என்று கூறுகின்றது. ஆகவே சகம் 1510–1514-ம் வருஷ சாஸனங்களிரண்டும் ஒரே இராயர்காலத் தனவாய் சிதம்பரம் குருநமச்சிவாயர் சம்பந்தமாகவே உள்ளன என்பது தெரியலாம். இப்பெரியார் திருப்பணிகளைப்பற்றி மற்ெருரு சாஸனப்பாட்டும் அடியில் வருமாறு:—

தென்னருணை மருவுகுகை நமச்சி வாய
  தேவர்சிஷ்யன் குருநமச்சி வாயன்செய்யும்
மன்னுபணி விடையாகப் புலியூர்ச் செம்பொன்
  மன்றுடையான் பூசைகொண்டு மகிழ்ந்து காண்க
இந்நிலமெ லாந்தழைக்க வரசூர்ப் பத்தும்
  இலிங்கபுர சாதனக்கல் லெழுதிநாட்டி
நன்னெறிசேர் காலாட்கள் தோழன் சின்ன
  நல்லநயி னுன்கொடுத்து நடத்தினுனே.

இவர் ஈசுவர வருஷம் வைசாசி மாதம் 9 தேதி சிவபதம் அடைந்தனர் என்ப. (பெருந்தொகை—1909) சகவருஷம் 1510 (கி.பி. 1578) சர்வதாரி வருடம் இவர் சாஸனம் பிறந்திருத்தலால்

அதிலிருந்து 49-ம் வருஷத்தில் அஃதாவது 1559-ம் வருடம் (கி.பி. 1637) ஈசுவரவருஷம் இப்பெரியார் ஐக்கியமடைந்தவராதல் தெரியலாம். ஆகவே, 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் விளங்கியவர் குருநமசிவாயர் என்பது வெளியாதல் காண்க.

19. துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

இவர், நன்னெறி, வெங்கைக் கோவை, பழமலையந்தாதி முதலிய பிரபந்தங்களையும், பிரபுலிங்கலீலை, வேதாந்த சூடாமணி முதலிய நூல்களையும் இயற்றிய பெரும்புலவர் என்பதும் வீரசைவத் துறவியாய் விளங்கியவர் என்பதும் பலரும் அறிந்தனவே. துறை மங்கலத்தின் தலைவராயிருந்த இலங்கரெட்டியார் குமாரர் அண்ணாமலை ரெட்டியார் என்ற பிரபுவால் இம்முனிவர் பெரிதும் அபிமானிக்கப் பெற்றவர் என்பது இவரது வெங்கையுலா முதலிய வற்றால் நன்கறியப்படுகின்றது. தந்தை இலிங்க ரெட்டியார் திருவெங்கனூரில் சிவன் கோயிலொன்றுகட்டி பிரதிஷ்டித்த காலத்தில் அத்திருப்பணியை உடனிருந்து நடத்திவைத்தவர் குமாரர் அண்ணாமலை ரெட்டியார் என்பதும் தந்தை இடையில் சிவபதமடைய அக்கோயிற்குரிய எல்லாச் சிறப்புக்களையும் செய்து இவரே அத்திருப்பணியை பூர்த்தி பெறச் செய்தவர் என்பதும்—

"பண்டை யறத்தின் படிவமிது வென்னவுருக்
கொண்டவிலிங் கையன் குலமைந்தன்—

* * *

கண்ட குலத்திற் கருதி னிரட்டியாம்
பண்ட குலத்தின் பயனானன்—மண்டலிகர்
நல்லகோ வின்று நவைக்கோ லெனச் செயுங்கோல்
வல்லகோ லண்ணா மலைவள்ளல்—மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகுஞ்சீர் கெ டாதடுக்கிப்
புந்தி மகிழுற் புதவணித்தா—முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயி லுள்ளிருந்தெம்
பையுள்போக் கிற்கும் பரஞ்சோதி"

(திருவெங்கையுலா, கண்ணி 45 ; 64-67)

என்ற இம் முனிவர் வாக்கா லறியலாம். இதனால், அண்ணாமலை ரெட்டியார், வடுகர் குடிகளுள் பண்ட குலத்தவர் என்பதும், நல்ல கோலுக்கு அதிபர் என்பதும், வெங்கைத் திருப்பணியை முற்று

வித்தவர் என்பதும் பெறப்படும். இங்ஙனம் அண்ணாமலை ரெட்டியார் தந்தையால் வெங்கனூரில் கோயில் கட்டுவிக்கப் பெற்ற செய்தி மேற்படி ஆலய கோபுரத்திற்கண்ட சாஸனமொன்றும் ஆதரித்தல் அறியத்தக்கது.

"விஜய நகர வேந்தரான இரண்டாம் வேங்கடபதிராயர் ஆட்சிக் காலத்தே சகம் 1545-ம் ஆண்டு ருத்ரோத்காரி வருடம் வைகாசி மாதம் 3-ம் தேதி ரிஷபராசியும் அஸ்தநக்ஷத்திரமுங்கூடிய குருவார சுபதினத்தில் (கி.பி. 1623, மே மாதம்) பண்ட குலத்தவரான இலிங்க ரெட்டியார் பழமலையான வெங்கனூரில் கோபுர மண்டபங்களுடன் கோயில்கட்டிப் பழமலைநாத ஸ்வாமியையும் பெரியம்மை நாய்ச்சியையும் ஆங்குப் பிரதிஷ்டித்து நித்தநைமித் தகங்களுக்கு வேண்டிய நிபந்தங்களும் அமைத்தார்" (Ep. Rep. No. 1 of 1913) என்ற வரலாறு காணப்படுகின்றது. இதனால், மேற்படி கோயிலைப் பிரதிஷ்டித்தவர் இலிங்க ரெட்டியார் என்பது பெறப்படும். ஆனால், சிவப்பிரகாச முனிவர் அவர் குமாரரால் அக்கோயில் கட்டப்பட்டதாகப் பாடியுள்ளாரே எனின், தந்தை நடத்திய திருப்பணியை உடனிருந்து நிறைவேற்றி, அவர்க்குப்பின்னும் அத்தர்மத்தைச் சிறப்பித்தவர் அவர் குமாரர் ஆனமைபற்றி அண்ணாமலை ரெட்டியாரே கட்டியதாக அம்முனிவர் பாடலாயினர் என்று கொள்ளுதல் பொருத்தமுடைத்து. சிவப்பிரகாசர் பிரபுலிங்கலீலை செய்த காலம் சகவருடம் 1574 என்பது—

பார்க்கெழு சகாத்த மூவைந் நூற்றெழு பானுன்காவ
 தார்கெழு கரநா மங்கொ ளாண்டுறு விடைஞாயிற்றிற்
சீர்கெழு மல்ல மன்றன் றிருவிளை யாடற் காதை
 கார்கெழு மிடற்றெங் கோமான் கருணைகொண டியம்பினேனே.

என்ற அந்நூற் பாயிரத்தால் அறியப்படும். படவே மேற்படி வெங்கைக் கோயிற் பிரதிஷ்டாகாலம் ருத்திரோத்காரி ஆதலால் பிரபுலிங்கலீலை பாடிய 59 வருஷங்கட்கு முன் இலிங்க ரெட்டியாரால் அப்பிரதிட்டை நடத்தப் பெற்றதென்பது பெறப்படுகின்றது.

20. மாதைத் திருவேங்கடநாதர்.

வடமொழியிற் கிருஷ்ண மிசிரர் செய்த 'பிரபோத சந்திரோதயம்" என்ற வேதாந்த பரமான நாடகத்தைத் தமிழ்க் காவியமாகப் பாடிய மாதைத் திருவேங்கடநாதர் வரலாறு "செந்தமிழில்" விரிவாக முன்பு எழுதப் பெற்றுள்ளது. இவர் பாண்டிய தேசத்தை ஆட்சிபுரிந்த நாயகவரசருள்—ரங்க கிருஷ்ணமுத்துவீரப்ப நாயகரால் (1682–89) திருநெல்வேலிப் பிரதேசத்துக்கு ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டு அதனை மிக்க திறமையுடன் ஆண்டுவந்தவர் என்பது 'பணவிடுதூது' என்ற பிரபந்தத்தால் அறியப்படுகின்றது. இலக்கண விளக்கம் என்ற நூலை திருவாரூர் வைத்தியநாததேசிகர் இயற்றியதற்குக் காரணமானவர் இவ்வேங்கடநாதரே என்று அந்நூற்பாயிரம் கூறும். "ஞான சோபானக்கும்மி" என வேறொரு நூலும் இவர் இயற்றியிருந்தனர் என்று தெரிகின்றது. ஸ்மார்த்த பிராமணருள் வன்னிகூடம் (வன்னிக்கோனேந்தல்) என்ற ஊரின் தலைவன் திருநெல்வேலிக்குச் சிலபூமிகள் வாங்கியதைக் கூறும் சாஸனத்தில், ரெங்ககிருஷ்ணமுத்துவீரப்ப நாயக்கர் திருவேங்கிடநாத ஐயர் என்ற இருவர் புண்ணியத்துக்காக மேற்படி பூமி வாங்கப்பட்டது என்ற செய்தி காணப்படுகின்றது. (CP. No 167 of Mr. Sewell lists) திருவேங்கிநாத ஐயர் என்பது மேற்குறித்த நாயகாது மந்திரியாகவே கொள்ளக் கூடியதாதலின் அது மாதைத் திருவேங்கிடநாத ஐயரைப்பற்றிய தென்றே கருதத்தடையில்லை.

21. வடமலையார்.

வட ஆர்க்காடு ஜில்லா, ஆரணி தாலூகா தேவிகாபுரத்து பிருகதாம்பாசந்நிதி வடக்குத் திருமதிலிற்கண்ட சாஸனம் ஒன்று. விஜயநகர வரசரான வீரப்ரதாப கிருஷ்ணதேவமகாராயர் ஆட்சிபுரிந்துவந்த சகவருடம் 1446 (கி.பி. 1523)-ல் சோரப்பூண்டி என்ற தேவதான கிராமத்தில் நிலமும் வீடும் வித்வானுன வடமலையார் என்பவர்க்கு தேவைக்கபுரம் படாதிபதியாலும் கைக்கோளமுதலிகளாலும் கோயிலதிகாரிகளாலும் தானமாக அளிக்கப்பட்டன என்று கூறுகின்றது. (Ep. Rep. 365 of 1912) மச்சபாராணம் செய்தவரும் மகாரை நாயச்கரது தென்னுட்டுப் பிரதிநிதியுமான வடமலையப்பிள்ளையன், பிற்காலத்தவர் ஆகலின் இச்சாஸனம் கூறும் புலவர், அவர்க்கு முற்பட்டு அப் பெயர் கொண்டிருந்த ஒருவர் என்று தெரிகின்றது.

22. திருமலை நாயனுர்.

சிதம்பர புராணம் என்ற நூலொன்று அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது. இந்நூல் சிறந்த வாக்குடையது. இது பாடிய ஆசிரியர் இன்னுரென்பது இதுவரை தெரியவிடமில்லாமலிருந்தது. தஞ்சைச் சரஸ்வதிமால் தமிழ்ப்புத்தக வட்டவணை 369-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டதில் சிதம்பரபுராணம் அருளிச்செய்த திருமலைநாயனுர் அருளிச்செய்த சிவபுராணத்தில் விஞவிடைப் புராணம் முற்றும் என்ற வாக்கியத்தால் தெரியவருகின்றது. இதனுல், சிவபுராணமும் இவரியற்றியவரென்பது தெரியலாம். சிதம்பரபுராணம் (கி.பி. 1508) சக வருடம் 1430-ல் இயற்றப்பட்டதென்பது அதன்பாயிரச் செய்யுளால் தெரியலாகும். இவ்வாறு புராணங்கள் பாடிய திருமலைநாயனுர் என்பவர் சிதம்பரப் பாட்டியல் இயற்றிய பரஞ்சோதியார் என்பவருடைய தந்தையார் என்பது—

"பூமன்னு பொழில் வெண்ணை மெய்கண்டான் கச்சிப்
புகழ்புனைதத் துவஞானப் பிரகாசமாய் வந்து
பாமன்ன வுரையென்ன அவனருளா லவன்றன்
பதம்பரவிச் சிதம்பரப்பாட் டியலெனப்பேர் வகுத்தான்
மாமன்னு சிதம்பரபு ராணமுத னூலு
மதுரையுலா வும்பகர்ந்தோன் மரபுகுல மைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரி புராணத்
திருமலைநா யகனருளின் றேசுபூண் டோனே"

"சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமிழாற்
சிதம்பரப் புராணமுதற் செய்து—விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்றவத்தாற்
சார்ந்தபரஞ் சோதியென்பான் றான்"

எனவரும் மேற்படி பாட்டியற் பாயிரச் செய்யுள்களால் வெளியாகின்றது. இதனுல், மதுரையுலா என்ற நூலும் திருமலைநாதர் பாடிய செய்தி பெறப்படுகின்றது. இந்நூல் எங்குள்ளதோ தெரியவில்லை. இத்திருமலைநாதரும், ஞானவரோதயரும் சாஸனவழியால் தெரியவந்த புலவர்கள் இல்லையாயினும் கிருஷ்ணதேவராயர் காலத்தவராகவும், புதிய செய்திகளுடையவராகவும் தெரியவந்தமையால் இங்குச் சேர்த்துக் கூறலாயினேன். சாஸனவகையால், இன்ன காலத்தவரென்று அறியப்படாத வேறுசில புலவரும் உளர்.

1. ஆதிநாத கவி.—புதுக்கோட்டைச் சீமைக் குடுமியான் மலையிலுள்ள சிவாலயக் குடை வரையிற் பொறிக்கப்பட்டுள்ள சாஸனமொன்றில்—ஆதிநாதர் என்ற புலவர் கூறப்படுகின்றனர். இப்புலவர் பாட்டாக அங்கு எழுதப்பட்டுள்ள வெண்பா அடியில் வருமாறு :—

(Ep. Rep. 377 of 1906.)

"எங்கள்நலக் குன்றரைப்பார்த் தேழுலகு மீன்றவுமை
நங்கைபல காலு நகைசெயுமே—கங்கையுறை
கொங்கே கமழ்சடிலம் போய்க்குடுமி யாய்விட்ட
தெங்கே யினிமறைப்பா ரென்று"

என்பதே.

2. வீரைத் தலைவன்.—இரும்பைப் பரசமயகோளரி என்ற புலவர் சன்னிவன புராணம், பூம்புலியூர் நாடகம், அஷ்டாதச புராண முதலியவை பாடிய ஆசிரியராக ஒரு சாஸனங் கூறுகின்ற தென்று கோபிநாதராயரவர்கள் செந்தமிழ் 13-ந் தொகுதி 173-ம் பக்கத்திற் குறிப்பிட்டுள்ளமை அறியத்தக்கது. இப்போதுள்ள திருவாங்கூர்ச் சீமையின் தென்பகுதி, முற்காலங்களினும் நமக்குச் சில நூற்றாண்டுகட்கு முன்பும் வேணாடு என்றே அழைக்கப்பட்டுவந்ததென்பதும் அந்நாட்டை யாண்டவர்களே ஆய் மரபினர் என்பதும் மேலே கூறினேன். இவ்வாயின் மரபினரே இப்போதுள்ள திருவாங்கூர் அரசர் என்று சாஸவழியாற் றெரிதலை கோபிநாதராயரவர்கள் நன்கு விளக்கியுள்ளார். இவ்வரசரிற் பலர் தமிழ்மொழி நன்கறிந்த புலவர்களாய் இருந்தவர்கள். திருவிசைப்பா ஆசிரியருள் ஒருவரான வேணாட்டடிகள் இந் நாட்டரசரே என்பது மேலே விளக்கியுளேன். பிற்காலத்திலும் இவ்வரசர் தமிழ்ப்புலமை நன்குடையவராயிருந்தவரென்பது சோணாட்டு மூவலூர்ச் சிவாலயத்துக் கண்ட சாஸனத்தால் தெளிவாகின்றது. அச் சாஸனத்துக் கண்ட பாடல்கள் செந்தமிழில் வெளிவந்துள்ளது. (4-251-2) அவற்றுள் ஒன்று அகிலகலாவல்லவன் சேரமான் பெருமாள் வஞ்சி மார்த்தாண்டன் திருப்பாமூத்த திருவடி சொல்லிவரக்காட்டின.....கவி"

"காவிரியைச் சோணாட்டைக் காளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலயம்
உள்ளத் தரும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப்பெருமாள் பிறந்து"

என்று காணப்படுதல் அறியத்தக்கதாம். இதனால், வஞ்சி மார்த்தாண்டன் என்ற சேரமான் அகிலகலாவல்லவன் என்று

சிறப்புப் பெயர் பெற்றவன் என்பதும் அவன் சேரமான் என்ற சேனாபதியைப் புகழ்ந்து பாடியிருத்தலும் காணலாம். இச் சேரமான் பெருமாள் 1541-ம் வருஷத்ததாகக் கண்ட சுசீந்திர சாஸனத்திற் கூறப்படும்—சகலகலை மார்த்தாண்டவர்மன் சிறைவாய் மூத்ததிருவடி" ஆக வேண்டுமென்று கோபிநாத ராயரவர்கள் கருதுவர். (T.A.S.I. 5) திருவாங்கூர் அரசர் மட்டுமல்லர், மலையாள தேச முழுமையுமே, 400 ஆண்டுகட்கு முன் தமிழ்ச் சிதைவான பாஷை காணப்படுவதாயினும் 700–800 வருஷங்கட்குமுன் நல்லதமிழ் வழங்கிய நாடாகவே விளங்கிய தென்பது, திருவாங்கூர் சிலாசாஸனத் தொடர்களாக வெளி வந்துள்ள நூற்றொகுதிகளினின்றும் நாம் நன்கறியத் தடை யில்லை.

உத்தரவு :—தரவு என்பதே கட்டளை, ஆணை என்ற பொருளில் வழங்கிவந்த பழைய சொல்லாம். "இத்தரவு பிடிபாடாக கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்க" என்பது சாஸனத் தொடர். (S. I. I. iv 103, 105)

உசாவடி :—திருச்சிராப்பள்ளி உசாவடி என்பது சாஸனம். பலரும் இருந்து விசாரிக்கும் பொதுவிடம் என்பது இதன் பொருளாம். இதுவே சாவடி எனப் பிற்காலத்துத் திரிந்த தாகும். உவாவு வாவு; உவானம் வானம் என்பனபோல் (S.S.I. iv, 145)

குத்தொகை :—" பலரும் குத்தொகை கொண்டு நிற்கிற வர்களும்" என்பது சாஸனம். கு + தொகை—நிலவருவாயாகிய மொத்த ஆயத்தொகை. இக்குத்தொகையே குத்தகையாக மாறியதாம்.

வயக்கல் :—இச் சொல் பாண்டி நாடான எங்கள் பக்கங்களில் வயல்களுக்கு மிகுதியும் வழங்குஞ் சொல்லாம். வயல் என்ற மொழி வயக்கல் என்று மாறிய தென்றும், வயம் அல்லது வசமாக்குதல் இதன் பொருளென்றும், இவற்றை ஆராயாது எழுதும் அகராதி குறைவுடையதாகும் என்றும் கோபிநாத ராயரவர்கள் செந்தமிழில் எழுதியுள்ளார். (தொ.—13, பக்—174) வயக்கின நிலம் என்று பழைய சோழ சாஸனங்களிற் காணப்படும் தொடர்களால் வயக்குதல் என்பதற்கு நிலந்திருத்துதல் என்பது பழையபொருளாகத் தெரிகின்றது. S. IV., 221) (T. IV., 119 S. IV., 219, 22) ஆகவே, வயக்கியது வயக்கல் என்றாயிற் றென்பது தெரியலாம். இதுவே பிற்காலத்தில் மயக்கல் என்று மாறியதும் சாஸனத்தால் அறியப்படுகின்றது. (V, 239)

சீயர் :—இச்சொல் வைஷ்ணவ சந்யாசிகட்குப் பிரசித்தமாக வழங்குவதென்பது அறிந்ததே. ஆனால், பொதுப்படவே, இச் சொல் எல்லாச் சமயத்தார்க்கும் சாஸனங்களில் வழங்குகின்றது. சோமநாத ஜீயர் (I.M.P. 57) புஷ்பகிரி ஜீயர் (331) ஈசான் ஜீயர் (S.W. 193) சிக்க ஜீயர் (291) எனச் சைவப் பெரியோர்க்கு வழங்குதல் காண்க. "திருந்திய குணத்தினு லிறைஞ்சிச் சீயனென்று" (மேருமந்—638) என மேருமந்தர புராணமுடையார் 'பெரியோர்' என்ற பொருளில் இச் சொல்லை வழங்குதல் காண்க. இதனால் சைனரும் இச்சீயபதத்தை வழங்கி யிருத்தல் தெரியலாம்.

அரைமனை :—அரசன் மாளிகையை அரண்மனை என்று இக் காலத்துப் பலராலும் எழுதப்பட்டு வருகின்றது. ஆனால் இச் சொல் சாஸனங்களில் அரைமனை என்றே வழங்குகின்றது (S IV 38) அரையன்மனை என்பது இவ்வாறு திரிந்து வழங்கியதாதல் வேண்டும்.

சில ஊர்களின் பெயர் உருவங்கள்.

பெஜவாடா.—இதனை விஜயவாடை என்றே பழைய சாஸனங் கள் வழங்குகின்றன. "வேங்கை வளநாடான் விசயவாடைக் கதிபன்" என வீரசோழிய வுரைகாரர் காட்டிய மேற்கோட்செய் யுளும் இவ்வாறு கூறுதல் காணலாம். (S.V. 253 ; V. 104)

கோயம்புத்தூர் :—கோவன்புத்தூர் என்பதே பழைய வழக்கு (S. V. 88) "பேரூர் நாட்டுக் கோவன் புத்தூரான்" என்பது சாஸனத்தொடர்.

வலங்கைமான் :—வலங்கை மீகாமன் என்பது சாஸன வழக்கு.

மானாமதுரை:—மானவீரன் மதுரை என்று திருப்பூவணம் பெரிய தாமிரப்பட்டயம் கூறும். மகாவமிசத்திலும் இப் பெயரே பயிறல் அறியப்படுகின்றது.

தாங்கம்பாடி:—இதனை 'ட்ராங்குபார்' என இக்காலத்தார் வழங்குவர், இதன் மூல உருவமே பழைய தப்பான உருவமாகும். சாஸனத்தில் இவ்வூர் சடங்கன்பாடி என்று காணப்படுதல் அறியத்தக்கது. (S. V. 120)

ஈரோடு:—ஈரொட்டு என்பது சாஸனம். (S. V. 121)

சோழவந்தான்:—சோழாந்தகன் என்பது சாஸனம். (S. V. 108.)

உத்தமதானபுரம்:—உத்தமதானிபுரம் என்று ராஜராஜன் தஞ்சைச் சாசனம். (S. V. 269)

காவேரிப்பாக்கம் :—காவிதிப்பாக்கம் என்பது சாஸனம் (S. V. 357.)

ஐயங்கார் :—வைஷ்ணவப் பிராமணர்க்குள் இப்பட்டப் பெயர் வழங்குவது தெரிந்ததே. இது, 500 ஆண்டுகட்கு முன்னிருந்த வைஷ்ணவர்க்குள் வழக்குடைய தென்பதற்கு நூல்களிலேனும் சாஸனங்களிலேனும் ஆதாரமில்லை. ஐயங்கார் வழக்கு வைஷ்ணவர்க்குரியதாக நான் பூர்வமாகக் காணும் சாஸனம் சகாப்தம் 1390-ல் (1468 பி.பி.) திருப்பதித் திருமலையில் உள்ளதாம். "பீடமர்ஷண கோத்ரத்து ஆபஸ்தம்ப் சூத்ரத்துச் கோட்டை திருவேங்கடத் தய்யங்கார் குமாரர் குமாரதாத்தய் யங்கார்" என்ற ஆசாரியர் இதனில் கூறப்பட்டுள்ளார். அதிவீர ராமன் வரதுங்க ராமபாண்டியர்கள் (1560 88) காலத்துத் தல வாயக்ரகாரச் சாஸனங்களில், நல்லான் சக்கரவர்த்தி ராமானுஜ ஐயங்கார் என்று காணப்படுகின்றது. இவற்றால், முக்கியமாக வைஷ்ணவாசாரியத் தலைவர்கள் ஆதியில் இப்பட்டப் பெயரால் விசேடிக்கப் பட்டுள்ளமை தெரியலாம், ஆனால், இவ்வையங்கார் என்ற பெயர் தெலுங்குச் சாஸனங்களிலே, சாளுவ திம்மரசய்யங் காரு. (S. IV. 264 வரி 177) என அரசர்க்கும் பாஸ்கர ஐயங்காரு என்று தலைவர்கட்கு அப்பக்கங்களில் வழங்குதல் காணலாம். இவற்றால் பூஜ்ய வாசகமாக இவ்வையங்கார் மக்கட்குத் தெலுங்கர் ஆதியில் வழங்கியதென்பது . பெறப்படும். ஐயன் என்பதனுடன் அவர்கள் என்ற தமிழ் வழக்குக் ஏற்ற .காரு என்ற தெலுங்கு மரியாதை விகுதியைச் சேர்த்து வழங்கியதே இவ்வைய(ன்)ங்கார் என்பதும், இது வைஷ்ணவா சாரியர்க்கு ஆதியில் ஆந்திரதேசத்தாரால் வழங்கப் பெற்றுப் பின் வைஷ்ணவர்க்குரிய பட்டமாக வழங்கலாயிற்று என்பதும் மேற்கூறியவற்றினின்று எளிதிற் கருதலாகும். வைஷ்ணவா சாரியார்களை ஐயங்கார் என்ற சிறப்புப் பெயராலும், அவர் தேவியரை அம்மங்கார் என்ற பெயராலும் இன்றும் வழங்குவர். அம்மகாரு என்ற மரியாதைச் சொல்லே அம்மங்காரு எனத் தமிழில் இருந்ததாம். அம்மான் மகளுக்குப் பிராமணர் வழங்கும் அம்மங்கார் என்பது வேறு. இது அம்மான்காரி என்றதிலிருந்து வந்தது போலும். வைஷ்ணவ யதிகளை ஜீயங்காரு என்று தெலுங்கு சாஸனங்கள் வழங்குவதும் (I. M. P. 969) ஐயங்கா ரோடொத்த விற்பத்தியுடைய தேயாம்.

அவர்கள்:—மக்கட் பெயர்க்குப் பின், தெலுங்கர் "காரு" என்று மரியாதையாக வழங்குவதுபோல. நாம் வழங்குவது அவர்கள் என்பது தெரிந்ததே. இவ் வழக்குப் பழைமையானதன்று. அச்சுததேவராயர் காலத்து (1532-ம்வருஷ) சாஸனமொன்றில்—"சின்னப்ப நாயக்கர் அய்யனவர்களுக்கு" என்றும் (S.I.I.V. 503) வேங்கடாதிராயர் காலத்து (1592) சாஸனமொன்று ஆனந்த நமசிவாய பண்டாரம் அவர்களுக்கு என்றும், முதன் முதலாகக் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது. இவற்றுள் ஐயனவர்களுக்கு என்பது போன்ற மேற்கூறிய ஐயங்காரு என்பதும் தெரியவரும்.

கோயில்களில் ஸ்வாமிக்குப் படைக்கும் உணவுப் பண்டங்கட்கு 'அமுது" என்ற சொல்லைச் சேர்த்தி வழங்குதலைச் சாஸனங்களில் தவருமற் காணலாம்:—கறியமுது, உப்பமுது, மிளகமுது, நெய்யமுது, தயிரமுது, இலையமுது, அடைக்காயமுது எனக் காண்க. (T.A.S. 268; S.I.I.V. 155) இவ்வழக்குப் பெரிய புராண முதலிய நூல்களிலும் காணப்படும். வைஷ்ணவ சம்பிரதாயத்தில், இன்றும், இவ்வாகாரப் பொருள்களை 'அமுது' சேர்த்தே கூறுதல் பிரசித்தமான வழக்காகும். இவ்வாறே 'திரு' என்ற சொல்லையிட்டுத் தெய்வங்களையும் தெய்வத் தன்மையுள்ளவற்றையும் வழங்குதலை சாஸனங்களிற் காணலாம். சிவாலய சம்பந்தமான செய்தி கூறும் சாஸன வாக்கியம் வருமாறு:—

"கங்கை கொண்ட சோளீசுரம் நாயனார். ஆதி சண்டேசுர நாயனார் திருவாய் மலர்ந்தருள, திருமுகம் ஏகாம்பரநாதன் மண்டபத்தில் திருவோலக்கங் கண்டருளுகையில் திருவாய் மலர்ந்திருளித் திருவுள்ளம் பற்றின இந்தக் கோயிலுக்குத் திருமாளிகைக் கூறு" எனக் காண்க. (S.I.I.IV. 155.)

இவ்வாறே இலக்கியங்களில் வழங்குதலைப் பெரிய புராண முதலியவற்றைக் கொண்டு அறியலாம். இவ்வழக்கே இன்னும் வைஷ்ணவ சம்பிரதாயத்தில் உள்ளதாகும். இத்தகைய தமிழ் வழக்குகள் பலவற்றை, ஏனையோர் இக்காலத்தில் நழுவ விட்டனராயினும் நாங்கள் மட்டும் விடாது வழங்கி வருதலை இங்கே நான் கௌரவமாகவே கூறிக் கொள்ளுகின்றேன். என் சம்பிரதாயஸ்தருள் வழங்கும் சிறப்பான தமிழ்ச் சொற்களையெல்லாம் இங்கு விவரிப்பதற்கு இஃதிடமில்லாமை பற்றி வருந்துகிறேன்.

இதுவரை கூறிவந்த செய்திகளால் இலக்கியம் சாஸனங்கள்—வரலாறுகளாலும், வழக்குகளாலும் ஒற்றுமைபெற்று ஒன்றற்கொன்று பொருளுணர்ச்சிக்கு இன்றியமையாதனவாயுள்ள விஷயம் நன்றாக விளங்கியிருக்கும் என்று நம்புகிறேன். நான் கூறியவை சாஸனங்களையெல்லாம் முற்றவாராய்ந்து சொன்னவையல்ல. இப்போது வெளிவந்துள்ள சாஸனங்கள் மிகவும் சொற்பமேயாகும். புதியவாய்க் கண்டுபிடிக்கப்பட்டு வரும் கல்வெட்டுக்களைப்பற்றிய அறிக்கைகள் சாஸன இலாகாதார்களால் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வறிக்கைகளிற் கண்டபடி மூலசாஸனங்கள் நெடுங்காலம் வெளியிடப்படாமலே தொகுக்கப்பட்டுக் கிடந்தன. இப்போது சில வருஷங்களாகத்தான் அவற்றைப் பலர் விருப்பப்படி வெளியிட்டு வருகின்றனர். அவற்றில் இதுவரை 6 தொகுதிகள் நமக்குக் கிடைத்துள்ளன. இன்னும் வெளிவர வேண்டிய தொகுதிகள் மிகுதியாகும். இவற்றையெல்லாம் முற்றுப்பெற்றால் எத்தனையோ அரிய புதிய செய்திகளை அறிய இடமுண்டென்பதில் ஐயமில்லை. நான் கூறியவற்றிற் பல விஷயங்கள், சாஸனவிலாகாதார்கள் வெளியிட்ட அறிக்கைகளையே ஆதாரங்களாகக் கொண்டவை. ஆதலால், மூலசாஸனங்கள் கிடைத்தபின் என் கொள்கைகள் சில மாறுதலடையவுங் கூடுமென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என் உபந்யாசங்களிலே இலக்கியங்களிற் கண்ட அரசர் புலவர்களின் காலங்கள் சாஸன வழியால் விசேஷமாக ஆராயப்பட்டன. இவ்வாறு நான் ஆராய நேர்ந்ததற்குத் தக்க காரணமுண்டு. நான் எடுத்துக்கொண்ட விஷயமான—இலக்கிய சாஸன வரலாறுகளையும் வழக்குகளையும் காலமுறையில் வைத்து நான் விளக்கியிராவிடின்—அவை தலைதடுமாறிப் போய்விடும். சரித்திரமாகிய சித்திரம் வரைதற்கு அமைந்த சுவர்த்தலம் போன்றது காலமாகும். காலவரையறையில்லாமல் எழுதப்படும் முன்னோர் வரலாறுகளும் வழக்குகளும் சாஸ்திரீயமான சரித்திர நூல்கள் ஆகா. நம் காலத்தில் வெளிவந்துள்ள விநோதரச மஞ்சரி போன்ற புலவர் வரலாற்று நூல்களை நோக்குவோமாயின், முற்காலத்தவர் வரலாறு பிற்காலத்தவரதாகவும் ஒருவர் கதை மற்றவரது கதையாகவும், பழைவர்பாடல்கள் புதியவர் பாடலாகவும் பலவகையில் பிறழ்ச்சியுற்றிருப்பதைக் காணலாம். முற்காலத்தவரான ஔவையாரையும் பிற்காலத்தவனான ஏகம்பவாணனையும் கம்பர் வரலாற்றுடன் இயைத்து வழங்குக் கதைகளை அந்நூல் முதலியவற்றிற் காணலாம். ஏகம்பவாணன் 16-ம்

நூற்றாண்டில் தென்காசியாண்ட சீவலமாறன் காலத்தவன் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் உள்ளன. இவ்வாறே ஆழ்வார்கள் காலங்களைப்பற்றிச் சரித்திரம் எழுதினோர் சிலர், குலசேகரப் பெருமாள், ஸ்ரீ வல்லப பாண்டியன் என்பனபோன்ற பெயர்கள் சாஸனங்கள் சிலவற்றிற் கூறப்படுவனவற்றை வைத்துக் கொண்டு, இராமாநுஜர்க்கும் பிற்பட்டவர்களே அத்திருமாலடியார்கள் என்று எழுதிவிட்டனர். அவையெல்லாந்தவறென்று இப்போது நன்றாகத் தெரிந்தவர்களுங்கூட, நாதமுனிகள் காலத்தும் அவர்கட்குப் பின்பும் அவ்வடியார்களை நிறுத்தி எழுதி வருகின்றனர். இலக்கிய சாஸன வழிகளால் ஆராய்ந்து நாம் உண்மை வரலாறுகளைக் கொள்ளாது போனால் பல விபரீதவுணர்ச்சிகட்கு இடமாகத் தடையில்லை. இன்னும் எத்தனையோ உதாரணங்கள் காலநிலை தெரியாமல் தலைதடுமாறியுள்ள விஷயங்கட்குக் காட்டலாகும். ஆதலால் இலக்கிய வரலாறுகள் விளங்க வேண்டி அரசர் புலவர் காலங்களைச் சாஸன வழியால் பலவிடங்களில் நான் கூற நேர்ந்தது.

சாஸனங்கள் பெரும்பாலும் பாஷை நடையாற் சிறந்தவை என்று சொல்வதற்கில்லை. அவற்றைக் கல்லில் எழுதிய முறையில் எழுத்துப்பிழைகளும் இலக்கணக் குற்றங்களும் நிரம்பவுள்ளன. இவற்றைத் தமிழறிஞர் படித்தறிவதில் விருப்பங்கொள்ளுவது அரிதேயாம். ஆயினும், நம் தமிழ் முன்னோர் தங்காலத்துப் பேசியும் எழுதியும் வந்த முறைகளை இவை உணர்த்துவன என்று நாம் அவற்றைப் போற்றத்தக்கது. சாஸனங்கள் பலவற்றில் இலக்கிய வழக்கமைதியில்லையேனும் இலக்கியங்களிலே சாஸன வழக்கமைதிகளை மேலே நான் கூறிவந்த முறையில் நெடுகக் காணத் தடையில்லை. ஆகவே, கால நிலைக்குத்தக்க பொருளுணர்ச்சியை அறிய வேண்டுமாயின், நம் தமிழ் மக்கள், இச் சாஸனங்களைக்கற்றல் இன்றியமையாதது என்று திரும்பவும் வற்புறுத்துகிறேன். என் உபந்யாசங்களால் சேக்கிழார் முதலியோர் வாக்கிற்கண்ட வரலாறுகளையும் சொற்பொருள் வழக்குகளையும் இச்சாஸனங்கள் எவ்வளவு தெளிவாக்கி நிற்கின்றன என்பது நன்கு விளங்கினவன்றோ? சாஸனவிலாகாதார்கள் தாங்கள் கண்டுபிடித்து வரும் சாஸன வரலாறுகளை ஆங்கில பாஷையில் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றனர். ஆனால், மூலசாஸனங்களையும் அவ்வாறு ஆங்கிலவெழுத்தில் பதிப்பிடாது தமிழில் வெளியிட்டு வருவதளவில், நமது பாக்கிய

மேயாம். தேச சரித்திரங்களைத் தெரிந்து கொள்ளாமல் இச் சாஸனங்களைப் படிப்பதால் விஷயங்கள் விளங்க இடமில்லை. அதனால், அவ்வறிக்கைகளைத் தேசபாஷையிலும் வெளியிடுவது, தமிழ்மக்கள் தங்கள் நாட்டு வரலாறுகளை அறிந்து கொள்ளுதற்குப் பேருதவியாகும். என்போலத் தமிழ்ச் சரித்திரங்களை ஆராய்வதில் ஆசையுள்ள பண்டிதர்கள் சாஸன வரலாறுகளை அறிந்து தங்கள் ஆராய்ச்சியிற் கண்ட செய்திகளை வெளியிடுதற்கும் ஏற்றதாகும். தமிழ் மக்களது இலக்கியப் பொருளுணர்ச்சிக்குச் சாஸனவுதவி எவ்வாறு வேண்டப்படுவதோ, அவ்வாறே சாஸன விஷயங்களை வெளியிடுவோர்க்கு இலக்கிய உதவி இன்றியமையாததென்பது திண்ணம். பாஷா பண்டிதர்கள் உதவியை இச்சாஸன விலாகா நாடாமல் இருப்பதறிந்து விசனிக்கிறேன். இதனால் பலகுறைகளுண்டு என்பதற்கு எத்தனையோ விஷயங்களைக் காட்டத் தடையில்லை. சென்ற உபந்யாசங்களிலும் பல செய்திகள் இதனைத் தெளிவாக்கியிருக்குமென்று நம்புகிறேன். இவ்வாறு கூறுவதால், சாஸன விலாகா வறிஞர்க்குத் தமிழறிவு இல்லை என்று நான் கூறுவதாக நினைத்தல் கூடாது, அவர்கட்கு ஒருவகையான தமிழ் ஞானம் உண்டென்பதிலும் அவரெல்லாம் ஆங்கிலத்திற் பேரறிவாளிகள் என்பதிலும் ஐயமில்லை. ஆங்கிலத்திலவர்கள் படைத்துள்ள அறிவினளவு தமிழ்ச்சாஸன வாராய்ச்சி செய்யும் அவர்கட்கு இலக்கியங்களிலும் இருப்பது அவசியமன்றோ? அத்தகைய தமிழ் ஞானம் அத்துறையிலேயே உழைத்து வரும் பாஷாபண்டிதர்க்குள்ளது போல அவர்கட்கு இருக்க நியாயமில்லை. அதனால். அப்பண்டிதர்களுதவி சாஸன விலாகாவுக்கு இன்றியமையாதது என்பேன். சாஸனங்களில் எத்தனையோ பாடல்கள் உள்ளன. அவையெல்லாம் சேர்ந்து தொகுக்கப் பெற்றால், ஒரு சிறந்த இலக்கியமாகத் தடையில்லை. 'பெருந்தொகை' என்ற பெயர்கொண்ட நூலொன்று செந்தமிழ்ப் பத்திரிகையில் சில வருஷங்களாக நான் வெளியிட்டுவருதலை அறிஞர் பலரும் அறிவர். அவற்றில் பழைமையும் பெருமையும் உடைய பாடல்களைப் பலவழிகளாலும் திரட்டி வந்த முறையில், இச்சாஸனப் பாடல்களையும் கிடைத்தவளவில் சேர்த்திருக்கிறேன். மைசூர் சமஸ்தானம் சாஸன அத்யக்ஷராய் இருந்து இளைப்பாறுபவரும், என் தந்தையாரது மாணுக்கருமான வித்யாபூஷணம் ஸ்ரீமாந் R. நரசிம்மாசாரியரவர்கள் (M.A.) கன்னட சாஸனங்களிற் கண்ட பாடல்களையெல்லாம் திரட்டிப் பல தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்கள். இதுபோலத் தமிழ்ச் சாஸனங்களை

அவ்விலாகாதார்களேனும் மற்றச் செந்தமிழறிஞர்களேனும் செய்வது முக்கிய மென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நானும் நண்பர் T. G. ஆராவமுத ஐயங்காரவர்களும் இதற்காக முயன்றும் பலியாமையால் அத்தகைய தொகைநூல் வேறு எவ்வகையாலேனும் கிடைக்கட்டும் என்று இவ்வேண்டுகோள் செய்யலானேன். சாஸனப் பாடல்களைக் கல்வெட்டிலுள்ளபடி, சாஸன விலாகாதார் பதிப்பித்து வருகின்றனர். இது ஒரு வகையில் நன்மையே. ஆனால், தக்க பண்டிதர்களைத் துணைக் கொண்டு சீர் அடி தளை முதலியன விளங்கும்படி பாட்டுருவமாகவும் அவற்றைப் பதிப்பித்தும் இன்றியமையாதது.

நம் தேசத்தில் நெடுங்காலமாக வழங்கி வரும் கலியப்தம் சகாப்தங்களாலன்றிக் கிறிஸ்தவாப்தத்தால் முன்னோர் காலக் குறிப்புகளை நான் அடிக்கடி கூற நேர்ந்ததை என்போன்ற பண்டிதர்கள் குறைவாக நினையார்கள் என்றே நம்புகிறேன். கி.பி. என்று கூறுவதில் சிலர்க்கு விருப்பமில்லை என்பது எனக்குத் தெரியும். அவர்கள் விருப்பின்படி, சகாப்தம் கல்யப்தங்களால் நான் கூற விரும்பியதுண்டு. அது அருமையுமன்று. ஆனால். நிகழும் சகாப்த வருஷம் இத்தனையாவது என்று, நம் பண்டிதர்களில் சிலரேனும், கேட்டால் உடனே சொல்லக் கூடுமா? என்பது எனக்குச் சந்தேகமே. அப்தம் மட்டுமன்று, தமிழ் மாசந் தேதிகளே தெரிவது அருமையாகி விட்டது. இது நம்பூர்வ அப்தங்கள் செய்த பாக்கியக் குறைவேயாம். ஆதலால், யாவரும் அறிதற்கு எளிதாகும்படி, இப்போது உலக முழுதையும் வியாபித்துள்ள கிறிஸ்தவாப்தத்தால் நானும் கூறலாயினேன் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் பல சான்றுகளைக் கொண்டு ஊகித்துக் கூறிய கொள்கைகளில் அறிஞர்களுக்கு அபிப்ராயபேதம் நிகழக் கூடியதே. ஆங்கிலத்தில் வெளிவந்த நூல்களை அற்ப ஆங்கில ஞானத்தைக் கொண்டு ஆராய்ந்து கூறிய என் கருத்துக்களில் குற்றங் குறைகள் மிகுதியாக நிகழக் கூடுமென்பதில் அதிசயமொன்றுமில்லை. தமிழ்த்துறையிலும் சரித்திர விஷயங்களிலும் நெடுங்காலம் நான் உழைத்து வருபவனாயினும், ஆங்கிலப் பேரறிவு இல்லாத குறையால் எம்போன்றவர் அப்பாவிப் பண்டிதர்தானே. ஆதலால், என் உபந்யாசங்களில் நேரக்கூடிய குற்றங் குறைகளை ஆங்கிலப் பேருணர்ச்சியும் சரித்திர வாராய்ச்சியும் திறமையும்

பெற்றுள்ள அறிஞர் பொறுத்துக் கொள்ளவும் உரியவாறு எடுத்து விளக்கவும் கேட்டுக் கொள்வதோடு, இவ்வுபந்யாசத்தை முடிக்கின்றேன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

V. நம்மாழ்வார்

எல்லா ஆழ்வார்களேயும் தம் அவயவபூதராக உடையவரென்றும், தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்துக்கே மூலபுருஷரானவரென்றும் போற்றப்படும் பெரியார் எவரோ அவரே நான் இறுதியாகக் கூறப்புகும் பெரியார். இவ்வாழ்வார், தென்பாண்டி மண்டலத்துத் திருவழுதிவள நாட்டுள்ள திருக்குருகூர்த் தலைவரான காரியார்க்குப் புத்திரராய் அவதரித்தவர். பிறந்தது முதலே கண்விழித்தலின்றி மௌனியாய் சமாதியிலிருத்தலைக் கண்டு பெற்றோர் ஆச்சரிய முற்று திருநகரித் திருமால் திருமுன் அக்குழந்தையை ஸேவிக்கப்பண்ணி மாறன் என்று திருநாமஞ் சாத்தி, அங்குள்ள திருப்புளியினடியிலே தொட்டிலில் இட்டு, இக்குழந்தை ஏதோ தெய்வாமிசமுள்ளதென்று விசேஷப் பிரதிபத்தி பண்ணிவந்தார்கள். இவ்வாறு 16-வருஷம் காரிபுத்திரர் யோக சமாதியில் அத்திருப்புளியின் கீழ் எழுந்தருளியிருந்தனர்.

அக்காலத்தே, திருக்குருகூர்க்குப் பக்கத்துள்ள திருக்கோளூரில் அவதரித்தவரும் வடதேசத்தில் யாத்திரையில் இருந்தவருமான மதுரகவிகள் என்ற பெரியார், இவர் ப்ரபாவத்தையறிந்து தெற்கே திருக்குருகூர்வந்து சமாதியிலிருந்த காரிமாறப் பிரானைத் தரிசித்து, அவரது அத்யாதிசயமான ஞானப்ரபாவத்தை அறிந்து ஈடுபட்டு அவர்க்கடியாராயினர். காரி மாறன் உலகோபகாரமாக, அப்போது—திருவாய்மொழி, பெரியதிருவந்தாதி, திருவாசிரியம், திருவிருத்தம் என்ற நான்கு திவ்யப் பிரபந்தங்களைப் பாடித் தம்சிஷ்யர் ஸ்ரீ மதுர கவிகட்கு உபதேசித்து, அவர்மூலம் உலகோர் உய்யச் செய்தருளி, இவ்வாறு பரஞான பரபத்தியுடையராய் 35 திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்து அவாவற்று வீடுபெற்றருளினர். மதுரகவிகள், தம்பரமாசாரியரான ஆழ்வார் தமக்கருளியதைக் கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற பிரபந்தத்தால் பாடியும் அர்ச்சா ரூபமான விக்ரகத்தை திருக்கோயிலில் பிரதிஷ்டித்து உத்ஸவாதிகள் நடத்தியும் ஆழ்வார் பிரபாவத்தையும் அவரருளிச் செயல்களையும் ஊரும் நாடும் உலகமு

மறியும்படி பிரகாசிப்பித்துக் கொண்டிருந்து, பின் பரமபத மடைந்தார்—இவைகளே நம்மாழ்வார் மதுரகவிகளுடைய வைபவச் சுருக்கம்.

ஆழ்வாருடைய திருவாக்காலும் இவ்வரலாறுகளெல்லாம் நன்கறியக் கிடக்கின்றன. "வழுதிவளநாடன் குருகைக் கோன் சடகோபன்" என்பதனால் காரியென்பவரது புத்ரர் தாமென்றும், சடகோபனென்ற திருநாமந் தமக்குண்டென்றும், 'குலதொல் லடியேன்' முதலிய தொடர்களால் பரம்பரையே ஸ்ரீ வைஷ்ணவ குலத்து உதித்தவரென்றும் 'மகிழமாலையணிமார்பன்' என்பதனால், வகுளமாலை தங்குலத்தவர் கொண்டதென்றும் கூறுவதோடு

"சிந்தைமற் றொன்றன் திறத்ததல் லாமை தேவர்பிரா னறியும்", "சிந்தையாலுஞ் சொல்லாலுஞ் செய்கையி னாலுந் தேவ பிரானையே—தந்தை தாயென் றடைந்த குருகூர்ச் சடகோபன்" என்பன முதலியவற்றால்,

திருமாலையே இடையறாது தியானித்து வந்த பரமயோகியென்றும் 7-ம் பத்து 9-ம் திருப்பதிகத்தால், அத்திருமாலையன்றித் தாம்நாக் கொண்டு மானிடம் பாடவந்த கவியல்ல ரென்றும், பிறவாறும் தம் வரலாறுகளைக் குறிப்பித்தருளுதல் காணலாம். இனி இவ்வாழ்வார் எழுந்தருளியிருந்த கால விசேடத்தை நோக்குவோம்.

ஸ்ரீ இராமநுஜர் காலத்து அவர் திருவடி சம்பந்தியும் வைத்ய சிரேஷ்டருமான கருடவாகன பண்டிதர் என்பவரால் காவ்ய ரூபமாக வடமொழியில் இயற்றப் பெற்றதும், உடையவர் வாழ் நாளின் இடைநிகழ்ந்த வரலாற்றோடு நிறுத்துவதுமான திவ்ய ஸூரிசரிதத்திலே ஆசாரியருட் டலைவரான, ஸ்ரீமந் நாதமுனிகள் திருக்குருகைசென்று திருவாய்மொழி பெற்ற வரலாறு அடியில் வருமாறு கூறப்படுகின்றது :

திருக்குடந்தையில் 'ஆராவமுதே' என்ற பதிகத்தை நாத முனிகள் கேட்டு மகிழ்ந்து, செவிக்கினிய மற்ற (திருவாய்மொழிப்) பாசுரங்களையுங் கேட்கவிரும்பிக் குருகூரை யடைந்து, பக்தியோடு ஆதிநாதனை வணங்கிப் பராங்குச முனியைப் பிரத்யக்ஷமாகக் காண உறங்காப்புளியை அடைந்தார். அப்போது மறைந்துள்ள (அந்தர்ஹிதம்) சடகோபரைப் பார்க்க முடியாமையால் துயரடைந்து, அவரைக் காண்பதற்கேற்ற உபாயத்தை அறிய விரும்பி, ஆலோசித்தார். மதுரகவிகள் அருளிய சடாரி சதகத்தை (கண்ணிநுண் சிறுத்தாம்பை) அவருடைய (ஆழ்வாருடைய) ஸாந்நித்யம் பெறுதற்காகப் பன்னீராயிரம் உரு ஓதினர். அதனால்

மனமுவந்த சடாரி (சடகோபர்) மதுரகவிகளோடு நாதமுனிகட்கெதிரே சாந்நித்ய மடைந்து மந்திரத்வயங்களுடன் தாம் அருளிய நான்கு திராவிடப் பிரபந்தங்களையும் பெற்று, எப்போதும் அவற்றைப் பலமுறை உருவோதுகிற சம்பிரதாயத்தில் ஊற்றமுடையவராய் அங்கேதானே இருந்தார். அப்போது, ஸ்ரீ வீர நாராயணபுரத்தில் எழுந்தருளியுள்ள கண்ணபிரான், நாதமுனிகள் கனவில் அவரிடத்துள்ள ப்ரீதியால் தோன்றி "நாதமுனியே, என் பாலிருந்து அந்தப் பிரபந்தங்களை மனனஞ் செய்க" என்று பணித்தனர். பின்பு, ஸ்ரீ நாத முனிகள் வீரநாராயணபுரமடைந்து கண்ணன் சந்நிதியிலிருந்து மேற்படி பிரபந்தங்களை மனனஞ் செய்து கொண்டு பாடுதலில் வல்ல தம்சிஷ்யர்களால் ஆயிரம் பாடல்களையும் தேவகானத்திற் பாடுவித்தார்——என்பதே.

(17-ம்-ஸர்க் 14-20)

நாதமுனிகள் திருவாய்மொழி பெற்ற வரலாற்றிதற்கு, இதனினும் முற்பட்டதும் பிரமாணமானதுமான ஆதாரம் வேறு இலையாதென்னலாம். இத்திவ்ய ஸூரி சரிதவரலாற்றினின்று— திருப்புளியுள் மறைந்து யோகத்திலிருந்த ஆழ்வாரை, உபாசித்து, நேரே அவரைத் தெரிசித்துத் திருவாய் மொழியைப் பொருளுடன் பெற்றார் நாதமுனிகள் என்றும் அப்ரத்யக்ஷமாய் நின்ற ஆழ்வாரை யோகபலத்தால் மனஸ்ஸில் ஸாக்ஷாத்கரித்து அந்தர்முகமாக அவருபதேசங்களைப் பெற்றாரென்றும் இருவகையாகவும் பொருள்கொள்ள இடந்தருகின்றது. ஆயினும், திவ்ய சூரி சரிதத்துக்கு 150, 200 வருஷங்கட்குப் பின், பின்பழகிய ஜீயர் எழுதியருளிய குருபரம்பரையில்—ஆழ்வார்கள் தன்னடிச் சோதிக்கெழுந்தருளி நெடுங்காலங் கழிந்தவாறே. நாதமுனிகள் திருவாய்மொழியைப் பெற வேண்டித் திருக்குருகூர் சென்று அங்கே "மதுரகவிகளுடைய சிஷ்யர் ஸ்ரீ பராங்குச தாஸரை ஸேவித்து" தாம் உத்தேசித்து வந்ததைத் தெரிவித்து அவர் மூலம் உபாயமறிந்து ஆழ்வாரை உபாஸித்துத் திருவாய் மொழியையும் மற்றுமுள்ள திவ்யப் பிரபந்தங்களையும் பெற்றார்—என்று கூறப்பட்டுள்ளது. திவ்ய ஸூரி சரிதத்தை மிகவும் கௌரவத்துடன் அடிக்கடி எடுத்துக் கூறும் மேற்படி ஜீயர், அதற்கு மாறாக சரித்திரமெழுதார் ஆதலாலும் உடையவர் முதலாக வந்த வரலாற்றையே அவரும் எழுதுதலாலும், நாதமுனிகள் ஆழ்வார் காலத்தவராய் அவரை நேரே பார்த்துப் பிரபந்தங்களைப் பெற்றார் என்ற கருத்து முன்னோர் கொண்டிருந்தவரல்லர் என்பதும் ஆழ்வாரை நாதமுனிகள் தம் யோகப் பிரபவத்தால்

அந்தர் முகமாகப் பிரத்யக்ஷீகரிக்கப் பெற்று, அவரனுக்ரகத்தால் பிரபந்தகங்களைப் பெற்றார் என்பதே திவ்யஸூரி சரிதத்தின் கருத்தென்பதும் நிச்சயமாகின்றன.

இனி, அவ்வாறு திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்தங்களை முதன் முதற்கண்டு உலகோர்க்கு உபகரித்தருளிய ஸ்ரீமந் நாதமுனிகள் அவதார காலமாக குருபரம்பரைகள் கூறுவதை நோக்கின், அது கி.பி. 825 ஆகின்றது. தாது ஸு மாசி யேகாதசியில் அப்பெரியார் பரமபத மடைந்தனரென்றும் அவர் திருப்பேரனாரான ஸ்ரீ ஆளவந்தார் அதே வருஷம் (918) ஆடி மீ அவதரித்தாரென்றும் அக்குருபரம்பரைகளிற் காணப்படுகின்றன. நாதமுனிகள் தமக்குப் பேரன் பிறக்கப் போவதையறிந்து, அவர்க்கு யமுனைத் துறைவர் என்ற திருநாமஞ் சாத்துமாறு தம் குமாரர்க்குக் கூறிச் சென்றதாக அவர் வரலாறு கூறுதலால், ஒரே வருஷத்துள்ள பாட்டனார் வியோகமும் பேரனார் அவதாரமும் 5 மாத இடைநிகழ்ச்சியில் நிகழ்ந்தன என்பதில் ஐயமில்லை. சிலர் நாதமுனிகள் பரமபதிக்க 8 வருஷங்கட்கு முன்னே (அஃதாவது ஆளவந்தாரது 8-வதாண்டில்) ஆளவந்தார் அவதரித்தவர் என்று எழுதினும், பிரபந்நாமிருத முதலிய குருபரம்பரைகளும் கோயிலொழுகு பெரிய திருமுடியடைவு முதலிய கிரந்தங்களும் அவ்வாறு கூறாமையானும், தாது வருஷமாசி ஏகாதசியே நாதமுனிகளது திர்த்தினமாகப் பல நூல்களுங் குறிப்பிடுதலாலும் 918-ல் நாதமுனிகள் வியோகம் என்பதே பொருத்தமாம். நாதமுனிகள் வாழ்ந்த வீரநாராயணபுரமென்ற ஊர், 908-ல் பட்டமடைந்த பராந்தக சோழன் பெயர் பெற்றிருத்தலாலும் அவர் வியோகமடைந்த இடமான கங்கை கொண்ட சோழபுரம் 1024-ல் இராஜேந்திர சோழன் உண்டாக்கிய நகரமாதலாலும் 908-க்குப்பின் அவதரித்து 1024-க்குப்பின் பரமபதித்தவர் நாதமுனிகள் என்று சிலர் கருதுவர். வீரநாராயணபுரத்தின் பழம் பெயர் பிரமதேசம் மன்னார்கோவில் என்பது. இது பின்பு பராந்தகன் பெயர் பெற்றிருக்கவும் அதனைப் பின்னோர் புதுப்பெயரால் வழங்கியிருக்கவுங் கூடியதாதலால், இப்பெயர் கொண்டு நாதமுனிகள் அவதாரகாலத்தை அளக்க முடியாது. இனி அப்பெரியார் வியோகமடைந்த இடம் மன்னார் கோயிலையடுத்த குருகை காவலப்பன் கோயிலேயன்றி கங்கை கொண்ட சோழபுரமன்று. 1024-ல் தோன்றிய அந்நகரம் பிரபலம் பெற்றதற்கு 15 வருஷம் செல்லும். அக்காலத்தில் நாதமுனிகள் பரமபதித்தவராகில், 1017-ல் அவதரித்த உடையவர்க்கு

15 வயதுக்கு மேலேயாக வேண்டும் ஆகவே, பாட்டனார் வியோக மடைந்த வருஷமோ, எட்டு வருஷ முன்னே பிறந்த ஆளவந்தார், உடையவர்க்கும் வயதிலிளையவராக முடியும். இவையாவும் அசங்கத மாதலால், பின்னோர் ஊர்கட்டு வழங்கிய பெயர்களைக் கொண்டு நாதமுனிகள் அவதார வியோக காலங்களைக் கணிப்பது பொருத்தமற்றதென்பதில் ஐயமில்லை.

மேற்கூறியபடி 825-ல் அவதரித்த நாதமுனிகள் 918-ல் வியோக மடைந்தவராம். போது—அம்முனிகள் 93 வருஷம் எழுந்தருளி யிருந்தவரென்பது பெறப்படுகின்றது. இது, யோகியான அவருக்குப் பொருத்தமேயாம். அம்முனிவர் திருக்குருகூர் சென்ற போது குறைந்தது 50 வயதிருக்கலாம். அஃதாவது 875-ம் வருஷ மாகும் திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களைப் பண் பெறச் செய்து, நாட்டிற் பிரசாரப்படுத்தி ஆழ்வார் வைபவங்களை யாவரும் அறியச் செய்ததற்குக் குறைந்தது 25 வருஷமாக வேண்டும்; அஃதாவது கி.பி. 900, இக்காலம் சோழனை ராஜகேசரி முதலாதித்தன் பிரபலனாய் ஆட்சிபுரிந்த காலமாம். 907-ல் இவன் காலமாகியதும் இவன் மகன் பராந்தகனென்ற வீரநாராயணன் பட்டம் பெற்றனன். இவன் தந்தை அவ்விராசகேசரியின் 3-ம் ஆட்சி வருஷத்தின் திருக்கண்ணபுரத்துத் திருமால் கோயிற் றூணொன்றில் பொறிக்கப்பட்ட சாஸனமொன்றில் சடகோபன் என்ற பெயர் ஒருவற்கு வழங்குகின்றதென்றும் அப்பெயர் நம்மாழ்வார்க்கன்றி வேறு எவர்க்கும் வழங்கக் காணாமையாலும் திருமால் கோயிற் சாஸனத்துக் காணப்படுதலாலும் ஆழ்வார் பிரபாவம் நாதமுனிகளால் நாட்டிற் பிரபலம் பெற்று வைஷ்ணவ வர்க்குள் அவர் திருநாமம் 908க்கு முன்னே வழங்கலாயிற்று என்பதற்கு இது தக்க சான்றாகும் என்றும் ஸ்ரீமாந் கோபிநாத ராயர் எழுதியுள்ளார்கள். எப்படியும் 10-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தை நாதமுனிகள் அவதார காலமாகக் கொள்வது மேற்கண்ட சடகோபப் பெயர் வழக்கைக் குறிக்குஞ் சாஸன முதலியவற்றோடு பொருந்தாமையால், 9-ம் நூற்றாண்டின் முற்பகுதியோ அல்லது இடைப்பகுதியோ அவர் அவதரித்த காலமாகக் கொள்ளத் தடையில்லை. நாதமுனிகள் அவதரித்துப் பிரபலராய் வாழ்ந்த 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியையும், 10-ம் நூற்றாண்டின் பிற்பகுதியையும் ஆழ்வார்களுக்கு முரியகாலங் களாகச் சிலர் எழுதி வருவது "ஆழ்வார்கள் பரமபதமடைந்தது நெடுங்காலங் கழிந்த வாறே ஆசாரியர் அவதாரங்கள் நிகழ்ந்த தாகக் கூறும் பழைய வரலாற்றுக்கும் யுக்திக்கும் விரோத

மாகின்றது. பெரியாழ்வார் ஆண்டாள் முதலியோர்க்கு இவர் கூறும் காலங்களே உண்மையாயின் நாதமுனிகளும் அவர் சிஷ்யர்களும் ஆழ்வார்களை நேரில் ஆச்சிரயித்து, அவர்கள் திருவாயினின்று வந்த உபதேசங்களையும், அவர்களுடன் தாமளாவிய வரலாறுகளையும் வாரியிறைத்திருப்பார்களென்பதில் ஐயமுண்டோ?" ஆழ்வார்களும் நாதமுனிகள் போன்றாரும் ஏககாலத்தவரானால், ஆழ்வார் ஆசாரியர் என்ற விபாகமில்லாமல் ஆழ்வார்களன்றே ஆசாரியத்தலைமை வகித்தவராக வேண்டும். சுருங்க வுரைக்குமிடத்து இத்தகைய கூற்றியாவும் போலியே யாதலால், நாதமுனிகள் ஆழ்வாரைப் பற்றித் தெரிந்துகொண்ட காலத்துக்கும் அவ்வாழ்வார்கள் காலத்துக்கும் குறைந்தது ஒரு நூற்றாண்டாவது இடையிட்டிருக்க வேண்டுமென்பதும் நாதமுனிகள் அவதரித்த 825-க்குப்பின் எந்தக் காலத்தையும் ஆழ்வார்கள் ஜனித்த அல்லது வாழ்ந்த—காலங்களாகக் கூறுவது தள்ளத்தக்கதேயென்பதும் திண்ணமாகும்.

இனி, நாத முனிகட்குமுன் நம்மாழ்வார் வாழ்ந்த காலம் யாது என்பது ஆராயத் தக்கது. இவ்வாழ்வார் வழுதிவள நாட்டின் தலைமை வகித்தவர்களுடைய வழித்தோன்றல் என்பதும் மாறன் பராங்குசன் என்ற திருநாமங்கள் கொண்டவரென்பதும் இவர் திருவாக்குக்களாலும் இராமாநுஜ சரிதை முதலிய நூல்களாலும் அறியப்பட்டவை. பாண்டியர்க்குரிய மாறன் என்ற பெயரையும் போர்வீரர்க்குரிய பராங்குசன் என்ற பெயரையும் இவர் தரித்திருப்பதற்குக் காரணம் யாது? என்பது கேள்வி. இதற்குச் சாஸனங்களிற் சிறிது பழகினவர்களும் எளிதாக விடைகூறத் தடையில்லை. சிற்றரசர்களும் தலைவர்களும் தங்கள் நாடாளும் பேரரசர் பெயர்களைத் தம்மியற் பெயர்களுடன் சூடித் தம்மரசைக் கௌரவிப்பது முற்காலத்துப் பெரு வழக்கமாகும். அம்முறையே சடகோபன் என்ற திருநாமங் கொண்ட இவ்வாழ்வார்க்கு வழங்கிய மாறன் பராங்குசன் என்ற பெயர்கள் தம் பேரரசனான பாண்டியனைக் கௌரவிப்பதற்காக அவர் தந்தையாரால் இட்டு வழங்கியவைகளேயாகும். இப்பெயர்கள் கொண்ட பாண்டியன் பரம வைஷ்ணவனான பராந்தகன் தந்தைக்கும் கொள் பாட்டனான நெல்வேலிவென்ற நெடுமாறனுக்கும் வழங்குதலைச் சாஸனங்களாலும் இறையனார் களவியலுரையாலும் தெரியலாம். இவ்விருவர்க்குமே பராங்குசப் பெயருண்மையால், இவருள் ஒருவன் பெயரே ஆழ்வார் தரித்தவராதல் வேண்டும். ஆழ்வார்காலத்து மாறன் பராங்குசன் யாவன் என்பது இனி ஆராயற்பாலது

இரண்டாம் மாறன் பராங்குசன் மகனான மாறஞ்சடையனென்ற பராந்தகனது 17-வது யாண்டுத் தாமிர சாஸனமொன்று முன்பே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப் பராந்தகன் 767-ல் பட்டம் பெற்றவனென்பது வேள்விகுடி ஆனைமலைச் சாஸனங்களினின்று தெளிவாகின்றது. அதனால் 784-ல் மேற்படி தாமிர சாஸனம் வெளிப்படுத்தப்பட்டதென்பது பெறப்படும். அச் சாஸனம் கூறுவதாவது—

"பராந்தகன் பரமவைஷ்ணவன் தானாகி நின்றிலங்கும்
மணிநீண்முடி நிலமன்னவ னெடுஞ் சடையற்கு
ராஜ்யவர்ஷம் 17-வது பாற்பட்டு செலாநிற்க
மகத மென்னு நன்னாட்டுள் மகாதேவர்க்கு வகுக்கப்பட்ட
சப்சாதி என்னுங் கிராமத்துள் வித்யாதேவதையால்
விரும்பப்படும்
ஹார் ஹவ ரோத்ர ஸம்பூதன் ஆர்வலாயன ஸூத்ரத்து
பஹ்வ்ருஜன் ஸ்ரீ ஸஹஸ்ர மிச்ரற்கு மகனாகிய
எஞ்ஞ வித்தைகளோ எஞ்சாத சாஸ்த்ரங்களைக்
கரைகண்ட
ஸுஜ்ஜட பட்டர்க்குத் தென்களவழி நாட்டு
வேலங் குடியைப் பண்டைத்தன் பழம்பெயர் நீக்கி
ஸ்ரீவர மங்கலமெனப் பெயரிட்டு ப்ருஹ்மதேயமாகக்
காராண்மையும் மீயாட்சியு முள்ளடங்க
ஸர்வ பரிஹாரமாக நீரோட்டிக் கொடுக்கப்பட்டது.

இதனால் வேதமுதலிய கலைகளையும் வேள்வித் துறைகளையுங் கரைகண்ட ஸுஜ்ஜட பட்டரென்ற பிராமணோத்தமர்க்கு வேலங்குடி என்ற பழம் பெயரை நீக்கித் தன் பெயரால் ஸ்ரீவரமங்கலமென்ற பெயரிட்டுத் தானஞ் செய்தான். பராந்தகன் என்ற பரம வைஷ்ணவனான பாண்டியன் என்றும், அச்சிரீவல மங்கலம் தென்களவழி நாட்டுள்ளதென்றும் தெரியலாம். தென்களவழிநாடு என்று இச்சாஸனத்துள் வருதலால் வடகளவழிநாடொன்று உண்டென்பது தெரியலாம். இவ்வடகளவழிநாடு, சிவகங்கை ஜமீனைச் சார்ந்த மானாமதுரையைச் சூழ்ந்த பிரதேசமென்பது சாஸனங்கள் பலவற்றால் அறியக்கிடக்கின்றது. அதனால் தென்களவழி நாடென்பது அதற்குந் தெற்கேயுள்ள நாடென்பது தெளிவாம். இனி, ஸ்ரீவரமங்கலமும் அதன் எல்லைப்பக்கத்துள்

ளனவாகக் கூறப்பட்ட ஊர்களும் வேறெங்குத்துருவியுங் கிடையாது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நாங்குனேரிக்கு ஸ்ரீவரமங்கலம் என்ற வழக்கிருத்தலோடு, சாஸனங் கூறும் எல்லைகளும் ஒத்துவருகின்றன.

சீவரமங்கலத்தின் மேற்கெல்லையில், குரங்குடி, கடப்பங்குடி என்ற இரண்டூர்களைச் சாஸனங் கூறுகின்றது. நாங்குனேரியின் தென்மேற் கெல்லையில் உள்ள திருக்குறுங்குடி யென்ற திருப்பதியே இது; திருக்குறங்குடி என்று இப்போது எழுதப்பட்டு வருகின்றது. கடம்பகுடி என்பது கடம்பகுடிவளவு என்ற பெயருடன் சிறிது வடமேற்கே இரண்டு மைலில் உள்ளது. கடம்பகுடி வளவு என்பது கடம்பொடு வளவு என்று இப்போது திரிந்து வழங்குகின்றது. தெற்கெல்லையில் கள்ளிக்குடி என்ற ஊரைச் சாஸனங் கூறுகின்றது. நாங்குனேரிக்குத் தெற்கே 6½ மைலில் கள்ளிக்குளம்பு என்ற ஊருள்ளது. நாங்குனேரித் தாலுகாவிலுள்ள ஊர்கள் பெரும்பாலும் குளமென்றே முடிவனவாக வுள்ள முறைப்படி, குடியென்று முடிந்த இதுவும் மாறியதாக வேண்டும். மற்ற எல்லைகட்கெல்லாம் இரண்டிரண்டு ஊர்களைக் குறித்து வந்த சாஸனம் வடவெல்லையாகக் காராள வயலென்ப தொன்றையே குறிக்கின்றது. இதற்கு ஒரு கருத்து உண்டு. நாங்குனேரியின் வடதிசையில் ஊர்களே அதிகமாகக் காணப் படுதல் இப்போதும் அரிது. பழைய காலத்தே வெறும் பொட்டலாகவே நெடுந்தூரம் இருந்ததாக வேண்டும். அதனாற்றான் வடவெல்லைக்கு ஓர் வயலைக் காட்டிச் சாஸனமுஞ் சுருக்கி விட்டது. இவையன்றி, நாங்குனேரியை ஒட்டி வடக்கே இரண்டு மைலில் ஸ்ரீவரமங்கைபுரம் என்ற ஊர் இப்போதும் இருத்தலும் அறியத் தக்கது. ஆகவே, ஸ்ரீவரமங்கலமென்று பேரிட்டுத்தான் செய்யப் பட்ட வேலங்குடி, இப்போது விஷ்ணு ஸ்தலமாய் ஸ்ரீ வைஷ்ணவ மடாதிபதி எழுந்தளியிருக்கும் நாங்குனேரியேயன்றிப் பிறிதில்லை யென்பது பெறப்படுகின்றது. பிராமணர்க்குத் தானஞ் செய்யப் படும் ஊர்கள் மங்கலமென்று முடிதற்குரியன, சிற்பாஸ்திரங் களும் ஆகமங்களும் கூறுகின்றன. ஸ்ரீவரன் என்பது, மேற்படி தான சாஸனஞ் செய்த பராந்தக பாண்டியனது சிறப்புப் பெயர் களுள் ஒன்று. ஸ்ரீவரன் ஸ்ரீமனோகரன் சினச்சோழியன் புனப் பூழியன் என்று இவனது இப்பெயரை முதலில் வைத்து வேள்வி குடிச் சாஸனமுங் கூறுதல் காணலாம். ஆகவே, பராந்தகன் வேலங்குடிக்குத் தன் சிறப்புப் பெயரிட்டு மகதப் பிராமணோத்தம னுக்குத் தானஞ் செய்தானென்பது நன்கு பெறப்படும். படவே,

தென்களவழிநாடும் அந்நாட்டுச் சீவரமங்கலமும் இன்னவென்பது தெளிவாம். தென்காசியாண்ட சீவலமாறனைப் பற்றிய தனிப்பாட டொன்றும் "கடந்தருங் களிற்றண்ணல் சீவலனைற் களவழி நன ஞட்டில்" என்று இந்நாட்டைக் கூறுதல், தென்காசியையடுத்து அந்நாடிருந்ததென்பதற்குச் சான்ருகின்றது.

இச்சிரீவரமங்கலத்தையே, நம்மாழ்வார் "நோற்ற நோன் பிலேன்" என்ற திருப்பதிகத்தால் மங்கலசாஸனஞ் செய்துள்ள விஷயம் பலருமறிவர். இங்ஙனம் 784-ல் பாண்டியன் தன் பெயரிட்டுத் தானஞ் செய்த ஊரில் கோயில் கொண்ட திருமாலைப் பாடிஞர் எனின், அப்பெயர் பெற்ற ஊரின் தானத்துக்குப் பின்பே விளங்கியவரென்பது ஐயத்துக்கிடமின்றிப் பெறப்படுகின்றது. பராந்தகன் தந்தையான பாண்டியன் மாறவர்மன் பராங்குசனது ஆட்சியிறுதியில் 785-ல் சிரீவரமங்கலதானமாகிப் பதினைந்து வருஷங்கட்குப்பின் அஃதாவது 800 வரை ஆழ்வார் எழுந்தருளி யிருந்தவர் என்று நாம் கருதல் தகும். பிராமண ஞெருவன் பெரிய கிராம மொன்றைத் தானமாகப் பெற்ருல் அதனை அவனொருவனே அனுபவிப்பது பழைய வழக்கமன்று. அந்தப் பிராமணன் வேண்டிய வேதவித்துக்களான பிராமணோத்தமர்களை அழைப்பித்து. அவர்கட்கு வேண்டியபடி பங்கிட்டும் கோயில் குளம் முதலியன எடுத்து அவற்றுக்கு வேண்டியனவற்றைக் கொடுத்தும் இவ்வாறு தன்னூரை வளப்படுத்துவது பழைய மாபு. இவ்வூரைத் தானஞ் செய்த பராந்தகனுல் அவன் மூன்ரும் ஆட்சி வருஷத்தில் வேள்விகுடியைத்தானம் பெற்ற நற்சிங்கன் என்ற பிராமணன் தான் அவ்வாறு பெற்ற ஊரை 49 பேர் வேதவித்துக் களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தானென்று அத்தானசாஸனங் கூறுதலுங் காணலாம். அதனுல், தானம்பெற்ற சிரீவரமங்கலம் சில வருஷங்களில் இம்முறையே கோயில் குளங்களாலும் வேத வித்துக்களான பிராமணர்களாலும் செழித்திருக்கத் தடையில்லை. சிரீவரமங்கலம் என்ற பெயரைப் பெறுதற்கு முன்னே வேலங் குடியில் திருமால் கோயிலும் இருந்ததாயின் அக்கோயில் அமைந்த திருவிருப்பையும் அதற்குரிய பூமிகளையுங் கழித்துச் சாஸனம் அமைக்கப்பட்டிருக்கும். அக்குறிப்பொன்றும் சிரீவரமங்கல சாஸனத்துக் காணப்படாமையால் ஸுஜ்ஜடபட்டர் தானம் பெற்ற பின்பே, பிராமணோத்தமர்கள் வழிபடற்குத் திருமால் கோயிலும் அங்கே புதிதாய் உண்டாயிருக்க வேண்டும். இவ்வாறு வேதங்களிலும் வேள்விகளிலும் வல்ல பிராமண சமிருத்தியையும்,

அவராற் பிரதிஷ்டிக்கப் பெற்று வந்த திருமாலின் சிறப்பையுமே ஆழ்வார்—

"தெருள் கொள் நான்மறை வல்லவர் பலர்வாழ் சிரீவர மங்கல நகர்க்—கருள் செய்தங் கிருந்தாய்"

"தேறு ஞானத்தர் வேதவேள்வியருச் சிரீவர மங்கலநகர் ஏறிவீற் றிருந்தாய்"

"தெள்ளியார் திருநான்மறை வல்லவர்மலி சிரீவரமங்கை யுள்ளிருந்த வெந்தாய்"

என்பன முதலியவற்ருல் ஆழ்வாரும் பாடியருளுதல் அறியத் தக்கது. "சீரீவரமங்கலநகர் ஏறிவீற்றிருந்தாய்" என்று தொடர் திருமாலது அர்ச்சாரூபமான திருமேனி புதிதாக அங்குப் பிரதிஷ்டிக்கப்பட்ட தென்பதைக் குறிப்பிடுதல் காணத்தக்கது. ஏறிவீற்றிருத்தல்—விக்கிரகத்திற் புதியதாக அமைக்கப்பட்டுப் பிரதிஷ்டிக்கப்படுதல். "திருப்பணி நாய்ச்சியார் முதலான திருவுடம்புகளும் ஏறியருளப் பண்ணுவித்து" என்பது பண்டை வழக்கு (T.A.S.I. 91) அன்றி. "புதியதாக குடியேறி வீற்றிருந்த எந்தாய்" என்றுமாம், "திருக்கோயிலைச் சூழ்ந்த இடத்திலும் சந்நிதியிலும் ஏறின பலகுடிகளும்" என்பது பழைய சாஸனத் தொடர் (S. I. I. i. 93) இவற்ருல், சிரீவரமங்கலம் தானஞ் செய்யப்பட்டுப் பிராமணர்கள் குடியேறித் திருமால் கோயிலும் பிரதிஷ்டிக்கப்பெற்று அவ்வூர் செழிக்கக் குறைந்தது 15 வருஷமாவது வேண்டுமன்ருே? அதனுல், 784-ல் தானஞ் செய்யப்பட்ட அவ்வூரிற் கோயில் கொண்ட திருமாலை ஆழ்வார் பாடநேர்ந்தது 800-ஆக வேண்டுமென்று கருதத் தடையில்லை.

பின்பழகிய ஜீயர் குருபரம்பரையில், நாதமுனிகள் திருக்குருகூரில், மதுரகவிகளுடைய சிஷ்யரான பராங்குசதாசரை ஸேவித்து அவர்மூலம் உபாய மறிந்து திருவாய்மொழி முதலிய திவ்யப் பிரபந்தங்களைப் பெற்ருர்—என்று கூறப்பட்டிருப்பதைமுன் குறித்துள்ளேன். மேலே—ஆழ்வார்க்கு அமைந்துள்ள 800—ஆண்டுக் கணக்கைக் கொண்டு நோக்கும்போது, நாதமுனிகள் குருகூரிற் கண்டு ஸேவித்த பராங்குச தாசர், மதுரகவிகளுடைய நேர்சிஷ்யராகச் சொல்லுதற்கும் பொருத்தமுள்ளது.

இனி, ஆழ்வார், வரகுணமங்கை என்ற திருப்பதியைப் 'புளிக்குடிக் கிடந்து வரகுண மங்கை யிருந்து' (9-2-4) என்று பாடுகின்ருர். இதனுட் குறிக்கப்பட்ட வரகுணமங்கையென்பது சீவரமங்கலம்போல வரகுணன் என்ற ஒருவனுல் தானஞ்

செய்யப்பெற்ற ஊரென்பதில் தடையில்லை. ஆனால், சிவரமங்கலத்துக்குப் போல இவ்வூர்க்குச் சாஸனமொன்றுங் கிடைக்கவில்லை. ஆயினும், பராந்தகனுக்கு சிவான் என்ற பெயர்போலவே வரகுணன் என்ற பெயரும் இருந்திருக்கலாம், ஏனெனில், இவன் பெயரன் இதே பெயரைத் தரித்திருப்பதால் பாட்டனை பராந்தகனுக்கும் அஃதுரியதாக வேண்டும். சிலர், பராந்தகன் பேரனுக்கும், அப்பேரனுக்குப் பேரனாய் 862-ல் பட்டம் பெற்ற ஒருவனுக்கும் வரகுணன் என்ற பெயர் உண்மையால், அவ்விருவருள் ஒருவன் காலத்து உண்டாயிருக்கக் கூடிய வரகுணமங்கையைப் பாடிய ஆழ்வார் அவர் காலத்துக்குப் பின்பு இருந்திருக்கலாமென்று கருதுவர். இது, நாதமுனிகள் அவதரித்த காலமாதலால் அந்நாதமுனிகட்குப்பின் நம்மாழ்வார் அவதரித்தவர் என்று முடிந்து முன் கூறியபடி அசங்கதமேயாகும். காலஞ்சென்ற நண்பர் கோபிநாதராயர் அவர்களால் எழுதப்பட்டு 'மணியையர் உபந்யாசத் தொடருள்' ஒன்றாகச் சென்னை யூனிவர்சிட்டியாரால் வெளிப்படுத்தப் பெற்றுள்ள ஸ்ரீவைஷ்ணவ சரிதத்தில் நம்மாழ்வாரைப்பற்றிக் கூறுமிடத்து, நம்மாழ்வாருக்கு வழங்கிய பராங்குசன் என்ற திருநாமம், அவர் காலத்துப் பாண்டியன் பெயரே என்று சாஸன வழக்குகளைக் கொண்டு கூறியிருப்பது பொருத்தமே. ஆனால், மாறஞ்சடையனென்ற பராந்தக பாண்டியனது பிரதம மந்திரியும், ஆனைமலைக் கோயில் கட்டியவனுமான, மாறங்காரி என்பவனே நம்மாழ்வார்க்குத் தந்தையாக வேண்டுமென்றும் அதனால் அத்தந்தை பெயரைச் சேர்த்து வழங்கும் பழைய வாக்குப்படி காரிமாறன் என்ற பெயரால் தம்மை இவர் வழங்கலாயினர் என்றும் சாஸனத்தில் களக்காட்டுக்குத் தலைவனாக தந்தை மறங்காரி கூறப்படினும் குருகூர்ப் பிரதேசத்தை ஆளும்படி அவன் அரசனால் நியமிக்கப்பட்டிருக்க கூடுமென்றும், அக்காலத்தே அக்குருகூரில் ஆழ்வார் அவதரித்திருக்க வேண்டுமென்றும் தம் தந்தையின் மறு பெயராகச் சாஸனங்கூறும் மதுரகவி என்ற பெயரையே தம் சிஷ்யர் மதுரகவிகட்கு தாஸ்ய நாமமாக நம்மாழ்வார் இட்டிருக்கலாமென்றும், தாம் பல காலமாகச் சிந்தித்ததில் இம் முடிவே ஏற்புடைத்தாயிற்றென்றும் எழுதியிருக்கின்றனர்.

இவர்கள் இவ்வாறு முடிவுபடுத்துவதற்குரிய முக்கிய காரணமெல்லாம், பராந்தக பாண்டியனுடைய தலைமை மந்திரிக்கு மாறங்காரி, மதுரகவி என்ற பெயர்களைச் சாஸனங் கூறுவதேயாகும். இஃதொன்றைக் கொண்டு இவ்வாறெல்லாம் முடிவு

படுத்துவது அசங்கதமேயாம். ஓர் அரசனைக் கௌரவித்து அவன் கீழுள்ள தலைவர் பலரும் அவன் பெயரைட் புனைந்து கொள்ளுதல் முற்கால வழக்கென்பது, சோழர் முதலியோர் சாஸனங்களால் தெளிந்ததே. அம்முறையில் பாண்டியனது உத்தர மந்திரியான காரி என்பவன் தந்தையும் ஆழ்வாரும் தனித்தனியே சம்பந்தமின்றி மாறனென்ற பெயரைக் கொண்டிருத்தல் கூடியதே. அதனால், மாறனுக்கு மகன் காரி என்ற பெயருடையனாய் உத்தர மந்திரியாயிருப்பதைப்பற்றிக் கொண்டு அக்காரிக்கு மகனே காரி மாறனென்ற நம்மாழ்வார் என்று கூறவேண்டிய அவசியமில்லை. மேலும், ஆழ்வார்க்குரியது வழுதிவளநாடு என்ற பெயர் கொண்ட தென்பது அவர் திருவாக்கால் அறியப்பட்டது. இப்பெயர் கொண்ட நாட்டைப் பராந்தகன் பெயரன் காலத்துச் சாஸனங்களும் "திருவழுதி வளநாட்டுத் திருவெள்ளூர்" "திருவழுதிவள நாட்டுத் திருக்கோளூர்" (T.A.S. III 7/5) என்று குறிப்பிடுகின்றன. இவ்வூர்களையடுத்தே திருக்குருகூரும் உள்ளதால், அதுவும் அந் நாட்டதென்பது சாஸனங்கட்கும் ஒத்ததே. உத்தரமந்திரியான மாறங்காரிக்குரியதாகச் சொல்லப்படும் களக்குடி அல்லது கரவந்தபுரம் என்பது களக்குடி நாட்டைச் சார்ந்தது. இக்களக்குடி நாட்டில் மானூர் (மனனிலைய நல்லூர்) கரிவலம்வந்த நல்லூர், கரவந்தபுரம் என்பவை புள்ளனவென்று சாஸனங்கள் கூறுகின்றன. களக்குடி என்பது திருநெல்வேலிக்கு வடக்கே 10 மைலில் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் செல்லும் பாதையில் உள்ள ஊராகும். மாறங்காரிக்குரிய கரவந்தபுரமாகிய இக்களக்குடிக்கும் திருக்குருகூராகிய (ஆழ்வார் திருநகரிக்கும் உத்தேசம் 50 மைலுக்கு மேலிருக்கும் களக்குடி மாறங்காரி திருக்குருகூரில் வேலையாயிருந்த போது ஆழ்வார் ஜனித்தவராயின் தமக்குப் பரம்பரையாயுரியதான களக்குடி நாட்டையும் கரவந்தபுரத்தையும் விட்டொழித்துத் தம் தந்தை உத்யோகம் வகித்த வழுதிவளநாட்டையும் குருகூரையும் தமக்குரிய நாடு ஊர்களாகவும் தாம் அவற்றின் தலைவராகவும் ஆழ்வார் நெடுகக் கூறிக்கொள்ள நேருமா? ஒரு காலுமில்லை. களக்குடி என்ற ஊர் களக்காடாகும் என்று பலரும் எழுதி வருவது ஆராயுமிடத்துத் தவறென்பது விளங்கும். இவற்றால் ஆழ்வார்க்கும் மாறங்காரிக்கும் நாடும் ஊரும் வெவ்வேறானவை என்பது தோற்றமாம்.

இனி குலத்தை நோக்குவோம். ஆழ்வார் வேளாள மரபின ரென்பது பிரசித்தமானது. மாறங்காரியின் குலமோ எயின சாதியாகும். இச் செய்தி, மாறங்காரிக்குப் பின் உத்தர மந்திரி

பதவியைப் பெற்ற அவன் தம்பிக்கு மாறனெயினன் என்றும், இவன் குடும்பத்து வந்த தலைவர்க்குத் தீர்தரன்மூர்த்தி யெயினன் என்றும் வழங்கும் பெயர்களால் அறியலாம். எயினர் என்பது மறவரைக் குறிப்பது. பிற்காலத்திற் போலவே முற்காலத்திலும் பாண்டியரது வெற்றிகட்குச் சிறந்த காரணமாயிருந்தவர் இம் மறவர் குலத்தினரே. சங்க நூல்கள் கூறும் ஆய், எயினன் என்பவர் போன்ற அரசர் படைத்தலைவர்களும் இக்குலத்தவரே யாவர். இவருள் கல்வியறிவுகளிலும் வீரத்திலும் மேம்பட்டவர்களைத் தமக்கு அமைச்சர்களாகப் பாண்டியர் கொண்டிருத்தலும் கூடியதேயாம். இக்குலத்தவனான மாறங்காரியை—

"பொரவந்தவர் மதந்தவிர்க்கும் கரவந்தவர் குலத்
[தோன்றல்
மாவேந்தும் கடற்றானை மூவேந்தமங்கலப் பேரரையனாகிய
வைத்யசிகாமணி மாறங்காரி"

என்று சாஸனஞ் சிறப்பிக்கின்றது. இதினின்று அம்மந்திரியின் வீரப்பெருமை நன்கு விளங்கும். இச் சாஸனத்துள், இவன் 'வைத்யசிகாமணி' எனப்படுகின்றான். இது இவன் முன்னோர் கைக்கொண்டுவந்த தொழிலினின்று வந்த குடிப்பெயராக வேண்டும். பழைய சேனைகளும் சேனைத் தலைவர்களும் மறவ குலத்தவரேயாதலால், போரிற்புண் முதலியவற்றால் நோயுற்ற வரை சிகிச்சை செய்யும் வைத்திய கலையினும் இவர்கள் தேர்ச்சி பெற்றவராய் இருத்தல் இயல்பே. அதனால், எயினர் குலத்தில் வைத்யத் தொழிலைப் பரம்பரையாகவுடைய குடியில் உத்தர மந்திரி—மாறங்காரி பிறந்தவன் என்பது விளங்கும். பழைய வருணங்களுள் வைத்திய குலமென்பதொன்றின்மையால், அது குடிப்பெயரென்றே கொள்ளத்தக்கது. சிலர், வைத்திய சிகாமணி என்பதற்கு வைத்திய குலத்துப் பெரியோனென்பது பொருளாகக் கூறுவர். மாறங்காரியின் மரபினர் எயினன் என்ற பட்டப் பெயர் கொண்டிருப்பதும் இக்குலத்துதித்துப் பாண்டியன் சாமந்தனான மற்றொருவன், பிராமணர் கொண்டிராத சாத்தங்கணபதி என்ற பெயர் தரித்திருப்பதும், இவரெல்லாம் படைத்தலைமை வகித்த வீரர்களாயிருப்பதும் அன்னோர் கூற்றுக்கு விரோதமா யிருப்பதால் அது கொள்ளத் தக்கதன்று. மாறங்காரியின் குலம், வடமொழியிலும் தமிழிலுமுள்ள வைத்திய முதலிய சாஸ்திரங் களைப் பரம்பரை கற்றதனாலும் அரசரிடம் பரம்பரையாகவே உயர் பதவியை வகித்ததனாலும் நாடெங்கும் பிரசித்தி பெற்றதேயாம்.

இத்தகைய குலத்தில் ஆழ்வார் உதித்தவராயின், அதனை விட்டொழியாமல் தம்குல வரலாற்றைக் கௌரவமாகவே பதிக விறுதியில் கூறாமற் போகாரென்பது திண்ணம்.

இனி, மாறங்காரியின் மறுபெயராகச் சாஸனம் கூறும் மதுர கவி என்பதை நம்மாழ்வார் சிஷ்யர் மதுரகவிகள் கொண் டிருத்தலால் அது நம்மாழ்வார் தம் தந்தை பெயரைத் தாஸ்ய நாமமாகத் தம் சிஷ்யர்க்கு இட்டதாக வேண்டும் என்ற ராயரவர்கள் கருத்தும் பொருந்தாது. தம் மாசாரியார் நாமத்தையோ கடவுள் நாமத்தையோ இடுதற்குத் தான் தாஸ்ய நாமம் என்பது பெயரேயன்றி, வீரனைப் பெரிய பதவி வகித்த தந்தை பெயரை இடுவது லௌகிகர்கட்குரியதன்றி ஞானிகட் குரியதன்று. இவ்வாறு நாடு, ஊர், குலம், குடிகளால் முற்றும் வேறுபட்ட இருவரைத் தந்தையும் மகனுமாகக் கருதியும் அவருடன் மதுரகவியாழ்வார் பெயரை இணைத்தும் எழுதிவரும் சரித்திரவறிஞர் கூற்றெல்லாம் உலகம் வெறுத்தொதுக்கத்தக்கன வேயாம்.

இனி வேறு சரித்திரவறிஞர் சிலர், நம்மாழ்வார் 5-ம் நூற்றாண் டினரென்று கருதி எழுதியுள்ளார். இக்கொள்கைக்கு அடிப்படை யான காரணம், நம்மாழ்வார் முதலாழ்வார்கட்குப் பின்னும் ஏனையாழ்வார்கட்கு முன்னும் அவதார முறைவைப்பை முன்னோர் கூறியிருப்பதேயாகத் தெரிகின்றது. ஆழ்வார்கள் அவதார முறை திவ்யஸூரிசரிதம், பின் பழகியஜீயர் குருபரம்பரை பிரபந்நாமிருதம் முதலியவற்றில் வெவ்வேறுவகை கொண்டுள்ளது. திருவரங்கத்தமுதனார், உடையவர் திருமுன்பு இயற்றியரங் கேற்றிய இராமாநுஜ நூற்றந்தாதியிலும் ஸ்ரீபராசர பட்டரது தனியன் ஸ்லோகத்திலும் நம்மாழ்வார் இறுதியில் வைத்து எண்ணப் பட்டிருக்கிறார். அதனால், பலதிறப்பட்ட இம்முறை வைப்பைக் கொண்டு சரித்திரவாராய்ச்சி செய்வது முடிவுறாது. ஆழ்வார் காலம் இன்ன தென்பதைச் சிரீவரமங்கல சாஸனம் மிகத் தெளிவாக்கி விட்டது. அதனை மறுத்து வேறு காட்டுதற்குத் தக்க ஆதாரமுங் கிடைக்கவில்லை. இஃதன்றி, திருக்காட்கரைக் கோயிலிற் கண்ட சிதைந்த சாஸனம் ஒன்றாலும் ஆழ்வார் 5-ம் நூற்றாண்டினர் என்பது இசையவில்லை. கோபிநாதராயரவர்களால் வெளிப்படுத்தப்பட்ட அச் சாஸனப் பகுதியாவது—

"திருக்காற்கரைப் பெருமாள் தர்பாதிச்சஞ் செய்தருளிச் செல்லாநின்ற மூவாயிரத் தெழுநூற்றையா மாண்டைக் கெதிரா மாண்டு"—என்பதே.

திருக்காட்கரை தர்ப்பாதிச்சத்தேதி கிடைக்காமையால் அதை விட்டு வேறு உதாரணம் எடுத்துக் கொள்ளலாம்.

திருச்சேறைப் பெருமாள் தர்ப்பாதிச்சஞ் செய்தருளிச் செல்லாநின்ற 3800-ம் ஆண்டைக்கெதிராமாண்டு "400" என்று இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதில் 3800 என்பதும் 400 என்பதும் சாஸனம் ஏற்பட்ட வருஷத்தைக் குறிப்பன. அந்த வருஷம் கலி 3800 என்பதும் அதற்கு 400 வருஷங்களுக்குமுன் தர்ப்பாதிச்சம் நடந்ததென்பதும் விளங்கும். அதாவது கலி 3800-ல் 400 கழிக்க 3400-ல் தர்ப்பாதிச்சம் நடந்ததாகும். அதாவது கி.பி. 398. இந்த வாக்கியத்தைப் பொருள் கொள்ளும் முறை—திருச்சேறைப் பெருமாள் தர்ப்பாதிச்சஞ் செய்தருளிச் செல்லாநின்ற ஆண்டுகள் '400' "இந்த ஆண்டு கலி 3800-க்கு எதிர்".

இவ்விதம் பொருள் கொள்ளாவிடில் இரண்டு ஆண்டுகளையும் செப்பியிருப்பதன் பொருள் விளங்கமாட்டாது. சாஸனங்களின் முதலில் ஆண்டுகள் குறிக்கப்பட்டிருப்பது அச் சாஸனங்கள் எந்த வருஷத்தில் கொடுக்கப்பட்டது என்பதைக் குறிப்பதற்கே.

'இந்த முறையில்' "3800-ம் ஆண்டைக் கெதிராமாண்டு"—என்று பின்வரவேண்டிய ஆண்டு கிடைக்காமற் போனால் தர்ப்பாதிச்ச வருஷம் நிர்ணயிப்பதற்கில்லை. 3800-லிருந்து எவ்வளவு கழிப்பதென்று தெரியாது. சாஸன வருஷமாகிய 3800-க்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு தர்ப்பாதிச்சம் நடந்ததென்று நிர்ணயிக்க வழியில்லாது போனதால் நாம் 3800 ஆண்டுகட்கு முன்பே தர்ப்பாதிச்சம் நடந்திருக்க வேண்டுமென்பதொன்றேயொழிய எவ்வளவு காலம் முன்பு என்றாவது எந்த ஆண்டிலென்றாவது துணிவதற்கில்லை. ஆகவே தர்ப்பாதிச்சம் நடந்த பல சில வருஷங்களுக்குப் பின்பே 3800-ம் ஆண்டு நிகழ்ந்ததென்றே கொள்ள இடமுண்டு.

திருக்கண்டியூர் சாஸனத்தை எடுத்துக் கொள்ளலாம். "திருக்கண்டியூர் மகாதேவர்க்கு ஸர்வாதிச்சஞ் செய்தருளிச் செல்லாநின்ற யாண்டு 394-ம் ஆண்டைக் கொல்லம் 392" என்பது. இதில் கலியப்தத்திற்குப் பதிலாகக் கொல்லம் ஆண்டு ஆளப்பட்டிருக்கிறது. வேறு வித்தியாசம் இல்லை. இதன் பொருள்—இந்தக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட வருஷமானது கொல்லம் 392, தர்ப்பாதிச்சம் நடந்து 394 வருஷங்கள் கடந்தன—அதாவது

கொல்லமாண்டு பிறப்பதற்கு 2 வருஷம் முன்பே அதாவது கி.பி. 823-ல் இந்தக் கோயில் தர்ப்பாதிச்சம் நடந்ததென்பது வெளிப் படை. திருக்காட்கரை சாஸனத்தை இப்பொழுது கவனிக்க லாம். "திருக்காட்கரைப் பெருமாள் தர்ப்பாதிஞ்சஞ் செய்தருளா நின்ற 3705-ம் ஆண்டைக் கெதிராமாண்டை"—என்றுள்ளது.

சாஸனம் ஏற்பட்ட வருஷம் கலி பிறந்தது 3705—அதாவது கி.பி. 603. எதிராமாண்டை எது என்பது தெரியவில்லை. "எதிராமாண்டு" 103 என்று இருந்ததாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் 603-ல் 103 போக 500 கி.பி.-யில் தர்ப்பாதிச்சம் நடந்ததாக ஏற்படும். ஆகவே கி.பி. 603-க்கு முன்பே தர்ப்பாதிச்சம் நடந்ததென்று ஏற்படும். ஆயினும் எத்தனை வருஷங்களுக்கு முன்பு என்பது மாத்திரம் வெளியாகவில்லை.

தர்ப்பாதிச்சம் என்பது ஸர்வாதித்தியம் என்பதன் திரிபு. ஸர்வாதித்தமாவது—கோயில் புதியதாகக் கட்டிப் பிரதிஷ்டை செய்து சகலரையும் ஆரோதிப்பதே. இதனால், திருக்காட்கரைக் கோயில் அவ்வாறு பிரதிஷ்டிக்கப்பட்ட காலத்தை மேற்படி சாஸனங் கூறுகின்றதென்பது விளங்கும். இங்ஙனமே கோயில் களைப் புதியவாகக் கட்டி ஸர்வாதித்தம் பண்ணி அந்த ஸர்வா தித்தம் அல்லது பிரதிஷ்டா காலத்தை முதலாகக் கொண்ட அப் பதங்கள் மலைநாட்டில் வேறு சிலவுமுண்டு, இதனை—

திருக்கண்டியூர் மகாதேவர்க்கு ஸர்வாதித்தஞ் செய்தருளிச் செல்லாநின்ற யாண்டு 394-ம் ஆண்டைக் கொல்லம் 392 என்று வேறு சாஸனமொன்று கூறுதலாலும் தெளிவாம். இதனுள் முதலிற் குறித்தகாலம் கோயில் முதன்முதற் பிரதிஷ்டிக்கப்பட்டு இத்தனை வருஷமாயிற்றென்பதையும், இரண்டாவது அவ் வெண்ணப்பட்ட வருஷம் கொல்லமாண்டில் 392-வது அட்டமென் பதையும் குறிக்கும். அஃதாவது திருக்கண்டியூர்க் கோயில் பிரதிஷ்டை பெற்ற வருஷம் கி.பி. 1409 என்பதே. இவ்வாறே கலியப்தத்தில் திருக்காட்கரைக் கோயில் முதன்முதற் பிரதிஷ்டிக் கப்பட்டது. 3705-வது வருஷம் என்பது முதலிற்கூறிய சாஸனத்தால் தெளிவாகின்றது. கலியப்தம் இத்தனையாவது என்று குறிப்பிடும் சாஸனங்கள் உள்ளதோடு, அது குறிப்பிடாமல்,

"ஸ்வஸ்திஸ்ரீ நாலாயிரத் தெழுநூற்றிரண்டு சம்வத்ஸரஞ் செல்லாநின்ற துலாச்சனியில்" (T.A.S. II, 29) என்றிவ்வாறு பிற்காலத்துச் சாஸனங்களும் காணப்படுகின்றன. ஆகவே, திருக்காற்கரைக்குக் கூறப்பட்ட 3705-ம் ஆண்டென்பது கல்யப்த

மென்பதும் அதன் எதிராமாண்டென்பது, அச்சாஸனமைக்கப் பட்ட வருஷமென்பதும் விளக்கமாகும். அஃதாவது, காட்கரைக் கோயில் முதன்முதற் பிரதிஷ்டையான வருஷம் 605 என்பதும், அச்சாஸனம் அமைந்தது அதற்கடுத்த 606-ம் வருஷம் என்பதுமே யாம். ஸர்வாதித்தம் என்பதன் வழக்குக்குப் பழைய பிரமாணம் வேறு நமக்குத் தெரியவில்லை. ஆயினும் அது கோயிலின் முதற் பிரதிஷ்டையையே குறிப்பது என்பதும், ஒரு நூற்றாண்டுக்குள் பலமுறை நிகழக்கூடிய ஸம்புரோக்ஷணை அல்லது கும்பாபிஷே கங்களை அது குறிப்பதாகாதென்பதும் திண்ணம். கலி, சகம் என்பவற்றைப்போல, ஸர்வாதித்தம் என்பது ஓர் அப்தமாக 300, 400 ஆண்டுகள் வரை வழங்கியிருக்குஞ் செய்தி சாஸனங்களால் தெரிய வருதலால், அது கோயிலின் ஆதிஸ்தாபனத்தையே குறிப்பதென்பதில் ஐயமில்லை. இதற்கேற்பத் "திருக்காற்கரைப் பெருமாளுக்குத் தர்ப்பாதிச்சஞ் செய்தருளி" என்றில்லாமல் "திருக்காற்கரைப் பெருமாள் தர்ப்பாதிச்சஞ் செய்தருளி" என்று வாக்கியமுள்ளதும் இது, அப்பெருமாண் புதிதாக அர்ச்சாரூப மான விக்ரகத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டவர் என்ற குறிப்பே புலப் படுத்தும்.

மேற்குறித்தவாறு, 605-ல் உண்டாகிய இத்திருக்காட்கரைக் கோயிலை, நம்மாழ்வார் 9-ம் பத்து 6-ம் திருப்பதிகத்தால் மிகவும் உருக்கமாகப் பாடுகின்றார். இதனால், 7-ம் நூற்றாண்டின் தொடக்கத் துக்குப் பின்பே, அவ்வாழ்வார் அவதரித்தவர் என்பதும் பெறப் படும். படவே 5-ம் நூற்றாண்டினர் அவ்வாழ்வார் என்போர் கூற்றுப் பொருந்தாதென்பதும் சீவரமங்கலத்தின் தானகாலமான 784-க்குப் பின்பே ஆழ்வார் திருவாய்மொழியின் ஒரு பகுதியைப் பாடியவரென்பதும் தேற்றமாகின்றன.

நம்மாழ்வார் திருவாக்குகளை நோக்குமிடத்து அவற்றுட்கண்ட வழக்குக்களிற் பலவற்றாலும் அவர் காலநிலை நன்கு விளங்கு கின்றன. அவற்றையெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும். ஆயினும், சிறந்தவை யிரண்டை இங்கே குறிப்பிடுவேன். திருவாய்மொழி 2-ம் பத்து, 8-ம் திருப்பதிகத்துள்:—

"தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ்
சேர்த்தி யதுவே சிவன்முடிமேற் றான்கண்டு
பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழா யான்பெருமை
பேர்த்து மொருவாற் பேசக் கிடந்ததே"

என்றுள்ள பாசுரந்தெளிந்ததே. இதனுள் அர்ச்சுனன் கண்ண பிரானுடன் செய்த கைலாச யாத்திரையில், அம்மலையை அடைவதற்குமுன், வழக்கம்போல் நித்திய பூசைக்குரிய சிவலிங்க மில்லாமல் வருந்த, கண்ணன் தம்முடைய இருமுழந்தாள்களையும் கைகளைக்கொண்டு கட்டிச் சிவலிங்க வுருவாக்கி அதனில் பூசை புரியும்படி அர்ச்சுனனுக்கு நியமிக்கவும், அவன் தன் பூசையை முடித்துக் கொண்டனனென்றும், அடுத்து அவ்விருவரும் கைலாசத்துச் சிவபிரானைக் காண்டலும், தான் கண்ணன் பாதங்களில் அர்ச்சித்த பூக்கள் யாவும் சிவபிரான் முடியில் உள்ளதைக் கண்டு, கண்ணபிரானது உண்மை நிலையைத் தெளிந்தனனென்றுங் கூறி, இத்தகைய பரத்துவம் வெளியிடுஞ் சரித்திரம் வேறொருவரால், வேறுவகையாக மாறிக் கூறப் பட்டிருப்பது வியப்பே என்று முடித்திருத்தல் காணலாம். இங்ஙனம் மாற்றியவர் யாவர் என்பதையாராயுமிடத்து—முத்தொள்ளாயிரம் பாடிய ஆசிரியரே அத்தகையோராகக் கருத இடந்தருதல் அறியத்தக்கது. அவர் நூலில், பாண்டியனைப் பற்றிக் கூறிய வெண்பா அடியில் வருமாறு—

“செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றால்—எங்கும்
முடிமன்னர் சூடியபூ மோய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும்”

என்பது.

இதனுள்—“கைலாச யாத்திரையிற் கண்ணன் முடிமேல் அர்ச்சுனன் பூசைசெய்த பூக்கள், சிவபிரானது அடிகள்மேல் காணப்பட்டவாறுபோல வேற்றரசர் தம்முடிமேற் சூடிய பூக்கள் மாறன் அடிமிசைக் காணப்படுகின்றன” என்று முத்தொள்ளாயிர முடையார் கூறுதல் காணலாம். ஆகவே, முன் கூறியவாறு அடிமிசையிட்டு முடிமிசைக் கண்டதாகவுள்ள பழங்கதையை முடிமிசையிட்டு அடிமிசைக்கண்டதாக மாற்றிக் கூறினரென்று ஆழ்வாராற் கூறப்படுபவர், இம்முத்தொள்ளாயிர முடையாராகவே சொல்லலாம். இவர் சைவர் என்பது, இவர் நூன் முகப்பின் காப்புச் செய்யுளாலும் பெறப்படும். இதற்கேற்ப—

“அல்லிமலர்த் தண்டுழாயுந் தாரான்
ஆர்க்கிடுகோ வினிப் பூசல் சொல்லீர்”

என்று ஆழ்வார் பாடுந் தொடர்—

“கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
ஆர்க்கிடுகோ பூச லினி”

என்ற முத்தொள்ளாயிரத் தொடரோடு ஒப்புமை யுடையதா யிருத்தலும் அறியத்தக்கது.

இவ்வாசிரியர் தம் நூன்முகப்பிற் பாடிய சிவபிரான் வாழ்த்துச் செய்யுளாற் சைவரென்பதும்,

"செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனாற் போந்தாமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச் சிறைதீர் வேந்தக் குழாம்"

என்று இவர் பாடுதலால், செங்கணான் பொய்கையார்களுக்கு நெடுங்காலத்துக்குப் பின்பு இவரிருந்தவரென்பதும் பெறப்படுகின்றன. அஃதாவது—ஆழ்வார்கள் விளங்கிய காலத்தையொட்டிச் சிறிது முற்பட்டவரென்னலாம். இவரது முத்தொள்ளாயிரத்தின் சொற்செறிவும் பொருட்பொலிவும் தொடைநடைகளின் அழகும் அறிஞர் வியக்கத்தக்கவை. இத்தகைய சிறந்த பாடல்களை ஆழ்வார் அறிந்தவரெனின், அதனில் அவர் மதிப்புடையரென்றே சொல்லலாமாயினும் அரிய பெரிய இவ்வாக்கை அற்பான மானிடரிடஞ் செலுத்தியதற்கு வருந்தியும் இருக்கலாம். இது போன்ற சிறந்த வாக்குடைய புலவர்களையும் அவர்கள் பரிசுக்காக மானிடம்பாடிக் கழிதலையும் திருவுள்ளத்துக் கொண்டு போலும்—

"சொன்னால் விரோதமிஃ தாகிலுஞ் சொல்லுவன்கேண்மினோ" என்று தங்காலத்துப் புலவர்கட்கெல்லாம் விரோதமாகத்தாம் சில கூறப் போவதாகத் தொடங்கி—

"நாங்கள் வானவ ரீசனை நிற்கப் போய்க்
கழிய மிகநல்ல வான்கவி கொண்டு புலவீர்காள்
இழியக் கருதியோர் மானிடம்பாடவென் றுவதே"

"என்னுவ தெத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள்
மன்னு மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும்பொருள்"

"வம்மின் புலவீர்நும் மெய்வருத்திக் கைசெய் துய்ம்மினோ
இம்மன் னுலகிற் செல்வரிப் போதில்லை நோக்கினோம்"

"வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்
ஆய்கொண்ட சீர்வள்ள லாழிப்பிரா னெனக்கே யுளன்"

என்றிவ்வாறு, அவர்கட்கு உபதேசிக்கலாயினர். "நீவிரெல்லாம் அநித்தியரான அரசரது வாயிற் கவிகளானல், யான் நித்தியரான எம்பெருமானது பரமபத ஸமஸ்தான கவி"
என்பதை—

"உலகம் படைத்தான் கவி யாயினேன்" என்பதனல் தம்மைக் கூறிக்கொள்ளுதல் அறியத்தக்கது.

இனி, நம்மாழ்வார் திருவாக்குக்களில் வேறு எங்குங் காண்டற்கரிய சொல்வழக்கொன்றும் காட்டுவேன், அஃதாவது— செயவெனச்சப் பொருளில் 'கின்று' என்ற விகுதியொன்றை ஆழ்வார் அதிகமாக வழங்குதலேயாம். இவரது திவ்யபிரபந்தங்களில்,

எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று
வாய்க்குங் கண்டீர்" (5-1-7)

"அமரர்கோ னர்ச்சிக் கின்றங்
ககப்பணி செய்வர் விண்ணோர்" (10-2-6)

"ஆமகிழ்ந் துகந்தவை மேய்க்கின் றுன்னோ
டசுரர்க டலைப்பெய்யி லெவன்கொ லாங்கே" (10-3-7)

"கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று
எண்டானு மின்றியே வந்தியலு மாறு" (2-10-5)

"விதிவாய்க்கின்று காப்பாரார்" (5-1-1)

"விதிவாய்க்கின்று வாய்க்குங் கண்டீர்" (5-1-7)

"வல்லியொன்றால்—விலக்குண் டுலாகின்று
வேல்விழிக் கின்றன" (திருவிருத்—57)

என்ற பாசுரத் தொடர்களில் இவ்விகுதி வருதல் காணலாம். இவற்றுள்—வாய்க்கின்று அர்ச்சிக்கின்று என்பவற்றுக்கு வாய்க்கும்போது அர்ச்சிக்கும்போது என்ற பொருளே ஈட்டுவியாக்கியானத்துள் கூறப்படுகின்றது. இத்தகைய விகுதியொன்று செயவெனெச்சப் பொருளில் வழங்கியது, எல்லாக் காலத்திலுமின்று என்பதற்கு இவ்வழக்கு மிகவும் அருகிக் காணப்படுவதே தக்க சான்றாகும். ஆழ்வார் திருவாக்குக்களிற்போல இவ்

விகுதியை அதிகமாகக் கொண்டாலும் நூல், இறையனாரகப் பொருளின் பழையவுரை ஒன்றே யாகும். இவ்வுரையுள் அடியில் வருந் தொடர்கள் அறியத்தக்கவை:—

"தவளைப்பாய்த்தென்பது, தவளைப் பாய்கின்று இடைநிலங் கிடப்பப் பாய்வது போல"

(சி. வை. தா. பதிப்பு பக்.—5)

"பருந்தின் வீழ்க்காடென்பது, பருந்து வீழ்கின்று நடுவே விழுந்து தான்கருதின பொருள் கொண்டுபோம்"

(மேற்படி)

"குழவி யழுகின்று, எனக்குப் பால்தம்மின். நீராட்டுமின். என்றழாது துக்கம் வந்ததாக அழும்" (மேற்படி—140)

"ஓதல்காவல் என்பவற்றுக்குப் பிரிகின்று தலைமகளுந் [தோழியும் அறியச் சொல்லிப் பிரியவு முரியன்" (மேற்படி—185)

"அஃதேயெனின் இவளுழைச் செல்கின்று ஆயங்கள் ஐயுருவோ வெனின்"

"வரைவு கடாவுதற்குச் செறிப் பறிவுறுக்கின்று முன்னுடைத்தாக அறிவுறாஉம்"

என்பன காண்க.

ஆழ்வார்கள் காலத்து மாறவர்மன்—பராங்குசன் பாட்டனும் திருஞானசம்பந்தர் காலத்தவனுமான நெல்வேலி வென்ற நெடுமாறனைப் பற்றிய கோவைப் பாடல்களை இக்களவியலுரை மிகுதியாக ஆளுதலால், அது அப்பாண்டியன் காலத்துக்குப் பின்பே எழுதப்பட்டதென்பது தேற்றம். அஃதாவது ஆழ்வார்கள் வாழ்ந்த 8-ம் நூற்றாண்டை ஒட்டியதேயாம். இக்காலத்தில், இவ்விகுதி செய்யுள் வழக்கில் மட்டுமன்றி உலக வழக்கினு மிகுதியாக வழங்கியதே என்பது, உரைநடையினும் அது மிகப் பயிலுதலினின்று அறியலாம். இவ்வழக்கைத் திருமங்கை மன்னன்—

"முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர் மன்னு மருந்தறிவா ரில்லையே"

என்று ஓரிடத்து மட்டும் வழங்கித் தாமும் அக்காலத்தவரே என்பதைக் குறிப்பவர் போலக் கூறுவர். வேறு நூல்களில்

இவ்விகுதி வழக்குக் காணப்படுமாயின், அவற்றையும் இக்காலத்தனவாகக் கூறலாம்.

இதுவரை நான் கூறிவந்த முடிவுகளின்படி ஆழ்வார்கள் வாழ்ந்த காலங்கள் அடியில் வருமாறு :—

கி.பி. 5—7-ம் நூற்றாண்டு.

முதற் பகுதியினர்	1 முதலாழ்வார்கள்	..	460—540
	2 திருமழிசைப்பிரான்	..	520—620

8-ம் நூற்றாண்டு.

இரண்டாந் தொகுதியினர்	3 பெரியாழ்வார்	..	700—785
	4 ஆண்டாள் ..	..	716—732
	5 திருமங்கை மன்னன்	..	710—790
	6 தொண்டரடிப்பொடிகள்	.	740—800
	7 குலசேகரர் ..	..	750—780
	8 திருப்பாணாழ்வார்	..	750—780
	9 நம்மாழ்வார் ..	..	765—800
	10 மதுரகவிகள் ..	..	740—805

இக்காலக் குறிப்புக்களினின்றும் யோகிகளான முதலாழ்வார்களும் திருமழிசைப் பிரானும், 5–7-ம் நூற்றாண்டுகளிலும், அவர்கட்குப் பிற்பட்ட ஆழ்வார்கள் எண்மரும் 8-ம் நூற்றாண்டிலும் எழுந்தருளியிருந்தவர்களென்பது தெரியலாம். இக்கால வரையறை பல காரணங்களால் உத்தேசமாகவே குறிக்கப்பட்டது. ஆயினும், இரண்டாந்தொகுதியினரான ஆழ்வார்கள் பெரும்பாலும் 750 முதல் 800-க்குள் எழுந்தருளியிருந்து சிறிது முன்பின்னாகத் திருநாடலங்கரித்தவர்களாகவே தோற்றுகின்றனர். இவ்வாறு, 8-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆழ்வார்களிற் பலர் ஒருங்கிருந்தனர் என்ற என் புதிய கொள்கை, பலர்க்கும் அதிசயம் விளைக்கலாம். ஆனால், ஆழ்வார்களே தம் திருவாக்குக்களால் தங்கள் அற்புதமான இக்கால நிலையை வெளியிட்டுக் கூறுவார்களாயின், அது நம்மால் ஐயப்படத் தக்கதாகும். திருவாய்மொழி . . . . பத்து . . . . . பதிக முழுவதும் ஒவ்வொருவருங் கவனித்தற்குரியது.

"பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங் கியாதொன்று மில்லை
கலியுங் கெடுங் கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் [மண்மேல்
மலியப் புகுந்திசை பாடி யாடியுழிதரக் கண்டோம்"

"கண்டோம் கண்டோம் கண்டோங் கண்ணுக் கினியன [கண்டோம்
தொண்டீ ரெல்லீரும் வாரீர் தொழுது தொழுதுநின் றார்த்து
வண்டார் தண்ணந் துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேற்
பண்டான் பாடிநின் றாடிப் பரந்து திரிகின் றனவே."
"இடங்கொள் சமயத்தை யெல்லா மெடுத்துக் களைவன
தடங்கடற் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய்
கிடந்து மிருந்து மெழுந்துங் கீதங்கள் பல பாடி
நடந்தும் பறந்துங் குனித்து நாடகஞ் செய்கின் றனவே."
"மேவித் தொழுதுய்ம்மி னீர்கள் வேதப் புனித விருக்கை
நாவிற் கொண்டச் சுதன்றன்னை ஞானவிதி பிழையாமே
பூவிற் புகையும் விளக்குஞ் சாந்தமு நீரு மலிந்து
மேவித் தொழுமடியாரும் பகவரு மிக்க துலகே"

என்றிவ்வாறு அருளிச் செய்கின்றார் நம்மாழ்வார். தங்காலத்தே பக்திமேலீட்டால் பண்ணமைந்த பாசுரங்களைப் பாடியும் ஆடியும் உபதேசித்தும் நன்மக்கள் உய்யும்படி நாடெங்கும் பரவி ஆட்படுத்திவந்த திருமாலடியார் பெருங் குழாங்களையும் அவர்களால் ஸ்ரீவைஷ்ணவ தரிசனம் தலைசிறந்தோங்கியதையும் நேரில் அறிந்தவராய் ஸ்ரீபராங்குசர் இத்திருப்பதிகம் அருளிச் செய்கின்றார் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதன்றோ. இங்ஙனம் நாடெல்லாவற்றையும் அடிமைப் படுத்திவந்த மாதவன் பூதங்களாகிய அவ்வடியார்குழாம் ஆழ்வாரது உட்கண்ணுக்கு மட்டுமன்றி யாவர்க்கும் புலப்படத் தோன்றியதே யென்பது—

"செய்கின்ற தென்கண்ணுக் கொன்றேயொக் கின்ற திவ் வுலகத்து" என்பதனாலும், இத்திருக் கூட்டத்தில் இல்லறத்தாராய் ஞானவான்களும் வேதவித்துக்களுமான மகத் பிராமணர்களும், துறவிகளான பகவர்களும் மிக்கிருந்தனர் என்பது—

"அச்சுதன்றன்னை ஞானவிதி பிழையாமே
மேவித் தொழு மடியாரும் பகவரு மிக்க துலகே"

என்பதனாலும், ஆழ்வாரே நம்மனோ ரறியப் பாடி யருளுதல் குறிப்பிடத் தக்கன. இவ்வடிகள் பெரியாழ்வார் போன்ற பரம பாகவதசிகாமணிகளைக் குறிப்பது போலவே யிருத்தலுங் காணலாம். இவ்வடியார் பெருங் குழாத்துள் தாமும் உடனிருந்து அவர்களது பண்ணமைந்த பாவமிர்தங்களைப் பருகிக் களித்தவ

றென்றும், அவர்களது பேரருளுக் கிலக்காகியவரென்றும், அக் கூட்டத்தை ஒருபொழுதும் பிரிய விருப்பமற்றவரென்றும்—

"வியன்மூ வுலகு பெறினும்போய்த் தானேதானே யானாலும்
புயன்மே கம்போற் றிருமேனி யம்மான் புனைபூங்
[கழலடிக்கீழ்ச்
சயமே யடிமை தலைநின்றார் திருத்தாள் வணங்கி யிம்மையே
பயனே யின்பம் யான்பெற்ற துறுமோ பாவி யேனுக்கே"

"செந்தா மரைக்கட் டிருக்குறளின்
நறுமா விரைநாண் மலரடிக்கீழ்ப் புகுத லன்றி யவனடியார்
சிறுமா மனித ராயென்னை யாண்டா ரிங்கே திரியவே"

"மாயன் கோல மலரடிக்கீழ் இன்புற்றிருந்தாலும்
மொழிப்பட்டோரும் கவியமுத நுகர்ச்சியுறுமோ
[முழுதுமே

"தனிமாத் தெய்வ மலரடிக்கீழ்ப் புகுதலன்றி யவனடியார்
நனிமாக் கல்வியின்பமே நாளும்வாய்க்க நங்கட்கே"

என்று பாசுரத் தொடர்களில் விளங்கக் கூறுவது காணலாம். இவ்வாறு நாடெங்கும் பாவியுய்யக் கொண்ட அப்பெருங் குழாத்துக்குத் தலைமையிடமாய்ச் சிறந்தது திருவரங்கம் பெரிய கோயிலே, ஓரான் வழியாய் வரும் ஸ்ரீவைஷ்ணவ தரிசனமாகிய வாழையடி வாழை, ஸ்ரீராமனுஜர் காலத்தே பழுத்துப் பலர்க்கும் பயன்பட்டதேயன்றி, அவர் காலத்துக்குப் புதிதாகத் தோன்றிய தன்று. தமிழ் நாட்டில் அநாதியாகவே தோன்றி முதலாழ்வார் காலத்தே பூத்து மற்ற ஆழ்வார்கள் காலத்துக் காய்த்துவிட்டது. அத்தரிசனத்தின் விளைநிலமாக விளங்கியது திருவரங்கப் பெரு நகரமேயாம். இந்நகரம்போல சங்க கால முதற் சிறந்து விளங்கிய திருப்பதி, திருமலை தவிர வேறில்லை. இந்த அணியரங்கன் திருமுற்றமே பழைய அவ்வடியார்கட் கெல்லாம் புகலிடமா யிருந்தது. ஆழ்வார்களெவரும் இப்பெரிய கோயிலை மறவாது பாடுதலே இதற்கு ஒரு சான்று. குலசேகராழ்வார் தம் திரு மொழியின் 2-ம் திருப்பதிக முழுதும் இங்கு நின்றும் பரவிய இவ்வடியார் பெருங்குழாத்தையே பாடுகின்றார்.

"ஆதி யந்த மனந்த மற்புத மான வானவர் தம்பிரான்
பாத மாமலர் சூடு பத்தி யிலாத பாவிக ளுய்ந்திடத்
தீதில் நன்னெறி காட்டி யெங்குந் திரிந்தரங்கனெம்
[மானுக்கே
காதல் செய்தொண்டர்க் கெப்பிறப்பிலும் காதல் செய்யுமென்
[னெஞ்சமே"

" மலர்க்கண்ணனை—

மாலை யுற்றெழுந் தாடிப் பாடித் திரிந்தரங்கனெம் மானுக்கே
மாலை யுற்றிடுந் தொண்டர்"

என்று அவ்வாழ்வார் அருளிச் செய்யும் பாசுரங்கள், நம்மாழ்வார் கூறியவாறு நாடு எங்கும் பரவிநின்ற அவ்வடியார் பெருங் குழாத்தையே குறித்து நிற்றல் அறியத்தக்கது. "இடங்கொள் சமயத்தையெல்லாம் எடுத்துக் களைவன போல்" பரமதங்கள் அஞ்சும்படி பரவிய சித்திருவரங்கத்தடியார் பத்தியிலாத பாவிக ளாய்ந்திடத் "தீதில நன்னெறிகாட்டியெங்குந் திரிந்து" வருகின் றனர் என்ற குலசேகரர் திருவாக்கும், மாதவன் பூதங்கள் மண் மேல் பண்டான் பாடிநின்றாடிப் பரந்து திரிகின்றனவே" என்ற நம்மாழ்வார் திருவாக்கும் இங்கு ஒப்பிடற் குரியவை. ஸ்ரீவைஷ் ணவக் கொள்கைகளைத் 'தீதினன்னெறி' என்று இங்குக் குறிப்பது போலவே 'தீதினன்னெறி நிற்க வல்லது செய்-நீதியார்" என்று வேறிடத்துங் கூறல் காண்க.

அணியரங்கண் முற்றத் தடியார் குழுவுள் நம்மாழ்வாரும் ஒரு வரோ என்று சங்கிக்கும்படி பெருமாள் திருமொழியின் தேட் டருந் திறற் பதிகத்து 2, 3-ம் பாசுரங்களும், திருவாய் மொழியின் 2, 3-ம் பாசுரங்களும் அமைந்திருப்பதும் ஒப்பு நோக்கத் தக்கனவே.

இவ்வாறு குலசேகரப் பெருமாளும் நம்மாழ்வாரும் ஒத்துக் கூறியவற்றுக்கு ஒப்பமிடுவர்போலப்

"பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும்
பரந்தநாடும் சித்தர்களுந் தொழுதிறைஞ்சத் திசை விளக்
காய் நிற்கின்ற திருவரங்கமே"

என்று பெரியாழ்வாரும் பாடுகின்றார். இவர்கட்கே அப்பரமவைஷ் ணவங் பெருங் குழுவில் தாமும் ஒருவர் என்பதை வெளியிடுபவர் போலத்—

"தேச மறிய வுமக்கே யாளாய்த் திரிகின் றோமுக்குக்
காசினி னொளியிற் றிகழும் வண்ணங் காட்டீர்"

என்று திருமங்கை மன்னன் அருளிச் செய்தல் வியப்புடையதன் றன்றோ? இவ்வாழ்வார் திருவரங்கம் பெரிய கோயிலைத் தம் வாழ் விடமாகக்கொண்டு, அப்பெருங் கோயிலிற் பல திருப்பணிகளாலும் சிறப்பித்தவராதலால் அணியரங்கன் திருமுற்றத்தடியார்களுள், இவரும். இவர் காலத்தவரான தொண்டரடிப் பொடிகளும்,

அணியரங்க னென் னமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணவே" என்று ஆடிப்பாடி அகங்கரைந்த பாண்பெருமாளும் சேர்ந்தவர்களே என்பது சொல்லாதே அமையும். இதனைக் கொண்டு நோக்கின்—"ஆடிப்பாடி அரங்கவோ வென்றழைக்குந் தொண்டரடிப் பொடி சூடநாம் பெறில்" என்ற குலசேகரர் திருவாக்கு அவ்வரங்கத்தடியாரான தொண்டரடிப் பொடிகளையே குறிப்பிற் கூறியதென்பது உறுதியாகவுந் தடையில்லை. இதுவரை கண்டவற்றால், 2-ம் தொகுதியினரான ஆழ்வார்களெண்மரும் மேலே கண்ட முடிவுகளின்படி 8-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிற் பிரபலம் பெற்றிருந்த பேரடியார் கூட்டத்தவர் என்று கொள்வதே பெரிதும் பொருத்தமாதல் தேறலாம்.

திவான்பகதூர் சாமிக்கண்ணு பிள்ளையவர்கள் ஆழ்வார்கட்குப் பிற்காலத்துக் குருபரம்பரைகள் கூறும் கலியுகாப்தத்துடன் கூடிய பஞ்சாங்க காலங்களைக் கணித்துத் தம் "இண்டியன்-எபிமெரீஸ்" என்ற பெருங் கணித நூலின், முதற் பகுதி பக்கங்களில் ஆழ்வார் ஆசிரியர்கள் காலங்களைக் குறித்திருக்கிறார்கள். அவை யாவும், 12-ம் நூற்றாண்டிலும் 8-ம் நூற்றாண்டிலும் வருகின்றன. ஆனால் சரித்திர வமைதிக்கு மாறுபாடாக முன்னும் பின்னுமாக அமைந்துள்ளன. இவற்றைப்பற்றி எழுதும்போது ஆழ்வார்கட்குக் கூறப்பட்ட காலங்கள் 12, 13-ம் நூற்றாண்டுக்குள் அழகாக அமைவன போல, 8-ம் நூற்றாண்டில் அமையவில்லையென்றும், அதனால் பின்வந்த ஆசாரியர்கள், 12, 13-ம் நூற்றாண்டுப் பஞ்சாங்கங்களைக் கொண்டு ஆழ்வார்கட்குத் திதிவார முதலியவற்றை ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்றும் பிள்ளையவர்கள் கருதுகின்றனர். இஃது எத்தகையதாயினும், 8-ம் நூற்றாண்டு அவர்களெல்லார்க்கும் அமைவதாக அவர்கள் எழுதுவது மேற்கூறிய என் கொள்கைக்கு ஓர் ஆதாரமாகின்றது. எனினும், அது கொண்டு அவற்றை முழுதும் நம்பிவிடுதற்குத் தடைகள் உள்ளன. இக்காலக் குறிப்புகளுள்—மாக நக்ஷத்திரங்களே நம்மாழ்வார் தவிர மற்றவர்கட்கு திவ்ய சூரி சரித முதலிய பழைய நூல்களிற் காணப்படுதலால் அவை மட்டில் உண்மையுடையனவேயாம். நாயன்மார்கட்கும் இவ்வாறு மாச நக்ஷத்திரங்களை சைவர்கள் பழைமையாகவே வழங்கி வருதலும் ஒப்பிடத்தக்கது. திவ்ய ஸூரி சரிதமும் பின் பழகிய சீயர் குருபரம்பரையும் கல்யத்தத்தின் 43-ம் நாள் என்பது "நாலாயிரத்து முந்நூற்றிரண்டு நாள் சென்ற" என்றும், 'ப்ரமாத் யாஷ்வயே' எனச் சுலோகத்தொன்றும் 'பகுதான் யாஷ்வயே' என்று மணிப்ரவான நடையிலொன்றுமாகவும் பாட பேதங்கள்

காணப்படுகின்றன. மற்ற ஆழ்வார்கட்குக் காணப்படாத இவ் விவரம் நம்மாழ்வார்கட்கு மட்டும் அமைய நியாயமின்மையால் இவை யாவும் பிற்காலத்துச் சேர்க்கப்பட்ட இடைச் செருகல் களாகவே கொள்ளற்குரியன.

ஆனல், ஆழ்வார்கட்கு அதினும் சிறப்பாகச் சடகோபர்க்கு கலியுகத் தொடக்கத்தை அவதார காலமாக முன்னோர் வைக்கக் காரணமென்ன என்ற கேள்வி நெடுக நிகழ்வது உண்டு. இதற்குச் சரியான விடை மேற்கூறிய திருக்காட்கரை முதலிய கோயிலிற் கண்ட சாஸனவாக்கியங்களை நோக்கும்போது பெறப்படுகின்றது.

திருக்காட்கரைப் பெருமாள் தர்ப்பாதிச்சஞ் செய்தருளிச் செல் லாநின்ற 3705-யாமாண்டு என்று உள்ள சாஸனத் தொடர்க்கு அப் பெருமாள் திருக்காட் கரையில் பிரதிஷ்டிக்கப்பட்டு 3705 ஆண்டு செல்லாநின்றது" என்ற பொருளே யாவர்க்கும் எளிதில் தோன்றக் கூடியது. அவ்வருஷம் கல்யப்தத்தைக் குறிப்பதே என்ற முன் வழக்குத் தெரியாதார் இப்பொருளன்றி வேறுகொள்ளார் என்பதுந் திண்ணம். இச் சாஸனம் போலவே முன்பு ஆழ்வார் அவதார காலத்தைக் குறித்து வந்தோர் "ஸ்ரீபராங்குசர் அவ தாரஞ் செய்தருளிச் செல்லாநின்ற 4000-ம் ஆண்டு" என்று எழுதிய வாக்கியத்திற்கு அது, கல்யப்தத்தைக் குறிப்பது என்பது மறக்கப் பட்டுப்போனமையால், பிற்காலத்தில் நம்மாழ்வார் அவதாரமாகி 4000 வருஷமாயிற்று" என்ற பொருளே கொள்ளப்பட்டுக் கலியுகத் தொடக்கமாகக் கருத நேர்ந்தது என்றே தோற்றுகின்றது.

ஆழ்வார்கள் 8-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒருங்கிருந்தவ யாயின் அவர்கள் ஒருவரையொருவர் பெயர் கூறுமற் போவரா என்று சிலர் கேட்கக்கூடும். தங்காலத்திற் பெருங் குழூவின ராய்த் தீதில் நன்னெறி காட்டி எங்குந் திரிந்து வந்த அவ்வடியார் களுள் இவ்வாழ்வார்களிற் பலரும் மேற்கூறியவாறு சேர்ந்தவர் களே. அப் பெருங் குழூவினருள் தம் பிரபாவங்களாலும் திவ்ய பிரபந்தங்களாலும் பிற்காலத்தார்க்குத் தெரியவந்த இவ்வாழ்வார் கள் தவிர, இவ்வாழ்வார்கட்கும் ஆழ்வார்களாய் விளங்கியிருந்த மஹநீயர்கள் எத்தனை திருநாமங்களோ, பொதுவாகக் குறிப்பிடும் படி, அத்துணை அளவினராய் மிக்கிருந்தனர் என்றே சொல்ல வேண்டும்.

"மேவித் தொழு மடியாரும் பகவரு மிக்க துலகே" என்ற நம் மாழ்வார் திருவாக்கே அவர்களது பெருக்கைக் குறிப்பது காண

பற்றி ஒருகாலத்தவராகார் என்பது பொருத்தமில்லாததாம். திருமங்கை மன்னன் நம்மாழ்வார்க்குப் பிற்பட்டவரென்றும் அவ்வாழ்வார்க்கு அத்யயனோற்சவ முதலியவை நடத்திச் சிறப்பித்தவரென்றும சரித்திரங்கள் வழங்கி வருகின்றன. ஒருகால், அம்மன்னன் ஸ்ரீ பராங்குசர் திருநாடலங்கரித்த பிற்காலத்தும் இருந்து இக்கைங்கரியங்களைச் செய்திருக்கக் கூடும். 8-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒருங்கிருந்தவர்களே ஆழ்வார் என்ற என் கொள்கைக்கு, அவர்கட்குக் கூறப்பட்டுள்ள எந்த அவதார அடைவும் மாறுபட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்களிருந்த ஆயுட்கால மட்டும் சிறிது நீளவுங் குறையவுங்கூடும். ஆயினும் திருமங்கை மன்னன் சடகோபர்க்கும் பின்னிருந்தவராயின் அவரூரையும் அவராற் பாடப் பெற்றதும் தமக்குப் பிரியமானதுமான திருக்குறுங்குடியையடுத்த சீவாமங்கலம் போன்ற திவ்ய தேசங்களையும் எல்லாவற்றையும் விடாது பாடிவரும் அவர் மறந்திருக்க நியாயங் காணப்படவில்லை. இஃதொன்றுக்குச் சரியான சமாதானங் கிடைத்தால் எல்லாம் சமாதானமாகத் தடையில்லை.

நாலாயிரப் பிரபந்தத்தில், இயற்பா நீங்க ஏனை மூவாயிரமும் பண்களுக்குரிய பாடல்களே. பண்ணுக்குரியதாகாமை பற்றியே இயற்பா அப்பெயர் பெற்றது. சிலர், திருவாய்மொழி தவிர ஏனையவை, பண்ணமைதி பெறாதவை. என்றெழுதுவது தவறாம். இவையு மோர்பத் திசையோடும் பண்ணிற் பாடவல்லார்," என்று தம் பெரிய திருமொழி பண்பெற்றது என்று திருமங்கை மன்னன் அருளிச் செய்தல் காணலாம். பெரியவாச்சான் பிள்ளையும் பெரிய திருமொழி பண்களுடன் பாடப்பட்டு வந்ததற்குச் சரித்திரம் கூறுவர். (1-2-10) இதுபற்றியே. இயற்பா, பண்ணின்றி அத்யாபக கோஷ்டியாலும், ஏனைமூவாயிரமும் பண்ணுடன் அரையராலும் இன்றும் ஸ்ரீரங்கத்தில் சேவிக்கப்பட்டு வருகின்றதென்பர். 10-ம் நூற்றாண்டிலும் அதற்குப் பிற்பட்டுமுள்ள சாஸனங்கள், திவ்யப் பிரபந்தங்கள் கோயில்களில் பண்ணுடனும் பண்ணில்லாமலும் பாடப் பெற்று வந்ததைக் குறிப்பனவாய் இருத்தலும் அறியத்தக்கது.

இனி, ஆழ்வார்கள் சரித்திர விஷயங்களை யான் கூறக் கேட்ட என் ஸ்மார்த்த நண்பர் சிலர், அவ்வாழ்வார்கள் ஒருங்கிருந்ததான 8-ம் நூற்றாண்டின் பிற்பகுதியே, ஸ்ரீசங்கராசாரியருடைய பிராபல்ய காலமுமாம் என்றும், அவரது அத்வைதக் கொள்கைகளை

அநுசரித்த பாசுரங்கள் நம்மாழ்வார் வாக்கிற் பலவுள்ளன என்றும் அவ்வாசாரியர் செய்தவையென்று உறுதியாகச் சொல்லத் தக்கவையும் பிரஸ்தானத் திரயங்களென்று பேர்பெற்றனவுமான பாஷ்யங்களைத் துருவி யாராயுமிடத்து—அவ்வாசாரியர் பரமவைஷ்ணவரென்றும் நாராயணஸ்மரணமே யுடையரென்றும் அதனால் அவரும் அவர் அடியார்களும் பகவத்பாத ரென்ற சிறப்புப் பெயர் பெற்றவரென்றும் தெளிவாக விளங்குமென்றும், இம்முறையில் நோக்குமிடத்து "பொலிக பொலிக" என்ற ஆழ்வார் திருப் பதிகமும் அதனுள் "அடியாரும் பகவரு மிக்கதுலகே" என்பதனாற் குறிக்கும் பகவத்சப்தமும்—சங்கரபகவத் பாதரையும் அவர் பெருங் குழாத்தையும் உள்ளடக்கிய தாகுமென்றுங் கூறுகின்றனர். இவர்கள் கூற்றுக்களுள் ஏனையவை எத்தகையவாயினும் ஆழ்வார் மாயவாதமான அத்வைதச் சார்பினர் என்பது மட்டில் சிறிதும் ஏற்கத் தகாதது. பிரபத்தி மார்க்கமே அவரால் முதன் முதலாகக் காணப்பட்டதும் அநுபவிக்கப் பெற்றதும் உபதேசிக்கப் பட்டதுமாகும் என்பது—அவர் பாசுரங்கள் ஒவ்வொன்றினும் உயர்வும் உருக்கமும் ததும்பும்படி அமைந்து நிற்றல் காணலாம். ஆயினும் கொள்கை வேறுபாடுபற்றி வைணவம் ஸ்மார்த்தம் என்ற கடுமையான குலவேறுபாடுகள் பிற்காலத்து உண்டாயினவேயாதலாலும் அவரெல்லாம் ஒரே குழுவினராய் ஒன்றியிருந்த ஆழ்வார் காலத்தில் தத்துவக் கொள்கை எத்தகையதாயினும் திருமாலடியார்களென்பது பற்றித் தழுவியே யிருத்தல் கூடுமாதலாலும், ஆழ்வார் குறிக்கும் அடியார் குழாத்துள் அப்பகவத் பாதரும் அவர் சிஷ்ய கோடிகளும் சேரத்தகாதவர்களென்று சொல்வதற்கில்லை. நம்மாழ்வார் தங்காலத்துத் தோன்றிய அத்வைதக் கொள்கைகளை ஒருபடியாக அறிந்திருந்தவரென்பது "தானேதானேயானும்" "எம்மாயனாவததுவே" "இறுக லிறப் பென்னும் ஞானி" என்ற தொடர்களாலும் வேறுசில பாசுரங்களாலும் தெரிய வருகின்றது. அன்றியும், சில அடியார்போல, பரமத தூஷணைக்கிடமின்றி, மும்மூர்த்திகளும் ஒருவரே என்ற ஏகதெய்வ வழிபாட்டை வற்புறுத்தித் தம் பிரபத்தி மார்க்கத்தை உபதேசிப்பதும் அறியத்தக்கது.

முடிவுரை.

இதுகாறும், பிரபத்தி மார்க்கமான ஸ்ரீவைஷ்ணவ தரிசனம் தமிழ்நாட்டிற் சிறந்தோங்கிய காலம் 8-ம் நூற்றாண்டு என்றும் அந் நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஆழ்வார்களிற் பலர் ஒருங்கெழுந் களாலும் விளக்கினேன். சிவனடியார்களான அப்பர், சம்பந்தர்

முதலியோரால் புறச் சமயங்கள் அடியோடு வெல்லப்பட்டுச் சைவந் தலைநிமிர்ந்த காலமான 7-ம் நூற்றாண்' போலவே, அடுத்த இவ் வெட்டாம் நூற்றாண்டு ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தின் உன்னத நிலைக் குரிய காலமாகும். இந்நூற்றாண்டில் தமிழ்நாட்டுத் தலைமையரச ரெல்லாம் பரம வைஷ்ணவர்களாக விளங்கினர். புற மதங்கள் தளர்ந்ததனால், வைதிகர்க்குள் எந்த மதம் உயர்ந்ததென்ற ஆராய்ச்சி இக்காலத்திலிருந்தது. அதனில் பெரியாழ்வார் போன்ற ஆழ்வார்களும் ஏனைத் திருமாலடியார்களும் வைஷ்ணவ தரிசனத் தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி அரசரையும் பிறரையும் அடிமைப் படுத்தினர். பரம்பரைச் சைவர்களான பாண்டியர்களிலும் பரம வைஷ்ணவன் என்று கூறும்படி ஒருவனைச் செய்யுமாயின் இக்கால நிலையைப்பற்றி வேறு கூறவும் வேண்டுமோ? திருமாலடியாராய் நின்ற மன்னவர் கொண்ட நெறியே மன்னியிர்க்கும் உரியதாகப் பரவியது. வைஷ்ணவ தர்மங்கள் செழிக்கவே, விஷ்ணு பக்தர் வைஷ்ணவ காலம் என்றே நாம் கூறலாம். ஆகவே ஆழ்வார்கள் களும் பலர் தோன்றி அக்கால சமய நிலையைப் பெருக்கலாயினர். இவற்றால் இவ்வெட்டாம் நூற்றாண்டை சமய முறையால் நோக்கின் பலர் இக்காலத்தே ஒருங்கிருந்தனர் என்பது தெரியலாம். சமயா சாரியர்களும், கலா நிபுணர்களும், ஒவ்வொரு காலத்தில் பெருகிக் காணப்படுவதெல்லாம் அரசர் ஆதரவு அவர்கட்கிருந்ததனாற்றான் என்பது உலக சரித்திரங்களால் தெளிய அறியப்பட்டதே. போசன் காலமென்றால் எத்தனை புலவர்கள் ஒருங்கு தோன்றவில்லை. சங் கத்துத் தொகை நூல்களை ஆராய்வோமானால், ஒரு நூற்றாண் டுக்குள் நூற்றுக்கணக்கான புலவர்கள் விளங்கியிருந்த செய்தி வெளியாகும். இதற்குக் காரணமெல்லாம் அரசரது ஆதரவே யன்றோ? இம்முறைதான் மதாபிவிருத்திக்கும் உரியது. வைஷ் ணவ தரிசனம் தலையெடுத்த காலமொன்றுண்டாயின் அது திருமா லடியாரிற் சிறந்த குலசேகராழ்வார் போன்ற சேரரும், பரம வைஷ் ணவனான பராந்தகன் போன்ற பாண்டியரும், பாகவத சிரோமணி யான நந்திவர்மன் போன்ற பல்லவரும் தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்று விளங்கிய காலமே என்று கூறுவதினும் வேறு யாது? இவர்கள் நாளிலன்றி வேறெந்த நாளில் திருமாலடியார்கள் தங்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றியிருக்கக் கூடும் ஆதலால், நான் குறிப்பிட்ட காலமே ஆழ்வார்களை வையகமுய்ய, அவதரிக்கச் செய்த தென்றும், அவரவதாரங்களே வைஷ்ணவ தரிசனத்தை இன்று வரை நின்று நிலவச் செய்து வருகின்ற தென்றும் கூறி முடிக்கலாம்.